கல்கி
KALKI 23-8-81 ரூ. 1.20

பொன்

வித்துவான்

வே.லட்சுமண

ADWAVE/IB/1704

பொன்மனச்செம்மலும்

வித்துவான்
வே. லட்சுமணன்—

தமிழ்பேசும் திரைப்படம் பொன் விழாக் காணும் இந்தப் பொன்னான நேரத்தில் பொன்மனச் செம்மலை நினைப்பதோடு போற்றவும் கடமைப்பட்டிருக்கிறது திரை உலகம்.

நிகரற்ற நடிப்பு,
நுண்புலனோடு காட்சிகளை இயக்கும் திறன்,
கதையைத் தேர்ந்தெடுக்கும் மதியூகம்,
பாட்டுக்கள், உரையாடல் இவற்றை அமைத்துக் கொள்ளும் பக்குவம்,
காட்சிகளைத் தொகுக்கின்ற கூரிய அறிவு,
எல்லோரையும் வசீகரம் செய்கின்ற ஆற்றல்—

இப்படி அடுக்கிக் கொண்டே போகக்கூடிய அளவுக்கு' எண்ணற்ற தகுதிகளைத் தன்னகத்தே கொண்டவர் பொன்மனச் செம்மல்.

'கலை கலைக்காகவே' என்ற கொள்கைக்குரியவர்களின் இடையில் ''கலை வாழ்க்கைக்காகவே'' என்று முரசு கொட்டி, மக்களுக்கு விழிப்பூட்டி, மறு மலர்ச்சியைத் தோற்றுவித்தவர் மக்கள் திலகம்.

அவரால் தமிழ்ப் படங்களின் தரம் உயர்ந்தது. நடிப்பவர்கள் நாட்டுக்குச் சேவை செய்கிறவர்கள் என்ற மதிப்பு உருவாயிற்று.

1935ல் சதி லீலாவதியில் முதன் முதலாக நடிக்கத் தொடங்கியவர், அதிலிருந்து நாற்பது ஆண்டுகளுக்கு மேல் இடை விடாது நடித்து வெளிவந்த படங்கள் ஏராளம். காலம் வளர வளரத் தாமும் வளர்ந்தார்; தம் கொள்கையையும் வளரச் செய்தார்.

லட்சக் கணக்கான ரசிகர்களைத் தம்மைப் பின்பற்றுகிறவர்களாக அடையப் பெற்றார். தம் நாவிலிருந்து பிறக்கும் வேண்டுகோளை ஆணையாக ஏற்கும் ஆயிரக் கணக்கான தொண்டர்கள் தம்மைப் பின்தொடரும் வாய்ப்பைப் பெற்றார்.

பொன்மனச் செம்மல் நடித்த படம் என்றால் போதும், அட்சய பாத்திரம்தான்! படமெடுத்தவர்கள், வெளியிட்டவர்கள், காட்சிக் கொட்டகையாளர், மற்றும் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் சரியான வேட்டைதான்.

காரணம், எல்லையற்ற ஆர்வத்தோடு மக்கள் திரண்டு வந்து அவருடைய படங்களைப் பார்ப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல், ''மக்கள் திலகம் அவர்களின் முகம் கண்டால் முப்பதாயிரம் வாக்குகள் அதிகமாகும்; அவர் வாய் திறந்து பேசினால் மேலும் பல்லாயிரக் கணக்கான வாக்குகள் கூடும்'' என்ற அளவுக்கு அவரது செல்வாக்கு உயர்ந்தது. அந்தச் செல்வாக்குக்கு உதவியவை திரைப்படங்கள்; திரைப்படங்களில் அவர் கையாண்ட உத்தி முறைகள். மேலும் வாழ்க்கையில் கடைப்பிடித்த கோட்பாடுகளையும் சொல்ல வேண்டும். இவை மிகவும் முக்கியமானவை.

✖ சதிலீலாவதியில்

ஆரம்பத்தில் எடுத்த எடுப்பிலேயே அவர் உயர்ந்துவிடவில்லை. நீண்ட போராட்டத்துக்குப் பின் கிடைத்த செல்வாக்கு அது.

கண்ணீரும் இரத்தச் செந்நீரும் உகுத்துப் போட்டி, பொறாமைகளையெல்லாம் கடந்து, பொறுமையோடும், விடா முயற்சியோடும் அயராது உழைத்ததால் பெற்ற பெரும் பேறு அந்தச் செல்வாக்கு.

வெள்ளித் திரையின் மூலம் மக்களின் உள்ளத் திரையில் தாம் ஒளி வீசுவதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம்.

எத்தனையோ குறைகளுடன், அறியாமை என்கிற திரைக்குள் புதைந்திருந்த பாமரர்களின் எண்ணத்தில் புகுந்து, புதிய சித்தாந்தத்தைத் தோற்றுவித்த சிறப்புக்கு இவர் சொந்தக்காரர்.

சினிமா என்றாலே பார்க்கத் தகாதது என்று கருதிய மேல் மட்டத்தாரும் மனம் மாறும் வகையில், தமிழ்ப் படங்களின் ஸ்தானத்தை உயர்த்திய பெருமைக்கு இவர் உரிமையாளர்; சினிமா என்பது வெறும் பொழுது போக்குச் சாதனம் அன்று என்றும், கருத்துக் கருவூலமாகவும் அறிவுச் சுரங்கமாகவும் அமைந்து, எல்லா நிலையினருக்கும் எல்லா நலங்களையும் பகிர்ந்து அளிக்கும் சீதனம் ஆகும் என்றும் நிலைநாட்டிய சாதனைக்கு உடைமையாளர்.

பொன்விழா ஆண்டும்

பள்ளத்தில் கிடந்தவர்களை மேட்டுக்குக் கொண்டுவந்து, புதிய வானத்தைக் காணச் செய்தார்; புதிய பூமியைப் பார்க்கச் செய்தார்.

சின்னஞ் சிறார்முதற்கொண்டு, தொண்டுக் கிழவர் வரை எல்லோரையும் தட்டி எழுப்பினார்.

கலை நயத்தோடும், கற்பனை வளத்தோடும் இழைத்துக் குழைத்து அற்புதமான போதனைகளை அமுதமே போல அள்ளித் தெளித்தார்.

தாய்ப் பாசத்துக்குத் தனி இடம் தந்தார். உடன் பிறப்பின் இரத்த பாசத்தை உணர்ச்சிக் கோளமாக உருவாக்கிக் காட்டினார்.

மனிதாபிமானத்தின் மாண்புகளைச் சித்திரித்தார்.

ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும் என்றார்.

'எல்லோருக்கும் இன்பம் சொந்தம்' என்றார்.

''திருடாதே'' என்றார்.

''தூங்காதே'' என்றார்.

''திருடினால் வாழ்வு கெடும்'' என்பதைக் காட்சி வாயிலாக எடுத்துரைத்தார்.

''தூங்கினால் இழப்பு ஏற்படும்'' என்பதை நிகழ்ச்சி வாயிலாக எடுத்துச் சொன்னார்.

''உழைப்பதிலா, உழைப்பைப் பெறுவதிலா, இன்பம் உண்டாவதெங்கே சொல், என் தோழா!'' என்ற கேள்வியை ஒரு பாட்டிலே கேட்டு, உழைப்பதில்தான் இன்பம் உண்டாகும் என்கிற உண்மையை நெஞ்சில் பதிய வைத்தார்.

''ஒன்றே குலம் என்று பாடுவோம்'' என்று பாடினார்.

சாதி வேற்றுமை கூடாது என்ற படிப்பினைக்கு இது வழிகாட்டிற்று.

''ஒருவனே தேவன் என்றுபோற்றுவோம்'' என்று பாடினார்.

''தெய்வம் என்பது இல்லாமலில்லை; ஆனால் அந்தத் தெய்வம் ஒரே தெய்வம்தான். அந்தத் தெய்வ சக்தியைப் போற்றுவது கடமை'' என்ற கருத்துத் தொனித்தது.

''மனிதன் கோழையாக இருக்கக் கூடாது. கோழையாக இருந்தால் மற்றவர்கள் ஏறி மிதித்து விடுவார்கள்'' என்ற கருத்தைச் சொல்ல அவரே ஒரு கோழையாக நடித்துக் காட்டியவர், வீரப் பண்பின் விளைநிலமாகவும் வேடம் தரித்து, எதிரிகளைப் பந்தாடித் தூக்கி யெறிந்து, வீர சாகசங்கள் புரிந்து, மக்கள் எல்லோரும் 'எங்க வீட்டுப் பிள்ளை' என்று போற்றுமளவுக்குச் சாதனை செய்தார்.

நடிப்பு ஒரு தொழில் மட்டுந்தான் என்ற எல்லைக் கோட்டைக் கடந்து, அது சமுதாய

தமிழ் பேசும் திரைப்படத்தின் பொன் விழா ஆண்டு

✠ மார்மயோகியில்

வளர்ச்சிக்கான உயர்ந்த பணி என்பதை எல்லோருக்கும் உணர்த்தினர்.

''தீயவர்கள் திருத்தப்பட வேண்டும்; அல்லது அழிக்கப்பட வேண்டும்; இல்லையேல் நல்லோரின் வாழ்வு நசித்துப் போக நேரும்'' என்ற கருத்தை வலியுறுத்துவதற்காகத் தான் நடித்த பெரும்பாலான படங்களி லெல்லாம் தீமைகளின் பிரதிநிதித்துவம் பெற்று ஆர்ப் பாட்டம் செய்த 'வில்லன்'களின் மீதுதாவிப் பாய்ந்து, சாடி மோதித் தூக்கி யெறிந்து வீர விளையாட்டுக்களைப் புரிந்தார்.

இதனல் படம் பார்ப்போரின் உள்ளத் தில் வீரம் ஏற்பட்டது; எழுச்சி பிறந்தது. கிளர்ச்சி உருவாயிற்று.

வீரக் காட்சிகளில் தம் உயிரையே பணயம் வைத்து நடிப்பார் பொன் மனச் செம்மல். காட்சிகள் தத்ரூப்மாக இருக்க வேண்டும் என்பது அடிப்படைக் குறிக்கோள்.

மாடியிலிருந்து கீழே குதிப்பார்; ஓர் இடத்திலிருந்து மற்ருேர் இடத்துக்கு அனுயாசமாகப் பாய்வார்; வாளைச் சுழற்றிக் கொண்டே படிகளில் ஏறுவார்; ஒரே நேரத் தில் நூற்றுக் கணக்கான எதிரிகளைச் சாடு வார்; நெருப்புப் பந்தங்களோடு விளையாடு வார்; பனிப் பாறைகளோ்டு மோதுவார்...

எல்லாவற்றையும் தாமே செய்வார்! அந்த ஆற்றல் இவரது தனிச் சிறப்பு.

வெளி நாட்டுத் திரைப் படங்களிலும் வீரக் காட்சிகள் உண்டு. அவர்களுக்குப் படப் பிடிப்புச் சாதனங்களின் வசதிகள் ஏராளம். அத்தகைய வசதிகளின் உதவி இல்லாமலேயே தமிழ்ப் படங்களில் அற்புதங்களைச் செய்து காட்டிய பெருமை மக்கள் திலகத்துக்கு உண்டு.

இவர் கதாநாயகனுக நடித்த முதல் படம் இராஜ குமாரி.

இந்தப் படத்தில் ஒரு காட்சி; பயங்கர மான காட்சி:

தூக்கிலே தொங்குவதாக உள்ள காட்சி.

முதன் முறையாகக் கதாநாயகன் பாத் திரம் தரப்பட்ட நிலையில், இக்காட்சியில் தம் திறமையை வெளிக்காட்ட வேண்டிய அவசியக் கட்டுப்பாடு மக்கள் திலகத்துக்கு உண்டாயிற்று.

ஒரு மேடை; மேலே ஓர் உத்தரம்; உத் தரத்தில் கட்டப்பட்ட கயிறு. கீழே ஒரு பலகை. பலகையில் நிற்கும் கதாநாயகன் கழுத்தில் கயிறு மாட்டப்படும். பலகை இழுக்கப்படும்.

உடனே அந்தரத்தில் கதாநாயகன் தொங்குவான், கயிருே கழுத்தை இறுக்கும்.

கதாநாயகனது பாரம் தாங்காமல் உத் தரம் முறியும். கதாநாயகன் கயிற்ருேடு பாதாளப் பள்ளத்தில் விழுவான்.

இப்படிப்பட்ட காட்சி.

ஏதேனும் எங்கேனும் ஒரு இம்மியளவு பிசகு ஏற்பட்டாலும் கதாநாயகனது உயி ருக்கு ஆபத்துத்தான்!

வீரத் துடிப்பும், சாதனையில் ஆர்வமும், கதாநாயகன் ஸ்தானத்தை நிலைநிறுத்திக்-கொள்ள வேண்டும் என்கிற கோட்பாடும் பொன்மனச் செம்மலை இக்காட்சிக்கு ஆயத்த மாக்கின.

பலகையில் நின்ருர். பலகை இழுக்கப் பட்டது. கயிறு கழுத்தை இறுக்கிற்று.

கழுத்தின் குரல்வளை மேல் நோக்கி இழுக்க, உடல் கனம் கீழ் நோக்கி இழுக்க...

கழுத்தில் ஒரு திருப்பம், ஓர் அதிர்ச்சி.

கண நேரம்தான்! ஆனல் கருதிப் பார்க்க முடியாத அளவுக்கு இம்சையின் பாதிப்பு.

உத்தரம் முறிந்து பள்ளத்தில் விழுந்தார். உடைந்த உத்தரத்தின் பகுதிகள் மேலே விழுந்தன. மயக்கம் ஏற்பட்டது, எல் லோரும் சூழ்ந்து கொண்டார்கள். ''என்ன, என்ன?'' என்று விசாரித்தார்கள்.

''ஒன்றுமில்லை'' என்ருர் பொன்மனச் செம்மல்.

ஒன்றும் இல்லையா? இதைவிட வேறு என்ன ஆகவேண்டும்? கலையார்வத்தாலும், சமூகப் பணிக்குத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்கிற கொள்கைப் பிடிப்பாலும் வெளி வந்த வாசகம்தான் ''ஒன்றும் இல்லை'' என்பது. (தொடரும்)

புகைப்படங்கள்உதவி: பிலிம் நியூஸ் ஆனந்தன்

அருள்வாக்கு

நிறைவேருத ஆசையின் இரண்டு உருவங்கள்

சாதாரணமாக மனிதர்களுக்கும் பிராணி களுக்கும் வயிற்றுக்கு ஆகாரம் கொடுத் தால் அப்போதைக்குப் பசி அடங்குகிறது. நெருப்புக்கு மட்டும் நாம் ஓர் ஆகாரத்தைப் போட்டால் அது அடங்குவதே யில்லை. இன் னும் அதிகமாகக் கொழுந்து விட்டு எரிகிறது! மேலும் பல பொருள்களைத் தகித்துக் கபளீ கரம் செய்கிறது. நெருப்பு பிரகாசமாக இருந்தாலும் அது தான் ஸ்பரிசித்துவிட்டுச் செல்கிற பண்டங்களை யெல்லாம் கன்னங் கரேல் என்று கறுப்பாக்கிக் கொண்டு போகி றது. காமமும் இப்படிப்பட்டது தான். அது தீயாக எரிகிறது. அதற்கும் பிரியமான வஸ்துவைக் கொடுப்பதால் பசி அடங்காமல் அதிகமாகிக் கொண்டே போகி றது. அது நம் மனசையே கறுப்பாக்கி விடுகிறது. ஓர் இச்சை— பூர்த்தியாகிற போது தற்காலிகமாக ஒரு மகிழ்ச்சி உண் டானுலும் பிற்பாடு அதையே மீண்டும் தேடி அலைந்து அமைதியையும் சந்தோஷத்தையும் குலைத்துக் கொண்டு அழுகையையும் கோபத் தையும் உண்டாக்கிக் கொள்கிருேம். அழுகை துக்கத்தில் உண்டாவது. நிறைவேருத ஆசை யின் இரண்டு உருவங்கள்தாம் துக்கமும், கோபமும்!

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

மனச் செம்மலும் பொன் விழா ஆண்டும்

2

வாசகர்களை இருபத்துமூன்று ஆண்டுகள் முன் என்னுடன் இணைத்து அழைத்துச் செல்கிறேன்.

இதே ஆகஸ்டு மாதம் 1958ஆம் ஆண்டு. தேதி 22.

இந்த நாள் தமிழ்த் திரைப்பட உலகின் வரலாற்றில் பொன் எழுத்துக்களைப் பொறித்த நாள்;

பொன்மனச் செம்மலின் புகழுக்கு முத்திரை பதித்த நாள்.

இன்னும் சொல்வதென்றால்,

அயராத உழைப்புக்குப் பரிசு கிடைத்த நாள்;

ஆற்றிய பணிக்கு ஆறுதல் கிடைத்த நாள்;

இணையற்ற ஓர் இலட்சியக் கொடி விண்ணுயரப் பறந்த நாள்;

ஈட்டிய புகழுக்கு எல்லை காண முடியாமற் போன நாள்;

உலக மொழிகளின் படங்களுக்கெல்லாம் சவால் விடப்பட்ட நாள்;

ஊருணி நீர் நிறைந்தாற்போல் யாவரும் பயன்பெற்ற நாள்;

எல்லோரும் புதிய அனுபவம் ஒன்றைக் கண்ட நாள்;

'ஏற்றம்' என்பார்களே, அதன் இலக்கணம் விளங்கிய நாள்;

ஐயப்பாடு சிறிதளவுமின்றி வெற்றிக்கு விதையூன்றிய நாள்;

ஒரு புதிய 'ரெக்கார்டை' உருவாக்கிய நாள்;

ஓங்கு புகழ் பெற்ற திரைக் கலையை மேலும் பன்மடங்கு உயரச் செய்த நாள்;

ஔவை பாடிய, 'அரிது அரிது', 'பெரிது பெரிது' என்ற பாடலுக்கு ஓர் உயிரோவியம் பிறந்த நாள்!

உயிரெழுத்துப் பன்னிரண்டையும் முதல் எழுத்தாகக் கொண்ட பன்னிரு வாக்கியங்களால் 1958, ஆகஸ்டு 22ம் நாளைப் பாராட்டியிருக்கிறேன். காரணம், நாடோடி மன்னன் வெளிவந்து, வெள்ளித் திரை அந்த நாளில் தங்கத் திரையாகி ஒளிவீசிய சிறப்புத்தான்; தமிழ்ப் படத் துறையில் படைப்பு, கலை நுணுக்கம், படிப்பினை, வசூல் முதலான பல நிலைகளில் உயிரோட்டம் ஊட்டிய காரணத்தால் உயிரெழுத்துக்களால் குறிப்பிட எண்ணினேன்.

ஒரு சாதனையைப் பலர் போற்றும்போது கூட ஒருசிலர் தூற்றுவதென்பது உலகியற்கை.

ஆனால் 'நாடோடி மன்னன்' திரைப்படத்தை எல்லோருமே போற்றினார்கள். தூற்றத் துடித்துக் கொண்டிருந்தவர்களும் போற்றினார்கள்; போற்றுவதைத் தவிர வேறு வழியே இல்லை என்று சொல்லுகிற அளவுக்குப் புதிய சரித்திரம் படைத்த படம் அது.

அதைப் படைத்தவர், இயக்கியவர், இரட்டை வேடங்களில் நடித்தவர், மற்றும் அதன் ஆக்க வேலைகள் அனைத்திலும் இரண்டறக் கலந்தவர் பொன்மனச் செம்மலே ஆவார்!

ஆம்; அந்த ஒருவரே ஆவார்!

அந்த ஒருவரின் நம்பிக்கை, துணிவு, உழைப்பு, தியாகம், திறமை, முழுமையான ஈடுபாடு ஆகியவை அனைத்தும் ஒன்றுசேர்ந்து தமிழ்த் திரை உலகம் என்கிற கலைக் கோயிலுக்கு ஒரு பொற் கோபுரம் எழுப்பி வைரக் கலசம் ஒன்றை அமைத்துத் தந்தன என்று சொன்னால் மிகைபடக் கூறியதாகாது.

இடது:

- மோஹினியில் கத்தி சண்டை
- மருதநாட்டு இளவரசியில் வி. என். ஜானகியுடன்
- நாடோடியில் சரோஜாதேவியுடன்
- நினைத்ததை முடிப்பவன் படத்தில் லதாவுடன்

இந்த 'நாடோடி மன்னன்' படத்தில் பொன்மனச் செம்மல் நாடோடியாகவும் மன்னனுகவும் நடித்தார்.

பலதரப்பு மக்களிடையே, பல்வேறுபட்ட எண்ணங்களைப் பரப்பிக் கொண்டிருந்தது, இந்தப் படம், அது திரைக்கு வருவதற்கு முன்பு.

''ஆம்: சிலர், ''எம். ஜி. ஆர். நாடோடியாகிவிடப் போகிருர்'' என்ருர்கள்.

இன்னும் சிலர், ''எம். ஜி. ஆர். கதை முடிந்தது'' என்ருர்கள்.

மேலும் சிலர், ''இவருக்கு ஏன் இந்த வேலே! யார் இவரைப் படம் தயாரிக்கச் சொன்ஞர்கள்! நடித்துக் கொண்டிருந்தால் போதாதா?'' என்ருர்கள்.

இப்படிப் பலரும் பேசியதற்குக் காரணம், நாடோடி மன்னன் கர்ப்பவாசத்தில் இருந்த போது, அதை உருவாக்கும் பொறுப்போடு அதைச் சுமந்து கொண்டிருந்த தாய்க்கு (எம். ஜி. ஆருக்கு) எத்தனேயோ சங்கடங்கள், சோதனேகள், இழப்புக்கள் எல்லாம் ஏற்பட்டு வந்ததே ஆகும்.

இந்தப் படம் எடுக்கத் தொடங்கிய காலத்தில், தமிழ்த் திரைப்பட உலகின் தலே சிறந்த முன்னணி நடிகராக விளங்கிக் கொண்டிருந்தார் இவர்.

மலேக்கள்ளன், அலிபாபா, குலேபகாவலி தாய்க்குப் பின் தாரம், மதுரைவீரன், சக்கரவர்த்தித் திருமகள், புதுமைப் பித்தன் முதலான படங்களின் மூலம் ஓங்கு புகழ் பெற்றுக் கூடவே திரைக் கலேக்கும் சிறப்புத் தேடித் தந்திருந்தார்.

எந்தத் திசையிலும், எந்தக் கோணத்திலும் ''தமிழ்ப் பட வெற்றிக் கதாநாயகர் எம்.ஜி. ஆர்'' என்று ஒருமுகமாகப் பேசத் தொடங்கிய காலகட்டம் அது.

''நாடோடி மன்னன் படத்தைத் தயாரிக்கும் பொறுப்பில் ஈடுபடாமல் இருந்தால், அதற்காகச் செலவிடப்பட்ட பொருள், நேரம் உழைப்பு இவை மூலம் பல வெற்றிகளேக் குவித்திருக்கக் கூடுமே'' என்று அனுதாபிகள் பலர் கருதினுர்கள்.

எதிரிகள் (இவர்கள் பொன்மனச் செம்மலுக்கு உடன் பிறந்தவர்கள்!) ''நாடோடி மன்னன் வெளிவரமாட்டான்'' என்று ஆருடம் சொன்ஞர்கள்.

''சாப்பிடுவதற்கு முன் போண்டாவையும், பஜ்ஜியையும் பிழிந்து எண்ணெயைத் திருப்பித் தந்தால் விலேயில் 10% தள்ளுபடி!''

இப்படி யெல்லாம் கருதப்பட்டுப் பேசப் பட்டதற்கு என்ன காரணம் என்று பார்க்க வேண்டும்.

திரட்டிய செல்வத்தில் அற நெறிகளில் வழங்கியது போக மீதம் என்று இருந்த அனேத்துச் செல்வத்தையும் விழுங்கிவிட்டிருந்தது 'நாடோடி மன்னன்' படம்.

''யானேக்குத் தீனி போட்டுக் கட்டுபடியாகாது'' என்பார்கள்.

'நாடோடி மன்னன்' படத்தையோ நூற்றுக்கணக்கான யானேகளின் கூடாரம் என்று சொல்ல வேண்டும்:

பணம் தண்ணீர் போல் இறைக்கப்பட வேண்டிய படைப்பு. அரண்மனே முதலான அரங்கங்கள், காட்சி ஜோடனேகள், விலே யுயர்ந்த ஆடை, அணி கலன்கள், தளவாடங்கள், எண்ணற்ற நடிகர்கள்... இப்படி செலவினங்கள் கூடுதலாக உள்ள படம்.

இயக்குநர், நடிகர், தயாரிப்பாளர் என்ற மூன்று பொறுப்புக்களும் ஒருவருக்கே.

இயக்குநருக்குப் படம் எல்லா வகையிலும் சிறப்பாக வரவேண்டும் என்ற ஆர்வம். துடிப்பு இவை இருப்பது இயற்கை.

தயாரிப்பாளருக்கு பட்ஜட்டுக்குள் படம் முடிய வேண்டுமே என்ற கவலே; பொறுப்பு இவை இருப்பது இயல்பு.

இங்கேயோ இரு பதவிகளும் ஒருவர்மீதே விழுந்ததால், இயக்குநர் தயாரிப்பாளரை மிஞ்சிவிட்டார். அதாவது, 'என்ன செலவாஞலும் படைப்பு சிறப்பாக அமையவேண்டும்' என்று ஆணேயிட்டுவிட்டார் இயக்குநர்!

டைரக்டர் விரும்புவதைத் தயாரிப்பாளர் மறுக்க முடியாது அல்லவா!

செலவு, செலவு, ஒரே செலவு.

வேறு படங்களில் நடித்தால் பணம் வரும்; இந்தப் படத்தில் பல பொறுப்புக்கள் ஏற்பட்டதால் இதை முழுமூச்சாக முடித்துப் பிறகுதான் மற்றப் படங்களில் நடிக்க வேண்டும் என்கிற நிலே.

படமோ, இழைத்து இழைத்து உருவாக்கப்பட்ட இலட்சியக் கருவூலமாக வளர்ந்து கொண்டிருந்தது. அந்தக் கருவூலத்தை நிரப்புவதற்கு வேறு கருவூலத்தின் திறந்த கதவு மூடப்படாமலிருந்தது.... இதஞலேயே பலரும் பலவிதமாகப் பேசினுர்கள். ஆஞல், இரவு பகல் எந்நேரமும் வாகினி ஸ்டூடியோவிலேயே இருந்தார் பொன்மனச் செம்மல்.

படப்பிடிப்பு, படத் தொகுப்பு முதலான பணிகள் இடைவிடாமல் நடந்தன!

இப்படிக் கர்மயோகியாக, எடுத்த காரியத்தை எப்படியும் நல்ல முறையில் முடிக்க வேண்டும் என்கிற வேகத்தில் உழைத்தார்.

அவரது உள் மனத்திற்குள் ஒரு நம்பிக்கை இருந்தது.

''கடமையைச் சரிவரச் செய்தால் விளேவு வீண்போகாது'' என்பதே அந்த நம்பிக்கை.

இளம் பருவத்தில் அவர் ஓர் ஆங்கிலப் படத்தைப் பார்த்திருந்தார். If I were King அதாவது 'நான் மன்னஞனுல்' என்பது அந்தப் படத்தின் பெயர்.

அன்று முதல் ''நான் மன்னஞனுல்'' என்ற அந்தக் கேள்வியை அவர் தமக்குள் பலமுறை கேட்டுக் கொள்வது வழக்கம்.

அந்தக்கேள்விக்கு விடையாகவே 'நாடோடி மன்னன்' படமெடுக்கும் முயற்சியில் உந்தப் பட்டார்.

நாட்டிலே பசித் துன்பம் தலைகாட்டக் கூடாது;

வறுமை அகற்றப்பட வேண்டும்.

அடிமைத் தன்மை விலக்கப்பட வேண்டும்.

சர்வாதிகாரம் தகர்க்கப்பட வேண்டும்.

சமதருமம் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

இப்படிப் பலவிதக் கோட்பாடுகளை மக்களுக்கு வழங்கும் எண்ணம் மூண்டதாலேயே நாடோடி மன்னனைத் தயாரிக்கமுற்பட்டார்.

மக்களுக்கு முன்னால் தன்னையே நாடோடியாகவும் மன்னனாகவும் இரு கோணத்தில் காட்டி, இரு பாத்திரங்களையும் அவற்றின் குணச் சித்திரங்களையும் வெளிப்படுத்தினால் மக்கள் உள்ளங்களில் ஒரு புதிய தத்துவத்தை வேரூன்ற வைக்க முடியும்என்றுஎண்ணினார்.

இதனாலேயே இரட்டை வேடங்களை ஏற்றார். நாடோடி — மன்னன். ஒன்றுக்கொன்று மாறுபட்ட வேடங்கள். இந்த நிலை படத்தில்.

தயாரிப்பாளர் — இயக்குநர். ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரண்டுபொறுப்புக்கள்!

இது படப் பிடிப்பில் — படப் படைப்பில்.

படத்திலும் போராட்டம்!

படத் தயாரிப்பிலும் போராட்டம்!

நாடோடியும் மன்னனும் ஒன்று கூடினால் தான் நாடு முன்னேறும்; தயாரிப்பாளரும் இயக்குநரும் ஒன்று சேர்ந்தால்தான் படம் முன்னேறும்.

நாடும் முன்னேற வேண்டும்.

படமும் முன்னேற வேண்டும்.

இதுவே பொன்மனச் செம்மலின்நோக்கம்.

பெரிய வேள்வி!

நீண்ட வேள்வி!

அதில் பலவிதமான ஆஹுதிகள்.

கொழுந்து விட்டு எரிந்த தீக்குண்டத்தின் ஜ்வாலையில் பொருள், உழைப்பு, நேரம் எல்லாமே அர்ப்பணம் செய்யப்பட்டன.

துணிச்சலோடு செய்யப்படுகிற காரியத்துக்குத் தோல்வி ஏற்பட்டால் ஏளனம் செய்வார்கள்; வெற்றி ஏற்பட்டால் வருணித்துப் புகழ்வார்கள். இது பொன்மனச் செம்மலுக்கு நன்றாகத் தெரியும்.

தெரிந்து, புரிந்து, சிந்தித்துப் பிறகு அவர் தொடங்கிய பணிதான் இது.

ஆகஸ்டு 22. அதிகாலை; கங்குல் அகன்றது கதிரவன் உதித்தான்.

சென்னை — பாரகன் திரை அரங்கில் நாடோடியாகவும், மன்னனாகவும் காட்சி தந்த பொன்மனச் செம்மலின் உருவங்கள் ஒளிவீசிக் கொண்டிருந்தன.

கதிரவன் உதயத்தோடு ரசிகர்களின் 'க்யூ' வும் உதயமாகி விட்டது.

நிமிடத்துக்கு நிமிடம் 'க்யூ' நீண்டு கொண்டே இருந்தது. நானோ பொன்மனச் செம்மல் அவர்களுடன் லாயட் சாலையில் இருக்கிறேன். என் உடல் அங்கே இருகிறது உள்ளமோ 'பாரகன்' திரை அரங்கில்.!.

காலை 9 மணி அளவில், அவரைச் சந்தித்த நான், ''மிகப் பெரிய வெற்றியை அடையப் போகிறீர்கள்'' என்று சொன்னேன்.

''என் கடமையை நான் செய்து முடித்து விட்டேன். வெற்றியோ, தோல்வியோ மக்கள் தீர்ப்பைப் பொறுத்தது'' என்று அவர் சொன்னார்.

இலட்சக் கணக்கான பொருள்; நேரம், பேருழைப்பு — இவற்றைப் பணயம் வைத்து அவர் உருவாக்கிய படம் இன்னும் சிறிது நேரத்தில் பவனி வரப் போகிறது! ஆனால் அவரோ சிறிதும் சலனம் இல்லாமல் மலர்ந்த முகத்தோடு, அமைதியாக என்னிடம் பேசிக் கொண்டிருக்கிறார்!

ஆச்சரியம்தான்! ஆனால் 'சரித்திரம் படைப்பவர்களுக்கு இது சாதாரணம்' என்று எனக்குள் கூறிக் கொண்டேன்.

''உறுதியாக உன் கருமத்தைச் செய்! விளைவைப் பற்றிச் சிந்திக்காதே'' என்று உரைத்த அந்தக் கீதாசாரியனின் வடிவத்தில் பொன்மனச் செம்மலைக் கண்டேன்.

மணி ஓடிக் கொண்டிருந்தது.

''நான் தியேட்டருக்குப் போக வேண்டும்'' என்று ஆர்வத்தோடும் பரபரப்புடனும் கூறினேன்.

என்னை — என் மன வேகத்தைப் புரிந்து கொண்டார். அவரது காரிலேயே அனுப்பி வைத்தார். சென்றேன்.

அப்போது அரங்கிலே ஒரே கர ஒலி. 'எம்ஜியார் பிக்சர்ஸ்' நிறுவனத்தின் டைட்டில் காட்சியை அந்தக் கர ஒலியுடன் கண்டவாறு உள்ளே அமர்ந்தேன்.

படத்தை எல்லோரும் எப்படி ரசிக்கிறார்களென்பதைப் பார்த்து மகிழத்தானே நான் வந்திருக்கிறேன்! (நான்தான் படத்தை அது வெளி வருவதற்கு முன்பே பலமுறை பார்த்திருக்கிறேனே!)

மக்கள் படத்தை ரசித்தார்கள் என்று மட்டும் சாதாரணமாகச் சொன்னால் அது என்னைக் குற்றவாளியாக்கும்.

என் வாழ்வில் அப்படி ஒரு மகத்தான முறையில் மக்கள் ரசித்த மற்றொரு படத்தை அதுவரை நான் கண்டதில்லை!

எல்லையற்ற உற்சாகம்! ஆனந்தம்! பேரானந்த ஆரவாரம்!

''இதுவல்லவா படம்! இவரல்லவா எம்.ஜி. ஆர். இப்படியல்லவா புகழ் பெறவேண்டும்!''

இப்படி வார்த்தைகள் என் நாவிலிருந்து வெளிவந்தன. படம் முடிந்து வெளி வந்து பார்க்கிறேன்.

அடுத்த காட்சிக்கு மக்கள் கூட்டம் கடல் போல் திரண்டிருக்கிறது. வாலாஜா சாலையில் சேப்பாக்கம் கடந்து, 'க்யூ' காணப்படுகிறது!

என் கண்கள் மலர்கின்றன.

என் உள்ளம் குளிர்கிறது.

என்னை அறியாத ஓர் ஆனந்தம்!

பொன்மனச் செம்மலிடம், ''கண்டேன், காணற் கரியதைக் கண்டேன்'' என்று கூறத் துடித்துப்புறப்பட்டு விட்டேன். (தொடரும்)

மேலட்டை வண்ணப்படம்:

—சுபா சுந்தரம்

புகைப்படங்கள் உதவி:

—பிலிம்நியூஸ் ஆனந்தன்

அவன்: ''ஸ்டெப் கட்டுக்கு அடுத்த படியா காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் விரும்பறது எதைத் தெரியுமா?''

இவன்: ''எதை?''

அவன்; ''கிளாஸ் கட்டை!''

- உ. ராஜாஜி

ஈழத்திற்கோர் இலக்கிய பாலம்

காந்தளகம்

நூல் வெளியீடு விற்பனையகம்

72, அய்யாவு வீதி, சென்னை - 600030

★

எனது யாழ்ப்பாணமே: க. சச்சிதானந்தன்: ரூ. 10-00
(நான்காம் உலகத் தமிழ் மாநாட்டையும் அதன் முன்னும் பின்னும் நிகழ்ந்தவற்றையும் விவரிக்கும் நூல்)

நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நிகழ்ச்சிகள்
(ஆராய்ச்சிக் கட்டுரைகள்) இரு தொகுதிகள் ஒவ்வொன்றும் ரூ. 30-00

மனக்கோலம்: டாக்டர் கோவூர்: ரூ. 4-90
(மனநோய்கள், பேய்கள் பற்றிய சுவையான உண்மைகள்)

★

இலங்கைத் தமிழரின் இலக்கிய ஆய்வு, அரசியல், வரலாறு, பக்தி நூல்கள், நாவல்கள் கிடைக்கும். விவரமான விலைப்பட்டியல் இலவசம். நூல்களைப் பதிவஞ்சலில் பெற விலையுடன் ரூ. 2-50 சேர்த்துப் பணவிடை (M.O.) அனுப்புக.



சித்திதரும் நூல்கள்

1. ஸ்ரீ சக்கரம், ஸ்ரீமஹாமேரு பூஜை முறை (மூல மந்திரத்துடன்)
2. நவக்கிரக தோஷமும், ஸௌந்தர்ய லஹரி பரிகாரமும்
3. மாங்காடு தபஸ் காமாட்க்ஷி கலி வெண்பா
4. பொன் மாரி (கனகதாரா ஸ்தோத்திரத்தின் தமிழாக்கம்)
5. வினை தீர்க்கும் வேள்வி (சுப்ரமணிய புஜங்கம் தமிழாக்கம்).
6. ஞானப் புரட்சி (ஆதிசங்கரரின் பஜ கோவிந்தம் தமிழாக்கம்).

ஒரு புத்தகம் விலை 75 காசு

மேற்படி ஆறு புத்தகங்கள் தேவையுள்ளவர்கள் ரூ. 5 00 M.O. செய்யவும்.

ஒரு புத்தகம் மட்டும் தேவையுள்ளவர்கள் ரூ. 1.10க்கு தபால் தலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி புத்தகங்களை விற்பனை செய்ய விரும்புவோர் விபரத்திற்கு எழுதவும்.

ஸ்ரீ மஹாமேரு பதிப்பகம்
"சக்தி நிலையம்"
52, பள்ளிக்கூடம் தெரு,
பட்டாபிராம், சென்னை-600 072

பொன்மனச் செம்மலும் பொன்விழா ஆண்டும்

○ நாடோடி மன்னன் படத்தில் எம். ஜி. ஆர். சரோஜாதேவி

சினிமாத் தொடர்

3

“**பா**த்திரம் நிறையப் பாலைக் கண்டு பழகிய உங்களுக்குச் சாக்கடை நடுவே வாழும் மக்களின் நிலை புரியாதென்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இரண்டாயிரம் ஆடைகளில் எதை அணிவது என்று புரியாது திண்டாடும் நீங்கள், ஏதாவது ஓர் ஆடை இருந்தால் மானத்தைக் காக்க உடலை மறைக்கலாமே என்று ஏங்கும் ஏழைகளைப் பற்றி எப்படி அறிந்து கொள்ள முடியும்?''

—இந்த உரையாடலைச் சிந்தனை செய்ய வேண்டும்.

''நாடோடி மன்னன்'' படத்தில் 'வீராங்கு'ஞகை வரும் பொன் மனச் செம்மல் பேசுகிற பல வசனங்களில் ஒன்று இது.

இது போன்ற வசனங்களைக் காட்சிகளோடு பொருத்திக் கச்சிதமாக முழக்கமிட்டால், படம் பார்ப்பவர்களின் நெஞ்சத்தில் பரபரப்பும் எழுச்சியும் ஏற்படாமலா போகும்?

இதில் ஓர் அரிய உண்மையும் உண்டு.

''பாடுவோர் பாடிஞல் ஆடத் தோன்றும்'' என்பார்கள். அதுபோல் பேசுவோர் பேசிஞல்தான் எழுச்சி உண்டாக முடியும்.

பொன்மனச் செம்மல் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்த இலட்சியங்களை, ஆற்றிய தொண்டுகளைப் பிரதிபலித்த காரணத்தாலேயே இந்த மாதிரி உரையாடல்களுக்கு முக்கியத்வம் உண்டாயிற்று.

நடிப்பை 'நடிப்பு' என்ற கண்ணேட்டத்தில் பார்ப்பது வேறு.

நடிப்பை வாழ்க்கையின் நடப்போடு இணைத்துப் பார்ப்பது வேறு.

மக்கள் திலகம் அவர்கள் மேற்சொன்ன இரண்டு வகைகளில் இரண்டாவது வகையாலேயே அதிகமாகப் பார்க்கப்பட்டவர்.

நடப்பு வாழ்க்கையில் ஏழைகளுக்கு உதவி செய்தார். கல்விக் கூடங்களுக்கு நன்கொடை வழங்கிஞர். மாதர் நல விடுதி களின் அபிவிருத்திக்கு மானியம் வழங்கிஞர். தேசிய சேமிப்பு நிதிக்குப் பெரும் பொருள் அளித்தார். எளிய ரிக்ஷாக்காரர்களுக்கு மழைக் கோட்டு வழங்கிஞர்.

இன்னும் எந்தெந்த வகைகளில் யார் யாருக்கு உதவ வேண்டுமோ அத்தனையும் செய்தார்.

புயல், வெள்ளச் சேதமா? முன்ஞல் போய் நின்று தொண்டாற்றுவார்.

தீயால் உடைமைகளை இழந்தார்களா? தக்க உதவிகளைச் செய்வார்.

இப்படியெல்லாம் மக்கள் நலத்தையே தம் நல்மாகக் கருதிச்செயல்பட்ட காரணத்தாலேயே சொல் மேடைகளிலும் சரி, வெள்ளித் திரைகளிலும் சரி, எம். ஜி. ஆர். அவர்களின் நாவிலிருந்து வெளிவரும் சொற்களுக்கு மந்திரசக்தி போன்ற ஒரு கவர்ச்சி ஏற்பட்டது.

சொல்லும் செயலும் ஒன்ருஞல் வெல்லும் கீர்த்தி ஏற்படத் தடை ஏது?

''என் இரத்தத்தின் இரத்தமே!'' என்று அழைத்தாராஞல், அந்த அழைப்பின் அரவணைப்பில் எத்தனை உள்ளங்கள் நெகிழ்ந்து விடுகின்றன!

வித்துவான் வே. லட்சுமணன்

ஏன்? என்ன சக்தி இது?

''வாய்மை, தூய்மை, நேர்மை'' என்ற மூன்று 'மை'களைத் தவிர வேறு மாயமான 'மை'களுக்கு அங்கு இடமில்லை! இது மக்கள் தீர்ப்பாயிற்று. காலத்தின் கணிப்பாகவும் உறுதியாயிற்று.

தங்கள் குடும்பத்தில் ஒருவராகவும் தங்கள் வாழ்வுக்கு வழி காட்டியாகவும் உள்ளவர் இவர் என்று பல்லாயிரக் கணக்கானவர்கள் கருதினார்கள்.

சமுதாய மறுமலர்ச்சிக்கு எத்தனையோ மகான்களின் மகத்தான தொண்டுகளைக் கண்ட நாடு இது.

சமூகப் புரட்சிக்கும் கிளர்ச்சிக்கும்கூட மாபெரும் தலைவர்களைத் தோற்றுவித்த நாடு இது.

புரட்சி, கிளர்ச்சி, மலர்ச்சி என்ற இவை யாவும் 'அன்பு' என்கிற அஸ்திவாரத்தின் மீது எழுதப்படுகிற அஹிம்சை மாளிகையாக ஒளிர வேண்டும் என்பதில் யாருக்கும் 'இசைவு' இருக்க வேண்டும்.

கொலை செய்து கோபுரம் கட்டுவதால் பயனில்லை. தூய கொள்கைகளின் அடிப்படை மனிதாபிமானம் ஒன்றுதான்!

அந்த மனிதாபிமானத்தை ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் பொன்மனச் செம்மல் வெளிப்படுத்தினார். இதனால் எண்ணிக்கையைக் கடந்த நல்லோர்களின் இதயத்தில் இடம் பெற்றார்.

இந்த வாய்ப்பைப் பெறுவதற்குத் திரைப்படம் என்கிற சாதனம் பலமான ஒருதுணையாக அமைந்தது என்றும் அதை அவ்வண்ணம் இவரே அமைத்துக் கொண்டார் என்றும் சொல்ல வேண்டும். இதனால் இவர் சார்ந்த இயக்கமும் வளர்ந்து முன்னேறியது உண்மை. அந்த இயக்க வளர்ச்சியின் விசேடங்களைப் பற்றிப் பிறகு சொல்லவிருக்கிறேன்.

இவரது வளர்ச்சியின் காரணமாகத் தமிழ்த் திரையுலகம் பெற்ற வளர்ச்சி முதலாவதாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

சாதாரணமாக ஒரு நாளில் மூன்று காட்சிகள் ஒரு கொட்டகையில் நடப்பது வழக்கம். நான்கு என்பது அபூர்வம். 'ஐந்து' காட்சிகள் அபூர்வத்திலும் அபூர்வம் அல்லவா?

'மக்கள் திலகம்' அவர்களின் பல படங்கள் இத்தகைய அபூர்வ சாதனைகளைக் கண்டிருக்கின்றன. அணை போட்டுத் தடுக்க முடியாத அளவுக்கு ஆர்வம் என்கிற பெரு வெள்ளம் புரண்டு வரும்போது எப்படியாவது அதற்கு ஈடு கொடுக்க வேண்டுமல்லவா? அதனாலேயே ஐந்துகாட்சிகள் நடத்துவார்கள்! அத்தனை காட்சிகளிலும் கொட்டகை நிறைந்து, மேலும் காத்திருக்கும் ரசிகர் கூட்டம்.

'ரசிகர்' என்ற வார்த்தைக்கே ஒரு தனிச் சிறப்பு உண்டானது தமிழ் நாட்டில்தான். அதுவும் பொன் மனச் செம்மலால்தான்.

கலைஞர்கள் எல்லோருக்குமே ரசிகர்கள் இருப்பது இயற்கை. ரசிகர்கள் இல்லையென்றால் கலைஞர்களும் இல்லை; கலையும் இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆனால், மக்கள் திலகம் அவர்களின் ரசிகர்களுக்கு ஒரு தனித் தன்மை இருந்து வந்ததை நான் அறிந்திருக்கிறேன்.

அவரது பெயரை வெள்ளித் திரையில் கண்டதும் கர ஒலி எழுப்பி, பூமாரி பொழிவார்கள்!

அவர் முதன் முதலாகத் திரையில் தோன்றும் காட்சி வரும்போதும் பூமாரி பொழிவார்கள்.

தனக்கே உரிய பாணியில் அவர் சில 'சைகை'களைக் காட்டும்போது கொட்டகை அலறும்.

கையிலே வாளை எடுத்தார் என்றால், அப்போது ஆரம்பிக்கும் கரகோஷம் கடைசி வீச்சு வரை நீடிக்கும்!

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அவர் தாவினாரானால் ரசிகர்கள் தங்கள் இருக்கையில் எழுந்து குதிப்பார்கள்.

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம், இந்த ரசிகர்களின் அன்பு கலந்த உள்ளத்தின் ஆரவாரத்தை.

இதற்கு அடிப்படை மக்கள் திலகம் அவர்கள் கையாண்ட கலைநயம் மட்டும் என்று கூறினால் போதாது; உள்ளங்களில் புகுந்து உறவாடும் ஆற்றல்; படம் பார்ப்போருக்கும் தனக்கும் ஒன்றியதோர் பிணைப்பை உருவாக்குகிற திறமை, ஆகிய வற்றையும் குறிப்பிட வேண்டும்.

நாடெங்கணும் பட்டி தொட்டிகள் என்பார்களே, அந்தப் பகுதிகளிலும் கூட எம். ஜி. ஆர். அவர்களுக்கு எண்ணற்ற ரசிகர்கள் உண்டு. கொள்கைக் கோமகன் என்றும். குறை தீர்க்கும் குமணன் என்றும் வாரி வழங்கும் பாரி என்றும் வாயாறப் போற்றி, மனமார நேசித்து, இந்தரசிகர்கள் மக்கள் திலகம் அவர்களின் வெற்றிக்குப் பின்னணியாகத் திகழ்ந்தார்கள்.

லட்சக் கணக்கான ரசிகர்கள், ஆயிரக் கணக்கான ரசிக மன்றங்கள் அங்கங்கே

அவன்: ''வியர்வையில் புழுங்குகிறபோது உசிலைமணி என்ன ஆவார் தெரியுமாடா?''

இவன்: ''என்ன ஆவார்?''

அவன்: ''உஸ்லைமணியாக!''

உ. ராஜாஜி

மங்கையர் மலர்

செப்டம்பர் இதழில்

"கத்துக் கொடுக்க வாரீங்களா?" — மனோரமா

பணியாற்றிய சிறப்பையும், தமிழகத்தில் 'புதியதோர் உலகம்' பூத்திடும் வகையில் ஆக்கப் பணிகள் வளர்ந்த சீர்த்தியையும் கடந்த கால வரலாறு தன் பொன்னேடுகளில் பொறித்துக் கொண்டிருக்கிறது என்பது உண்மை.

இந்த ரசிகர்கள் மக்கள் திலகம் அவர்களுக்காக எப்பேர்ப்பட்ட தியாகங்களையும் செய்யக்கூடியவராக உருவான காரணத்தால் திரைப்படங்களிலும் சரி, பொது மேடைகளிலும் சரி, அவர் மூலம் வெளியாகும் கருத்துக்களை மனமார ஏற்றுக் கொண்டார்கள்.

ஒரு பக்கம் திரைப்படத் தொழில் வளரவும், மறு பக்கம் புதிய சித்தாந்தங்கள் உருவாகவும் வழி உண்டாயிற்று.

'நாடோடி மன்னன்' ஏற்படுத்திய வெற்றியில் 'பண வசூல்' என்பது குறிப்பிடத்தக்கதுதான் என்றாலும், அதை விடப் பெரியதாகக் கருதப்பட வேண்டியது சமுதாய மலர்ச்சியாகும்.

இனிய சுவையோடு கலக்கப்பட்ட மருந்தைப் போல் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் படம் முழுவதும் நிறைந்திருந்தன. இதனால் இருளிலிருந்து வெளிச்சத்துக்கு வருவது போன்ற ஒரு புதிய சகாப்தம் திரையுலகிலும் சரி, சமூக நிலையிலும் சரி ஏக காலத்தில் உதயமாயிற்று.

எல்லோராலும் பாராட்டப்பட்ட இந்த வெற்றிச் சித்திரத்தின் நாயகனை எல்லாப் பத்திரிகைகளும் போற்றிப் புகழ்ந்தன.

'எம். ஜி. ஆர். பயனுள்ள ஒரு பணியைச் செய்தார்' என்றும்,

'உலக முதற் பரிசு பெறும் தகுதி இப்படத்துக்கு உண்டு' என்றும்,

'எம். ஜி. ஆருக்கு வைரம் பதித்த மோதிரத்தைப் பரிசளிக்கவேண்டும்' என்றும்

'தமது முதல் டைரக்ஷனின் வெற்றி குறித்து எம். ஜி. ஆர். பெருமைப்படலாம்' என்றும்,

'ஒரு சிறந்த நடிகர் ஒரு சிறந்த டைரக்டராகவும் இருக்க முடியும் என்பதை இந்தப் படத்தில் பார்க்கிறோம்' என்றும்

'தமிழ்ப் பட உலகில் இது ஓர் இமாலய வெற்றி' என்றும் பல வகைகளில் பத்திரிகைகளால் ஒரு முகமாகப் புகழப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ''இதன் வெற்றி குறித்து இன்னும் பல காலத்துக்கு மக்கள் பேசக் கூடிய ஒரு நல்ல படம். அவர் பெற்ற புகழ் நாம் பெற்ற புகழாகும்; நாம் பெற்ற புகழ் நாட்டுக்குச் சொந்தம். நம் நாட்டின் தலைசிறந்த மகனாக அவரைக் கருதுகிறோம்'' என்றார்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், கவிதையால் புகழ்ந்தார்:

''இயக்கக் கொள்கை, இலட்சிய விளக்கம்
மயக்கும் மடமையைக் கொளுத்தும்
மார்க்கம்
கலையினிற்காணச் செயல்முறை வகுத்தார்
அளவிலாப் புகழை அடைந்தார்;
உயர்ந்தார்
அண்ணா தம்பிகள் அனைவரும் வாழ்த்தப்
பொன்னார்விளக்கெனப் புகழ்மலை ஏறினார்'

இவ்வாறு மேலும் பல பெரியோர்கள் பாராட்டினார்கள்.

பாராட்டுக்களுக்கு எல்லை இல்லை என்ற அளவுக்குச் சரித்திரம் பிறந்தது.

இந்தச் சரித்திரத்துக்குச் சிகரம் பொறித்தாற் போன்று மதுரை மாநகரில், நான்கு பரிகள் பூட்டிய அலங்கார ரதத்தில் மாபெரும் ஊர்வலம் மக்கள்திலகம் அவர்களுக்கு நடத்தப்பட்டது. அன்று நடந்த விழாவில் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டுக் கூடிய மக்களிடையே, நாவலர் திரு நெடுஞ்செழியன் அவர்களின் கரத்தால் தங்க வாள் ஒன்று பொன் மனச் செம்மலுக்குப் பரிசளிக்கப்பட்டது. அப்போது எழுந்த வாழ்த்துக் குரல்களின் ஒலி இப்போதும் என் செவிகளில் ரீங்காரம் இட்ட வண்ணம் இருக்கிறது.

இத்தனை பெருமைகளும் எம். ஜி. ஆர். அவர்களுக்கு உரித்தானவை என்று சொல்வதை விட, அவர் மூலம் தமிழ்த் திரை உலகுக்குக் கிடைத்தவை என்று சொல்வது சிறப்பாகும்.

(தொடரும்)

உஷ்ஷ்...
...ஷ்ஷ்...

பிரமுகர்க



✖ 'என்ன வெட்கம்! சாப்பிடும்மா'

✖ எம். பி. சுப்பிரமணியம் (ஒரு சீக்கியர் கோயிலுக்கு வந்தபோது)

● முருகேசன் முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர். அவருடைய மனேவியோ அரிஜன வகுப்பைச் சேர்ந்தவர். பெரியோர்கள் சம்மதத்தோடு திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற இடம் திருவேற்காடு கருமாரி அம்மன் கோயில். திருமணம் நடந்த உடனே சமபந்தி போஜனத்தில், மணமக்களுக்கு எம். ஜி. ஆரோடு சேர்ந்து விருந்து! வெள்ளை வெளேர் என்று உடையணிந்த சர்வர்கள் உணவு வகைகளைப் பரிமாற, மணப்பெண் சந்திராவுக்கோ தவிப்பு. அவருடைய கவலையெல்லாம் எம். ஜி. ஆரிடம் 'ஆட்டோகிராப்' வாங்க வேண்டுமே என்பதுதான். இதைப் புரிந்துகொண்ட எம்.ஜி. ஆர். 'இதோ பாரும்மா நீ சாப்பிட்டு முடிக்கும்வரை இருந்துஆட்டோகிராப் போட்டுக் கொடுத்து விட்டுத்தான் போவேன், தைரியமாகச் சாப்பிடு.' என்ருர். எம்.ஜி. ஆருடைய இடது பக்கத்தில் இருந்த பெரியவருக்கோ சரியாக உட்கார முடியவில்லை. இதைக் கண்ட முதல்வர், 'சரியா உட்கார்ந்து சாப்பிடுங்க.' என்று அன்புடன் கேட்டுக் கொண்டார். ஆனல் அந்தப் பெரியவருக்குக் காலைச் சரியாக மடக்கி உட்காருவது என்பது கஷ்டமான காரியமாம். சமபந்தி போஜனத்தில் வழங்கப்பட்ட உணவு வகைகள் ஹோட்டல் ஸ்ரீலேகாவில் தயாரிக்கப்பட்டவையாம்.

●● ஆட்டம் கண்டு கொண்டிருக்கும் எம்.பி சுப்பிரமணியத்தின் காங்கிரஸ் தலைவர் பதவி எப்போது பறிக்கப்படும்? இந்தக் கேள்விக்கான பதிலைத்தான் மூப்பனர் ஆதரவாளர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். பிரதமரோ, மூப்பனர் கோஷ்டிக்கும், எம். பி. எஸ். கோஷ்டிக்கும் நடுநிலையான ஒருவரைத் தேடிக் கொண்டிருக்கிருர். அப்படிப்பட்ட ஒரு நபர் இல்லாததுதான் கோஷ்டிச் சண்டைகள் வளரக் காரணமாக இருக்கிறது. பா. ராமச்சந்திரனைத் தலைவராகப் போடலாம் என்ருல், அவரோ, 'என்னை விட்டுவிடுங்கள், நான் கவர்னர் பதவியையோ அல்லது தூதர் பதவியையோ எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்கிருராம். ''ஆளும் கட்சியாக உள்ள மாநிலத்தில்தான் கோஷ்டிப் பூசல்கள் வருவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனல் எதிர்க்கட்சியாக இருக்கும் தமிழ் நாட்டில் ஏன் இப்படி'' என்று கேட்கிருராம் இந்திரா.

●●● சட்டமன்றத்தில் தற்போது கேள்வி மன்னராக விளங்குபவர் அண்ணு தி.மு.க. எம்.எல்.ஏ. திரு தாமரைக்கனி. இந்தத் திருவில்லிபுத்தூர்காரர், சட்டமன்றம் கூடும் நாட்களில் சரியாக 9 மணிக்கு அங்கு இருப்பார். அதுதான் கேள்வி நேரம். 'காலையில் எழுந்தவுடன் எல்லா நாளிதழ்களையும் பார்த்துவிட்டு, அன்றைய பிரச்னை எதுவோ அது சம்பந்தமாகக் கேள்வி கேட்பது என் வழக்கம்'' என்று கூறுகிருர் இவர்.

●●●● சென்னையில், ''சட்டத்தின் சமூகப் பாதை'' என்ற தலைப்பில் ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு கிருஷ்ணய்யர் பேசியதிலிருந்து...

● நமது நாட்டிலுள்ள முக்கால்வாசி நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டம் என்ருல் என்ன என்பதே தெரியாது. அப்புறம், அவர்கள் எப்படி அதற்குண்டான திருத்தங்களைச் செய்ய முடியும்?

— கௌசல்யா

படங்கள் : சுபா நியூஸ்

"நேருவுக்கும் அண்ணுவுக்கும் அடுத்த படியாக மக்களைக் கவர்ந்திழுக்கும் வசீகர சக்தி கொண்டவர் எம். ஜி. ஆர். இத்தகைய வசீகர சக்தியை வேறெவரிடமும் இந்தியா கண்டதில்லை."

இவ்வாறு சொன்னவர் ஓர் அமெரிக்க அரசியல் பேராசிரியர். இதை "அமெரிக்காவில் அண்ணு — எம்.ஜி.ஆர்." என்ற நூலில் டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

'வசீகர சக்தி' என்பது இயற்கைத் தோற்றத்தால் மட்டும் வந்துவிடுவதில்லை. அந்தச் சக்தி அமையப்பெறுவதற்குப் பல தகுதிகள் வேண்டும்.

தோற்றப் பொலிவு, பேச்சுத் திறன், உள்ளத்தின் ஒளி, தியாகத்தின் பிரதிபலிப்பு, செயலாற்றல், ஆழ்ந்த அன்பு, தேர்ந்த அறிவு, தன்னலமற்ற உழைப்பு, கடும் முயற்சி முதலானவற்றுல் ஏற்படுவதே உணமையான வசீகர சக்தியாகும்.

பொன்மனச்செம்மல் கடந்த காலத்தில் தமிழகத்தில் கலை மூலமாகவும், அரசியல் மூலமாகவும் ஆற்றிய அருஞ்செயல்கள் அற்புதமானவை என்பதும் எல்லோரும் உணர்ந்த உண்மை.

பொன்மனச் செம்மல் அவர்களிடம் சிந்தனை, பேச்சுத்திறன், செயலாற்றல் ஆகிய மூன்று தன்மைகளுக்கும் மேல், ஒரு புதுமையான சிறப்புத் தன்மையும் கூடியிருப்பதைக் காணலாம். அதுதான் 'உன்னத நடிகர்' என்ற நிலை.

இந்த வாய்ப்பு சாதாரணமான ஒன்று இல்லை.

மக்களிடம் தன்னைப் பற்றிய ஒரு மகத்தான எண்ணத்தை உருவாக்கிக் கொள்ளச் 'சினிமா' ஓர் அரிய சாதனமாக அமைந்தது.

லட்சக் கணக்கான மக்களிடம் அன்ருடம் தன்னையும், தன் கோட்பாடுகளையும் பிரதிபலித்துக் காட்டுவதற்கு எப்பேர்ப்பட்ட உயர்ந்த சாதனம் சினிமா என்பதைச் சிந்தியுங்கள்!

சினிமா மூலம், 'மக்களிடம்' செல்வாக்குப் பெற்று, அந்தச் செல்வாக்கை ஆக்கப் பணிகளுக்கு முழுமையாகப் பயன்படுத்தி,

பொன்மனச் செம்மலும் பொன்விழா ஆண்டும்

இந்தத் தமிழ் நாட்டில் மகத்தான ஒரு புரட்சியைச் செய்தவர் மக்கள் திலகம். அதனுலேயே ஆதியில் அவர், 'புரட்சி நடிகர்' என்று போற்றப்பட்டார். கால வளர்ச்சியில் புரட்சி நடிகர் 'புரட்சித் தலைவரா'னுர்.

புரட்சி நடிகராகவும், புரட்சித் தலைவராகவும் தன்னை உருவாக்கிக் கொள்ள அவர் மேற்கொண்ட முயற்சிகளும் அடைந்த இன்னல்களும் பெற்ற அனுபவங்களும் கணக்கற்றவை.

ஆதியில் திரை உலகில் பிரவேசிக்கவே எண்ணற்ற தடைகள் உண்டாயின. முதன் முதலாக 'சாயா' என்ற படத்தில் கதாநாயகனுக நடிக்க ஒப்பந்தமாகி, அது முற்றுப் பெருமல் போயிற்று.

வித்துவான் வே. லட்சுமணன்

அதற்கு முன் 'இதோ அதோ' என்று ஆசை காட்டிக் கடைசியில் சந்தர்ப்பம் தரப் படாமல் போன படங்கள் பல.

சந்தர்ப்பம் தரப்பட்ட படங்களிலும் பெரிய வேடம் தரப்படுவதில்லை; முழுமை யாக இரண்டு இடங்களில் வசனம் பேசும் வாய்ப்பும் கிடைப்பதில்லை.

இதற்கும் முந்திய நாட்களில் 'பாய்ஸ் கம்பெனி'யில் முன்னேறுவதற்கு முன் பின் தள்ளப்பட்ட நிகழ்ச்சிகள் ஏராளம்.

ஏழு வயது அப்போது. குருகுல வாசம் பாய்ஸ் கம்பெனியில்தான். சாப்பாடு போட்டு வாரத்துக்கு நாலணு தருவார்கள். எந்தப் பாத்திரம் கொடுத்தாலும், அது தன் தகுதிக்கு எவ்வளவு குறைந்தது என் ருலும் அதை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பல எதிர்ப்புக்களைக் கடந்து திரைப் படப் பிரவேசம் செய்ய வந்தார்.

சிறு சிறு வேடங்கள் கிடைப்பதே குதிரைக் கொம்பாயிற்று.

ஒரு படத்தில் இன்ஸ்பெக்டர் வேஷம். இன்னொரு படத்தில் தோன்றிய காட்சி ஒன்றே ஒன்று; அதில் தோன்றி, அதிலேயே இறந்துவிடுகிற வேடம்!

இப்படிப் பல அனுபவங்கள்:

நோக்கம் வேறு; அதை அடைவதற்குத் தடைகள் நூறு!

கதாநாயகனுக வேண்டும்; கதாநாயகனுக ஆனல்தான் புகழ் வரும்; புகழ் வந்தால் தான் மதிப்பு, வருவாய் எல்லாம் வரும். அவை வந்தால்தான்தான் சொல் எடுபடும்; தன் கருத்துக்கு வரவேற்பு உண்டாகும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள் வதற்கு, இயற்கை குறுக்கே நின்றது; கிர கங்கள் தடை செய்தன; தொழிலதிபர்கள் சக நடிகர்கள், இயக்குனர்கள் எல்லோருமே எதிராக இருந்தார்கள்!

"நேற்று உன் கணவர் நாலைந்து பெண்கள் பின்னடி சுற்றிக் கொண்டிருந்தார்டீ!"

"அப்படியா, எங்கே?"

"விநாயகர் கோவில் பிராகாரத் தைச் சுற்றி...!"

எதிர் நீச்சல்தான்! அசாத்தியமாக பொறுமை; தன்னம்பிக்கை, உழைப்பு போராட்டம் ஆகியவை வளர்ந்துகொண்டே இருந்தன. அவற்றின் வளர்ச்சி வீண்போக வில்லை. காலக் கிரமத்தில் தாமும் வளர்ச்சி அடையப் பெற்ருர்!

இந்த வளர்ச்சிக்கு மேற்சொன்ன தன் மைகள் மட்டுமல்லாமல், தேவைப்பட்ட தகுதிகள் எல்லாமே தம்மிடம் அமையும் படியாகத் தம்மை உருவாக்கிக் கொண்டார்.

நடிப்பில் எத்தனை வகைகள் உண்டோ அத்தனையையும் பயிற்சி மூலம் வருவித்துக் கொண்டார்.

சட்டென்று சிரிக்க வேண்டுமா? முடியும். கண்ணீர் பெருக்கி அழ வேண்டுமா? முடியும். விழிகளால் பேச வேண்டுமா? முடியும்.

மொழிகளால் கர்ஜனை செய்ய வேண் டுமா? முடியும்.

ஓடவேண்டுமா, தாவ வேண்டுமா, குதிக்க வேண்டுமா? எல்லாம் முடியும்.

குஸ்திச் சண்டையா? வாள் வீச்சா? குச்சிச் சண்டையா? யாவும் முடியும்.

நவரசங்களையும் பிரதிபலிக்க வேண்டுமா? தயார்!

குதிரை ஏற்றம், யானை ஏற்றம் செய்ய வேண்டுமா? தயார்.!

இன்னும் என்னென்ன தேவை என்ருலும் அத்தனைக்கும்தயாராகத் தம்மை அமைத்துக் கொண்டார்.

அதிகாலையில் எழுந்திருப்பார்; கடுமை யான உடற்பயிற்சி மேற்கொள்வார். இத ஞல் உடலில் பலமும் பொலிவும் ஏற்பட்டன.

இப்படி எல்லாத் தகுதிகளும் பெற்றும் கூடப் படத் தயாரிப்பாளர்களும் இயக்கு நர்களும் ஏதேனும் குறை சொல்லிச் சந்தர்ப் பம் தராமல் ஒதுங்கிவிடுவார்கள்.

ஏமாற்றுபவர்களிடம் ஆத்திரம் வரும்; ஆனல் அதை அடக்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியிராது.

"என்னிடம் உள்ள தகுதிகளைச் சோதித் துப் பாருங்கள். எந்த மாதிரியும் நடிப்பேன்! எப்பேர்ப்பட்ட பயங்கரச் சூழ்நிலையிலும் வீர சாகசங்களைச் செய்வேன்" என்று சவால் விட்டாலும், செவிடன் காதில் ஊதிய சங் காகவே இருக்கும்.

சிலர் 'ஆகட்டும்' என்பார்கள். நடை முறையில் விளைவு எதிர்மறையாகவே இருக் கும்!

சிலர் உண்மையாக உதவும் ஆர்வத்துடன் முன்வருவார்கள்; ஆனல் அவர்களைத் தடுக் கும் உபகாரிகள் உடனிருப்பார்கள்.

தாயாரிடம் தம் நிலைமையைச் சொல்லித் தம்மை ஏமாற்றுபவர்களின் போக்கையும் பற்றிக் கூறுவார் மக்கள் திலகம்.

அன்னை உரைப்பார்கள்: "எறிந்த கல் மடியிலே! அவர்களின் வினை அவர்களைக் கவ னித்துக் கொள்ளும். தடைக் கல்லைப் படிக் கல்லாக்கிக் கொண்டு நீ முன்னேற வேண் டும்!" என்று.

ஏமாற்றம்ஏற்படும்ஒவ்வொரு நேரத்திலும் அன்னையின் அறிவுரை தாரக மந்திரம் போல் ஆறுதல் அளிக்கும். அதனல் மீண்டும் ஓர் உற்சாகம் ஏற்படும். மறுபடியும் முயற்சி வேள்வி தொடங்கும்.

இப்படி யெல்லாம் போராடிப் போராடிப் பிறகுதான் 'இராஜ குமாரி' படத்தில் கதா நாயக வேடம் கிடைத்தது. படம் வெற்றி பெற்று, மக்கள் திலகம் அவர்களுக்கும் அதில் பங்கு கிடைத்தது. ஆனுல் தொடர்ந்து கதா நாயகன் வேடத்துக்குப் படங்கள் வர வேண்டுமே, வரவில்லை. மீண்டும் ஏமாற்றம் தான்.

வீர அபிமன்யுவின் சரித்திரத்தைச் சிறு வயதிலேயே அன்னையாரால் அறிந்தவர் மக்கள் திலகம். இதனுல் 'வீரம்' அவரது இரத்தத்துடன்கலந்திருக்கும்வாய்ப்புண்டாகியிருந்தது. அதனுல் ஏமாற்றங்களைக் கடந்து உற்சாகமாகச் செயலாற்றும் உணர்ச்சி வேகம் அமைந்தது.

இராஜகுமாரிக்கு அடுத்து 'மோகினி' என்ற படம் கிடைத்தது. அதில் திறமையை வெளிக்காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே தவிரக் கதாநாயக வேடம் கிடைக்கவில்லை. 'மந்திரி குமாரி'யிலும் அப்படித்தான்.

பிறகு காலம் கனிந்தது. 'மருத நாட்டு இளவரசி' என்ற படத்தில் கதாநாயகனுக நடித்தார். பெரும் வெற்றி பெற்ற இந்தப் படம் படைப்புக் காலத்தில் பல சோதனைகளுக்கு ஆளாகியிருந்தது. வெளி வந்ததும் வெற்றி கண்டு, அந்த வெற்றியின் அடிப்படை மக்கள் திலகத்தின் சாதனைதான் என்ற தீர்ப்புக்கும் அடிகோலிற்று.

பின்னர் வந்த படங்களில் எல்லாம் படிப்படியாகப் புகழ் வளர்ந்தது. மர்மயோகி, சர்வாதிகாரி, அந்தமான் கைதி, என் தங்கை, ஜெனேவா முதலானவை குறிப்பிடத்தக்கவை.

இவற்றிற்குப் பிறகு 'மலைக்கள்ளன்' வந்தான்.

இந்தக் கள்ளன் மக்களின் உள்ளங் கவர்ந்த கள்வன் ஆனுன்!

ஓங்கு புகழ் கண்டது இந்தப் படம்.

தென்னகத்துத் திரைப்படங்களில் முதன் முதலாக ஜனுதிபதி அவர்களின் வெள்ளிப் பதக்கத்தைப் பெறும் வாய்ப்பு இப்படத்துக்கு அமைந்தது.

தமிழ்த் திரை உலகின் வளர்ச்சிக்குப் பொறிக்கப்பட்ட ஒரு நற்சான்ருக இதைக் கொள்ளலாம்.

இதன் பிறகு 'குலேபகாவலி' படத்தில் நடித்தார். சிறப்புண்டாயிற்று. 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்ற படம் அதிகம் புகழ் தந்தது. இது முழு நீள வண்ணப்படமாக அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

செக்கச் சிவந்த பொன் மேனி உடையவர், இந்த வண்ணப் படத்தில் ஜாஜ்வல்யமாக ஒளி வீசினுர்.

பிறகு மதுரை வீரன் வந்தான். மாபெரும் புகழ் தந்தான்.

சமூகப் படக் கதாநாயகனுக வேண்டும் என்ற இலட்சியத்துக்கு விதையூன்றி வெற்றி தந்தது 'தாய்க்குப் பின் தாரம்' என்ற படம்.

வரலாறு, சமூகம், ஆகிய இருநிலைப் படங்களிலும் ஒருநிலைப்பட்ட உன்னதச் சிறப்பு ஏற்படவே, 'இனி மக்கள் திலகம் அவர்களைப் போட்டு எடுக்கப்படுகிற எந்தப் படமும் வெற்றிபெற உத்தரவாதம் உண்டு'' என்ற பேச்சு எல்லோரிடத்திலும் நிலைபெற்றது.

படத் தயாரிப்பாளர்கள் போட்டி போட்டார்கள், ஒப்பந்தம் செய்து கொள்ள.

விநியோகஸ்தர்கள் விரைந்து வந்தார்கள் படத்தை வாங்கிக்கொள்ள.

கொட்டகையாளர்கள் பறந்து வந்தார்கள் படத்தை ஓட்டும் உரிமை பெற. இப்படிப் பட்ட பெரும் புரட்சி ஏற்பட்டது.

ஆதியிலிருந்தே திரு எம். ஜி. ஆர். அவர்களுக்கு உறுதுணையாக இருக்கத் தொடங்கிய ரசிகர்களுக்கு ஆர்வம் அதிகமாகக் கேட்க வேண்டுமா? நாளுக்கு நாள் ரசிகர்களின் எண்ணிக்கை கூடிற்று.

அந்த ரசிகர்கள் மக்கள் திலகம் அவர்களின் உன்னதமான கருத்துக்களைப் பறைசாற்றிப் பின்பற்றத் தொடங்கினுர்கள்.

தமிழகத்தில் கலைத் துறையில் மட்டுமல்லாமல் அரசியலிலும் புதிய புரட்சி ஏற்படுவதற்கான அறிகுறிகள் வளரத் தொடங்கின.

இந்த மாதிரி ஒரு மலர்ச்சி ஏற்படத் தொடங்கியதை அறிந்த மக்கள் திலகம் முன்னிலும் தீவிரமான வகையில் பொறுப்புக்களை ஏற்க முன்வந்தார்.

ஒருபுறம் கலைத் துறையும் மறுபுறம் அரசியலும் அவரின் முழு நேரத்தையும் சுவீகரித்துக் கொண்டன.

சக்கரவர்த்தித் திருமகன், புதுமைப் பித்தன் போன்ற படங்கள் தொடர்ந்து வெளி வந்து புகழ் தந்தன.

இக்காலத்தில்தான் 'நாடோடி மன்னன்' தோன்றினுன்; வளர்ந்தான்; பிறகு பவனி வரப் புறப்பட்டான்.

தமிழ்த் திரை உலகில் ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டது.

(வளரும்)

மகள்: எனக்கும் அம்மா மாதிரியே வாயும் நாக்கும் நீளம்னு சொல்கிருர் அப்பா உங்க மாப்பிள்ளை!

தந்தை: மாப்பிள்ளை சொன்னுல் கரெக்டாத்தான் இருக்கும். அவர் சர்வேயர் ஆச்சே!

எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு
கண்டனம்

இ.காங்கிரஸ் ஆட்சி ஊழல்

எதிர்க்கட்சிகள்
ஒற்றுமை
பவார்
சர்க்கரை
கோதுமை
ஆர். வி
இறக்குமதி

5

பொன்மனச் செம்மலும் பொன்விழா ஆண்டும்

''நந்தா விளக்கனைய நாயகன்'' என்று காவியக் கதாநாயகனைக் கவிசிரேஷ்டர்கள் போற்றுவது மரபு.

நாடோடி மன்னன் மூலம் மக்கள் திலகம் ஏற்றிய தீபம் ஒரு நந்தா விளக்கு என்றே கூற வேண்டும். இரு கோணங்களில் இது பொருந்தும்.

ஒன்று: அவர் அடைந்த புகழ்.

மற்றது: தமிழ்ப் பட உலகம் பெற்ற சிறப்பு.

''நாடோடி மன்னன்'' படம் 'காஸ்ட்யூம் ஸப்ஜெக்ட்' படமாகும். அதாவது ராஜா—ராணி வரும் கதையம்சமுள்ள படம் ஆகும். ''சமூகக் கதைப் படங்களில் மக்கள் திலகம்



✠ ப. நீலகண்டன் ✠ ஆர். எம். வீரப்பன்

நடித்தால் பிரகாசிப்பாரா?'' என்று ஒரு குரல் சில வட்டாரங்களில் ஒலிக்கத் தொடங்கியது. எதிர்ப்புக் குரல்தான்!

எதிர்ப்புத்தானே இவருக்கு ஏற்றமுண்டாகத் தூண்டி விடுகிற உபகாரி! ஒரு பிடி பிடித்தார். ஒரு கலக்குக் கலக்கிவிட்டார்.

''திருடாதே'' என்ற சமூகக் கதைப் படம் வெளிவந்தது. சக்கைப் போடு போட்டது.

தோற்றத்தில் செய்து கொண்ட மாற்றம் ஏற்றத்துக்கு அடிகோலிற்று.

'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பார்கள். 'காஸ்டயூம்'களின் துணை பலம் இல்லாமல், மாட மாளிகை 'ஸெட்-அப்' இல்லாமல், சாதாரண உடை, சாதாரண ஸெட்கள், மற்றும் சாதாரணவெளிப்புறங்கள் ஆகியவற்றின் அமைப்புடன், தமது திறமைக்கும் ஆற்றலுக்கும் மட்டுமே உள்ள முக்கியத்துவத்தை வெளிக் காட்டி வெற்றி கண்டார், 'திருடாதே' படத்தில். பெரிய சாதனை இது.

இந்தச் சாதனைக்கு இடையில் ஏற்பட்ட சோதனைதான் கால் எலும்பு முறிவு.

சீர்காழியில் ஓரிடத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது ஒரு வீரக் காட்சியில் விளைந்த சோதனை இது. பல மாதங்கள் படங்களில் நடிக்க முடியாமல் வேதனைக்கு ஆட்பட்டார்.

''இனி இவரால் நடிக்கவே முடியாது'' என்றும், ''நடக்கவே முடியாதவர் எங்கே நடிக்கப் போகிறார்!'' என்றும் எதிர்த் தரப்பில் ஒரு மாதிரியாகப் பேசப்பட்டது.

எதையும் தாங்கும் இதயத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்களின் அடியொற்றிப் பெற்றிருந்த எம். ஜி. ஆர். அவர்கள், தம்மால் நடக்கவும் நடிக்கவும் மட்டுமல்லாமல் தாண்டவும் தாவவும் பாயவும் மோதவும் கூட முடியும் என்பதை விரைவில் நிலைநாட்டி விட்டார்.

'திருடாதே' படப் பிடிப்புத் தொடங்கிய பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சி 'கால் முறிவு'. கால் குணமாவதற்குள் வளர்ந்து விட்டிருந்த கால வேகத்தில் ஏற்கெனவே இவரால் வளர்த்து ஆளாக்கப் பட்டிருந்த பலர் வெவ்வேறு வகையில் வளர்ச்சி பெற்றிருந்தார்கள். அவர்களில் சரோஜா தேவியும் ஒருவராவார்.

'நாடோடி மன்னன்' படத்தில் மக்கள் திலகம் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட

வித்துவான் வே. லட்சுமணன்

30—8—81 இதழில் வெளியாகியிருக்கும் எனது 'பேட்டி'யைப் படித்தேன். என்னுடைய சரித்திர அறிவைப் பற்றி நான் தற்பெருமை அடித்துக் கொள்வதாக எண்ணும்படி பேட்டி அமைந்திருக்கிறது. 'சுத்தப் பேத்தல்' என்ற மாதிரி சொற்கள் என் அகராதியில் இல்லை.

சாகித்ய அகாதமியிடமிருந்து நான் விருதை யாசிப்பது போலவும் இதுவரை கிடைக்காததால் ஏங்கிக் கிடப்பது போலும் எண்ணத்தை ஏற்படுத்துகிறது. பரிசு எதையும் நான் என்றும் எதிர்பார்த்ததில்லை.

எனது சகோதர எழுத்தாளர்களைப் பற்றி நான்கேவலமாகப் பேசியதாகவும் கட்டுரையில் காணப்படுகிறது. அப்படி எதுவும் நான் சொல்லவில்லை.

சென்னை-17 சாண்டில்யன்

வர் சரோஜா தேவி. சுருங்கச் சொன்னால், தமிழ்த் திரை உலகின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் சுடர்க் கொடியாகச் சரோஜா தேவி ஜொலிக்கும் நிலை ஏற்பட்டதற்குக் காரணகர்த்தா எம். ஜி. ஆர். அவர்களே ஆவார்.

'திருடாதே' படத்தின் கதாநாயகியும் இவரே. மக்கள் திலகம் அவர்களாலேயே இந்த வாய்ப்பையும் பெற்றிருந்தார். இப்படத்தின் இயக்குனர், மதிப்புக்குரிய திரையுலக ஜாம்பவான் ப. நீலகண்டன் அவர்கள்.

சரோஜா தேவி நாடோடி மன்னனில் முக்கிய வேடம் ஏற்று நடிப்பதற்குத் தகுதியுடையவர் என்று மக்கள் திலகம் கணித்த முடிவை ஆதரித்தவர் திரு ப. நீலகண்டன் அவர்கள். மொழி அறிவு, கலை நுட்ப அறிவு இரண்டிலுமே ஏற்றம் மிகுந்த ப. நீலகண்டன் அவர்கள் மக்கள் திலகத்தின் பாராட்டுக்குரியவர்; அவருடைய பதினெட்டுப் படங்களில் இயக்குனராகப் பணியாற்றியவர்....

சமீபத்தில் ஒரு நாள் இவரும் நானும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது இவர் சொன்னார்:

''சரோஜா தேவி புது முகமாக இருந்த போது தனது சொந்தப் படத்தில், தனது டைரக்ஷனில் தனது பாத்திரத்தின் நாயகியாக அவரைத் தேர்ந்தெடுத்து, வெற்[றி]காணச் செய்தார் எம். ஜி. ஆர். அவர்கள்.

''இன்றைய பிரபல நடிகர் சிவகுமாரை[த்] தன் பாத்திரத்தின் சகோதர பாத்திரமா[க] நடிக்கவைத்து 'காவல்காரன்' படத்தின் மூலம் அவருக்குச் சிறப்புத் தேடித் தந்தார்.

''புகழ் பெற்று—விளங்கும் லட்சுமியை முழுமையான கதாநாயகியாகக் 'கணவன்' படத்தில் ஒளிரச் செய்தார்''... என்று பல மேற்கோள்களைச் சொல்லிக் கொண்டே போனார்.

மேலும் ஒரு விசேடமான கருத்தையும் என்னிடம் கூறினார் திரு ப. நீலகண்டன் அவர்கள்.

''எந்தக் கோணத்தை எடுத்துக் கொண்டாலும் சினிமாவைப் பற்றி முழுக்க முழுக்க இலக்கண பூர்வமாக அறிந்தவர்எம்.ஜி.ஆர். அவருக்குத் தெரியாதது என்று எதுவும் இல்லை'' என்று அவர் குறிப்பிட்டதை நான் ரசித்தேன். ஏனென்றால் அந்தக் கருத்து என் கருத்தும் கூடத்தான்; மேலும் எம்.ஜி. ஆர். அவர்களுடன் பழகிய அனைவருக்கும் தெரிந்த உண்மையே அது.

ஆனாலும் 'வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி' என்று சொல்லப்படுவது விசேடமல்லவா?

மக்கள் திலகம் கால் முறிவு குணமாகி, மீண்டும் நடிப்பதற்குரிய தகுதியை அடையும் முன்னதாக சரோஜா தேவி மிகவும் உயர்ந்துவிட்டார்!

'உயர்ந்துவிட்டார்' என்றால் 'கால்ஷீட்டுகள் கிடைப்பது கஷ்டம் அல்லவா! படப் பிடிப்பு நின்றிருந்த 'திருடாதே' படத்தின் கதாநாயகி, வேறு பல படங்களில் கதாநாயகியாகி, அந்தப் படங்களுக்கு 'கால்ஷீட்' கொடுத்திருந்த காரணத்தால் மீண்டும் புதிதாக ஆரம்பமான 'திருடாதே' படப் பிடிப்புக்குக் கால்ஷீட் தருவது என்பது சிக்கலாக அமைந்தது.

வேறு படங்களில் நடித்துவிட்டுப் பிறகு 'திருடாதே' படத்தில் நடிக்க வருவார். அந்த நேரத்தில் அவரது கால்ஷீட்டைப் பயன்படுத்திக் கொள்ளாமற் போனால் இழப்புத்தான் வரும். ஆதலால் கதாநாயகனை எம். ஜி. ஆர். முதற்கொண்டு எல்லோருமே சரோஜா தேவியை அனுசரித்துப் படத்தை முடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பல்கலைப் பாவை

உத்ராவின் காமிராவுக்குள் சிக்கி வண்ணப் ப[டு]மாக அவதாரமெடுத்து இவ்விதழ் மேலட்டையை அல[ங்]கரிப்பவர் குமாரி சிந்தூரி.

குஜராத்தி பாணியில் புடைவை உடுத்தியிருந்தாலும் இவர் மராத்திய வகுப்பைச் சேர்ந்தவர். இந்தப் பல்கலைப் பாவைக்குத் தெரிந்தவை: கராட்டே, ஸ்கேட்டிங், நடனம், சமையல், மாடலிங், ஓவியம்.

பி.யூ.ஸி. முடித்து இசைக் கல்லூரியில் சேர்ந்த இவருக்கு நடனத்திலும் ஆர்வம் பிறந்தது! பரதம் தவிர, பஞ்சாபி, ராஜஸ்தானி, குச்சுபிடி கதக்களி ஆகிய எதையும் விட்டு வைக்கவில்லை.

இத்தனை கற்றாலும் மனசுக்கு இதமளிப்ப[து] சமூகப் பணியாற்றுவதும் நாட்டுப் பாடல்களைச் சேகரித்துப் பாடுவதும்தான் என்கிறார்! பேட்டி: சிக்

பிறருக்கு உபதேசம்

தோஷமுள்ளவரிடம் அதை எடுத்துக் காட்ட வேண்டுமானல் நமக்குப் பூர்ண யோக்கியதை இருக்க வேண்டும். நம்மிடமே ஏராளமான தோஷங்களை வைத்துக்கொண்டு இன்னொருத்தருக்கு உபதேசம் செய்தால் அது பிரயோஜனப்படாது. சில சமயங்களில் நாம் சொல்வதாலேயே அவர்கள் முன்னைவிட வீம்பாகத் தங்கள் தவற்றை வெளிப்படச் செய்யவும் தொடங்கலாம். 'நமக்கு யோக்கியதை இருக்கிறது, ஸ்தானம் இருக்கிறது நம் வார்த்தை எடுபடும், என்று நிச்சயமானலே பிறருக்கு உபதேசிக்கலாம்.

ஒருவரது நல்ல அம்சத்தைக் கொண்டாடுவதால் அவருக்கு மேலும் உற்சாகம் உண்டாகிறது. அந்தக் குணங்களை விருத்தி செய்து கொள்கிறார். ஆனாலும் ஒருவரைப் புகழுவதிலும் நமக்குக் கட்டுப்பாடு இருக்க வேண்டும். ஒரேயடியாக ஸ்தோத்திரம் செய்து ஒருவரை அகங்காரத்துக்கு ஆளாக்கி விடக் கூடாது. புகழ்ச்சி ஒரு நுட்பமான விஷயம். இதனால்தான் பெரியோர்கள் ''ஈசுவரனையும் குருவையும் மட்டுமே நேரில் துதிக்கலாம். பந்துமித்திரர்களை நேரில் புகழாமல் மற்றவர்களிடமே போற்றிப் பேச வேண்டும். வேலையை முடித்த பின்னரே ஊழியரைப் பாராட்டலாம். பிள்ளையை ஒரு போதும் புகழக் கூடாது'' என்றார்கள்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

எதற்காக இதை இங்கே குறிப்பிட்டேன் என்பதற்குக் காரணம் உண்டு. காலம் விசித்திரமானது என்றும் அதன் வளர்ச்சி வேகமானது என்றும் ஏற்படும் மாற்றம் விநோதமானது என்றும், ஆனால் அத்தனையும் இயற்கையே என்றும் அறிவதற்கு இந்த 'சரோஜா தேவி சம்பவம்' ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

''திருடாதே'' படத்துக்குப் பிறகு எம்.ஜி. ஆர். நடித்த பல படங்களில் ஏற்றம் கூடி வந்தது. இந்தப் படங்களின் வரிசையில் இடம் பெற்றவை 'குடும்பத் தலைவன்', 'தாயைக் காத்த தனயன்', 'பணத் தோட்டம்', 'பரிசு' 'பெரிய இடத்துப் பெண்', 'வேட்டைக் காரன்', 'தெய்வத் தாய்', 'படகோட்டி' 'ஆயிரத்தில் ஒருவன்', 'எங்க வீட்டுப் பிள்ளை' 'அன்பே வா', 'முகராசி', 'பெற்றால்தான் பிள்ளையா?' முதலியவை.

இவை யாவுமே மக்கள் திலகத்தின் நடிப்புக்கு முத்திரை பொறித்தவை; வசூலில் 'சாதனை' செய்தவை; ரசிகர்களின் ஆர்வத்துக்கு எல்லை காண முடியாமல் வரவேற்புப் பெற்றவை.

''சமூகக் கதையம்சம் கொண்டு மக்கள் திலகம் அவர்களை வெள்ளித் திரைக் கதாநாயகராக மட்டுமல்லாமல், சமுதாய மறுமலர்ச்சியின் வெற்றி நாயகராகவும் உருவாக்கிய படங்கள் இவை. குறிப்பாக ''தெய்வத் தாய்'' மக்கள் திலகம் அவர்களை நடிப்பின் சிகரத்துக்கு உயர்த்திற்று. ''எங்க வீட்டுப் பிள்ளை'' இரட்டை வேடத்தில், மக்கள் திலகம் நடிக்கவும் புதிய குணச்சித்திரத்தில் ஒளிரவும் வாய்ப்பு ஏற்படுத்தியது.

இவற்றைத் தொடர்ந்து வந்த படங்களில் 'காவல்காரன்' குறிப்பிடத் தக்க ஒரு படமாகும்.

1967ம் ஆண்டு வெளிவந்த படம் இது. இன்றைய செய்தி, அறநிலைய அமைச்சரும், மக்கள் திலகத்தின் இதயத்தில் தனி இடம் பெற்றவரும், தேர்ந்த அறிவாளருமான திரு ஆர். எம். வீரப்பன் அவர்களின் படம் இந்தக் 'காவல்காரன்'.

1953 என்று நினைக்கிறேன். எம். ஜி. ஆர். நாடக மன்றத்தின் நிர்வாகியாகப் பொறுப்பேற்றுப் பிறகு எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிறுவன நிர்வாகியாகி, ஒரு புறம் கலைத் துறையிலும், மறுபுறம் பெரியார், பேரறிஞர் ஆகியோரின் அறிவுப் பாசறையில் நெருக்கமான தொடர்பு கொண்டு, மக்கள் திலகம் அவர்களின் எழுச்சிக்கும், ஏற்றத்திற்கும் உற்ற துணையாளராக அரசியல் துறையிலும் விளங்கியவர் திரு வீரப்பன் அவர்கள்.

எந்நேரமும் எம். ஜி. ஆர். அவர்களையே சிந்தித்து, அவருடைய எண்ணங்களின் கோட்பாடுகளின் பிரதிபலிப்பாகச் செயலாற்றும் கர்மசீலரான வீரப்பன் அவர்கள் 'தெய்வத் தாய்', 'நான் ஆணையிட்டால்' என்ற இரண்டு படங்களை எடுத்துத் தொடர்ந்து, 'காவல்காரனை' ஆரம்பித்தார்.

இதன் வளர்ச்சிக்காலத்தில் மக்கள் திலகத்துக்கு உண்டான ஓர் ஆபத்து நாட்டையே கலக்கிய ஒன்றாகும். ஆம்; துப்பாக்கியால் மக்கள் திலகம் சுடப்பட்ட நிகழ்ச்சியையே சொல்லுகிறேன்.

நடிப்புக்கு உறுதுணை பேச்சு அல்லவா?

ஏற்கனவே காலுக்கு வந்தது ஆபத்து; பிறகு அகன்றது.

இப்போது பேச்சுக்கு வந்தது ஆபத்து!

மாதக் கணக்கில் காலம் நீண்டது, மக்கள் திலகம் குணம் பெற.

உயிராபத்து விலகி, உடல்நலமும் ஏற்பட்டது. ஆனால் வலுவாகப் பேச முடியவில்லை.

எந்த நாவிலிருந்து எழுகின்ற வீர கர்ஜனையை, வெண்கல நாதத்தை லட்சக் கணக்கான ரசிகர்கள் கேட்டுப் பூரித்தார்களோ, அவர்களுக்கு மக்கள் திலகம் அவர்களால் அந்தப் பழக்கப்பட்ட வீர முழக்கத்தை வழங்க முடியாமல் சங்கடம் உண்டாயிற்று!

(தொடரும்)

படம் உதவி: **பிலிம் நியூஸ் ஆனந்தன்**

Round up



● குல்லாய் அணிந்திருப்பது யார் தெரிகிறதா? கமல்தான்!

'எல்லாம் இன்பமயம்' — விரைவில் வெளிவரவிருக்கும் படம். இதில் கமல், (1) அப்பாவி பட்டிக்காட்டான், (2) பட்டணத்து நாகரிக இளைஞன், (3) வயதான ரிக்ஷாக்காரன், (4) பாப் பாடகன், (5) முதிய வக்கீல், (6) ரௌடி, (7) டிராகுலா, (8) வயதான கன்னட பாய் (படம்) என்று எட்டு விதமான பாத்திரங்கள் ஏற்று நடிக்கிறார். ஹீரோயின்? கமலின் ஃபேவரிட் (எனச் சொல்லப்படும்) மாதவிதான்!

—எஸ். சந்திரமௌலி

● சபையில் எல்லோரும் செம்மங்குடி பக்தர்கள்; லால்குடி ரசிகர்கள். இடம்: கிருஷ்ண கான சபை. அன்று செம்மங்குடி பாடியவையெல்லாம் அவருடைய ஸ்பெஷாலிட்டிகள். ராமபத்ரன் ஜமா சேர பிரமாதப்படக் கேட்பானேன்?

புதுமை: லால்குடிக்குப் பதில் மகன் ஜி. ஜே. ஆர். கிருஷ்ணனின் வயலின். பக்க வாத்தியம் வாசிப்பது முதல் தடவை என்றாலும் கிருஷ்ணனுக்கு மேடை ஏறுவது என்பது புதிய அனுபவமல்ல. ஏற்கனவே தகப்பனாரோடு சேர்ந்து வயலின் கச்சேரிகள் பல நிகழ்த்தியாகிவிட்டது. அது இன்டர்னல் அஸெஸ்மெண்ட்!

இப்போது நடந்தது எக்ஸ்டர்னல் அஸெஸ்மெண்ட்! இதிலும் திருஷ்டி படப் போகிறதே என்று சில மார்க்குகளைக் குறைத்து 95 சதத்துக்குக் குறையாமல் கொடுத்திருப்பார் செம்மங்குடி என்பதை அவரது ஏகப்பட்ட பேஷ்களும் பலேக்களும் சபாஷ்களும் தெளிவாக்கின!

புகைப்படம்: உத்ரா



✕ கே. ராமமூர்த்தி

✕ செம்மங்குடி, லால்குடி கிருஷ்ணன்

● அமெரிக்காவில் கூல்பிரித் வட்டம் என்ற ஓர் இலக்கிய அமைப்பு இயங்குகிறது. ஒரு கவியின் இலக்கியங்களில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஊறித் திளைத்து அக்கவி இன்பத்தைப்பரப்புவதில் பெரும் பணியாற்றியுள்ளவர்களுக்கு கூல்பிரித் வட்டம் தகுதிச் சான்று விருது வழங்குகிறது.

அண்மையில் இந்த அமைப்பு பாரதி இளைஞர் சங்கத்தின் தலைவர் கே. ராமமூர்த்திக்கு இந்த விருதை வழங்கிக் கௌரவித்தது. ஸான்ஃபிரான்ஸிஸ்கோவில் நடந்த ஐந்தாவது உலகக் கவிகள் மகாநாட்டுக்கு கே. ராமமூர்த்தி அனுப்பி வைத்த பாரதி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையே இந்த விருதை அவருக்குப் பெற்றுத் தந்துள்ளது.

—குட்டிகிருஷ்ணன்

● விஸ்வ ஹிந்து பரிஷத் கிருஷ்ண ஜயந்தியையொட்டி ஒரு போட்டி வைத்தது. எல்.கே.ஜி. முதல் ஐந்தாம் வகுப்பு வரை குழந்தைகள் கிருஷ்ணன், ராதையாக வேடம் போட்டுக் கொண்டு வந்தனர். மூவாயிரம் குழந்தைகள் (1500 கிருஷ்ணன்கள், 1500 ராதைகள்) பங்கு கொண்ட இந்தப் போட்டி வள்ளுவர் கோட்டத்தில் நடந்தது.

பெற்றோர்கள் குழந்தைகளுக்கு ஒப்பனை செய்து அழைத்து வருவதில் ரொம்ப உற்சாகம் காட்டினார்கள். காலை ஒன்பது மணிக்கே குழந்தைகளுடன் வரச் சொல்லப்பட்டாலும், போட்டி நடந்ததோ மதியம் தான். வந்த குழந்தைகள் பசியால் வாடின. வெற்றியாளருக்கு மட்டுமின்றிப் பங்கேற்ற அனைவருக்குமே சின்னதாக ஒரு பரிசு கொடுத்திருந்தால் பசி, தாகம் பறந்துபோயிருக்குமே.

—சிக்

படம் உதவி: வேப்பத்தூர் கிருஷ்ணன்

✕ ராதா - கிருஷ்ணன் வேடத்தில் குழந்தைகள்





✱ காவல்காரனில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா

பொன்மனச் செம்மலும்

6

பொன்விழா ஆண்டும்

மக்கள் திலகம் எதற்கும் கலங்காமல் ...கித்துக் கொண்டு தன்னம்பிக்கை, விடா ...யற்சி, உழைப்பு ஆகிய மூன்றாலும் எந்தச் ...சாதனையையும் வெற்றி கண்டு விடுவார்.

தாம் மீண்டும் கம்பீரமாகப் பேச வேண் ...ம்; பேசியே தீரவேண்டும் என்கிற வைராக் ...யத்தோடு தினமும் வீட்டுக்குள்ளேயே ...ரத்துப் பேசிப் பயிற்சி பெறுவதில் ஆர்வம் ...ாட்டினர். குரலில் காட்டப்பட வேண்டிய ...ளினம், ஏற்ற இறக்க வேறுபாடுகள், சிரிக் ...கும்போதும், அழும்போதும் எழுப்பப்பட ...வண்டிய ஒலியின் கார்வைகள் முதலான ...அனைத்தையும் தம் விடா முயற்சியால் பயிற்சி ...மலம் கொஞ்சம் கொஞ்சமாக மறுபடியும் ...வரவழைத்துக் கொண்டார்.

நாளடைவில் முழுமையான வலிமையும் ஆற்றலும் அந்தப் பேச்சிலே வரப்பெற்று விட்ட அவருக்கு 'காவல்காரன்' படத்தில் குரலின் முழுமையான நிறைவை வழங்க முடியாது போயிற்று.

''இதனால் ரசிகர்களுக்கு ஏமாற்றம் ஏற் ...படும்; படம் வெற்றி பெறாது'' என்று கணித் ...தார்கள், எதிர்த் தரப்பைச் சேர்ந்தவர்கள்.

இவர்களின் கணிப்புக்கும் ஆசைக்கும் சூழ்நிலையைப் பார்த்தால் அனுகூலமாக இருப்பது போலத்தான் தோன்றும். ஆனால் 'மிரகிள்' என்பார்களே அது போல் இவர் களின் கணிப்பைக் கடந்து மகத்தான வெற்றியைத் தழுவிக்கொண்டு விடுவார் மக்கள் திலகம்.

அவ்வாறே காவல்காரன் படம் மாபெரும் வெற்றி கண்டது.

நான் முன்பே சொல்லி யிருக்கிறேன். 'மக்கள் திலகம் அவர்களின் நடிப்பை, நடப் போடு இணைத்துப் போற்றுவார்கள் ரசி கர்கள்' என்று.

எல்லோருக்கும் தெரியும் குண்டு வீச்சால் மக்கள் திலகம் அவர்களுக்கு அப்போது வலுவாகப் பேச முடியவில்லை என்பது.

மக்கள் திலகம் அவர்களுக்கும் தெரியும் ரசிகர்கள் தம் நிலையைப் புரிந்து கொண்டு, படத்தை மன நிறைவோடு வரவேற்று விடுவார்கள் என்பது. அதே கோணத்தில் திரு வீரப்பன் அவர்களும் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்.

படம் வெளியாயிற்று. முந்தைய வசூல் களின் சாதனையைப் பல இடங்களில் முறி யடித்துப் புதிய ரெக்கார்டு ஒன்றைப் பொறித் தது. அது மட்டுமா? எம். ஜி. ஆர். அவர் களின் மீது அளவற்ற ஒரு பாசத்தை லட்சக் கணக்கான உள்ளங்களில் விதைத்தது!

'பெயர் ராசி' என்று ஒன்று உண்டு. சரக்கு தான் முக்கியம்; அதில் சந்தேமில்லை. ஆனால் மதிப்புள்ள சரக்கு பிரபலமாவதற்குப் 'பெயர்' அமைவது அவசியம்; பொருத்த மாகவும், கவர்ச்சியாகவும் பொருட் செறி வோடும் 'பெயர்' அமைந்து விடுமானால் குறிப்பிட்ட சரக்கு விலை போவதற்கு உத்தர வாதம் உண்டு.

மக்கள் திலகம் அவர்கள் நடித்து வெளி வந்த திரைப்படங்களின் பெயர்களை ஒரு

வித்துவான் வே. லட்சுமணன்



முறை கவனியுங்கள். பெரும்பாலான படங்களின் பெயர்களில் மக்களுக்கு அறிவுரை இருக்கும்; மனத்துக்கு உற்சாகம் தரும் ஊட்ட சக்தி இருக்கும். அந்தந்தப் படத்தின் கருப் பொருளின் சிறப்பைப் பிரதிபலிக்கும் பொலிவும் இருக்கும்.

இந்தப் 'பெயர்' விஷயத்தில் தீவிரமான கவனம் செலுத்துவார் மக்கள் திலகம் அவர்கள். ஏனென்ருல், இந்தப் பெயர் அமைவதன் மூலம் படத்தின் முழுமையான வெற்றிக்கு வாய்ப்பு உண்டாகும் என்பது அவருக்கு நன்ருகத் தெரியும்.

சில பெயர்களைச் சொல்கிறேன்:

'தாய்க்குப் பின் தாரம்'

இது ஒரு படத்தின் பெயர். அன்னைக்கு அடுத்தபடிதான் ஆருயிர்த் துணைவி என்ற கருத்தைத் தொனிக்க வைத்திருக்கிருர்கள் இந்தப் பெயரில்.

இன்னெரு பொருளும் உண்டு. தாயின் சிறப்பு எவ்வளவு மேலானது என்பதை உணர்த்தி, அதே நேரத்தில், அப்பேர்ப்பட்ட தாய்க்குப் பிறகு முன்வந்து நிற்பவள் தாரம் என்று கூறி மனைவியின் மாண்பையும் விளக்குகிறது இந்தத் தலைப்பு.

''புதுமைப் பித்தன்''

பெயரிலேயே ஒரு புதுமை; பழமைக்கு அடிமையாகி, பத்தாம் பசலியாக இருந்திடக் கூடாது என்ற நோக்கத்தில் அமைந்த புரட்சிப் பெயர் இது. அடுத்து இன்னெரு படத்தின் பெயர்: ' நல்லவன் வாழ்வான்''

ஆம்; நல்லவர்கள் வாழவே செய்வார்கள். இது மறைமொழி.

இந்த மாதிரிப் பெயர் வைக்கப்படும்போது கேட்பதற்கே ஒரு நிறைவு ஏற்படுகிறது. அந்த நிறைவு காரணமாக உள்ளம் குறிப்பிட்ட அந்தப் பெயர் கொண்ட படத்தைப் பார்க்க வேண்டும் என்று நம்மைத் தூண்டவும் செய்கிறது.

''தாய் சொல்லைத் தட்டாதே''

எவ்வளவு சிறப்பான பெயர்! ''நாம் வளரவும் வாழவும் வகை செய்த தாயின் வார்த்தையை மதித்து நடந்தால்தான் எதிர்காலம் ஏற்றமாக இருக்கும்'' என்ற கருத்தைக் குறிப்பிடும் இந்தத் தலைப்பு நமக்கு எச்சரிக்கைசெய்வது போன்று 'தட்டாதே' என்று கம்பீரமாக ஆணையும் பிறப்பிக்கிறது!

இவ்வாறே ஒவ்வொரு படத்தின்
பும், வீச்சும் ஆழமும் கொண்ட ஒரு
தின் சுருக்கமாக அமையுமாறு கவன
கொள்வார் மக்கள் திலகம்.
தொழிலாளிக்கு முக்கியத்வம் கொடு
படத்தின் பெயராக அமைத்தது
'காவல்காரன்', 'விவசாயி', ரிக்ஷாக்கா
முதலான சிறப்புப் பெயர்களையும்
பெயர்களாக வைத்து மதிப்பளித்திருப்
யும் குறிப்பிட வேண்டும். படங்கள்
வொன்றும் பெயரில் மட்டு மல்லாமல்
கிலும் உன்னதமானவை.
'காவல்காரன்' படத்தின் பெரிய
றிக்கு அடிப்படையான பல காரணங்க
ஒன்று, அதன் கதை அம்சமும் ஆ
அதாவது சத்துள்ள 'சரக்கு'.

இந்தப் படத்துக்குப் பிறகு வெளி
படங்களில் 'குடியிருந்த கோயில்'
தான வரவேற்புப் பெற்றது. இதில் இரட்
வேடம் ஏற்று, இரு வேறு பாத்தி
களைப் பிரதிபலித்து அற்புதமாக நடித்த
மக்களிடையே வெற்றி கண்டதோடு
றைய தமிழக அரசின் சார்பில் மக்
திலகத்துக்கு ''சிறந்த நடிகர்'' எ
விருதையும் பெற்றுத் தந்தது இந்
படம்.

அடுத்து வந்த படங்களில் குறிப்பி
படவேண்டிய படம் ஜெமினியின் ''
விளக்கு''.

சாதாரணமாகத் திரு எம். ஜி. ஆ
அவர்கள் ஏற்றுக் கொள்கிற பாத்திர இ
புக்கு மாறுபட்ட ஒரு பாத்திரம் இந்
படத்தில் அவருக்கு அமைந்தது. இத
அந்த மாறுபட்ட பாத்திரத்தில் தான் ந
பதை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா எ
கிற கேள்வியும் பிறந்தது.
புதிய அமைப்புள்ள பாத்திரமாதலா
அதை ஏற்கும் ஆர்வமும், அதில் ஒரு நிை
வும் உண்டாகவே, எம். ஜி. ஆர். அவர்க
'எப்படியும் இந்தப் பாத்திரத்தை மக்கள்
கும் வண்ணம் செய்து காட்ட வேண்டு
என்று உறுதி கொண்டு உழைத்தார்.
உழைப்பு வீண் போகவில்லை. பட
வெற்றி கண்டது. புது மாதிரியான வே
மானாலும் மாமூலுக்கு மாறுபட்டது என்
லும் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்
ஒரு நல்ல முடிவை உண்டாக்கிய பட
'ஒளி விளக்கு'!
அடுத்துக் குறிப்பிடப்பட வேண்டிய பட
எம்ஜியார் பிக்சர்ஸ் சார்பில் எம்.ஜி.ஆ
அவர்கள் தயாரித்த 'அடிமைப்பெண்
'சமூகத்தின் அமைப்பில் எந்த மனிதனு
தன்னம்பிக்கையுடன் முனைந்தால், எத்
கைய சாதனையையும் செய்துவிடக் கூடும்
என்கிற ஒரு தத்துவத்தை அமைத்து
அதையே கதையின் மையக் கருவாக
கொண்டு எம். ஜி. ஆர். வழங்கிய படம் இது
''பலமுள்ள முதுகெலும்பு என்பது எ
லோருக்குமே பொதுவாக இறைவனல் அளி
கப்படுகிறது. வாழ்வில் ஏற்படக்கூடியவிளை
களைச் சமாளிக்கவும், முயற்சியால் வெற்
பெறவும் இறைவன் தந்துள்ள சக்திகளை
பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சக்திக

ருந்தும் அவற்றைப் பயன்படுத்திக் காள்ளத் தவறினுல் அந்தக் குற்றத்துக்கு றைவன் பொறுப்பாளி ஆகமாட்டான்'' ன்று பெரியோர்கள் கூறுவதுண்டு.

இந்த உன்னதமான கருத்தையே 'அடி மைப் பெண்' பிரதிபலித்தது.

ஏராளமான பொருட் செலவில் எடுக்கப் ட்ட வெளிப்புறக் காட்சிகள் பலவற்றைப் பற்றிருந்த இந்தப் படம் ஓர் அற்புதக் ாவியமாக மலர்ந்திருந்தது. மக்கள் திலகம் ற்றிருந்த பாத்திரமும் விசேஷச் சிறப்பு காண்டிருந்தது. பிரபல இயக்குனர் கே. ங்கரின் கைவண்ணமும் மக்கள் திலகத்தின் சயல் வண்ணமும் ஒன்று சேர்ந்து மலர்ந்த பாற்ருமரைப் பொய்கை என்று இதைச் சால்லலாம். வற்ருத கலையூற்றுப் போல், ார்க்கப் பார்க்க அமுத மயமான இன் த்தை அள்ளி அளித்த படம் இது.

ஜெய்ப்பூர் அரண்மனைக் கோலங்களை ாஜ்வல்யமாகப் பொறித்திருந்தார்கள். ரம்மாண்டமான அரங்கக் காட்சிகள், ல் நாட்டுப் படங்களுக்கு நிகராக ஒளி சின. சிங்கத்துடன் சண்டை போட்டு வற்றி காண்கிற பயங்கரக் காட்சியும் தில் இடம் பெற்றிருந்தது. இந்தக் காட்சிக் ாகவே சிங்கம் வளர்க்கப்பட்டு வந்தது. ங்கே என்று கேட்கிறீர்களா? ராமாவரம் தாட்டத்திலும் சத்தியா ஸ்டூடியோவிலும் ான்.

இந்தப் படக் கதையின் அமைப்பில் ல சோதனைகள் உண்டு. அவ்வாறே படத் யாரிப்பிலும் சோதனைகள் ஏராளம். அத் னையும் கடந்து வெளிவந்த படம் அமோக கழ் கண்டது.

பிலிம்ஃபேர் ஏட்டின் முதல் தரமான படத் க்குரிய பரிசைப் பெற்ற படம் இது.

அடுத்து வெளியான படங்களில் 'நம் நாடு' ன் அண்ணன்', 'எங்கள் தங்கம்' ஆகிய ல்லாமே சிறப்புப் பெற்றவை. குறிப்பாகச் சால்லப்பட வேண்டிய படம் ''மாட்டுக் ார வேலன்'' இது மிகப் பெரிய வெற்றி பற்றது.

இந்தப் படத்தை இயக்கியவர் திரு ப. லகண்டன்

திருப்பங்கள் உண்டு பண்ணிய 'திருடாதே' காவல்காரன்' ஆகிய படங்களுக்கும் இவரே யக்குநர்.

'மாட்டுக்கார வேலன்' படப்பிடிப்பின் பாது நடந்த சம்பவம் ஒன்றைத் திரு ப. லகண்டன் என்னிடம் சொன்னது நினைவுக்கு ருகிறது.

இந்தச் சம்பவம் 'வைகை'யில் நடந்தது. படப்பிடிப்பு 'வைகை'யில் நடைபெற்ற பாது, மக்கள் திலகம் அவர்களைக் காணப் ல்லாயிரக் கணக்கான மக்கள் கடல் பால் திரண்டு குழுமினுர்கள். கொளுத்து ற வெய்யில்; தண்ணீரோ கிடையாது. ாகத்தால் மக்கள் தவிக்கிற நிலையைக் ண்டார் எம். ஜி. ஆர். ஒரு முடிவுக்கு ந்தார்.

படத் தயாரிப்பாளர், மற்றும் படத்தில் ம்பந்தப்பட்டவர்கள் யாருக்கும் சொல்லா ல் ஆட்களை அனுப்பி வண்டி வண்டியாகத் தண்ணீரைக் கொண்டு வரச் செய்து அத்தனை மக்களுக்கும் தாக சாந்தி செய்வித்தார். ''தவித்த வாய்க்குத் தண்ணீர் ஊற்றுகிற புண்ணியத்துக்கு நிகரில்லை'' என்பார்கள்.

வாயார, நெஞ்சார வாழ்த்திய ஆயிரக் கணக்கான மக்கள் தங்கள் கண் குளிரப் பொன்மனச் செம்மலைக் கண்டு உளமாரப் போற்றிய அந்தக் காட்சி சாமானியமான ஒன்ருகாது.

''மாட்டுக்கார வேலன்'' பட வெற்றிக்கு மற்றக் காரணங்களுடன் இந்த 'மக்கள் வாழ்த்து' என்கிற மகத்தான காரணமும் ஒன்ருக இருக்கும் என்று என் மனம் எண்ணுகிறது.

''தயாரிப்பாளரிடம் சொல்லித் தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கலாம். தன்னைக் காண வந்தவர்களுக்கு, அவர்கள் லட்சம் பேர் என்ருலும் தானே உதவ வேண் டும் என்கிற நோக்கம் எம்.ஜி. ஆருடையது. அதனுலேயே அவர் இரகசியமாக ஏற்பாடு செய்தார்'' என்று ப. நீலகண்டன் அவர்கள் என்னிடம் சொன்னுர்.

மேலும் பல சம்பவங்கள் உண்டு. மக்கள் திலகம் அவர்களின் மனிதாபிமானம் என்பது விசேடமான ஒன்று.

ஊனமுற்றவரைக் கண்டால் அவரது உள் ளம் உருகிவிடும். முடவர்களுக்கு அவர் வழங்கிய உதவிகள் பல. மற்றும் எளியவர் களுக்கு இரங்கி எத்தனையோ உதவிகளைச் செய்தவர் அவர். 'உதவுவது' என்பது அவ ரது பிறவிக் குணம் என்பதை மட்டும் சொல்லிவிட்டு, அடுத்த படம் பற்றிச் சொல்ல ஆரம்பிக்கிறேன். (வளரும்)

''மீனுட்சி புரத்தில் நடந்தது என்ன என்று பார்த்து வர நம்ம ராமுவை அனுப்பி னேமே! அவன் ரகீமாகத் திரும்பிவந்துட் டான்.''

தயாரிப்பாளர்: ''என்னு டைய படம் 'வெற்றிகரமான நூருவது நாள்...''

மற்றவர்: ''என்ன நூறு நாளா ஓடுதா''

தயாரிப்பாளர்: ''இல்லை. அப்படின்னு ஒரு படம் தயா ரிக்கப் போறேன்!''

-ஏ. கணேசன்

மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்

உரிமையாளர்கள் : ஸ்ரீ நாகலிங்க விலாஸ் ஆயில் மில்ஸ் கொல்லம் — கே

போன் : ஆபிஸ் : 2244, 4484, மில்ஸ் : 2266, 4611

Trade Enquiries Solicited from wholesale dealers only

பொன்மனச் செம்மலும் பொன்விழா ஆண்டும்

✖ இதயவீணையில் மஞ்சுளாவுடன்

7

"கல்யாணம் பண்ணிப் பார்" என்று சொல்வது போல,

"வீடு கட்டிப் பார்" என்று சொல்வது போல,

"படம் எடுத்துப் பார்" என்றும் சொல்லலாம்.

மூன்றும் ஒரு வகையில் ஓர் இனம்.

கணக்கு, கணிப்பு, ஓர் எல்லைக் கோடு ஆகியவற்றைக் கடந்து, எங்கேயோ நெடுந் தொலைவுக்கு இழுத்துச் செல்லப்படுகிற ஓர் அனுபவம் மேற்சொன்ன மூன்றிலுமே சரிநிகராக ஏற்படுவது இயற்கை.

செலவுக்கு முற்றுப்புள்ளி போடுவதற்குள் மூச்சுத் திணறிவிடும்.

இழைத்து ஜோடித்துச் சிறப்பாக அமைக்க வேண்டும் என்கிற ஆர்வமும் ஆசைத் தூண்டுதலும் ஓர் அளவுக்குள் அடங்குவதில்லை.

இந்தப் பணிகளைத் தொடங்குபவர் அல்லது கர்த்தா யாரோ, அவர் பலரை ஒன்று சேர்த்துப் பலரின் கூட்டுறவால் செய்யக் கூடிய அவசியம் இவற்றில் உண்டு.

பணம், திறமை, முந்தைய அனுபவம் ஆகிய மூன்றுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய துறைகள் இவை.

சினிமா தொழிலில் லட்சக் கணக்கான தொகை, பலருடைய உழைப்பு, எல்லாம் 'பிலிம் சுருள்' என்கிற ரூபத்தில் சுருண்டிருக்கும்.

இந்த 'பிலிம் சுருள்' முழுமைப் பொலிவடைந்து, எல்லா வகையிலும் முற்றுப் பெற்று வெள்ளித் திரைக்கு வரும்வரை அதன் மதிப்பு பல லட்சங்கள் என்று வாயளவில் தான் சொல்லமுடியும்! உடனடியாகப் பணமாக மாறுகிற ஆற்றலோ தகுதியோ அதற்கு இராது!

இப்படிப்பட்ட துறையில் எண்ணற்ற சாதனைகளைச் செய்த மக்கள் திலகம் அவர்கள் 'மாட்டுக் கார வேலன்' படத்துக்குப் பிறகு நடித்த படங்களில் மிகவும் பாராட்டுப் பெற்ற படம் சத்யா மூவீஸாரின் 'ரிக்ஷாக்காரன்'.

இப் படத் தயாரிப்பாளரான ஆர். எம். வீரப்பன் அவர்கள் மக்கள் திலகம் அவர்களை எந்தெந்தக் கோணங்களில் மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதை நன்றாக உணர்ந்தவர்; இது அவருக்குரிய தனியாற்றல்.

எடுத்த பணியை முடிக்கும்வரை மக்கள் திலகம் அவர்கள் எப்படி ஒரு கர்ம யோகியாக உழைப்பது வழக்கமோ அப்படியே திரு ஆர். எம். வீ. அயராது பாடுபடுவதை நேர்முகமாகப் பார்த்திருக்கிறேன்.

வெற்றி என்பது ஒருசிலருக்கு வேண்டுமானால் அதிர்ஷ்டவசமாக ஏற்படக்கூடுமே தவிர, நான் அறிந்தவரையில் மக்கள் திலகம் அவர்களுக்கோ, திரு ஆர். எம். வீ. அவர்களுக்கோ ஏற்பட்ட வெற்றிகள் எல்லாவற்றுக்கும் அடிப்படையில் ஏராளமான சோதனைகள், சங்கடங்கள், அவற்றை மீறிய உழைப்பு, தியாகம் ஆகியவை முக்கியத்துவம் பெற்றிருந்தன என்பது உண்மை.

'ரிக்ஷாக்காரன்' படத்தை ஒரு வெற்றிப் படமாக்கி மக்களுக்கு அதை ஒரு பரிசாக வழங்க வேண்டும் என்கிற நோக்கம் காரணமாகப் பொன்மனச் செம்மல் நிறைய நாட்கள் படத்தில் நடித்து முடித்தார். படத்தில் இழைப்பு வேலைகள் அதிகம். கலையம்சங்கள் ஏராளம். பாடல் காட்சிகள், களங்கள் ஆகியவை பிரும்மாண்டமானவை. தயாரிப்பாளர் சிறிதளவும் தளராமல் மனம் கலங்காமல் தைரியத்தோடு படத்தை உருவாக்கினர்.

கதை, உரையாடல் என்கிற அம்சங்களிலும் சிறப்புக்கள் சேர்க்கப்பட்ட படம், இது. 'டெக்னிகலாகவும்' பல உத்திகள் கையாளப்பட்டன.

இயக்குனர் திரு கிருஷ்ணன், வசனகர்த்தா திரு ஆர். கே. ஷண்முகம், மற்றும் 'டெக்னிஷியன்' என்கிற வகையில் எல்லாருமே தயாரிப்பாளரோடும், மக்கள் திலகம் அவர்களோடும் ஒன்று சேர்ந்து பேசிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு, தெளிவான

வித்துவான் வே. லட்சுமணன்

முறையில் பட ஆக்கத்துக்குத் தங்கள் பணியைச் செய்தார்கள்.

'இதற்கு இவ்வளவு அதிகச் செலவாகும்' என்று சொன்னல் அதற்குப் பின்வாங்க மாட்டார் ஆர். எம். வீ. அவர்கள். செலவு செய்வதன் மூலம் சிறந்த விளைவு ஏற்படுவதே அவரது மூல நோக்கமாக இருக்கும்.

படம் வெளி வந்தது.

வசூலில் புதிய சாதனை செய்தது. சமுதாய மறுமலர்ச்சிக் கண்ணோட்டத்தில் ஒரு முத்திரையைப் பொறித்தது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் திலகம் அவர்களுக்கு இந்திய அரசின் 'பாரத்' பட்டத்தைப் பெற்றுத் தந்தது. 'இந்தியச் சிறந்த நடிகர்' என்கிற உன்னத விருது அது.

இதற்கான விழா கல்கத்தாவில் நடைபெற்றது. அந்த அரசாங்க விழாவில் கலந்துகொண்டு ஆனந்தமடைந்தவர்களில் நானும் ஒருவன்.

விருது பெற்று வெற்றித் திலகமாகத் தமிழகம் திரும்பிய மக்கள் திலகத்தை சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்கக் கூடியிருந்த கூட்டம் வரலாற்றுச் சிறப்புடைய ஒன்று.

அன்றைய தமிழக முதல்வரிலிருந்து எல்லா அமைச்சர்களும் அங்கு கூடி திரு எம். ஜி.ஆர். அவர்களுக்கு மாலை சூட்டி வரவேற்றார்கள். தாய்மார்களின் வாழ்த்து மாலைகள் குவிந்தன. கடல்போல் திரண்ட மக்களின் வாழ்த்தொலிகள் விண்ணதிரச் செய்தன.

அன்று தமிழக முதல்வராக விளங்கிய திரு கருணாநிதி அவர்கள் அரச விருது பெற்ற மக்கள் திலகம் அவர்களைப் போற்றி, ஆனந்த விகடனில் எழுதினார்கள்:

> ''எனதருமை உடன் பிறப்பனையார் எம். ஜி. ஆர். அவர்கள் இந்தப் பெருமைக்கு முற்றிலும் தகுதியானவர். தமிழகக் கலைத் துறையின் ஒளிமிகுந்த கதிராக அவர் விளங்கி வருகிறார். அவரது உருவம் பிஞ்சுக் குழந்தைகள் முதல் பிராயம் முற்றிய பழுப்புக்கள் வரையில் அவர் தம் இதயத்தில் நிறைந்த உருவமாகும்.

அப்பா : ''பிராக்ரஸ் ரிப்போர்ட்டுடன் என்னவோ காகிதத்தை நீட்டறியே... என்னடா அது?''

மகன் : ''என்னை அடிக்கக் கூடாதுனு அம்மா கொடுத்த சிபாரிசுக்கடிதம்!''

— உ. ராஜாஜி



''அவர் நடிப்பில் தென்றலின் சுகத்தையும், அவர் ஈடுபடும் சண்டைக் காட்சிகளில் மின்வெட்டுக்களின் உயிர்ப்பையும் உணரலாம்...

''புரட்சி நடிகராக, பொன்மனச் செம்மலாக, எங்கள் கழகப் பொருளாளராக, அண்ணாவின் தம்பியாக, என் சகோதரராகத் திகழும் எம். ஜி. ஆர். அவர்களுக்கு வழங்கப்படுகிற இந்தச் சிறப்பு, தாய்கத்து மக்கள் அனைவருக்கும் பூரிப்புத் தரும் ஒரு நற்செய்தியாகும். கலை ஆர்வம் கழக ஆர்வம், மக்களின் நலனில் குன்றாத ஆர்வம் கொண்ட அவரைப் பாராட்டிச் சிறப்பித்துள்ள தேர்வுக் குழுவினரை நான் பாராட்டுகிறேன்.

''மடியில் விழுந்தது ஒரு கனி: அதனை எடுத்து இதயத்தில் வைத்துக்கொண்டேன் என்று அண்ணா அவர்கள் எம். ஜி. ஆர். பற்றிக் குறிப்பிட்டதை இப்போது எண்ணி மகிழ்கிறேன். இது போல் இன்னும் பல சிறப்புக்களுக்கும் பொருத்தமான புரட்சி நடிகர், 'பல்லாண்டு வாழ்ந்திடுக' என வாழ்த்துகிறேன்.''

—அன்று கலைஞர் அவர்களால் அளிக்கப்பட்ட இந்த வாழ்த்து மொழிகளை, இன்று இன்றைய சூழ்நிலையில் நினைவு கொள்ளும் போது, ஒருவிதமான உணர்வும் அனுபவமும் உலகியல் பற்றிய சிந்தனையும் ஏற்படும்.

''ரிக்‌ஷாக்காரன்'' படத்துக்குப் பிறகு அடுத்து மகத்தான படைப்பாக வெளிவந்து மாபெரும் வெற்றி பெற்ற படம் ''உலகம் சுற்றும் வாலிபன்''.

இடையில் 'நீரும் நெருப்பும்', 'ஒரு தாய் மக்கள்', 'அன்னமிட்ட கை', 'இதய வீணை' 'நல்ல நேரம்', 'நான் ஏன் பிறந்தேன்' 'ராமன் தேடிய சீதை', 'சங்கே முழங்கு' முதலானவை.

ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிறப்பு இருக்கவே செய்தது. குறிப்பாக இவற்றில் 'இதய வீணை' பற்றிச் சொல்ல வேண்டிய ஒரு தகவல் உண்டு.

உதயம் புரொடக்‌ஷன்ஸ் தயாரிப்பான இப்படத்தின் ஆரம்ப விழாவில் தலைமை வகித்துப் பாராட்டியவர் திரு கருணாநிதி அவர்கள். அப்போது திரு எம். ஜி. ஆர். அவர்கள் கழகப் பொறுப்பாளர், கலைஞர் அவர்கள் கழகத் தலைவர்.

'இதய வீணை'யை ஆரம்பித்து வாழ்த்திய கலைஞர் கருணாநிதி அவர்களின் வாழ்த்துக்கள் வீண்போகவில்லை. படம் வெளியாகி வெற்றி காணத்தான் செய்தது; குறிப்பிடத் தக்க வெற்றியும்கூட.

ஆனல் காலம் செய்த கோலம் என்பார்களே, அப்படிப்பட்ட விளைவு ஒன்று ஏற்பட்டது.

'இதய வீணை' ஆரம்பத்தின்போது ஒரே இயக்கத்தில் ஒன்ருக இருந்த பொன் மனச் செம்மலும் கலைஞரும், பட வெளியீட்டின் போது இரண்டாக, இரு துருவங்களாகப் பிரிந்து விட்டார்கள்.

'இதய வீணை' படம் வெளி வருவதற்குச் சில நாட்கள் முன்பு இந்தத் 'திருப்பம்' உண்டாயிற்று. (தொடரு

பொன்மனச் செம்மலும் பொன்விழா ஆண்டும்

8

'திருப்பம்' என்று சொன்னேன். ஆம்;
து திருப்பம்தான். திரு எம். ஜி. ஆர்.
வர்களின் செல்வாக்கு என்பது அவருடைய
ப சக்தியால் அமைந்தது என்பதை நிரு
த்த திருப்பம் அது. கழகத்தால் பெற்ற
ல்வாக்கு என்றால், கழகத்திலிருந்து விடு
ட்டதும் அது அகன்றுவிட வேண்டும்.
அப்படி ஆகவில்லை. செல்வாக்கு அதிக
ாகத் தொடங்கியது. ஆகவே இது காலம்
ய்த முடிவு என்று வரலாற்றுக் கணிப்
ளர்கள் விமரிசனம் செய்தார்கள்.
அரசியலில் ஏற்பட்ட இந்தத் திருப்பத்
ன்போது, அதன் மூலம் கலைத் துறையில்
ரு எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஏற்படக்கூடிய
ற்றம் என்னவாயிருக்கும் என்ற கேள்விக்கு
டை வழங்குகிற பொறுப்பை ஏற்றிருந்தது
தய வீணை' படம்.
கழகத்தில் இல்லாத, தனிப்பட்ட எம்.ஜி.
ின் படமாக வந்த முதல் படம் அது.

எதிர்ப்பாளர்கள் வழக்கம்போல் பேசினர். வழக்கம் போலவே தோல்வி கண்டார்கள். 'இதய வீணை' வெற்றி நாதம் முழங்கிற்று. 'எம். ஜி. ஆர். என்கிற சக்தி தனிச் சக்தி' என்பதை ஊர்ஜிதப்படுத்தியது.

கழகத்திலிருந்து வெளிவந்த பிறகு திரு எம். ஜி. ஆர். அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட பல திருப்பங்கள் அரசியல் முக்கியத்துவம் உள்ளவை. கலைத் துறையில் தொடர்ந்து அவர் பெற்ற சிறப்புக்களை மட்டுமே இப்போது இங்கே சொல்கிறேன்.

''உலகம் சுற்றும் வாலிபன்'' என்கிற படத்தைத் தயாரிக்க எண்ணினார். அப்போது ஜப்பானில் 'எக்ஸ்போ 70' என்கிற உலகப் பொருட்காட்சி நடைபெறத் தொடங்கிற்று. திரு எம். ஜி. ஆர். அவர்கள் தாமே தயாரிப்பாளர், இயக்குநர், கதாநாயகர் (இரு வேடங்கள்) ஆகிய எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டு அந்தப் படத்தை ஜப்பானில் எடுப்பது என்று முடிவு செய்தார்.

வித்துவான் வே. லட்சுமணன்

அது ஒரு சாதாரணமான பணி என்று கருத முடியாது. பெரும் பணி என்று சொன்ஞலும் போதாது. மிகக் கடினமான பணி; பல கோணங்களிலும் செயலாற்றி முடிக்கப் படவேண்டிய பணி.

இதுபோன்ற பணிகளில் ஈடுபட்டு வெற்றி கண்டால் தானே சாதனை செய்த சிறப்புக்குப் பாத்திரமாக முடியும்!

'எக்ஸ்போ' என்பது எவ்வளவு பேர்கள் கூட்டம் கூட்டமாகக் காண வரக்கூடிய காட்சி! அங்கே போய்ப் படமெடுப்பதா வது!''—

இப்படிக் கேட்டவர்கள் உண்டு.

அவர்களுக்கு அப்படிக் கேட்டால்தான் தூக்கம் வரும்.

எதையும் எவர் பேச்சையும் பொருட்படுத்துவது அவசியம்தான். ஆனுல் எதைச் செய்வது என்பது அவரவரின் தனி உரிமை.

திரு எம். ஜி. ஆர். அவர்கள் அசாத்திய மான துணிச்சல், தன்னம்பிக்கை ஆகிய இவற்றை அடிப்படை பலமாகக் கொண்டு எக்ஸ்போ காட்சிக் கூடங்களிலும் அந்தச் சூழ்நிலைகளிலும் படம் எடுக்க ஆரம்பித்து விட்டார்!

விதம் விதமான கோணங்கள், உத்திகள் எல்லாவற்றையும் பயன்படுத்திஞர். பல்லாண்டுகளாகப் பெற்றிருந்த அனுபவத்தின் பயன் அது; பழுத்த ஞானத்தின் பரிண மிப்பு அது.

கதைகூடஎழுத்து வடிவில் தயாராகவில்லை. கதை என்ன என்பது அவருக்குத்தான் தெரியும். அவரால் உருவாக்கப்பட்டு அவரது உள்ளத்திலேயே வளர்ந்து கொண்டிருந்த கதை அது. அவ்வப்போது அதற்கு வரி வடிவம் வடித்துத் தருவார். இப்படியே முற்றுப்பெற்ற படம் இது.

எக்ஸ்போ கண்காட்சிகளை ஒளிப்பதிவுக் கருவியின் மூலம் எப்படி எப்படி யெல்லாம் பயன்படுத்த முடியுமோ அப்படி அனைத்து வகைகளிலும் பயன்படுத்திக் கொண்டார் என்று கூற வேண்டும்.

''போயும், போயும் பத்திரிகை ஆசிரியர் மகளைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்தது தப்பாகிவிட்டது....''

''ஏன்...? என்னுகிவிட்டது இப்போது?''

''அவர் மகள் கல்யாணப் பத்திரிகையில் கூட அடியில்.... 'பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே, திருத்தி அமைக்கவும் மாற்றவும் எல்லா உரிமைகளும் ஆசிரியருக்கு உண்டு!'என்று போட்டுத் தொலைத்திருக்கிருர்!''

படம் வெளிவந்து மாபெரும் வெ
கண்டது.

''எப்பேர்ப்பட்ட சாதனை'' என்று
புகழ்ந்தார்கள்.

''தமிழ்த் திரையுலகத்தின் சிறப்ப
மக்கள் திலகம் வழங்கிய மகத்த
கௌரவம் 'உலகம் சுற்றும் வாலிபன்
என்ருர்கள்.

படத்தின் பாடல்கள் பதிவு ஏ. வி.
ஸ்டுடியோவில் முன்னதாகவே நடை
றது. தொடர்ந்து எல்லாப் பாடல்க
ஒவ்வொன்ருகப் பதிவு செய்யப்பட்ட

''இசை வேள்வி'' என்பார்கள். அப்ப
தான் நடந்தது. இந்தப் படத்தின் பாடல்
எல்லாமே சிரஞ்சீவித்துவம் பெற்றவை
பதை நாம் நன்ருக அறிவோம். அ
வகையில் மேன்மை பெற்ற பாடல்
குறுகிய காலத்தில் அவசரம் அவசரம
உருவாக்கப்பட்டன என்பதைச் சொ
வேண்டும்.

ஏனென்ருல் ஜப்பானுக்குப் புறப்ப
முன்னதாக எல்லாப் பாடல்களையும் த
செய்தால்தான் படப்பிடிப்புக்கு அவற்ை
கையோடு எடுத்துக் கொண்டு போக
யாக இருக்கும். பொன்மனச் செம்ம
நேர் பார்வையில் அவருடைய கருத்
களின் பிரதிபலிப்பாகப் பாடல்கள் புனை
பட்டன.

அடுத்தபடியாக இந்தப்படத்தின் தெ
கத்தில் நிகழ்ந்த சில சாதனைகளைச் சொ
வும் நினைக்கிறேன்.

''உலகம் சுற்றும் வாலிபன்'' எ
படத்தை எடுக்கப் போவதாக அவர்
வித்தவுடனேயே எல்லா 'ஏரியா'க்களுக்
விநியோகஸ்தர்கள் போட்டி போட்
கொண்டு வந்து விட்டார்கள்.

எக்ஸ்போ பொருட் காட்சியில் ம
திலகமும் மற்றையோரும் நடித்த கா
களில் 'ஸ்டில்' பார்வைக்கு வந்ததும் மே
அதிகமான ஆர்வம் ஏற்படலாயிற்று.
ஞல் விளைந்த அதிசயம் என்ன தெரியு

முன் பணம் கொடுத்து ஏற்கனவே உ
பெற்றிருந்த விநியோகஸ்தர்கள்
தாங்கள் வாங்கிய விலைக்கு மிகவும்
மான விலை பெற்றுக் கொண்டு, மற்
களிடம் விநியோக உரிமை அளித்தார்

படம் இப்போதுதான் ஆரம்ப
யிருக்கிறது. முடியப் பல காலம் ஆகு

படம் எடுக்கிறவருக்கோ ஆதாயம்
படி, எவ்வளவு என்பது புரியாத நிலை.
விநியோகஸ்தர்களுக்கு முன் கூட்
ஆதாயம் வரத் தொடங்கி விட்டதெ
இது ஒரு புரட்சிகரமான அதிசயம்தா

திரை உலகம் செழிப்படைவதற்கு
படிப்பட்ட சாதனைகளைச் செய்தவர்
எம். ஜி. ஆர். அவர்கள்.

ஒருபுறம் கலை வளரச் செய்தார்;
புறம் தொழில் வளரச் செய்தார்! இ
தமிழகத் திரை உலகத்தில் சுபிட்சம்
கொண்டே வந்தது. இதை மறக்க முடி
மறுக்கவும் இயலாது.

(தொட

பொன்மனச் செம்மலும் பொன்விழா ஆண்டும்

வித்துவான் வே. லட்சுமணன்

திருவள்ளுவர் உரைத்தது போல், 'இதனை இவன் முடிப்பான் என்று அறிந்து அதனை அவனிடம் ஒப்படைப்பதே திறமை' என்ற வகையில் செயலாற்றும் சிறப்பு மக்கள் திலகம் அவர்களிடம் உண்டு.

திரு சித்ரா கிருஷ்ணசாமி உலகம் சுற்றியவர். சினிமாத் தொழில் துறையில் பல்லாண்டுகளாகத் தொடர்புடையவர். அனுபவம் நிறைந்தவர். பொதுவாக வெளி நாடுகளில் படம் எடுப்பதென்றால், தயாரிப்பாளர்கள் திரு சித்ரா கிருஷ்ணசாமியை அணுகுவார்கள்.

வெளி நாட்டுப் படப் பிடிப்பு என்றால், எத்தனையோ 'சடங்குகள்' கவனிக்கப்படவும், நிறைவேற்றப்படவும் வேண்டுமல்லவா! அவை அனைத்தும் தெரிந்தவர் அவர்.

மக்கள் திலகம் திரு கிருஷ்ணசாமி அவர்களிடம் உலகம்சுற்றும் வாலிபன் படத்துக்கான சில பணிகளை ஒப்படைத்தார். அவை செவ்வையாக நிறைவேற்றப்பட்டன.

ஜப்பானுக்குப் போய் அங்கே பார்க்க வேண்டியவைகளை யெல்லாம் பார்த்துச் செய்ய வேண்டிய முன்னேற்பாடுகளை யெல்லாம் செய்தவர் மணியன் அவர்கள்.

திரு மணியன் அவர்கள் உலகப் பயணம் எத்தனை தடவை செய்திருக்கிறார் என்று எண்ணிச் சொல்லிவிட முடியாது. அநேகமாக உலகம் முழுவதையும் பார்த்தவர். வெளி நாட்டு அனுபவம் என்பது அவருக்கு அமைந்த ஓர் அரிய வாய்ப்பு. மக்கள் திலகம் அளித்த பொறுப்பைச் சிறப்பாக நிறைவேற்றித் தந்த பெருமை இவருக்கு உண்டு.

திரு ஆர். எம். வீ. அவர்கள் எல்லாச் சிறப்புப் பணிகளுக்கும் மூலவர்.

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் நிர்வாகியாக ஆதி முதல் செயலாற்றி வரும் கர்ம சீலரான அவர், வழக்கம் போல ''உலகம் சுற்றும் வாலிபன்'' படப் பிடிப்புக்கும் எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்று, ஜப்பான்

✕ 'பல்லாண்டு வாழ்க' படத்தில் லதாவுடன்

சென்று, எல்லா நிலைகளிலும் முன்நின்று ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை.

இந்தப் படத்தின் சில பகுதிகள் தமிழகத்திலும் பிறகு படம் பிடிக்கப்பட்டன. வெளி நாட்டுக் காட்சிக் களங்களுடன் முழுக்க முழுக்க இணையும் வகையில் அரங்க நிர்மாணம் செய்யப்பட்ட சீர்த்தியை என் னென்பது!

எந்தக் காரியமானுலும் சரி, உண்மையான ஈடுபாட்டுடன், அரு முயற்சி, கடுமையான உழைப்பு ஆகியவற்றைச் செலுத்திச் செய்தால் வெற்றிக்கு உத்தரவாதம் உண்டு என்கிற தத்துவத்தை நிலைநிறுத்திய படம் ''உலகம் சுற்றும் வாலிபன்''.

இந்தப் படத்துக்குப் பிறகு மேலும் பல வெற்றிப் படங்களில் நடித்தார் மக்கள் திலகம் அவர்கள்.

பட்டிக்காட்டுப் பொன்னையா, நேற்று, இன்று, நாளை, உரிமைக் குரல், சிரித்து வாழ வேண்டும் முதலியவை அவை.

இவற்றில் உரிமைக் குரல் சக்கைப் போடு போட்டது. ''சிரித்து வாழ வேண்டும்'' படம் வெற்றி பெற்றது. என்றுலும் அது மகத்தானதாக அமையவில்லை. ஆனுல் இரட்டை வேடங்களில் அதி அற்புதமாகப் பொன்மனச் செம்மல் நடித்திருந்தார். டைரக்டர் எஸ். எஸ். பாலன் அவர்களின் திறமை படம் முழுவதும் சிறந்தது.

சில நேரங்கள், சில உன்னதமானபடங்கள் மகத்தான வெற்றி பெறுவதில்லை! அதற்குக் காரணமும் புரிவதில்லை. ஆனுலும் மாணிக்கம் எப்போதும் மாணிக்கம்தானே!

அடுத்து வந்த படங்கள்:

''நினைத்ததை முடிப்பவன்'', ''நாளை நமதே'', ''இதயக் கனி'', ''பல்லாண்டு வாழ்க'' ஆகியவை. எல்லாமே வெற்றி!

இவற்றில் குறிப்பாகச் சொல்லப்பட வேண்டிய படம் ''இதயக் கனி''. வழக்கம் போல், மக்கள்திலகம் அவர்களை முறையாகப் பயன்படுத்தி, மக்களிடையே அவரை வெற்றி நாயகனுக ஒளிர வைத்திருந்தார்

அவன்: ''பெட்ரோல் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு வருவது எனக்கு ரொம்ப கவலையைக் கொடுக்கிறது.''

இவன்: ''அட, உன்னிடம் ஸ்கூட்டரோ, காரோ கிடையாதே; பின் ஏன் கவலைப்படுகிறுய்?''

அவன்: ''என்னிடம் ஒரு சிகரெட் 'லைட்டர்' இருக்கே அது தெரியாதா உனக்கு''

செம்பூர் சந்துரு



திரு ஆர். எம். வீ. அவர்கள். இது ... மூவீஸ் சார்பில் அவரால் உருவாக்கப் ... திரைக் காவியம். வெற்றி முழக்கமிட் ...

அடுத்துச் சொல்லப்பட வேண்டிய ''பல்லாண்டு வாழ்க!'' சமூக மறும ... கோணத்தில் வரலாற்றிலேயே ஒரு ... சாதனை இந்தப் படம்.

மக்கள்திலகம் சிக்கமகளூருக்குப் பக்க ... உள்ள கலசாபுரம் என்ற கிராமத்தில் ... தாழ் நாற்பது நாட்கள் தங்கியிருந்து, ... ருடன் எல்லாக் கலைஞர்களும் உடன் ... உருவான படம். பிரபல இயக்குநர் ... சங்கருக்கு இது வெற்றியைத் தந்தது.

பிரபல இயக்குநர் திரு சாந்தாராம் ... களின் இலட்சியப் படமான ''தோ ஆ ... பாரா ஹாத்'' என்ற படக் கதை ... தழுவி எடுக்கப்பட்ட படம் ''பல்லா ... வாழ்க''.

மூலப் படத்தின் மூலக் கதையிலே மி ... தத்துவத்தையும்.கொள்கையையும்அப்ப ... பிரதிபலித்தது இந்தத் தமிழ்ப் படம் ... ருலும், அவசியமான பல மாற்றங்கள் ... செய்யப்பட்டன.

தமிழகத்தில் திரு எம். ஜி. ஆர். ... களின் படங்களில் எதிர்பார்க்கப்படுகிற ... யங்கள் ஏராளம். தத்துவங்கள், ... கைகள், ஆகியவை முக்கியமாகத் தே ... தான் என்றுலும் அவற்றையும் க ... சில காட்சிகள், சம்பவங்கள் அதிகப்படி ... இடம்பெற வேண்டிய அவசியம் உண்டு.

காதல் காட்சிகள் தேவை. ''தோ ஆ ... பாரா ஹாத்'' படத்தில் 'காதல்' ... துக்குக் கூடக் கிடையாது. மக்கள் தி ... அவர்கள் இதற்கு ஓர் உபாயம் கண்டு ... தார். இயக்குநர் கே. சங்கர் அவர்களு ... ஆலோசித்துக் கதாநாயகியின் கனவுக் க ... களாகக் காதல் காட்சிகளை இடம் ... வைத்துவிட்டார்.

வீரக் காட்சிகள் 'மக்கள் திலகம்' ... களின் படத்தில் இன்றியமையா ... அல்லவா? அப்படத்தில் ஆறு சண் ... காட்சிகள் இடம்பெற்றன. எல்லாமே ... யோடு பொருந்தும் விதத்திலும் கதா ... னின் இலட்சியத்தைக் காப்பவையா ... அமைந்தன.

தாய்ப் பாசம், தாயின் சிறப்பு, தா ... யின் மேன்மை போன்றவை பொன்– ... செம்மல் அவர்களின் படங்களில் முக் ... துவம் பெறக் கூடியவை. ஒரு புதிய கோ ... தில் அந்த அம்சமும் இடம் பெ ...

இப்படி மூலக் கதையில் இல்லாத ... முக்கியப் பகுதிகள் இணைக்கப்பட்டு ... யாக உருவாக்கப்பட்ட படம் மகத் ... வெற்றி பெற்றது. 'ஒரிஜினல்' பட ... இயக்குநரான திரு சாந்தாராம் அவர்க ... படத்தைப் போட்டுக் காட்டி, ''எப்படி ... திருக்கிறது?'' என்று கேட்டதற்கு ஓர் ... னதமான நற்சாட்சிப் பத்திரத்தையே ... வழங்கினுர். ''மூலப் படத்தின் உண ... ஜீவனும் தமிழ்ப் படத்தில் காக்க ... டிருக்கின்றன'' என்ற கருத்தில் பார ... வழங்கினுர் அவர். (தொ ...



பொன்மனச் செம்மலும் பொன்விழா ஆண்டும்

வித்துவான் வே. லட்சுமணன்

10

இயக்குநர் கே. சங்கர் சுறுசுறுப்பான 'டெக்னிஷியன்'. படப்பிடிப்பின்போது அவரிடம் தெளிவும் உற்சாகமும் உடன் பிறப்பாக இருக்கும். எப்பேர்ப்பட்ட பிரும்மாண்டமான காட்சிகளையும் அநாயாசமாகப் படமெடுப்பதில் அதிசூரர். மக்கள் திலகம் அவர்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்த இயக்குநர்களில் குறிப்பிடத் தக்கவர்.

அதனால்தான் சென்னையிலிருந்து ஏறத்தாழ முந்நூற்று ஐம்பது மைல் தொலைவில் உள்ள கலசாபுரம் கிராமத்திலும், மற்றும் ஜமண்குண்டி, சக்லேஷ்பூர், பாபாபுடான் கரே, தருமஸ்தலா முதலான இடங்களிலும் தொடர்ந்து நாற்பது நாட்கள் படப்பிடிப்பு நடத்தி, பல்லாண்டு வாழ்க படத்தின் பெரும் பகுதியை முடிக்க முடிந்தது.

இதன் பிறகு நீதிக்குத் தலைவணங்கு, உழைக்கும் கரங்கள், ஊருக்கு உழைப்பவன். நவரத்தினம், இன்று போல் என்றும் வாழ்க, மீனவ நண்பன், மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் ஆகிய படங்கள் மக்கள் திலகத்தின் சிறப்பு முத்திரைகளுடன் வெளிவந்தன. இந்தப் படங்கள் எல்லாவற்றிலுமே உன்னதமான கருத்துக்களும் பாடல்களும் சிறப்பாக அமைந்திருந்தன. மேலும் குறிப்பாக மக்கள் திலகம் அவர்கள் அற்புதமான பல குணச்சித்திரங்களை நடிப்பின் மூலம் வெளிப்படுத்தி ? ந்தார்.

19: ல மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் வெளிவந்த பிறகு அடுத்து மக்கள் திலகம் நடித்து எந்தப் படமும் வெளிவரச் சந்தர்ப்பமில்லை.

நாற்பது ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து சினிமா உலகில் நடித்து வ்ந்த திரு எம்.ஜி. ஆர். அவர்களை அரசியல் உலகமானது தனக்கு மட்டுமே அவர் சொந்தமெனக் கூறி முழுமையாக சுவீகாரம் செய்து கொண்டு விட்டது.

எப்போதுமே திரு எம். ஜி. ஆர். அவர்களுக்கு சினிமா, அரசியல் ஆகிய இரண்டும் இரண்டு கண்களாக இருந்து வந்தன. கலைத் துறையில் அவர் முழு நேரம் ஈடுபட்டபோது கூட, அரசியல் தனக்ென்று ஒரு கணிசமான நேரத்தை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டிருந்தது.

சினிமா என்கிற கலைத் துறையில் பணியாற்றும்போது அரசியலில் தாம் சார்ந்திருந்த கட்சியின் நலனுக்காக மக்கள் திலகம் அரும்பாடு படுவதும், அதற்காகப் பெரும் பகுதி நேரத்தை ஒதுக்குவதும் இயற்கைதான். இதற்குக் கலைத் துறை இடமளிக்க வாய்ப்பிருந்தது.

ஆனால் அரசியலில் ஆற்றி வந்த பணிகளுக்குப் பரிசாகவும் காணிக்கையாகவும் மக்கள் அவர் சிரத்தில் மணிக் கிரீடத்தைச் சூட்டிய பிறகு அவரால் கலைத் துறைக்குள் மறுபடியும் புகுந்து வழக்கம் போல் நடிக்க இடம் இல்லாமற் போய்விட்டது.

அரசியல் என்பது கட்சி ரீதியாகப் பார்க்கும்போது வேறு; ஆட்சிப் பொறுப்பை நிர்வகிப்பது என்கிற ரீதியில் பார்க்கும்போது வேறு.

கட்சியில் பணியாற்றும்போது எந்தக் கட்டுப்பாடும் இருக்க நியாயமில்லை. மேலும் தான் இருக்கும் இடம் எதுவானாலும் அங்கிருந்து கொண்டு கட்சிப் பணி ஆற்ற முடியும்.

ஆனால் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு அந்த நிலைமை மாறுபட்டதில் வியப்பில்லை.

இன்னமும் கூட அவரது இரத்தத்தில் கலையார்வம்தான் முழுக்க முழுக்க நிறைந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. ஏழு வயதுச் சிறுவனாக இருந்தபோது புகுந்த ஆலயம் அல்லவா கலை! எப்படி அதன் மீது பற்றும் பாசமும் இல்லாமல் போக முடியும்?

ஆனாலும் மக்கள் தீர்ப்புப்படி அவர் நாடாளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, தமிழகத்தில் ஏற்கெனவே தாம் செய்து வந்த பணிகளுக்கெல்லாம் நற்சான்றுச் சாஸனமாக அவருக்கு எழுதித் தரப்பட்ட ஆட்சி பீடத்தில் இருந்து கொண்டு, கலைத் துறைக்கு மட்டுமல்லாமல் ஏனைய எல்லாத் துறைகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதைப் பார்க்கிறோம்.

திரை உலகம் பொன் விழா காணும் இந்த ஆண்டில் மக்கள் திலகம் திரைப்படம்

எதிலும் நடிக்கவில்லை என்றாலும், அவர் நடித்து ஏற்கனவே வெளிவந்த படங்கள் மீண்டும் திரையிடப்பட்டுத் திரண்டுவரும் மக்களால் பார்க்கப்படுகின்றன.

இது ஒரு பெரிய அதிசயம். எந்த விநியோகஸ்தரை வேண்டுமானாலும் கேட்டுப்பார்க்கலாம்; எந்தத் திரைப் படக் கொட்டகைக்காரரையும் கேட்டுப் பார்க்கலாம்.

பல ஆண்டுகள் முன் திரு எம். ஜி. ஆர். அவர்கள் நடித்து வெளிவந்த படங்கள் எல்லாம் கூட இன்று புதுப் படம் போல் வெளியிடப்பட்டுக் கொட்டகை நிறைந்த வசூலைப் பெறுகின்றன. இது உண்மையான புள்ளி விவரச் செய்தி.

இதில் இன்னொரு முக்கியத் தகவலும் தரப்பட வேண்டி யிருக்கிறது. ஏற்கனவே பெருமளவுக்கு வெற்றி பெற்ற மக்கள் திலகம் அவர்களின் படங்கள் இப்போது ஓட்டப்பட்டு மகத்தான வசூலைப் பெறுவதென்பது ஒருபுறம் இருக்கட்டும். ஏற்கனவே வெளிவந்து அதிக அளவு வெற்றி பெறாத சில படங்கள் கூடப் பலராலும் இன்று பார்க்கப்பட்டுப் பாராட்டப்பட்டு நிறைய வசூலைப் பெற்றுத் தருகின்றன என்றால், இது விந்தையிலும் விந்தை அல்லவா?

திரைப்பட வெற்றி என்பது அது வெளியாகும் நேரத்தைப் பொறுத்தது.

அன்று, அந்த நேரத்துச் சூழ்நிலையில், அந்தக் கருத்துக்கள் நிறைவாக வரவேற்கப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இன்று அதே கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன அல்லவா? அது காலத்தின் இயல்பு.

மேலும் மக்கள் திலகம் அவர்களின் படங்களில் கருத்துக்கள் எல்லாமே காலங்கடந்தும்கூட நிலைத்து நிற்கும் ஆற்றல் பெற்றவை என்பது உண்மை.

மக்கள் திலகம் நடித்துப் புதுப் புதுப் படங்கள் வெளிவந்து கொண்டிருந்த காலங்களில் கூட அவருடைய பழைய படங்கள் வெளிவந்து சக்கைப்போடுபோட்டது உண்டு.

இவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்ளக் கூடிய அரிய உண்மை, சீரிய கருத்துக்களுக்குப் பழைமை — புதுமை என்ற வேறுபாடு இல்லை என்பதே.

தமிழ்த் திரைப்படப் பொன் விழா ஆண்டில் நினைத்துப் பார்ப்பது மட்டுமல்லாமல் சிகரத்தில் இருத்திப் பார்க்க வேண்டிய

சிறப்புக்கு உரியவர் திரு எம். ஜி.
என்று நான் சொன்னால் அதை ய
மிகைபடக் கூறியதாக எடுத்துக் கொ
மாட்டார்கள்.

தமிழ்ச் சமுதாய வளர்ச்சிக்கு
தனையோ மேலோர்கள் பலப் பல கோ
களில் தொண்டாற்றி வந்திருக்கிறார்
'திரைப்படம்' என்கிற கோணத்தில்
தாய வளர்ச்சிக்கும், தேசாபிமானத்து
விதையூன்றிப் பெரும் பணியாற்றியவர்க
குறிப்பிடத் தக்கவர் பொன் மனச் செம்

படங்களில் அவர் வாய் மூலமாக
வந்து ஒலிசெய்து, உள்ளத்தை ஈ
பாடல்களுள் ஒன்று:

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி—
இந்த நாடே இருக்குது தம்பி!
சின்னஞ்சிறு கைகளை நம்பி —
ஒரு சரித்திரம் இருக்குது தம்பி!
தவறு என்பது தவறிச் செய்
தப்பு என்பது தெரிந்து செய்
தவறு செய்தவன் திருந்தப் பார்க்கணு
தப்பைச் செய்தவன் வருந்தியாகணும்.

படம்: பெற்றால்தான் பிள்ளையா?

மிகப் பெரிய தத்துவத்தை எளிய
களில் தெரிவிக்கிறார் திரு எம். ஜி.
இயற்றியவர் கவிஞர் வாலி.

இதேபோல் எத்தனை எத்தனை கருத்
மும் சொல் எளிமையும் மிக்க பாடல்
கவர்ச்சிகரமான உரையாடல்களில் எத்
புரட்சிகரமான கருத்துக்கள்! எல்லாம
சேர்ந்து சமுதாயத்திலும் அரசியலிலும்
படுத்திய ஆரோக்கியமான விளைவுகள்
எத்தனை எத்தனை!

கல்வி அறிவு அதிகம் வளராத தேச
சினிமாவின் பாதிப்பு பாமர மக்களிடை
மிக அதிகம். அதை நன்றாகப் புரிந்துகொ
அந்தச் சாதனத்தைத் தேச நலனுக்கு உ
விதத்தில், காண்பவர் உள்ளங்களில் உ
எண்ணங்கள் வளரும் விதத்தில் பயன்
திய பொன்மனச் செம்மலை, பொன்
ஆண்டில் மட்டுமல்ல, திரை உலகின்
றாண்டு விழாவின் போதும் அதற்குப் பி
ரும் கூட சரித்திரம் போற்றும்.

புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம்... உறுதிமிக்க, ஆரோக்கியமான பற்கள்

அளித்திடுதே கோல்கேட் டென்டல் க்ரீம்

ஒவ்வொரு சாப்பாட்டிற்குப் பிறகும் கோல்கேட் கொண்டு உங்கள் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். உலகெங்கும் பல் டாக்டர்கள் சிபாரிசு செய்வதைப் போலவே அது உங்களைப் பாதுகாக்கிறது.

உங்கள் பற்களுக்கிடையே தங்கியுள்ள உணவுத் துணுக்குகளில் பாக்டீரியாக்கள் வளர்கின்றன. இவை வாய் துர்நாற்றத்தையும், பிறகு வலிமிக்க பற்சிதைவையும் உண்டாக்கும்.

எனவே சாப்பிட்டு முடித்தவுடனேயே கோல்கேட் முறையில் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். அது புத்துணர்ச்சியுடன் இனிய சுவாசத்தைத் தருவதற்கும், பற்களுக்கு வெண்மையளிப்பதற்கும், பற்சிதைவை எதிர்ப்பதற்கும் மிகவும் சக்தி வாய்ந்தது என்று நிரூபணமாகியுள்ளது.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும், பெப்பர்மின்ட் சுவை பல்துலக்குவதை ஒரு இன்ப அனுபவமாக்குகிறது.

நம்பகமான, கோல்கேட்டின் செயல் புரியும் முறை

உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.

கோல்கேட்டின் ஒப்பற்ற, செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச் சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றி விடுகிறது.

பயன்: கவர்ச்சிமிக்க வெண்மையான பற்கள், தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கெதிராகப் பாதுகாப்பு.

கோல்கேட் டென்டல் க்ரீம் உபயோகித்து வாய்துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்

DC-G-74 TM.

இந்த நேரத்து நியாயங்கள்

வாஸந்தி



1

டிராஃபிக் ஸிக்னலைப் பார்த்து ஹரிக்கு எரிச்சல் ஏற்பட்டது. இன்னும் பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்கு நகர முடியாது. வலது பக்கத்தில் ரோடில் நின்றிருந்த வாகனங்கள் எண்ண முடியாத சங்கிலிகளாகத் தெரிந்தன. ஸிக்னல் மாறினவுடன் விழித்துக் கொண்டு சங்கிலிகள் நகர்ந்தன.

தினமும் காலையில் 9.20க்கு இங்கு வந்து மாட்டிக் கொண்டால் தொலைந்தோம். இன்றைக்குக் காலையில் கண் விழிக்கும்போதே நேரமாகி விட்டது. நேற்று இரவு இரண்டு மணிவரை மனு பண்டாரியின் 'தி பிக் ஃபீஸ்ட்'டைப் படித்ததன் விளைவு. ஒரு பத்து நிமிஷங்கள் என்பது எத்தனை பெரிய பரிணாமத்தைக் கொண்டது காலை வேளையில்? இல்லாவிட்டால் இந்த நேரத்துக்குத் தினமும் போல் ஆஃபீஸ் லிஃப்டில் நின்றிருப்போம். 9.25க்கு மாயாவின் ஃபோனுக்காகத் தயாராகியிருப்போம்.

அவன் பொறுமை இல்லாமல் அந்த நகரும் வாகனங்களைப் பார்த்தான். முடிவில்லாத தொடர்கள். உடலின்

ஒவ்வொரு அணுவும் பொறுமை இல்லாமல் தவித்தது. பெட்ரோல் விலை ஏற ஏற இந்த வாகனங்களின் எண்ணிக்கையும் எப்படி இப்படி அதிகரிக்கிறது!

ஒரு வழியாக ஸிக்னல் மாறி அவன் தன் மோட்டார் சைக்கிளைக் கிளப்பித் தன் ஆபீஸ் இருக்கும் அந்தப் பத்து மாடிக் கட்டிடத்தின் முன் நிற்கையில் மணி 9.35.

அவன் அவசரமாகப் படிக்களைக் கடந்து கண்ணாடிக் கதவுகளைத் தாண்டி, வாயை மூட யத்தனித்துக் கொண்டிருந்த லிஃப்ட்டை அணுகிப் புகுந்து கொண்டான். லிஃப்ட்டின் நெருக்கடிக்குப் பின்னுல் இருந்த கண்ணாடியைப் பார்த்துச் சலைந்த கேசத்தைச் சரி செய்தபடி எல்லாரையும் பார்த்துப் பொதுவாகப் புன்னகைத்தான். தினமும் பார்க்கிற முகங்கள். அந்தக் கட்டடத்தில் குடியிருக்கும் பல்வேறு அலுவலகங்களில் வேலை பார்க்கும் முகங்கள். அவன் வேறு யாரையோ பார்த்துச் சிரிக்கிருன் என்று ஒவ்வொரு முகமும் முகத்தைத் திருப்பிகொண்டது.

அவனுக்குச் சிரிப்பு வந்தது. என்ன ப்ரகிருதிகள் இவர்கள்? ஏதோ பாரத்தைச் சுமக்கிறவர்கள் மாதிரி? அதுவும் தங்களுக்கு மட்டும் தான்பாரம் தலைக்குமேல் இருந்தமாதிரி?

மூன்ருவது மாடியில் 'தம்'மென்று லிஃப்ட் நின்றதும் அவன் வெளியில் வந்து வலது பக்கம் திரும்பித் தன் அலுவலகத்துக்குள் நுழைந்தான். பிடிப்பான கண்ணாடிக் கதவுக்கப்பால் குளிர்ச்சியான பிரதேசம். அதைவிடக் குளிர்ச்சியாக ரிஸப்ஷனிஸ்ட் ரூபா சிங். வெயில் காலம் ஆரம்பித்து விட்டால் இவளுக்குக் கனகுஷி. உடம்பை அனாவசியமாகப் போர்த்திக் கொண்டு நிற்க வேண்டியதில்லை. வெகு சிக்கனமான ஆறு அங்குல ரவிக்கை. இத்தனை அழகிய உடம்பை வைத்துக் கொண்டு அதை ரொம்பவும் மூடுவதும் மடத்தனம்தான் என்கிற நினைப்பில் புன்னகைத்து,

''ஹல்லோ!'' என்ருன். ''லுக்கிங் கிரேட்!''

''தாங்க்யூ!''

சிரிப்பில் செயற்கை நாணம். வரவழைத்துக்கொண்ட மையல். எம்.டி. யஷ்பாலின் ஸெலக்ஷன்,என்றைக்கு சோடை போயிற்று?

''எனக்காக ஏதாவது ஃபோன் கால் வந்ததா?''

''மூன்று முறை!''

''யார்?''

''இந்த நேரத்துக்குத் தினமும் வரும் அதே போன் கால்தான். உங்களை மாதிரியே பொறுமை யில்லாத பேர்வழி. அது எப்படி அப்படி ஒரு ஜோடி சேர்ந்தீர்கள்?''

அவன் புன்னகைத்தான்.

''சொல்கிறேன். உன் ஜோடியிடம் கேட்டு விட்டுச் சொல்கிறேன்.''

அவள் மாக்ஸ் ஃபாக்டர் சாய உதடுகளைக் கொஞ்சலுடன் குவித்தாள்.

''எனக்கு ஜோடியே கிடையாது.''

''ஐ டோன்ட் பிலீவ் இட்!''

அவன் புன்னகையுடன் தன்னுடைய அறைக்குள் நுழைந்தான்.

நாற்காலியில் உட்காரும்போது ஃபோன் அடித்தது.

''ஹரி ஹியர்!''

''உங்கள் ஜோடி!'' என்றாள் ரூபா.

''உம்! காத்திருக்கிறேன்!''

''என்ன இன்னிக்கு லேட்?''

மாயாவின் குரல் வழுக்கிக் கொண்டு வந்தது.

''கார்த்தாலே ஆபீஸுக்குக் கிளம்பினதே லேட்!''

''ஏன்?''

''முழிச்சுண்டது லேட். ஏன்னு கேட காதே. உதைப்பேன். நீதான் என் நின விலே வந்துவந்து தூக்கத்தைக் கெடுக்கறே!'

கிண்கிணிச் சிரிப்பு சில விநாடிகள் ரம்ய மாய் ஒலித்தது.

''அளக்காதே ஹரி!ஏதாவதுபுத்தகத்தைப் படிச்சிண்டிருந்திருப்பே விடிய விடிய!''

''நீ நம்ப மாட்டியே? நம்பற குணம் பெண்களுக்கு இருந்தா எங்களுக்கெல்லாம் ஹார்ட் அட்டாக் வராது!''

''நா பத்துத் தடவை இதுவரை ஃபோன் பண்ணினேங்கறதை நீ நம்பறியா?''

''நீ ஃபோன் பண்ணினேங்கறதை நம் பறேன்.''

''ஓ.கே. இது நாலாவது தடவை.''

''நா இப்பத்தான் நுழையறேன். தலை போற விஷயத்தை முதல்லே சொல்லு!''

''இன்னிக்குச் சாயந்திரம் கமானி ஆடி டோரியம்லே ஒரு நாடகம் இருக்கு கேம் பிரிட்ஜ் ட்ரூப் போடற நாடகம்.மெக்-பெத். வறியா?''

''ஷேக்ஸ்பியரெல்லாம் உனக்கு இன்னும் ஞாபகமிருக்கா?''

''ஞாபகப்படுத்திக்கலாம்.''

''வரேன். டிக்கெட்?''

''பாஸ் இருக்கு ரெண்டு!''

''அப்ப கண்டிப்பா வரேன்.''

மறுபடியும் கிண்கிணிச் சிரிப்பு. ''நீ செல வழிக்க மாட்டேன்னு தெரிஞ்சுதான் ஐ.ஸி. ஸி. ஆர்லே இருக்கிற ஒரு அண்டர் செக ரட்டரியை மஸ்காப் போட்டு ரெண்டு பாஸ் வாங்கிண்டேன்!''

ஏழை சுஜாதாவை (ராஜலட்சுமி) கோடீஸ்வரன் (தேங்காய்) மகளென ஏமாந்து, காதல் செய்யும் நாயகன் கதை. மெலிசான கதையை முழுநீள நகைச்சுவைச் சித்திரம் ஆக்கியிருக்கிறார்கள்.

சிவகுமார் — ராஜலட்சுமி, தேங்காய், — சௌகார், தங்கவேலு — மனோரமா என்று மூன்று ஜோடிகள். கிழட்டு ஜோடிகளுக்கிடையே சரியான ஜமாபந்தி. கோடீஸ்வரருக்கும் அவர் மனைவிக்கும் இடையில் விழும் சந்தேக முடிச்சே அதிர்வேட்டுச் சிரிப்புக்கு ஆதாரம். செவிடர் தங்கவேலு தன் வாதத் திறமையால் பலரை லட்சாதிபதியாக்கியவர் — அதாவது கோடீஸ்வரர்களை. மனைவி 'காரே புரே' என்று கத்த மனிதர் தன்பாட்டிற்கு ஹியரிங் எய்டைக் கழற்றிவிட்டு நமட்டுச் சிரிப்புடன் ஜமாய்க்கிறார். சிவகுமாரிடம் இருந்து பிரமாதமாய் அசடு வழிகிறது.

ராஜலட்சுமி சங்கராபரணத்தில் (நன்றாக) நடித்த தாக ஞாபகம். சோகத்துடன் சால்வை போர்த்தி சிவாஜியும் சத்யநாராயணாவும் கலந்த மேக்கப்பில் செந்தமிழ் பேசி வருவது யார்? ஓஹோ! வி. கே. ராம சாமியா? ஐயோ பாவம் — ரசிகர்கள்!

வசனங்களில் பத்திரிகை ஜோக்ஸ்களால் தோரணம் கட்டியிருப்பவர் வெங்கட். அவுட்டோரில் வெளுத்து வாங்குகிறது கோபால் ரெட்டியின் ஏரிபிளெக்ஸ். சக்கரவர்த்தியின் இசையில் தெலுங்கு மெட்டில் தமிழ்ப் பாடல்கள். நடன அசைவுகளில், கோணங்கி சேஷ்டைகளில், பாடல்களில், குரூப் போட்டோ பாணியில் முடிப்பது வரை எங்கும் ஒரே தெலுங்கு வாடை.

ஆபாசம் கலக்காத தமிழ்ப் படம் ஒன்றைப் பார்க்கும் போது சந்தோஷமா யிருக்கிறது. — **சிந்து - ஜீவா**

''ரொம்பப் போடாதே!''

''என்ன?''

''ஒண்ணுமில்லே. எத்தனை மணிக்கு?''

''ஆறு மணிக்கு.''

''வரேன். சாயந்திரம் ஒரு மீட்டிங் இருக்கு. அஞ்சரைக்கு முடிஞ்சுடும்னு நினைக்கிறேன். முடிஞ்சதும் நேரே ஆடிட்டோரியத்துக்கு வந்துடறேன்.''

''மறக்க மாட்டியே?''

''ஓ.சி.யிலே போக வேண்டியதை மறக்கவாவது?''

''அது மட்டும்தானா?''

''இன்னும் வேறே என்னங்கறதை நேரச் சொல்றேன்!''

''சொல்லாட்டா விடமாட்டேன்!''

பஸ்ஸர் ஒலித்தது.

அவன் புன்னகையுடன்—

''ஓ.கே. மாயா. ஆறு மணிக்கு!'' என்று ரிஸீவரைக் கீழே வைத்தான்.

ப்யூன் ஒரு கட்டுக் காகிதங்களை மேஜை மேல் வைத்தான். மேல் குறிப்பு — மோஸ்ட் இம்மீடியட்....

மோஸ்ட் இம்மீடியட் — எல்லாமே அவசரம் இங்கு... ஏதோ அடுத்த நிமிஷம் சாவு வந்து நிற்கப் போகிற மாதிரி. இதில் வேடிக்கை என்னவென்றால் அவன் இந்த வார்த்தைகளை நம்பி அவசரமாக நகர்த்தும் பைல்கள் எங்கே போய் மாட்டிக் கொள்கின்றன என்று புரிவதில்லை. ஒரு ப்ராஜெக்ட்டும் சரியான நேரத்துக்கு முடிவடைவதில்லை. ப்ராஜக்ட் உருவாவதற்குள் அது வேறு ரூபத்தில், கனமான சில பாக்கெட்டுகளில் உட்காருவதாகப் பலமான வதந்தி.

அவன் தோளைக் குலுக்கிக் கொண்டான். 'நமக்கென்ன வந்தது' என்று சொல்லியபடி 'மோஸ்ட் இம்மீடியட்'டைப் பிரித்தான். சில வினாடிகளில் அதில் அமிழ்ந்துபோனான்.

லஞ்ச் வேளைக்குச் சற்று முன்னால் அக்கௌன்டென்ட் மோகன் அகர்வால் எட்டிப் பார்த்தான்.

''க்யா யார்! பிஸி?''

''வெரி பிஸி!'' என்று அவன் சிரித்தான். ''மோஸ்ட் இம்மீடியட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

அகர்வால் சௌகரியமாக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

''அரே, சோடோ யார்! இதெல்லாம் எத்தனை இம்மீடியட் என்று நமக்குத் தெரியாதா?''

ஹரி பதில் சொல்லாமல் புன்னகையுடன் ஃபைலில் பார்வையை ஓட்டியபடி கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்தான்.

''இம்மீடியட்டாக மேலிருப்பவர்கள் பணம் பண்ணத்தான் நீ போடற கையெழுத்து. மார்ஜின்லே எழுதற உன்னுடைய குறிப்பெல்லாம் தண்டம்.''

அகர்வால் குரலைத்தாழ்த்திக் கொண்டான்.

''உன் பாஸ் சேத்தியைப் பற்றி என்னைக் கேளு சொல்றேன். பத்து வருஷததுக்கு முன்னால் அவன் வீட்டில் ஃபிரிட்ஜ் கிடையாது. ஃபர்னிச்சர் ஹையருக்கு வாங்கிப் போட்டிருந்தான். இப்பப் பார். ஐந்து வீடுகள், மனைவிக்கு ஒரு கார், அவனுக்கு ஒரு கார். எங்கேயிருந்து வந்தது இத்தனையும்? கவர்ன்மெண்டுக்கு பில்டிங் கட்டறதா பாவ்லா காண்பிச்சுத் தங்கள் வீட்டைக் கட்டிக்கிற பெருச்சாளிங்க எல்லாரும்!''

எழுத்தாளர்: நான் எழுதறதுக்குக் காரணமே நீங்கதான்! உங்களை எழுத்துலக ''துரோணரா'' நினைச்சி நான் மானசீகமா இன்ஸ்பிரேஷன் எடுத்து எழுதறேன்!

பத்திரிகை ஆசிரியர்: அப்போ பேசாம உங்க வலது கை கட்டைவிரலை குரு காணிக்கையா கொடுத்துடுங்க! எழுத்துலகம் ரொம்பக் கடமைப்பட்டிருக்கும்!

-வெ. சீதாராமன்

ஹரி எல்லா ஃபைல்களையும் ஒழுங்காகக் கட்டி வைத்து அழைப்பு மணியை அடித்தான்.

உள்ளே வந்த ப்யூன் ராம்சிங்கிடம் ''இதை எடுத்துக்கொண்டு போ'' என்றான்.

ராம்சிங் அந்தண்டை சென்றதும் ''திபாஸ்டர்ட்ஸ்'' என்றான் அகர்வால்.

ஹரி பெரிதாகச் சிரித்தான்.

''உனக்கு என்ன இத்தனை கோபம் மோகன்?''

''பின்னே என்ன? மேல் மட்டத்தை நீ ரொம்பக் கூர்ந்து பார்த்தியானா வெறும் சாக்கடை, வேலையைப் பத்திக் கேளு. ஒரு மண்ணும் தெரியாது. எம்.டி.க்கு ஒரு ஸ்டாட்டிஸ்டிக் தெரியாது — ரூபா சிங்குடைய வைட்டல் ஸ்டாட்டிஸ்டிக்கைத் தவிர''

''சீ நீ ரொம்ப மோசம்! அவர்கள் எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும். உனக்கும் எனக்கும் என்ன வந்தது?''

''ஒன்றுமில்லையே! அப்ஸொல்யூட்லி நத்திங். அதனால்தான் அவர்களது பாங்க் பாலன்ஸ் அதிகரித்துக் கொண்டு போகிறது. நமக்கு ப்ரமோஷன் என்று வரும்போது, அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் பார்! சோப்ராவுக்கு இப்பொழுது ப்ரமோஷன் ஆகவேண்டும். அவனுக்குப் பதிலா நரேஷ்குமாரை ப்ரோமோட் பண்ணப் போகிறார்களாம்!''

''அவன் ஜூனியர் இல்லையோ?''

''ஜூனியர்தான். ஆனால் எம்.டி.க்கு உறவு.''

''ஓ காட்!''

இருவரும் சிறிது நேரம் மௌனக் கோபத்துடன் அமர்ந்திருந்தார்கள்.

''எப்படி இவர்களால் தைரியமாக இப்படி செய்ய முடிகிறது? மனச்சாட்சி என்று ஒண்ணு இருக்காதா?''

''மனச்சாட்சி முட்டாள்களுக்குத்தான் இருக்கும்.''

ஹரி எழுந்திருந்தான்.

''ஒரு முட்டாளுக்குப் பசிக்கிறது.''

அகர்வால் சிரித்துக் கொண்டு எழுந்தான்.

''முட்டாள்களுக்கு நல்லவேளை இன்னும் பஞ்சமேற்படவில்லை. வா, எங்கேபோகலாம்?''

''ஐ. ஈ. என். எஸ். காண்டீனுக்குப்போக லாம்.''

லிஃப்டில் இறங்கிக் கீழே போகையில் போர்ச்சில் எம். டி. யின் கார் நின்றிருந்தது. எம்.-டி. இந்தண்டை அந்தண்டை பாராமல் நேராகச் சென்று பின் ஸீட்டில் உட்கார வண்டி கிளம்பிற்று.

''தி பாஸ்டர்ட்!'' என்றான் அகர்வால்.

ஹரிக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனுடைய கோபம்.

''ஓ கமான் ஈஸி! எம். டி. யும் ஒரு அகர்வால்!''

''அதனால்தான் எனக்கு அவரைப் பத்தி நன்றாகத் தெரியும்!''

''உறவா?''

''இப்ப இல்லே!''

''எனக்குப் புரியல்லே.''

''என்னுடைய அக்காவின் புருஷனாய் இருந்தான். இரண்டு பிள்ளைகள் பிறந்ததும் அக்காவுடைய உறவு அலுத்துப் போயிற்று அவனுக்கு. விவாகரத்து பண்ணிட்டான்.''

ஹரி மௌனமானான். இந்த விஷயத்தை இதுவரை யாரும் சொன்னதில்லை.

''ஓ, அது நடந்து பன்னிரண்டு வருஷங்கள் ஆகிறது. ஒரு வேடிக்கை என்ன தெரியுமோ? என்னுடைய அக்கா இன்னும் வருஷா வருஷம் புருஷனுக்காக 'கர்வா சௌத்' விரதம் இருக்கிறாள்!''

ஐ.ஈ.என்.எஸ். காண்டீனில் நிறைய கும்பலிருந்தது. கையில் பஜ்ஜியும் ஊத்தப்பமும் தயிர் சாதமுமாக.

அவர்களிருவரும் பஜ்ஜி பொட்டலங்களை வாங்கிக் கொண்டு ஒதுக்குப்புறமாக நின்றார்கள்.

காலையில் இருந்த உற்சாகம் இந்த மோகன் அகர்வாலைப் பார்த்த பிறகு சப் பென்று வற்றிவிட்ட மாதிரி ஹரிக்கு பிரமை. இந்த மோகனும் ஒரு பாரம் தூக்கி. சுமை தாங்கி எங்கேஇருக்கிறது என்று அலைபவன்...

''சாயந்திரம் மீட்டிங்குக்குப் போகப் போறியா?''

''ஆமாம்.''

''அது ஒரு போர்! அதற்குப் பிறகு என் வீட்டுக்கு வாயேன்! மின்டோ ரோட் ஃபிளாட்ஸ்லே இருக்கேன். டீ சாப்பிட்டுப் போகலாம்.''

''இன்றைக்கு முடியாது மோகன். சாயந்திரம் கமானி ஆடிட்டோரியம் போகிறேன். மக்பெத் டிராமா. மாயாவோடு பார்க்கப் போகிறேன்.''

''அரே யார்! நான் மறந்தே போனேன். எப்படி இருக்கிறாள் உன் கர்ல் ஃப்ரண்ட்?''

''ஃபைன்!''

''அன்றைக்கு நீ அவளை அறிமுகம் செய்த போது அவள் ஒரு மதராஸி என்று என்னால் நம்ப முடியவில்லை. சரியான டில்லி பெண்!''

''அவள் பிறந்து வளர்ந்ததெல்லாம் வடக்கில். அவள் அப்பா முப்பது வருஷங்களாக டில்லியில் இருக்கிறார்.''

''எப்பக் கல்யாணம்?''

''ஜனவரி மாசம்!''

''அடேயப்பா! அத்தனை தள்ளி ஏன்?''

''நிதானமா நடந்துட்டுப் போகட்டுமே என்ன அவசரம்?''

''அரே யார், இதெல்லாம் தான் 'மோஸ்ட் இம்மீடியட்' விஷயங்கள்!''

ஹரி சிரித்தான்.

''அவளுடைய அண்ணா அமெரிக்காவில் இருக்கிறான். அவனுக்கு ஜனவரியில்தான் இந்தியாவுக்கு வர முடியுமாம். அவன் வந்ததும் கல்யாணம்.''

''நீ ரொம்ப அவசரக்காரன் என்று நினைத்தேன்'' என்றான் மோகன் அகர்வால்.

''சிலவிஷயங்களில் ரொம்பப்பொறுமை!''

அன்று மாலை மீட்டிங் முடியும்போது 5.50. நேரமாயிற்று என்கிற பரபரப்போடு அவன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தினான். மாயா காத்திருக்கப் போகிறாள். நாசமாப் போகிற மீட்டிங். இந்த மீட்டிங் எல்லாம் என்ன சாதிக்கப் போகிறது? பணம் பண்ணுகிறவன் பணம் பண்ணிக்கொண்டு, அனுபவித்துக்கொண்டு இருப்பார்கள். மெத்தனமாக இருப்பவர்களின் மத்தியில் — மனச் சாட்சியோடு உலவும் பிரேதங்கள் என்ன சாதிக்க முடியும்? ஆத்திரப்பட்டுக் கொண்டு கண்ணீர் விட்டுக்கொண்டு... விவாகரத்து செய்த கணவனுக்காக 'கர்வாசௌத்' செய்து கொண்டு.... இதைத் தவிர....?

ட்ராஃபிக் சிக்னல் கலைந்தது. அவன் சட்டென்று விழித்துக் கொண்டு ப்ரேக் போட்டு முடிவதற்குள்...

பின்னாலிருந்து ஏதோ பலமாகத் தாக்கினாற்போலிருந்தது. மோட்டார் சைக்கிள் ஒரு ''ஸமர்ஸால்ட்'' அடித்தது, பிரக்ஞையில் உறைத்தது. பிறகு பிரக்ஞை போயிற்று.

(தொடரும்)

நடிகை: "என் பிறந்த நாள் அடுத்த வாரம் வருகிறது. அன்று பத்திரிகையாளர்கள் ஆச்சர்யப்பட்டுப் பிரசுரிக்குமாறு ஏதாவது சொல்ல வேண்டும். என்ன சொல்லலாம்?"

தோழி: ஏன், உன் சரியான வயதைச் சொல்லேன்!"

-ஏ. வி. தேவன்

"காம்ப்ளான்® ஒண்ணுதான் சரி என் குடும்பத்துக்கு ...திட்டமிட்ட பரிபூரண உணவு."

"பல வேளைகள்
சாப்பிடத் தவறி விடும்
என் கணவருக்கு"

"சாப்பிடும்போது
சண்டித்தனம் செய்யும்
என் மகனுக்கு"



"நோயுடல் தேறிவரும்
என் தாயாருக்கு"

காம்ப்ளான்® ஒன்றுதான் எவருக்கும் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களால் முழுமை பெற்றது.

காம்ப்ளான் ஒன்றுதான் திட்டமிட்ட விஞ்ஞானக் கலவையாக உடலுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது: புரதங்கள், கார்பொ-ஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், உலோக தாதுக்கள். எனவேதான், டாக்டர்கள் பெரும்-பாலும் சிபாரிசு செய்யும் ஆரோக்கிய பானமாக விளங்குகிறது காம்ப்ளான்.

கிடைப்பவை நால்வகை: இன்சுவை ரகங்களாக — சாக்கலேட் காம்ப்ளான், ஏலக்காய்-குங்குமப்பூ காம்ப்ளான், ஸ்ட்ராபெர்ரி காம்ப்ளான், தவிர சாதா காம்ப்ளான்.

"அசதியினால்
சரிவர
சாப்பிட
முடியாத
எனக்கு"

திட்டமிட்ட பரிபூரண உணவு
காம்ப்ளான்®

லின்டாஸ்-GLC. 10-2015 TM

சாந்தி அவசரம் அவசரமாகப் பரோட்டாவை மடித்துச் சின்ன டிபன் டப்பாவில் வைத்தாள். சமையலறை மேடை மேல் இருந்த கடிகாரம் ஏழரையை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் அரை மணி நேரத்தில் கிளம்பியாக வேண்டும். எட்டு மணி பஸ்ஸைப் பிடித்தால்தான் ஆஸ்பத்திரிக்கு ஒன்பது மணிக்குப் போய்ச் சேர முடியும். ஒன்பது அடித்து அரை விநாடி ஆகிவிட்டாலும் ஹெட்நர்ஸ் காச்மூச்சென்று ஆங்கிலவாடை வீசும் இந்தியில் கத்துவாள்.

வீட்டில் இருந்த நிசப்தத்தில் கடிகாரத்தின் ஓசை அதீதமாகக் கேட்டது. அவள் படுக்கை அறைக்குள் எட்டிப் பார்த்தாள். நடராஜன் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான். கையும் காலும் கண்ட திசையை நோக்கியபடி படுத்திருந்த அந்த உருவத்தைப் பார்க்கையில் மனத்தின் மூலையில் ஒரு சின்ன, மிகச் சின்ன அருவெறுப்புத் தோன்றி மறைந்தது. நேற்றைய இரவின் நினைவு வந்தது. அந்தக் கத்தலும் அந்த வார்த்தைகளும் மறுபடி நினைவுக்குள் புகுந்து ஒரு ரௌத்திரத்துடன் விசுவரூபம் எடுத்தது.

அவள் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு பரபரவென்று காஸ் அடுப்பைத் துடைத்து மேடையைத் துடைத்துஅவனுக்காகச்செய்த சமையலை ஓரமாக மூடி வைத்தாள். காப்பி டிகாக்ஷன், பால், சர்க்கரை தயாராக இடதுபுறம் ஒரு டிரேயில். அதன் பக்கத்தில் அவன் எடுத்துக் கொண்டு போக வேண்டிய டிபன் பாக்ஸ்.

சமையல் அறை ஜன்னல் வழியே வெளியே பார்வையை ஓட்டியபடி அவள்



அந்தி நேரத்து உதயங்கள்

வாஸந்தி

தனது காலை உணவைச் சாப்பிட ஆரம்பித்தாள். ஒன்பதாவது மாடியிலிருந்த அவளது ஜன்னலிலிருந்து கீழே பார்க்கையில் டில்லி ஜனங்களின் தலை போகிற அவசரம் தெரிந்தது. டில்லி எத்தனை மாறி விட்டது? எத்தனை ஜனங்கள்! எத்தனை நெரிசல்! பஸ்களுக்கு எத்தனை வேகம்! பிரயாணிகள் முழுசாக இறங்குவதற்குள் பறக்கும் பஸ்கள்! பொறுமையே இல்லாத டிரைவர்கள். உயிருக்கு மதிப்பே இல்லாமல் போய்விட்டது இப்போது.... இல்லாவிட்டால் அத்தனை விபத்துக் கேஸ்கள் தினமும் ஆஸ்பத்திரிக்கு வந்து சேராது. திடீரென்று பயங்கரச் சத்தத்துடன் ஒரு விமானம் அவளது ஜன்னலுக்கு நேர் மேலாகப் பறந்து சென்றது. எல்லாரும் எதற்காக இப்படி ஓடுகிறார்கள்? பறக்கிறார்கள்? எதைச் சாதிக்க ஓடுகிறார்கள்—உயிருக்கு மதிப்பளிக்காத ஓட்டம் எதைச் சாதிக்க முடியும்?

சென்ற ஜூன் மாதம் 23ம் தேதி அவளுக்கு நினைவு வந்தது. இப்படித்தான் ஓர் அசுரத்தன வேகத்தோடு வெறியோடு நான்கைந்து நாட்கள் ஒரு விமானம் மேலே சுழன்று பார்ப்பவர்கள் வயிற்றையெல்லாம் கலக்கி ஐந்தாம் நாள் மேலே எழும்பிய சுருக்கிலேயே விழுந்து பஸ்பமாகியது. மிகுந்த பரபரப்போடு சிதறிப்போன அந்த உடலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து அதை ஒரு மனித உருவமாக வெளிப்பேருக்குக் காண்பிக்க டாக்டர்களும் நர்ஸ்களும் செய்த தையல் வேலை இன்னும் நினைவில் பசுமையாக நின்றது.

ஆளப் பிறந்தவன் என்று எத்தனை பேர்கள் ஹேஷ்யம் சொல்லியிருந்தார்கள்! அவனே அந்த எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் அவை விளைவித்த கோட்டைகளையும் மேலே பறக்கையில் சுமந்திருக்க வேண்டும். அந்தக் கனம் தாங்காமல் கீழே விழுந்திருக்க வேண்டும். என்னுடைய முன்னேற்றத்துக்கு எந்தச் சக்தியும் குறுக்கே நிற்க முடியாது என்கிற ஆணவத்தின் கனம்....

மறுபடியும் விமானம் பயங்கர சத்தத்துடன் குனிந்து எழும்பிப் போயிற்று. அவள் தன் நினைவை உசுப்பிக் கொண்டு கை கழுவினாள். மனசுக்கு இரண்டு நிமிஷ நேரம் கிடைத்தால் எத்தனை தொலைவுக்குப் போய் விடுகிறது! அவள் அவசரமாகத் தன்னைத் தயார் செய்து கொண்டாள். நடராஜன் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான்.

''இவர் எழுந்திருந்தால்தான் ஆபத்து'' என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள். ஏதாவது வாக்கு வாதம் ஆரம்பித்து அவள் அதற்குப் பதில் சொல்ல நேர்ந்தால் இன்றைக்கு ஆஸ்

பத்திரிக்குப் போய்ச் சேர முடியாது.

''பெரிய ஆபீஸர் உத்தியோகம் பார்க்கிறியோ? ஒரு நாளைக்கு லேட்டாப் போனா என்ன ஆயிடும்?''

'சம்பாதிக்கிற திமிரு உனக்கு! அதான் புருஷன் என்கிற மதிப்பு இல்லே!'

அவள் டிபன்பாக்ஸைக் கைப் பையில் திணித்துக் கொண்டு தனக்குள் மெல்லப் புன்னகைத்தபடி ஓசைப்படுத்தாமல் கதவைத் திறந்து வெளியே வந்தாள். கதவைச் சாத்திவிட்டு லிஃப்டுக்குக் காத்திருக்கையில் பக்கத்து ஃப்ளாட் ரமாவும் ரமேஷ் சோப்ராவும் ஆபீஸுக்குக் கிளம்ப அவளுடன் சேர்ந்து நின்றார்கள்.

''ஹல்லோ!''

''ஹல்லோ!''

லிஃப்ட் திறந்தது.

'ஜி'யை அமுக்கியபடி ரமேஷ் கேட்டான்:

''நடராஜன் இன்னும் கிளம்பவில்லையா?''

''இன்னும் அவர் எழுந்திருக்கக் கூட இல்லை''

''லக்கி கை!''

சாந்தி ரமாவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''ரொம்ப அதிர்ஷ்டக்காரன்!'' என்றான் ரமேஷ் மறுபடி.

''எதற்கு இரண்டு தடவை?'' என்று ரமா சிரித்தாள்.

''பாரேன்! இன்னும் எழுந்திருக்கல்லையாம். சாந்தி வீட்டு வேலையெல்லாம் தனியாகச் செய்து அவனுக்குச் சமைத்து டிபன் பாக் பண்ணி விட்டுக் கிளம்புகிறாள். அவன் இன்னும் ராஜா மாதிரி தூங்குகிறான்!''

''நீ என்ன சாதாரணப் பிரஜை மாதிரி தூங்கறியா?''

''தூக்கமா? உன்னைக் கல்யாணம் செய்து கொண்ட பிறகு தூக்கம் எங்கே?''

எதியோப்பியா நாட்டு காலண்டர்படி வருடத்திற்கு 13 மாதங்கள். ஒவ்வொரு மாதமும் 30 நாட்கள் என்ற கணக்கில் 12 மாதங்களும், மீதமுள்ள 5 நாட்களை 13வது மாதமாகவும் அமைத்துள்ளார்கள். லீப் வருடத்தில் 6 நாட்கள் வருகின்றன. இன்னொரு விசேஷம் என்னவென்றால், உலகமெங்கும் கிறிஸ்துமஸ் ஆண்டுவிழா டிசம்பர் 25ம் தேதி கொண்டாடும்போது, எதியோப்பியாவில் மட்டும் ஜனவரி 7ம் தேதி கொண்டாடப்படுகிறது.

ஆதாரம்: KLM விமானநிறுவனம் வெளியிட்டுள்ள பிரசுரம்

தகவல்: லலிதா.

லிஃப்ட் ஒரு 'தம்'முடன் தரை மட்டத்துக்கு வந்து வழி விட்டது. சாந்தி ஒரு லேசான புன்னகையுடன் ''பை, ஸீ யூ!'' என்று வேகமாக நடந்தாள்.

''ஸீ யூ!''

அவள் பஸ் ஸ்டாப்புக்குப் போய்ச் சேருவதற்குள் ரமாவும் ரமேஷும் தங்கள் ஸ்கூட்டரில் அவளைத் தாண்டிக் கொண்டு சென்றார்கள், பெரிதாகப் புன்னகைத்துக் கொண்டு.

சாந்தி தனக்குள் சொல்லிக்கொண்டாள்: அதிர்ஷ்டசாலி யார்? ரமாவை அவளுக்கு ஐந்து வருஷங்களாகப் பழக்கம். படு சோம்பேறி. அவிழ்த்த புடவையை மடித்து வைக்க வேண்டும் என்கிற பிரக்ஞை ஏற்படாதவள். பாதி வேலை யெல்லாம் ரமேஷ் செய்து விடுவான். ரமாவின் அசட்டுத்தனத்தைக் குழந்தைத்தனமாக எடுத்துக் கொண்டு அவளது சோம்பேறித்தனத்தை ஒரு தாயின் கனிவோடு பொறுத்துக் கொண்டு எதையும் தப்பாக நினைக்காமல் எத்தனை ஆண்கள் இது மாதிரி இருப்பார்கள்? அதனால்தான் ரமா ரொம்பவும் சிரித்துக் கொண்டு இருக்கிறாள். எப்பவும் சிரிப்பு, எப்பவும் கிண்டல். ஒரு ஞாயிற்றுக் கிழமை வீட்டில் தங்க மாட்டார்கள். ஒரு சினிமா விடுவதில்லை.... சந்தோஷத்தை அனுபவிக்கவே பிறந்தவர்கள் மாதிரி — எப்படி இப்படி ஒரு ஜோடி அமைகிறது?

அவள் ஏறும் பஸ் வந்து விட்டது. கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு ஏறி ஓர் ஓரமாக அவள் நின்றாள். நேரமாகி விட்டது என்கிற பரபரப்பில் பஸ் விரைந்தது. அவளை மாதிரி வேலைக்குச் செல்லும் பெண்கள் ஏழெட்டுப் பேர் பஸ்ஸில் இருந்தார்கள். காலையில் அரக்கப் பரக்க வீட்டு வேலைகளை ஆரம்பிக்கையில் ஏற்பட்ட நெற்றிச் சுருக்கங்கள் இன்னும் நெற்றியில் தெரிந்தன.

அந்தச் சுருக்கங்களையும் காய்ந்துபோன கன்னங்களையும் பார்க்கும்போது அவளுக்குப் பாவமாக இருந்தது. ரமாவையும் ரமேஷையும்போல் அதிகம் பேர் இருக்க மாட்டார்கள் என்று தோன்றிற்று. நான் தனி இல்லை. என்னைப் போல் அநேகம் பெண்கள் இருப்பார்கள். ஓட ஓட விரட்டப்பட்டுக் கொண்டு குனியக் குனியக் குட்டுப் பட்டுக் கொண்டு....

அவள் பஸ்ஸில் முன்னேறி இறங்கும் இடத்தில் நின்று கொண்டாள். ஸீட்டில் உட்கார்ந்திருந்த ஒரு ஆண்கூட நிற்கிற பெண்களுக்காக எழுந்திருந்து இடம் கொடுக்கவில்லை. அவளுக்குச் சலிப்பு வந்தது. இந்த மாதிரித் தருணங்களில்தான் இவர்களுக்கு ஆண் பெண் சமத்துவம் நினைவுக்கு வரும். எழுந்து குளித்து சாப்பிட்டு மட்டுமே வந்திருக்கும் இந்த ஆண்களுக்கு இந்தப் பெண்களின் காலை டென்ஷன்கள் புரியாது. இந்தச் சமத்துவ எண்ணம் வீட்டில் இருந்திருந்தால் இங்கே நிற்கும் பெண்களுக்கு இந்த நெற்றிச் சுருக்கங்கள் இருக்குமா?

பஸ் ஸ்டாப் வந்ததும் அவள் அவசரமாக இறங்கினாள். நல்ல வேளை இன்னும் பத்து நிமிஷங்கள் இருந்தன, ஒன்பது

ஸ்தாபிதம் : 1942 போன் : 123

லலிதா பார்மஸி

கும்பகோணம்

DRUG LICENCE No. 40 / 78

மத்திய அரசால் ஈட்டுத் தொகைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது

எமது விசேஷத் தயாரிப்புகள் :

ச்வாஸாசயத்திற்கு பலமூட்டவும், சரீர எடையை அதிகரிக்கவும்

1. ச்யவனப்ராசம்
2. காந்த பஸ்பம்
3. அயஸ்ஸிந்தூரம்
4. அச்வகந்தி தைலம்

கீழ்க்கண்ட எமது பிராஞ்சுளிலும் கிடைக்கும்

1. லலிதா பார்மஸி, 52, மஹாதானத் தெரு, மாயூரம், போன் : 379
2. லலிதா பார்மஸி, 81, வடக்கு ரத வீதி, சிதம்பரம்
3. லலிதா பார்மஸி, 6, ரெங்கநாதன் தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017, போன் : 441454
4. லலிதா பார்மஸி, 60-B, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை - 600 004, போன் : 73007

மற்றும் சிறந்த ஆயுர்வேத மருந்துகள் யாவும் கிடைக்கும்

MOD 11 CP-S

அடிக்க. இன்று நடராஜன் எழுந்திருப்பதற்கு முன் கிளம்பி வந்ததில் வரமுடிந்தது. இல்லா விட்டால் ஹெட் நர்ஸிடம் பூசை கிடைத் திருக்கும்.

அதற்குப் பதில் மாலை வீடு திரும்பியதும் நடராஜனிடம் பூஜை கிடைக்கப் போகிறது. எத்தனை கேவலமாகிப் போன ஜன்மம் இது?

ஆஸ்பத்திரிக்குள் நுழைந்த மறு விநாடி அவளுக்கு எல்லாம் மறந்து போயிற்று— அவளது வாழ்வும் அதில் முக்கிய பங்கேற்கும் நடராஜனும் பின்னல் நகர்ந்து, அந்தப் பெரிய கட்டிடத்தின் நோயாளிகளுக்கு முன் துச்சமாகிப் போயின.

அவளுக்கென்றிருந்த பிரத்தியேக அல மாரியைத் திறந்து அவள் தன்னுடைய உடுப்பை எடுத்து மாற்றிக் கொண்டாள். ரெஜிஸ்டரில் கையெழுத்திட்டு அவள் ட்யூட்டி பார்க்கும் வார்டுக்குள் போகையில் ஒன்பது மணி சங்கு ஊதிற்று.

''குட் மார்னிங் நர்ஸ்!''

''குட் மார்னிங்!''

''குட் மார்னிங் சாந்தி பெஹன்!''

''குட் மார்னிங் ராஜூ பையா!'' *

அவளுக்குள் சட்டென்று ஒரு பிரவாகம் கிளம்பிற்று. வீட்டில் நித்தம் அனுபவிக்கும் சிறுமைகள் எல்லாம் அர்த்தமற்றுப் போயின. அவள் சுறுசுறுப்புடன் சட்டென்று முகத்தில் மலர்ந்த புன்னகையுடன் வேலையைத் துவக் கினாள்.

அந்தரத்தில் ஒரு கால் கட்டி நிற்க சர்மா பேப்பரில் மூழ்கி யிருந்தார்.

''எப்படி இருக்கிறீர்கள் சர்மா ஸாப்?''

சர்மாவின் முகத்தில் லேசான புன்னகை கோடிட்டது.

''நன்றாயிருக்கிறேன்!''

''அப்பொழுது இன்னும் கொஞ்சம் அதிக மாகச் சிரியுங்களேன்!''

''இந்த மாதிரி அந்தரத்தில் ஒரு கால் மாட்டிக் கொண்டிருக்கும்போது 'எனக்கு இத்தனைதான் சிரிக்க முடியும்!''

இந்தியாவில் மொத்தம் 2,900 ஆரம்பப் பாடசாலைகள் இருக் கின்றன.

'அவ்வளவுதானா?' என்று ஆச் சரியப் படாதீர்கள். இவை ஆசிரியர் ஒருவர்கூட இல்லா மல் 'இயங்கும்' பள்ளிக்கூடங் கள்!

– சண்டே

– ராமுசாமி

அவள் மென்மையாகச் சிரித்து அவரது தோளில் அனுதாபத்தோடு தட்டினாள். பிறகு மெல்லிய குரலில் சொன்னாள்:

''அந்தரத்தில் நின்றாலும் கால் பிழைத் ததே என்று சந்தோஷப்படுங்கள் சர்மா ஸாப்! அதோ அந்தக் கடைசி பெட்டைப் பார்த்தீர்களா? நேற்று ஒரு காலை ஆம்பு டேட் செய்து விட்டார்கள்!''

சர்மா சட்டென்று மௌனமானார். நிதான மாகப் பேப்பரை மடித்து வைத்து அவளைப் பார்த்தார்.

''டூ பேட்.... இல்லை?''

''உம். கஷ்டம்தான். ஆனால் ரொம்பக் கஷ்டம் இல்லை. இன்னொரு கால் இருக் கிறதே!''

''இப்படியே எல்லா பேஷன்ட்ஸ்ஸையும் ஏமாற்றுவது உனக்குப் பழக்கமாகிவிட்டது நர்ஸ்!''

அவள் சிரித்தாள்.

''ஏமாற்றுகிறேன் என்பது ரொம்ப மோச மான வார்த்தை சர்மா ஸாப். பேஷன்ட்ஸ் ஸுடைய பிரமைகளை அகற்றுவது என் னுடைய கடமை....

''ஸ்பான்ஜ் பாத்துக்கு நீங்கள் ரெடியா?''

''காத்திருக்கிறேன்.''

''இருங்கள். பத்து நிமிஷத்தில் வரு கிறேன்.''

''குட் மார்னிங் நர்ஸ் ஆண்டி!''

சட்டென்று பரவிய ஒரு சந்தோஷத் துடன் அவள் திரும்பினாள்.

ஏழு வயதுச் சிறுவன் மிக்கி ஒரு கையும் காலும் பிளாஸ்டரில் ஸ்லிங்கில் தொங்க இன்னொரு கையை அவளைப் பார்த்து அசைத் தான்.

''குட்மார்னிங் மிக்கி! எப்படி இருக்கே?''

''வலிக்கிறது.''

''எங்கே?''

''இங்கே!''

''சரியாப் போயிடும்!''

''எப்போ?''

''சீக்கிரம். நீ சமர்த்தா இரு. கால் அசைக்காம இருந்தாயானா, பத்து நாளிலே சரியாப் போயிடும்.''

''விளையாடலாமா?''

''ஓ!''

மிக்கியின் கண்களில் ஒரு பிரகாசம் தெரிந் தது.

''கிரிக்கெட்?''

''அது கொஞ்ச நாள் கழிச்சு. இனிமே தனியா ரோடை கிராஸ் பண்ணாதே!''

''ஓ.கே!''

படுக்கைக்குப் பக்கத்தில் நின்றிருந்த மிக்கி யின் அம்மாவின் கண்களில் நீர் தளும்பு வதைப் பார்த்துச் சாந்தி அவசரமாக அவ ளுடைய தோளைப் பற்றினாள்.

''மிக்கிக்கு ஒண்ணுமில்லை மிஸஸ் மெஹ்ரா. பத்தே நாள் சரியாகி விடுவான். ஸ்பாஸ்டிக்ஸ் ஸெலக்ஷனுக்குப் போய் அங் கிருக்கும் குழந்தைகளைப் பார்த்து விட்டு வாருங்கள். நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்ட

---

* Bhaiya — சகோதரன்

சாலி என்று தெரியும். நீங்கள் கலங்கினுல் குழந்தைக்குத் தைரியம் போய்விடும்.''

மிஸஸ் மெஹ்ரா கண்களைத் துடைத்துக் கொள்கையில் அவள் வேறு பேஷண்ட்டைப் பார்க்கச் சென்ருள்.

எத்தனை விதமான உபாதைகள்! பிறவியினுல் ஏற்படும் தொல்லைகள் போதாது என்று தாங்களாகப் போய் உடலைச் சேதப்படுத்திக்கொள்ளும் மனிதர்கள்! தெரியாத்தனமாக அஜாக்கிரதையாக விபத்தில் மாட்டிக்கொண்டு கையையும் காலையும் ஒடித்துக் கொண்டு மறுபடி ஓட முடியுமா நடக்க முடியுமா என்று தவிக்கும் ஜன்மங்கள்!

கடைசி படுக்கையில் ராம்ஸிங் இன்னும் மயக்கத்திலிருந்தான். ஸெப்டிக் ஆகி இருந்த காலை முழங்காலுக்குக் கீழே நேற்றுத்தான்வெட்டிஎடுத்தார்கள். இரண்டு நாட்களாக அவன் பட்ட அவஸ்தையும் கத்தின கத்தலும் சகிக்க முடியாமல் இருந்தது. அவன் அருகில் அவனுடைய வயதான தாய் திக்பிரமை அடைந்தவள் போல் உட்கார்ந்திருந்தாள்.

சாந்தி அவள் அருகில் சென்று, ''மாதாஜி உன் பிள்ளை சரியாகிப் போய்விடுவார். கவலைப்படாதீர்கள்!'' என்ருள்.

ராம்ஸிங்கின் அம்மா அவளை ஒரு வெற்றுப் பார்வை பார்த்துப் பிறகு ஆகாசத்துக்குக் கையைக் காண்பித்து ஏதோ பீஹாரியில் சொன்னுள்.

சாந்தி அவள் முதுகைச் சமாதானமாகத் தட்டிவிட்டுத் தன் வேலைகளைக் கவனிக்கச் சென்ருள்.

சர்மாவுக்கு ஸ்பான்ஜ் பாத்திலிருந்து வேலை தொடங்கிற்று...

மாலை ஐந்துவரை நேரம் போவது தெரியாமல் பறந்தது.

ஐந்து மணிக்குத் தலைமை நர்ஸ் மிஸ் வயலட் கூப்பிட்டனுப்பினுள்.

''சாந்தி, இந்த அக்கௌண்டைக் கொஞ்சம் செக் பண்ணிக் கொடு. ரேகாவைச் செய்யச் சொன்னேன். அவள் பொறுப்பில்லாதவள். சரியாக இருக்கிறதா என்று பார்.''

அக்கௌண்ட் புஸ்தகத்துடன் உட்காருகையில் காலையில் ஐந்து மணிக்கு எழுந்த உடம்பு அசந்து போயிருந்தது. அநேக தப்புக்கள் இருந்த கணக்கை ஒரு வழியாகச் சரிசெய்து நிமிர்வதற்குள் கிட்டத்தட்ட ஆறு மணி ஆகிவிட்டது. அவள் மிஸ் வயலெட்டிடம் புத்தகத்தை ஒப்படைத்துவிட்டு உடையை மாற்றிக் கொண்டு வீட்டுக்குச் செல்லப் படியிறங்கினுள். ஸ்ட்ரெச்சரில் ஓர் உருவம் காஷுவாலிட்டியை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. 'ஒரு ஆக்ஸிடென்ட் கேஸ்' என்று அவள் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தாள். (தொடரும்)

கண்ணீரில் எழுதாதே

கதையை ஜவ்வால் எழுதியிருக்கிருர்கள். தங்கள் பொறுமையின் பேரில் அபார நம்பிக்கையுள்ளவர்கள் இப்படம் பார்த்து மீண்டும் தங்களைச் சோதித்துக் கொள்ளலாம். கேமரா ரகுநாத ராயைத் தவிர அனைவரும் 'ஏதோ' கையில் பூமாலை என சினிமாவைச் சின்ன பின்னம் செய்திருக்கிருர்கள்.

குழப்பத்தின் மறு பெயர் ஹீரோ. இரவுக் காட்சிகளில் முகம் தெரியாதபடி இருளோடு ஒன்றி விடுகிறது. அங்க சேஷ்டைகளில் விஜய பாபுவை ஞாபகப்படுத்தும் அறிமுக வில்லன் லட்சுமிகாந்த். வழக்கமாய் வார்த்தைகளைப் பொரிந்து தள்ளும் வனிதா கதாநாயகியாக உயர்ந்திருக்கிருர். கேமரா குளோசப்புக்கு வரும்போதெல்லாம் சிரித்து, எண்ணிய வார்த்தைகளை உதிர்த்து - எல்லாம் விழலுக்கு இறைத்த நீர்.

இதமான ஏ.சி.க்கு (பாண்டி பாலாஜி)	ரூ. 0—50
கேமரர்வுக்கு	ரூ. 0—25
மொத்தம்	ரூ. 0—75
கொடுப்பது	ரூ. 2—90
கிடைப்பது	ரூ. 0—75
தண்டம்	ரூ. 2—15

சம்பந்தம் இல்லாமல் திடீரென்று ஒரு காதல் ஜோடி முளைக்கிறது. ஊர் சுற்றுகிறது. டூயட் பாடுகிறது. குளிக்கிறது. வேறு படம் பார்க்கிருேமா என்ற சந்தேகம் வந்து நம்மைக் கிள்ளிப் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எதையெதை, எப்படிப்ப, எந்த அளவு சொல்லுவது என்ற சினிமா அகராதியை டைரக்டர் புரட்டிப் பார்ப்பது எதிர்கால ரசிகனுக்கு நயம் பயக்கும். சிக்கிக்கொண்டவன் இன்றைய ரசிகன்.

- நளினி சாஸ்திரி



பால் டம்ளரை மேஜை மேல் வைத்து விட்டு அவன் தயங்கி நிற்கவும், ஆங்கில நாவலின் அட்டையில் அலங்கோலமாகப் பரந்திருந்த பெண்ணின் படத்தைப் பசியோடு மேய்ந்து கொண்டிருந்த பாஸ்கர் எரிச்சலோடு நிமிர்ந்தான். ''என்னடா?''

''மூணு மாசமாக் கேட்டுக்கிட்டே இருக்கேன். ஐயா கண்டுக்கவே மாட்டேங்கறீங்க... அம்மாவுக்கு உடம்பு ரொம்பவும் முடியாம இருக்காம். கடுதாசி வந்திருக்கு... ஒரு நூறு ரூபா குடுத்திங்கன்னு...''

அவன் முடிக்கும் முன்பாக பாஸ்கர் தன் கையிலிருந்த புத்தகத்தை மேஜை மேல் வேகமாக விட்டெறியவும் அந்த அதிர்ச்சியில் டம்ளரிலிருந்த பால் சிதறி மேஜையை நனைத்தது. ''உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்... இன்ட்ரஸ்டா படிச்சிக்கிட்டு இருக்கும்போது உன் தரித்திரம் புடிச்ச வாயைத் திறக்காதேன்னு. கையிலே காசில்லாமல் நானே கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்கேன். தொரைக்கு நூறு வேணுமாமில்லே... போப்போ.''

பாஸ்கர் எந்தவித பாதிப்பும் இல்லாமல் மீண்டும் பக்கங்களில் இலயித்துவிட, அவன் ஏதோ ஒரு வேதனை நெஞ்சில் ரம்பமிட, மிகவும் தளர்ந்தவனாக அங்கிருந்து அகன்றான். கட்டிலின் மேல் கிடந்த மெத்தையைத் தட்டி, சீர்ப்படுத்தி, போர்வையை உதறி விரித்து, பாஸ்கருக்குப் படுக்கையைத் தயார் படுத்திவிட்டு, மூலையில் சுருண்டு கிடந்த கோரைப் பாயையும் தலையணையையும் சுமந்துகொண்டு வராந்தாவுக்கு வந்தான். பாயை விரித்துச் சுவரில் சாய்ந்தபடி அமர்ந்து கொண்டவன் இங்கு புறப்பட்டு வரும்போது அம்மா சொன்னதை நினைத்துப் பார்த்தான்.

''இத பாரு முத்து! பரம்பரை பரம்பரையா அவுங்க உப்பைத் தின்னுதான் பொழைப்பு நடத்தறோம். அந்த நன்றியை மறக்காம அவங்க மனசுப்படி நடந்துக் கோணும்கிறதுதான் உங்கப்பாரு ஆசை. பாத்து புத்தியாப் பொழைச்சுக்கோ.''

அவனுக்குத் திடீரென்று வாய் விட்டு அழணும்போல ஏதோ ஒரு துயரம் இதயத்தைப் பிசைந்தது.

நவப்பட்டி பஞ்சாயத்து போர்டின் பிரஸிடெண்டும், பெரிய பண்ணையாருமான கந்தசாமியின் ஒரே மகன் பாஸ்கர் இரண்டு முறை பி.ஏ. பரீட்சையில் 'கோட்' அடித்து விட்டு மூன்றாவது முறை 'முயற்சி' செய்வதற்காக இங்கு வந்து தங்கி இருக்கிறான். அவன் ஓட்டலில் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாதே என்ற அக்கறையில் எக்கச்சக்கமான வாடகையில் தனி வீடு பார்த்து, சமைத்துப் போடவும் எடுபிடி வேலைகளைச் செய்வதற்கும் முத்துவை அவனோடு அனுப்பியிருந்தார் பண்ணையார். பாஸ்கரும் ஏதோ ஒரு டுடோரியல் காலேஜில் சேர்ந்திருப்பதாகக்காட்டிக் கொண்டு காசைக் கரியாக்கிக் கொண்டிருந்தான். பத்தாதற்குப் பண்ணையார் வேறு இந்த முறை பரீட்சைக்குப் போனால் போதும் — மற்றபடி பார்க்க வேண்டிய இடத்தை, பார்க்க வேண்டிய விதத்தில் பார்த்து 'பாஸ்' போட ஏற்பாடு செய்வதாக மகனிடம் உறுதிகூறி இருக்கவே பாஸ்கர் படிப்பதைத் தவிர மற்ற காரியங்களில் அதிக அக்கறை காட்டிக் கொண்டிருந்தான்.

முத்துவின் குடும்பம் பரம்பரை பரம்பரையாகப் பண்ணையார் வீட்டுக்குச் சேவகம் செய்து வருகிறது. இந்தப் பரம்பரை வியாதியிலிருந்து தப்பி ஏதாவது வேலை பார்க்கலாம் என்று ஆசைப்பட்ட முத்து தன் படிப்புக்கு ஏதாவது உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு பண்ணையாரை அணுகவும், அது அவன் எலிமெண்டரி ஸ்கூல் படிப்புக்கே ஆபத்தாக முடிந்தது.

''உன் மவன் படிச்சு கலெக்டராகிக் காரும் பங்களாவுமா உன்னை வச்சுக்கறது தான் பாழாப் போச்சா! பண்ணையிலே வேலை செய்யறவனுக்குப் படிப்பு எதுக்குடா— போடா போய் நாளையிலேருந்து உன் மகனை நம்ம மாட்டுத் தொழுவத்துக்கு வேலைக்கு அனுப்பு.''



பண்ணையாரிடமிருந்து தன் தந்தை மூலம் கிடைத்த பதிலைக் கேட்டதும் முத்து ஏமாற்றத்தால் இதயம் வெதும்பினான்.

அவன் தந்தை பண்ணையாரின் கட்டளையை நிறைவேற்றுவதில் குறியாக இருந்தார். மறுநாள் ஸ்கூலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த மகனிடம், ''பெரிய இடத்துப் பொல்லாப்பு நமக்கு வேண்டாமிடா ராஜா—கஞ்சிக்கே கஷ்டப்படற நாம காலேசு படிப்பெல்லாம் படிக்க முடியாது. ஐயா உன்னைத் தொழுவத்துக்கு வேலை பார்க்க வரச் சொல்லி இருக்காரு. நீ வேலைக்குப் போயி நாலு காசு சம்பாதிச்சா எனக்குத்தாண்டா பெருமை'' என்று சொல்லவும் முத்து சிலையாகி விட்டான். 'கொட்டிவிடுகிறேன்' என்று தயாராக நின்றிருந்த கண்ணீர் முத்துக்களைப் புறங்கையால் துடைத்தெறிந்து விட்டு, ''கடைசித் தடவையா ஸ்கோலுக்குப் போயிட்டு வந்துடறேன்'' என்று கெஞ்சிக் கேட்டு அனுமதி வாங்கிக் கொண்டு அவன் பள்ளிக்குச் சென்றும் பலனில்லை. அவன் பெயர் ஏற்கனவே பட்டியலிலிருந்து நீக்கப் பட்டிருந்தது. எல்லாம் பண்ணையாரின் ஏற்பாடு. அதற்குப் பின் முத்து மாட்டுத் தொழுவத்தில்... களத்துமேட்டில்...பண்ணையார் வீட்டில்... பம்பரமாகச் சுழன்று வேலை செய்தான். அப்படி இருந்தும் அரை வயிற்றுக் கஞ்சிக்கே ஆலாய்ப் பறக்க—வேண்டி இருந்தது. அவன் தந்தையும் காலமான பின்பு குடும்பக் கஷ்டம் என்றால் எப்படி இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டு, அதில் புதைந்து, மீண்டு வர இயலாமல் காலத்தை ஒட்டிக் கொண்டு இருக்கிறான் முத்து. திறமையாக இவனிடமிருந்து வேலை வாங்கிக்கொள்ளும் பண்ணையார் இவனுடைய வறுமையைப் பற்றி நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. பாஸ்கரோடுமுத்துவை அனுப்பி வைத்த பின் இன்னும் அலட்சியமாக நடக்கத் தொடங்கி விட்டார். வயதான கிழம் வாய் பேசவா போகிறது என்ற தைரியத்தில் மாதா மாதம் பேருக்கு ஏதோ கொஞ்சம் நெல்லை முத்துவின் தாயாருக்குக் கொடுப்பதோடு தம் கடமை முடிந்தது போல் கைகழுவிக் கொண்டார். முத்துவின் தாயோ அந்த நெல்லை வைத்துக் கொண்டு அரிசியாக்கவும் முடியாமல், அரைப் பட்டினி கிடக்கவும் முடியாமல் அனல் மேல் புழுவாகத் தவித்துப் போவாள். என்றாலும் பண்ணையார் குடும்பத்தின் மேல் ஏற்பட்டிருந்த பரம்பரை பக்தி, தனக்கு இழைக்கப்படும் பாவத்தையும் நற்பலனாக வரவேற்கும் பக்குவத்தை அவளிடம் வளர்த்து விட்டிருந்தது. டவுனில் மகன் ஏதோ மகாராஜா போல் வாழ்வதாக நினைத்துக் கொண்டு, மனம் நிறைந்து போய், தனது மனக் கவலைகளை மறந்து விட்டிருந்தாள் அவள். கடந்த மூன்று மாதங்களாக உடல்நிலை மோசமாகிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் கிழவி காசுக்காக மகனுக்குக் கடிதாசி எழுதிக்கொண்டிருந்தாள். கடைசியாக வந்த கடிதத்தில் கிழவியின் உடல்நிலை மிகவும் பாதிக்கப் பட்டிருப்பதாகவும், பணம் உடனடியாக

GOLDEN OPPORTUNITY

உத்திரவாத சிறந்த பயிற்சி ! மிகக் குறைந்த கட்டணம் !!

வகுப்புகள் ஆரம்பம்: 25-7-1981

1981-82-ம் வருட கீழ்க்கண்ட தேர்வுகளுக்கு தபால் மூலம் மாத மிருமுறை பாடங்கள் அனுப்பி உத்திரவாதத்துடன் பயிற்சியளிக்கப்படும். சென்னை — ரிஷிவந்தியத்தில் நேர்முக வகுப்புகளும் நடத்தப் படுகின்றன.

1. M.B.A, M.B.M, A.M.I.B.M, A.M.I.B.A, L.L.B, B.Ed., M. Ed & LAW DIPLOMA (பட்டதாரிகள் தகுதியுடையவர்கள்). 2. MYSORE M.A. B.A. & B.COM (தமிழ் — ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தகுதியுடையவர்கள்). 3. ANDHRA INTER, B.A. & B.COM (ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தகுதியுடையவர்கள்). 4. BHOPAL INTER & I.COM, HIGHER SECONDARY (8-ம் வகுப்பு, S.S.L.C. மெட்ரிக் தேறியவர்கள் / தவறியவர்கள் கலந்து கொள்ள தகுதியுடையவர்கள்). 5. COM-INTER, D.COM, B.COM, B.COM (Hons.), & M.COM (S.S.L.C, S.S.C, P.U.C, H.S.C தேறியவர்கள் / தவறியவர்கள் தகுதியுடையவர்கள்). 6. PERSONAL MANAGEMENT DEGREE (Any Degree Holders are eligible). 7. ANDHRA MATRICULATION, P.U.C., INTER. 8. E.S.L.C (8-ம் வகுப்பு). 9. விவசாயம். 10. கைத்தறி - நெசவு. 11. போஸ்ட்மேன் - போஸ்டல் கிளார்க். 12. SERVICE COMMISSION Oct. 81. 13. ACCOUNTANCY. 14. BASIC ENGLISH - PREMATRIC. 15. ALLOPATHY. 16. B.A, B.COM, M.A., & L.L.B (One sitting - Two sittings).

தமிழகத்தின் தனிப்பெரும் தபால் கல்வி ஸ்தாபனம் !

(RECOGNISED & AFFILIATED BY I.A.E., I.B.A.M. & Com UNIVERSITY)

பாடப்பயிற்சிக்கும் - வெற்றிக்கும் உத்தரவாதத்துடன் பயிற்சியளிக்கப்படும்

முழு விவரங்களுக்கு ரூ. 2/- M. O. மூலம் அனுப்பவும்

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

(Estd: 21 - 3 - 1952 Govt. Regd. No. 3072)

H. O.: ரிஷிவந்தியம் - PIN: 606 205 - தென்னாற்காடு மாவட்டம்

MADRAS REGIONAL OFFICE:

41, ARCOT ROAD, MADRAS - 600 024

கிளை ஸ்தாபனங்கள்: சென்னை, மலேசியா, சிலோன், தென்னாப்பிரிக்கா, இந்தோனேசியா, அந்தமான்.

URGENTLY WANTED

Clerks, Typists, Stenographers, Camp Clerk & Compositors- Apply with self addressed postage cover to Principal.

அனுப்பும்படியாகவும் அடுத்த வீட்டுக் காரர் அக்கறையோடு எழுதியிருந்தார். முத்து என்ன தான் செய்வான்! பாவம்! பாஸ்கரோ பண்ணையாருக்குப் பத்துப் படி மேலாக இருந்தான். குடிப்பதற்கும், பெண் களோடு கும்மாளம் போடுவதற்கும் செலவழிப்பதில் கால் பங்கைக் கூட முத்துவுக்கு அதுவும் கடனுகக்கூடத் தரமாட்டான். வீட்டுச் செலவுக்குக் கொடுக்கும் பணத்துக்குப் பைசா சுத்தமாகக் கணக்குக் கேட்பான். சாப்பாடு போட்டு மாசக் கடைசியில் அவன் முத்துவுக்குச் சம்பளம் என்னும் பெயரில் தரும் பணம் முத்துவுக்கு ஒரு காட்டன் சட்டை எடுத்துக் கொள்ளக்கூடக் காணுது. இத்தனைக்கும் பாஸ்கர் இல்லாத காரணங்களையெல்லாம் காட்டி வீட்டிலிருந்து பணம் வாங்குவான். அதுவுமில்லாமல், பக்கத்தில் பெண்கள் கல்லூரியில், ஹாஸ்டலில் தங்கிப் படிக்கும் பாஸ்கரின் மாமா பெண் வனிதா வேறு வாரத்துக்கு ஒரு முறை வந்து தன் அத்தானுக்காகக் கணிசமான தொகையை 'அழுது' விட்டுப் போவாள். மற்ற சமயங்களில் 'மைனர்' கணக்காக ஊர் சுற்றும் பாஸ்கர் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் படுயோக்கியனுக மாறி விடுவான். ஏனென்றுல் அது வனிதா வரும் நாளாயிற்றே! என்ன இருந்தாலும் அவள் வருங்கால மனைவி அல்லவா?

அன்று வெள்ளிக் கிழமை. அதிகாலையில் எழுந்து வழக்கம் போல் அருகிலிருக்கும் முருகன் கோயிலுக்குப் போய்விட்டு அறைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்போதுதான் முத்து கவனித்தான் — தூரத்தில் வனிதாவேகமாக வந்து கொண்டிருந்தாள். உடனே பாஸ்கரை எச்சரிக்க வேண்டும். அவன் வனிதா ஞாயிற்றுக் கிழமை தானே வரப்போகிறுள் என்ற நினைப்பில் சற்று எக்கச் சக்கமான நிலையில் இருந்துவிடக் கூடும். பரபரப்பாக பாஸ்கரை அழைத்தபடி உள்ளே நுழைந்த முத்து அவன் நினைத்ததைப் போல பாஸ்கர்.... சே! நல்ல நாளும் அதுவுமாய்... அந்தப் பெண் சட்டென்று பாஸ்கரை விட்டு விலகித் திருதிருவென்று விழித்தாள்! பாவம் வீடு பெருக்கி, பத்து பாத்திரம்

ஒப்போல்

கொஞ்ச நாட்களாக ஒதுங்கியிருந்த கே. எஸ். ஸேதுமாதவன் ஆர்ப்பாட்டம் ஏதும் இல்லாமல் நல்ல படத்துடன் மறுபடியும் முகம் காட்டுகிறுர். சின்னதாய் மூன்றே கேரக்டர்கள். அவை மூன்றுக்கும் இடையே உள்ள பாசப் பிணைப்பை விவரிப்பதுதான் கதை.

பருவத்தில் சுயம் இழந்து திருமணம் ஆகாமலே ஒரு குழந்தைக்குத் தாயான மாலு (மேனகா)வை, அவள் பெற்ற மகன் அப்புவே உண்மை தெரியாமல் அக்கா என்று அழைக்கிறுன். மாலுவை மாஜி பட்டாளக்காரன் கோவிந்தன் (பாலன் கே. நாயர்) மணந்து மலைநாட்டுக்கு அழைத்துப் போகிறுன். கூடவே அப்புவும் போகிறுன். சிக்கல் உருவாக, கட்டிய கணவனிடம் உண்மையைச் சொல்லிப் பிரியத் துணிகிறுள். அன்பு என்றுலே என்ன என்று தெரியாத கோவிந்தன் மனம் மாறி மாலுவை அப்புவுடன் ஏற்றுக் கொள்கிறுன்.

அப்புவாய் வரும் மாஸ்டர் அரவிந்த் நடிக்கவில்லை, அவன் செய்வதெல்லாம் இயல்பாய் இருக்கிறது. திருவிழாகாண முடியாமல் வாசலில் நின்று ஏக்கமாய்ப் பார்ப்பது, தன்னை அடித்த கோவிந்தனைக் 'கொல்லும்.. கொல்லும்' என்று பொருமுவது, ஏன், அவன் வந்து போகும் எல்லாக் காட்சிகளுமே மனத்தில் நிற்கிறது. நேஷனல் அவார்ட் கொடுத்தது தகும்.

புது மனைவியிடம் தனித்திருக்கத் தடையாக இருக்கும் அப்புவை அடிப்பது, அவனிடம் செல்லம் காட்டும் மாலுவைக் கோபிப்பது என்று பாலன் கே. நாயருக்கு நல்ல சந்தர்ப்பங்கள். சரியாகச் செய்திருப்பதால் இவருக்குச் சிறந்த நடிகர் என்ற பரிசு.

பின்னணி இசையில் புதிய முறைகளைக் கையாண்டிருக்கிறுர் எம். பி. ஸ்ரீனிவாசன்.

திரைக்கதை வசனம் எழுதிய எம். டி. வாசுதேவன் நாயரும், டைரக்ட் செய்த ஸேதுமாதவனும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். 80-ல் இந்தியாவில் இரண்டாவது சிறந்த படம் இது.

—'சிந்து-ஜீவா'

தேய்த்து விட்டுப் போகும் பெண்! பாஸ்கரின் பச்சை நோட்டுக்களுக்குப் பலியாகியிருப்பாள்! பாஸ்கர் காட்டுத்தனமாகக் கத்தினுன்.

''ஏண்டா அறிவு கெட்ட முண்டம்! சோறுதானே திங்கறே! கொஞ்சமாவது இங்கிதம் தெரியுதா? சரியான காட்டானு இருக்கியே.''

''என்னங்க பண்றது... வனிதா அம்மா வந்துக்கிட்டிருந்தாங்க... அதனுல....''

''என்னது! வனி....'' அதற்கு மேல் பயம் தொண்டையில் துணியை வைத்து அடைக்க அவசரமாகத் தன்னையும், உடைகளையும் சீர்படுத்திக் கொண்டு, பாஸ்கர் திரும்புவதற்குள் ''ஹாய் பாஸு'' என்று வாசலில் நின்ருள் வனிதா.

ஒரு கணம்... ஒரு கணம்தான் யோசித்தான் பாஸ்கர்! அடுத்த கணம் வேகமாகத் திரும்பி முத்துவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். எதிர்பாராத அந்தத் தாக்குதலால் நிலைகுலைந்து அறை மூலையில் விழுந்த முத்து எழுந்திருப்பதற்குள் ''வெட்கங் கெட்ட நாயே! வெளியே போயிட்டு வருவதற்குள்ளே... எந்தத்துணிச்சல்லேடா இதைச் செஞ்சே! உன்னைப் போய் யோக்கியன்னு நினைச்சேனடா! இது வெளியே தெரிஞ்சா யாருடைய மானம் போறது... நல்ல நாளும், அதுவுமாய்... சேச்சே! தகுந்த சமயத்திலே நான் வந்ததாலே ஆச்சு... இல்லேன்னு.....'' என்று முத்துவைப் பார்த்துச் சத்தம் போட்டான் பாஸ்கர். அப்போதுதான் வனிதாவைப் பார்த்தவன் போல்''என்ன வனிதா... இன்னிக்கு...'' என்று இழுத்தான்!

உள்ளே நடந்த ஆர்ப் பாட்டங்களைப் பார்த்துத் திகிலடைந்து போயிருந்த வனிதா ''என்ன ஆச்சுபாஸு''என்ருள் பயத்தோடு.

பாஸ்கர்ஏதோ ஒரு பாவ காரியத்தின்நடுவே பாதியில் புகுந்து அதைத் தடுத்துவிட்டவன் போல நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி, அரை குறை ஆங்கிலத்தில் முத்து அந்த வேலைக்காரப் பெண்ணிடம் தவ்ருக நடந்துகொள்ள முற்பட்டான் என்று கதை அளந்தான். இடையே அந்த வேலைக்காரப் பெண்ணைப் பார்த்துப் போகும்படி சைகை காட்டினுன். அவள் விட்டால் போதும் என்பவளைப் போல ஓடிப்போனுள்.

பாஸ்கர் சொல்லி முடித்ததும் முத்துவை மிகுந்த வெறுப்போடு பார்த்த வனிதா ''நெத்தியிலே பளிச்னு திருநீறை வைச்சுக்கிட்டு இப்படி பாவ காரியம் பண்ருன் ராஸ்கல் — முதல்லே அவனைத்துரத்தியடியுங்க சொல்றேன்'' என்று வெடித்தாள்.

முத்து பாஸ்கர் சொல்லும் வரை காத்திருக்காமல் மெல்ல நகர்ந்தான். ''ஊருக்கு வரச் சொல்லி அப்பா திடீர்னு லெட்டர் போட்டிருக்காரு. அதைச் சொல்லிட்டுப் போகலாம்னு இங்க வந்தா இப்படியொரு கூத்து நடந்துகிட்டு இருக்கு'' என்ற வனிதா தன் சேலைத் தலைப்பால் பாஸ்கரின் முகத்தைத் துடைத்து விடுவதைத் துயரச் சுமையோடு பார்த்தபடி வாசலைக் கடந்தான் முத்து.

வனிதாவை அனுப்பிவிட்டு வெளியே நின்றிருந்த முத்துவைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு உள்ளேவந்த பாஸ்கரன் பாக்கெட்டிலிருந்து கத்தையாகப் பணத்தை எடுத்து அவன் கையில் வைத்தான். ''ஸாரிடா முத்து! வனிதா கிட்ட இருந்து தப்பிக்க எனக்கு வேற வழியே தெரியலே.''

முத்து அவனையும், அவன் கொடுத்த பணத்தையும் மாறி மாறிப் பார்த்தான். காலில் விழாத குறையாக அவன் கெஞ்சியபோது கிடைக்காத பணம் இப்போது பாஸ்கரைக் காட்டிக் கொடுக்காமல் இருப்பதற்கு 'லஞ்சமாக'க் கிடைக்கிறது. விரக்தியாகச் சிரித்த முத்து தன் கையிலிருந்த தந்தியைப் பாஸ்கரிடம் நீட்டினுன். அதை வாங்கிப் படித்துவிட்டுப் போலியான பரிதாபத்தோடு சூள் கொட்டினுன் பாஸ்கர்.

''உங்கம்மா காலமாயிட்டாங்களாமே? பாவம் இதையும் வச்சுக்கோ'' என்றபடி மேலும் சிலகரன்ஸி நோட்டுக்களை முத்துவின் கையில் வைத்தான். முத்து இப்போதும் வடித்த சிலை போல் நின்று பாஸ்கரைப் பார்வையால் வகிர்ந்து கொண்டிருந்தான்.

''அம்மாவைப் பிழைக்க வைக்க ஒரு பைசாக் கூடத் தராதவன் இப்போது அவளை அடக்கம் செய்ய அள்ளிக் கொடுக்கிருன். எதனுல்? அவனுடைய அயோக்கியத்தனத்துக்கு ஆதரவு காட்டியதால்! அடப் பாவிகளே! அலட்சியப்படுத்தி, அநியாயமாய் ஓர் உயிரைக் குடித்துவிட்டு அதற்கு அலங்காரப் பந்தல் போடும் ஆணவக்காரர்களே! நீங்கள் எல்லாம் தேவாரம் பாடிக் கொண்டே தெய்வச்சிலைகளைக் கடத்துபவர்கள்! அஹிம்சையை உபதேசித்துக்கொண்டே உயிர்வதை செய்யும் உன்மத்தர்கள்! கையை வெட்டி விட்டு வளையல் போட வரும் வக்ர புத்திக்காரர்கள்!... என்றெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்த முத்து சற்றும் எதிர்பாராத விதமாக பாஸ்கரின் முகத்தில் காரித் துப்பினுன். கையில் இருந்த கரன்சிகளை அவன் முகத்தில் விட்டெறிந்தான். ''தூ! நீயும் ஒரு மனுஷனுய்யா! எங்கம்மாவோட பொணம் அழுகி நாறினுக்கூட உன் அசிங்கம் புடிச்ச காசை வைச்சு அதை அடக்கம் பண்ண மாட்டேன்யா... நீயுமாச்சு உன் வேலையுமாச்சு...'' என்று வேதனையோடு ஓலமிட்டபடி தெருவில் இறங்கினுன் முத்து. வதை பட்ட உயிர் போல இதயம் துடிக்க அவன் எறிந்துவிட்டுப் போன பின்பும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் முகத்தைத் துடைத்துக்கொண்ட பாஸ்கர், ''முத்து என் கைக் கடிகாரத்தைக் கிளப்பிக் கொண்டு கம்பி நீட்டிவிட்டான்'' என்று தன் தந்தைக்குக் கடிதம் எழுத மேஜையின் முன் அமர்ந்தான்!

காதலி : உங்களுக்கு வீணை மீட்டத் தெரியுமா?

காதலன் : எந்த சேட் கடையிலே வைச்சிருக்கேன்னு சொல்லு! எவ்வளவு பணமானுலும் கொடுத்து மீட்டுத்தரேன்!

''பானுமதி''

புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம்...
உறுதிமிக்க, ஆரோக்கியமான பற்கள்

அளித்திடுதே கோல்கேட் டென்டல் க்ரீம்

ஒவ்வொரு சாப்பாட்டிற்குப் பிறகும் கோல்கேட் கொண்டு உங்கள் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். உலகெங்கும் பல் டாக்டர்கள் சிபாரிசு செய்வதைப் போலவே அது உங்களைப் பாதுகாக்கிறது.

உங்கள் பற்களுக்கிடையே தங்கியுள்ள உணவுத் துணுக்குகளில் பாக்டீரியாக்கள் வளர்கின்றன. இவை வாய் துர்நாற்றத்தையும், பிறகு வலிமிக்க பற்சிதைவையும் உண்டாக்கும்.

எனவே சாப்பிட்டு முடித்தவுடனேயே கோல்கேட் முறையில் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். அது புத்துணர்ச்சியுடன் இனிய சுவாசத்தைத் தருவதற்கும், பற்களுக்கு வெண்மையளிப்பதற்கும், பற்சிதைவை எதிர்ப்பதற்கும் மிகவும் சக்தி வாய்ந்தது என்று நிரூபணமாகியுள்ளது.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும், பெப்பர்மின்ட் சுவை பல்துலக்குவதை ஒரு இன்ப அனுபவமாக்குகிறது.

நம்பகமான, கோல்கேட்டின் செயல் புரியும் முறை

உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.

கோல்கேட்டின் ஒப்பற்ற, செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச் சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றி விடுகிறது.

பயன் : கவர்ச்சிமிக்க வெண்மையான பற்கள், தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கெதிராகப் பாதுகாப்பு.

கோல்கேட் டென்டல் க்ரீம்
உபயோகித்து வாய்துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்

DC-G-74 TM

3

கண்ணின் இமைகள் மேல் ஏதோ பாரமாய் அமர்ந்திருந்தன. இமைகள் சுயமாய் மேலே எழும்பு

அந்தி நேரத்து உதயங்கள்

வாஸந்தி

வது அசாத்திய காரியமாகப் பட்டது. கையினுல் பாரத்தை அகற்றலாம் — முடிய வில்லை. கைகளின் மேலும் ஏதோ அமர்ந்திருந்தது. ஓ, உடம்பின் ஒவ்வொரு அணுவும் அல்லவா ஏதோ பாரத்தின் அடியில் சிக்கிக் கொண்டிருக்கிறது!

நெற்றிப் பொட்டிலிருந்து பின் மண்டை வரை பல ரத்த நாளங்கள் சுரீரென்று வலித் தன. மிக மிகப் பிரயாசைப்பட்டு ஹரி கண்களைத் திறந்தான். புருவங்களிலிருந்து ரணமாய் வலித்தது.

என்ன ஆகிவிட்டது நமக்கு? அவனுக்குச் சுற்றுப்புறம் பழக்கமாகச் சிறிது விநாடிகள் பிடித்தன.

எங்கே வந்திருக்கிறோம்?

மெல்ல மெல்ல அறிவு இயங்க ஆரம் பித்தது. அவன் படுத்திருந்த கட்டில் ஒரு மூலைச் சதுரத்தில் இருந்தது. தனி அறை மாதிரி ஒரு பிரமையை ஒரு துணி ஸ்க்ரீன் ஏற்படுத்திற்று. பக்கத்திலிருந்த இடை வெளியில் வேறு கட்டில்கள் இருப்பது தெரிந்தது. ஓ, இது ஒரு ஆஸ்பத்திரியா?

கமானி ஆடிட்டோரியத்துக்கு விரை கையில் நமக்கு ஏதோ ஏற்பட்டிருக்க வேண் டும். நேற்று இன்று?

சட்டென்று அவனுக்கு மாயாவின் நினைவு வந்தது. மாயா காத்திருப்பாளே, அவளுக் குத் தகவல் தெரிவிக்க வேண்டுமே?

அவன் தலையைத் தூக்கப் பார்த்தான். தசைகளை லேசாக அசைக்கக் கூட முடிய வில்லை. அவனுக்குத் திகைப்பேற்பட்டது.

என்ன ஆகிவிட்டது நமக்கு? எங்கெங்கோ குரல்கள் கேட்டன. விசுக் விசுக்கென்று ஃபினைலினுல் தரையைத் துடைக்கும் ஓசை, வேக மாக நடக்கும் பூட்ஸ், ஷூ ஒலிகள்... ஹிந்தியிலும் ஆங் கிலத்திலுமாகக் குரல்கள். ஆனுல் ஒரு ஈ காக்காய் உள்ளே நுழைய வில்லை.

அவனுக்கு ஆத்திரமும் அசதியுமாக ஏற்பட்டது.

எந்த இடத்தில் வந்து மாட்டிக் கொண்டு விட்டோம்?

ஸ்க்ரீன் இடைவெளி வழியாகச் சில கட்டில் கால்கள் தெரிந்தன. மேலே ஃபான் லேசாகச் சுற்றிக் கொண்டிருந்தது. உயர மான ஜன்னல்களிலிருந்து பளீரென்று வெய்யில் உள்ளே நுழைந்து சிமெண்ட் தரையில் சதுரம் சதுரமாக அமர்ந்திருந்தது. காலை யின் ஆரம்ப நேரம் இது என்று ஊகித்துக் கொண்டான்.

என்ன ஆஸ்பத்திரி இது? ஒரு நர்ஸ், ஒரு ஆயா இங்கு கிடையாதா?

அடிபட்டு அங்கு படுத்திருக்கும் நிலையை விட யாரும் பக்கத்தில் இல்லாமல் அனுதர வாகக் கிடப்பதுதான் அவனை அதிகம் பாதித்தது. மாயா வுக்குச்சொல்லி அனுப்பி ணுல் பறந்தடித்துக் கொண்டு வரமாட் டாளா? துடித் துப் போய் இங் கேயே அமர்ந் திருக்க மாட் டாளா?

அவனுக்குத் தாகமெடுத்தது. யார் இருக் கிருர்கள் அரு கில் கூப்பிட்ட வுடன் ஓடிவர?

அவன் 'நர்ஸ்!' என்று கத்தி ணுன். கத்து வதாக நினைத் துக் கொண் டான். குரலே எழும்பி ஒலிக்கா ததுதிகைப்பைத் தந்தது. என்ன ஆகிவிட்டது நமக்கு? பேசும் சக்தி போய் விட்டதோஎன்று ஒரு விநாடி அவ னுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அவன் தன் பலம் கொண்ட மட்டும் 'நர்ஸ்' என்று கத்திணுன். குரல் வந்தது லேசாக. ஆனுல் மார்புக்கூட்டைப் பிளந்து கொண்டு வந்த மாதிரி மாரெல்லாம் வலித்தது. அசந்து கண்களில் நீர்கட்டி நின்றது.

ஓ, இந்த மாதிரி ஒரு இக் கட்டில் யாராவது நமக்குத் துணை வேணும். ஆதரவாகப் பேசும் வார்த்தைகள் வேண்டும். கனிவுடன் பார்க்கும் பார்வைகள் வேணும். உடனடியாக மாயாவுக்குச் சொல்லி அனுப்ப வேண்டும்.

மாயாவைத் தவிர அந்தரங்கமானவர்கள் யார் இருக்கிருர்கள்? பெற்றவர்கள் இல்லை. கூடப் பிறந்தவர்களும் இல்லை.

பனியில் மலர்ந்த பூக்கள்

(மஞ்ஞில் விரிஞ்ஞு பூக்கள் - மலையாளம்)

● கோடீஸ்வரன் பணிக்கரின் மகள் பிரபாவைப் பார்த்ததும் காதல் பிறந்து விடுகிறது என்ஜினீயர் பிரேம் கிருஷ்ணனுக்கு (சங்கர்). எத்தனை முயன்றும் இணங்காதவளிடம், ''ப்ளீஸ் ப்ரபே, என்னே ஒன்னு இஷ்டப்படான் ஷ்ரமிக்கூ... ப்ரபே'' என்று மன்றாடுகிறான். பின் பிரபா (பூர்ணிமா ஜெயராம்) மெல்ல சம்மதிக்கிறாள். இடைவேளை வரை ஆடியும் பாடியும் களிக்கிறார்கள்.

'இதோ நான்...' என்று திடீர் விஜயம் செய்கிறான் வில்லன் நரேந்திரன். 'நான்தான் பிரபாவின் மாஜிக் கணவன்' என்று சொல்லி இடையில் புக, அது உண்மைதான் என்று பிரபாவும் ஒப்புக்கொள்கிறாள். தன்னிடம் உண்மையை மறைத்ததற்காக அழுது, கோபித்துப் பிரிகிறான் பிரேம். ட்ரான்ஸ்ஃபர் வாங்கி ஊரை விட்டுச் செல்லும் முன் பிரபாவைப் பார்க்கையில் உண்மை எல்லாம் சொல்லிப் பிரேமைச் சமாதானப்படுத்துகிறாள். காதல் கிளிகள் பறந்துவிடும் முன், பெண் கிளியைக் கழுத்தை நெரித்து நரேந்திரன் கொலை செய்கிறான். வில்லனைத் துரத்திச் சாகடித்து பிரேம் மலைஉச்சியிலிருந்து 'சூசைட் பாயிண்'டில் விழுந்து மரிக்கிறான்.

மாநில விருதுகிடைத்திருக்கிறது பூர்ணிமா ஜெயராமிற்கு. — சிறந்த நடிகை. அவருடைய நளின நயன பாவங்கள் இன்னும் கண்ணில் இருக்கின்றன. நரேந்திரனாய் வரும் மோகன்லால் ஒரு சாடிஸ்ட்டாய் பிரமாதப்படுத்தியிருக்கிறார். சங்கர், 'பரவாயில்லை. அழும் போதுதான்... சரி வேண்டாம்.

ஜெரி அமல்தேவின் ட்யூன்கள் மூன்றும் அருமையானவை. எப்பவும் போலவே சிறப்பாய் கொடைக்கானல் அவுட்டோரில் அசத்தி இருக்கிறார் அசோக்குமார்.

படம், பெயரைப் போலவே குளுமையாய் இதமாய் இருக்கிறது.

மலையாள 'ஒருதலை ராகம்'.

—சிந்து-ஜீவா

''நர்ஸ்!''

''ஹல்லோ! குட்மார்னிங்!''

அவன் சட்டென்று பார்வையைத் திருப்பினான். பக்கத்தில் ஒரு நர்ஸ் நின்றிருந்தாள், பளிச்சென்று சிரித்துக் கொண்டு, கண்களில் கனிவைத் தேக்கிக் கொண்டு.

''எப்படி இருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் ஹிந்தியில்.

''மிக மோசமாக இருக்கிறேன்!''

அவள் மென்மையாகச் சிரித்தாள். அவனைக் கூர்ந்து பார்த்தபடி கட்டில் கால்புறம் இருந்த அவனைப் பற்றின குறிப்புகள் கொண்ட அட்டையைப் பார்த்தாள். மிக லேசான யோசனைக் கோடுகள் அவள் நெற்றியில் தோன்றி மறைவதை அவன் கவனித்தான். அவள் அடுத்த விநாடி அவனைப் பார்த்துப் பளிச்சென்று சிரித்தாள்.

எத்தனை அழகாக இருக்கிறாள்!

''எப்பொழுது விழித்துக் கொண்டீர்கள் மிஸ்டர் ஹரி?''

''இப்பொழுதுதான். எப்படித் தெரியும் என் பெயர்?''

''அதான் உங்கள் ஜாதகமே இந்த ஷீட்டில் இருக்கிறதே!''

''என் பெயர் எப்படித் தெரிந்தது?'' என்றான் மறுபடியும்.

''உங்கள் பர்ஸில் விசிட்டிங் கார்டு இருந்தது. அதைப் பார்த்து உங்கள் கம்பெனிக்குப் போன் செய்தார்கள். அதற்குள் எல்லோரும் வீட்டுக்குப் போயிருந்தார்கள். நேற்றுதான் காலை மறுபடியும் தொடர்பு கொள்ள முடிந்தது.''

அவன் வியப்புடன் அவளைப் பார்த்தான்.

''முந்தாநாளா எனக்கு அடிபட்டது?''

''ஆமாம்.''

''ஓ, காட்! இப்பொழுதுதான் எனக்குப் பிரக்ஞை ஏற்பட்டிருக்கிறதா?''

''ஆமாம்.''

அவள் ஒரு குழந்தையிடம் பேசுகிற மாதிரி தர்மா மீட்டரை நீட்டியபடி,

''எங்கே இதை வாயில் வைத்துக்கொள்ளுங்கள். பார்க்கலாம்'' என்றாள். பலவித கேள்விகள் மண்டையில் எழ தர்மா மீட்டரை வாயில் திணித்துக் கொண்டான். லேசாக டெட்டால் வாசனை அடித்தது. நர்ஸ் அவனுடைய நாடியைப் பிடித்தபடி தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு நின்றாள். புன்னகையுடன் அவன் வாயிலிருந்து தர்மா மீட்டரை எடுத்தாள்.

''இருக்கிறதா?'' என்று கேட்டான் அவன்.

''எது?''

''ஜுரம்?''

''ஆமாம். 101!''

''எப்பொழுது சரியாகும்?''

அவள் குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள். பிறகு அட்டையில் குறித்துக் கொண்டே நிதானமாகச் சொன்னாள்:

''ஜுரம் சீக்கிரம் சரியாகிவிடும்.''

''எனக்கு என்ன ஆகியிருக்கிறது நர்ஸ்? தலையில் ஏதும் கட்டு இல்லையே?''

''தலையில் இல்லை. ஹெல்மெட்டினால் தப்பியது தலை.''

''பின்னே எங்கே? அடி?''

''இடுப்பில், காலில் பிளாஸ்டர் போட்டிருப்பது தெரியவில்லை?''

''ஊஹூம். உங்கள் முகம்தான் தெரிகிறது. கண்ணை வேறு எங்கும் சுழற்ற முடியவில்லை. முகம் மட்டும்தான் எனக்குச் சொந்தம் போல் இருக்கிறது!''

அவள் கனிவுடன் தன் கைகளால் அவன் கைகளைத் தட்டினாள்.

''கொஞ்ச நாட்களில் சரியாகிப் போய் விடும். எங்கே அத்தனை தலை போகிற அவசரத்தில் ஸ்கூட்டரை ஓட்டினீர்கள்?''

''நான் அவசரமாகத்தான் போய்க் கொண்டிருந்தேன். ஆனால் என்மேல் நிச்சயம் தப்பில்லை. டிராஃபிக் ஸிக்னல் கலைந்ததும் கிளம்பினேன். பின்னாலிருந்து ஏதோ வந்து மோதிற்று.''

அவள் அலுவல்களைத் தொடங்கியபடி மெல்லக் கேட்டாள்.

''எங்கே போய்க் கொண்டிருந்தீர்கள்?''

அவன் விவரத்தைச் சொன்னான்.

''ஓ! அந்தப் பெண் நேற்று வந்தாள்.''

அவன் கண்களில் சட்டென்று ஒரு பிரகாசம் தென்பட்டது.

''வந்திருந்தாளா? என்ன சொன்னாள்?''

''என்னுடன் பேசவில்லை. யாருடனோ வந்திருந்தாள். ரொம்பக் கலங்கிப் போயிருந்தாள்.''

அவன் ஒன்றும் சொல்லாமல் ஒரு லேசான திருப்தியுடன் கண்களை மூடிக் கொண்டான்.

''கர்ல் ஃப்ரண்டா?''

''ஆமாம்.''

''என்ன பெயர்?''

''மாயா.''

அவள் மௌனமாக வாயைக் கொப்பளிக்க உதவி முகத்தைத் துடைத்தாள்.

தனக்குத் தெரிந்தவர்களைப் பார்க்க வேண்டும் என்கிற தாபம் அவனுள் வெகு தீவிரமாக எழுந்தது.

''விஸிட்டர்ஸ் நேரம் எப்பொழுது நர்ஸ்?''

இவன்: ''பிரின்சிபாலும் எங்க அப்பாவும் உயிர் - நண்பர்கள். அப்புறம் பிரின்சிபால் சம்சாரமும் எங்க அம்மாவும் அப்படியே! அதே மாதிரி பிரின்சிபால் மகனும் நானும் திக்கெஸ்ட் பிரண்ட்ஸ்...''

அவன்: ''அப்படி இருந்துமா உனக்கு அட்மிஷன் கிடைக்கலை?''

இவன்: ''என்ன பண்றது? பிரின்சிபாலோட கார் - டிரைவரும், எங்க கார் - டிரைவரும் ஜன்ம - விரோதிகளாச்சே!''

— பெ. கலாசாமி

''பத்திலிருந்து பதினொன்று வரை. பிறகு மாலையில் ஐந்திலிருந்து ஆறு. சற்று நேரத்தில் டாக்டர்கள் ரவுண்டுக்கு வருவார்கள். விஸிட்டர்ஸ் உங்களைப் பார்க்க வரலாமா என்று அவர் தீர்மானிப்பார்.''

''ஓ காட்! என்னை யாரும் பார்க்கக் கூடாது என்றால் பைத்தியம் பிடித்துவிடும் எனக்கு.''

''இப்பொழுது நீங்கள் அலட்டாமல் இருப்பது ரொம்ப அவசியம் மிஸ்டர் ஹரி.''

''உங்கள் பெயர் என்ன நர்ஸ்?''

''சாந்தி.''

ரொம்பப் பொருத்தமான பெயர் என்று அவன் தனக்குள் நினைத்துக் கொண்டான்.

''எனக்குத் தாகமாயிருக்கிறது.''

''இப்பொழுது டீ வரும்.''

''முதலில் எனக்குத் தண்ணீர் வேண்டும்.''

அவள், அவன் படுத்த நிலையிலேயே வாயில் நீரை நிதானமாக ஊற்றினாள். இயல்பாகவே சீராக வளைந்திருந்த புருவங்களுக்கு நடுவில் வட்டமாகக் குங்குமம் தெரிந்தது.

''நர்ஸ், நான் பிழைப்பேனா?''

அவள் அதரங்களில் புன்னகை அரும்பிற்று. ''பிழைத்திருக்கிறீர்களே?''

''இன்னும் எத்தனை நாளைக்கு?''

''இன்னும் பல வருஷங்களுக்கு. மிஸ்டர் ஹரி, தன்னம்பிக்கை என்பது ரொம்ப முக்கியம்.''

மனிதன் இறைவன் அருளிய சில உரிமைகளோடு பிறக்கிறான். அரசு என்பது மக்கள் தமது வசதிக்காக உருவாக்கி நடத்திக் கொள்வதுதான்; மக்கள் தாமாக அதற்குக் கொடுக்காத அதிகாரம் எதுவும் அரசுக்கு இல்லை. அந்த உண்மையை ஒருபோதும் மறக்கக் கூடாது.

ரேகென் — சுதந்திரதினச் செய்தியிலிருந்து
ஜூலை 4 1981

''இப்பொழுது என் கண்களை மூட்டும் தான் சுழற்ற முடிகிறது.''

அவள் சிரித்தாள்.

''பின்னே? முந்தாநாள் பஸ்ஸுக்கு அடியில் மாட்டிக் கொண்டு இன்றைக்கு ராக் அண்ட் ரோல் ஆடுவீர்களா? சற்று நேரம் எந்த வித யோசனையும் இல்லாமல் படுத்திருங்கள். நான் மற்ற பேஷண்டுகளைப்பார்க்க வேண்டும்.''

எந்தவித யோசனையும் இல்லாமல் படுத்திருக்க முடியவில்லை. எந்த அளவுக்கு உடம்பு சேதமாகியிருக்கிறது என்று புரியாத நிலையில் மனசில் கலவரம் ஏற்பட்டது. அந்த நர்ஸ் ரொம்ப மேலெழுந்தவாரியாகப் பேசி மழுப்புகிறாள் என்று தோன்றிற்று. ஆனால் எத்தனை இதமாகச் சிரிக்கிறாள்!

மாயா எப்பொழுது வருவாள்? தனக்கு இந்த மாதிரி ஆனதும் அவள் எத்தனை பதைத்துப் போயிருப்பாள் என்று நினைக்கையில் வேதனையாக இருந்தது.

டாக்டர் வந்தார்.

''எப்படி இருக்கிறீர்கள் மிஸ்டர் ஹரி?''

''எப்படி இருக்கிறேன்? நீங்கள்தான் சொல்ல வேண்டும்'' என்றான்.

''ரொம்ப நன்றாக இருக்கிறீர்கள் என்று சொல்ல மாட்டேன். ஆனால் பிழைத்து விட்டீர்கள்என்பது ஆச்சரியமான விஷயம்.''

''என்னுடைய உறுப்புக்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கா?''

''இருக்கிறது.''

அவர் அவனுடைய உள்ளங்காலைத் தம்முடைய பேனாவினால் வருடினார். அவன் சொரணை இல்லாமல் இருந்தான்.

''ஆனால்இருக்கவேண்டிய மாதிரி இல்லை.''

''ஃபிராக்சர் ஆகியிருக்கிறதா?''

''மல்டிபில் ஃபிராக்சர். இதைப் பற்றியெல்லாம் யோசனை பண்ணிக் கொண்டிருக்காதீர்கள். யூ ஜஸ்ட் ரிலாக்ஸ்.''

அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''ரிலாக்ஸ் செய்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும் இப்பொழுது எனக்கு?''

டாக்டர்கனிவுடன்பார்த்தார். ''மனத்தை இப்பொழுது தளர்த்தி வைத்துக் கொள்ள வேண்டியது மிக அவசியம். சும்மா படுத்திருந்தால் போதாது.''

''இன்னும் எத்தனை நாட்கள் நான் படுத்திருக்க வேண்டும்?''

டாக்டர் சங்கடத்துடன் சிரித்தார்.

''இத்தனை ஃபிராக்சர்களுடன் வந்துவிட்டு அவசரப்பட்டால் முடியுமா? கண்ணை மூடிக்கொண்டு விபத்தில் மாட்டிக் கொண்டு விட்டீர்கள். கண்ணை மூடிக் கொண்டு சில மாசங்கள் படுத்திருங்கள்!''

அவன் தூக்கி வாரிப்போட்டு அவரைப் பார்த்தான்.

அவர் சிரித்தார்.

''டோன்ட் ஒர்ரி. சரியாகி விடுவீர்கள். உங்களுக்கு இப்பொழுது ரெஸ்ட் மிக முக்கியம்.''

அவன் ஏதோ கேட்க வாயைத் திறந்தான்.

அதற்குள் அவர் வேறு நோயாளியைப் பார்க்கச் சென்று விட்டார்.

சில மாசங்கள்!

டாக்டர் கேலிக்குச் சொல்லி யிருப்பாரா? இதெல்லாம் கேலி செய்யக் கூடிய விஷயங்களா? மனசு விவரங்களை அறியத் துடித்தது. ஆனால் உடம்பு அசத்தலில் கண்கள் அடிக்கடி மூடிக்கொண்டன. அது தூக்கமா மயக்கமா என்று புரியாதநிலையில் இருந்தான். மாலையில் முழுவதும் விழிப்பேற்பட்டு, சாந்தியை விசாரித்ததில் பார்வை யாளர் நேரத்துக்கு இன்னும் அரை மணிநேரம்தான் இருக்கிறது என்று புரிந்தது. மனசு ஒரு எதிர்பார்ப்புடன் நிமிர்ந்து நின்றது.

''நான் வீட்டுக்குப் போகிறேன் மிஸ்டர் ஹரி. வேறு நர்ஸ் வருவாள். மாயா வந்தால் உங்களை நிதானப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்று சாந்தி சிரித்தபடி சொல்லிவிட்டுப் போகையில் மனசில் லேசாக உல்லாசம் படர்ந்தது.

மாயா வந்தாள் தென்றல் மாதிரி. கண்கள் அகன்று பார்வையில் அதிர்ச்சியைத் தேக்கி.

குபீரென்று அவனுள் ஒரு பிரவாகம் கிளம்பிற்று. அவனுடைய மாயா.... இன்னும் சில மாதங்களில் வாழ்க்கைத் துணைவியாகப் போகும் மாயா—

அவன் சிரித்தான். ஜோக் அடிக்கப் பார்த்தான். ஆங்கிலத்தில்.

''எனக்கு ஒன்றும் இல்லை மாயா. சரியாகி விடுவேன். தற்சமயம் உன்னை என்னால் மடியில் உட்கார்த்திக் கொண்டு கொஞ்ச முடியாது. அவ்வளவு தான்!''

அவள் அதிர்ந்து போனவள் போல் அவனைப் பார்த்துவிட்டுப் பிறகு பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''டாக்டரோடு பேசிவிட்டுத்தான் வரேன் ஹரி!''

அவள் குரல் என்னவோ மாதிரி தொனித்தது. பார்வை அவன் மேல் நில்லாமல் நழுவிற்று.

''என்ன சொல்றார்?''

''உனக்கு இனிமேல் இடுப்புக்குக் கீழே சுவாதீனமிருக்காதாம்!''

(தொடரும்)

புலி

அன்பே!
எரிமலை போல்
உணர்ச்சிகளை
நீ
வைத்திருந்தும்
வெட்கப் போர்வையைப்
போர்த்தியிருக்கிறாயே!
நீ
பசுத்தோல்
போர்த்த
புலி!

- ஸ்ரீ. ஸ்ரீதரன்

பிலிப்ஸ்

ரூ 1,650*

இப்போது பிலிப்ஸ் வழங்குது ஒருங்கிணைந்த சர்க்யூட்! அது அளவில் சிறிது, ஆற்றலில் பெரிது; அதிக தெளிவான ஒலி.

பிலிப்ஸ், எலக்ட்ரானிக் உலகில் வழங்கிடும் புதிய விந்தை: ஒருங்கிணைந்த சர்க்யூட்— மிகத் தெள்ளத் தெளிவான ஒலி வழங்குது—மொத்தத்தில் நம்பகமானது பல்லாண்டுகளுக்கு.

அத்துடன், புதிய பிலிப்ஸ் பவர்-காம்பாக்ட், விரிவான ஃப்ரீக்வன்சி ரேஞ்ச். எனவே, ஒலிப்பதிவை மீண்டும் அப்படியே கேட்கலாம்—அதன் வாட்டேஜ் வரிசையில்.

சிறப்பம்சங்கள்:

- விரிவான ஒலி முழக்கத்திற்கான 18 வாட்டுக்கள்
- 2 மைக்ரோ குரூவ் ஸ்டைலீ.
- டேப் ரிக்கார்டர்/ரேடியோவிற்கு தனித்தனியே ஆம்ப்ளிஃபையரை இயக்க முடியும்.
- ரிக்கார்டு முடிந்ததும் தானே நிறுத்திக் கொள்ளும் அமைப்பு.

உங்கள் பிலிப்ஸ் டீலரிடம் இலவச செயல்முறை விளக்கம் பெறலாம்.

OBM-6745 TM

* எக்சைஸ் தீர்வை உள்பட அதிகபட்ச சில்லறை விலை. மாநில விற்பனைவரி மற்றும் இதர உள்ளூர் வரிகள் தனி

புதிய பிலிப்ஸ் பவர்–காம்பாக்ட் ஸ்டீரியோ ஸிஸ்டம் ஏ எஃப் 582

PHILIPS

பைகோ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ் லி.

4

பஸ் ஸ்டாப்பில் எக்கச்சக்கமான கூட்டம் இருந்தது. சாந்தி க்யூவில் நின்று கொண்டாள். தினம் தினம் இங்கு சந்திக்கும் பரிச்சயமான முகங்கள் தெரிந்தன. காலையில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் அவசரமும் துடிப்பும் இப்பொழுது யாரிடமும் இல்லை. ஒரு சோர்வு கலந்த நிதானம் தெரிந்தது. ஆனால் இவர்களது சோர்விலும் நிதானத்திலும் ஒரு எதிர்பார்ப்பு அல்லது ஒரு எதிர்நோக்கு இருக்கும் என்று அவள் நினைத்துக் கொண்டாள். இவர்களது வரவுக்காகக் கரிசனத்துடன் வீட்டில் காத்திருக்க மனிதர்கள் இருப்பார்கள். இவர்களது சோர்வைப் புரிந்துகொண்டு இதமாக இரண்டு வார்த்தைகளைப் பேசும் மனிதர்கள்....

இரண்டு பஸ்கள் வந்து நின்று நிரப்பிக் கொண்டு போயின. க்யூ நகர்ந்து அவள் முன்னால் நகர்ந்தாள். வீட்டுக்குப் போகும் நினைப்பே அலுப்பைத் தந்தது. பேசாமல் இருபத்தி நான்கு மணி நேரமும் இந்த ஆஸ்பத்திரியிலேயே இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று தோன்றிற்று. எப்படி இந்த ஆஸ்பத்திரிக் கேட்டைத் தாண்டியதுமே ஒரு முகமூடியைக் கழற்றி வைத்த மாதிரி நம் உற்சாகமெல்லாம் மறைந்துபோகிறது என்று அவளுக்கு ஆச்சரியமேற்பட்டது.

''வேஷம் போடறே பெரிய நடிகை நீ! சினிமாவிலே சேர்ந்தியானா ரெண்டு காசு கூடவரும்!''

நிஜம்தானா? வேஷம்தான் போடுகிறோமா? ஆனால் அவர் எதிரில் மாத்திரம் நம் சிரிப்பு எப்படி மறைந்து போகிறது? மனசு விறைத்துப் போகிறது. அவர்தான் இயல்பாக இல்லை என்று அதற்கு அர்த்தமில்லையா? அவருடைய சுபாவம்தான் நம்மை அப்படி மாற்றுகிறது என்று அர்த்தமில்லையா?

பஸ் ஸ்டாப்பைத் தாண்டிக் கொண்டு ஒரு ஃபியட் போயிற்று. அதில் அந்தப் பெண் மாயா உட்கார்ந்திருந்தாள். சாந்திக்கு அடிவயிற்றைக் கலக்கிக்கொண்டு ஓர் அனுதாபம் எழுந்தது. இந்தப் பெண்ணின் மேல் ஹரிக்கு இருக்கும் பிரியம், மாயா என்கிற பெயரைச் சொன்னதுமே கண்களில் எப்படி ஜொலித்தது! அவனுடைய முகத்தில் அறிவின் தீட்சண்யம் தெரிந்தது. பார்வையில் ஒரு கனிவு தெரிந்தது. அவன் பிரியத்தைப் பரிபூர்ணமாகச் செலுத்தத் தெரிந்தவன். இந்த மாயா ரொம்ப அதிர்ஷ்டம் செய்தவளாக இருக்க வேண்டும். அவனுடைய தற்போதைய உண்மை நிலை தெரிந்தால் அவளுக்கு எப்படி இருக்கும்?

இன்றைக்கு மதியம் அவனுடைய நிலையைப் பற்றி ஆர்த்தோபீடிஸ்ட் டாக்டர் கிஷோர் தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொன்னபோது அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. முதுகெலும்பும், கால், இடுப்பு, தசை நரம்புகளும் பெரிதும் சேதமடைந்திருப்பதால் அவன் மறுபடி நடப்பதென்பது அசாத்தியமான காரியமாக இருக்கும் என்றார். அன்று காலை அவனுக்கு இடுப்புக்குக் கீழ் சுரணை இல்லையோ என்று அவளே அனுமானித்தாள். மார்பிலிருந்து கணுக்கால் வரை பிளாஸ்டர். எப்படிப்பட்ட விபத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறான்! இத்தனை துடிப்புள்ள இளைஞன் நடக்க முடியாமல் போனால் மீதி வாழ்நாளை எப்படிக் கழிக்கப்போகிறான்?

இந்தப் பெண் — அவனுடைய காதலி அந்த நிலையை எப்படித் தாங்கப் போகிறாள்?

பஸ் வந்துவிட்டது. அவள் சட்டென்று சுயநினைவுக்கு வந்து முண்டியடித்துக்கொண்டு ஏறினாள். வீட்டை நெருங்க நெருங்க ஆஸ்பத்திரியைப் பற்றின கவலைகளும் யோசனைகளும் மறந்து போயின. பல ஃப்ளாட்களிலிருந்து தம்பதிகள் வெளியில் சென்று கொண்டிருந்தார்கள். எல்லோருடைய வாழ்க்கையும் இயல்பானது. நாம்தான் ஒரு அதிசயப் பிறவி. வலியப் போய் வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்ட அசட்டுப் பிறவி. காருண்யத்தினால் விளைந்த அசட்டுத்தனம். தனியாகவே வாழ்க்கையைத் தொடர்ந்திருந்தால் இத்தனை அலுப்பையும் சோர்வையும் அனுபவிக்க வேண்டிய அவசியம் இல்லாமல்போயிருக்கும்.

அந்தி நேரத்து உதயங்கள்

— வாஸந்தி —



அவள் வழியில் தென்பட்ட பரிச்சயமானவர்களைப் பார்த்துப் புன்னகைத்துலிஃப்டில் ஏறித் தன் பகுதிக்குச் சென்றாள்.

வீடு ஒரே களேபரமாக இருந்தது. படுக்கை அறையில் கட்டில் மேல்



தலை காணியும் போர்வையும் மூலைக் கொன்றாகச் சிதறியிருந்தன. அவிழ்த்துப் போட்ட லுங்கியும் அழுக்குச் சட்டைகளும் கட்டில் மேல்—யாரோ வேண்டுமென்று செய்த மாதிரி—

அவள் ஸ்கைப் பையை அலமாரிக்குள் வைத்து விட்டுக் காலையும் முகத்தையும் கழுவிக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள். அவன் சாப்பிட்டு மிகுந்த பதார்த்தங்கள் அப்படியே திறந்தபடி கிடந்தன. சாப்பிட்ட தட்டு வறண்டுபோய் மேஜை மேல் கிடந்தது. திறந்திருந்த தயிர் பாத்திரத்தில் எறும்புகள் வரிசையாக அணிவகுத்திருந்தன. அவளுள் ஒரு மிதமிஞ்சிய ஆத்திரம் எழுந்தது.

இந்த மாதிரி ஒரு மனித ஜன்மம் இருக்குமா? இத்தனை தன்முனைப்பு ஒருத்தனுக்கு இருக்க முடியுமா? அந்தத் திறந்த பாத்திரங்களும் எறும்பும் படுக்கை அறையும் ஒரு மொத்தமாக அவளை அவமானப்படுத்துகிற மாதிரி இருந்தது. அந்த அவமானம் கண்களில் நீரை வரவழைத்தது.

அவள் அவசரமாகப் பாத்திரங்களை ஒழித்து மேடையைச் சுத்தம் செய்து தேநீருக்கு அடுப்பில் நீர் வைத்தாள். டீயை அருந்தியபடி மறுபடியும் அந்தச் சமையலறை ஜன்னல் வழியே பார்க்கையில் காலை நேர சுறுசுறுப்புக் குறைந்து மாலை நேர உல்லாஸம் தெரிந்தது தெருவில். இப்பொழுது நிறையப் பெண்களும் குழந்தைகளும் ஆண்களுடன் சென்று கொண்டிருந்தார்கள். சரசரவென்று இருள் பரவுவதை உணர்ந்து அவள் சட்டென்று டீயைப் பருகி, படுக்கையறைக் களேபரத்தைச் சரிசெய்யச் சென்றாள்.

படுக்கையைச் சரிசெய்து அவனுடைய அழுக்குத் துணிகளைத் துவைத்து நிமிர்வதற்குள் ஏழு மணியாகி விட்டது. இன்னும் நடராஜனைக் காணவில்லை. அவள் அவசரமாகச் சமையல் செய்து வைத்தாள். அவன் சில சமயங்களில் வரும்போதே அசுரப் பசியுடன் வருவான். அடுப்படியில் அவள் இன்னும் வேலையாக இருப்பதைப் பார்த்தால் பயங்கரக் கோபம் வரும்.

''வீட்டுக்கு நேரத்தோட வந்திருக்க மாட்டே! எவனோட குலாவிண்டு உட்கார்ந்திருந்தே?''

''அசிங்கமா பேசாதீங்க. சமையல் ஆயிடுத்து. சாப்பிட வாங்க.''

''ஏமாத்தப் பாக்காதே. நேரத்தோட வந்திருந்தா சமையல் எப்பவோ முடிஞ்சிருக்கும்.''

அவள் பதிலே சொல்லாமல் அவசரமாக மேஜை மேல் சாப்பாட்டை வைப்பாள்.

'''இந்தா கொட்டிக்கோ'ன்னு நீ எனக்குப் போட வேண்டியதில்லே. உர்ருனு வீட்டிலே முகத்தைத் தூக்கி வெச்சிக்கறது எப்பவும். வெளியிலே கண்டவனை யெல்லாம் சிரிச்சு மயக்கறது! அப்படிச் சிரிக்கிறியே அவனெல்லாம் உனக்கு என்னடி கொடுக்கிறான்? ரெண்டு ரொட்டித் துண்டா?''

அவன் பேசப் பேச மண்டையில் இரத்த நாளங்கள் சூடேறி வெடித்து விடும்போல் புடைத்துக் கொள்ளும். மனத்தின் ஆத்திரத்தைக் கை நகங்கள் உள்ளங்கையில் புதைக்கப் பார்க்கும்.

சீ!

இவனையும் ஒரு மனுஷனாக மதித்து இவனுக்காகச் சமைத்து இவன் துணியைத் துவைத்து வைத்து இவன் படுக்கையைத் தட்டிப் போட்டு — இவனுடன் படுத்துக் கொண்டு—

நான் எதற்குச் செய்ய வேண்டும்?

ஏன் செய்கிறேன்?

வாயை மூடிக்கொண்டு?

அதுதான் அவளுக்கு இன்னும் புரியவில்லை. ஏதோ சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரி ஏன் செய்கிறேன்?

சத்தியம்—

அதற்கெல்லாம் உண்மையில் அர்த்தமிருக்கிறதா?

பின் எதனால் செய்கிறேன்?

பத்தினித்தனமா?

நான் இவனது பத்தினி என்று இவன் மதிக்காதபோது இவனை எதற்காக என் பதி என்று நான் மரியாதை கொடுக்க வேண்டும்? உதறிவிட்டுப் போக ஏன் முடியவில்லை?

ஏதோ ஒன்று நம்மைத் தடுக்கிறது.

பயம்—

என்னைக் கண்டே எனக்குப் பயம். வாழ்வின் முக்கியமான கட்டத்தில் தோற்றுப் போனேன் என்று பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப் பயம். நூற்றுக் கணக்கான நோயாளிகளின் உடலுக்கும் மனத்துக்கும் சிசுருஷை செய்து குணப்படுத்தி வருபவளுக்கு ஒரே ஒரு நபரின் விபரீதப் போக்கைச் சரி செய்ய முடியவில்லை என்பது அவமானகரமான விஷயம் என்று தோன்றிப்போன எண்ணம். தினம் தினம் இந்த வீட்டில் நடப்பவையும் அவள் மீது வீசப்படும் அசிங்க வார்த்தைகளும் அவளுக்கு மட்டும்தான் தெரியும்

டிக்கட் இல்லாமல் ரயிலில் பயணம் செய்தார்கள் என்று சிலரை பாட்னா ரயில்வே நீதிபதிமுன் கொண்டு வந்து நிறுத்தினர்.

ஒரு போலீஸ் சூபரென்டென்ட், ஒரு அடிஷனல் மாஜிஸ்ட்ரேட், சப்இன்ஸ்பெக்டர் ஒருவர் ஆகியோர் அந்தக் கும்பலில் இருந்தனர்!

அவர்கள் டிக்கட் வாங்காமல் முதல் வகுப்பில் பயணம் செய்தார்களாம்!

ஆதாரம்: டைம்ஸ் ஆஃப் இந்தியா

தகவல் : ''சேலம் மதிசூடி''



என்கிற பலவீனம் ஏற்படுத்தும் தயக்கம். அவனைப் பற்றி வெளியில் சொன்னால் யாரும் நம்ப வேண்டாமா?

காலிங் பெல் ஒலித்தது.

அவள் அவசரமாகத் தன்னை ஒரு நிலைப் படுத்திக் கொண்டு கதவைத் திறந்தாள்.

நடராஜன் ஒரு விநாடி அவளைப் பார்த்த படி வெளியே நின்றான். பிறகு ஒரு எகத் தாளப் புன்னகையுடன் உள்ளே நுழைந்தான்.

அவள் எதுவும் பேசாமல் நேராகச் சமை யல் அறைக்குச் சென்று அவனுக்குச் சாப் பாட்டை எடுத்து வைத்தாள்.

அவன் பாத்ரூமுக்குப் பெருத்த ஆரவாரத் துடன் சென்று குளிப்பது கேட்டது.

அவன் சாப்பாட்டு மேஜைக்கு வருகையில் கண்கள் சிவந்திருப்பதைக் கவனித்தாள்.

ஒரு நாளைக்கு எத்தனை குடிப்பான் இவன்? இவன் எந்த அளவுக்கு ஆபீஸில் தன் திறமையைக் காண்பிப்பான்! இவன் சம் பாத்திய மெல்லாம் இவனுடைய சொந்த இச்சைகளுக்கு மட்டும்தான் என்று நினைக் கையில் அவனுக்கு எல்லாம் செய்து போடு வது அவளது கடமை என்கிற மாதிரி அவன் நடந்து கொள்வது அவளுக்கு மிகப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. இதை ஒரு அவ மானமாக இவன் ஏன் கருதவில்லை?

''என்ன, சாப்பாடு போடப் போறியா இல்லை, முகத்தைப் பார்த்துக்குனு உக்காரப் போறியா?''

அவள் சட்டென்று எழுந்து பரிமாறினாள்.

''என்னடி வாயிலே கொழுக்கட்டையா?''

அவள் லேசாகச் சிரித்தாள்.

''என்ன பேசட்டும்?''

''ஆமாம். என்கிட்டப் பேச உனக்கு விஷ யமே இருக்காது. நீ பேசறதும், சிரிக்கறதும் மத்தவங்ககிட்டதான்!''

''இதானே வேண்டாம்கிறது!''

''அது உண்மையா இல்லையான்னு சொல்லு.''

''அது உண்மை இல்லேன்னு நீங்க நம்ப நீங்களா?''

''அது நம்ப முடியாத விஷயம்னு உனக்கே தெரியும்.''

அவளுக்கு அலுப்பு ஏற்பட்டது. தினமும் இவன் இதே மாதிரி ஒரு சம்பாஷணையை ஆரம்பித்து இதே ரீதியில் பேசி, கடைசியில் அவளை மொத்துகிற வரை தொடருகிறான். இதில் இவனுக்கு என்ன வக்ர திருப்தி?

அவள் ஏதும் சொல்லாமல் தன் தட்டை எடுத்து வைத்துக் கொண்டாள். வயிறு அகோரமாகப் பசித்தது.

''நா சாப்பிடறேன் ப்ளீஸ். ரொம்பப் பசிக்கிறது.''

''இத பாரு. இந்த மாதிரி வேஷம் போடாதே. பெரிய பத்தினி மாதிரி. நீ சாப்பிடறதை நா தடுக்கற மாதிரி பேசாதே. கெட்ட கோபம் வரும் எனக்கு.''

பேசினாலும் பேசாவிட்டாலும் சிரித்தா லும் சிரிக்கா விட்டாலும் இவனுக்குக் கோபம் வரும் என்ற ஆயாசத்துடன் அவள் சாப்பிட உட்கார்ந்தாள். பாதி வயிறு நிரம்பியதும் நீரைக் குடித்து விட்டு அவள் மெள்ளக் கேட்டாள்:

''இன்னிக்கு எப்ப எழுந்திண்டு ஆபீ ஸுக்குப் போனேள்? நா கிளம்பறவரை நீங்க எழுந்திருக்கல்லே!''

அவன் சரேலென்று எழுந்தான். அவ ளுடையமயிரை இடது கையால் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கினான்.

''நா எப்ப எழுந்திண்டா உனக்கென்ன, நா எப்ப ஆபீஸுக்குப் போனா உனக் கென்ன?''

அவனது வேண்டாத ஆக்ரோஷத்தைப் பார்த்து அவள் நரம்புகளில் வழக்கம்போல் ஒரு ஜில்லிப்பு ஓடிற்று. அவள் சட்டென்று பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''ஸாரி.''

உள்ளுக்குள் மனசு ஓராயிரம் கேள்விகள் கேட்டது.

'நீமாத்திரம் என்னைக் கேக்கறியே? நான் யாரோட பேசினா உனக்கென்ன? நான் யாரைப் பார்த்துச் சிரிச்சா உனக்கென்ன?'

அவன் மறுபடி ஒரு உறுமலுடன் அவளைப் பார்த்துவிட்டுக் கையை எடுத்தான்.

''ஏதாவது மரியாதை இல்லாமப் பேசின, பல்லத் தட்டிப்புடுவேன். நா ஆஃபீஸ் போறதை உன்கிட்டச் சொல்லிண்டுதான் போகணுமா? இஷ்டமிருந்தா போவேன் இல்லேண்ணா போக மாட்டேன்!''

இவனது திடீர் கோபத்துக்குப் புதிய காரணம் ஏதாவது இருக்குமா என யோசித்த படி அவள் சாப்பாட்டை முடித்தாள்.

அவன் சாப்பிட்டு எழுந்து சென்ற பிறகு அவள் வெகு நேரம் சமையலறையில் வேலையில் இருக்கிற மாதிரி பாவனை செய் தாள். பிறகு முன்னறையில் உட்கார்ந்து பேப்பர் படித்தாள். கண்ணை அழுத்திக் கொண்டு வந்தது. அவன் தூங்கியிருப்பான் என்கிற நிச்சயத்துடன் அவள் எழுந்து இருண்டிருந்த படுக்கை அறைக்குச் சென்று கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

சரேலென்று அவன் அவள் மேல் பாய்ந் தான். அவள் திகைத்துப் போய் அரு வெறுப்புடன் அவனை விலக்கப் பார்க்கையில் அவன் ஆக்ரோஷத்துடன் தன் பலத்தைப் பலாத்காரத்தில் காண்பித்தான்.

''இதுக்குக்கூட உபயோகமில்லாத பெண் ஜாதின்னு நீ எதுக்கு எனக்கு? தூ!''

அவள் கண்களிலிருந்து சரம் சரமாய் நீர் வழிந்தது. தினம் தினம் எனக்கேற்படும் கற்பழிப்பு இது.....

அடிவயிற்றிலிருந்து ஒரு தீ மூண்டது. மெல்ல மெல்ல எழுந்து விசுவரூபமாகிமனசை ஆக்ரமித்தது. (தொடரும்)

பாரசிகத்தை ஆண்ட ஷா ஹெர்முஸ் இறந்துவிட்டார். அப்பொழுது அவருடைய மனைவியான பட்டத் தரசி கர்ப்பமுற்றிருந்தாள். இறந்த மன்னருக்குப் பின் உடனடியாக நாட்டை ஆள வாரிசு இல்லாததால் அரசைக் கைப்பற்ற பலர் முயன்றனர். அதைக் கண்டு ராஜப் பிரதானிகள் கலங்கினர். அரசிக்கு ஆண் குழந்தைதான் பிறக்கும் என்று ஜோசியர்கள் கூறினார்கள். உடனே அரசியின் வயிற்றில் இருந்த சிசு வுக்கு முடி சூட்டத் தீர்மானித்தனர். அரசியைப் படுக்க வைத்தனர். அவள் வயிற்றின் மீது கிரீடத்தை வைத்து முடிசூட்டு விழா நடத்தினர்.

அந்தக் குழந்தைதான் பாரசிகத்தை நீண்டகாலம் ஆண்ட இரண்டாவது ஸாபர். • பி. நாராயணன்

ஆரோக்கியம், ஆனந்தம்,
ஒன்றுக்கொன்று ஆதாரம்
SPECIAL REFILL PACK
Save Re.1/-
Cadbury's
Bournvita
The tastier food drink
500 g net
Cadbury's
Bournvita
The tastier food drink
500 g net
உங்கள் குடும்பத்தினருக்கு இன்சுவைமிக்க போர்ன்விடா வழங்குங்கள். போர்ன்விடாவில் கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின் நற்பண்புகள் நிறைந்துள்ளன.
இப்போது! பெரும் சேமிப்பு ஒரு முழு ரூபாய்
ரீ:பில் பேக்குடன்
காட்பரிஸ்
போர்ன்விடா
அளிப்பது அத்தனையும் நலம்
OBM 6617 TM

கால்ஷியம் சத்துக் குறைவான எலும்புகள் பலவீனமானவை எளிதில் வலுஇழந்துவிடும்

கால்ஷியம்-ஸாண்டோஸ் எலும்புகளுக்கு வலுவூட்டுகின்றது.

எலும்புகள் கண்களுக்குத் தெரிவதில்லை. இருப்பினும் அவை உங்கள் குழந்தைகளின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் மிகவும் ஆதாரமானவை. கால்ஷியம் எலும்புகளுக்கும் பற்களுக்கும் இன்றியமையாத பகுதியாகும். கால்ஷியம் சத்துக் குறைவாக இருந்தால் அது பலவீனமான, எளிதில் நொறுங்கக் கூடிய எலும்புகளுக்குக் காரணமாகிறது அதனால் பற்கள் தளர்ச்சி அடைகின்றன. பற்களில் குழி விழுகிறது.

உறுதியான பற்களுக்கும் ஆரோக்கியமான எலும்புகளுக்கும் உங்கள் குழந்தைகளுக்கு 3 லிருந்து 4 வெனில்லா சுவையூட்டப் பெற்ற கால்ஷியம் ஸாண்டோஸ் வில்லைகளைக் கொடுங்கள். ஒவ்வொரு வில்லையிலும் கால்ஷியம், வைட்டமின்கள் ஸி.டி. மற்றும் பி 12ம் அடங்கியுள்ளன.

உங்கள் குழந்தை ஒவ்வொரு நாளும் கால்ஷியத்தை இழக்கிறது. இந்த நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டும். இல்லையேல் குழந்தையுடைய வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. சாதாரண உணவினால் குழந்தைகளுக்குப் போதுமான கால்ஷியம் கிடைப்பதில்லை.

இன்றே உங்கள் குழந்தைக்கு கால்ஷியம் ஸாண்டோஸ் கொடுக்கத் தொடங்குங்கள். காலதாமதம் செய்யாதீர்கள். பின்னால் எவ்வளவு கால்ஷியம் கொடுத்தாலும் அந்த நஷ்டத்தை ஈடு செய்ய முடியாது.

நினைவிருக்கட்டும், கால்ஷியம் வில்லைகள் எல்லாம் ஒரே மாதிரியானவை அல்ல.

கால்ஷியம் ஸாண்டோஸ்—என்று வற்புறுத்தி வாங்குங்கள். வேறு எதையும் வாங்காதீர்கள்.

கால்ஷியம் ஸாண்டோஸ்—
உலகிலேயே மிகச் சிறந்த
கால்ஷியம்
ஸ்விட்ஸர்லாந்து
நாட்டில்
ஸாண்டோஸால்
உருவாக்கப்பட்டது

கால்ஷியம்-ஸாண்டோஸ்®
வலுவுள்ள பற்களுக்கும்
உறுதியான எலும்புகளுக்கும்

SANDOZ

daCunha/S-25/TMR

முன்கதை

ஹரி தன் கேர்ள் பிரண்ட் மாயாவோடு கமானி ஆடிட்டோரியத்தில் மாக்பெத் நாடகம் பார்க்கச் செல்வதாக ஏற்பாடு. நேரமாகி விடவே விரைகிறான். விபத்தில் சிக்குகிறான்.

சாந்தி நர்ஸ். அவளது கணவன் நடராஜன் பெருங்குடியன். அவளை வேண்டிய அளவு வதைத்துப் பிடுங்கும் ஆசாமி! ஆனால் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து விட்டால் சாந்தி தன் கவலைகளை மறந்து பணிகளில் மூழ்கி விடுவாள்.

அன்று மாலை டியூட்டி முடிந்து திரும்பும்போது ஓர் ஆக்ஸிடெண்ட் கேஸ் எதிரே கண்ணில் படுகிறது. அது ஹரி. 'பாவம்' என்று தனக்குள் கூறிக் கொண்டு பஸ் ஏறி விடுகிறாள்.

மறுநாள் அவள் வேலைக்கு வந்ததும் அடிபட்டுக் கிடக்கும் ஹரிக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்கிறாள். பரிவுடன் பேசுகிறாள்.

ஹரி தன் காதலி மாயாவை எதிர் நோக்குகிறான் அவளும் வருகிறாள், வந்து ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போடுகிறாள்! ''உனக்கு இனிமேல் இடுப்புக்குக் கீழே சுவாதீனமிருக்காதாம்! டாக்டர் சொல்கிறார்'' என்கிறாள்.

சாந்தி அன்று மாலை டியூட்டி முடித்து வந்ததும் வீட்டுவேலைகளில் மூழ்கிப் போகிறாள்! கணவன் நடராஜன் திரும்பிவரும் நேரம் நெருங்குவதை நினைக்கும்போதே அவளுக்குப்பயமாக, வேதனையாக இருக்கிறது.

உணவு அருந்தும் போது நடராஜனிடம் ''எப்ப இன்றைக்கு எழுந்தேள்? எப்ப ஆபீஸுக்குப் போனேள்?'' என்று சாதாரணமாக சாந்தி கேட்டு விட்டாள்! உடனே நடராஜனுக்குக் கோபம் கொதித்துக்கொண்டு வந்து விட்டது'நான் எப்ப எழுந்தால் என்ன? எப்ப ஆபீசுக்குப் போனாலென்ன?' என்று எரிந்து விழுகிறான்' அவளை விரசமாக ஏசுகிறான். சாந்தியின் நெஞ்சம் பொருமுகிறது. இரவு அவன் சயனித்த பிறகுதான் படுக்கைக்குச் செல்கிறாள் சாந்தி! அவன் தூங்கிப் போக அவகாசம் அளித்துத் தாமதித்துச் சென்றும் பயனில்லை. அவள் மீது மிருகத்தனமாகப் பாய்ந்தான் நடராஜன்.

தினம் அவள் பங்கேற்கும் கற்பழிப்புக் காட்சி இது! மௌனமாய்க் கண்ணீர் பெருக்குகிறாள் சாந்தி, தன் அவல

நிலையை எண்ணி. மேலே என்ன நடக்கப் போகிறது? தொடர்ந்து படியுங்கள்!

அந்தி நேரத்து உதயங்கள்

வாஸந்தி

5

ஆஸ்பத்திரி வாசனை பழக்கப்பட்டுப் போய்விட்டது. இப்போது என்னென்னவோ துர்கந்தங்களை விரட்டப் பார்க்கும் கனமான ஃபினைல் நெடி... ஃபினைல் நெடிக்குப் பரிகாரமாக மூலைப் படுக்கைக் கிழவி பக்கத்து ஸ்டூலின் மேல் ஒரு ஹனுமான் படத்தின் முன் கொளுத்தி வைக்கும் சுகந்த சிருங்காரின் நெடி.... மிக்கியின் அம்மா அவன் உடம்பைத் துடைத்துப் போடும் குட்டிகூராவின் நெடி... வாசனையைக் கொண்டு சமயத்தைக் கணிக்கும் பக்குவம் கூட ஹரிக்கு வந்து விட்டது இந்த நான்கு நாட்களில்.

நான்கு நாட்கள்—

இருபத்தி எட்டு வருஷங்களை நேரம் பறந்ததே தெரியாமல் அவன் கழித்திருப்பது ஆச்சரியகரமான விஷயம் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

இந்த நான்கு நாட்களும் முக்கி முக்கி நின்று நின்று நகர்ந்திருப்பதை நினைக்கும் போது விஞடி நேரம் என்பதன் பரிணமம் எத்தனை பெரியது என்று திகைப்பேற்பட்டது. தள்ளத் தள்ள நகராத விஞடிகள், அவன் எதிரில், கால்மாட்டில் அந்த அட்டையின் ஏற்றல் இறக்கல் கோடுகளில் குறிப்புக்களில் நின்று கைகொட்டிச் சிரித்தன. எங்களைப் பற்றிய பிரக்ஞையே இல்லாமல் இருந்தாய் அல்லவா என்கிற மாதிரி... 'மோஸ்ட் இம்மீடியட்' எது என்று புரியாமல் இருந்தாய் அல்லவா என்கிற மாதிரி....

எத்தனை அவசரம் — வேலையில், யோசனையில், காதல் செய்வதில் — !

ஓ! எத்தனை பெரிய மாயை அது!

இப்பொழுது தான் அந்த ஃபினைல் நெடிக்கு நடுவில் ஒரு புத்தகத்தைக் கையில் ஏந்திப் படிக்கக்கூட முடியாமல் மோட்டு வளையத்தைப் பார்த்தபடி, படுக்கை நனைந்த பிரக்ஞை கூட இல்லாமல் படுத்துக் கொண்டிருக்கையில்தான் — இத்தனை நாள் வாழ்ந்த வாழ்க்கை என்பது எத்தனை பெரிய மாயை என்று புரிகிறது.

ஒரே விநாடியில் மனத்தின் பிரமையை இரக்கமில்லாமல் கிழித்துக் காண்பித்ததும் மாயா என்கிற மாயை.....

'உனக்கு இனிமே இடுப்புக்குக் கீழே சுவாதீனம் இருக்காதாம்!'

இதைச் சொல்ல உனக்கு என்ன அவசரம்? நான் இன்னும் கொஞ்ச நாள் நம்பிக்கை என்கிற அஞ்ஞானத்தில் இருந்திருந்தால் அது உன்னை எப்படிப் பாதித்திருக்கும்?

மாயா பட்டென்று அப்படிச் சொன்னதும் அவன் அதிர்ந்து போனான். நம்ப முடியாமல் அவளைப் பார்த்தபடி அவள் சொன்ன வார்த்தைகளைத் தனக்குள் ஒரு முறை சொல்லிப் பார்த்துக் கொண்டான். பிறகு சமாளித்துக் கொண்டு சிரித்தான்.

''அதெல்லாம் இருக்காது மாயா. இன்னிக்குக் கார்த்தாலே டாக்டர் வந்திருந்தபோது அப்படிச் சொல்லலேலே. சில மாசங்களுக்குப் படுக்கையிலே இருக்க வேண்டி வரும்னு சொன்னார். வேறெதுவும் சொல்லலே....!''

''உன்கிட்டச்சொல்ல வேண்டாம்னு இருந்திருப்பார்.''

'பின் நீ எதற்குச் சொன்னாய்?' அவன் கேட்கவில்லை. தன் அதிர்ச்சியை மறைத்துக்கொண்டு அவளைப்பார்த்துப்புன்னகைத்தான்.

''நல்ல மனிதர்!''

அவள் அவனைப் பார்க்காமல் முகத்தில் சங்கடம் தெரிய அவன் படுக்கையை மறைத்த ஸ்கிரீனை ஊடுருவும் ஒரு தூரப் பார்வை பார்த்தாள். இளஞ் சிவப்பு வண்ணத்தில் அவள் ஒரு மெல்லிய கோட்டா நூல் புடவை கட்டிக் கொண்டிருந்தாள். வெகு அபூர்வமாகத்தான் அவள் புடவை உடுத்துவாள். புடவையில் அவளைப் பார்க்கும்போது அவனுள் உல்லாசம் கிளம்பும்.

''அடிக்கடி புடவை கட்டிக் கொள்ளக் கூடாதா?'' என்றால்,

''ஐயோ வேண்டாம்ப்பா. அப்புறம் ஆளை முழுசா விட்டுவைக்க மாட்டாய் நீ!'' என்று அவள் சிரிப்பாள்.

இப்பொழுது இந்த மாதிரி தூரப் பார்வை பார்த்துக் கொண்டு எட்ட நிற்கும் இவளைப் பார்க்கும்போது இறுக அணைத்துக்கொள்ள வேண்டும்போல் இருந்தது. ஓ, கிட்ட வா, என்னைச் சமாதானப்படுத்து, எனக்குத் தைரியம் கொடு....

அந்த மெல்லிய இடுப்பைச் சுற்றிக் கை போட்டுப் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக் கொள்ள முடிந்தால்! அந்த ரோஜா மொ டுப் போன்ற அதரங்களை.....!

அவன் சட்டென்று சுய நினைவுக்கு தான். இடுப்புக்குக் கீழ் சுரணையற்றவனுக் இந்தமாதிரியெல்லாம் எண்ணங்கள் தோன் லாமா?

சட்டென்று ஓர் உணர்வு அவனைத் தா கிற்று.

இவளுக்கு நம்மேல் அனுதாபம் இல்

தனக்காகத்தான், அவன் நன்றாக இரு திருந்தால் அவனுடன் வாழ்ந்திருக்கக்கூடி வாழ்வு போயிற்றே என்கிற இழப்பாக தான் இவள் வருத்தப்படுகிறாள்.

இந்தக் கோணத்துச் சிந்தனையை ஏற்ப மிகக் கஷ்டமாக இருந்தது. இரண்டு வ ஷங்களாக இத்தனை நெருங்கிப் பழகியவ அவனது அபிலாஷைகளோடு எண்ண அ களோடு ஒன்றிப் போனவள் இப்படி இரு பாளா என்று தோன்றிற்று.

பின் இந்த மாதிரி ஒரு விஷயத்தை டா டர் அவனிடம் சொல்லத் தயங்கிக்கொண் மறைத்த விஷயத்தைப் பட்டென்று அ னிடம் யோசனை இல்லாமல் சொன்னதற் என்ன காரணம்?

அவன் தன்னைச் சமாளித்துக் கொ டான். ஓ, நமக்கு ஏன் இப்படி புத்தி வ கரித்துப் போய்விட்டது? நம் கையாலாகா தனம் மற்றவர்களைச் சந்தேகப்பட வை கிறதா? இவள் குழந்தை. நம்முடை விபத்து இவளுக்கு மிதமிஞ்சிய அதிர்ச் யைத் தந்திருக்க வேண்டும். அந்த அதிர்ச் யில் என்ன சொல்கிறோம் என்று புரியாம இவள் உளறியிருக்க வேண்டும்.

அவன் லேசாகச் சிரித்தான்.

''வேடிக்கையா இல்லே? நீ மாக்பெ டிராஜிடியைப் பார்க்க அன்னிக்குக் கூ பிட்டே. அதுக்குள்ளே நா வேறே ஒ டிராஜிடியைப் பார்த்துட்டேன்!''

அவள் சற்று நேரம் எதுவும் பேசாம நின்றாள். பிறகு ஸ்கிரீனுடன் பேசுகிறமாதி பேசினாள்.

''ஹரி இது வேடிக்கை விஷயமில்லே!''

''யாராவது இதை வேடிக்கையா எடு துக்க வேண்டாமா?''

அவள் திகைத்துப் போனவளாய் அவனை பார்த்தாள்.

மனசில் திடமே இல்லாதவள் இவள் என் நினைக்கையில் அவனுக்கு வருத்தமாக இரு தது. மூளையின் ஒரு மூலையில் சின்ன அதிர்ச் ஏற்பட்டது. ஜனவரி மாதத்துக்குப் பிற இந்த விபத்து ஏற்பட்டிருந்தால் இவ என்ன செய்திருப்பாள்?

இவள் வரும்வரை காலையிலிருந்து இவளை பார்க்க வேண்டும் என்று மனசில் குவி திருந்த தாபம் எல்லாம் சட்டென்று கவிழ்ந்து போனாற்போல் தோன்றிற்று.

அவள் இன்னும் ஏதோ பிரமை பிடித் வள்போல் நின்றிருந்தாள். அந்தப் பிரமி பையும் தவிப்பையும் பார்க்கும்போது—

ஓ, நம் நிலைமை நாம் நினைப்பதை விட பயங்கரமாக இருக்க வேண்டும் என்கி உணர்வு அவனைத் தாக்கிற்று.

நினைவில் நிற்கும் காட்சி

உதிரிப்பூக்கள்

'உதிரிப் பூக்கள்' படத்தில் அஸ்வினி திருமணத்துக்குப் பின்பு சரத்பாபுவைச் சந்திக்கிறார். இதை அறிந்த விஜயன் சரத்பாபுவை அடித்து நொறுக்குகிறார். அடுத்த கட்டத்தில் அஸ்வினியின் தந்தை சரத்பாபுவிடம் ''நீங்க ஏன் ஒரு அடி கூடத் திருப்பி அடிக்கவில்லை'' என்று கேட்க, அதற்குச் சரத்பாபு, ''நான் திருப்பி அடித்திருப்பேன். லட்சுமி (அஸ்வினி) விதவையாவதை நான் விரும்பவில்லை'' என்று சொல்கிறாரே, இந்தக் காட்சி இன்னும் என் நினைவில் நிற்கிறது.

—களந்தை நடேஷ்கன்னா

அவன் சற்று நேரம் விட்டத்தைப் பார்த்தபடி படுத்திருந்தான். இவள் நிலைமையில் நாம் இருந்திருந்தால் நாமும் இப்படித்தான் திகைத்திருப்போம் என்று தோன்றிற்று. அவன் தன் பார்வையைத் திருப்பாமலே மெல்லிய குரலில் சொன்னுன்:

''என்னைப் பத்திக் கவலைப்படாதே மாயா! சின்ன வயசிலேருந்து கஷ்டப்பட்டு எனக்குப் பழக்கம். எல்லாத்தையும் பார்த்துச் சிரித்து எனக்குப் பழக்கம்.''

அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

''உன்னைப் பார்க்க எனக்கு ரொம்பப் பரிதாபமாக இருக்கு ஹரி.''

அவ்வளவுதானு? அதற்கு மேல் அனுதாப வார்த்தைகள் கிடையாதா? மூன்றும் மனுஷி மாதிரி பேசுகிற அளவுக்குத்தான் நம்மிடையே நெருக்கம் இருந்ததா? அந்த நெருக்கத்தையெல்லாம் மறந்து போனுயா?

அவன் புன்னகைத்துக் கொண்டு சொன்னுன்:

''பார்க்காதே!''

ஸ்கிரீனுக்கு அப்பால் யாரோ நிற்கிற மாதிரி இருந்தது. அவள் மெல்லத் திரும்பினுள். கண்களில் நீர் லேசாகத் திரையிட்டிருந்தது. மொட்டு மாதிரி மெல்லிய உதடுகள் துடித்தன.

''நான் போயிட்டு வரேன் ஹரி.'' தயங்கிக் கொண்டு பிறகு சொன்னுள்:

''உனக்கு எந்த வகையிலே நான் உதவறதுன்னு புரியலே.''

''நீ கவலையே படவேண்டாம் மாயா. இங்கே டாக்டர்களும் நர்ஸ்களும் ரொம்ப நன்னுக் கவனிச்சுக்கரு.''

ஸ்கிரீனுக்குப் பின்னுல் தொலைவில் தெரிந்த உருவத்தை மறுபடி ஒரு பார்வை பார்த்து விட்டு அவள் சொன்னுள்:

''நான் போயிட்டு வரேன் ஹரி. விஷ்யூ ஆல் தி பெஸ்ட்!''

''தாங்க்யூ!'' என்று அவன் புன்னகைத்தான்.

அவள் மறுபடியும் சற்றுத் தயங்கி நின்று விட்டுச் சென்றுள்.

யார் அங்கு தொலைவில் நிற்பது என்று யோசித்தான். அவளுடைய அப்பா ராஜகோபாலனுக இருக்க வேண்டும். அவனுக்குப் பிரக்ஞை இல்லாத சமயத்தில் அவர் வந்திருந்தார் என்று நர்ஸிடமிருந்து தெரிந்து கொண்டிருந்தான். இப்போது ஏன் வரவில்லை?

இத்தனை சீக்கிரம் மனிதர்கள் மாறிவிடுவார்களா? நான்கு நாட்களுக்கு முன்புவரை நம்மை 'மாப்பிள்ளை மாப்பிள்ளை' என்று அழைத்தவர்!

அவன் அவசரமாகத் தன்னைச் சமாளித்துக்கொண்டான். கண்ணுக்குத் தெரிவாகப் புலப்படாத அந்த உருவம் ராஜகோபாலனுடையது என்றுஎப்படிநிச்சயமாகச்சொல்ல முடியும்?

தன் புத்தி போகிற போக்கைப் பார்த்து அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவர் ராஜகோபாலனுகவே இருந்து அவனைப் பார்க்காமல் போயிருந்தாலும் அதில் ஏதும் ஆச்சரியமில்லை. இந்த மாதிரியான எக்கச்சக்கமான ஒரு விபத்தில் மாட்டிக் கொண்டவனை ஆயுசு முழுவதும் நோயாளியாக இருக்கப் போகிறவனை அவர் இன்னும் மாப்பிள்ளை என்றுதான் அழைப்பார் என்று எதிர்பார்த்த தான்தான் முட்டாள் என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.



நினைவில் நிற்கும் காட்சி

திருவிளையாடல்

'ஆயிரம் பொன் பரிசு' என்றுல் ஆகர்ஷிக்கப் படாதவர் யார்? ஆசைப்பட்ட தருமிக்கு ஈசனே புலவராய் வந்து பாட்டெழுதித் தர, தமிழ்ச் சங்கத் தலைவர், நக்கீரர், பாடலில் பிழை காண, விளைந்தது சொற் போர். முடிவு? 'குற்றம் குற்றமே' என்று 'வாதாடிய நக்கீரர் சாம்பலாகி, பொற்றுமரைக் குளத்தினின்று உருப்பெற்று வர இதுவும் இறைவனின் திருவிளையாடல்களில் ஒன்று.

பொருத்தமான நடிகர்கள். சிலிர்க்க வைக்கும் சிம்மக் குரலோன். நகைச் சுவைக்கு நாகேஷ்-இருவரின் சிந்திக்க வைத்துச் சிரிப்பூட்டும் உரையாடல்கள். நக்கீரராய் அமரர் ஏ. பி. நாகராஜன். 'திருவிளையாடலி'ல் வரும் இக்காட்சியே என் நினைவில் நிற்கும் காட்சி.

ஸ்ரீரங்கம் ஸ்ரீனிவாசன்

அவன் அந்த ஸ்கிரீனுக்குப் பின்னுல் ராஜகோபாலன் இருப்பதாகப் பாவித்துக் கொண்டு சொன்னுன்.

''மிஸ்டர் ராஜகோபாலன்! நீங்கள் மிகத் தவருக என்னை எடை போட்டு விட்டீர்கள். இந்த மாதிரி உடம்பை முறித்துக்கொண்ட பிறகும் என் உடம்பில் முறுக்கேறியிருக்கும் என்று நினைத்தீர்களா? மாயாவுக்கு நல்ல இடம் பார்த்து முடியுங்கள் என்று நானே உங்களிடம் மனப்பூர்வமாகச் சொல்லியிருப்பேன். நீங்கள் ஒரு கோழை. அன்பைக் காட்டக்கூடப் பயப்படும் கோழை. எனக்கு இப்பொழுது தேவை பெண் இல்லை. இதத்தோடு பேசும் மனிதர்கள். நீ தனியாக இல்லை. உனக்காகக் கவலைப்பட நாங்கள் இருக்கிருேம் என்று சொல்லக் கூடிய மனிதர்கள். தினமும் இந்த விசிட்டிங் வேளையில் வந்து உற்சாகத்தைக் கூட்டிவிட்டுப் போகக் கூடிய மனிதர்கள்...''

''ஹல்லோ!''

அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். டாக்டர் சோப்ரா நின்றிருந்தார். பெரிதாகப் புன்னகைத்தார்.

''ஹாம்லெட் மாதிரி தனக்குத் தானே பேசிக்கொள்கிற பழக்கம் உங்களுக்கும் உண்டா?''

அவன் சிரித்தான்.

''நாம் எல்லோரும் சில சமயங்களில் ஹாம்லெட்தான் இல்லையா டாக்டர்?''

டாக்டர் எதுவும் பேசாமல் சோதனையில் இறங்கினார்.

''கிட்டத்தட்ட அவனுடைய கேள்விதான் எனக்கும் டாக்டர் — To be or not to be-that is the question!''

டாக்டர் அவனைத் தட்டிக் கொடுத்தார்.

''நல்லவேளை. உங்களுக்கு மூளை சேதம் அடையவில்லை.''

''அதனாலேதான் என் நிலைமையோட பரிதாபம் அதிகமாக உறைக்கிறது!''

டாக்டர் மறுபடியும் அவன் உள்ளங் காலைத் தொட்டுப் பார்த்தார். கைகளைத் தூக்கிக் கீழே இறக்கினார்.

''சிறுநீர் போவதற்குக் காத்திட்டர் வைத் திருக்கிறோமே அதனால் ஒன்றும் உங்களுக்குத் தொந்தரவு இல்லையே?''

''இல்லை.''

''மூத்திரச்சிக்கல் மலச்சிக்கல் இருந்தால் தெரியப்படுத்துங்கள். யூரிநெரி இன்ஃபெக் ஷன் வந்துவிடும், சில சமயங்களில். ஆண்டி பயாடிக்ஸ் விட்டமின் மாத்திரைகள் சாப்பிடுகிறீர்கள் அல்லவா?''

நினைவில் நிற்கும் காட்சி

ஹரிதாஸ்

குடி போதையில் தாசி ரம்பாவிடம் தன் சொத் துக்கள் எல்லாவற்றையும் எழுதிக் கொடுத்துவிடு கிறார் ஹரிதாஸ். ரம்பா ஜப்திக்கு வந்துவிடுகிறாள். ஹரிதாஸின் மனைவி ரம்பாவிடம் சிறி விழுகிறாள். அப்போது ஹரிதாஸ் மனைவியை அலட்சியப்படுத்தி விட்டு ரம்பாவிடம் போய், ''உன் விளையாட்டைப் புரிந்துகொள்ளும் ஜன்மமா இது ரம்பா!'' என்று பழைய நினைவில் கொஞ்சுகிறார். ''எது விளை யாட்டு? முதலில் என் வீடு தேடி வந்தது, என் னிடம் சரச சல்லாப உல்லாசமாக இருந்தது, பிறகு இதை எழுதிக் கொடுத்தது எல்லாம் விளையாட்டோ?'' என்று ஹரிதாஸ் எழுதிக் கொடுத்த பத்திரத்தைக் காட்டுகிறாள். ஹரிதாஸுக்கு சுய நினைவு வருகிறது. தன் தவறை நினைத்து வருந்தி, ஏக்கப் பார்வை பார்க்கிறார். ஹரிதாஸாக நடித்த எம்.கே. தியாக ராஜ பாகவதரும், ரம்பாவாக நடித்த டி. ஆர். ராஜகுமாரியும் ஹரிதாஸின் மனைவியாக நடித்த என். ஸி. வஸந்த கோகிலமும் பாத்திரமுணர்ந்த நடிப்பால் நம் நெஞ்சைக் கவர்கின்றனர்.

-டி. எஸ். சீதாராமன்



''நர்ஸ் கொடுப்பதை யெல்லாம் விழுங்கி கொண்டு இருக்கிறேன்.''

''சரியாகிவிடுவீர்கள், கவலைபடாதீர்கள்.''

அவன் சட்டென்று பெரிதாகச் சிரித்தான்.

''அது ஒரு நல்ல ஜோக் டாக்டர்.''

''எது ஜோக்?''

''நான் சரியாகி விடுவேன் என்பது.''

''எங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டா நாங்கள் டாக்டர் தொழிலுக்கே லாயக் கில்லை மிஸ்டர் ஹரி.''

''அதற்காக என்னிடமிருந்து விஷயத்தை மறைக்கக் கூடாது டாக்டர்!''

''என்ன விஷயம்?''

''எனக்கு இடுப்புக்குக் கீழே சுவாதீனம் இல்லை என்கிற விஷயம்!''

டாக்டர் சட்டென்று தீர்க்கமாய் ஒரு பார்வை பார்த்தார்.

''யார் சொன்னார்கள்? நர்ஸா?''

''இல்லை இல்லை. — எனக்குத் தெரிந்தவள். என்னுடைய கர்ல் ஃபிரண்ட். நீங்கள் சொன்னதாகச் சொன்னாள்.''

டாக்டர் புருவத்தை உயர்த்தினார்.

''ஓ, காட்! ஆறு வாரங்கள் கழித்துத் தான் தீர்மானமாக எதுவும் சொல்ல முடி யும் என்று நான் சொன்னேன். அதற்குள் உங்களிடம் சொல்லி விட்டாளா? இந்த மாதிரி விவேகமற்றவர்களை உள்ளே அனு மதிக்கவே கூடாது. எங்களுடைய வைத் தியத்தை யெல்லாம் பிரயோஜனமில்லாமல் செய்து விடுவார்கள் இவர்கள்.''

அவருடைய கோபத்தைப் பார்த்து அவ னுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''பரவாயில்லை டாக்டர். எனக்கு நிறைய மனோ திடம் உண்டு. முதலிலேயே என் நிலை எனக்குத் தெரிந்துவிடுவது நல்லது. நம் பிக்கையை வளர்த்துக் கொண்டு அப்புறம் ஏமாற்றமடைவதுதான் கஷ்டம்.''

டாக்டர் யோசனையுடன் அவனைப் பார்த் தார்.

''திட்டவட்டமாக நான் எதுவும் இப் பொழுது சொல்ல முடியாது. முது கெலும்பும் மூளைக்குச் செய்தி அனுப்பும் கீழ் உறுப்புக்கள் சம்பந்தமான நரம்புகளு சேதமடைந்திருக்கின்றன. இடுப்புக்குக் கீழ் உங்களுக்கு இப்போது சுவாதீனமில்லைதான். இருந்தும் இன்னும் சில வாரங்களில் உங்கள் உடல் முன்னேறலாம்..., நீங்கள் எதற்கும் கவலைப்படக் கூடாது.''

அவன் மீண்டும் சிரித்தான்.

''அதாவது கவலைப்பட்டு லாபமில்லை என்கிறீர்கள்.''

டாக்டர் மறுபடியும் அவன் தோளைத் தட்டிக் கொடுத்தார்.

''உற்சாகமாக இருங்கள் மிஸ்டர் ஹரி!''

''ஒரு வேண்டுகோள் டாக்டர். இந்தத் தடுப்பு ஸ்கிரீனை அகற்றிவிடச்சொல்லுங்கள்.''

''ஏன்?''

''எனக்கு மனிதர்களைப் பார்த்தால்தான் உற்சாகம் ஏற்படும்.''

டாக்டரின் கண்களில் ஒரு கருணைக் கீற்றுத் தோன்றி மறைந்தது.

''ஓ.கே.''

(தொடரும்)



THE SEAL OF TANTEX QUALITY
டான்டெக்ஸ்®
ஒவ்வொரு வகையிலும் சிறந்தவை
தரத்தில், துணி வகையில், தயாரிப்பில், உருக்குலையாத நீடித்த உழைப்பில், எல்லா விதத்திலும் சிறந்தவை. சிக்கனமானதும் கூட.
IS : 4964
ஒட்டி உறவாட
டான்டெக்ஸ்
டான்டெக்ஸ் ரகங்கள்
ப்ரீ:ப்ஸ் • வெஸ்ட்ஸ்
• காஷிவெல்ஸ்
ஸ்போர்ட்ஸ் பனியன்கள்
சிறுவர்களுக்கான ரகங்கள்
டான்டெக்ஸ்
ttk தயாரிப்பு
டி.டி. கிருஷ்ணமாச்சாரி & கோ.
சென்னை-600 086.
Imageads M-TTK-1361 Tam



6

பரோட்டாவை மடித்து டிபன் டப்பாவில் வைக்கையில் கைவிரல்கள் லேசாக நடுங்கின. அவற்றைச் சமாதானப்படுத்துகிற மாதிரி சாந்தி இரண்டு கைவிரல்களையும் கெட்டியாகக் கோத்தபடி ஒரு விநாடி நின்றாள். கொஞ்ச நாட்களாக மார்பில் அடிக்கடி ஆரம்பித்திருந்த டமாரம் முடுக்கி விட்ட மாதிரி ஒரு அவசரத்துடன் ஆரம்பித்தது. அதைச் சட்டை செய்யாமல் பானையிலிருந்து நீர் எடுத்து அவள் வேகத்துடன் குடித்தாள்.

''போயேன்! நானா உன்னைத் தடுத்து நிறுத்தறேன்? உன்னை நம்பி நான் இருக்கேன்னு பெருமைப் பட்டுக்காதே. எனக்கு வேலை இருக்கோ, இல்லையோ, என்கிட்ட காசு இருக்கோ இல்லையோ, பிச்சை எடுத்தாலும் எடுப்பேனே தவிர, உன்னைக் கேட்க மாட்டேன்.''

சாந்தி நெற்றியைத் துடைத்துக் கொண்டு சமையல் மேடையைக் கழுவி விட்டாள்.

மறுபடியும் வேலையை விட்டிருப்பான். அதனால்தான் இத்தனை ஆங்காரம். இவனுக்கு எப்பொழுது புத்தி வரப் போறதோ? பொறுப்பே சுமக்கத் தெரியாதவன். நான் மட்டும் சுமக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்கிறான்?

''இதப் பாரு. நல்லாக் கேட்டுக்க. இந்த மடையன் கத்தினு எனக்கொண்ணும் இல்லேங்கற திமிரோட வாயை மூடிண்டு உன் இஷ்டப்படியே இருந்தே எனக்கு ரொம்பக் கோபம் வரும்.''

கழுவிக் கொண்டிருந்த துடைப்பத்தை அப்படியே நிறுத்தி அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''நீங்க எதுக்குக் கத்தறீங்க? நான் என்ன பதில் சொல்லணும்னு எனக்குச் சத்தியமாப் புரியல்லே.''

''புரியாதே? சின்னப் பிள்ளே — ஒண்ணுமே புரியாது. திட்ட வட்டமா சொல்றேன் கேட்டுக்க. என்னை நீ மாத்த முடியாது. நான் இத்தனை வருஷமா எப்படி இருந்தேனோ அப்படித்தான் இப்பவும் இருப்பேன். என்னை நீ ஒரு கேள்வி கேட்க முடியாது. நான் உன் புருஷண்டீ! ஏன்யா இன்னிக்கு ஆபீஸுக்குப் போகலேன்னு நீ கேட்க முடியாது. எங்கம்மா எங்கப்பாவைக் கேட்டதில்லே. எங்க பாட்டி எங்க தாத்தாவைக் கேட்டதில்லே. ஆனா நீ கேக்கறே. ஏன்னா சம்பாதிக்கிற திமிரு!''

அவள் ஒரு ஆயாசத்துடன் தன் வேலையில் கவனத்தைத் திருப்பினாள்.

'நானும் சம்பாதிக்கலேன்னா நீ என்ன செய்வே?'

ஸிங்க்கில் கொட்டிக் கொண்டிருந்த குழாயை நிறுத்திப் பரபரவென்று கீழே துடைத்தாள்.

இத்தனை ஆங்கார வார்த்தைகளுக்கும் காரணம் அவள் கேட்ட ஒரு சின்னக் கேள்வி. அவனுடைய மனைவி என்கிற உரிமையில் கிளம்பிய கேள்வி.

''ஆபீசுக்கு நாழியாகல்லே? குளியுங்களேன்?''

அதற்குப் பதில்தான் இந்தச் சொல் சாட்டைகள்.

ஆஸ்பத்திரிக்கு நேரமாகி விட்டது என்கிற பரபரப்போடு அவள் நகருகையில் அவன் வழி மறித்தான்.

அந்தி நேரத்து உதயங்கள்

வாஸந்தி

''நான் சொன்னதைப் புரிஞ்சுண்டயா?''

அவள் வெகு பிரயாசைப்பட்டு ஒரு சிநேகப் புன்னகை செய்தாள்.

''நான் இனிமே உங்க வழிக்கே வரல்லே. ஸாரி.''

ஒழிந்து போ என்கிற ஒரு ஹூங்காரத்துடன் அவன் வழி விட்டான்.

''ஆஸ்பத்திரிலேந்து நேரே வீட்டுக்கு வா. நா இங்கேதான் இருப்பேன். என்னுடைய ஞாபகமும் உனக்கு இருக்கட்டும்.''

அவள் பதிலே சொல்லாமல் உள்ளே பொங்கி வந்த ஆத்திரத்தை அவசரமாக அமுக்கியபடி தன்னைத் தயார் செய்து கொண்டு வெளியில் லிஃப்டுக்குக் காத்து நிற்க, கண்களில் நீர் பயமுறுத்தியது.

லிஃப்டில் நல்ல வேளையாக யாரும் இல்லை. பார்ப்பதற்கு யாரும் இல்லை என்ற தைரியத்தில் அந்தச் சில விநாடிகளில் அவள் வெட்கமில்லாமல் கண்ணீர் விட்டுச் சிவப்பு விளக்கில் 'ஜி' பளிச்சிட்டுத் தரையைத் தொடும்போது முகத்தில் வழக்கமான மந்த ஹாசத்துடன் வெளியே வந்தாள். மார்பில் மறுபடி டமாரமடித்தது. அதன் கலவரம் ஆஸ்பத்திரியை அடைந்து வெகு நேரம் வரையிலும் இருந்தது. வார்டுக்குள் நுழைந்து, நீள நெடுக விரிந்திருந்த கட்டில் வரிசைகளைப் பார்த்ததும் சட்டென்று அடங்கியது.

''குட் மார்னிங்!''

''குட் மார்னிங்!''

சர்மாவின் கால் அந்தரத்திலிருந்து கீழே இறங்கி யிருந்தது.

''எப்படி இருக்கிறீர்கள் சர்மா ஸாப்?''

''காலை இன்னும் சரியாக ஊன்ற முடியவில்லை நர்ஸ்!''

''கொஞ்ச நாளைக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். எக்ஸர்சைஸ் செய்கிறீர்கள் அல்லவா?''

''செய்கிறேன், செய்கிறேன். செய்யாவிட்டால் யார் இங்கே விடுகிறார்கள்?''

சாந்தி சிரித்துக் கொண்டே அவருடைய தோளைத் தட்டினாள்.

''உடற் பயிற்சியை மட்டும் நீங்கள் அலட்சியமாக நினைக்கக் கூடாது. சர்மா ஸாப். அதுதான் உங்கள் காலுக்குப் பழைய பலத்தைக் கொடுக்கும்.''

''இன்னும் ஒரு வாரத்தில் நான் வீட்டுக்குப் போகலாம் என்கிறார்கள் சாந்தி பெஹன்.''

''தெரியும். அதனால்தான் சொல்கிறேன். வீட்டுக்குப் போன பிறகு எக்ஸர்ஸைஸை மறக்கக் கூடாது. ஊன்றுகோல் பிடித்துக் கொண்டு எனக்கு நடந்து காண்பியுங்கள்.''

''கணுக்காலில் வலிக்கிறது.''

''நேற்றே சொன்னீர்களே! இன்றிலிருந்து அல்ட்ரா ஸானிக் தெரபிக்கு அழைத்துப் போகிறேன்.''

''குட்மார்னிங் நர்ஸ் ஆண்டி!''

''குட்மார்னிங் மிக்கி. வலி இருக்கா இப்போ?''

''இல்லே.''

''கொஞ்சம் பந்தாடலாமா இன்னிக்கு?'' மிக்கியின் கண்களில் புஷ்

பங்கள் மலர்ந்தன. ''ஓ! வெளியிலேயா?''

''இல்லே. இங்க ஒரு ரூம் இருக்கு. அங்கே அழைச்சிண்டு போறேன். அங்க உன்னை மாதிரி அடிபட்டுண்டவங்க பந்தாடிண்டிருப்பாங்க.''

''ஏன்?''

''ஏன்னா அப்பத்தான் இந்த இடுப்புக்கும் கைக்கும் பலம் வரும். ஓ.கே?''

''ஓ.கே!''

ராம்ஸிங் படுக்கையில் சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டு ரொட்டியை டீயில் நனைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். வெட்டப்பட்ட முழங்காலின் கட்டு இன்னும் அவிழ்க்கப்படவில்லை. அவளைப் பார்த்துக் கூச்சத்துடன் புன்னகைத்து டீக்கோப்பையும் ரொட்டியுமாகக் கைகளைக் கோத்து நமஸ்கரித்தான்.

''நமஸ்தே பஹன்ஜி!''

''நமஸ்தே! எப்படி இருக்கிறீர்கள் ராம்ஸிங்?''

அவன் விரக்தியுடன் புன்னகைத்தான்.

''என் தலையெழுத்து எப்படி என்றுதான் உங்களுக்குத் தெரியுமே! நான் என்ன பதில் சொல்வேன்?''

தாள். ஏதோ பீஹாரியில் சொல்லிப் பிரலாபித்தாள்.

''என்ன சொல்கிறார் உங்க அம்மா?''

''நன்றாக இருந்த காலை வெட்டி எடுத்துவிட்டீர்களே என்கிறாள். வயலை இனிமேல் எப்படிக் கவனிப்பான் என்கிறாள்!''

சாந்தி புன்னகைத்துக் கொண்டே சொன்னாள்.

''முழங்கால் எலும்பில் புரையோடிப் போயிருந்தது என்று அவருக்குச் சொல்லுங்கள், காலை வெட்டா விட்டால் பிறகு உயிருக்கே ஆபத்தாகப் போயிருக்கும் என்று சொல்லுங்கள். முழுசாகப் பிள்ளை போய் விட்டால் உங்கள் அம்மாவுக்கு எப்படி இருக்கும்? முன்னை விட இப்பொழுது வயலை நீங்கள் நன்றாகக் கவனிக்கலாம். ஏன் என்றால் உங்களுக்கு இப்பொழுது எந்த வியாதியும் இல்லை.''

அவள் சிரித்துக் கொண்டே மற்ற மூலைக்குத் திரும்புகையில் ஹரி தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்தாள்,

''குட் மார்னிங்!''

''குட் மார்னிங்! எப்படி இருக்கிறீர்கள்?''

''அட, உங்களுக்குத் தமிழ் தெரியுமா?''

"கல்யாணம் ஆனதும் ரெண்டு வருசமா உங்க வீட்டிலே தங்கின உங்க மாப்பிள்ளை எப்படித் திடீர்னு ஊருக்குக் கிளம்பிவிட்டார்?"

"நாங்க வாங்கின புது டேப்ரிக்கார்டரில்.... 'மணியடிச்சா சோறு.... இது மாமியாரு வீடு....'ங்கிற பாட்டை அடிக்கொருதரம் வைத்தேன்...!"

கால்மாட்டிலிருந்த அவனுடைய சார்ட்டைப் பார்த்தபடி அவள் பளிச்சென்று புன்னகைத்தாள்.

''உங்கள் தலையெழுத்து ரொம்ப நன்றாக இருக்கிறது ராம்ஸிங். ஒரு காலில் பாதி போனால் என்ன? இன்னொரு கால் நன்றாக இருக்கிறது. இந்தக் காலுக்கு மரத்தால் கால் செய்து இணைத்து நீங்கள் நடக்கும்படி செய்து விடுவோம் சில மாதங்களில். டாக்டர் உங்களுக்குச் சொல்லவில்லையா?''

அவன் தலையைக் குனிந்து கொண்டு மெல்ல முணு முணுத்தான்.

''சொன்னார், சொன்னார். இருந்தாலும் சொந்தக் காலில் நடக்கிற மாதிரி ஆகுமா? என்னுடைய நிலத்தை முன்னை மாதிரிக் கவனித்துக் கொள்ள முடியுமா?''

''ஏன் முடியாது?''

அவனுடைய அம்மாபக்கத்தில் தரையில் உட்கார்ந்து அவர்களது பேச்சை அலங்க மலங்க முழித்தபடி கேட்டுக் கொண்டிருந்

''தெரியும். நான் தமிழ் பேசறவதான்!''

''குட். நீங்க சிரிச்சா கே. ஆர். விஜயா மாதிரி இருக்கு.''

அவள் சிரித்தாள்.

''ஸ்கிரீன் எங்கே காணோம்?''

''நான்தான் எடுக்கச் சொன்னேன். என் தலைக்கு மேலே இருக்கிற ஒட்டடையைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போச்சு.''

அவள் மறுபடி சிரித்தாள்.

''இப்ப மத்த இடத்திலே இருக்கிற ஒட்டடையும் கண்ணுக்குத் தெரியறதா?''

அவன் சில விநாடிகள் அவளுடைய பரிசோதனைகளுக்கு ஈடு கொடுத்தபடி பேசாமலிருந்தான். இன்னொரு நர்ஸின் உதவியோடு அவள் அவன் முதுகுத்தண்டுக்குச் சிறிதளவு கூடத் தொந்தரவு கொடுக்காமல் படுக்கை விரிப்பைச் சரி செய்தாள்.

''யூ ஆர். ரைட்'' என்றான் அவன் நிதானமாக. ''நான் தனியாக இல்லை.''

''அது உங்களுக்குத் தென்பைக் கொடுக்கக் கூடிய விஷயம் மிஸ்டர் ஹரி.''

அவன் சட்டென்று சிரித்தான்.

''நிச்சயமாகக் கொடுக்கவில்லை. விரக்தியை ஏற்படுத்தும்னு வேணு சொல்லலாம். மேலேமேலே பறக்கிறோம்னு நாம நினைச்சுண்டிருக்கறச்சே 'அடடே பைத்தியக்காரா! உனக்கு இறக்கையே இல்லையே'ன்னு ஞாபகப் படுத்தினு எப்படி இருக்கும் அப்படி!''

அவனுடைய வார்த்தைகள் தன்னுள் ஏற்படுத்திய ஆச்சரியத்தை மறைத்தபடி அவள் சின்னப் புன்னகையுடன் அவனது உடலின் கட்டுக்களையும், சருமத்தையும் ஆராய்ந்தாள்.

''இப்பவும் பறக்க முடியும் மிஸ்டர்ஹரி!''

''ஆகா! பேஷா. மனசாலேதானே?''

''மனசாலே பறக்க முடிஞ்சாத்தான் உடலாலேயும் சாத்தியம்!''

''நர்ஸ் உங்களைப் பேர் சொல்லிக் கூப்பிடலாமா?''

''தாராளமாக!''

''தாங்க் யூ சாந்தி. எத்தனை நாளா இந்த மாதிரி ஏமாத்தற தொழில்லே இருக்கீங்க?''

அவள் திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள். அவன் வெள்ளையாகச் சிரித்தான்.

''ஐ மீன் இந்த நர்ஸ் வேலையிலே...''

''நீங்க என் வேலையைப் பத்தி இவ்வளவு கேவலமாப் பேசினீங்கன்னு உங்களைக் கவனிக்க வேறு நர்ஸ் கிட்டச் சொல்றேன்.''

அவன் சட்டென்று அவளுடைய கையைப் பிடித்தான்.

''ஐய்யய்யோ, நான் சும்மா சொன்னேன். விளையாட்டுக்காக. இதமாப் பேசற ஆளுக்காக ஏங்கிண்டிருக்கேன். நீங்களும் வரலேன்னு மெண்டல் கேஸாப் போயிடுவேன்.''

அவள் யோசனையுடன் பார்த்தாள். அந்தக் கண்களில் ஏக்கம் நிறையவே தெரிந்தது. அந்தப் பெண் பிறகு வரவேயில்லையோ?

''உங்கள் அப்பா அம்மா எல்லாம் எங்கே இருக்கிறாங்க ஹரி?''

அவன் விட்டத்தைக் காண்பித்தான்.

''கூடப் பிறந்தவர்கள்?''

உதட்டைப் பிதுக்கினன்.

அவள் ஜாக்கிரதையாகக் கேட்டாள்.

''மாயா—ரொம்பக் கலங்கிப் போயிருப்பாள் இல்லையா?''

''கலங்கல்லே. கலைச்சுட்டா.''

''எதை?''

''இத்தனை நாள் போட்ட வேஷத்தை.''

எந்தக் கேள்வியும் மேற்கொண்டு கேட்காமல் அவள் தன் வேலையில் கருத்தாக இருந்தாள்.

''என்னலே அவளுக்கு எந்த விதப் பிரயோஜனமும் இல்லை சாந்தி.''

இவனுடைய துக்கத்தைத் தான் எந்த வகையில் சமாதானப்படுத்த முடியும் என்று அவளுள் திகைப்பேற்பட்டது.

''இடுப்புக்குக் கீழே சுரணையே இல்லாமப் போனவனல் என்ன பிரயோஜனம் சொல்லுங்க!''

அவள் சட்டென்று கூர்மையாகப் பார்த்தாள்.

''யார் அப்படிச் சொன்னது உங்களுக்கு?''

''அவதான்.''



பம்பாய் தொலைக்காட்சி நேயர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். 7½ அங்குலம் நீளமும், ஒரு சிகரெட் பாக்கெட்டின் அளவு அகலமும் கொண்ட பூஸ்டர் என்னும் சாதனமும், 13 கம்பிகள் கொண்ட பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட எட்டு அடி ஆன்டென்னவும் தான் அந்த வரப்பிரசாதம். ஆகும் செலவு ரூபாய் ஆயிரம். இதன் மூலம் பம்பாய் டீவி நேயர்கள் அபு தபீ, ஓமன், கராச்சி நிலையங்களின் கலர் ஒலிபரப்பைக் கண்டு களிக்கிறார்கள்.

- இந்தியா டுடே

- கலாமூர்த்தி

''இப்படியே ஆயுசு முழுக்க இருக்கப் போறதில்லே நீங்க!''

அவன் விரக்தியுடன் சிரித்தான்.

''எதிர் காலத்தைப் பத்தி யார் யோசிச்சது? வாட் அபௌட் த ப்ரஸண்ட்? வி லிவ் இன் தி பிரஸண்ட்!''

''அப்ப அந்தந்த தருணத்திலே என்னென்ன ஏற்படுகிறதோ அதை ஏத்துக்கப் பழகிக்கணும்!''

''எல்லாராலேயும் அது முடியாது. 'ஸார்த்திரேயைப் படிக்கிறவங்களா நீங்க?''

''ஊஹூம். நான் எதையும் படிச்சது இல்லே. இந்த வேலை பார்க்கறதிலே ஒரு விஷயம் எனக்குத் தெரியும். காலம் ஒரே மாதிரி நிக்கறதில்லே. நம்பிக்கைன்னு ஒண்ணு இருந்தா எந்தக் கஷ்டத்துக்கும் நிவர்த்தி உண்டு.''

''இதைத்தான் ஏமாத்து வித்தைன்னு சொல்றேன்.''

அவன் அவளை ஊடுருவிப் பார்த்தான். பார்வையில் ஒரு தீவிரம் தெரிந்தது.

''சாந்தி, நா மறுபடியும் நடப்பேனு?''

அவள் அவன் பார்வையைத் தவிர்த்தாள்.

''அநேகமா நடக்கலாம்.''

''நடக்க முடியாமப் போனு?''

அவள் மேலே பேச ஆரம்பிக்கையில் அதை வெட்டிக் கொண்டு அவனுடைய கேள்வி எழுந்தது.

''கால் சுவாதீனமே இல்லாமப் போயிடுச்சுன்னு ஆயுசுக்கும் நீங்க என்னைக் கவனிச்சுப்பீங்களா?''

(தொடரும்)

உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தியின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும் காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம் நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப் படியவைத்து அதற்குத் தேவையான எல்லா ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம் உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும் தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
Halo
SHAMPOO

AVM
SOVEREIGN MARK
AVM SOVEREIGN MARK COCOANUT OIL
Nett 1 Kilo
AVM Sovereign Mark
COCOANUT OIL
AVM
பவுன் மார்க்
தேங்காய் எண்ணை
பரிசுத்தமானது! பிரசித்தமானது
சுவைமிக்க மொறு, மொறு உணவு படைக்கவும், கரு கரு கூந்தல் வளரவும் சிறந்தது AVM பவுன் மார்க் தேங்காய் எண்ணை. சுத்தமும், சுகாதாரமும் கொண்ட தயாரிப்பு.
16, 4, 1.5 கிலோ டின்களிலும், 1 கிலோ, 500 கிராம் அழகிய பிளாஸ்டிக் கேன்களிலும், கையடக்க பிளாஸ்டிக் பாட்டில்களிலும் கிடைக்கின்றன.
தயாரிப்பாளர்கள்:
AVM மாரிமுத்து நாடார் & சன்ஸ்
தூத்துக்குடி-628 001
ADWAVE/AVM/1692

அந்தி நேரத்து உதயங்கள்

வாஸந்தி

7

அவள் தூக்கி வாரிப் போட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவளுடைய திகைப்பு அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. கூடவே இப்படி ஒரு கேள்வியை முன் பின் தெரியாத ஒரு பெண்ணிடம் எப்படிக் கேட்டோம் என்று கூச்சம் மேற்பட்டது.

தன் கூச்சத்தை மறைக்கப் பார்க்கிறமாதிரி அவன் சற்று மிகையாகச் சிரித்தான்.

''பார்த்தீங்களா? எத்தனை பயந்துட்டீங்க! ஒரு விளையாட்டுப் பேச்சுக்கு நீங்க பயந்தீங்கன்னு மாயா நிஜத்தைக் கண்டு எத்தனை பயப்படணும்?''

திகைப்பில் உயர்ந்திருந்த புருவங்கள் கீழே இறங்கினாலும் அவள் முகத்தில் யோசனைக் கோடுகள் தெரிந்தன. அவள் மெல்லிய குரலில் கேட்டாள்:

''என்ன நடந்தது ஹரி? மாயா என்ன சொன்னாங்க?''

அவன் சொன்னான். மாயாவின் குரல் மாதிரி தனதைச் சன்னமாக்கி—

''உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு ஹரி. விஷ் யூ ஆல் தி பெஸ்ட்.''

சாந்தி சிரித்தாள்.

''அவங்க சொன்னதிலே ஏதும் தப்பிருக்கிறதா எனக்குத் தெரியல்லியே?''

அவனுக்குச் சுரீரென்று ஆத்திரம் வந்தது. இவளும் இவளது சிரிப்பும்!

''சொன்னதிலே ஏதும் தப்பில்லே. என் முகத்தையே பார்க்காம ஸ்கிரீனுக்கு அந்தண்டை நிற்கிற யாரோ ஆளைப் பார்த்து துண்டு மூணும் மனுஷி மாதிரி சொன்னது தப்பு. சொன்ன கையோட டாட்டா சொல்லிட்டுப் போனது தப்பு.... அவ வர வரைக்கும் அவளை எப்பப் பார்க்கப் போறோம்னு ஆத்திரப்பட்டுட்டிருந்தேன். பாவம் ரொம்பக் கலங்கிப் போவா. எனக்காகத் துடிச்சுப் போவா. அவளை எப்படிச் சமாதானப் படுத்தறதுன்னு யோசனை செய்துண்டிருந்தேன்.''

''அவங்க மனசிலே கலக்கம் இல்லாம இல்லேஹரி.''

''கலக்கம் எதுக்கு? தன்னுடைய எதிர் காலத்தைப் பத்தித்தான் கலக்கம். நினைச்சதெல்லாம் நடக்காமப் போயிடுமேன்னு கலக்கம். எனக்கு இப்படி ஆயிடுத்தேன்னு இல்லே. 'எப்படிப் பட்டது, எங்கே பட்டது, வலி எப்படி இருக்கு, நா உன் பக்கத்திலேயே இருக்கேன். கவலைப்படாதே'ன்னு ஒரு வார்த்தை இல்லே. அதிகம் பரிச்சயம் இல்லாதவா வீட்டுக்குத் துக்கம் விசாரிக்கப் போன பேந்தப் பேந்த முழிப்போமே அந்த மாதிரிநிற்கிறா.''



மற்ற நோயாளிகளைக் கவனிக்கச் சாந்தி போக வேண்டும் என்று அவனுக்கு உறைத்தாலும், அவன் ஏதோ ஒரு உள்ளுணர்வின் பிடிவாதத்தில் அவளுடன் பேச்சுக் கொடுத்தான். சொல்லத் தெரியாத துக்கத்தில் தொண்டை வறண்டு போயிற்று. எதற்காக அதிகம் பரிச்சயமில்லாத இவளிடம் போய் நமது அந்தரங்கமான வேட்கைகளை வெளிக் கொணர்கிறோம் என்கிற உறுத்தலையும் மீறிக் கொண்டு அவன் வெடித்தான்.

''எனக்கு நினைவு வந்ததும் முதல்லே நினைவுக்கு வந்ததே அவ பேருதான். அத்தனை நெருக்கம் அவகிட்டே எனக்கு. அவளுடைய அப்பா என்னைப் பார்க்கும்போதெல்லாம் மாப்பிள்ளைம்பார். இப்ப என்னைப் பார்க்கவே பயந்துண்டு ஸ்கிரீனுக்கு அந்தண்டை இருந்து கொண்டு பெண்ணுக்கு ஸிக்னல் கொடுக்கிறார்.''

அவன் சட்டென்று பெரிதாகச் சிரித்தான்.

''இதிலே இருக்கிற அசம்பாவிதம் என்ன தெரியுமோ? இந்த நிமிஷத்தைப் பத்திதான் எனக்குக் கவலை. அவருக்கும் அவர் பெண்ணுக்கும் எப்பவோ வரப் போகிற நிமிஷத்துக்காக பயம்,கவலை... முதுகை இரண்டாகப் பிளந்துண்டு படுத்திருக்கிறவனுக்கு எந்த மாதிரி எதிர்பார்ப்புகள் இருக்க முடியும்? இதை ஏன் அவ்ங்க புரிஞ்சுக்கல்லே? பிரியம் இருக்கிற மாதிரி, கரிசனம் இருக்கிற மாதிரி கொஞ்ச நாளைக்கு நடிக்கவாவது கூடாதா?''

அவளுடைய கை மிருதுவாக அவன் தோளைத் தொட்டது.

''உங்களை நிதானப்படுத்திக்குங்க ஹரி.''

அவன் சட்டென்று சுய நினைவுக்கு வந்தான். அவனுடைய குரல் சராசரிக்குமேல் எழும்பி மற்றவர்கள் பார்வையையும் கவனத்தையும் ஈர்த்திருந்தது. மெல்லிய குரலில் ''ஸாரி'' என்றான்.

''எனக்கு என்ன ஆச்சுன்னு புரியல்லே.''

''எனக்குப் புரியறது'' என்று அவள் மறுபடி புன்னகைத்தாள். ''இந்த மாதிரி ஆக்ஸிடெண்ட் ஆனவங்க

எல்லாம் கத்தற கத்தல்தான் இது.''

''எல்லாருக்கும் என் மாதிரி நிலைமை இருக்காது.''

''மத்தவங்களுக்கு வேறே மாதிரி நிலைமை இருக்கலாம். மொத்தத்திலே எல்லோருக்கும் ஒரு மன அதிர்ச்சி ஏற்படும். 'ட்ருமா'ன்னு கேள்விப்பட்டதில்லே?''

''ட்ருமா தெரியாது. ட்ராமாதான் கண்ணுக்குத் தெரியறது.''

சட்டென்று சாந்தி விறைத்துக் கொண்டு நின்றதை அவன் கவனித்தான். பலவித பூட்ஸ் ஒலிகள் கேட்டன. டாக்டர்கள், மருத்துவ மாணவர்களாய் ஒரு சின்னக் கூட்டம். ஒவ்வொரு படுக்கைக்குப் பக்கத்திலும் சில நிமிஷங்கள் நின்றன.

சாந்தி அவனுடைய படுக்கையை மறுபடி அவசரத்துடன் சீர்செய்தாள். காத்தீடர் சரியாக இருக்கிறதா என்று ஆராய்ந்தாள்.

''இந்த டிபார்ட்மெண்டின் தலைமை டாக்டர் வர்மா'' என்றாள் மெள்ள.

டாக்டர் வர்மா அமர்க்களமான உற்சாகத்துடன் கைத்தடியை ஊன்றியபடி அவனைப் பார்த்து, ''ஹல்லோ யங் மேன்'' என்றார். ''வாழ்க்கை எப்படி இருக்கிறது?'' என்றார் ஹிந்தியில்.

அவன் லேசாகச் சிரித்தான்.

''வாழ்வு என்பது இடுப்புக்குக் கீழ்தான் என்று இப்பொழுது புரிகிறது.''

அவனை வழக்கமாகப் பார்க்கும் டாக்டர் சங்கடத்துடன் பெரியவரிடம் அடிக் குரலில் சொன்னார்:

''கம்ப்ளீட் லோ பாரப்லீஜியா. ஃப்ராக்சர் ஆஃப் தி நைந்த் தொராஸிக் வர்டிப்ரா—ஃபர்ஸ்ட் அண்டு ஸெகன்ட் லம்பார் ஸெக்மெண்ட்ஸ் டாமேஜ்ட்.''

வர்மா கண்ணை மூடிக் கொண்டு கைத்தடியின் மேல் இரண்டு கைகளையும் கவிழ்த்தபடி தலையாட்டிக் கொண்டிருந்தார்.

தொடர்ந்து சில விநாடிகள் வார்த்தைப் பரிமாறல்கள் நடந்தன.

வர்மா சட்டென்று கனவிலிருந்து விழித்துக்கொண்டவர் போல் விழித்துக் கொண்டு அவனைத் தீர்க்கமாகப் பார்த்த பிறகு அதீதமாய்ப் புன்னகை உதிர்த்தார்.

''பழைய செருப்பை ரிப்பேர் பண்ணி... புதுசு மாதிரியே ஆக்கித் தரலாம் என்கிறியே - அது எப்படியப்பா சாத்தியம்?''

''காலைக்கடிச்சால் பணம் கொடு சார். இல்லாட்டிப் போனா வேண்டாம்! அப்புறம் என்ன...?'' - பெ. கலாசாமி

''கொஞ்சம் கூட அசையாமல் படு திருக்க வேண்டும் என்ன?''

அவரை அறையலாம் போல் எழுந்த ஆ திரத்தை அடக்கிக் கொண்டு அவன் கே டான்:

''எத்தனை நாளைக்கு?''

''ஓ, இன்னும் சில நாட்களுக்கு.''

''அப்புறம்?''

''அப்புறம் சரியாகி விடுவீர்கள். அந்தக் கவலை எங்களுக்கு. உங்களுக்கில்லை. இந்த டிபார்ட்மெண்டுக்கு வந்தப்புறம் கையையும் காலையும் புதுசா ஒட்ட வெச்சாவது அனுப்புவோமே தவிர ஸ்ட்ரெச்சர்லே வீட்டுக்கு அனுப்ப மாட்டோம்.''

அடுத்த விநாடி அவர் இங்கு இல்லை. மற்ற படுக்கைகளுக்கு விசிறிகள் புடைசூழச் சென்று கொண்டிருந்தார்.

திடீரென்று அவனுக்கு அங்கு படுத்திருந்த எல்லாரையும் நினைத்து தன்னையும் நினைத்துப் பரிதாபமாக இருந்தது. இங்கு படுத்திருப்பவர்களின் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் மிகப் பைத்தியக்காரத்தனமானவை என்று தோன்றிற்று.

அவன் ஆயாசத்துடன் கண்களை மூடிக் கொண்டான்.

இன்னும் எத்தனை நாட்கள்? அல்லது எத்தனை மாதங்கள்?

மாதங்கள்—

இப்படியே கட்டிலோடு கட்டிலாய்ப் படுத்திருப்பது சாத்தியமா? நேரத்தைத் தோளில் சுமந்து கொண்டு ஓடினவனுக்குச் சாத்தியமா?

வேறு வழியில்லை. மாயாவைப் பார்க்க ஓடவேண்டிய அவசியமும் கூட இல்லை இப்பொழுது.

மறுபடி தொண்டையில் பந்தாக ஏதோ ஒன்று வந்து உட்கார்ந்தது. கண்களில் தளும்பாத நீர் முள்ளாக விளிம்பில் குத்திற்று. அவனுடைய கைக்கருகில் வைக்கப்பட்டிருந்த அழைப்பு மணியை அவன் அழுத்தினான். சிறிது நேரத்தில் சாந்தி வந்து நின்றாள்.

''என்ன வேணும்?''

நீர் வேண்டும் என்று அவன் செய்கை காட்டினான்.

அவள் நீரைக் கொடுத்தபடி மென்மையாகக் கேட்டாள்.

''ஏன் என்னவோ மாதிரி இருக்கீங்க?''

''ஒண்ணுமில்லையே. என்னுடைய நிலைமையிலே நா எதுக்கு என்னவோ மாதிரி இருக்கணும்?''

அவள் அவனை யோசனையுடன் பார்த்து விட்டு முறுவலித்தாள்.

''டாக்டர் வர்மா சொன்னதைக் கேட்டீங்க இல்லே?''

''ப்ளீஸ், எனக்கு எந்தவித சமாதானமும் வேண்டாம். வாயாலெ பேசறது ரொம்ப சுலபம்.''

''பொறுப்பில்லாத பேச்சை யாரும் இங்கே பேச மாட்டாங்க ஹரி. டாக்டர் வர்மாவுக்குச் சொந்த அனுபவமும் உண்டு. அவருக்கு ஒரு கால் இல்லே!''

அவன் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான். ''பார்த்தால் நன்னா யிருக்காரே?''

மங்கையர் மலர்

நங்கையர் விரும்பும் ஒரே மலர்!



''ஆமாம். ஆனா ஒரு கால் மரக்கால். முழங்காலுக்குக் கீழே.''

''ஏன்?''

''முட்டி எலும்பில் கான்ஸர் வந்துடுத்து. காலை வெட்டாவிட்டால் உயிருக்கே ஆபத்து என்கிற நிலையிலே வெட்டிட்டாங்க. இப்பப் பாருங்க, முன்னை விட உற்சாகமா வேலை செய்யறார்.''

''ஐ ஆம் நாட் இம்ப்ரெஸ்ட்'' என்று அவன் கண்களை மூடிக் கொண்டான்.

''எனக்கு ரெண்டு காலும் இல்லே. இடுப்பிலேர்ந்தே இல்லே.''

''ஐயோ கடவுளே!'' என்றாள் அவள்.

''கண் தெரியுது. காது கேக்கறது. வாய் பேசறது. கையை அசைக்க முடியறது. எல்லாத்துக்கும் மேலே மூளை வேலை செய்யுது இல்லே? இத்தனை உறுப்புக்களையும் வெச்சுண்டு முகத்தைத் தொங்கப் போட்டுக்கறீங்களே? இதெல்லாம் கூட இல்லாதவங்க இருக்காங்க தெரியுமா?''

அவனுள் சுறுசுறுவென்று கோபம் ஏறிற்று. அவன் திடீரென்று கத்தினான்.

''ஐ டோன்ட் கேர். எனக்கு என் கவலை தான் முக்கியம். மத்தவங்களைப் பத்தி நா எதுக்குக் கவலைப்படணும்?''

மறுபடியும் பார்வைகள் அவன் மேல் பதிந்தன. ஸ்டாஃப் ரூமிலிருந்து சில தலைகள் எட்டிப் பார்த்தன.

அவன் குரலையும் பார்வையையும் இறக்கிக் கொண்டான். ''தண்ணி வேணும்.''

அவள் பதில் பேசாமல் நீருடன் ஒரு மாத்திரையையும் கொடுத்தாள்.

நெற்றியை லேசாகத் தட்டியபடி,

''கொஞ்ச நேரம் எதைப் பற்றியும் யோசனை பண்ணாமல் தூங்குங்க ஹரி'' என்று விட்டுச் சென்றாள்.

அவன் மறுபடி கண் விழித்தபோது அந்த நீள அறையின் ஜன்னல் வழியே வெய்யில் கீழிறங்கி யிருந்தது. சட்டென்று அவன் கவனம் திரும்பியது. கட்டிலருகில் மோகன் அகர்வால் நின்றிருந்தான். ஹரியின் பார்வையைச் சந்தித்தும் லேசாக ஒரு சங்கடத்துடன் சிரித்தான்.

''ஹாய்!''

''ஹாய்!''

''எப்படி இருக்கே?''

''வெரி ஃபைன். இப்பத்தான் என் ஞாபகம் வந்ததா?''

''மூணு நாளா வரேன். முதல் நாள் உனக்கு பிரக்ஞை இல்லே. இரண்டு நாளா நான் வரும்போது தூங்கிண்டிருக்கே. இன்னிக்கும் தூங்கிண்டிருந்தே.''

''இந்த நர்ஸோட காரியம். என்னைப் பார்த்துக்கறது அலுத்துப் போச்சுன்னு தூக்க மாத்திரையைக் கொடுத்துட்டுப்போயிடறா!''

''ஓய்வு உனக்கு ரொம்ப அவசியம் ஹரி.''

''பரிகாசம் பண்ணாதே. இப்ப ஓய்வைத் தவிர வேறு என்ன இருக்கு எனக்கு?''

அகர்வாலின் கண்களில் உண்மையில் பச்சாதாபம் தெரிந்தது.

''அந்தப் பாழாப்போன மீட்டிங்குக்கு இருக்காம என்னோட வந்திருந்தேன்னா உனக்கு இப்படி ஆகியிருக்காது...''

ஹரி பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டவன் போல் சிரித்தான்.

''மீட்டிங் மேலே என்ன தப்பு? அந்த நாடகத்தைப் பார்க்க ஓடினேன் பாரு அதிலே தான் வந்தது தப்பு. நா எத்தனை பெரிய முட்டாள்னு இப்பத்தான் புரியறது. அகர்வால் யு நோ ஸம்திங்? எனக்கு ஆக்ஸிடெண்ட் ஆற சமயத்திலே நா யாரைப் பத்தி நினைச்சேன் தெரியுமா? உங்கக்காவைப் பத்தி. அவ பண்ற கர்வாசௌத்தைப் பத்தி....''

''தட்ஸ் ஃபன்னி! இனிமேல் அக்கா கர்வா சௌத் பண்ண மாட்டாள்!''

''ஏன்?''

''உனக்கு ஆக்ஸிடெண்ட் ஆன கிட்டத்தட்ட அதே நேரத்திலே அவளுடைய புருஷன் போயிட்டான். வேறே ஒரு ஆக்ஸிடெண்ட்லே!''

ஹரி அதிர்ந்து போய், அவனைப் பார்த்தான்.

''என்னது? நம்ம எம். டி.யா?''

''ஓ ஸாரி. உங்கிட்டச் சொல்லக்கூடாதுன்னு நினைச்சேன். உளறிட்டேன். ஹரி, அவன் போனதாலே யாருக்கும் நஷ்டமில்லே.''

அவனால் ஏதும் பதில் சொல்ல முடியவில்லை. அதிர்ச்சியிலிருந்து மீள்வது கஷ்டமாக இருந்தது.

''அவனுடைய சாவைப் பத்தித் தெரிஞ்சபோது அத்தனை அக்கிரமம் செஞ்சவனுக்கு வேற மாதிரி சாவு ஏற்பட முடியாதுன்னு காரணம் சொல்லிண்டேன். ஆனா நீ என்ன காரணத்துக்காக இந்த மாதிரி மாட்டிண்டே? ஒரு பாவமும் அறியாத அப்பாவி — எனக்குச் சத்தியமாப் புரியல்லே!''

''மாட்டிக்கல்லேன்னா எனக்கு இப்பக் கிடைச்சிருக்கிற ஞானோதயம் கிடைச்சிருக்காது.''

அவன் அதரங்களில் புன்னகை நெளிந்தாலும் கண்களில் நீர் நிறைந்தது.

(தொடரும்)

குழந்தைக்கு மிகவும் சிறந்தது தாய்ப்பால்.

நீங்கள் புட்டிப்பால் கொடுக்கும் அவசியம் நேரும்போது கவனமாய் இருங்கள்.

கீழ்க்காணும் 5 முக்கியமான குறிப்புகளைப் பின்பற்றுங்கள்...

1. தொற்று கிருமிகளைத் தவிர்த்திடும் வகையில் பீடிங் பாட்டில், நிப்பிள், மற்றய பாத்திரங்கள் ஆகியவற்றை நன்கு சுத்தம் செய்து நீரிலிட்டுக் கொதிக்கச் செய்யவும். இல்லையெனில் பாலில் எளிதில் கிருமிகள் தோன்றிவிடும்.

2. நீரை பத்து நிமிடம் தொதிக்க வைத்து, உடல் வெப்பத்தைவிட சிறிது அதிகமாகவே ஆற வைத்த பின் பால் பவுடரைக் கலக்கவும்.

3. அதிக நீரை கலந்திடாதீர்கள், அதனால் சத்து குறைந்து விடலாம். டின்னின் மேல் கொடுத்துள்ள பால் புகட்டும் அட்டவணையைப் பின்பற்றவும்.

4. ஒவ்வொரு முறையும் குழந்தைக்குப் புதிதாக பாலைத் தயாரிக்கவும். மீந்துவிட்ட பாலை குழந்தைக்கு கொடுக்காதீர்கள், அதில் கிருமிகள் தோன்றி கெட்டுவிடுகிறது.

5. டின்னின் மேல் கொடுத்துள்ள எல்லா விதிமுறைகளையும் பின்பற்றவும். ஏதாவது சந்தேகம் இருப்பின் டாக்டரிடம் ஆலோசனை கேட்கவும்.

வாங்குவீர் க்ளாக்ஸோ சன்ஷைன்—நம்பகமான குழந்தைப் பாலுணவு

க்ளாக்ஸோ சன்ஷைன் சரிவிகித ரீதியில் சரியான அளவு புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட், வைட்டமின்கள், தாதுப்பொருட்கள், இரும்புச்சத்து போன்றவற்றைக் கொண்டது. இது சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு, டின்னில் அடைக்கப் படுகிறது. குறிப்பாக குழந்தைகளின் இளம் ஜீரண சக்திக்கு ஏற்றது.

க்ளாக்ஸோ

—தாய்மார்களின் நம்பிக்கைக்குறியது.

குழந்தைக்கு மிகவும் சிறந்தது தாய்ப்பால்

ASGLS-1-203 TAM



Agfa Photography at f/5·6

The Agfa Isoly II takes perfect snapshots in dim, soft light. Open the aperture wide to f/5.6 to get as much light as possible to the film. Set the shutter at 1/30 second, slow enough to allow correct image registration. Shoot from a distance of 1.83 m. with the Isoly firmly on a tripod. Use slow film for greater sharpness— 125 ASA. The result? A perfect picture in low light.

The Agfa Isoly II is a great all-round camera. You simply adjust settings, distance and film to freeze a sports scene forever, capture every detail, near or distant, of a landscape or get close enough to snap a leopard snarling!

The Agfa Isoly II is built to German specifications and undergoes over 100 exacting tests.

See this fine camera today at your friendly Agfa-Gevaert dealer.

Agfa® **ISOLY-II**

for professional results.

Agfa® AGIL

1st for everything in photographics

AGFA-GEVAERT INDIA LIMITED

Registered Office: Merchant Chamber, 41 New Marine Lines, Bombay 400 020 • Branches: Bombay New Delhi • Calcutta • Madras • ® Registered Trademarks of Agfa-Gevaert, Antwerp/Leverkusen.

SIMOES/AGIL/1A/81

மோஹன் அகர்வால் மற்ற நோயாளி களைப் பார்க்கிற மாதிரி பாவனை செய்தான்.

''இங்கே இருந்தா மனசிலே இருக்கிற கொஞ்ச நஞ்ச தைரியமும் போயிடும் போல இருக்கு ஹரி.''

''போகல்ல. உசிரோடயே செத்துப்போயிட்ட மாதிரி இருக்கு.''

''எனக்குப் புரியல்லே.''

''நரகத்துக்கு வந்திருக்கிற மாதிரி இருக்கு. திரும்பின இடமெல்லாம் கையில்லாமெ, கால் இல்லாமெ முனகலும் கத்தலும் அழுகையும்.... உன்னை மாதிரி யாராவது எங்களைப் பார்க்க வந்தாத்தான் இந்த நரகத்திலே கொஞ்சம் ரிலீஃப்.''

''நான் அந்த ரிலீஃப்பைத் தரத் தயாராயிருக்கேன் ஹரி.''

ஹரி விட்டத்தைப்பார்த்துவிட்டுக் கண்ணை மூடிக் கொண்டான்.

''வேண்டாம்ப்பா. அப்புறம் இங்கே வரணும்கிற எண்ணமே உனக்குப் வராமாப் போயிடும். அந்தப் பாரமே உன்னை எங்கிட்டேருந்து பிரிச்சுடும்.''

அகர்வால் சமாதானமாக அவன் தோளைத் தட்டினன்.

''அரே கமான் யார்! வாட் இஸ் த ப்ராப்ளம்?''

''இங்கே வர்ணும்கிறதை ஒரு கட்டாய வேலையா நினைச்சுண்டு, நிர்ப்பந்தமா நினைச்சுண்டு வராதேன்னேன்''

''ஹரி, என்னை நீ இன்னும் புரிஞ்சுக்கல்லே.''

ஹரி கண்ணை மூடியபடியே சிரித்தான்.

''யாருடைய மனசு எப்படி மாறும்னு யாரும் சொல்ல முடியாது மோஹன்.''

மோகன் அகர்வால் அவனைக் கூர்ந்து பார்த்தான்.

''மாயா வரலையா உன்னைப் பார்க்க?''

இவனுடைய புத்தி தீட்சண்யமானது என்று ஹரி தனக்குள் நினைத்துக் கொண்டான்.

''வந்திருந்தா. வந்து தன் பயத்தைத் தெரிவிச்சுட்டு டாட்டா சொல்லிட்டுப் போயிட்டா.''

அகர்வால் விரல்களால் கட்டில் மேல் தாளம் போட்டான்.

''அவளுக்கும் அதிர்ச்சியாயிருக்கும்.''

''ரொம்ப.''

''ப்ளீஸ். உன்னை நிதானப்படுத்திக்கோ. என்ன நடந்தது?''

''ஒண்ணுமில்லே விடு. இனிமே அவ பார்க்க வரதை அவளுடைய அப்பன் அனுமதிக்க மாட்டான்.''

''அவசரமா நீ எந்த முடிவுக்கும் வரக் கூடாது ஹரி.''

அவன் சிரித்தான்.

''இந்த மாதிரி நிலையிலே நான் எதுக்கு அவசரப்படணும்? மோஹன், கம்ப்ளீட் லோ பாராப்லீஜியான்னு என்னன்னு தெரியுமா?''

''தெரியாது.''

''இடுப்புக்குக் கீழே சுவாதீனமே இருக்காதுன்னு அர்த்தம். அதாவது எனக்கு.''

மோகன் தன் அதிர்ச்சியைச் சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டான்.

''டாக்டர் சொன்னாரா?''

''எங்கிட்டச் சொல்லலே. பாக்கி எல்லார் கிட்டேயும் சொல்லிண்டிருக்கார்.''

''உங்கிட்ட என்ன சொன்னார்?''

''காலை ஒட்ட வெச்சாவது வீட்டுக்கு அனுப்புவோம். ஸ்ட்ரெச்சர்ல அனுப்ப மாட்டோம்கிறார். இதெல்லாம் என்னைச் சமாதானப்படுத்தற வார்த்தைகள். இனிமே எனக்கு நடக்க முடியும்னு தோணல்லே. மோகன்.''

''ஹரி, நீ இப்படி அதைர்யப் படக் கூடாது.''

அவன் வாய் விட்டுச் சிரித்தான். ''அதைர்யமா? ஒரு நிஜமான விஷயத்தைச் சொல்றேன் மோகன். நீ ஒரு காரியம் செய்யணும் எனக்கு. எனக்கு க்ராட்சுவட்டி, ப்ராவிடண்ட் ஃபண்டு எல்லாம் எத்தனை தேறும்னு பார்க்கணும். அதை யெல்லாம் பாங்கிலே போட்டு அதில வர்ற வட்டியிலேதான் நான் இனிமே மீதி நாளைக் கழிக்கணும்.''

''அதுக்கெல்லாம் இப்போ அவசரமில்லே ஹரி. நான் சொல்றதைக் கேளு. உனக்கு லீவுக்குக் குறைச்சல் இல்லே. ஆறு மாசம் லீவிலே இரு. இப்ப ஆஸ்பத்திரி செலவெல்லாம் ஆபீஸ் பார்த்துக்கும். ஆஸ்பத்திரிலேருந்து டிஸ்சார்ஜ் ஆற சமயத்துக்கு உன் நிலைமை எப்படி இருக்குன்னு பார்ப்போம்.''

''எப்படியும் ஆபீஸ்லே பழைய வேலை செய்ய முடியாது என்னாலே.''

''இப்பவே எந்த முடிவுக்கும் வராதே ஹரி.''

''ஓ.கே. ஓ.கே. அப்புறம் என்னுடைய மோட்டார் சைக்கிள் என்ன ஆச்சு?நான் அதை மறந்தே போனேன். ரொம்ப டாமேஜ் ஆகியிருக்கா?''

''இல்லே. கொஞ்சம் நசுங்கியிருக்கு. கண்

ணுடி உடைஞ்சிருக்கு. போலீஸ் கஸ்டடியிலே இருக்கு. நீ ஆத்தரைசேஷன் லெட்டர் கொடுத்தால் நான் அதை வாங்கி உன் வீட்டிலே வெச்சுடறேன்.''

''என் வீட்டிலே வெக்க வேண்டாம். நீ வெச்சுண்டு என்ன ரிப்பேர் பண்ணணுமோ பண்ணி நல்ல விலே வந்தா வித்துடு. பணத்தைப் பாங்கிலே போட்டா வட்டியாவது வரும்.''

மோகன் சங்கடத்துடன் சிரித்தான். ''என்னது நீ வட்டி வட்டின்னு சரியான மார்வாடி மாதிரி!''

''ஆமாம். முன்னே நேரம் எனக்கு ரொம்ப முக்கியமா இருந்தது. இப்போ பணம் ரொம்ப முக்கியம். என் தேவைகளைக் கவனித்துக்கொள்ள நான் இனிமே ஒரு ஆளை வேறே வெச்சுக்கணும். ஆயுஸு்க்கு.''

சில விநாடிகள் மோகன் பேசாமல் இருந்துவிட்டுப் பிறகு எழுந்தான்.

''சியர் அப் ஹரி. நீ நினைக்கிற அளவு நிலைமை மோசமாஇருக்காது. நான் அடிக்கடி வருவேன். வெதர் யூ லைக் இட் ஆர் நாட்.''

அவன் கண்ணைத் திறக்காமல் ''தாங்க்யூ'' என்றான்.

பூட்ஸின் ஒலி மெல்ல மெல்ல தொலைவுக்குப் போய்விட்டது.

மோகன்வந்து போனது இரண்டுநாளாக மனத்தை உறுத்திக் கொண்டிருந்த உறுத்தலுக்குச் சற்று சமாதானமாக இருந்தது. ஆத்திரக்காரன். ஆனால் நல்லவன். உதவக் கூடியவன் அவன் ஒருத்தன்தான் என்று உணர்கையில் இத்தனை பெரிய உலகத்தில் தான் திடீரென்று எப்படி இப்படித் தனியாகிப் போனேம் என்று திகைப்பாக இருந்தது.

அந்த மாயாவிடம் எத்தனை குறும்பு செய்திருப்போம்! நாளைக்கு மனைவியாகப் போகிறவள் என்கிற சுதந்திரத்தில் எத்தனை உரிமை எடுத்துக் கொண்டிருப்போம்! அதையெல்லாம் அவள் அத்தனை சுலபமாக மறந்துவிடுவாளா? சமய சந்தப்பம் தெரியாமல் நம் நினைவைத் தாக்கும் நினைவுகள் அவளையும் தாக்காதா?

''நான் எந்த வகையிலே உனக்கு உதவறதுன்னு புரியல்லே!'' என்று உபகாரமாகச் சொல்லிவிட்டுப் போனவள் பிறகு வரவில்லை.—

ஒவ்வொரு தடவையும் இந்தப் பிரக்ஞை அவனை ஒரு உலுக்கு உலுக்கிற்று.

அவள் நம் எதிரில் இந்த அகர்வால் உட்கார்ந்திருந்த தொலைவில் உட்கார்ந்திருந்தால் போதும் என்று அவளுக்கு ஏன் புரியவில்லை? அந்த மிருதுவான கையின் ஸ்பரிசம் நம்மேல் பட்டால் மனத்தில் ரணம் ஆறும் என்று—

''உன் தலை என்ன கனம் கனக்கிறது ஹரி!''

''அதிலே விஷயம் இருக்கு பெண்ணே!''

''கல்லோ களிமண்ணோ, இருக்கும்.''

''இந்தக் களிமண்ணை நம்பித்தான் எங்க கம்பெனியே ஓடறது!''

''ஆ, இப்பப் புரியறது. இந்தக் கனம் மண்டைக் கனம்!''

அவள் மடியில் படுத்தபடி அவள் முகத்தைப் பார்ப்பது ரொம்ப சுவாரஸ்யமான அனுபவம். செதுக்கினாற்போன்ற அந்த மூக்கைத் தொட்டு மிருதுவான உதடுகளுக்கு விரைந்து மென்மையான கழுத்தில் விரல்கள் இறங்கி அந்த எடுப்பான மார்பகத்தில் பிரேக் போட்டு நிற்கையில்—

''ஏய், இது இந்தியா கேட். பலபேருக்குக் கண் உண்டு.''

அவள் அவன் விரல்களை அகற்றாமலே சுணுங்குவாள்.

''புறாவுடைய கழுத்துத்தான் இத்தனை ஸாஃப்டா இருக்கும்.''

''ஸ்டாப்இட், ஹரி!''

இதையெல்லாம் எப்படி மறப்பே நீ? இல்லே மறக்க முடியாது என்கிற பலவீனத்திலேதான் எதிரே வரப் பயப்படறியா?

மாயாஇதை நான் உன்கிட்டேந்து நிச்சயம் எதிர்பார்க்கல்லே. இனிமே நான் அந்த மாதிரி சேஷ்டை யெல்லாம் நிச்சயம் செய்ய மாட்டேன். அதுக்கெல்லாம் அந்த உணர்வுகளுக்கெல்லாம் ரொம்ப மேலே என் மனசு பறந்தாச்சு. எனக்கு உன்னுடைய தோழமை வேணும். இத்தனை நாளா நம்மிடையே இருந்த நெருக்கத்தின் காரணத்துக்காக! இரண்டு வருஷமா உனக்கு நான், எனக்கு நீன்னு மனசிலே பின்னியிருந்த அன்னியோன்னியத்துக்காக! நீ யாரை வேணும்னாலும் கல்யாணம் பண்ணிக்கோ! எனக்கு சினேகிதன் என்கிற ஸ்தானத்தை மட்டும் கொடு! அதுவே உனக்குப் பாரமாகிப் போகுமா?

''மிஸ்டர் ஹரி! மிஸ்டர் ஹரி!''

அவன் திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்தான்.

''வலிக்கிறதா?'' இரவு நர்ஸ் ஊர்மிளா.

''எது?''

''உடம்பு?''

''பொறுக்க முடியாம இல்லே.''

அவள் எதுவும் சொல்லாமல் கைத் துண்டினால் முகத்தைத் துடைத்தாள்.

''தூக்கத்தில் அழுதீர்களா? கனாக் கண்டீர்களா?''

''இருக்கலாம்.''

அவள் வேறு ஒரு நர்ஸின் உதவியுடன் அவன் படுக்கையைச் சரி செய்தாள். நேநீரைக் கொடுத்து முகத்தைத் துடைத்தாள். சாந்தியின் கைகளுக்கு இருக்கும் மென்மை இவளுக்கு இல்லை.

''சாந்தி அதற்குள் போய்விட்டாளா?''

''அதற்குள்ளேயா? ஐந்தரை மணி ஆகிறது. அவள் வீடு போய்ச் சேர ஆறரை ஆகிவிடும். புருஷனிடம் நல்ல 'லடாய்' ஆகப் போகிறது இன்னிக்குப் பாவம்.''

''அவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?''

''ஓ யெஸ். ஆகியிருக்கிறது, ஒரு மிருகத்துடன்!''

இரண்டு நர்ஸ்களும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

''அவள் எப்படி அப்படிச் சிரிக்கிறாள் என்று ஆச்சரியமாக இருக்கிறது ஊர்மி!''

''நடிக்கிறாள்!''

இருவரும் வேறு கட்டிலுக்குப் பேசியபடியே நடந்தார்கள்.



TWO MINUTE WARNING

இரண்டு நிமிட எச்சரிக்கை!

அமெரிக்கா. லாஸ் ஏஞ்சலஸ் நகரம். விளையாட்டு அரங்கு.
எங்கு திரும்பினுலும் ஜனசமுத்திரம். அமெரிக்க பாணி
கால் பந்து விளையாட்டில் வெற்றிக் கோப்பையைப் பெற இரண்டு புகழ்பெற்ற அணிகள் மோதுகின்றன. ஆட்டத்தின் நேர்முக வர்ணனை தொலைக் காட்சியில் தொடர்கிறது. அரங்கின் உச்சி மாடியில், ஓர் உருவம் தொலை நோக்கியுடன் கூடிய துப்பாக்கியின் பாகங்களை இணைத்துச் சரி பார்க்கிறது. எதிர்பாராத விதமாகத் தொலைக் காட்சி காமிரா அவனைக் காட்டிக் கொடுத்து விடுகிறது. வன்முறைகள் மலிந்த இந்த சகாப்தத்தின் சின்னமாக விளங்கும் அவனுடைய நோக்கம் என்ன? குறிப்பிட்ட யாரையேனும் தீர்த்துக்கட்ட வந்திருக்கிருனு அல்லது மனம் போனபோக்கில் மக்களை சுட்டுத் தள்ளப் போகிருனு? கவர்னர் உள்ளிட்ட பல பிரமுகர்கள் அரங்கிலே இருக்கிருர்கள். ஜனுதிபதி வந்து கொண்டிருக்கிருர். இந்தச் சூழலில் போலீஸ் உயர் அதிகாரி செயல்பட ஆரம்பிக்கிருர். பொதுமக்கள் பீதியடையாவண்ணம் ரகசியமாகப் போலீஸ் படை கொலைகாரனை ஒழித்துக்கட்டத் தயாராகிறது. ஆட்டம் முடிவதற்குச் சில விநாடிகள் முன் தன் இலக்கை நோக்கிச் சுட்டுவிட்டு, கலையும் கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்து விடுவதுதான் கொலைகாரனின் திட்டம். ஆட்டம் முடிய இன்னும் இரண்டே நிமிடம் பாக்கி இருக்கிறது. போலீஸ்காரர் ஒருவரின் துப்பாக்கிக் குண்டு கொலைகாரனைத் தீண்டுகிறது, ஆனுல் சாகடிக்கவில்லை. ஆத்திரமடைந்த அவன் துப்பாக்கியைக் கூட்டத்தின் பக்கம் திருப்பித் தொடர்ந்து சுட ஆரம்பிக்கிருன். மக்கள் பீதியுற்றுச் சிதறி ஓடுகின்றனர். குழப்பம், ஓலம், இவற்றுக்கு இடையே கொலைகாரன் சுட்டுத்தள்ளப்படுகிருன்.
இரண்டு நிமிட எச்சரிக்கை — இரண்டு மணி நேர திகில்!

—டி. எம். ஆர்.

அவர்கள் சொன்ன விஷயம் அவனுக்கு ஆச்சரியத்தை அளித்தது. சாந்தியின் பளிச் சென்ற சிரிப்பு, ஞாபகத்துக்கு வந்தது. ஜீவித்திருப்பதே சந்தோஷகரமான விஷயம் என்கிற சிரிப்பு. அவளுடைய சொந்த வாழ்க்கை மகிழ்ச்சியாக இல்லையா? நம்புவது கஷ்டமாக இருந்தது. மனத்தில் ஒரு விசனத்தை வைத்துக் கொண்டு எப்படி அப்படிச் சிரிக்க முடியும்?

''நடிக்கிருள்!''

அவளுடைய சிரிப்பு நடிப்பு என்ருல் உலகத்தில் நிஜம் என்று ஒன்றுமே இல்லை என்று தோன்றிற்று.

அவன் கண்களைச் சுழற்றிப் பார்த்தான். சற்றுத் தொலைவில் இருந்த படுக்கையில் புதிதாக ஒருத்தன் படுத்திருந்தான். வாட்டசாட்டமாக, செக்கச் செவேல் என்று சினிமா கதாநாயகன் மாதிரி சின்ன வயசாகத் தெரிந்தான். கண்ணை மூடி நினைவற்ற நிலையில் படுத்திருக்கும் அவனைப் பார்க்கையில் பரிதாபமாக இருந்தது. ஊர்மிளா யாருக்கோ டெம்பரேச்சர் எடுக்க வந்தாள்.

''புதுசா யார் அந்த பேஷண்ட்? என்ன கம்ப்ளெய்ண்ட்?'' என்ருன்.

''எலெக்ட்ரிக் ஷாக் அடிச்சு இடுப்புக்குக் கீழே பாராலிஸிஸ் ஆகிவிட்டது பாவம்.''

அதாவது சுவாதீனமில்லை....

''சரியாகிவிடுவானு?''

அவள் உதட்டைப் பிதுக்கினுள். மனத்தின் மூலையில் லேசாக ஓர் அதிர்வு ஏற்பட்டது.

பார்வையைக் கட்டி நிறுத்துகிற மாதிரி அந்த நிறமும் உடற்கட்டும் இந்த மாதிரி ஒடிந்து படுக்கத்தானு? என்ன அக்கிரமம் இது? இதற்கெல்லாம் என்ன தாத்பர்யம்! நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன் மாதிரி தெரிந்தான். அவனுடைய பெற்ருேர்களுக்கு எப்படி இருக்கும்? அவனுடைய காதலி எப்படி....

அவனுடைய கவனம் கலைந்தது. மாயா அவனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. கூடவே இவள் எதற்கு வருகிருள் என்று அவனுள் எழும் கேள்வியைக் கண்டு அவன் திகைத்தான். (தொடரும்)

போர்ஹென்ஸ் — பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

உங்கள் பற்களை சுத்தம் செய்யும் போதே ஈறுகளையும் வலுப்படுத்த உதவுகிறது

ஈறு உபாதையால் ஆரோக்கியமான பற்களைக்கூட இழக்க நேரிடும்

பல் டாக்டர்கள் கூறுகிறார்கள், உங்கள் பற்களை சரிவர சுத்தம் செய்யவில்லையெனில் பற்களையும் ஈறுகளையும் சுற்றி, மெல்லிய கிருமிகளின் படிவமாகிய ஊத்தை (Plaque) தோன்றுகிறது. இதுவே நாளடைவில் பற்காரையாக மாறி, ஈறுகளை பலவீனப்படுத்தி, அவற்றைத் தள்ளுவதால் ஆரோக்கியமான பற்களும் விழுந்து விடக்கூடும்.. ஈறுகெட்டால் உடல் நலமே கெடும்.

ஈறுகளுக்கு போர்ஹென்ஸ் பாதுகாப்பு

டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஃபார்முலாவின் விசேட (அஸ்ட்ரிஞ்ஜன்ட்) சேர்க்கைப் பொருள் உங்கள் ஈறுகளை வலுப்படுத்தி ஈறு உபாதைகளைத் தடுக்க உதவுகிறது. ஆகவே, போர்ஹென்ஸ் டூத் பேஸ்ட், போர்ஹென்ஸ் டபிள் ஆக்ஷன் டூத்பிரஷ் கொண்டு பற்களைத் துலக்குங்கள். ஈறுகளைத் தேய்த்துக் கொடுங்கள்.



251 F-203 TAM

போர்ஹென்ஸ் — ஈறுகளுக்கெனவே

Regd. T.M: Geoffrey Manners & Co. Ltd.

திரை

முதல் சம்ஸ்கிருதப் படம்

சம்ஸ்கிருத மொழியில் முதன் முதலாக ஒரு படம் எடுக்கிறார்கள். ''ஆதி சங்கரா சார்யா''. தேசிய திரைப்பட அபிவிருத்தி கார்ப்பரேஷனின் தயாரிப்பு. படத்தின் டைரக்டர் ஜி. வி. ஐயரின் பத்து வருடக் கனவு நினைவாகப் போகிறது. சம்ஸ்கிருதத்தில் எடுத்தால்தான் படம் இயற்கையாக இருக்கும் என்று நினைத்தார். கடனுக்கு மேற்படி கார்ப்பரேஷனை அணுகியபோது மறுத்துவிட்டார்கள். சம்ஸ்கிருத படம் லாபகரமாக இராது என்றார்கள். சமீபத்தில் திரு டி. வி. எஸ். ராஜு இதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். விஷயமறிந்ததும் கார்ப்பரேஷனே தயாரிக்கும் என்று கூறிவிட்டார்!

புது முகங்கள்தான் நடிக்கப் போகிறார்கள். யாருக்கும் மேக்கப் கிடையாது. தாடி தேவை என்றால்கூட நடிகர் வளர்த்துக் கொள்ள வேண்டியதுதான்! சுலோகங்களே பாடல் வடிவம் பெறுகின்றன. பாலமுரளி கிருஷ்ணா தாமே பாடி, இசையும் அமைத்திருக்கிறார்.



ஜி. வி. அய்யர்

பல சம்ஸ்கிருத அறிஞர்களையும் காஞ்சி, சிருங்கேரி ஆசாரியர்களையும் சந்தித்து ஆலோசனைகள் செய்திருக்கிறார் ஜி. வி. ஐயர். ஆதி சங்கரர் தொடர்புடைய எல்லா ஸ்தலங்களுக்கும் சென்று வந்திருக்கிறார். படப்பிடிப்பும் ஆங்காங்கேதான். ஸ்டுடியோ செட் கிடையாது!

✖ மது அம்பட்

ஆதி சங்கரரைத் தெய்வமாகச் சித்திரிக்காமல், சாதாரண மானிடராகப் பிறந்து உயர்ந்ததை இந்தப் படம் உணர்த்தும்.

படத்தின் ஒளிப்பதிவாளர் திரு மது அம்பட் சொல்கிறார்: ''பூனா பிலிம் பள்ளியில் தேர்ச்சி பெற்ற திரு எஸ். டி. பானர்ஜி இதில் சங்கரராக நடிக்கிறார். முதல் ஆறு மாதம் காலடியில் படப்பிடிப்பு நடக்கிறது. தொடர்ந்து மற்ற இடங்களிலும் இறுதியில் இமாலயப் பகுதிகளிலும் படப்பிடிப்பு நடக்கும். காமிராவுக்கு முக்கியத்வம் கொடுக்கப்பட்ட இந்தப் படத்தில் பல புதுமைகள் செய்யப் போகிறேன்.''

-பேட்டி : **சிக்கி**

ஒருவர்: ''உங்க வாட்ச் கம்பெனி பார்ட்னர்ஸ்களுக்குள் ஏதாவது தகராறு?''

''எப்படி சார் கண்டு பிடிச்சீங்க?''

''நேத்து உங்க 'ஷோ ரூமில்' வாங்கிட்டுப் போன வாட்சில் சின்ன முள் ஒரு திசையிலும், பெரிய முள் ஒரு திசையிலும் ஓடுது...!'' - கிணத்துக்கடவு ரவி



கணவன்: ''நேற்று நீ வச்ச சாம்பார் பிரமாதம்!''

மனைவி: ''நேற்று அதைப் படுமோசம்னு சொன்னீங்களே...?''

கணவன்: ''இன்றைய சாம்பாரைப் பார்த்ததும் தானே நேற்றைய சாம்பார் எவ்வளவோ பிரமாதம்கிறது தெரியுது!''

உ. ராஜாஜி.

சமூகத் தொடர்கதை

அந்தி நேரத்து உதயங்கள்

வாஸந்தி

9

பஸ்ஸிலிருந்த கூட்டம் மூச்சைத் திணற அடித்தது. நசுங்கி ண்ட முண்டலாய்ப் போயிருந்த உடம்பை நெரி லிலிருந்து விடுவித்துக் கொள்ளச் சாந்திக்குச் ரமமாக இருந்தது. மேலேவிழுந்த சதைப் பிண்டங் களின் அழுத்தலும் வியர்வை நாற்றமும் வயிற்றைக் குமட்டிற்று.

எப்படி இத்தனை குண்டாக மனிதர்கள் ஆகிறார்கள்? பலூனை ஊதவைக்கிற மாதிரி உடம்பை யோசனை இல்லாமல் ஊத வைக்கிறார்கள்? இது ரொம் பவும் பொறுப்பற்றதனம் என்று அவளுக்கு ஓர் எரிச்சல் ஏற்பட்டது. அந்த ஊளைச் சதையில் ஒரு பிடிவாதம் தெரிந்தது. உன்னைவிட இந்த உலகில் எனக்கு அதிக இடம் தேவை என்கிற பிடி வாதம்.

பஸ் நின்று இரண்டு பிரயாணிகள் இறங்கிக் காற்றுக்கு இடம் கிடைத்ததும் சாந்தி தன் உடம்பைச் சற்று நேராக்கிக் கொண்டாள். பஸ் மறுபடி கிளம்புகையில் திறந்த ஜன்னல்கள் வழியே சூடாகக் காற்று அடித்தது.

திடீரென்று முன் பக்கத்திலிருந்து ஏக இரைச்சல் கேட்டது. ஒரு பெண் பெரிய குரலில், ''சோர், சோர்'' (திருடன்) என்று கத்தினாள். சட்டென்று ஒரு கலவரம் வண்டியில் பரவிற்று.

''வண்டியை நிறுத்து!'' என்று ஏகக் கூக் குரலுக்குப் பின் டிரைவர் பஸ்ஸை நிறுத்தினார்.

தன்னுடைய தங்க வளையை யாரோ வெட்டிவிட்ட தாக அந்தப் பெண் மகா கோபத்துடன் தெரிவித்தாள். வெகு நேரக் கூக்குரலுக்குப் பிறகு ஒரு வழியாக ஆளைப் பிடித்தார்கள். வெகு நாகரிகமாகத் தோற்றமளித்த ஓர் இளைஞன் – கொஞ்சங்கூட கூச்சமின்றி, அசடு வழி யாமல் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டுவிட்ட கம்



பிரத்துடன் இறங்குவதைப் பார்க்கையில் மனசில் ஒரு அதிர்வு ஏற்பட்டது. தடித்தனம் இல்லாத மனிதர்களே இல்லை என்று தோன்றிற்று. மனத்தில், உடம்பில், செய்கையில், எண்ணங்களில் — அந்தப் பெண்ணின் கத்தலிலும் கூக்குரலிலும் கூட ஒரு தடித்தனம் இருக்கிற மாதிரி தோன்றிற்று. அவளுடைய அசைவுகளின் ஆபாசத்தைப் பற்றின பிரக்ஞை இல்லாததடித்தனம்.

பஸ் மறுபடி கிளம்புகையில் முப்பத்தி ஐந்து நிமிஷங்கள் நகர்ந்து விட்டிருந்தன.

சாந்தி யோசனையுடன் கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். 6.20. வீடு போய்ச் சேருவதற்குள்ஏழேகால் ஆகிவிடப்போகிறது. இன்றைக்குச் சீக்கிரம் வீட்டுக்கு வந்துவிடும்படி நடராஜன் சொல்லியிருந்தது ஞாபகத்துக்கு வந்தது.

அவள் ஒரு ஐந்து நிமிஷம் தாமதமாக வந்தாலும் அவனுள் ஏன் அப்படி ஒரு ஆத்திரம் பொங்குகிறது? அவள் ஏதோ வேண்டுமென்றே செய்த மாதிரி?

''எவனோடவாவது பேசிண்டு நின்னுண்டிருந்திருப்பே!''

இவனுக்கு ஏன் எப்பவும் இப்படி ஒரு சந்தேகம்?

''உங்களுக்கு இந்தச் சந்தேகமும் வேண்டாம், இந்த மாதிரி நான் பேச்சைக் கேட்கவும் வேண்டாம். நான் வேலையை விட்டுடறேன். உங்க ஒருத்தர் சம்பாத்தியம் போதும்.''



அவனை அவமானப்படுத்தி விட்டது போல் அவனுக்குச் சுரீரென்று கோபம் வரும்.

''என்ன பயமுறுத்தறியா? அல்டிமேட்டமா? இனிமே ஒழுங்கா இருக்கேன்னு சொல்லேன். வேலை முடிஞ்சோண்ணே நேர வீட்டுக்கு இனிமே வரேன்னு சொல்லேன்!''

தன்னுள் எழுந்த ஆத்திரத்தை அவள் சிரமத்துடன் விழுங்கிக் கொள்வாள்.

''ஒழுங்கா இருந்தா இரு. ஒழுங்கா இல்லையானா உன் வழியைப் பார்த்துக்கிட்டுப் போ....''

பிரக்ஞையுடன் தான்சொல்கிறானா? பெற்றோர்கள் இல்லாத இந்த அனாதைக்கு வேறு போக்கிடம் கிடையாதுஎன்கிற தைரியத்தில்சொல்கிறானா? கல்யாணமாகி அவனுடன் கிளம்புகிற சமயத்தில் அவளுடைய மாமா விட்டேற்றியாகச் சொன்னது அவனுக்கு நன்றாக ஞாபகம் இருக்க வேண்டும்.

''நான் கடமையை முடிச்சுட்டேன் சாந்தி. இனிமே உன் வாழ்க்கையைப் பார்த்துக்கிறது உன் சொந்தப் பொறுப்பு. இனிமே நானும் அவளும் கிராமத்துக்குப் போயிடப்போறோம். இருக்கிற நிலத்தில் விளையறது எங்களுக்குப் பத்தும்....''

இனிமேல் எங்களைத் தொந்தரவு செய்யாதே என்கிற மாதிரி... எங்கள் கதவை அனாவசியமாய் இனிமேல் தட்டாதே என்கிற மாதிரி....

மாமா எடுத்து வளர்த்ததும் முன் யோசனையுடன் நர்ஸ் வேலைக்குப் பயிற்சி எடுத்துக்கொண்டதுமே பெரிய கருணைகள்... இதற்கு மேல் எதுவும் யாரிடமும் எதிர் பார்ப்பது பேராசை....

என் பிரச்னைகளை நானேதான் சமாளிக்க வேண்டும். சமாளிக்கத் தெரியாமல் யார் வாசலையும் தட்ட மாட்டேன்.

அவள் பஸ்ஸிலிருந்து இறங்கித் தன் வீட்டை நோக்கிச் செல்கையில் நிதானமாகத் தீர்மானித்துக் கொண்டாள். அவன் என்ன கத்தினாலும் ரோசப்படாமல் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அவன் வார்த்தைகள் மனத்தை முள்ளாகக் குத்தாமல் கண்களில் நீரை வரவழைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இந்த மாதிரி ஒரு மனசாக நம் மனசை மாற்றிக்கொண்டால் தான் கொஞ்சம் வெளிச்சம் ஏற்படும். இல்லாவிட்டால் நம் வீட்டின் அசிங்கங்கள் நடுச் சந்திக்கு வந்து விடும்.

இந்த மாதிரி ஜடத்தனத்தோடு இருப்பது சாத்தியமா?

நன்றாக இருட்டி விட்டது. கட்டிடத்துக்கு வெளியில் அநேகமாக யாருமில்லை. அவரவர்கள் வீட்டுக்குள் அமர்ந்து கொண்டு டீ. வி. பார்த்துக் கொண்டோ ரேடியோ கேட்டுக் கொண்டோ இருப்பார்கள்.

அவள் வேகமாகப் படபடத்த மார்புடன் அந்த நிசப்தத்தைக் கலைக்க யோசிப்பவள் போல் காலிங் பெல்லை அழுத்தினாள். இரண்டு மூன்று நிமிஷங்கள் நகர்ந்தன. கதவு திறக்கவில்லை. அவள் மறுபடியும் அழுத்தினாள்.

கதவு திறந்தது.

அவள் சட்டென்று உள்ளே நுழைந்து மெல்லப் புன்னகைத்தாள்.

''நாழியாயிடுத்து. ஸாரி. இன்னிக்கு பஸ்ஸிலே.....''

பளாரென்று கன்னத்தில் அவள் எதிர் பாராமல் ஒரு அறை விழுந்தது. அவள் நிலைகுலைந்து போனாள்.

அவள் அவசரமாக வாசற் கதவைச் சாத்தினாள்.

அவன் முகமும் கண்களும் கோபத்தில் ஜிவுஜிவு என்றிருந்தது. ஓ எதற்கு இத்தனை கோபம்?

''எதுக்குடி கதவைச் சாத்தறே? ஊருக்கெல்லாம் தெரியட்டும் உன் பவிசு. எந்தச் சிரிப்பைச் சிரித்து ஊரையெல்லாம் ஏமாத்திண்டு வரே. எல்லாருக்கும் தெரியட்டும், நீ எப்படிப்பட்ட பொம்பளைன்னு!''

அவனுடைய ரௌத்திரத்தையும் கோபத்தில் சிங்கமாகத் தெரிந்த அவனுடைய முகத்தையும் பார்க்கும்போது வழக்கமாக மனத்துள் பொங்கும் அருவெறுப்பும் ஆத்திரமும் மறுபடியும் பொங்க ஆரம்பிக்கையில் அவள் அவசரமாக அதை அடக்கிக்கொண்டாள். வலுக்கட்டாயமாகச் சிரித்தாள்.

''நீங்க அனாவசியமாக் கோபப்படாதீங்க. ப்ளீஸ். இன்னிக்கு பஸ்ஸிலே ஒரு திருட்டு நடந்து போச்சு. அதனாலே பெரிய கலாட்டாவும் கால தாமதமும் ஆயிடுத்து. எப்படாப்பா வீட்டுக்கு வரப் போறோம்னு எனக்கும் பேஜாராப் போச்சு.''

''நீ விடற ரீலை நம்ப நான் ஒரு முட்டாள் இல்லே. பஸ்ஸிலே திருட்டுத்தனம் நடந்ததா, நீ ஏதாவது திருட்டுத்தனம் பண்ணிட்டு வந்தியா?''

அவளது பொறுமை மெல்ல மெல்ல நழுவிற்று. அவள் பலவந்தமாக அதைப் பிடித்திழுத்தாள். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவனுடைய தோளில் கையை வைத்தாள்.

''இத பாருங்க. இந்த மாதிரி என்னை நீங்க பழி சொல்றதினாலே உங்களுக்கு என்ன திருப்தி? இந்த வார்த்தைகளை நீங்களே நிச்சயமா நம்பறீங்களா?''

அவன் வெடுக்கென்று கையை உதறினான்.

''சத்யமா நம்பறேன். இல்லேன்னா என்னை நீ இப்படி அலட்சியம் பண்ண மாட்டே. இன்னிக்கு நீ கண்டிப்பா வீட்டுக்குச் சீக்கிரம் வரணும்னு சொல்லியிருக்கேன். வழக்கத்தை விட லேட்டா வந்திருக்கே. வேற ஒருத்தனுடைய உறவு உனக்கு இருக்கிறதினாலே தான் என் உறவு உனக்கு வேண்டாமாய்ப் போயிடுத்து. இது திமிருத்தனம் இல்லாம வேற என்ன? உனக்கு மட்டும்தான் அப்படி இருக்கத் தெரியும்னு நினைக்காதே. எனக்கும் இருக்க முடியும். நீ எனக்குத் தேவையில்லை. நீ போகலாம்.''

அவள் ஒரு விநாடி ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்தாள்.

''ஐ ஸெட் கெட் அவுட்!''

''என்னங்க நீங்க?இது என் வீடு இல்லையா?''

''இனிமே இல்லே. உன் இஷ்டப்படி இங்கே வர இது சத்திரமில்லே.''

''நா செல்றதைக் கொஞ்சம் கேளுங்க. இது என்ன விபரீதம்? நான் எங்க போவேன். இந்த ராத்திரியிலே...?''

''எவன் கிட்ட வேணுமானாலும் போ.''

அவளுக்கு அழுகையும் ஆத்திரமும் வெடித்துக்கொண்டு வந்தது.

''இப்ப என்ன நடந்து போச்சுன்னு இப்படிக் கத்தறீங்க? கொஞ்சமாவது பொறுப்புள்ள ஆம்பிளையா பேசறீங்களா?''

''உனக்கென்னடி வாயிருக்கு என்னைக் கேக்க? ''....'' முண்டமே!''

அவள் கூசிப்போய்க் காதைப் பொத்திக் கொண்டாள்.

எத்தனை குடித்திருப்பான் இன்று?

அவன் பலவந்தமாக அவளைப் பிடித்து வெளியில் தள்ளிக் கதவைத் தாளிட்டுக்கொண்டான்.

அவள் பெரிய திகைப்புடன் ஒரு மணி நேரம் போல் வெளியில் நின்று பார்த்து அவன் திறக்காமல் போனதில் பசியும் ஆத்திரமும் சோர்வும் அவமானமுமாக லிஃப்டுக்குள் நுழைந்து தெருவில் இறங்கி நடந்தாள்.

(தொடரும்)

''அதிசயமாயிருக்கே எதற்கு எங்க அம்மாவின் போட்டோ நூறு பிரதி போடச் சொன்னீர்கள்?''

''கோபம் வரும்போதெல்லாம் ஒவ்வொரு போட்டோவாகச் சுக்கல் சுக்கலாய்க் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட...!''

பால் குமிழ் படையினை வாங்கிடுவீர் துணிகளின் அழுக்கை அகற்றிடுவீர்.



பால் குமிழ் வீரர்களை செயல்பட அனுமதியுங்கள். அவை அழுக்கு, எண்ணெய் கறைகளை. தாக்குவதைக் கவனியுங்கள். எல்லாவற்றையும் அடியோடு ஒழித்து உங்கள் துணிகளை வெண்மையாகப் பளிச்சிடச் செய்வதைப் பாருங்கள்.

அல்ட்ராமரைன் &
பிக்மென்ட்ஸ் லிமிடெட்
ராணிப்பேட்டை, தமிழ்நாடு

Sista's/ULP/25/81 Tam

10

'ஹல்லோ' என்று சொல்லக்கூடத் தோன்ருமல் ஹரி மாயாவைச் சிலவிநாடிகள் பார்த்தான். மாயாவின் முகத்தில் ஒரு நிச்சயமில்லாத புன்னகை தெரிந்தது. அவன் உடம்பை முழுவதும் பார்வை சந்தேகத்துடன் வலம் வந்தது. பிறகு அருகில் வந்து,

''ஹல்லோ ஹரி!'' என்ருள்.

வெய்யிலுக்கான லேசான கையில்லாத மாக்சி அணிந்திருந்தாள். ஆர்வத்தைத் தூண்டுகிற அளவுக்கு உள்ளாடையின் வெளிக்கோடுகள் தெரிந்தன. தலையை ஷாம்பூ செய்துகொண்டு வந்திருக்கவேண்டும். கேசம் ஷாம்பூ விளம்பரம் மாதிரி மிதந்தது. அவனுக்குப் பழக்கப்பட்ட அவளுடைய 'மூன் ட்ராப்ஸ்' வாசனை அவனை நோக்கித் தவழ்ந்தது.

எதற்கு இப்படித் தாக்குகிருள்? பரிகாச செய்கிருளா? இப்ப என்ன பண்ணுவே பார்க்கலாம் என்கிருளா?

....'ஏய் மாயா, நான் மோட்டார் சைக்கிள் ஓட்டறச்சே நீ 'மூன் ட்ராப்ஸ்'ஸையும் போட்டுண்டு என் கழுத்தையும் இப்படி நெருக்கினுயானு நாம்ப மூனுக்குத்தான் போவோம்....'

'சேர்ந்துதானே போவோம்? பரவாயில்லை.'

'யாருக்குத் தெரியும்? எனக்கு மட்டும் விசா கிடைச்சா?'

'நானும் கூட வருவேன். கவலைப் படாதே.'

....அவள்தான் இப்பொழுது எட்ட நிற்கிருள். கழுத்தைப் பிடித்துக் கொஞ்சியதை யெல்லாம் சினிமா பாணியில் டயலாக்பேசியதை யெல்லாம் மறந்து வேற்று மனுஷியாய் நிற்கிருள்.

மாயா தயக்கத்துடன் சிரித்தாள்.

''என்ன ஹரி பார்க்கறே?''

அவன் சட்டென்று லகுவாகச் சிரித்தான். ''உன் 'மூன் ட்ராப்ஸ்' எங்கேயோ என்னை அழைச்சுண்டு போயிடுத்து.''

அவள் கன்னங்களில் சிவப்பேறுவதை அவன் கவனித்தான்

இனிமேல் இவள் இந்த மாதிரிப் பேச்சை ரசிக்க மாட்டாள்...

''எப்படி இருக்கே ஹரி?''

''ஃபைன். வெரி ஃபைன். தலையிலேர்ந்து இடுப்பு வரை என்ன கேள்வி வேணு கேளு. டக் டக்னு பதில் சொல்வேன்.''

ஒரே ஒரு விநாடி இருவருடைய பார்வையும் சந்தித்துக் கொண்டன.

அவள் தன் பார்வையைச் சரேலென்று மற்ற கட்டில்களுக்கு நகர்த்தினுள்.

சாவதானமாகத் திரும்பி மெல்லக் கேட்டாள்.

''டாக்டர் என்ன சொன்னுர் ஹரி?''

''ரொம்ப உற்சாகமாக இருக்கார். கண்டிப்பா ஸ்ட்ரெச்சர்ல என்னை வீட்டுக்கு அனுப்ப மாட்டாராம்.''

''நடக்க முடியும்னுரா?''

அவள் கண்களிலும் வார்த்தைகளிலும் தெரிந்த அவசரத்தைப் பார்த்து அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. கூடவே லேசாகக் கோபம் வந்தது. இவள் நமக்குத் தைரியம் சொல்ல வந்தாளா, தன் பலவீனத்துக்குப் பலம் சேர்த்துக் கொள்ள வந்தாளா?

''மாயா? நீ எதுக்கு வீணு இதைப் பத்தியெல்லாம் யோசனை பண்ணறே?''

அவள் அடிபட்டவள் மாதிரி பார்த்தாள்.

''நான் யோசனைபண்ணுமை எப்படி இருப்பேன் ஹரி?''

''யோசனை பண்ண வேண்டியவன் நான்தான். நீயில்லே.''

அவளுடைய கண்களில் நீர் தெரிவதைக் கண்டு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''நீ இப்படிப் படுத்துண்டிருக்கறது எனக்கு எவ்வளவு வேதனையா யிருக்குன்னு உனக்குப் புரியாது ஹரி.''

அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஓ இவளும் ஒரு இக்கட்டான மனச் சங்கடத்தில் இருக்கிருள்!

''கொஞ்ச நாளைக்கு இருக்கும். அப்புறம் சரியாப் போயிடும். நல்ல வேளை மாயா, நமக்குக் கல்யாணம் ஆகல்லே. ஆகியிருந்தா குற்ற உணர்விலேயே நான் செத்துப் போயிருப்பேன்.''

என்ன வார்த்தை சொன்னுல் தப்பாகிப் போகுமோ என்று பயந்தவள் மாதிரி அவள் தயங்குவதைப் பார்க்க அவனுக்கு என்னவோ போல் இருந்தது.

அந்த நேரத்து உதயங்கள்

வாஸந்தி

''மாயா லுக். என் நிலைமை எனக்குத் தெரியும். எந்த விதமான அசட்டுக் கற்பனையும் எனக்கு இருக்கும்னு நினைக்காதே. நீ எதுக்காகவும் வருத்தப்பட வேண்டியதில்லே. உன் எந்த முடிவும் இனிமே என்னைப் பாதிக்காது.''

அவள் பதில் சொல்லாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

அவள் ஒரு பெரிய போராட்டத்தில் இருக்கிருள் என்று அவனுக்குப் புரிந்தது.

''மாயா யூ டோன்ட் ஹாவ் டு ஃபீல் ஸாரி ஆர் கில்டி....!''

அவள் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

''எனக்கு ஒண்ணும் புரியல்லே ஹரி.''

அவளுடைய கையாலாகத்தனமும், அதிர்ந்து போன பார்வையும் அவனுள் குபீரென்று ஒரு ஆத்திரத்தைக் கிளப்பிற்று. அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

''நீ அன்னிக்கு எங்கிட்டச் சொன்னது கரெக்ட். எனக்கு அநேகமாக இடுப்புக்குக் கீழே சுவாதீனமே இருக்காது. எனக்காக இன்னொருத்தர் லைஃபை வீணாக்கணும்னு நான் எதிர்பார்க்க மாட்டேன் மாயா!''

மாயா கைக்குட்டையால் விழியோரங்களை நாசூக்காகத் துடைத்துக் கொண்டாள். மூக்கை லேசாக உறிஞ்சிக் கொண்டாள்.

இவள் எதற்கு வந்திருக்கிறாள் என்று கேள்வி இன்னும் மெல்லக் குடைந்து கொண்டிருந்தது.

''உனக்கு இப்படி ஆனதிலேந்து மனசு ரொம்பக் கலங்கிப் போயிருக்கு ஹரி. அதனாலே—''

''அதனாலே?''

''அதனாலே அப்பா என்னைக் கொஞ்ச நாளைக்கு மெட்ராஸுக்குப் போயிட்டு வரச் சொல்றார்.''

அதாவது அவனை மறக்கும் வழி பார் என்கிறார். அங்கேயே வேறு ஏதாவது நல்ல வரன் கிடைத்தால் பிடிக்கலாம். இப்போதைக்கு அவள் இந்த இடத்திலிருந்து கிளம்ப வேண்டும். பழசை மறக்க. மனிதாபிமான உணர்வு என்பதெல்லாம் இரண்டாம் பட்சம்....

அவன் கண்களை மூடிக் கொண்டு சில விநாடிகள் மௌனமாக இருந்தான். இதைச் சொல்லத்தான் இவள் வந்தாளா?

''புலி அடிக்குமுன் கிலி அடிக்கும்'' என்பது பழமொழி. அடிக்கும் புலியை அரவணைக்கும் வாய்ப்பையும் தருகிறது மைசூர் மிருககாட்சி சாலை! மூன்று குட்டிப்புலிகள். அவற்றைப் பராமரிக்க ஓர் ஆள். அவன் அந்தப் புலிக்குட்டிகளில் ஒன்றை தன் கைகளில் தூக்கி அரவணைத்துக்கொண்டான். தழுவ எனது கைகளும் துடித்தன. பயங்கலந்த தைரியத்தோடு புலிக்குட்டியைத் தூக்கி அரவணைத்துக் கொண்டேன். தைரியம் கூறிப் பக்கத்தில் அவனும் நின்றிருந்தான். புலி பூனை ஆகுமா? சில உறுமல்கள். பயந்து கையை உதறிவிட்டேன். பிறகு அவைகளை எனது கேமராவுக்குள் அடைத்துக் கொண்டேன்.

- உதுமான்

''போயிட்டு வாயேன். எங்கிட்ட பர்மிஷன் கேக்க வந்தியா?''

குரல் மெல்ல உயர்வதை லட்சியம் செய்யாமல் அவன் பேசினான்.

அவள் வார்த்தைகளைத் தேடிக் கொண்டு நின்றாள்.

அவனுக்குச் சுரீரென்று கோபம் வந்தது.

''போயேன்! என்னுடைய அனுமதி எதுக்கு?கட்டின பெண்டாட்டின்னா வேறவழியில்லே. இருக்கேனா செத்தேனான்னு பார்க்கணும். உனக்கு அந்த மாதிரி நிர்ப்பந்தம் இல்லையே. நல்ல வேளை!''

அவள் அவசரமாகக் குறுக்கிட்டாள். அவன் மேலே என்ன பேசிவிடுவானோ என்று பயந்த மாதிரி. தோளை லேசாகத் தொட்டாள். ''ஹரி ப்ளீஸ். ரிலாக்ஸ். நீ என்னைப் புரிஞ்சுக்கல்லே.''

அவன் சிரிப்பில் எகத்தாளம் தொனித்தது.

''இப்பத்தான் நன்னாப் புரியறது. அதான் அதிர்ச்சியா யிருக்கு. இரண்டு வருஷப் பழக்கத்துக்கு உங்கிட்டேந்து நா இன்னும் நெருக்கத்தை எதிர்பார்த்தேன். உன்னை இனிமேல் நான் கல்யாணம் பண்ணிக்க முடியுமா முடியாதாங்கறது இப்பப் பிரச்னையில்லே. உன் சிநேகிதம் கிடைக்குமாங்கறது தான் பிரச்னை. எந்தச் சந்தர்ப்பத்திலேயும் மனுஷனுக்கு மனுஷன் பிரியம் காட்ட முடியுமாங்கறது பிரச்னை....''

''ஹரி....!''

''உன்னுடைய சிநேகம் எனக்கு வேண்டாம். அழுத்தமில்லாத உறவு எனக்கு வேண்டாம். ப்ளீஸ் கோ அவே....''

''ஹரி, நான் மெட்ராஸுக்குப் போகணும்கிறது அப்பாவுடைய எண்ணம். என்னுதில்லே. என்னைத் தப்பா நினைக்காதே...''

''ப்ளீஸ்! கோ அவே!''

அறை முழுதும் அவனைத் திரும்பிப் பார்க்கிற மாதிரி இருந்தது. நர்ஸ் ஊர்மிளா பதற்றத்துடன் ஓடி வந்தாள்.

அவன் சட்டென்று சுய நினைவுக்கு வந்தான். என்ன ஆகிவிட்டது நமக்கு?

''என்ன மிஸ்டர் ஹரி?''

நாம் ஏன் இப்படிக் கத்தினோம் என்று புரியாமலே அவன் கத்தினான்.

''என்னைத் தனியாக விடுங்கள்! நர்ஸ் என்னைப் பார்க்க யாரையும் உள்ளே விடாதீர்கள். எனக்கு யாருடைய கருணையும் வேண்டாம்.''

''ரிலாக்ஸ் மிஸ்டர் ஹரி ரிலாக்ஸ்...''

''கோ டு ஹெல்! கோ அவே!''

மாயா சட்டென்று திரும்பி விருவிரு வென்று வெளியேறினாள்.

''என்ன கலாட்டா இங்கே மிஸ்டர் ஹரி?''

''ப்ளீஸ்! என்னைத் தனியே விடுங்கள்!''

ஊர்மிளா பதிலே சொல்லாமல் உள்ளே சென்றாள். இன்னொரு நர்ஸை அழைத்து வந்து அவன் கத்தக் கத்த ஒரு இன்ஜெக்ஷனைக் குத்திவிட்டுப் போனாள்.

அவன் தலையை இருபுறமும் ஆட்டி, ''லீவ் மீ அலோன்! லீவ் மீ அலோன்!'' என்று கத்தினான்.

என்ன மனிதர்கள்! என்ன உலகம்! கத்திப் பேசக்கூட எனக்குச் சுதந்திரம் இல்லையா?

வேஷம் போட்டால்தான் இந்த உலகத்தில் இருக்க முடியுமா? நான் வேஷம் போட்டேன்! வேஷதாரிகளை எனக்குப் பிடிக்காது. சுயநலக்காரர்களைப் பிடிக்காது. ஐ ஹேட் தெம். ஐ ஹேட்....

''மிஸ்டர் ஹரி ரிலாக்ஸ்....!''

''ஓ ஷட் அப்!''

''என்ன கலாட்டா ஊர்மிளா?''

''ஒண்ணுமில்லே டாக்டர். இந்தப் பேஷண்ட் கொஞ்சம் இப்படித்தான் அடிக்கடி கத்துவார். ட்ருமேட்டிக் டிப்ரெஷன். அதோட சரியாத் தூங்கறதில்லே. காம்போஸ் மாத்திரையை விழுங்கிட்டுக் கொட்டக் கொட்ட முழிச்சிண்டிருக்கார்.''

''ஒரு ஷாட் கொடு!''

''குடுத்தேன் டாக்டர்!''

''குட். எனி காம்பிளிகேஷன்?''

''இல்லே டாக்டர்.''

''சருமத்தை யெல்லாம் குளோஸா செக் பண்ணு. ஏதாவது புண் வந்திருக்கப் போறது. அதனாலேகூட எரிச்சல்படலாம்.''

''எஸ் டாக்டர்.''

ஊர்மிளாவும் இன்னொருத்தியும் மறுபடியும்அவனைக் கண்ணாடி சாமான் மாதிரி ஜாக்கிரதையாகச் சற்றே நகர்த்தி முதுகையும் முட்டியையும் ஆராய்ந்து பவுடர் போட்டார்கள்.

''இப்பொழுது பேசாமல் தூங்குங்கள் மிஸ்டர் ஹரி. இப்படி ஆத்திரப்பட்டு அசைஞ்சு பேசினால் முதுகெலும்புக்கு மறுபடி அதிர்ச்சி ஏற்பட்டு வேறே ஏதானும் கோளாறு வரும்.''

அவன் அதற்குப் பதில் சொல்ல நினைத்து, பிறகு சோம்பல்பட்டு வாயை மூடிக்கொண்டான்.

அங்கிருந்து போகும்போது ஊர்மிளா தோழியிடம் சொல்வது கேட்டது.

''சாந்திதான் சரி. இந்த மாதிரி பேஷண்டுக்கு. எனக்கெல்லாம் பொறுமை இல்லே.''

அவன் ஒரு அவமான உணர்வுடன் கண்களை மூடிக் கொண்டான். ஏன் இப்படி நாகரிகமே மறந்து போனேம்? மான அவமான உணர்வே இல்லாமல் அப்படி எப்படிக் கத்தினேம்? இதுவரை நிதானமிழந்து யாரையும், ஒரு ப்யூனைக்கூடப் பார்த்துக் கத்தியிருப்பதாக நினைவில் இல்லை. எது நம்மை அப்படிக் கத்த வைத்தது? சுய பச்சாதாபமா? ஏமாற்றமா? அல்லது இவர்கள் சொல்லும் 'ட்ருமா'வா?

'என்னைத் தப்பா நினைக்காதே ஹரி!'

அது வேறு ஒரு கவலை! தன் நிலையைப் பற்றி, தன் எதிர்காலத்தைப்பற்றி, தன் இமேஜைப் பற்றித்தான் அவளுக்குக்கவலை. அத்தனை நெருங்கிப் பழகிய ஒருத்தனுக்கு அதுவும் ஆயுஸுக்கு நம் ஜோடி அவன் என்று நிச்சய எண்ணத்துடன் பழகிய ஒருத்தனுக்கு இப்படிப்பட்ட விபத்து. வாழ்க்கையின் திசையையே மாற்றக் கூடிய விபத்து ஏற்பட்டிருக்கிறதென்றல் — மனசு துடித்துப் போகாதா? உருகிப் போகாதா? கேவலம் அவனும் ஒரு ஜீவன்கிற மனிதாபிமான உணர்வு, கருணை ஏற்படாதா? கலங்கிப் போயிருக்கிருளாம்! போயிருந்தால் இங்கு வருவதுதானே? இந்த ட்ருமாவுக்கும் டிப்ரெஷனுக்கும் மாற்ருக இங்கு மாலை வேளைகளில் ஆறுதல் தருவதுதானே? அவளுக்குத் தான் இப்பொழுது மாறுதல் வேண்டும். எத்தனை வேடிக்கை!

'இது என் அப்பாவுடைய எண்ணம் ஹரி!'

தூ! எத்தனை கேடுகெட்ட பிறவிகள்! தன்னுடைய பலவீனத்தை மறைக்கச் சப்பைக் கட்டுகள் தேடுகிருள்.

அவன் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டான். இத்தனை கோபம் நமக்கு ஏன் ஏற்படுகிறது? என்று திகைப்பேற்பட்டது. மாயா பாதுகாப்பாக வளர்ந்தவள். நம்முடைய விபத்து அவளுக்கும் மிகப் பெரிய அதிர்ச்சியாக இருக்க வேண்டும். உண்மையில் அவளுக்கு நம்மேல் பிரியமில்லாமலில்லை. இல்லாவிட்டால் இப்பொழுது வேலை மெனக்கெட்டு வந்திருக்க மாட்டாள். கண்ணில் நீருடன் 'நீ என்னைப் புரிஞ்சுக்கல்லே' என்றிருக்க மாட்டாள். நான்தான் என் எதிர்பார்ப்புகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். மாயாதான் வந்து ஆறுதலாகப் பேசவேண்டும் என்று நமக்கு ஏன் பிடிவாதம்?

திடீரென்று அவனுக்குச் சாந்தியின் ஞாபகம் வந்தது. அவளைவிட இதமாகப் புன்னகைப்பவர்கள் யார் இருப்பார்கள் என்று தோன்றிற்று. நாள் முழுவதும் இங்கு அவள் ட்யூட்டி பார்த்தால் எத்தனை நன்ருயிருக்கும் என்று எண்ணியபடி அவன் உறங்கிப் போனுன்.

(தொடரும்)

டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகையில் ஒரு பெண்மணி விளம்பரம் கொடுத்திருந்தார்: ''நான், கே. எம். குல்தீப் மக்னேலியாசாயினி, ஐ. ஏ. எஸ். மேஜர் பி.எஸ். சாயினியின் மகள். என் பெயரை திருமதி குல்தீப் மக்னேலியா மாத்யூஸ் (திரு ஜகன் மாத்யூஸ் ஐ.ஏ.எஸ். இன் மனைவி) என்று மாற்றிக் கொண்டிருக்கிறேன்.'' 34 நாட்கள் கழித்து மற்றொரு விளம்பரம்: ''நான், ஜகன் மாத்யூஸ். ஐ.ஏ.எஸ்.குல்தீப் மக்னேலியா சாயினி என்பவர் என்னைத் திருமணம் செய்து கொண்டதாக அறிவிப்பு கொடுத்திருந்தார். விளம்பரத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். இது முற்றிலும் தவருன செய்தி. அந்தப் பெண்மணியை நான் திருமணம் செய்து கொள்ளவில்லை.''

மீண்டும் அந்தப்பெண்மணி மற்றொரு விளம்பரம் கொடுத்திருந்தார்: ''நான், குமாரி குல்தீப் சாயினி ஐ.ஏ.எஸ். திரு பி.எஸ். சாயினியின் மகள். என் பெயரை குமாரி குல்தீப் மக்னேலியா சாயினி என்று மாற்றிக்கொண்டு விட்டேன்.'' ஆதாரம்: டெக்கான் ஹெரால்ட்

தகவல்: கலாமூர்த்தி



STANROSE

சுந்தர சூட்

ஆடவர் ஆடையின் சிறப்பு
அறிந்திடும் ஸ்டேன் ரோஸ்.

மென்மை கொஞ்சிடும்
சட்டை. மேனி விரும்பிடும்
மேல் சட்டை. மடிப்பு
மாறாத கால் சட்டை.

அத்தனையும் தயாரிக்
கப்படுகின்றன ஸ்டேன்ரோஸ்
துணிகளில்.
அணிந்திட்டீர் அவற்றை...
அழகியின் வரவிற்கு
தயாராகி விட்டீர்.

ஆடவர் பெண்டிருக்கான
அழகிய ஸ்டேன்ரோஸ்
ஃபாஷன்கள். சூட்டிங்குகள்,
ஷர்ட்டிங்குகள்,
சேலைகள் உடுப்புத் துணிகள்.

ஸ்டேன்ரோஸ்
துணிகள்

ஸ்டாண்டர்டு மில்ஸ்

மபத்லால் அப்பேரல்

சூரத் காட்டன் மில்ஸ்

everest/81/SM/331-tm.

முத்தான முதல் சில மாதங்களுக்கு...

இலவசம்!

ஃபாரெக்ஸ்—
குழந்தையின்
முதலாண்டுப் புத்தகம்

16 பக்கங்கள் அடங்கிய அரிய சிறுபுத்தகம், குழந்தைப் பராமரிப்பு பற்றியது இது—பால் புகட்டுதல், பல் முளைத்தல், வளர்ச்சி, அம்மைக்குத்துதல், இன்னும் பலவற்றைப் பற்றியும் விளக்குகிறது.

உங்கள் பிரதிக்கு 50 பைசா தபால் தலையுடன் எழுதுங்கள்:
த.பெ. எண் 19119 (FAR 202 x)
பம்பாய் 400 025.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ், குழந்தையின் விரைந்த முழு வளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு.

CASGLF-24-203

இன்னும் எத்தனை நேரத்துக்கு இப்படி
ாசனை இல்லாமல் நடக்கப் போகிறோம்
று திகைப்புடன் சாந்தி நின்றாள். இப்
ாழுது நடுத் தெருவுக்கு விரட்டியடிக்கப்
கிற அளவுக்கு நாம் என்ன தப்பு செய்
ாம் என்று ஆத்திரமும் கோபமும் ஏற்
டது. ஃப்ளாட்டுகளின் அமைப்பில்
ட்டுக்கு ஒரே கதவு. அதை அவன் பிடி
தமாகத் திறக்க மறுத்தால் அந்த ரேழி
பொதுஜனங்கள் பார்க்கக் கூடிய இடத்
எத்தனை நேரம் அனாதையாய் வெட்கம்
ட்டு நிற்க முடியும்?

அவள் சட்டென்று ஒரு தீர்மானத்துக்கு
தவளாய் ஒரு காலி ஆட்டோ ரிக்
ாவை நிறுத்தி ஏறிக் கொண்டாள்.
ஸ்பத்திரிக்குச் சென்று வண்டியை
கச் சொல்லி அவசரமாக
டாஃப் ரூமுக்குச் சென்றாள்.
இரவுச் சாப்பாட்டைச் சாப்
டு முடித்து, டப்பாவை
டக் கொண்டிருந்த ஊர்
ா ஆச்சரியத்துடன் அவ
ப் பார்த்தாள்.

''என்ன சாந்தி? நீ இன்
ம் வீட்டுக்குப்
ாகல்லே?''

''அப்புறம் சொல்
ன். ஒரு பத்து
ா கைமாத்தாக்
க்கிறியா? வெளி
ல ஆட்டோ
ஷா நிக்கறது.
வனுக்குக்
காடுக்க
ம்.''

தரேன்.''

சாந்தி திரும்பி வருகிற வரையில் ஊர்மிளா காத்திருந்தாள்.

''என்ன சாந்தி? பர்ஸ் தொலைஞ்சு போச்சா?''

அந்தி நேரத்து உதயங்கள்

— வாஸந்தி —

களைப்பும் பசியும் துக்கமும் திடீரென்
பொறுக்க முடியாமல் போயிற்று. தேம்பி
தேம்பிக் குலுங்கும் அவள் முதுகை ஊ
மிளா அழுத்திப் பிடித்து உட்கார்த்
வைத்தாள்.
''என்ன நடந்தது சாந்தி?''
அவள் மெள்ளத் தன்னை நிதானித்து
கொண்டாள்.
''இன்னிக்கு நான் கிளம்பின பஸ்ஸிலே
ஏதோ கலாட்டா. அதனுலே நான் வீ
டுக்குப் போய்ச் சேர றதுக்கு லேட்டாயிடுத்து
நான் வேணும்னே லேட்டா வந்தேன்னு அ
ருக்குக் கோபம் வந்துடுத்து. வீட்டுக்கு
வராதேன்னு வெளியே வெச்சுக் கதவை
சாத்திட்டார்.''
''மை காட்! அப்புறம் திறக்கவே
இல்லையா?''
''திரும்பத் திரும்ப பெல் அடிச்சேன்
திறக்கலே. ஒரு மணி நேரம் அந்த வரா
தாவிலேயே நின்னு பார்த்தேன். அப்புற
எத்தனை மணி நேரம் அங்கே அனுை
மாதிரி நிக்கறதுன்னு இங்கே வந்தேன்.''
''நல்ல வேலை செஞ்சே. அந்த மாதி
ஒரு புருஷன் கிட்ட எப்படித்தான் இருக்கே
உனக்கு ரொம்பப் பொறுமை சாந்தி! நாளு
இருந்தா எப்பவோ உதறிட்டுக் கிளம்ப
யிருப்பேன்.''
''உதறறது அவ்வளவு சுலபமில்லே ஊர்மி
அதெல்லாம் ஒரு பழக்கம் மாதிரி
லேசுலே விட முடியாத பழக்கம்!''
''நீ சரியான மக்கு! அது உனக்கு
நல்லதுக்கில்லேன்னுநீவிட
தான் வேணும்.எத்தனை
நாளைக்கு இப்ப
மூடின கதவுக்கு
வெளியே
நிப்பே?''

''அது திறக்கிற வரைக்கும்!''

''நான்ஸென்ஸ். இந்த மாதிரி ஆம் ளேங்களெல்லாம் மாறவே மாட்டாங்க.''

''ஒரு வேடிக்கை ஊர்மி. அவர் மாருட் டாலும் நான் நிச்சயமா மாறணும். அவ ரைத் திருப்திப்படுத்த எல்லா வழியையும் பார்க்கணும்னு இன்னிக்குச் சாயங்காலம் நான் தீவிரமா நினைச்சுண்டு போனேன். அவர் எனக்குச் சான்ஸே குடுக்கல்லே!''

''நீ ஒரு மக்கு!''

''சும்மா அதையே சொல்லாதே. இப்ப சாப்பிட ஏதாவது கிடைக்குமா ஊர்மி?''

''ஓ காட். நீ இன்னும் சாப்பிடல்லே இல்லே? காண்டீன்லே ஏதாவது கிடைக்கும். நான் ஆயா கிட்டச் சொல்லி வரவழைக் றேன்.''

''நல்ல வேளை நான் ஆஸ்பத்திரியிலே வேலை பார்க்கறேன் ஊர்மி. ஏதாவது ஆபீ ஸாயிருந்தா இப்படி ராத்திரி வேளையிலே நுழைய முடியாது.''

''நீ செஞ்சிருக்கிற ஒரே புண்ணியம்!'' விருக்கென்று ஊர்மி வெளியே போனாள். உடம்பின் ஒவ்வொரு அணுவும் வலித்தது. அங்கிருந்த பெஞ்சில் சாந்தி படுத்துக் கொண்டாள்.

சற்று நேரத்தில் ஆயா பின்தொடர ஊர்மி வந்தாள் பூரி ஸப்ஜியுடன்.

''நான் செஞ்ச இன்னொரு புண்ணியம்!''

''நீ சாப்பிட்டுட்டுத் தூங்கு சாந்தி. நான் ட்யூட்டிக்குப் போறேன். அந்த ஆளு, அதான் அந்த கம்ப்ளீட் லோ பாரப்லீஜியா, இன்னிக்கு ஒரே கலாட்டா. ராத்திரி பேசா மல் இருக்கப் போருனே இல்லே தொந்தரவு கொடுக்கப் போருனே?''

''ஏன் என்ன விஷயம்?''

''ஏ ம் ம ா... குழந்தையும் தெய்வமும் ஒண்ணுதானே?''

''ஆமாம். எதுக்குக் கேக் கறே?''

''இல்லே. நீ சாமிக்குப் படைக்க வச்சிருந்த பிரசா தத்தை நான் தின்னுட் டேன், அதுதான்...''

- சி. மோகன்தாஸ்



''அவனுடைய சிநேகிதி வந்திருந்தா. திடீர்னு இந்த ஆளு 'கோ அவே'ன்னு அவ ளைப் பார்த்து ஒரே கத்தல். அந்தப் பெண் முகத்தைத் தொங்கப் போட்டுண்டு போனா. அந்த ஆளுக்குப் பெரிய மெண்டல் டிப் ரெஷன் பாவம். யாராவது பக்கத்திலேயே உட்கார்ந்துண்டு கையைப் பிடிச்சுண்டு இருக் கணும்னு எதிர்பார்க்கிறான்!''

பூரியைச் சாப்பிட்டு ஒரு டம்ளர் நீரையும் அருந்திய பின் வயிற்றின் பயங்கர ஓலம் தணிந்தது. இப்பொழுது லேசாகப் புன் னகை கூட அரும்பியது. அவள் முகத் தைக் கழுவிக் கொண்டு வந்து படுத்துக் கொண்டாள். உடம்பின் ஒவ்வொரு உறுப் பும் தளர்ந்த அந்த நிலையில் எதைப் பற்றி யும் சிந்திக்கவே மனசு சோம்பல் பட்டது. நடராஜனின் கோபத்தையும் நிஷ்டூரப் பார் வையும் அசிங்க வார்த்தைகளும் அறவே நினைவுக்கு வராமல் போனால் எத்தனை நன்றாக இருக்கும்! அவள் கண்களை மூடிக் கொண்டு தூங்க முயன்றாள். உடம்பு கட்டை மாதிரி அசைய மறுத்தாலும் மூளை சுறுசுறுவென்று முன்னும் பின்னுமாகப் பரபரத்துக் கண்களில் நீரை வரவழைத்தது.

''நானா யிருந்தா எப்போதோ உதறிட்டுக் கிளம்பி யிருப்பேன்.''

நம்மால் ஏன் முடியவில்லை? விட்டுக் கொடுக்கும் சுபாவத்தாலா? பலவீனங்கள் இல்லாத மனிதர்கள் இல்லை என்கிற பொதுவான எண்ணத்தாலா? தாம்பத்ய பந்தத்தை அத்தனை சுலபமாக முறிக்கக் கூடாது என்கிற ஆத்மார்த்த எண்ணத் தாலா? ஆனால் இவனது விரட்டல்களை எத்தனை நாளைக்குச் சகித்துக் கொண்டிருக்க முடியும்?

கேள்விகள் நூறாயிரமாகக் கிளம்பி மண் டையைக் குடைந்தன. அவள் புரண்டு புரண்டு படுத்துத் தூக்கம் வராமல் எழுந் தாள். தலையைக் கோதி விட்டுக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள். வெளி வராந்தாவுக்கு வந்ததும் எங்கோ பெய்த மழையின் கருணையில் குளிர்ந்த காற்று முகத்தில் அடித்தது. காலையில் காய்ந்த உஷ்ணத்தை ஈடு செய்கிற மாதிரி—

ரீஹாபிலிடேஷன் வார்டு அரை குறைத் தூக்கத்தில் இருந்தது. ஊர்மிளா ஒதுக்குப் புறமாக இருந்த மேஜை மேல் முகத்தைக் கவிழ்த்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். தூரத்தில் எங்கோ எரிந்த இருபத்தி ஐந்து வாட் பல்பு வார்டு முழுவதுக்கும் ஒரு மெலிதான வெளிச்சப் போர்வையைப் போர்த்தியிருந்தது.

ஏதோ தூரத்துக் கட்டிலிலிருந்து முனகல் கேட்டது. சுபாவமாக அவளது கால்கள் அதை நோக்கிச் சென்றன. கட்டிலை நெருங்க நெருங்க அது ஹரியின் கட்டில் என்று புரிந்தது. கண்களை மூடிய நிலையில் அவன் முனகிக் கொண்டிருந்தான். அந்தத் தீர்க்க மான மூக்கையும் விசாலமான நெற்றியை யும் பார்க்கையில் அவனுடைய பளபளக்கும் கண்ணும் கூர்மையான பேச்சும் நினைவுக்கு வந்தன. இவன் எதற்காக இன்று கத்தி யிருப்பான்? அந்த மாயாவிடமிருந்து இவன்

ரொம்ப எதிர்பார்க்கிறன். ஸெலுலாய்ட் பொம்மை மாதிரி இருக்கும் மாயா —மற்றவர்களுக்காக எதுவும் கொடுத்துப் பழக்கமில்லாத மாயா மாதிரி லட்சக் கணக்கில் பெண்கள் இருப்பது அவனுக்குத் தெரியாது.

அவள் மெல்ல அவன் நெற்றியில் கை வைத்தாள்.

சட்டென்று கண் விழித்துப் பார்த்தான்.

''வலிக்கிறதா மிஸ்டர் ஹரி?'' என்றள் தமிழில்.

அவன் வியப்புடன் அவளைப் பார்த்தான்.

''யாரு, சாந்தியா?''

''ஆமாம்.''

''எப்படி ராத்திரியிலே இருக்கீங்க?''

''இன்னிக்கு நைட் டியூட்டியும் பார்க்கிறேன்.''

''வேடிக்கை.நான் தூங்கப் போகும்போது நினைச்சேன். நீங்க இருபத்தி நாலு மணி நேரமும் இங்கே டியூட்டி பார்த்தீங்கன்னு எவ்வளவு நன்னயிருக்கும்னு!''

சட்டென்று ஒரு பிரவாகம் நெஞ்சில் கிளம்பிற்று. அவளது அருகாமையை வேண்டுபவர்கள் இவர்களாவது இருக்கிறர்களே!

''ஏன் ஹரி?''

''நீங்கதான் இதமா இருக்கீங்க!''

''தாங்க்யூ இப்ப வலி இருக்கா?''

''நிறைய — முதுகு, கை, கழுத்தெல்லாம் வலிக்கிறது. தலையும் வலிக்கிறது.''

''வலிக்கு மாத்திரை தரேன்.''

''நல்ல வேளை என் கால்கள் எங்கே இருக்குன்னு தெரியலே.''

அவள் குழப்பத்துடன், ''ஏன்?'' என்றள்.

''தெரிஞ்சா அதுவும் வலிச்சிருக்கும்.''

அவளுக்குப் பாவமாக இருந்தது. சுபாவத்தில் இவன் ரொம்ப உற்சாகமுள்ளவனக இருக்க வேண்டும். பழைய மனநிலைக்கு எப்போது திரும்பப் போகிறன்?

''மூளை வேலை செய்யறதினலேதான் வலின்னு ஒண்ணு இருக்கிறது தெரியறது. அதனலே மூளையே வேண்டாம்னு சொல்லிடுவீங்களா?''

அவன் மௌனமாக அவள் கொடுத்த மாத்திரையைச் சாப்பிட்டான்.

பிறகு மெள்ளச் சொன்னன்.

''என்னுடைய நிலையிலே மூளை கலங்கிப் போறது ரொம்பச் சுலபம் சாந்தி. மூளை வேண்டாம்னு நான் சொல்லாமயே அது நழுவிப் போயிடும்.''

அவள் சிரித்தாள்.

''மூளை இருக்கோ இல்லையோ அசட்டுத்தனம் நிறைய இருக்கு. உங்களை விட மோசமான கேஸை நான் பார்த்திருக்கேன். சிரிச்சுக்கிட்டுத் தாங்கிக்கிட்டிருக்கிறதை நான் பார்த்திருக்கேன்.''

''அவங்க உங்களுக்கு உறவாயிருக்கும்!''

அவள் மறுபடியும் சிரித்தாள்.

தங்கள் பேச்சு மற்ற நோயாளிகளுக்குத் தொந்தரவாக இருக்குமோ என்று நினைத்தபடி அவள் மெள்ளச் சொன்னள்.

''காலேலே பேசிக்கலாம் — தூங்குங்க.''

''சாந்தி,சாயங்காலம்மாயாவந்திருந்தா''

''வெரி குட்.''

''தூங்குகிறவனை எழுப்பலாம். தூங்குகிறதாகப் பாசாங்கு பண்ணுகிறவனை என்ன செய்ய முடியும்?''

''எழுப்புகிறதாகப் பாசாங்கு பண்ணலாமே!'' — பெ. கலாசாமி

''குட் இல்லே. அவ மனசு ரொம்பக் கலங்கிப் போயிருக்காம். மாறுதலுக்கு மெட்ராஸுக்குப் போகப் போறளாம்.''

சாந்தி பதிலேதும் சொல்லாமல் அவனைப் பார்த்தாள். இவனுக்கு இந்த மாதிரி அதிர்ச்சிகள் எல்லாம் தாங்க எப்பொழுது தென்பு வரும்? இன்னும் பல அதிர்ச்சிகளையும் இவன் தாங்க வேண்டி வரும்....

''அவங்க போயிட்டு வரட்டும் ஹரி. உங்களைக் கவனிச்சுக்க நாங்கள்ளாம் இல்லே?''

அவன் சட்டென்று அவளுடைய கையைப் பற்றினன்.

''நீங்க இந்த மாதிரிச் செஞ்சிருப்பீங்களா?''

''எந்த மாதிரி?''

''இன்னும் ரெண்டு மாசத்திலே கல்யாணம் பண்ணிக்கப் போறேம்னு நினைச்சிருந்த ஆள் குத்துயிராக் கிடக்கும்போது வேறே ஊருக்குப் போயிடுவீங்களா?''

அவள் திகைத்தாள். ஓ, இவனுக்கு எத்தனை ஆழமான பிரியம் அந்தப் பெண் மேல்! அதனல்தான் இத்தனை ஏமாற்றம், இத்தனை துக்கம்.

அவள் மெல்லப் புன்னகைத்தாள்.

''இது ஒரு அசட்டுத்தனமான கேள்வி ஹரி. எனக்கு அந்த மாதிரி ஒரு நிலைமை ஏற்பட்டதில்லே. நீங்க குத்துயிரா இல்லவும் இல்லே. இப்போதைக்கு நான் எந்த ஊருக்கும் போறதா இல்லே.உங்களைக் கவனிச்சுக்க நான் இருப்பேன்.''

''ரொம்ப தாங்க்ஸ் சாந்தி. அப்ப என் கர்ல் ஃப்ரெண்டா நீங்க இருக்கீங்களா? ஆன வெறும் வாயாலேதான் நான் காதல் செய்ய முடியும்!''

அவள் ஒரு விநாடி தூக்கி வாரிப் போட்டு அவனைப் பார்த்தாள், அந்த மங்கிய வெளிச்சத்தில் அவன் கண்களில் தெரிந்த சிறுபிள்ளைத் தனத்தைப் பார்த்து,

''ஓ.கே!'' என்று சிரித்தாள்.

(தொடரும்)

போட்டிக் கதை-2

பிரும்மோபதேசம்

குப்பண்ணு வெளியிலிருந்து களைத்துவந்த
பாது வாசல் திண்ணையில் ஒரு சிறுவன்
டங்கியபடி படுத்து உறங்கிக் கொண்டிருப்
தைப் பார்த்தார்! யாரிவன் புதியவன்?

''பாக்கியம்... பாக்கியம்...'' என்றார்
ப்பண்ணு.

குப்பண்ணு கேட்க ஆரம்பிப்பதற்குள் பாக்
பமே ஆரம்பித்து விட்டாள்.

''பையன் யாருன்னு பாக்கறேளா? பக்
த்து ஊராம். பசியிலே மயங்கி விழறுப்
லே ஆயிட்டான். ஏதோ ஸ்லோகம்
சால்லிண்டு பிச்சை எடுத்துண்டு வந்
ான். நம்ம வீட்டு வாசல்லே மயங்கி
ழ இருந்தவனுக்கு நான்தான், இருந்த
ாப்பாட்டிலே கொஞ்சம் கொடுத்
தன். சாப்பிட்ட பிறகு அப்படியே
ங்கிப் போயிடுத்து பாவம்...''

இப்போது குப்பண்ணுவுக்கு மயக்
் வந்தது.

பாக்கியமாவது, இரக்கப்பட்டாளா
து... சோறு போட்டாளாவது?

இப்படி இருந்தால் உலகம் என்ன
து?

குப்பண்ணுவுக்கு ஏதோ 'ரோஜ்'
த்தி யோகம். காலையில் எழுந்து
ண்டை உதறிப் போட்டுக் கொண்டு
ளம்பினால்—

வேலை கிடைத்தால் உண்டு, இல்லை
யன்றால் இல்லை.

''அண்ணு... அண்ணு'' என்று
த்தனை பேரையும் காக்காய் பிடித்
த்தான் வைத்திருந்தார். ஆனாலும்
னமும் வேலை நிச்சயம் என்று சொல்
தற்கில்லை.

கிருஷ்ண வாத்
ார் க்ரூப், ராமு
ாத்யார் க்ரூப்
ன்று எத்தனை
ருப்கள்! இந்த
ருப்பில் இருந்தால்
ந்த க்ரூப்கார
ுக்குப் பிடிக்காது.
தில் இருந்தால் இவனுக்கு ஆகாது. சம்
ளம் தருகிறவன் எந்த க்ரூப்பாக இருந்தால்
ன்ன? ஏன் இவர்கள் இப்படி முத்திரை குத்து
றார்கள்? என்று குப்பண்ணு நினைப்பார்!
நினைத்து என்ன பயன்? இவருடைய
தாழில் ஏதோ ஒரு க்ரூப்பைச் சார்ந்து
ான் இருக்க வேண்டும். இருந்தார். சில
மயம் வரும்படியே இருக்காது. கல்யாண
ாதமானால் ஓரளவு வருமானம் இருக்கும்.
பாவளி சமயத்தில் இவர் தனியாக நாலு
டுகளில் ஜிலேபி சுற்றுவதும், மிக்சர்
பாடுவதுமாக என்னவோ சம்பாதித்துக்
ாலம் தள்ளி வந்தார். கல்யாணச் சமை
லில் கிடைக்கிற வரும்படியில் அவனுக்கு
வனுக்கு என்று கமிஷன் போக இவருக்குத்
தறுவது மிகச் சொற்பமே. அந்தச் சொற்
த்திலும், அற்பத்திலும் வாழ்கிற இவரின்
னைவி இவருக்குப் பாதி நாட்கள் வீட்டில்
ாப்பாடு இல்லை என்கிற நிம்மதியில் ஒரு
சாற்றை வடித்து, அப்பளம் சுட்டு அல்
து கீரையை மசித்து, குட்ரசம் வைப்பாள். பாதி நாள் சமையலே கிடையாது. பழையதுதான்!

இதில் புதிதாக வந்த இந்தப் பிள்ளை யாண்டானுக்குப் பங்கா? ஆச்சரியம்தான்! திடீரென்று எங்கிருந்தோ வந்த பிள்ளைக்கு அவள் உணவையும் போட்டு இடமும் கொடுப்பதென்றால்...?

எங்கிருந்தோ வந்தவன்....?

இவன் என்ன பாரதி கண்ட கண்ணனா என்ன?

''கண்ணன்தான்! ஆமான்னு... அந்தப் புள்ளை பெயர் கண்ணன்தான். பக்கத்துக் கிராமத்துலே அவன் அப்பா சாஸ்திரிகளாம். இவன் மூத்தா பிள்ளையாம். இளையா மோகத்திலே இவனை இளையாளோட சேர்ந்து அப்பனும் கொடுமை பண்ணினானும், அதான் பையன் பாவம், ஓடிவந்துட்டான். நம்ம வீட்டிலே இருக்கட்டும்னு விட்டுட்டேன்!''

குப்பண்ணு பேசவில்லை. பையன் வந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டது. இன்னும் மர்மம் விடுபடவில்லை.

அன்று—

''கிளம்புங்கோ... கிளம்புங்கோ... சீக்கிரம் கிளம்புங்கோ....''

பாக்கியம் பரபரத்தாள்.

கண்ணன் குளித்துவிட்டு அழகாக நெற்றி நிறைய விபூதியுடன், இருக்கும் ஒரே உடையைத் தோய்த்து, உலர்த்தி, அதையே சுத்தமாக அணிந்து கொண்டு வாசலில் நின்றபடி என்னவோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

''எங்கே கிளம்பணும்கிறே?''

''நம்ம கண்ணனுக்கு பாவம் பூணூல் போட்டு வைக்கலாமோன்னு பாக்கறேன்.''

குப்பண்ணுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. திடீரென்று பாக்கியம் கருணை வள்ளலாக, புத்தரின் மறு அவதாரமாக மாறி, இரக்க மனம் படைத்த அருள் ஜோதியாக எப்போது மாறினள்?

திடீரென்று ஒன்று உறைத்தது. ஒரு கல்யாண வீட்டில் நடந்த சம்பாஷணை!

''ஓய் தெரியுமா? பிராமணர்கள் அஸோஸியேஷன்லே ஏழைக் குழந்தைகளுக்கு இலவச பூ ணூல் போடறாளாம். அது மட்டுமில்லே. அந்தக் குழந்தையோட அப்பா அம்மாவுக்கு நல்ல வேஷ்டி, நல்ல புடவை, பையனுக்குப் பஞ்சாத்திர உத்தர்ணி, தாம்பாளம் எல்லாம் தராளாம். பூணூல் அன்னிக்குப் பையனைச் சேர்ந்த அஞ்சு பேருக்கு இலவச விருந்துச் சாப்பாடாம்...''

''ஆமாம், இதெல்லாம் பண்றது சரிதான். புடவைக்காகவும், வேஷ்டிக்காகவும் வருஷா வருஷம் அவாளே போய்த் திரும்பத் திரும்பப் புடவையை வாங்கிண்டா? அதை எப்படிக் கண்டு பிடிப்பா?''

''அத்தனை கூட யோசிக்காமலா இந்தக் காரியம் பண்ணுவா? பூணூல் போடறதுக்கு முன்னல், அப்பா, அம்மா பேர், அவா போட்டோ, பையனோட போட்டோ இதை எல்லாம் கொண்டு போய் பதிவு பண்ணனுமாம். ஒரு இண்டர்வ்யூ கூட இருக்காம். அதெல்லாம் ஏமாத்தமுடியாது.''

''எனக்குப் பிள்ளை இல்லியேன்னு இருக்கு ஒரு வேஷ்டியும் புடவையும் கிடைக்குமே!''

"என்ன பேக் மாதிரி நிக்கறேள்? கிளம்புங்கோ.''

'ப்ளாஷ் பேக்'கிலிருந்து திரும்பிய குப்பண்ணு உண்மையில் 'பேக்' மாதிரித்தான் நின்று கொண்டிருந்தார்.

''இன்னிக்குக் கண்ணன் பேரைப் பதிவு பண்ணப் போகணும். அடுத்த வாரம் ராமர் கோயில்லே பூணூல் கல்யாணம். நாம தான் அவனோட அம்மா, அப்பா!''

அவர் நினைத்தது சரிதான்.... நண்பர்கள் சொன்னது சரிதான். அவர்கள் புகைப்படம் கேட்டது சரி... அவர்களை ஏமாற்ற முடியாது என்பதும் சரி... ஆனல் பாக்கியத்திடம் அவர்கள் பையனின் பெர்த் சர்டிபிகேட் அல்லவா கேட்டிருக்க வேண்டும்? எத்தனை சாமர்த்தியசாலி இவள்! இல்லாத குழந்தைக்குத் தாயானளே! ஒரு நொடிப்பொழுதில், பத்து மாதம் சுமக்காமல், பிரசவ வலி எடுக்காமல், ஆஸ்பத்திரி செலவு இல்லாமல், மருந்து சாப்பிடாமல், பத்தியம் சாப்பிடாமல் அம்மாவாகப் பாக்கியம் மாறிப்

விமலா ரமணி

ானுளே? இந்தச் சாமர்த்தியம் யாருக்கு
நம்? வேண்டாம் பாக்கியம்... ஒரு புட
வக்காகவும், வேஷ்டிக்காகவும் பையனு
டைய பிறப்பையே மாற்ற வேண்டுமா?
து தப்பு... வேண்டாம்...!

ஆனுல் குப்பண்ணுவுக்குப் பாக்கியத்தை
திர்த்துப் பேசிப் பழக்கமில்லே. அவள்
சால்வதையெல்லாம் ஏற்றுத்தான் பழக்
ம்! அப்படியே இவர் எதிர்த்துச் சொன்ஞ
ம் அவள் என்ன சொல்லுவாள் என்பதும்
வர் மனத்துள் புரிந்தது.

''ஆமா... இதுலே ஒண்ணும் குறைச்சல்
ல்லே. ஒரு புடவை வாங்கித் தரத் துப்பில்
ாட்டாலும் வர வரும்படியையும் தடுப்
பள்.... நான் பண்ணின பாவம். ஜென்
ாந்திரக் கடன். இன்னும் எத்தனை
ளைக்கு இப்படிச் சீரழியணுமோ?'' —இத்
ாதி... இத்யாதி....

''நீங்க பேசாம வாங்கோ... நான் எல்
ாம் பார்த்துக்கறேன். கண்ணன் கிட்டே
டச் சொல்லி யிருக்கேன் விவரமா... அவ
னுடை அம்மா அப்பா நாமதான். இத்தனை
ளா அவன் தன்னுடை அத்தை ஆத்துலே,
தாவது உங்களோட தங்கை ஆத்துலே
ருந்து படிச்சுண்டு இருந்தான். இப்பத்
ான் ஊரிலே இருந்து வந்திருக்கான்! என்ன
ரியுதா?''

''எனக்குத் தங்கையே இல்லேயே பாக்கி
ம்....''

''இதெல்லாம் சும்மா ஒரு பேச்சு. ஆயிரம்
பாய்சொல்லி ஒரு கல்யாணம் பண்ணும்பா.
ணூல் கல்யாணமும் அப்படித்தான். நாம
ன்ன ஒருத்தரைக் கெடுக்கவா பொய்
சால்றோம்? நல்லதுக்குத்தானே?''

''ஆயிரம் பொய் சொல்லலாம். நல்லதுக்
காக ஆனுல் தன்னலத்துக்காக இப்படி
அபத்தமான பொய் சொல்லி... அதுவும்
ஒரு புடவை வேஷ்டிக்காக...''

குப்பண்ணு முடிக்கவில்லே.

பாக்கியம் பொரும ஆரம்பித்துவிட்டாள்.

''தெரியுமே... நேக்கு நன்ஞத் தெரியுமே!
எனக்கு ஒரு புடவை கிடைக்கப் போற
துன்னு... நான் இத்தனே பண்றேன்? நல்லது
பண்ணினுக்கூட அதுலே குத்தம் கண்டு
பிடிக்கறேளே!''

''சரி... சரி... கிளம்பு!''

குப்பண்ணு கிளம்பிவிட்டார்.

பையனுக்கு நன்ருகத்தான் டிரெயினிங்
கொடுத்திருந்தாள் பாக்கியம். ''அப்பா...
அம்மா'' என்று பையன் அவர்கள் எதிரில்
குழையோ குழை என்று குழைந்தான்!

பெயர் பதிவு... புகைப்பட பரிமாற்
றங்கள்...இண்டர்வ்யூஎல்லாம் ஆகிவிட்டன.

பூணூல் அன்று சடங்குகளுக்கான வழக்க
மான மந்திரங்களைச் சொல்லச்சொல்லக்
குப்பண்ணுவுக்குத் தொண்டை அடைத்தது.

நான் பாவம் பண்ணுகிறேன். பொய்
சொல்லுகிறேன். காயத்ரி, சாவித்திரி என்று
அத்தனை அதி தேவதைகளையும் அழைத்து,
'இவன் என் மகன், இவன் என் மகன்' என்று
பொய் சொல்கிறேன்.

அந்தப் பெரிய பிரவசன மண்டபத்தில்
எட்டு இலவசப் பூணூல்கள் நடந்து கொண்
டிருக்கின்றன.

அத்தனை பேரும் அப்பா — பிள்ளைகள்!
அவர் மட்டும் போலி அப்பா! பட்டால்
துணியைப் போர்த்திக் கொண்டு கண்ண
னுக்கு மந்திர உபதேசம் செய்யும்போது,
காயத்ரி மந்திரத்தைக் காதில் சொல்லிப்
பிரும்மோபதேசம் செய்து வைத்தபோது,
எல்லோரும் மேளக்காரரைப் பார்த்து ஆள்
காட்டிக் காட்டிப் பயமுறுத்த, அவர்
பயந்துபோய் வாசித்த கெட்டி மேளத்
தின் ஒலி காதில் விழுந்தபோது, சுற்றி
இருந்தவர்கள் அக்ஷதையும், புஷ்பமுமாக
வாரி இறைத்து ஆசீர்வதித்தபோது குப்
பண்ணுவுக்கு அழுகை வந்தது.

'படுபாவி... என்னே இந்த ஆன்மீக சத
ஸில் பொய்யனுக நடிக்க வைத்து விட்டாளே
சண்டாளி! இதை எதிர்க்கத் தெரியாத
மூடமாக இருக்கிறேனே நான்!'

அவர் தமக்குத் தாமே பிரும்மோபதேசம்
செய்து கொண்டிருந்தார்.

வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டுப் புதுப்
புடவை, பஞ்சாத்திரம், உத்திரணி,
தாம்பாளம் சகிதம் மலர்ச்சி பொங்கப்
பாக்கியம் வீட்டில் நுழைந்தாள். குட்டி
வேஷ்டியைக் கட்டிக் கொண்டு கண்ணன்
அபிவாதயே சொன்னபோது குப்பண்ணு
வுக்கு அழுகை வந்தது. அவன் யாரோ?
இவர் யாரோ? அவனையும் தன் குலமாக்கி,..
கோத்திரமாக்கி....

ஒரு வாரம் வரை கண்ணன் தினமும்
கோவில் மண்டபத்துக்குப் போய்ச் சந்தியா
வந்தனப் பாடங்களைக் கற்றுக் கொள்ள

''ஊனமுற்றோரை ஆதரிக்க
ணும்னு உங்க பத்திரிகையில் பக்
கம் பக்கமா எழுதினீங்க... இப்ப
இதுமாதிரி செஞ்சிருக்கீங்களே,
நியாயமா?''

''என்ன செஞ்சிட்டோம்?''

'''நடை' சரியில்லேன்னு குறை
சொல்லி என் கதையைத் திருப்பி
அனுப்பிச்சிருக்கீங்களே!''

- கிரிஜா மணாளன்

வேண்டுமாம். கண்ணன் போய்க்கொண்டிருந்தான்.

நாளையோடு கண்ணனுக்குப் பாடம் முடிகிறது.

கண்ணன் கோயிலுக்குப் போயிருந்த அந்த மாலை நேரத்தில் பாக்கியம் குப்பண்ணு அருகில் வந்தாள்.

''என்ன?''

''நாளைக்குக் கண்ணனை ஆத்தை விட்டு அனுப்பிடலாம்னு இருக்கேன்...''

திடுக்கிட்டுப் போனார் குப்பண்ணு. சண்டாளி... தனக்குப் புடவை கிடைத்தவுடன் அவனை துரத்தப் போகிறாளா? இது அடுக்குமா?

ஆனாலும் குப்பண்ணுவால் எதிர்க்க முடியவில்லை. முடியாது.

''ஏன் திடுதிப்புன்னு இப்படிச் சொல்றே?''

''பின்னே என்ன? விக்கிற விலைவாசியிலே இவனுக்கு வேறே தண்டச் சோறு போட முடியுமா என்ன? ஏதோ பூணூல் போட்டோம். நம்மால ஆனது. அவன் பொழைச்சுப்பான். எதுக்கும் உங்ககிட்ட விவரம் சொன்னேன்... அவ்வளவுதான்... நான் போறேன்... வாசல் கதவைத் தாழ் போட்டுக்கோங்கோ!''

பாக்கியம் அக்கம் பக்கம் அரட்டை அடிக்கக் கிளம்பிவிட்டாள்.

ஆமாம்... பாக்கியம் தர்ம பத்தினி. எதைச் செய்வதானாலும், சொல்வதானாலும் குத்துப் பிள்ளையார் மாதிரி இருக்கும் குப்பண்ணுவிடம் சொல்லிவிட்டுத்தான் செய்வாள்! பிள்ளையார் பதில் பேசப் போகிறாரா என்ன?

வாசல் திண்ணையைப் பார்த்தார் குப்பண்ணு. நாளை இந்தத் திண்ணை நிரந்தரமாக வெறிச்சோடிக் கிடக்கப் போகிறது.

மூன்று குடித்தனக்காரர்களுக்குப் பொதுவான அந்தத் திண்ணையின் அந்த மூலைதான் கண்ணனுக்குச் சொந்தம். எப்போதும் அங்கு உட்கார்ந்து கொண்டுதான் எதையாவது படித்துக் கொண்டு, அல்லது எழுதிக் கொண்டிருப்பான். இனி... இனி.. அந்த இடம் நிரந்தரக் காலி! வாசல் கதவைத் தாழிட்டார். உள்ளே வந்தார்.

''கதவைத் திறந்து விடுங்கோ அப்பா... நான் கண்ணன் வந்திருக்கேன். உள்ளே வரணும்.'' பளீரென்று உறைத்தது ஒன்று!

நான் தனியானவன் இல்லை... எனக்கொரு—வாரிசு உருவாகி விட்டது. என்னால் முடியாததை இவன் மூலம் நான் சாதிக்க முடியும். ஏனெனில் அவனுக்கு நான் அப்பன்! பிரும்மோபதேசம் செய்வித்த அப்பன்!

''கண்ணு... நான் ஒண்ணு சொல்லப் போறேன்... கவனமாக் கேள்... மாமி... அதான் உன்னோட அம்மா.. உன்னை இந்த வீட்டிலே இருந்து துரத்த முடிவு பண்ணிட்டா. நாளைக்கு உன்னை வெளியே போன்னு சொல்லுவா. நீ உடனே சரின்னு போயிடாதே, எனக்கு யாருமில்லை... நான் மாட்டேன்னு சொல்லு. அவ பிடிவாதம் பிடிச்சா நீ சொல்லு — அத்தனை பெரிய சதஸுலே அத்தனை பேர் எதிரிலேயும் உங்க ரெண்டு பேரையும் நான் அப்பா அ... மான்னு சொல்லி மனப்பூர்வமா அப்படியே... ஏத்துண்டு இருக்கேன். என்னை வெளியே... போன்னு நான் எங்கே போவேன்? — அ... படீன்னு கேளு. அதையும் மீறி அவ மிர... டினு நீ பயந்துடாதே... நானும் இப்பவே... போய் அந்தப் பிராமணர்கள் சங்கத்துலே... உண்மையைச் சொல்றேன்னு சொல்லிட்டு... கிளம்பு... மாமி அடங்கிடுவா.''

குப்பண்ணு மெல்ல மெல்ல விவரித்து... கொண்டே போகிறார்.

குருக்ஷேத்திரப் போர்க் களத்தில் பார்த்... னுக்கு உபதேசித்த கண்ணபிரானைத் த... மைப் பாவித்துக் கொண்டு, இந்தச் சின்ன... கண்ணனுக்கு இவர் உபதேசம் பண்ணுகிறார்...

பழைய தலைமுறையால் காட்ட முடியா... எதிர்ப்புக்களை இந்த இளம் தலைமுறைக...

''என் பொண்ணுக்கு ஜாஸ்தி செல்லம் கொடுத்து வளர்த்தது தப்பாப் போச்சு!''
''ஏன்...?''
'''கேட்டரிங் டெக்' படித்த மாப்பிள்ளையைத்தான் கல்யாணம் பண்ணிப்பேங்கிறா...''
- சி. மோகன்தாஸ்

தான் செய்ய வேண்டும் என்கிற புதிய... ஞானத்தைப் பெற்றவராய், தாம் பெற்ற... ஞானத்தைக் கண்ணனுக்கும்ஊட்டிக் கொண்டிருக்கிறார்!

அன்று அத்தனை பெரிய சபையில் கண்ண... னுக்குப் பிரும்மோபதேசம் செய்தபோது... கூசிக் குறுகிய குப்பண்ணு, இன்று நெஞ்சு... நிமிர்ந்து — நிஜமாகவே ஒரு பிரும்மோப... தேசம் செய்கிற மகிழ்வில் கண்ணனின்... காதுகளில் மெல்ல மெல்லத் தம் திட்டங்... களைக் கிசுகிசுத்துக் கொண்டிருக்கிறார்!

இதன் முடிவு என்ன என்பது பாக்கியம்... வந்தால்தான் தெரியும்!

அந்தி நேரத்து உதயங்கள்

வாஸந்தி

12

'பீட்டர் பீட்டர் பம்ப்கின் ஈட்டர்,
ஹாட் எ வைஃப் அண்ட் குட்ன்ட் கீப் ஹர்'

''ஏய் மிக்கி இங்கே வா!'' என்று சிரித்தான் ஹரி. ''எங்கிட்ட வந்து உன் பாட்டை-ச் சொல்லு!''

மிக்கியின் முகத்தில் ஒரு கூச்சப் புன்னகை தெரிந்தது. இடது கன்னத்தில் ஒரு சின்னக் குழி கண்ணாமூச்சி விளையாடிற்று.

வலது கை ப்ளாஸ்டருடன் ஸ்லிங்கில் தொங்கிற்று. வலது கால் கட்டையாக ப்ளாஸ்டரில் நீண்டிருந்தது. ஹரியின் பேச்சைக் கேட்டதும் அருகிலிருந்த சக்கர நாற்காலிக்கு லாகவமாக நழுவி உட்கார்ந்து கொண்டான். இடது கையால் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு ஹரியின் கட்டிலுக்கருகில் வந்தான்.

''என்ன அங்கிள்?''

''எங்கே அந்த பொயமைச் சொல்லு!''

''பீட்டர் பீட்டர் பம்ப்கின் ஈட்டர்



ஹாட் எ வைஃப் அண்ட் குட்டன்ட் கீப் ஹர்
ஹி புட் ஹர் இன் எபம்ப்கின் ஷெல்—''
''இரு,இரு.இதுக்கு அர்த்தம் தெரியுமா?''
''ஊஹூம்.''
''நான் சொல்றேன். பீட்டர்னு ஒரு சாப்பாட்டு ராமன் இருந்தான். அவன் பெண்டாட்டி ஒரு லங்கிணி... அவ தொந்தரவு பொறுக்க முடியாமெ அவளை ஒரு பரங்கிக்காய் கூட்டுக்குள் போட்டு வைச்சு..''
''எப்படிப் போட முடியும்?''
''போட்டானே!''
''அவ்வளவு பெரிய பரங்கிக் காய் எங்கே கிடைச்சுது?''
''சரோஜினி நகர் மார்க்கெட்டிலே! சாந்தி ஆன்டியை வேணுக் கேளு!''
''நிஜம்மாவா சாந்தி ஆன்டி?''
சாந்தி உதட்டைப் பிதுக்கினாள்.
''ஆன்டி மார்க்கெட்டுக்கே போக மாட்டா. அவங்க வீட்டிலே காய்கறி வாங்கறது அங்கிள்தான். நீ உங்கம்மாவைக் கேள் மிக்கி!''
சாந்தி மௌனமாய்த் தன் வேலையைத் தொடர்ந்தாள்.
—மிக்கி தன் அம்மாவைத் தேடிக் கொண்டு போனான்.

''எனக்கு அந்த மாதிரி ஒரு பெண்டாட்டி இருந்தா நானும் அப்படித்தான் பூட்டி வெச்சிருப்பேன் சாந்தி.''
சாந்தி மளமளவென்று அவன் கட்டிலை மறைக்கிற மாதிரி ஸ்கிரீனை வைத்து அவன் சட்டையை அவிழ்த்து உடம்பைத் துடைக்க ஆரம்பித்தாள்.
மெல்லச் சிரித்து, ''நல்ல வேளை, உங்களுக்குப் பெண்டாட்டி இல்லை'' என்றாள்.
''நல்லவேளை எனக்கு இனிமேல் அதற்கு சான்ஸ் இல்லே!''
சட்டென்று மௌனமானாள். தன் வேலையைத் தொடர்ந்தாள்.
''சாந்தி ஏன் பேசாமல் இருக்கீங்க?''
''இப்பவே தீர்மானமாச் சொல்ல முடியாது ஹரி. இன்னும் இரண்டு வாரம் போனப்புறம்தான் டாக்டர் சொல்வார்!''
இவர்கள் எல்லாம் ஏன் இத்தனை நாட்களுக்குத் தன்னை ஏமாற்ற வேண்டும் என்று அவனுள் ஒரு சீற்றம் எழுந்தது.
''எத்தனை நாளைக்குப் போலி நம்பிக்கை கொடுக்கப் போறீங்க?''
''போலியில்லே — நம்பிக்கைங்கிறது தான் இந்த ரீஹாபிலிடேஷன் டிபார்ட்மெண்ட்டுடைய அஸ்திவாரமே.''
''சரியான பொய் பித்தலாட்ட டிபார்ட்மெண்ட்...''
அவன் சொல்வது அவளுக்குப் பிடிக்கவில்லை என்று அவள் முகம் தெரிவித்தது.
''அதிலே நீங்க ஒருத்தர்தான் நிஜம் சாந்தி.''
''தாங்க்யூ!''
''ஓ! உங்களுக்குக் கூட கோபம் வருமா? நான் என்ன செய்யட்டும்? கையையும் காலையும் உதறிண்டு எழுந்துண்டு போயிடலாம் போல ஆத்திரம் வருது. எத்தனை நாள் இப்படிப் படுத்திருக்கிறதுன்னு கோபம் வரது.''
''இந்தக் கோபமெல்லாம் எனக்கு நிறைய பழக்கம் ஹரி.''
அவள் பரபரவென்று புன்னகை மாறாமல் செய்வதை அவன் ஆச்சரியத்துடன் பார்த்தான். நேர்த்தியாக இயல்பாக வளைந்த புருவங்களுக்கு நடுவில் சாந்துப் பொட்டு பளிச்சென்றிருந்தது. சின்ன இடையும் அளவான மார்பும் அந்த உடைக்குப் பொருத்தமாக இருந்தன. சப்தமே செய்யாத ஆர்ப்பாட்டமில்லாத எத்தனை மிருதுவான அசைவுகள்!
''உங்க ஹஸ்பெண்டுக்குக் கோபம் வருமா சாந்தி?''
அவள் திடுக்கிட்டவள் போல் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.
பிறகு பார்வையைத் தாழ்த்தி ''ஊஹூம்'' என்றாள்.
சட்டென்று அவனுக்கு அன்று ஊர்மிளாவும் அவள் தோழியும் பேசிக் கொண்டது நினைவுக்கு வந்தது.
''கல்யாணமாகியிருக்கே? ஒரு மிருகத் தோட!''
இவளுள் ஒரு சோகக் கதை இருக்குமா?

''உங்களை முதல் முதல் பார்த்தபோது உங்களுக்குக் கல்யாணமாகியிருக்காதுன்னு நினைச்சேன்.''

''நான் எப்படி இருந்தாலும் அது உங்களை எப்படிப் பாதிக்கும்?''

''ரொம்பப் பாதிக்கிறது. இல்லேன்னு என்னைக் கல்யாணம் செய்துக்கிறீங்களான்னு கேட்டிருப்பேன்.''

எதிர்பாராமல் கேட்ட ஹாஸ்யம் மாதிரி அவள் பக்கென்று சிரித்தாள்.

''உங்களுடைய விளையாட்டுப் பேச்சுக்கு லிமிட்டில்லாமல் போயிடுத்து ஹரி!''

அவன் பக்கத்தில் இருந்த புத்தகத்தை எடுத்து அவன் கையில் கொடுத்தாள்.

''வேண்டாத கற்பனையில் புத்தி போக வேண்டாம். இதைப் படிச்சிட்டிருங்க. நான் மற்ற பேஷண்ட்ஸைப் பார்த்துட்டு வரேன். அப்புறம் எக்ஸர்ஸைஸ் சொல்லித் தர்ரேன்''

அவள் ஆஸ்பத்திரி லைப்ரரியிலிருந்து கொண்டுவந்த புத்தகம். ஊனமுற்றோரும் சுய முயற்சியால், மனோ திடத்தால், ஒரு நார்மல் வாழ்க்கை வாழ முடியும் என்று பக்கம் பக்கமாய் வியாக்கியானம். முன் பின் தெரியாத ஒரு பேஷண்டின் முன்னேற்றத்தில் இவளுக்கு எத்தனை ஆத்மார்த்தமான அக்கறை என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இனிமேல் இந்த மாதிரி ஒரு மனநிலையை வளர்த்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லாமல் சொல்கிறாளா?

அவன் புத்தகத்தைப் பிரித்தான்—

உறுப்புக்கள் ஊனமடைந்து போவதால் வாழ்வே அஸ்தமித்துப் போய்விட வேண்டியதில்லை. சில கதவுகள் அடைத்துக்கொள்வதால் வேறு கதவுகள் இல்லை என்று அர்த்தமில்லை. அவன் பட்டென்று புத்தகத்தை மூடி வைத்தான். உபதேசம் செய்வது எத்தனை சுலபம்!

சுபாவமான காருண்யத்துடன் பணி புரியும் சாந்தியிடம் எப்படி ஒருத்தன் மிருகத்தனமாக நடந்து கொள்ள முடியும்? நாலைந்து நாட்களாக அவள் ஆஸ்பத்திரியிலேயே இருப்பதை அவன் கவனித்தான். சமயங்களில் இரவுவேளைகளில் அவன் தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருக்கும்போது மிருதுவான கை ஒன்று அவன் நெற்றியில் உட்காரும். கண் திறந்ததும் அந்தப் பளிச்சென்ற புன்னகை மனசை மலர்த்தும்.

''இன்னிக்கும் ராத்திரி வீட்டுக்குப் போகலியா?''

''இல்லே, சொன்னேனே, இருபத்து நாலு மணி நேர டியூட்டி பார்க்கிறேன்.''

வலியிருந்தால் மருந்தைக்கொடுத்துவிட்டு ''தூங்குங்க'' என்று இதமாகச் சொல்லிவிட்டு மற்ற கட்டில்களுக்கு நகர்வாள். ஃப்ளாரென்ஸ் நைட்டிங்கேலின் மறு பிறவியாக இருக்க வேண்டும் இவள்.

எலக்ட்ரிக் ஷாக் அடித்துக் கொண்டு கால் சுவாதீனமில்லாமல் படுத்திருந்த பக்கத்துக் கட்டில் இளைஞன் விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஹல்லோ!'' என்றான் ஹரி.

அவன் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

அந்த நிறத்தையும் மூக்கையும் கண்ணையும் பார்க்கையில் ஒரு திகைப்பு ஏற்பட்டது. என்ன முகம் அது! க்ரேக்க சிற்பம் மாதிரி! கட்டில் நீளம் முழுவதையும் அடைத்த மாதிரிப் படுத்திருந்த அந்த உருவத்தைப் பார்க்க வயிற்றை என்னவோ செய்தது.

''என் பெயர் ஹரி. நீங்கள்?''

ஒரு சின்னப் புன்னகை நெளிந்தது.

''என் பெயர் கௌதம்.''

''எப்படி இருக்கிறீர்கள்?''

அவன் விரக்தியுடன் சிரித்தான்.

''ரொம்ப நன்றாக இருக்கிறேன். எனக்கு இப்பொழுது வேலை ரொம்பக் குறைச்சல். தலையை மட்டும் அசைத்தால் போதும்.''

''எனக்குப் புரியவில்லை.''

''க்வாட்ரப்லீஜியா என்று சொல்கிறார்கள். கழுத்திலிருந்து ஸ்வாதீனமில்லை.''

''என்ன ஆயிற்று உங்களுக்கு?''

இரட்டைக் குழந்தைகள்!

எனக்கு இரட்டைக் குழந்தைகள். கையில் கண்டதை எல்லாம் பையன் எடுப்பான். பெண் தவழ்ந்து வந்து அதைப் பிடுங்கிக்கொள்வாள். ஒரே அழுகை. ஒன்றைச் சமாதானப்படுத்தினால் மற்றொன்று அழும். மாதம் ஒன்பதில் பையன் சற்று நடக்க ஆரம்பித்துவிட்டான். நடை பழகிய அவன் வீதிக்கதவு காற்று அடித்து, திறந்து கொள்ள வெளியில் வந்து வீதிக்கும் வந்து விட்டான். அக்கம் பக்கம் அவரவர்கள் வேலையில் இருந்தனர். அவன் வந்தது தெரியவில்லை. அவன் வெளியில் வந்த நேரம் எதிரே வந்த கார் பெட்ரோல் இல்லாமையால் நின்றுவிட்டது. இல்லையென்றால்.... அதனை இப்பொழுது நினைத்தாலும் அப்பப்பா பயங்கரம்! நல்லவேளை தெரிந்தவர் ஒருவர் அடையாளங் கண்டு அவனைத் தூக்கி வந்தார். என் பெண்ணோ அழுதால் சத்தம் ஏழு வீட்டிற்குத் தாராளமாகக் கேட்கும். எப்படியோ ஓராண்டை எட்டிப் பிடிப்பதற்குள் எங்களுடைய உயிரைப் பாதி வாங்கி விட்டார்கள்.

இருப்பினும் ''என்னுடைய மகள் கொழு கொழு குழந்தைப் பரிசை'' வென்ற போது இரட்டைக் குழந்தைகளை எண்ணி இரட்டிப்பு மகிழ்ச்சிதான் ஏற்பட்டது!

- எஸ். ரமா சுப்பிரமணியன்

''ஷாக். எலெக்ட்ரிக் ஷாக். ஃபாக்டரியிலே ஏதோ ஷார்ட் ஸர்க்யூட் போலிருக்கு. ஏதோ வயரைத் தொட்டேன். அடுத்த நிமிஷம் நினைவில்லே.''

ஹரி ஒன்றும் பேசாமல் இருந்தான். இவனுக்கு என்ன சமாதானம் சொல்வது?

''டாக்டர் என்ன சொல்கிறார்?''

''என்ன செல்வார்? ஆறு வாரம் கழித்துத்தான் எதுவும் சொல்ல முடியும்என்கிறார். என் அம்மாவுக்கும் மனைவிக்கும் சமாதானத்துக்காக.''

அட கடவுளே! இவனுக்குக் கல்யாணமாகியிருக்கிறது! மனைவிக்கு எத்தனை வயசிருக்கும்? இவனுக்கே முப்பதுக்குள்தான் இருக்கும்போலிருக்கிறது—?

இவன் இந்த அதிர்ச்சியை எப்படித் தாங்குகிறான்?

அந்த கௌத்தம் தொடர்ந்து ஹிந்தியில் பேசிக் கொண்டு போனான்.

''என் மனைவி பிறந்தகம் போயிருக்கிறாள். ஹிமாசலப் பிரதேசத்தில் ஒரு கிராமம். சேதி போய்ச் சேருவதற்கு இரண்டு நாளாகும். அவள் இப்பொழுது இங்கில்லாததும் நல்லதுக்குத்தான்.''

இவனுக்கும் நமக்கும் எத்தனை வித்தியாசம் என்று நினைத்து ஆச்சரியமாக இருந்தது. நமக்கு சுயநலம் அதிகம்தான் என்கிற நினைப்பில் வெட்கமேற்பட்டது.

சாந்தி அவனுக்கு உடற்பயிற்சி அளிக்க வந்தாள். கையை அவள் சொன்னமாதிரி அசைப்பதே பெரிய பாடாக இருந்தது.

''எக்ஸர்ஸைஸ் பண்ணப் பண்ணத்தான் உங்க வேலையை நீங்களே செய்துக்க முடியும்.''

''கிண்டல் பண்ணாதீங்க. உட்காரவே முடியல்லே.''

''மெள்ள மெள்ள முடியும். அப்புறம் நீங்களாகவே சக்கர நாற்காலியிலே உட்கார்ந்துக்கிறதுக்குப் பழக்கப்படுத்துவோம்.''

''நடக்கவும் வைக்கப் போறீங்க...!''

''கண்டிப்பா!''

''என்னைப் பிடிச்சுண்டு நீங்கபக்கத்திலேயே நிக்கப் போறீங்களா? காலுக்கு ஸ்வாதீனம் இல்லேன்னு மறந்துடாதீங்க!''

''மறக்கல்லே. சுவாதீனமில்லேன்னாலும் காலிப்பர் பொருத்திக் கட்டையை வெச்சுண்டு நடக்கலாம்.''

''ரொம்ப நல்லா இருக்கு கற்பனை செய்யவே!''

''என்வரையிலே மனுஷனுக்கு மனசுதான் முக்கியம், காலைவிட.''

''அப்படியா? பக்கத்து பெட் கௌத்தம் கிட்ட உங்க சித்தாந்தத்தைச் சொல்லுங்க ரொம்ப ரசிப்பார்!''

அவள் சட்டென்று மௌனமானாள்.

''அவங்களுக்கு எந்த மாதிரி நம்பிக்கை கொடுக்கப் போறீங்க?''

''இன்னொரு பேஷண்டைப் பத்தி நான் உங்க கிட்டே பேசறது சரியில்லே ஹரி.''

''ஓ.கே. நான் கேட்கப் போறதில்லே. எனக்கு அதுக்குப் பதில் தெரியும்.''

விளையும் பயிர்!

என் முதல் குழந்தை 77 ஜனவரி 23ம் தேதி பிறந்தான். என் இரண்டாவது குழந்தை 79 டிசம்பர் 31ம் தேதி பிறந்தான். என் கணவர் சிறந்த Sports man! ஆகவே பாகிஸ்தான் ஆட்டக்காரர் நினைவாக 'வாசிம் ராஜா'' என்று பெயர் வைத்தோம்.

வாசிம் ஒன்றரைமாதக் குழந்தையாக இருக்கும் போதே மிக குறு, குறு என்ற பார்வை உடையவனாகவும், சுட்டியாகவும் இருப்பான். குப்புற விழுந்து தவழும் நிலையில் எந்தப் பொருளையும் வாயில் போடமாட்டான். ஆனால் சிறு பூச்சிகளைக் கண்டால் மட்டும் விடமாட்டான். கையால் ஓங்கி அடிப்பான். நாள் செல்லச்செல்ல இது பெரிய வேலையாகி விட்டது அவனுக்கு. செருப்பை எடுத்துவந்து அடிப்பான். 'ஊ ஊ' என்பான். ஒருசமயம் வாசல்படியில் இருக்கும் குழியில் கட்டெறும்பு ஒன்று இருந்திருக்கு. அவன் பார்த்ததும் விரலைவிட்டுப் பிடித்திருக்கிறான். உடனே அது கடித்துவிட்டது. குழந்தை 'ஊ...ஊ' என்றான். நான் போய்ப் பார்க்கும் போது எறும்பு கடித்து விரலில் தொங்கிக் கொண்டிருந்தது. ரத்தமே வந்துவிட்டது.

என் கணவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரர். விஸ்கோஸ் கால்பந்தாட்ட காப்டன். வீட்டில் குழந்தைகள் விளையாடக் கால் பந்தை வைத்துள்ளோம். என் கணவர் விரும்பின நேரம் குழந்தைகளுடன் பந்து உருட்டி விளையாடுவார். வாசிம் மிக அழகாகச் சுவரைப் பிடித்துக் கொண்டு, காலால் உதைத்துத் தள்ளுவான். இவன் செயலைப் பார்க்கும் எனக்கு ''இவனும் அப்பாவைப்போல் விளையாட்டில் சிறப்பாக வருவான்'' என்ற ஒரு நம்பிக்கை ஏற்பட்டது.

- ஷமீம்பேகம்

அன்று மாலை ஒரு மிக அழகிய பெண் ஒரு முதியவருடன் கௌத்தமின் கட்டிலுக்குப் பதற்ற நடையுடன் வந்தாள். அவளை விட்டு விட்டு முதியவர் வெளியில் போய் நின்றார். அந்தப் பெண் ஓசைப் படுத்தாமல் வெகு நேரத்துக்கு அழுதாள்.

ஹரி காத்திருந்தான்.

அவள் கடைசியில் தெளிவாகச் சொன்னாள்: ''கவலைப்படாதே கௌத்தம். எதுக்கும் கவலைப்படாதே. நீ ஏத்துக்கக்கூடிய அத்தனை பொறுப்பையும் நான் ஏத்துக்கறேன். நீ உசிரோட இருக்கிறதே எனக்குப் போதும்!''

(தொடரும்)

ADWAVE/NCC/1718

வீட்டில் அனைவரின் கேசப் பராமரிப்புதானே? அதற்கு நம்பகமானது, விசேட ஃபேமிலி ஷாம்பூ பாமோலிவ்.

பாமோலிவ் ஷாம்பூ:
ரெகுலர், அல்லது
கூடுதலான
போஷாக்கிற்கு எக்

பாமோலிவ், எல்லா வகைக் கேசத்திற்கும் ஏற்ப விசேட முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அது, வளமையான நவீன ஷாம்பூ. உங்கள் கேசத்தை நன்கு தூய்மை துலங்க வைக்கிறது. குழந்தைகளின் மென்மையான கேசத்திற்கோ மிகவும் ஏற்றது.

அது மட்டுமா? இவ்வகை ஷாம்பூக்களிலே சிக்கனமானது, பாமோலிவ் ஷாம்பூ—குடும்ப பட்ஜெட்டிற்கும் ஏற்றது.

குடும்பத்தினர் கேசப் பராமரிப்புக்கு நேசமானது-உங்கள் பட்ஜெட்டிற்கும் ஏற்றது

GK&E.PS.7 TM

13

ஊன்றுகோலைப் பிடித்தபடி நின்ற சர்மா சாந்தியைப் பார்த்துப் புன்னகைத்தார்.

''நான் போகிறேன் சாந்தி பெஹன்! உங்களுக்கு என் நன்றியை எப்படித் தெரிவிப்பது என்று புரியவில்லை.''

சாந்தி கூச்சத்துடன் சிரித்தாள். ''நன்றிக்கு அவசியமில்லை மிஸ்டர் சர்மா. உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள். எக்ஸர்ஸைஸை மறக்காமல் தினமும் செய்யுங்கள்!''

சர்மா அவளுடைய கன்னத்தை வாஞ்சையுடன் தட்டினார்.

''செய்கிறேன். உங்களுக்கு நேரம் கிடைக்கும்போது எங்கள் வீட்டுக்கு வாருங்கள். சொந்தத் தங்கைகூட நீங்கள் கவனித்துக் கொண்ட மாதிரி இத்தனை அக்கறையுடன் கவனித்துக் கொண்டிருக்க மாட்டாள். நீங்கள் இந்தச்சின்ன அன்பளிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

அவள் சட்டென்று விலகி நின்றாள்.

''என்னுடைய வேலையைத்தான் செய்தேன் சர்மா ஸாப். எந்த அன்பளிப்பையும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.''

''ப்ளீஸ் சாந்தி பெஹ்ன்!''

''ஸாரி. உங்களுடைய பிரியம் எனக்குப் புரிகிறது. அது என்றைக்கும் எனக்கு ஞாபகம் இருக்கும்.''

மறுபடியும் மன்றாடித் தோற்றுப் போய் சர்மா கிளம்பினார்.

''ஆண்டவன் உங்களுக்கு ஒரு குறையும் வராமல் பார்த்துக் கொள்ளட்டும்!''

ஊன்றுகோலைப் பிடித்துக் கொண்டு நிதானமாகச் செல்லும் சர்மாவைப் பார்த்தபடி சாந்தி நின்றாள். அவர் காட்டிய பிரியமும் அபிமானமும் மனத்தை நெகிழ்வித்தன. ஆரம்பத்தில் விரைப்புடன், ஒருவித விரோதத்துடன் இருக்கும் நோயாளிகள் கூட கடைசியில் எத்தனை நெருங்கி வந்துவிடுகிறார்கள்! அவர்கள் வீட்டுக்குக் கிளம்பும் போது அவளுக்கே எவ்வளவோ முறை கண்களில் நீர் அரும்பி நின்றிருக்கிறது. நெருங்கிய பந்து பிரிந்து போகிற மாதிரி துக்கமேற்பட்டிருக்கிறது. ஆனால் அன்பளிப்பு என்று அவர்கள் கிட்டே வந்தால் அவள் ஜாக்கிரதையாக, மிகக் கண்டிப்பாக விலகிவிடுவாள். பெண்கள் கொடுக்கும் அன்பளிப்பைக் கூட அவள் ஏற்றுக் கொண்டதில்லை. எத்தனை வாலிப நோயாளிகளுக்கு அவள் மேல் காதல் ஏற்பட்டிருக்கிறது! அவர்களது பைத்தியக்காரப் பிதற்றல்களை நினைத்துப் பார்த்தால் இப்ப[...] சிரிப்பு வருகிறது. ஒன்றுமில்லாததற்[...] லாம் கத்திச் சந்தேகப்படும் நடராஜ[...] அவர்கள் பேச்சைக் கேட்க நேர்ந்தால் என்[...] செய்வான்?

அவனுடைய நினைவு வந்ததும் சட்டென்[...] ஒரு சூனியம் மனசில் படர்ந்தது. அவ[...] அவளைத் தேடிக் கொண்டு வரவேயில்லை[...] அவள் தினமும் மாலையில் வீட்டுக்குப் போய்[...] பார்த்தாள். கதவு பூட்டியபடி இருந்தது[...] ஒரு காகிதத் துண்டில் 'நான் ஆஸ்பத்தி[...] யிலேயே எத்தனை நாள் வாசம் செய்வது[...] உங்கள்கோபம் இன்னும்தணிய வில்லையா?' என்று எழுதிக் கதவுக்கடியில் நுழைத்து[...] வைத்தாள். ஏதும் பதிலில்லை. எத்தனை நாட்களுக்கு இவன் நம்மை இப்படி அவமானப்படுத்தப் போகிறான் என்று தினமும் எழும் சீற்றத்தை அவள் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள். எத்தனை நாட்களுக்கு இங்கு இருக்க முடியும்? நேற்றே மிஸ் வயலெட் முணுமுணுத்தாள்.

''சாந்தி, நீயே இப்படி ரூல்ஸை பிரேக் பண்ணா எப்படி?''

''போயிடறேன் ஸிஸ்டர். தினமும் வீட்டுக்குப் போய்ப் பார்க்கத்தான் செய்யறேன். கதவு வெளியிலே பூட்டியிருக்கு.''



அந்தி நேரத்து
உதயங்கள்

''அந்த மாதிரி ஒரு மனுஷனோட இருந்து நீ என்ன சுகத்தைக் கண்டே? பேசாமெ விடு. குழந்தை குட்டின்னு இருந்தாத்தான் நூறு யோசனை பண்ணணும். உனக்குத்தான் இல்லையே. எதுக்கு அந்த ஆளுகிட்ட தொங்கிண்டிருக்கே?''

அவள் அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் நின்றாள்.

''நீ என்ன பண்ணுவியோ அது எனக்குத் தெரியாது. உன் இஷ்டம். ஆனா தங்கறதுக்கு நீ ஏதாவது அரேஞ்ஜ்மெண்ட் பண்ணிக்கணும். ஆர். எம். எஸ். ஒரு கேள்வி கேட்டுட்டார்னா அப்புறம் அசிங்கம்.''

''சரி ஸிஸ்டர்.''

''நீ இங்கே இருக்கிறதினாலே யாருக்கும் ஒண்ணும் தொந்தரவு இல்லைதான். இருந்தாலும் ஒரு பேச்சு வரக்கூடாது பாரு! ஹாஸ்டல்லே ஒரு ரூம் எடுத்துக்கோயேன்!''

''இன்னும் இரண்டு நாள்லே சொல்றேன் ஸிஸ்டர்.''

''அதுதான் சரி.''

அவமானமாக இருந்தது, நினைத்துப் பார்க்கவே. இங்கு வேலை செய்யும் இந்த ஐந்து வருஷங்களில் ஒரு முறை கூட எந்தப் புகாரும் அவள் மேல் வந்ததில்லை. இப்பொழுது ஆர். எம். எஸ். வரை இந்த விஷயம் போய் விட்டால் எத்தனை பெரிய அவமானம்!

இன்றைக்கு மாலை மறுபடியும் வீட்டுக்குப் போய்ப் பார்க்க வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டாள். அதிர்ஷ்ட வசமாக வீடு திறந்திருந்தால் அவன் எதற்காக இப்படியெல்லாம் செய்கிறான் என்று கேட்டு விடவேண்டும். தன்னுடன் இனிமேல் சேர்ந்திருக்கவே விருப்பமில்லையா என்று கேட்டு விடவேண்டும்.

வெளி பால்கனி வழியாகப் பார்க்கையில் சர்மா தன் மகனின் தோளைப் பிடித்துக் கொண்டு போவது தெரிந்தது. காரில் ஏறுகிற சமயத்தில் கையசைத்தாள். அவளுக்குக் கண்களில் நீர் நிறைந்தது.

''தலைவர் மேடைக்கு வந்துட்டாரே... இன்னும் ஏன் எல்லோரும் திரும்பித் திரும்பிப் பாக்கறாங்க?''

''சுண்டல் விக்கிறவரை இன்னும் காணோம்!''

- முத்துதங்க ஐயப்பன்

முன்பின் தெரியாதவர்கள் — எந்தவ மான சம்பந்தமும் இல்லாதவர்கள் சில நா களே பழக்கத்தில் ஒட்டுதலும் கண்ணீ யும் காண்பிக்கும்போது ஆறு வருஷப் ப கத்தில் அவனுக்கு ஏன் மயிரிழை ஒட்டுத கூட வரவில்லை? என் சிரிப்பு அவனுக் இதத்தை அளிக்கவில்லையா? என் சிசுருஷை அவனுக்கு ஏற்கவில்லையா?

''இந்த மாதிரி புருஷனோட நீ எதுக் இன்னும் இருக்கணும்?''

அவன் இப்படிப்பட்ட ஆள் என்கிற அனு மானம் மெள்ள மெள்ள ஊர்ஜிதமான பிற இங்கு இருக்கும் நர்ஸ்கள் அடிக்கடி செய்யு உபதேசம் இது.

''குழந்தை குட்டியும் இல்லே. எதுக் யோசனை பண்றே?''

அவளுக்கே புரியவில்லை. ஆறு வருஷ பந் தத்தைச் சட்டென்று உதற மனம் துணிய வில்லை. மாமா கஷ்டப்பட்டு அலைந்து திரிந்து செய்வித்த கல்யாணத்தை விட்டு விலகுவது அவரை அவமானப்படுத்துகிற மாதிரி என்று தோன்றிற்று.

''ஸிஸ்டர்....!''

அவள் சட்டென்று சுயநினைவு வந்து உள்ளே திரும்பினாள். சர்மா இருந்த படுக் கைக்கு வேறு ஒரு பேஷண்ட் தயாராக வந்தாகி விட்டது. மறுபடியும் ஏதோ ஒரு ஆக்ஸிடெண்ட் கேஸ் என்று தோன்றிற்று. வலது கையும் இடது காலும் பிளாஸ்டரில். பேஷண்டின் விரிந்த பார்வையில் ஒரு பீதி தெரிந்தது. சட்டென்று அவள் மனசில் ஓர் அனுதாபம் பிரவாகமாய்ப் பொங்கிற்று. எத்தனை துன்பங்கள் — எதேச்சையாக முன்னறிவிப்பில்லாமல் வரும் துன்பங்கள்! நம் சக்திக்கு மீறித் தவிர்க்க முடியாமல் வரும் விபத்துக்கள்! இத்தனை கஷ்டங்கள் மனுஷ்ய யத்தனத்தின் வரம்புக்கு அப்பால் இருக்கும்போது மனுஷ்ய யத்தனத்துக்குள் இருக்கும் விஷயங்களில் எத்தனை அசட்டையாக இருக்கிறோம்! காலையும் கையையும் நன்றாக வைத்துக் கொண்டு மனசை முடமாக்கிக் கொள்கிறோம்!

''நர்ஸ் சாந்தி!''

''இதோ வரேன்!''

பேஷண்டுக்கு இருபத்தி ஐந்து வயசுக்குள் இருக்கும். நல்ல கட்டுமஸ்தான உடம்பா இருந்தான். அவன் பக்கத்தில் ஒரு வயசான அம்மாள் நின்று கொண்டிருந்தாள். தென்னாட்டைச் சேர்ந்தவள் என்று இரட்டை மூக்குத்தி தெரிவித்தது. அழுதிருப்பாள் என்று தோன்றிற்று.

சாந்தி கேஸை ஆராய்ந்தாள். காலும் கையும் பலத்த ஃப்ராக்சர் என்பதைத் தவிர வேறு எந்த விபரீதக் கோளாறும் இல்லை.

''நீ ஸ்கூட்டரை வெளியிலே எடுத்துண்டு போனபோது நல்ல ராகுகாலம். நான் அப்பவே சொன்னேன், கையும் காலும் ஒடிச்சுக்காமெ இருக்கணுமேன்னு.''

''நீ நினைச்சியோன்னோ அதுதான் இப்படி ஆச்சு.''

அந்தம்மாளின் முகம் தொங்கிப்போயிற்று. ஏற்கனவே கலங்கியிருந்த கண்கள் மீண்டும் கலங்கின.

பிரிட்டானியா பால் பிஸ்கட்

வளரும் குழந்தைகளுக்கு சுவையான துணை

சத்துமிகுந்த,
சுவையான
பிரிட்டானியா
மில்க் பிக்கிஸ்

லின்டாஸ் BBC.MB-3-172-TM

''கவலைப்படாதீங்கம்மா. இவருக்கு வெறும் ஃப்ராக்சர்தான். வேறே ஒண்ணும் கோளாறில்லை.''

தமிழ்ப் பேச்சைக் கேட்டுச் சட்டென்று ஒரு மலர்ச்சி தெரிந்தது.

கௌதம்மின் படுக்கையருகில் ஆணி அறைந்த மாதிரி அவனுடைய மனைவி உட்கார்ந்திருந்தாள். எத்தனை அழகா யிருக்கிருள்! துளிக்கூட சோர்வைக் காண்பிக்காமல் புன்னகையுடன் நாள் முழுவதும் அங்கு உட்கார அவளால் எப்படி முடிகிறது என்று ஆச்சரியமாக இருந்தது. எப்பவும் சிரித்த முகமாக அவனுக்கு எதுவுமே விபரீதமாக ஆகிவிடாத மாதிரி ஊர்க் கதைகளை யெல்லாம் அவனிடம் சொல்லிக் கொண்டு—

இவளால் எப்படி முடிகிறது? அவனுடைய எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது என்ற முழுமையான பிரக்ஞை அவளுக்கு இருக்குமா? விஷயம் தெரிந்துதான் இப்படி இருக்கிருள் என்று தோன்றிற்று.

ஹரி ஏதோ ஒரு புத்தகத்தில் ஆழ்ந்திருந்தான். அவள் கொடுத்த புத்தகம்.

''ஹல்லோ ஹரி!''

சட்டென்று புத்தகம் கீழே இறங்கிற்று. ஒரு பெரிய புன்னகை பின்னல் தெரிந்தது.

''ஹல்லோ. இப்பத்தான் அந்தப் புத்தகத்தைத் தூக்கி எறியலாம்னு இருந்தேன். நீங்க வந்து நிக்கறீங்க.''

''என் முகத்திலே எறியப் போறீங்களா?''

''எறியலாம் போலத்தான் ஆத்திரம் வரது. உபதேசம் செய்யறவங்களுக்கென்ன, ஈஸிச் சேரில் உட்கார்ந்துண்டு உபதேசம் பண்ணலாம்.''

''நீங்க புத்தகத்தை ஒழுங்காப் படிக்கல்லே. இந்தப் புத்தகம் எழுதினவங்க உங்களை மாதிரியே பாரப்லீஜியா வந்த டாக்டர்.''

அவன் தன் அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு சொன்னுன்:

''அதெல்லாம் கதை. புத்தகம் விற்பனை ஆகணும்னு விடறீல்!''

அவள் சிரித்தாள்.

''நல்லதைச் சொன்ன எடுத்துக்க மாட்டீங்க. நீங்களா நம்பிக்கையையும் வளர்த்துக்க மாட்டீங்க. முயற்சியும் செய்ய மாட்டீங்க. என்னை என்ன செய்யணும் கிறீங்க?''

''கௌதம்முடைய மனைவி மாதிரி ஒருத்தி வேணும்!''

அவள் சிரித்தாள்.

''நல்லா இருக்கே கதை? எந்தக் கடையிலே விக்கும் சொல்லுங்க நான் வாங்கிட்டு வரேன்!''

அவனது உடையைப் பரபரவென்று மாற்றிக் கொண்டிருந்த சாந்தியின் கையை அவன் பற்றினுன்.

''உங்களுக்குக் கல்யாணம் ஆகாம இருந்திருந்தா எத்தனை நன்னயிருக்கும்னு நினைச்சுக்கிறேன்.''

''என்ன செய்திருப்பீங்க?''

''கல்யாணம் பண்ணிண்டிருப்பேன்!''

''நல்ல கூத்து. நான் சம்மதிச்சிருப்பேன்னு எப்படி நினைக்கிறீங்க?''

''உங்க கண்ணைப் பார்த்தா நன்னுத் தெரியறது. நிச்சயம் ஏமாத்தியிருக்க மாட்டீங்க!''

அவள் தூக்கி வாரிப் போட அவனைப் பார்த்தாள். இது என்ன பைத்தியம்?

''ஏன் சாந்தி? உண்மையைச் சொல்லுங்க. எனக்கு என்ன குறைச்சல்? என் இடுப்புக்குக் கீழே என்ன நடக்கிறதுன்னு எனக்குத் தெரியல்லேங்கிறதைத் தவிர எனக்கு என்ன குறைச்சல்?''

அவள் பக்கென்று சிரித்தாள்.

''உங்களுக்கு ஒரு குறையும் இல்லே. எனக்குக் கல்யாணம் ஆயிடுத்துங்கறதுதான் குறை.''

''வாட் எ பிட்டி!''

அவள் அவன் கையை மெல்ல விலக்கித் தன் வேலையைத் தொடர்ந்தாள். தன் கன்னங்களில் சூடேறியிருப்பதைக் கண்டு திகைப்பேறபட்டது. இவனுடைய வார்த்தைகளிலும் பார்வையிலும் ஏதோ ஆகர்ஷிக்கும் சக்தி இருக்கிற மாதிரி இருந்தது. லேசாக ஒரு அதிர்வு ஏற்பட்டது.

அவள் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டாள். நெருப்பு மாதிரி இருந்த மனசில் ஒரு நிழல்கூட இதுவரை பட்டதில்லை. இந்த மாதிரி தன் மனசு ஒரு வினடிக்கேனும் சலனப்படலாம் என்கிற சம்சயம் தான் நடராஜனின் போக்குக்கு அடிப்படைக் காரணம் என்று நினைத்துக்கொண்டாள். அன்று மாலை வழக்கம் போல் வீட்டுக்குச் சென்றுள்.

அவன் இருந்தான். அவளைப் பார்த்ததும் இரைந்தான்.

''எந்தத் தைரியத்திலே வீட்டுக்குள்ளே நுழையறே? ஒரு வாரமா எவனுடையோ இருந்துட்டு எத்தனை திமிர் இருந்தா என் வீட்டிலே காலை வைப்பே?''

(தொடரும்)

ஆசிரியர்: ''தண்ணியில் வாழும் உயிரினத்திற்கு ஒரு உதாரணம் சொல்லுன்னு, அப்பாங்கறியே...!''

மாணவன்: ''தண்ணிலதான் என் உயிரே இருக்குன்னு எங்க அப்பா அடிக்கடி சொல்லுவார் சார்...!''

–கிணத்துக்கடவு ரவி

...ப்பவே சொன்னேன், கேட்டா...னே? பொம்மைகளை மேலேயிருந்து ...வக்கணும்னு!..

போதும்டிம்மா! நிறுத்து!.. எல்லாப் பொம்மையும் உருகிக்களிமண்ணு வழியுது!

கூடை நிறைய பொம்மைகளை வாங்கிட்டு இப்படி என்னைத் தூக்கிட்டு வரச் சொன்னு?.. பொம்மை விக்கற வன்னு நினைச்சுக்கப் போறுங்க!

எங்கேடி, கொழந்தையைக் காணோம்?

தினமும்தான் கொலுவிலே ஒவ்வொருத்தர்பாடறேன்னுட்டு சாதகம் பண்றுங்களே?.. நீங்க வேற சாதகம் பண்ணணுமா? நவராத்திரி ஒன்பது நாள் சாதகத்தை நிறுத்தி வையுங்கோ!

14

ஹரிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''என்ன ஆச்சு சாந்தி?'' என்றான் பதற்றத்துடன்.

சாந்தியின் முகத்தில் அசாதாரணமான சோகம் தெரிந்தது. வெகு நேரம் அழுத மாதிரி கண்கள் வீங்கிச் சிவந்து தெரிந்தன.

சாந்தி வழக்கம்போல் சிரித்தாள்.

''ஒண்ணும் ஆகலியே?'' என்றாள்.

ஆனால் முகத்தில் ஒளியில்லை. சிரிப்பில் ஜீவனில்லை.

''உங்க முகத்துக்கு என்ன ஆச்சுன்னு கேக்கறேன். கன்னமும் கண்ணும் ஒரேயடியா வீங்கியிருக்கு. யாரோ மாறி மாறி அறைஞ்ச மாதிரி இருக்கு. யாரு அத்தனை தைரியசாலியா இருக்க முடியும்னு கேக்கறேன்!''

அவள் லேசாகச் சிரித்தாள்.

''யாரும் என்னை அறையலே. நேத்து ரொம்பத் தலைவலி. அதுக்காக ஒரு மாத்திரையைப் போட்டுண்டேன். அது ஒத்துக்துக்கல்லே. அலர்ஜி ஆகி....''

அவன் அவளைக் கூர்மையாகப் பார்த்தான்.

''இதே உங்க தொழிலாப் போச்சு'' என்றான்.

''எது?''

''பொய் சொல்றது.''

அவள் தலையைக் குனிந்து கொண்டு தன் வேலையில் கவனமாக இருக்கிற மாதிரி பாவனை செய்தாள்.

''நிஜத்தை உங்களுக்குச் சொல்ல இஷ்டமில்லேன்னா நான் வற்புறுத்தல்லே.''

''சொல்ல எதுவுமே இல்லே.''

அவள் சொன்னது காதில் விழாத மாதிரி அவன் தொடர்ந்தான்.

''நீங்க யார் கிட்டேயும் எதையும் சொல்லுவீங்கன்னு தோணல்லே.''

''ஏன்?''

''சில பேருக்குப் பாரத்தைச் சுமந்துதான் பழக்கம். இறக்கிப் பழக்கமில்லை.''



அவள் திடுக்கிட்டாற்போல் அவனைப் பார்த்தாள். பிறகு சிரித்தாள்.

''என்னைப் பத்தி நிறைய ஆராய்ச்சி பண்ணி வெச்சிருக்கீங்க போலிருக்கே?''

''வேறே என்ன பண்ண முடியும்? அழகான பெண்களைப் பத்தி ஆராய்ச்சி ஒண்ணுதானே பண்ண முடியும் இப்ப?''

அவள் தன்னை மறந்துசிரித்தாள்.

''அநியாயமா பொழுதையெல்லாம் வீணாக்காதீங்க. ஆராய்ச்சி பண்ணஎத்தனையோவிஷயம் இருக்கு.''

''பொழுதை வீணாக்கக் கூடாதுன்னு நான் ரொம்ப தீவிரமா நினைச்சிண்டிருந்தேன் சாந்தி. மனுஷனைப் போல் ஒரு சுவாரஸ்யமான சப்ஜெக்ட் வேறே ஒண்ணுமில்லேன்னு இங்கே படுத்துண்டதிலேந்து தோணறது. என்னாலே முடிஞ்ச உதவி அதாவது வாயாலே, என் கூடப் பழகறவங்களுக்குச் செஞ்சா என்னன்னு நினைச்சுக்கிறேன். நீங்கள் என்னுடைய முதல் கேஸா இருக்கக் கூடாதா?''

அவள் முகத்தில் புன்னகை அரும்பிற்று. மெல்ல மெல்லப் பழைய ஒளி படர்வது போலிருந்தது.

''என்னை ஒரு கேஸ்னு தீர்மானிச்சுட்டீங்களா?''

''மகா மோசமான கேஸ்னு நினைக்கிறேன். ராத்திரியெல்லாம் தூக்கம் வராம அலையற கேஸ் — கவனிக்கல்லேன்னா மென்டல் ரெக் காப் போகக் கூடிய கேஸ்.''

அவள் மௌனமாக அவன் உடலைத் துடைத்தாள். பௌடர் போட்டுச் சட்டையை மாட்டி விட்டாள்.

அவளுடைய செய்கையைப் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் தன்னையறியாமல் அவன் மெல்லக் கேட்டான்.

''சாந்தி, நீங்க உங்க புருஷன் கிட்டச் சந்தோஷமா இருக்கீங்களா?'' கேட்ட வினாடியில் அவளிடம் இந்த மாதிரி ஓர் அந்தரங்கமான கேள்வியை நாம் எப்படிக் கேட்கத் துணிந்தோம் என்று திகைப்புடன் கூச்சமேற்பட்டது.

சட்டென்று நிமிர்ந்த அவளைப் பார்த்து அவன் தயக்கத்துடன் சிரித்தபடி, ''ஸாரி வாய் தவறிக் கேட்டுட்டேன். ஆனால் உங்க முகம் இன்னிக்கு இப்படி இருக்கிறதுக்குக் காரணம் நிச்சயம் அலர்ஜி இல்லேன்னு எனக்குத் தெரியும்'' என்றான்.

அவள் நிதானமாக அவனுக்குக் கொடுக்க வேண்டிய மருந்தை நீட்டினாள். இப்பொழுது தெளிவாக அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது. அவன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் மருந்தைச் சாப்பிட்டுவிட்டுப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டான்.

அவனிடம் எதுவுமே பேசாமல் அவள் மற்றப் படுக்கைகளுக்கு நகர்ந்தாள்.

இவன் யார் நம்மைக் கேட்பதற்கு என்று அவளுக்குக் கோபம் வந்திருக்க வேண்டும். சே, எத்தனை பெரிய முட்டாள்தனம் பண்ணி விட்டோம்? அவள் ஒருத்திதான் நம்மிடம் பிரியத்தைக் காண்பிக்கிறாள். இதமாகப் பேசுகிறாள். அவளும் இப்போது உதட்டுப் பேச்சோடு நிற்கப் போகிறாள்.

ஆனால் இன்று அவளைப் பார்த்ததும் தூக்கி வாரித்தான் போட்டது. அவள் நிச்சயமாக அழுதிருக்க வேண்டும் என்று தோன்றிற்று. இங்கிருக்கும் ஒவ்வொரு நோயாளியின் துக்கத்தையும் மனப்பூர்வமான கரிசனத்துடன் குறைக்கப் பார்க்கும் இவளும் ஒரு துக்கத்தைச் சுமக்கிறாள் என்றால் அதை யார் குறைப்பார்கள்? எத்தனையோ விதத்தில் நமக்கு இதமாக இருக்கும் இவளுக்கு நாம் வார்த்தைகளாலாவது இதத்தை அளிக்க வேண்டாமா? அதற்கெல்லாம் இவள் சந்தர்ப்பம் அளிக்கமாட்டாள்என்று தோன்றியது.

'நான் சிரிப்பதும் இதமாக நடந்து கொள்வதும் என் தொழிலுக்கு அத்தியாவசியமான கருவிகள்' என்று உணர்த்துகிற மாதிரி நடந்து கொள்கிறாள்.

அதற்கு மேல் ஏதும் இருக்காதா? இல்லையென்றால் கிளம்பும்போது அந்த சர்மாவின் கண்களில் நீர் ஏன் துளிக்கிறது? கண்ணை மூடிக்கொண்டு எப்பவும் அரைத் தூக்கத்தில் இருக்கும் ராம்சிங்கின் அம்மா, சாதாரணமாக எவருடனும் சுமுகமாகப் பேசாதவள். சாந்தியைப் பார்த்ததும் எப்படி முகம் மலர்ந்து போகிறாள்? மிக்கிக்குக்கூட சாந்தி இருந்தால் சொந்த அம்மா கூட வேண்டிய தில்லை. சாந்தியைப் பார்க்கும்போது சட்டென்று மனசில் எல்லோருக்கும் சந்தோஷம். இந்த மாதிரி இருக்கும் ஒருத்திக்கு என்ன மாதிரி துக்கம் இருக்கும்?

திடீரென்று அவனுடைய கவனம் கலைந்தது. கௌதம்மின் மனைவி ஏதோ பதற்றத்துடன் காணப்பட்டாள். ஒரு அவசரத்துடன் தூரத்தில் இருக்கும் சாந்தியிடம் சென்று ஏதோ சொன்னாள்.

கௌதம் மூச்சு விடச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தான். முகம் திணறிக்கொண்டு சிவந்து போயிருந்தது. ஹரிக்குத் தூக்கி வாரிப் போட்டது. என்ன ஆகிவிட்டது

இவனுக்கு? நேற்றிரவு கூட சிரிக்கச் சிரிக்க மனைவியிடம் பேசிக் கொண்டிருந்தானே?

சாந்தி துரிதமாக வந்து பரிசோதித்துப் பார்த்தாள். மறு நிமிஷம் உள்ளேயிருந்து ஆக்ஸிஜன் சிலிண்டரைக் கொண்டு வந்து வைத்தாள். சில நிமிஷங்களில் பெரிய டாக்டர் வந்தார். வெகு தீவிரமான முக பாவத்துடன் பரிசோதித்து விட்டு முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டார். அவரையே ஒரு எதிர்பார்ப்புடன் பீதி நிறைந்த விழிகளுடன் பார்த்துக்கொண்டிருந்த கௌதம்மின் மனைவியைப் பார்க்கக் கண்றாவியாக இருந்தது.

''நீங்க உசிரோடு இருக்கிறது ஒண்ணே எனக்குப் போதும்...''

அந்த உசிருக்கு இப்போது ஏதேனும் ஆபத்தா? வெறும் கையும் காலும்தான் அசையவில்லை என்றால் உசிருக்குக் கூட ஆபத்தாக இருக்குமோ?

அந்த வார்டிலிருந்த அத்தனை நோயாளிகளும் தங்களுடைய நெருங்கிய பந்துவுக்கு ஏதோ ஆகிவிட்ட மாதிரி பதைத்துக் கண்களில் பீதியை ஏந்திக் கொண்டு உறைந்து போனதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. நர்ஸ்களும் டாக்டர்களும் கௌதம்மின் கட்டிலுக்கருகில் அடிக்கடி வந்து சுற்றி நின்றார்கள். நர்ஸ்கள் அவன் மார்பை மெதுவாகத் தேய்த்தார்கள்.

ஹரிக்கு இருப்புக் கொள்ளவில்லை. கௌத்தம்மிற்கு என்ன ஆகுமோ என்கிற பயத்துடன் அவனுடைய மனைவியை நினைத்து அதிக பரிதாபம் ஏற்பட்டது. கௌதம்மிற்கு ஏதேனும் ஆகிவிட்டால் அவள் எப்படித் தாங்கப் போகிறாள்?

மதிய உணவுக்குப் பிறகு மறுபடியும் வந்த சாந்தியிடம் அவன் அவசரமாகக் கேட்டான்: ''என்ன ஆச்சு சாந்தி கௌதம்முக்கு?''

''மார்பிலே சிக்கல் ஏற்பட்டுப் போச்சு. இந்த மாதிரி கேஸிலே அது ஏற்படறதுதான். கழுத்துக்கடியிலே இருக்கிற உறுப்புக்களெல்லாம் தானா இயங்க முடியாததாலே நுரையீரல்லே ஸெக்ரீஷன் சேகரிச்சுப் போச்சுன்னா பேஷண்ட் அதைத் தானே வெளியே கொண்டு வர முடியாது. அதனால கோளாறுகள் ஏற்படும்....''

''உசிருக்கு ஆபத்தில்லையே சாந்தி?''

அவள் அவனது நேரடிப் பார்வையைத் தவிர்த்தாள்.

''சொல்ல முடியாது ஹரி. பேஷண்டுக்கும் பிழைக்கணும்கிற ஆசை இருக்கணும்.''

அவனுள் லேசாக ஓர் அதிர்வு ஏற்பட்டது. கௌத்தம்மிற்கு ஆசை இருக்குமா? இத்தனை நல்ல மனைவி இருந்தும்? அந்தக் காதலே ஆசைக்குத் தடையாயிருக்கும் என்று தோன்றிற்று.

கௌத்தம்மின் மனைவி நீர்கூட அருந்தாமல் அவன் பக்கத்தில் கண்களைக் கொட்டாமல் உட்கார்ந்திருந்தது ஆச்சரியமாக இருந்தது. அவனுக்கு ஏற்படப் போகும் முடிவைப் பற்றிப் பரிபூர்ண பிரக்ஞையுடன் இருக்கிறாள் என்று தோன்றிற்று. ஒரு பொட்டுக் கண்ணீர் கூட விடாமல் தபஸ்வினி மாதிரி....

இந்த மாதிரிப் பெண்கள் கூட இப்பொழுது இருக்கிறார்களா?

அந்த வார்டு மொத்தமாக அன்று எதற்கும் முணு முணுக்கவில்லை. எந்த வித வலியின் பிரக்ஞையும் இல்லாத மாதிரி ஒரு புரிந்து கொண்ட மௌனத்தில் இருந்தது. ஓர் அனுதாபப் பார்வை பார்த்துக் கொண்டு நின்றது. மிக்கிகூட இன்று வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அங்கிருந்த பொதுவான மன நிலையை உணர்ந்த மாதிரி. பார்வையாளர்கள் நேரத்துக்கு முன கௌத்தம்மை வேறு தனி அறைக்கு மாற்றிவிடப் போவதாக நர்ஸ்கள் பேசிக் கொண்டார்கள். அதற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன.

திடீரென்று ஏதோ ஒரு ஓசை கேட்டது. சடசடவென்று கட்டை முறிகிற மாதிரி. ஹரி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். கௌத்தம்மின் மார்பு மேலும் கீழுமாக இறைத்துக் கொண்டிருந்தது. நர்ஸ்கள் பக்கத்திலேயே இருந்தார்கள். எந்த விபரீதத்துக்கும் தயாராக நிற்கிறாற்போல. கௌத்தம்மின் கண்கள் மூடியே இருந்தன. எந்த விதமான முனகல்கூட இல்லை. மார்பு மட்டும் பயங்கரமாக மேலும் கீழும்... அத்தனை கட்டில்களும் பீதியுடன் பார்த்துக் கொண்டிருக்க, சட்டென்று மார்பு கீழ் நோக்கிப் படிந்தது. வலியினால் இறுகிப் போயிருந்த முகத்தின் தசைகள் மெல்ல மெல்லத் தளர்ந்து போயின. சில விநாடிகள் விக்கித்துப் போன மௌனம் நிலவிற்று. அந்த மௌனத்தைக் கிழித்துக் கொண்டு அவளுடைய விசும்பல் கேட்டது. இத்தனை நேரம், இத்தனை நாட்கள் பொறுமையாக இருந்ததற்குப் பரிகாரமாக — இனியும் என்னால் தாங்க முடியாது, உணர்ச்சிகளை அடக்க முடியாது என்கிற அழுகையாய் நர்ஸ்களும் பேஷண்டுகளின் அம்மாக்களும்

''அந்த டைரக்டர் ஆனாலும் சுத்த மோசம்!''

''ஏன்? ஏன்?''

''காதல் காட்சிகளில் கூடக் கட்டி அணைக்கக் கூடாது என்கிறார்!'' —நயினாரகரம் முத்து

அணைத்துக் கூறும் ஆறுதல் மொழிகள் தனக்கு நேர்ந்த துக்கத்துக்கும் அநீதிக்கும் ஈடு கொடுக்க முடியாது என்று தெரிவிக்கும் அழுகையாய்—

ஹரி கண்களை மூடிக் கொண்டான்.

''பிழைக்கணும்கிற எண்ணம் பேஷண்டுக்கு இருக்கணும்.''

கௌத்தம்முக்கு நிச்சயம் இருந்திருக்காது. இந்த மனைவிக்கு ஆயுசுக்கும் பாரமாக இருக்க நிச்சயம் மனம் இடம் கொடுத்திருக்காது. ஏற்கனவே நிறைய பாரத்தைச் சுமக்கப் போகிறவள். அவனிருந்தால் அவனுடைய குடும்பத்தின் பொறுப்பைச் சுமக்க வேண்டியவள். அவனில்லாவிட்டால் ஹிமாசலப் பிரதேசத்தின் ஒரு கிராமத்தில் பெற்றோர்கள் வீட்டில் தனது நினைவுகளின் சுமையுடன் மாத்திரம் இருக்கலாம். இப்படித்தான் அவன் நினைத்திருக்க வேண்டும்.

ஆனால் ஆசைப்பட்டவுடன் உயிர் பிரிவது சாத்தியமா? யாருக்காகவும் உயிர் வாழ வேண்டிய அவசியமே இல்லாத என் உயிர் மட்டும் ஏன் இருக்கிறது இன்னும்?

அவன் தனக்குள் விரக்தியுடன் சிரித்துக் கொண்டான்.

உயிர் பிரிவதும் ஜனிப்பதும் நம் எண்ணங்களுக்கு இசைவாக இயல்பாக நடந்து விட்டால் பிறகு மனித சக்திக்கு வரம்புகளே இல்லை.

அவனுக்குக் கண்களைத் திறக்கவே கஷ்டமாக இருந்தது. ஒரு மணி நேர ஸ்தம்பித்த துக்கத்துக்குப் பிறகு கௌத்தம்மின் கட்டில் துரிதமாகக் காலியாயிற்று. படுக்கை மாற்றப்பட்டு (அதே படுக்கையா யிருந்தா பேஷண்டுகள் பயப்படுவாங்க) பெட்ஷீட் மாற்றப்பட்டு....

கௌத்தம்மின் மனைவியின் முகம் வெகு நேரத்துக்கு மனத்தில் நின்று சங்கடப்படுத்திற்று. நர்ஸ்களும் ஆயாக்களும் முடிச்சு முடிச்சாக நின்று மெல்லிய குரலில் துக்கம் காத்தது மனசை நெகிழ்வித்தது. எப்படி ஒரு குடும்பமாக இருக்கிறார்கள் இங்கு? தினம் தினம் மரணத்தையும் ஜனனத்தையும் பார்க்கும் டாக்டர்களும் நர்ஸ்களும் மெல்லிய உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று இதுநாள் வரை மனத்தில் இருந்த எண்ணத்துக்கு மாறான ஆச்சரியமான அனுபவம். கூடவே தனது பாமரத்தனமான அறியாமையை நினைத்து வெட்கமேற்பட்டது. இவர்களது தொழிலின் அஸ்திவாரமே மனிதாபிமான உணர்வாக இருக்கையில் மனசு துல்லியமாக இல்லாமல் எப்படி இருக்கும்? டாக்டர் வர்மாவின் முகத்தில் தெரிந்த சோகம் இன்னும் மனக் கண்ணில் நின்றது. ஓர் உயிர் போய்விட்ட துக்கம் மாத்திரமில்லை அது. நான் தோற்றுப் போனேன் என்கிற துக்கம். மற்ற நோயாளிகளின் நம்பிக்கை ஆட்டம் கண்டுவிடுமே என்கிற துக்கம்.

கலகலப்பே இல்லாத ஒரு மௌனத்தில் சரசரவென்று இருள் படர்ந்தது. இன்று ஒரு நோயாளியும்— தூங்கப் போவதில்லை என்று அவன் நினைத்துக் கொண்டான். மறுபடியும் மறுபடியும் யோசித்துப் பார்க்கை

தந்தை: "என்னம்மா **தனம்**, ஏன் அழுகிறாய்?"

தனம்: "அவர் செய்யற தப்புக் கெல்லாம், அவர் தலையில் அடித்துக்கொண்டே 'எல்லாம் என் மடத் **தனம்**, எல்லாம் என் முட்டாள் **தனம்**' என்று என்னைத் திட்டுறார் அப்பா!" - எஸ். பாலு

யில் கௌத்தம் இறந்தது நல்லதுதான் என்கிற எண்ணம் ஊர்ஜிதமாயிற்று. என்னதான் பிரியம் இருந்தாலும் எத்தனை நாட்களுக்கு மனைவி, இருபத்தைந்து வயதைத் தாண்டாத ஒருத்தி, சலிப்பில்லாமல் கழுத்தளவில் மட்டும் உயிரை வைத்துக்கொண்டிருக்கும் கணவனைப் பார்த்துக்கொள்வாள்?

இரவு சுத்தமாகத் தூக்கம் வரவில்லை. இன்றைக்கு ஒரு காம்போஸ் மாத்திரை கேட்டுப் போட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான். சாளரத்தின் வழியே பளீரென்று நிலா வெளிச்சம் இமைகள் மேல் நின்றது. ஒருக்களித்துப் படுத்துக்கொள்ள முடியாத நிலையில் அவன் கையைக் குறுக்காகக் கண்கள் மேல் போட்டுக்கொண்டான்.

தண்ணென்ற ஒரு கரம் அவன் கையை விலக்கிற்று.

சாந்தி — ஒரு சாத்வீகமான புன்னகையுடன்.

''எப்படி இருக்கீங்க ஹரி?''

''ஸ்மசான வைராக்கியத்தில்இருக்கேன்!''

''இன்னிக்கு நானும் ஒரு வைராக்கியத்திலே இருக்கேன். இத்தனை நாளா ஏதேதோ பிரமைகளை மனசிலே வெச்சிண்டு கலங்கிண்டிருந்தேன். இந்த உசிரு பொக்குனு அடங்கக் கூடிய உசிருன்னு முதல் முறையா மண்டையிலே உறைச்ச மாதிரி இருக்கு இன்னிக்கு. அந்த உசிரை நான் கேவலமா நினைச்சு வீணுக்கக் கூடாதுன்னு முடிவுக்கு வந்திருக்கேன்.''

நிலா வெளிச்சத்தின் பின்னணியில் அவளுடைய முகம் அசாதாரணமாக ஒளிர்ந்தது.

''எனக்குப் புரியல்லே.''

''சொல்றேன்'' என்றாள் அவள் மெல்லிய குரலில். ''இதுவரை யார் கிட்டேயும் ஏற்படாத ஒரு நெருக்கம் உங்க கிட்ட எனக்கு ஏற்பட்டிருக்கிறது ஆச்சரியமான விஷயம் ஹரி.'' (தொடரும்)

ஆண்மை

— பிரதிபா ராஜகோபாலன் —

சாயந்திரம் நாலு மணிக்குப் பஞ்சாலை முன்னால் இருந்த டீக்கடையில் ரத்தம் லேசாகக் கொதிக்க ருத்ரமூர்த்தி வந்து உட்கார்ந்தான்.

பாய்லரில் இருந்து வெளிவந்த ஆவியின் கொதி நிலையைப் போல அவன் மனநிலை இருந்தது. அடிக்கடி இடுப்பைத் தடவிக் கொண்டான்.

உள்ளே பத்துப் பன்னிரண்டு பேர் வடையும் போண்டாவும் தின்று கொண்டிருந்தனர். அதில் இரண்டு மூன்று பேர் 'தண்ணீரில்' மூழ்கியிருந்தார்கள்.

''என்னய்யா, மொளகாய் போடவே மாட்டியா?'' என்று கடைக்காரனைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு பையன் கடைக்காரன் காட்டிய ஜாடையினால் கைப்பிடி நிறைய வறமிளகாயைக் கொண்டுவந்து குடிகாரர்களுக்கு விநியோகித்தான்.

''இப்பச் சாப்பிடுங்கண்ணே... நாளேலேர்ந்து மொளகாயை அரைச்சு ஊத்தச் சொல்றேன்...''

''உங்களுக்கு என்ன வேணும்?'' என்று ருத்ரமூர்த்தியைக் கடைக்காரன் கேட்டான்.

''ரெண்டு பஜ்ஜி சாயா... ஆமா மில்லு நாலரை மணிக்கு உட்டுடுவாங்களா?''

''இல்லீங்க... சரியா அஞ்சாகும்.''

அவன் இடுப்பைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

பஜ்ஜி வந்தது.

''சாம்பார் ஊத்தட்டுங்களா?''

''ம்...''

''அண்ணனே எங்கியோ பார்த்த மாதிரி இருக்குங்களே? ரத்னபுரிங்களா?''

''இல்லேல்ல... டவுனுக்குள்ளே. எம் பொண்டாட்டியைப் பார்க்கணும்.''

கடைக்காரன் இதை எதிர்பார்க்கவில்லை.

''நான் எட்டாவது வரைதான் படிச்சிருக்கேன். அவ பத்தாவது. உள்ள டைம் ஆபீஸ்ல வேலை செய்யறா. நான் கிருஷ்ணா இஞ்சினீயரிங்ல வெல்டரா இருக்கேன். ரெண்டு பேருக்குள்ள ஒத்துக்கிறதில்ல. சொந்தத்தில இன்னொரு பொண்ணை நமக்குத் தோதாப் பண்ணிக்கலாம்னு இருக்கேன். இவளைக் கையெழுத்துப் போடுன்னு பத்து நாளாக் கேக்கறேன். முடியாதுங்கறா. அதுதான் இன்னிக்கு இங்கேயே வந்துட்டேன். சைக்கிள் செயின்லே இடுப்புக்குக் கீழே நாலு வீசு வீசலாம்னு முடிவு பண்ணிட்டேன். இங்கே வ...''

டீ வந்தது.

ருத்ரமூர்த்திக்கு டீ உள்ளே போனதும் நரம்புகளில் துடிப்பு அதிகரித்தது.

''படிச்சவள்னு திமிர் ஜாஸ்தி. ரெண்டு விழுந்தா சரியாயிடும். அவ அக்கா உள்ளே 'விரியா'க் கூடை சொமக்கறா. இண்ணைக்கு ரெண்டுல ஒண்ணு பார்த்திடறேன்'' என்றவன் தன் இடுப்புப் பெல்டிலிருந்து பத்து ரூபாய் நோட்டொன்றை மேசையின் மேல் விசினான்.

''மணி ஆச்சா?''

''ஆச்சுங்க... பெல் அடிச்சிட்டாங்க'' என்றான் கடைக்காரன்.

சில்லறையை வாங்கி அலட்சியமாகப் பெல்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு, 'மெயின் கேட்'டுக்குச் சற்றுத் தள்ளி நின்று கொண்டான்.

ருத்ரமூர்த்தி மனைவியின் வருகைக்குத் தயார் செய்து கொண்டான். சுமார் அறுபது எழுபது பேர் வெளியேறிய பின் நீலப் பூ பிரிண்ட் செய்த வெள்ளைப் புடவையில் மூன்றடுக்கு டிபன் பாக்சுடன் இன்னொரு

பெண்ணுடன் சிரித்துக் கொண்டு அவன் மனைவி புஷ்பா வெளியேறினாள்.

..ருத்ரமூர்த்தி இடுப்பைத் தடவிக் கொண்டு மனசையும் உணர்ச்சியையும் தயாராக்கிக் கொண்டான். சுமார் இருபது அடி தாண்டிய பின் மனைவியைக் கரகரத்த குரலில் அழுத்தமாகக் கட்டி வைப்பது போல் ஆணையிடும் தோரணையில் கூப்பிட்டான்.

''புஷ்பா, நில்லு!''

மந்திரத்துக்குக் கட்டுண்டவள் போல் திரும்பிப் பார்த்தாள் புஷ்பா.

''என்னங்க இங்கே?வேலைக்குப்போகலே?''

''ரெண்டுல ஒண்ணு தெரியாமப் போற தில்லை'' என்றான் ருத்ரமூர்த்தி, குரலில் குரூரத்தை நிரப்பிக் கொண்டு.

ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று புஷ்பா உணர்ந்து கொண்டாள்.

''எதிருந்தாலும் வீட்டுக்குப் போய்ப் பேசிக்கலாங்க... எல்லாரும் பாக்கறாங்க பாருங்க...'' என்று அவன் கையை இதமாய்ப் பிடித்து இழுத்தாள்.

''எவன் பார்த்தா எனக்கென்னடி?.... என்னை உட்டுடறேன்னு இந்த செகண்ட்ல கையெழுத்துப் போடணும். இல்லேன்னா உன்னை உண்டு இல்லேன்னு பண்ணிடறதுன்னு முடிவு பண்ணி இருக்கேன்...''

அதற்குள் சிறு கூட்டம் அவர்களைச் சுற்றிக் கொண்டது.

புஷ்பாவுக்கு அப்படியே அந்த விநாடியில் உயிர் போய்விடக்கூடாதா என்று ஆகிவிட்டது. உடம்பும் மனசும் கூனிக்குறுகிவிட்டது.

''போடறேனுங்க... ஆனா இங்க வேண்டாங்க... எல்லோரும் ஒரு மாதிரியாப் பாக்கறாங்க... நாளைக்கு எப்படி அவங்க முகத்தில முழிக்கிறது? அதும், எங்க அக்கா வீட்டுக்காரரை ஒரு வார்த்தை கேட்டுட்டு, நிதானமாப் பேசி முடிக்கலாங்க. இப்ப தயவு செஞ்சு வீட்டுக்கு வாங்க... கால்ல விழுந்து கும்பிடறேன்'' என்று புஷ்பா இரைஞ்சும் குரலில் கூறக் கூறச் சடாரென்று இடுப்பில் தோலெல்லாம் பிய்க்கும் படி சங்கிலியால் அடி விழுந்தது.

''அம்மா'' என்று அவள் அருகிலிருந்த புளிய மரத்தைப் பிடித்து உட்கார்ந்து விட்டாள்.

''கட்டின புருஷன் சொன்னபடி கேப்பியா அக்கா புருஷன் சொன்னபடி கேப்பியா? கழுதை'' என்றவன் சடார் சடார் என்று அவள் உடம்பில் இன்னும் நாலஞ்சு இழுப்பு இழுத்தான். அது இடுப்பு, தொடை, முதுகு, பக்கத்துப் புளிய மரம் என்று பல இடங்களில் விழுந்து அவளிடம் மரணக் குரலை வரவழைத்தது.

அங்கங்கே நின்றிருந்த தொழிலாளர்கள் ஒரு வேடிக்கைப் பொருளாகக் கருதிப் பார்த்தார்களே தவிர, குறுக்கிட்டு, ஒரு பெண்ணின் மரண அவஸ்தையைத் தடுத்தார்கள் இல்லை.

''மரியாதையாக் கையெழுத்துப் போடு. இல்லைன்னு உன் தோலை உரிச்சு இந்தப் புளிய மரத்தில தொங்கவுட்டுட்டுப் போயிடுவேன்.. என்னை என்ன படிக்காத.....ன்னு நெனச்சியா?...நாயே... எடுடி பேனாவை...போடுடி கையெழுத்து.''

ருத்ரமூர்த்தி மறுபடியும் செயினை ஓங்கினான்.

''எடு பேனாவை.''

புஷ்பா தன் மரண வலியினால் பிரக்ஞை இழந்து கொண்டிருந்தாள். அவளுடைய டிபன் பாக்ஸ் உருண்டு, புளிய மரத்துக்குக் கீழே பள்ளத்தில் விழுந்து கிடந்தது.

''எந்திரிடி... உசிரு போறாப்ல நடிக்கிறியா? அயோக்கியக் கழுதை...'' என்று செயினை அவளை நோக்கி வீச முயற்சி செய்கையில், பளாரென்று பல அதிரடிகளாய்த் தன் முகத்திலும் பின்புற மண்டையிலும் கழுத்துப் பட்டையிலும் கனத்த பொருளால் தான் தாக்கப்படுவதை உணர்வதற்குள் நிறைய அடிகள் விழுந்து பாதி உணர்வு அற்றுக் கீழே விழுந்தான்.

''அயோக்கிய நாயே... நடு ரோட்லே நாலு பேருக்கு முன்னாலே ஒரு பொம்பளையைத் தொட்டு அடிக்கிறது என்னடா வீரம்? இப்ப அடிடா பார்க்கலாம்'' என்று ஆக்ரோஷமாய், வெறியாய், சிம்மத்தின் குரலாய் அதுவும் பெண் குரலாய்க் கேட்டதும், முகத்தில் விழுந்த ரத்தத்தைத் துடைத்துக் கொண்டு அண்ணாந்து பார்த்தான்.

நரசிம்ம அவதாரமாய், புஷ்பாவின் அக்கா அதே மில்லில் வேலை செய்கிறவள் — கையில் டிபன் பாக்சுடன் நின்றிருந்தாள்.

தன்னை அடித்தது ஒரு பெண் என்று உணர்ந்ததும், ருத்ரமூர்த்தியாகி உணர்வுகள் சிலிர்க்க எழுந்தான்.

''எம்பொண்டாட்டியை எங்கே வேணும்னாலும் அடிப்பேன். நீ எவடி கேக்க?''

''எவடி கிவடின்னு பேசினியோ மொகரையைப் பேத்துக் கையில குடுத்து அனுப்பிடுவேன். உங்க நாயத்தை ஊட்டுக்குள்ளார பேசியிருந்தா எவண்டா உன்னைக் கேக்கப் போறான்? ஒரு பொம்பளைய சைக்கிள் செயினால வெறி நாயைச் சாத்துறாப்ல ரத்தம் வரக் கொதறி அடிக்கிறே... அதை இங்க எத்தனை ஆம்பிளை சிங்கங்க பாத்துட்டு நிக்குது. ஒரு அக்கிரமத்தைக் கேக்கற அளவுக்கு யாரும் ஆம்புளையாத் தோணல. இத்தனை அயோக்கியத்தனம் செய்துட்டு, இன்னும் எம் பொண்டாட்டின்னு வேற சொல்லிக்கிற ஆம்பிளை என்ன ஆம்பிளை?''

ருத்ரமூர்த்தி தன் சட்டையின் முன்புறத்தால் வழிந்த ரத்தத்தைத் துடைத்துக் கொண்டான். நாலைந்து பெண்கள் புஷ்பாவுக்குத் தண்ணீர் கொடுத்துப் பக்கத்திலிருந்த டீக்கடைக்கு முன்னால் இருந்த பெஞ்சில் படுக்க வைத்தனர்.

''உன் தங்கச்சி நடந்துக்கற லட்சணத்துக்கு இந்த அடி போதாது. ஆம்பிளை கூட மல்லுக்கு நிக்கிற உன் புத்திதானே அவளுக்கும் இருக்கும்!'' என்று அவன் சொல்ல, புஷ்பாவின் அக்காக் காரி உமிழ்ந்தாள்.

''ஒரு பொம்பளையை மாட்டை அடிக்கிற மாதிரி சைக்கிள் சங்கிலியால நீ அடிக்கறது, மத்தவங்க கைக்ட்டிப் பார்த்துக்கிட்டு நிக்கறது? ஏண்டா இப்படிச் செஞ்சேன்னு கேட்டா,என்னைப் பொம்பளை இல்லேங்கிறே. ஆமா நா பொம்பளையும் இல்லே... அதே சமயம் நீ ஆம்பிளையும் இல்லே.. மரியாதையா இந்த இடத்தை உட்டுப் போயிடு. எனக்கு வர்ற ஆங்காரத்துக்கு உன்னைக் கிழிச்சுத் தோரணம் கட்டிப் போடுவேன்... நீ எல்லாம் ஒரு ஆம்பிளையா... வேட்டி கட்டி, மீசையை ஒரு மொழத்துக்கு உட்டிருக்கான்... அவளை நான் பாத்துக்கறேன்... நீ எந்தச் சீமான் கிட்ட சொல்லிக்க போ.''

''சரிதான் போடி'' என்ற ருத்ரமூர்த்தி உறுமினான்.

''சரிதான் போடா...'' என்றவள் அந்த வழியா வந்த ஆட்டோவை நிறுத்தித் தன் தங்கையை ஏற்றிக் கொண்டாள்.

''ஒண்ணு மட்டும் மனசுல வெச்சுக்க... என் தங்கச்சி கொணமாகி இதே மில்லுக்குத்தான் வேலைக்கு வருவா... மறுபடியும் அவகிட்ட ளொள்ளு கிள்ளு பண்ணினியோ... அப்பறம் உனக்காச்சு எனக்காச்சு! இதே புளிய மரத்துக்குக் கீழேயே உன்னைச் சமாதி வெச்சுருவேன்... அவளுக்குப் புருசன்னு ஒருத்தன் இல்லாட்டியும் போகுது... யோவ் ஆட்டோ, ஆஸ்பத்திரிக்கு உடு'' என்றவள் முகத்தில் ஆண்மை பொங்கப் பேசினாள்.

அந்த மாலை நேரத்தில் அங்கிருந்த ஆண்கள் அத்தனை பேரும் தமக்குள் ஏதோ ரோஷமாய், சூடாய், சொரணையாய் ஊறுவதாய் உணர்ந்து வீடு திரும்பலானார்கள்,

''மிக்ஸி வாங்கினது ரொம்ப சௌகரியமாக இருக்கு. மிளகாய்ப் பொடி, சாம்பார் பொடி, காப்பிப் பொடி அரைப்பதெல்லாமே இதில் தான்...''

''பல்பொடி வேணும்.... இந்தச் செங்கல்லைப் பொடி பண்ணித் தாயேன்''

சமைக்க ஆரம்பிக்கு முன்னரே
சமையல் முடிந்துவிட்டது!



பஜாஜ் ப்ரஷர் குக்கர் முற்றிலும் அதிகக் கட்டுறுதியான அமைப்புக் கொண்டது. எனவே உஷ்ணத்தை நிலை நிறுத்தி... உணவை விரைவாகச் சமைக்கிறது. அதோடு, அதனால் மிச்சமாகும் எரிபொருள் செலவால் ஒன்றரை வருடத்திலேயே அதன் விலையைத் திரும்பப் பெற்று விடுகிறீர்கள். விசேஷ வாயகல அமைப்பினால் அதிக இடவசதி எனவே உங்கள் பாத்திரங்களைக் கூட உபயோகிக்கலாம்.

பஜாஜ் ப்ரஷர் குக்கர்கள் பல சைஸ்களில் வருகின்றன. அனைத்தும் மிகக் கடுமையான ஐஎஸ்ஐ விதிகளின்படி உருவானவை. அதோடு பஜாஜின் உன்னத தரத்தின்படி படைக்கப் பட்டவை. இந்தியாவெங்கும் 3500க்கும் மேற்-பட்ட விற்பனையாளர்களின் சீரிய விற்பனைக்குப் பின் சேவையை பக்கபலமாகக் கொண்டது. அப்ளையன்ஸ்களில் முடிசூடா மன்னனாக பஜாஜ் விளங்கக் காரணம் வேறு வேண்டுமா என்ன?

வாங்குவீர்

15

ஹரியின் முகம் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் குரலில் கனிவு தொனித்தது.

''சொல்லுங்கள் சாந்தி. எனக்கு இன்னும் புரியல்லே!''

அதற்கு அவள் நேரிடையாகப் பதில் சொல்லாமல் புன்னகைத்தாள்.

''ஒரு வேடிக்கை ஹரி. தினம் தினம் இந்த மாதிரி சாவுகளைப் பார்க்கிறோம். அடுத்த நிமிஷம் என்ன நடக்கப் போறதுன்னு யாருக்கும் தெரியாது. ஆனா நாம மட்டும் சாச்வதம்னு தீர்மானமா நம்பிண்டு ஒவ்வொரு காரியமும் பண்றோம். ரொம்ப ஆச்சரியம் இல்லே?''

''நீங்க தர்ம புத்திரர் மாதிரி பேசறீங்க!''

இவனுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் குறும்புப் பேச்சு எப்படி—வருகிறது என்கிற வியப்புடன் அவள் சிரித்தாள்.

''அத்தனை யெல்லாம் விவேகம் எனக்குக் கிடையாது.''

''உங்க பிரமைகள் என்னன்னு எனக்குச் சொல்லலியே?''

''சொல்றேன்...''

திடீரென்று அவளுள் ஒரு திகைப்பு ஏற்பட்டது.

இவனிடம் எதற்கு இதையெல்லாம் பேச ஆரம்பித்திருக்கிறோம்? ஆனால் அவன் கண்களில் தெரிந்த கனிவு அவள் இதுவரை யாரிடமும் பார்த்திராதது. அந்தக் குறும்புப் பேச்சுக்குப் பின்னால் ஆழம் தெரிந்தது. ஆரம்பத்தில் சுய பச்சாதாபத்தில் மூழ்கியவன் எத்தனை சீக்கிரம் தெளிந்து விட்டான்! தன்னைச் சுற்றிப் பார்க்கத் தெரிந்துகொண்டு விட்டான்!... மற்றவர்களுக்காகக் கரைந்து போகும் மனசாக...

''தினம் தினம் நான் எனக்கு ஒரு வீடு இருக்குன்னு நினைச்சுண்டு பதினைந்து கிலோ மீட்டர் பஸ்ஸிலே இடிபட்டுண்டு போறேன், வீடு பூட்டியிருக்கு. திறந்திருந்தாலும் உள்ளே போக எனக்கு உரிமை இல்லே.''

சட்டென்று அவனுடைய புருவங்கள் மேலே உயர்ந்தன.

''நான் அந்த வீட்டுக்கு எஜமானிங்கிற பிரமை எனக்கு. அடிச்சுத் துரத்தப்படற மாதிரி ஒரு வாரமா தினமும் அனுபவம் ஏற்படறது. இருந்தும் அந்தப் பிரமை போகல்லே. சொரணை கெட்டுப் போற அளவுக்கு....''

''உங்களை எதுக்கு யாரும் துரத்தணும் சாந்தி?''

அவள் சிரித்தாள்.

''இதுவும் எனக்குள்ளே இருந்த ஒருபிரமை தான். என்னைத் துரத்தறதுக்குக் காரணமே இல்லேங்கற பிரமை. எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலேயும் திருமண பந்தத்தை முறிக்கக் கூடாதுன்னு ஊறிப்போன நம்பிக்கையினாலே ஏற்பட்ட பிரமை...''

''நான் கல்யாண மாறதுக்கு முன்னாலே நிறையக் கனாக் காணுவேன். திருமண வாழ்க்கைன்னா அது தோழமைக்காக இருக்கணும்னு நினைச்சுப்பேன். ஈச் பர்ஸன் ஷுட் பீ எ காம்ப்ளிமெண்ட் டு தி அதர். ஒரு பாலன்ஸ் இருக்கணும்; தராசிலே நிக்கிற மாதிரி. அந்த மாதிரி ஒரு சங்கமத்திலே நல்ல குழந்தைகளை உருவாக்கணும்னு நினைச்சுப்பேன். இப்ப அதெல்லாம் எத்தனை பைத்தியக்காரத்தனமான கனான்னு புரியறது. அப்படி ஒரு சங்கமம் ரொம்ப அபூர்வமாத்தான் ஏற்படும்.''

ஹரி நிதானமாக வார்த்தைகளைஜோடித்தபடி கேட்டான்.

''உங்களுடையது அபூர்வமானது இல்லேன்னு எப்பத் தெரிஞ்சுது?''

''கல்யாணமான புதுசிலேயே தெரிஞ்சு போச்சு. எண்ணங்கள்ளே, பழக்கங்கள்ளே இரண்டு பேருக்கும் ரொம்ப வித்தியாசம்.



இருந்தும் இரண்டு பேர் ஆயுசுக்குச் சேர்ந்திருக்கணும்கிற தீர்மானத்தோட ஒரு பந்தத்துக்கு ஒப்புத்துக் கொண்டிருக்கிறப்போ பிரியம்னு ஒண்ணு ஏற்பட்டு எல்லா வித்தியாசத்தையும் சரி செஞ்சிடும்னு நினைச்சேன்.''

''பிரியம் ஏன் ஏற்படல்லே?''

''கதையிலே வர மாதிரி காதல்னு ஏற்பட்டாட்டாலும் அவர் என் புருஷன் என்கிற எண்ணத்திலே எனக்குப் பிரியம் ஏற்பட்டது. நம் பிரியத்தை ஏத்துக்கறதுக்கு அடுத்தவர் மனசிலே தாராளம் வேணும் ஹரி.''

''உங்க கிட்ட அவர் அப்படி நடந்துக்கறது ஆச்சரியமா இருக்கு, சாந்தி. உங்களுடைய சிரிப்பு ஒண்ணே ஆளைத் தூக்கிண்டு போயிடும்னு நினைச்சேன்.''

அவள் சிரித்தாள்.

''அவருக்கு வர வர என் சிரிப்பைக் கண்டாலே வெறுப்பு வந்துடுத்து.''

''ஆச்சரியமாயிருக்கு.''

''ரொம்பப் பழைய காலத்து எண்ணங்கள் அவருக்குள்ளே ஊறிப்போயிருக்குன்னு சில சமயம் நான் நினைச்சுப்பேன். பெண்டாட்டியோட பேச்சு சிரிப்பு எல்லாம் தனக்காக மட்டும்தான் இருக்கணும்கிற எண்ணம். அந்த மாதிரி ஆண்களுக்கும் இந்தக் காலத்துக்கும் ஒத்து வராது....''

''ரொம்ப டாமேஜிங்காப் பேசறீங்க. எத்தனையோ பெண்கள் கூட ரொம்ப பொஸஸிவ். எங்க ரிஸப்ஷனிஸ்டைப் பார்த்து நான் 'ஹல்லோ'ன்னு சொன்னாக் கூட, மாயா இரண்டு நாளைக்குப் பேச மாட்டா.''

''பெண்கள் அப்படி இருந்தாலும் கஷ்டம்தான். நானும் வேலைக்குப் போகலேன்னா வீட்டை நடத்தறது சிரமம். நான் வேலைக்குப் போகணும். ஆனா எந்த ஆணோடையும் சிரிச்சுப் பேசக் கூடாதுன்னா நடக்கிற காரியமா? இந்த எண்ணம் அவருக்குள்ளே ஒரு பிசாசாப் போயிடுத்து.''

''ஒரு நாளைக்கு பஸ்ஸிலே ஏதோ கலாட்டா ஆகி நான் வீட்டுக்குப் போகும்போது எட்டு மணி ஆயிடுத்து. எவனோடயோ நான் நேரத்தைக் கழிச்சுட்டு வந்திருக்கேன்னு வீட்டுக்குள்ளேயே விடல்லே. என்னை வெளியிலே நிறுத்தி....''

அவளுக்குத் துக்கத்தில் தொண்டையை அடைத்தது. அன்றைய அவமானம் மறுபடியும் மனசை ஆக்கிரமித்தது.

''எங்கேடி கிடுகிடுன்னு திறந்த வீட்டிலே நாய் நுழையற மாதிரி நுழையறே?''

''என்ன நீங்க? இன்னும் எத்தனை நாளைக்கு உங்க கோபம் இருக்கும்? ப்ளீஸ்! வழியை விடுங்க. நான் ஆஸ்பத்திரியிலே எவ்வளவு நாள் தங்கியிருக்க முடியும் சொல்லுங்க? எல்லோரும் கேட்க ஆரம்பிச்சுட்டாங்க.''

''எவனோடயோ போய்! ஒரு வாரமா இருந்துட்டுப் பொய் வேறே சொல்றியா? சொல்லு எல்லார் கிட்டயும். என் புருஷனுக்கு மகா ரோஷம். வேசித்தனம் பண்ணா பொறுத்துக்க மாட்டார்ன்னு!''

க்ரோதத்துடன் அவள் கன்னத்தை மாறி மாறி அடித்தான். அவள் நிலைகுலைந்து போனாள். கன்னத்தில் நெருப்பு வைத்த மாதிரி எரிந்தது. தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து பார்க்கையில் கதவு சாத்தியிருந்தது. அதன் பின்னாலிருந்து ''.....சிறுக்கி!'' என்று இரைந்தான்.

அவளுள் திடீரென்று ஒரு வெறுப்புணர்வு ஜ்வாலையாக எழுந்ததும், கிடுகிடுவென்று சாலையில் இறங்கி ஆஸ்பத்திரி வந்து சேர்ந்து ''என்ன?'' என்று கேட்ட ஊர்மிளாவின் மடியில் படுத்து விசித்து விசித்து அழுததும்—

ஒரே ஒரு கேள்வி — விடை தெரியாத கேள்வி — ஒவ்வொரு விநாடியும், எந்த வேலை

அருள்வாக்கு

ஞானம் அடையச் சாதனங்கள்

இதர வயல்களில் மேயாமல் இருப்பதற்காக நாம் பசுவைக் கட்டிப் போடுகிறோம். மற்றவர்களின் பயிர்களைக் காப்பாற்றுவதற்கு மட்டும் பசுவைக் கட்டிப் போடவில்லை. மற்றவர்களிடமிருந்து அடி வாங்காமல் பசுவைக் காப்பதற்கும் கட்டிப் போடுகிறோம். அது போலவே நாமெல்லாம் பசுக்கள். ஈசுவரன்தான் பசுபதி. நாமும் காமம், குரோதம், போன்ற உணர்ச்சிகளுக்கு ஆளாகிக் கஷ்டப்படாமல் இருப்பதற்காக நம்மையே உறுதியுள்ள கயிறுகளால் கட்டிக்கொள்ள வேண்டும். இக்கயிறுகள்தான் நாம் அனுஷ்டிக்க வேண்டிய சதாசாரங்களும் கர்மாக்களும், பக்தியும். எப்போது பசுவைக் கட்டவிழ்த்து விட வேண்டும் என்று இடையனுக்குத் தெரியும். அப்போது அதை அவன் அவிழ்த்து விடுகிறான். பசுபதியாகிற ஈச்வரனுக்கும் எப்போது நம்முடைய கட்டுக்களிலிருந்து நம்மை அவிழ்த்து விட வேண்டும் என்று தெரியும். அப்போது நமது கட்டுகள் அவிழ்ந்து விடும். கட்டுக்களை முடிவில் அவிழ்ப்பதற்காகவே இப்போது ஆசாரங்கள், அனுஷ்டானங்கள் என்ற கட்டுக்களால் கட்டிக் கொள்கிறோம். நூற் கயிற்றால் கட்டப்பட்ட ஒரு பேல் கட்டு இரும்புத் தகடுகளால் இறுக்கிக் கட்டப்படும்போது நூற் கயிறுகள் தளர்ந்து நழுவி விழுந்து விடும். அது போலவே ஞானம் என்கிற இரும்புத் தகட்டினால் நம்மை இறுகக் கட்டிக்கொண்டால் காம குரோதம் என்கிற நூற் கயிறுகள் தளர்ந்து விழுந்து விடும். இந்த நூற் கயிறுகளான காமக் குரோதாதிகள்தான் நம்மை இவ்வுலகத்துடன் பிணைத்து, பிறப்பு இறப்புக்குக் காரணமாக இருக்கின்றன. இவற்றினின்று விடுபடுவதற்கு யக்ஞம், தபஸ், கர்மாக்கள், ஈசுவர பக்தி என்று பலவிதங்கள் சொல்லப்படுகின்றன. எல்லாம் ஞானத்தை அடைவதற்குச் சாதனங்கள். ஞானம் வந்துவிட்டால் பற்றுக்கள் அற்றுப் போகும். ஈசுவரன் ஞான ஸ்வரூபி, நித்திய முக்தன்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

செய்யப் போகையிலும் குறுக்கே நிற்கிறது இப்போது—

ஏன் அப்படிக் கத்துகிறுன்? தானே துரத்திவிட்டு ஏன் அப்படிப் பழியைச் சுமத்துகிறுன்? ஆணவமா அல்லது வியாதியா?

நிலாவையே யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்த ஹரி, அவளைப் பார்த்து, மெல்ல அனுதாபத்துடன் முறுவலித் தான்.

''இப்ப என்ன முடிவு எடுத்திருக்கீங்க? ஏதாவது புத்திசாலித்தனமா தைரியமா எடுக்க வருமா உங்களுக்கு?''

''இனிமேல் போய்க் கதவைத் தட்டற தில்லேன்னு முடிவு பண்ணி யிருக்கேன். எனக்கு ஒரு வீடு இருக்கு. நான் ஒருத்த னுடைய மனைவிங்கறதை மறந்துடப் போறேன்.''

அவன் சிரித்தான். ''ஞானேதயம் ரொம் பச் சீக்கிரமா வந்திருக்கு உங்களுக்கு! இனி மேல் எங்கே தங்குவீங்க?''

''ஹாஸ்டல்லே! இன்னிக்கு அந்த ஆள் இறந்து போனப்போ நான் நினைச்சிண்டேன். சாவு எந்தநிமிஷம் வரும்னு தெரியாதப்போ இப்படி அசட்டுத்தனமா என் வாழ்க்கை யைக் கதவு தட்டறதிலேயும், ஒரு மூர்க் கன் கிட்டே 'நான் என்ன தப்புச் செஞ் சேன்னு' நியாயம் கேட்கிறதிலேயும் வீணுக் கக் கூடாதுன்னு தோணித்து.''

அவன் மெல்ல அவள் கையை ஆதரவாகத் தட்டினுன்.

''ரொம்ப கரெக்ட். விஷ்யூ ஆல் தி பெஸ்ட்!''

''தாங்க்யூ.''

அவள் எழுந்தாள். மனசு சற்று லேசா கிப் போனுற்போல் இருந்தது. அங்கே இருந்த குப்பை கூளங்களைத் தட்டி மெழுகி விட்ட மாதிரி உதடுகளில் ஒரு ஞானப் புன்னகை அமர்ந்தது.

'இன்றைக்கு கௌதம் பொசுக்கென்று கண்ணை மூடியபோது, அத்தனை அழகும், அத்தனை ஆகிருதியும் அத்தனை காதலும் நினைத்துப் பார்க்காத துரிதத்தில் முடிந்து போனபோது, பிரிந்துபோன அந்த உயி ருக்குக் கடைசி நிமிஷ நிராசைகள் எத்தனை இருந்திருக்கும் என்கிற நினைப்பு அதிர்ச்சி யைத் தந்தது. இந்த வார்டே இன்று அதிர்ந்து போன மாதிரி இருந்தது. செத்துப் போனவனை விட நம் நிலைமை மோசமில்லை என்கிற உணர்வு பொதுவாக எல்லாருக்கும் ஏற்பட்டு விட்டமாதிரி தோன்றிற்று. அதுவே தான் என் மனசையும் தெளியவைத்திருக்க வேண்டும்...'

சாந்தி தனக்குள் சொல்லிக் கொண்டாள். 'இனிமேல் எந்தப் பைத்தியக்காரத்தனமான பிரமையிலும் நான் இருக்கப் போவதில்லை. என்னுல் இங்கிருக்கும் சிலருக்கு சந்தோஷ மேற்படுமானுல் அது ஒரு சாதனை. நான் இருப்பதால் ஒருவனுள் ஆத்திரமும் அசூயை யும் கீழ்த்தரமான வார்த்தைகளும் உண்டாகுமானுல் அது என்னுடைய தோல்வி. மனுஷன் பிறப்பது சாதனைகளுக் காக. தோல்விகளுக்கு இல்லை. சாதனைகளுக்கு

'தேவலாம்! உங்க குழந்தை எப்போதும் 'துரு துரு'ன்னு இருக்காள்''

'' 'அயர்ன்' டானிக் குடிக்கிறுளே!''

-சி. மோகன்தாஸ்

எது மார்க்கமோ அதுதான் என் இருப்பிட மாக இருக்க வேண்டும்.

மறு நாள் காலை மிஸ் வயலெட்டிடம் சென்று நர்ஸஸ் ஹாஸ்டலில் அறைக்கு விண் ணப்பம் செய்தாள்.

''அப்ப ஒரு முடிவுக்கு வந்துட்டே?''

''ஆமாம் ஸிஸ்டர்.''

''நல்லது செஞ்சே. அரவணைச்சு நடக்க ஆணுக்குத் தெரியல்லேன்னு அவன் ஆணே இல்லே — அல்பம்!''

சாந்திக்குச் சிரிப்பு வந்தது.

கல்யாணமே செய்து கொள்ளாத மிஸ் வயலட்டுக்கு எல்லா ஆண்களும் அல்பம் என்று நினைவுக்கு வந்தது.

நாட்கள் வேகமாக நகர்ந்தன. காலையில் ஆஸ்பத்திரி வேலையிலும் மாலையில் அருகில் இருந்த ஹாஸ்டலில் களங்கமில்லாத கன் னிப் பேச்சிலும் சிரிப்பிலும் மனசு லேசாக மிதந்தது. ஹரி இப்பொழுது அதிக நெருக்க மாக இருந்தான். மனத்தளவில் அதிக முதிர்ச்சியைக் காண்பித்தான். கட்டிலி லிருந்து சக்கர நாற்காலிக்குத் தானுக இறங் கக் கற்றுக்கொண்டு விட்டான். இன்னும் சில நாட்களில் காலிப்பர் பொருத்திக் கட் டையைக் கொடுத்து வீட்டுக்குப் போ என்று சொல்லிவிடப் போகிறுர்கள். அவன் போய் விடுவான் என்கிற நினைப்பே மனத்தை என் னவோ செய்தது. அத்தனை ஆப்தமாக எத் தனை பேரால் இருக்க முடியும்?

அன்று மாலை அவள் டியூட்டி முடிந்து ஹாஸ்டலுக்குத் திரும்புகையில் மோஹன் அகர்வால் எதிர்ப்பட்டான்.

''ஹரி இன்னும் சில வாரங்களிலே டிஸ் சார்ஜ் ஆயிடுவான் இல்லே?'' என்றுன்.

''ஆமாம்.''

''கால் ஸ்வாதீனமே ஏற்படாதா?''

''ஊஹூம்!''

''அவனைக் கவனித்துக்கொள்ள நர்ஸிங் தெரிந்த யாராவது அகப்படுவார்களா?''

''விசாரித்துப் பார்க்கிறேன்.''

சட்டென்று அவள் மனத்தில் ஒரு விசித்திர எண்ணம் உதித்தது. (தொடரும்)



சிறந்த ரகங்கள். சரியான விலை.

என்டஸ்

அதிகாரப்பூர்வமான ஏஜெண்டுகள்: (தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) ஜே அண்டு ஜே எண்டர்பிரைசஸ், 14/F1 அன்சாரி தெரு, ராம்நகர், கோயமுத்தூர் 9. செமி ஹோல் சேல் டிப்போக்கள்: சென்ட்ரல் டிஸ்டிரிபியூஷன் டிப்போ, C.S.&W. மில்ஸ் காம்பவுண்டு, கோயமுத்தூர் 1.



SEIKO
ALLWYN
உலகிற்கு இது ஸீக்கோ.
நமக்கு இது ஆல்வின்.
ஸீக்கோ தொழில் நுட்பம் இதோ! அதி நவீன கடிகாரத்தொழில் நுட்பத்தின் பயனை நீங்களும் பெறுதற் பொருட்டு, உலகப்புகழ் ஸீக்கோ, ஆல்வின் நிறுவனத்துடன் ஒத்துழைக்கிறது.
இதனால் வகை வகையான மெகானிகல், ஆட்டோமாடிக், குவார்ட்ஸ் கைக்கடிகாரங்கள் துல்லியத்திலும், அழகிலும் அதிநவீன தரத்துடன் கிடைக்கும்.
ALLWYN
AUTOMATIC
SUN 5
மேலும் அதிக நம்பகம், நீடித்த உழைப்பு, ஜப்பான், ஸீக்கோ லைசென்ஸின்கீழ் உருவாகும் இவை, ஆல்வின் என்ற பெயரில் விற்பனையாகின்றன.
காலத்திற்கேற்ற கோலங் கொள்ளுங்கள், நீங்களும்.
ஆல்வின்
கைக்கடிகாரங்கள்
லைசென்ஸ் ஸீக்கோ
காலம் எட்டும் புதுச்சிகரம்.
HTB-HAM-7478

மோஹன் அகர்வால் ரீஹாபிலிடேஷன் வார்டுக்குள் நுழைந்தபோது ஹரி சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்.

''ஹல்லோ!''

ஹரி திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

''ஹல்லோ!''

''என்ன புஸ்தகம் அத்தனை சுவாரஸ்யமா படிக்கிறே நான் வந்தது கூடத் தெரியாமே?''

''ஆல்வின் டாஃப்லர் எழுதின புஸ்தகம்!''

''யார் அவன்?''

''ஃப்யூச்சர் ஷாக் படிச்சதில்லே?''

அகர்வால் உதட்டைப் பிதுக்கினான்.

''அரே சோடோ யார்! அந்த மாதிரி புஸ்தகங்களெப் படிக்கிறதுக்கு எனக்குப் பொறுமை இல்லே. தற்காலத்திலே கிடைக்கிற அதிர்ச்சிகள் போறுதா? எதிர்கால அதிர்ச்சியைப் பத்தி வேறே கவலைப்படணுமா?''

ஹரி அவனைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''எதிர்காலத்துக்குத் தற்காலம்தான் அஸ்திவாரம் மோஹன்! சரி என்ன உனக்கு இப்போ புதிசா அதிர்ச்சி சொல்லு.''

''புதுசா ஒண்ணுமில்லே. உனக்கு இந்த மாதிரி ஆன அதிர்ச்சியே எனக்கு இன்னும் போகல்லே. இப்பவும் லஞ்ச் டயம்போது உன் ரூமுக்குப் போறதுக்குக் கால் கிளம்பறது!''

ஹரியின் மனசில் சட்டென்று ஒரு நெகிழ்ச்சி ஏற்பட்டது. டில்லியில் இருந்த இத்தனை வருஷங்களில் எந்தவித சம்பந்தமுமில்லாத இந்த அகர்வால்தான் அவனுக்கு நெருங்கியவன் என்று தோன்றிற்று. இவன் அசாதாரணமானவன். அவனைப் பார்க்க, மகா கரிசனத்துடன் வாரத்துக்கு இரண்டு நாட்கள் வருகிறான். வரும்போதெல்லாம் பழமோ ஹார்லிக்ஸோ கையில் — யார் இப்படி இருப்பார்கள்? தன் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு அவன் சிரித்தான்.

''யூ நோ ஸம்திங்? நானே அந்த ஷாக் லேந்து மீண்டு வந்தாச்சு.'' அகர்வால் சற்று நேரம் அவனை யோசனையுடன் பார்த்தான். பிறகு சங்கடத்துடன் தலையைக் குனிந்து கொண்டான்.

ஹரிக்குச் சிரிப்பு வந்தது.

''என்னை உற்சாகப்படுத்த வரதா உனக்கு எண்ணம். கடைசியிலே உன்னை நான் உற்சாகப்படுத்த வேண்டியிருக்கு. என்னைப் பார். எனக்கு என்ன குறைச்சல்? கட்டில் லேந்து வீல் சேருக்கு வந்து என்னாலே உட்கார முடிகிறது. வீல் சேரைத் தள்ளிண்டு இந்த வார்ட் முழுக்கச் சுத்தறேன். எல்லா

வேலையும் நானே செய்துக்கறேன். இந்தச் சேர்லே உட்கார்ந்த படியே...''

அகர்வாலின் முகத்தில் இன்னும் சங்கடம் தெரிந்தது. அவனுடைய பார்வை ஹரியின் பைஜாமாவுக்கு வெளியே ரப்பர் கீழிறங்கி சேருக்குக் கீழ் இருந்த பாட்டிலின் மேல் பதிவதைப் பார்த்தான். தன் சங்கடத்தை மறைத்துக் கொண்டு சிரித்தான்.

''அது ஒண்ணுதான் என்னலே முடியல்லே. ஆனா ஒரு வேடிக்கை. நீ நம்புவையோ நம்ப மாட்டியோ. அந்த விஷயமெல்லாம் எனக்கு ஞாபகமே இருக்கிறதில்லே. இந்தக் காத்திடரோடயே நான் பிறந்த மாதிரி எனக்குத் தோண ஆரம்பிச்சுடுத்து. ஒரே ஒரு கஷ்டம். சினிமா ஹீரோ மாதிரி காதலிக்க முடியாது!''

''எனக்குப் புரியல்லே!''

''இந்தக் காத்திட்டரைத் தூக்கிண்டு எப்படி ஹீரோயினோட ஓடி ஆடறது?''

அகர்வால் பக்கென்று சிரித்தான். பிறகுயோசனையுடன் அவனைப் பார்த்தபடி சொன்னான்.

''டாக்டர்உன் காலைப் பத்தி என்ன சொல்றார்?''

''கால் போனது போனதுதான். கொஞ்ச நாள்லே காலிப்பர் போட்டு நடக்க வைப்பார். அப்படி நடந்து பார்க்கறது, மொதல்லெ கொஞ்சம் கஷ்டமா இருக்கும் அப்புறம் பழகிடும். எதுவும் பழகுகிற வரைதான் பயமும் அதிர்ச்சியும்.''

மோகன் முகத்தில் கவலைக் குறி!

''ஏதோ உன் மனசிலே இருக்கு அதான் இப்படி இருக்கே. வாட்ஸ் தி மேட்டர்? உங்க அக்கா எப்படி இருக்கா?''

''இன்னும் மோசம். புருஷன் செத்துப் போனப்புறம் எதுக்கெடுத்தாலும் விரதம், பட்டினி. அந்த அயோக்கியனுக்காக ஏன் இப்படி உருகறேன்னு ஒரு நாளைக்குக் கேட்டேன். அன்னிலேருந்து என்னோட பேசறதில்லே!''

''புவர்கேர்ல்! அதிருக்கட்டும், மாயாவைப் பற்றி ஏதாவது நியூஸ் உண்டா?''

தயங்கினன் மோகன்.

''அவுட் வித் இட்.''

''மாயாவுக்குக் கல்யாணம் ஹரி!''

ஒரு விநாடி இதயம் துடிக்க மறந்தது. சட்டென்று தன்னைச் சமாளித்துக்கொண்டு ஹரி சிரித்தான்.

''இந்த நியூஸுக்கு நான் தயாராகி எத்தனையோ நாளாயிடுத்து மோகன். இட் இஸ் ஏவெரி குட் நியூஸ். உங்க அக்கா மாதிரி எல்லாப் பெண்களும் இருந்தாத்தான் கஷ்டம். மடத்தனம்னு நீயே சொல்லுவே. யார் பையன்?''

''யாரோ ஒரு ஐ.ஏ.எஸ்.''

ஹரி லேசாக விசிலடித்தான்.

''எனக்கு ஆக்ஸிடென்ட் ஆனது அவளுக்கு நல்லது மோகன்!''

''ஐ டோன்ட் நோ. சமீபத்திலே அவளை எங்கேயோ பார்த்தேன். ரொம்ப இளைச்சிருக்கா.''

''அவளுடைய இளைப்புக்கு நான்தான் காரணங்கற எண்ணமா உனக்கு? அந்த மாதிரி எண்ணம் எனக்கு எந்த விதத்திலேயும் லாபமில்லே. அது நிஜமும் இல்லே. எனக்கு வருத்தமே இல்லே மோகன்! அவளுக்கு வேறே இடத்திலே கல்யாணமாக வேண்டியது நியாயமானதுதானே?''

''நீ இப்படி இருக்கிறது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. உடல் குறையோட மனசிலேயும் குறை ஏறிடுத்துன்னு ரொம்பக் கஷ்டம். உனக்கு நல்ல மனசு. உனக்கு ஆங்காரமில்லே. அசூயையில்லே. எனக்குத்தான் சேதி கேட்டதிலேந்து மனசு சரியாயில்லே. மாயா மேலே உனக்கு எத்தனை பிரியம் இருந்ததுன்னு எனக்கும் ரூபா சிங்குக்கும் தெரியும்!''

''அது ஒரு அழகிய கனவு மோஹன்'' என்ருன் ஹரி இங்கிலீஷில். ''கனவைப் பத்தி எத்தனை நேரம் நினைக்க முடியும்?''

பிறகு காத்திட்டரைச் சுட்டிக் காட்டி, ''இதோ இதுதான் நிஜம். இதைப் பார்த்துண்டே யிருக்கும்போது கனுக் காண்பேனு?'' என்ருன்.

மோகன் ஆதரவுடன் அவன் கைகளைத் தட்டினன்.

''இன்னும் ஒரு மாசம் ஆகுமா உனக்கு இங்கிருந்து கிளம்ப?''

''ஆகும்.''

''அதுக்கப்புறம்என்ன பண்ணப்போறே?''

''ஏதாவது வெத்தலே பாக்குக் கடை வைக்கலாம்னு பாக்கறேன். தமிழிலே ஆயிரத்தெட்டு வாரப் பத்திரிகை இருக்கு. அதையெல்லாம் வாங்கிக்கடையிலே தோரணமாக் கட்டுவேன்.''

''அதை விட ஒரு நல்ல பிளான் நான் வெச்சிருக்கேன். சொந்தமா ஒரு பெட்ரோல் பங்க்.''

''வெரி குட்! பணம்?''

''பணத்துக்கென்ன டில்லியிலே பஞ்சம்? உன்னுடைய கிராசுவிடி பணமே இருக்கும். அதோட பாங்க்லே லோன் கிடைக்கும்.''

''ஓ மறந்தே போனேன். என்னை மாதிரி இருக்கிறவாளுக்குன்னு இந்த வருஷம் விசேஷ சலுகைகள்உண்டு இல்லே? எப்படிகரெக்ட்டா இந்த வருஷம் பார்த்துநான்ஆக்ஸிடென்ட்லே மாட்டிண்டேன். வாட் டூ யு ஸே?''

''நீயும் உன் ஜோக்கும்! நான் கிளம்பறேன் ஹரி. உன் ஆஃபீஸ் விவகாரத்தையெல்லாம் நான் பாத்துக்கறேன்.''

''தாங்க்யூ. புது எம். டி. எப்படி இருக்கார்?''

''பழைய எம். டி.யை விடத் தேவலை.''

மோகன் போய் வெகு நேரத்துக்கு மனசுக்குள் ஏதோ அரிப்பு இருந்தது. என்ன என்று புரியாத அரிப்பு.

மாயாவுக்குக் கல்யாணம். அந்தச் செய்திதான் நிதானமான அதிர்வலைகளை உள்ளே செலுத்துகிறதா?

அவன் நாற்காலியின் அடியில் இருந்த பாட்டிலை எடுத்து மேலே ஓரத்தில் வைத்துக்

கொண்டு நகர்ந்தான். தினமும் செய்விக்கப் படும் தேகப்பயிற்சியால் புஜங்களுக்கு நல்ல வலு வந்திருப்பதை அவனுல் உணர முடிந்தது.. நல்ல வேளை முதலில் பயந்த மாதிரி அவன் ஒன்றுக்கும் உதவாத ஜடப் பொருளாகிவிடவில்லை. அவனது அத்தியாவசிய மான தேவைகளை அவனுகவே கவனித்துக் கொள்ள முடியும். அவனுக்குக் கௌதமின் நினைவு வந்தது. அவன் இறந்துபோன அன்று தொங்கிப்போன முகங்களுடன் டாக்டர் களின், நர்ஸ்களின் வருத்தம் ஞாபகம் வந்தது. அந்த நிகழ்ச்சி ஏற்படுத்திய அதிர்ச்சி யில் நெகிழ்ந்துபோய்த்தான் சாந்தி தனது அந்தரங்கங்களை அவனிடம் பகிர்ந்துகொண் டாள்.

அந்த நிலா வெளிச்சத்தின் பின்னணியில் சோகச் சித்திரமாக இருந்த அவளுடைய முகம் இன்னும் பசுமையாகக் கண்ணில் நின்றது.

எத்தனை அற்புதமான பெண் அவள்! அவ ளிடம் எப்படி ஒருத்தன் அந்த மாதிரி குரூரத்துடன் நடந்து கொள்ள முடியும்?

சக்கரங்களைச் சுழற்றியபடி அவன் பழகிப் போன ஒரு லாகவத்துடன் நகர்ந்தான். முன்பு ராம்ஸிங் படுத்திருந்த படுக்கையில் மித்தல் என்ற ஒருத்தர் படுத்திருந்தார். திடீர் என்று ஏற்பட்ட பாரிச வாயுவில் ஒரு காலும்கையும் சுவாதீன மிழந்தார். அவரைப் பார்க்க யாரும் வரவில்லை என்ற உணர்வில் அவன் அவர் கட்டில் அருகில் சென்றுன்.

''ஹல்லோ மிஸ்டர் மித்தல்! எப்படி இருக்கிறீர்கள்?''

மித்தலிடம் அசாத்தியமான சோர்வு தெரிந்தது.

''எப்படி இருப்பேன்? பாதி உடம்புதான் இருக்கிறது!''

''கலங்காதீர்கள்.''

''பொறுப்புள்ளவன் கலங்காமல் இருக்க முடியாது. இரண்டாயிரம் ரூபாய் சம்பாதிச்சிண்டிருந்தவன் இப்படிப் படுத்து விட்டேனுனல் குடும்பத்துக்கு என்ன கதி சொல்லுங்கள்!''

ஹரி அவருடைய கையை லேசாகத் தட்டினுன்.

''உங்கள் கவலை எனக்குப் புரியாமல் இல்லை. இந்த அதிர்ச்சி கொஞ்ச நாளைக்கு இருக்கும். எனக்கும் இருந்தது. உங்களை மாதிரி எனக்குக் குடும்பம் இல்லாவிட்டாலும் என்னுடைய வாலிபத்தை யாரோ முறித்துப் போட்ட மாதிரி ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது. பிறகு மெள்ள மெள்ளச் சமாதானமாகிப் போனேன்.''

மித்தல் ஒரு நீண்ட விநாடி அவனை ஆராய்ந்தார்.

''கல்யாணம் ஆகியிருக்கா?''

''இல்லை. நல்ல வேளை. ரொம்ப முறுக்கேறிப் போயிருந்த உடம்பு இது மிஸ்டர் மித்தல்! இந்த விபத்து எனக்கு நேர்ந்ததும் மனசில் சன்யாசம் ஏற்பட்டுப் போச்சு.''

''வேறே வழி?''

''அது மாத்திரமில்லை. ரொம்ப ரொம்ப அவசியம்னு நாம நினைச்சதெல்லாம் வாஸ்தவத்திலே எத்தனை அற்பமானதுன்னு புரிந்தது இங்கே வந்தப்புறம்.

''இத்தனை ஜனங்கள் படற கஷ்டத்தைப் பார்த்தப்புறம் நான் அத்தனை ஆரோக்கியமா இருபத்தி எட்டு வருஷங்கள் வாழ்ந்ததே நான் செஞ்ச அதிர்ஷ்டம்னு தோணறது. கையும் காலும் நன்ருயிருக்கிறப்போ அதோட முக்கியத்துவம் யாருக்குத் தெரிகிறது? ஆனு நமக்கெல்லாம் ஒரு பிடிவாதம் வேணும் மிஸ்டர் மித்தல். விதி உங்களைக் குரூரமா வஞ்சித்து விட்டதுன்னு உங்களுக்குத் தோணறதா? அதன் வஞ்சனைக்குப் பயந்து அடிபணிஞ்சு போயிடக்கூடாதுன்னு உங்களுக்கு ஒரு பிடிவாதம் ஏற்படணும். இந்தப் பாதி உடம்பை வெச்சுண்டே எப்படிக் குடும்பத்துக்குப் பாரமில்லாம இருக்கலாம்னு தீவிரமா யோசியுங்கள். ஏதாவது வழி தெரியாமல் போகாது. டாக்டர்கள் சொல்றதிலே நம்பிக்கை வெச்சு எல்லாப் பயிற்சியும் சோம்பலில்லாமல் பண்ணினு நிச்சயம் பலன் இருக்கும்! மெள்ள மெள்ள.''

''தாங்க்யூ மிஸ்டர் ஹரி!''

ஹரி யோசனையுடன் வார்டை ஒட்டிய பால்கனிக்குச் சென்றுன். பார்வையாளர்கள் வீடு திரும்பும் சமயம். ஆஸ்பத்திரி காம்பவுண்டு ஜே ஜே என்றிருந்தது.

அந்தக் கும்பலில் சாந்தி ஒரு நர்ஸுடன் சிரித்தபடி போவது தெரிந்தது. தனக்கு மிக மிக ஆப்தமான ஒருத்தியைப் பார்க்கிற மாதிரி அவனுள் ஒரு நெகிழ்வு ஏற்பட்டது. சட்டென்று மனசில் ஒரு உணர்வு தாக்கிற்று.

'இன்னும் ஒரு மாதம்தான் இவளுடைய சினேகிதம் நமக்கு. அதற்குப் பிறகு என்ன செய்யப் போகிறேம்?' (தொடரும்)





10% சிறப்புத் தள்ளுபடி, 10-10-81 முதல் 26-10-81 வரை
ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு

இந்திய-சோவியத்நல்லுறவுக்கு மிக அதிகமாகப் பணியாற்றியுள்ளவர் பூர்ணம் சோமசுந்தரம். ஆம். பூர்ணம் விசுவநாதன், எழுத்தாளர் உமாசந்திரன் ஆகியோரது சகோதரர்தான்! அவரது திடீர் மறைவு ஏற்படுத்தியிருக்கும் அதிர்ச்சியும் துயரமும் அவரை அறிந்தவர்கள் மனத்திலிருந்து மறைய நீண்ட காலம் ஆகும்.

இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்தபோது ராணுவ சேவையில் பர்மாவுக்கு அனுப்பப்பட்டார் சோமு. பர்மா ஜப்பானியப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளானபோது சோமு ராணுவக் கைதியானார். எப்படியோ ஜப்பானியரின் கடுமையான காவலுக்குத் தப்பிப் பினாங்கு சென்றார். நேத்தாஜியின் தலைமையில் இந்திய தேசீய ராணுவம் உருவாகியிருந்த சமயம். அதன் கொள்கைகளை விளக்கும் தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்கும் வாய்ப்பு கிடைத்தது. பின்பு ஆஜாத் ஹிந்த் ரேடியோவின் பாங்காக் நிலையத்தில் ஹிந்தி அறிவிப்பாளராகப் பணியாற்றினார்.

ஜப்பானியர் நேசப் படைகளால் முறியடிக்கப்பட்டுப் பின்வாங்க நேர்ந்தபோது, பிரிட்டிஷ் படைகள் பாங்காக்கைக் கைப்பற்றி, நேத்தாஜியுடன் ஒத்துழைத்த இந்தியர்களைக் கைது செய்தது. சோமுவின் துடிப்பான இயல்பு அந்தக் கைதி முகாமிலிருந்தும் இரண்டு பஞ்சாபி நண்பர்களுடன் அவரைத் தப்பியோடச் செய்தது. பர்மாக் காடுகள் வழியே பல இன்னல்களைச் சந்தித்துக் கால்நடையாகவே இந்தியாவை வந்தடைந்தார். ஏற்கனவே பிரிட்டிஷ் இந்தியப் படையில் இருந்தவராதலால் பூனாவிலிருந்த தமது ராணுவ அதிகாரிகளுக்குத் தான் தாய்நாடு திரும்பி வந்திருப்பதைப் பற்றி எழுதியதும் பூனாவுக்கு வரும்படி உத்தரவு வந்தது. பூனாவில் இறங்கியதும் கைது செய்யப்பட்டார். பிறகு ஐ. என். ஏ. வீரர்கள்மீது டெல்லி செங்கோட்டையில்

Madras to Moscow

வழக்கு நடந்து முடிந்ததும் விடுதலையாகிச் சென்னைக்குத் திரும்பி வந்தார்.

ராஜாஜியின் வியாசர் விருந்து நூலை ஹிந்தியில் மொழி பெயர்க்கும் பணியை ஏற்றார். சிறந்த முறையில் இரண்டே மாதத்துக்குள் பணியை முடித்துவிட்டார்.

○ பூர்ணம் சோமசுந்தரம் தம் ரஷ்ய மனைவி குழந்தைகளுடன்.

டெல்லியில் ஹிந்திப் பத்திரிகை ஒன்றில் உதவி ஆசிரியராகப் பணியாற்ற அழைப்பு வரவே அங்கு சென்றார். முதலில் 'அமர் பாரத்' பத்திரிகையிலும் பிறகு 'நவபாரத் டைம்ஸ்' பத்திரிகையிலும் பணியாற்றினார்.

ஹிந்தி நாளிதழ்களில் தமிழரான சோமுவின் சேவை! 'வியாசர் விருந்து' ஹிந்தி மொழிபெயர்ப்புக்கென அவருக்கு ராஷ்டிரபதி பரிசும் கிடைத்தது. அமரர் கல்கியின் 'கள்வனின் காதலி'யை 1953ல் ஹிந்தியில் மொழிபெயர்த்துப் பெருமை அடைந்தார்.

பின்னர் மாஸ்கோவில் Progress Publishing House என்ற வெளியீட்டு நிறுவனத்தின் தமிழ்ப் பிரிவில் நியமனம் பெற்றுச் சென்ற போதிலும் வெகு விரைவிலேயே ரஷ்ய மொழியிலும் அவர் நல்ல தேர்ச்சி அடைந்து விட்டதால் அந்த நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளிலும் தொடர்பு கொண்டு தம் பங்கைச் செய்தார். ரஷ்யா சென்ற ஆறு ஆண்டுகளுக்குள்ளேயே ரஷ்ய அரசு அவருடைய பணியைப் பாராட்டிக் கௌரவித்தது. அவருடைய ஒத்துழைப்பால் தமிழ்-ரஷ்ய அகராதி உருவாயிற்று. அவர் கடைசியாகத் தொடர்பு கொண்டிருந்த முக்கியமான பணி ஹிந்தி-ரஷ்ய அகராதி தயாரிப்பு.

ஒரு சமயம் அவர் தாய்நாட்டுக்கு வந்திருந்தபோது திருப்பதி உண்டியலில் இரண்டாயிரம் ரூபாய் போட்டார். சென்னை திரும்பும்போது ''என்ன வேண்டுதல்?'' என்று கேட்டார் சகோதரர் உமாசந்திரன்.

''மாஸ்கோவில் ஒரு இளம் பஞ்சாபி தம்பதி. ஒரு தடவை இளைஞனுக்குக் கடுமையான ஜுரம். ஜன்னி கண்ட நிலை. நான்தான் அவனை அருகிலிருந்து ராப்பகலாகக் கவனித்துக் கொண்டேன். அவன் இளம் மனைவி தவித்த தவிப்பு என் நெஞ்சை உலுக்கியது. இளைஞனுக்கு நோய் தீர்ந்து உடல் நலம் திரும்ப ஏழுமலையானைப் பிரார்த்தித்துக் கொண்டேன்'' என்றார் சோமு.

எல்லாரும் தனக்காக, தன் குடும்பம் அல்லது நிறுவனத்துக்காக நேர்ந்து கொள்வார்கள். சோமு ஒரு நண்பனுக்காகப் பிரார்த்தித்துப் பெருந் தொகையைக் காணிக்கையாகவும் செலுத்தினார். அதுமட்டுமல்ல, தம் பிரார்த்தனை பற்றி சோமு அத்தம்பதியிடம் பிரஸ்தாபிக்கவே யில்லை!

உமாசந்திரன் கூறக் கேட்டு எழுதியவர்:
குட்டி கிருஷ்ணன்

அந்தி நேரத்து உதயங்கள்

வாஸந்தி

17

அன்றைக்குக் காலையில் எழுந்திருக்கும் போதே மனசில் ஒரு உற்சாகம் ஏற்பட்டது. மூன்று மாதங்களில் எத்தனை பெரிய வித்தியாசம் ஏற்பட்டு விட்டது என்று நினைக்கையில் சாந்திக்கு ஆச்சரியமாக இருந்தது. காலையில் எழுந்த நேரத்திலிருந்து ஆஸ்பத்திரிக்குக் கிளம்பும்வரை ஒரு கலக்கம் இருக்கும். நடராஜன் எதற்குக் கத்துவானே எந்தச் செய்கையை, வார்த்தையைத் தப்பாக எடுத்துக்கொள்வானே என்கிற எதிர்பார்ப்புடன் கூடிய கலக்கம். அவனுக்குக் கோபம் வராதபடிக்குப் பார்த்துப் பார்த்து அவசரமாகச் செய்து முடிக்க வேண்டிய டென்ஷன். அதனால் மார்பில் ஏற்பட்டுக் கொண்டிருந்த படபடப்பும் தலை சுற்றலும்!

இப்பொழுது படபடப்பு இல்லை. தலைச் சுற்றல் இல்லை. புதிதாக ஒரு தென்பு வந்த மாதிரி இருக்கிறது.

வீட்டிலிருந்து துரத்தப்பட்டு அவள் ஆஸ்பத்திரியில் இருந்த முதல் நாலைந்து நாட்கள் அவளுக்கு மகாக் கூச்சமாக இருந்தது. பார்வைகளையும் கேள்விகளையும் சந்திக்கவே தயக்கமாக இருந்தது. வாஸ்தவத்தில் எந்தவிதமான பார்வைக்கும் கேள்விக்கும் யாருக்குமே நேரமில்லை என்று விரைவில் புரிந்தது. அவள் பிரிந்து வந்தது எந்த விதமான அசம்பாவிதமோ அவமானமோ இல்லை என்று சுற்றுப்புறம் சர்வ சாதாரணமாக எடுத்துக்கொண்டதை நினைக்கையில் எத்தனை பெரிய பிரமைகள் மனசில் இருந்தன என்று புரிந்தது. இப்பவும் மனத்தின் அடியில் ஒரு கசப்பு இருந்தது. அனுபவித்த அனுபவங்களின் நினைவு. ஆயுசு உள்ள வரையில் அது எங்கோ தன்னுள் ஒட்டிக்கொண்டிருக்கும் என்று தோன்றிற்று.

''ஏய் சாந்தி இன்னும் ரெடியாகல்ல நீ?''

அவள் பரபரப்புடன் தன்னைத் தயாரித்துக்கொண்டாள். இந்த ஹாஸ்டலுக்கு வந்த பிறகு இந்த உடம்புக்கு வந்துவிட்ட சோம்பறித்தனத்தை நினைத்து வெட்கமாக இருந்தது. முன்பு வீட்டில் எத்தனை வேலை செய்து விட்டு அரை மணி நேரம் பஸ்ஸில் பிரயாணம் செய்து சரியான நேரத்துக்கு டியூட்டிக்கு வந்துவிடுவோம்! இப்போது ஒரு பொறுப்பும் இல்லாமல் டிரஸ் செய்துகொண்டு கிளம்புவதற்கு யாரோ ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. இந்த உடம்பும் மனசும் ஒரு பூதம். அதற்கு வேலை கொடுத்துக்கொண்டிருக்கா விட்டால் சோம்பல் வந்துவிடும். ஆஸ்பத்திரி வேலை போதாது. பின் வேறு என்ன வேலை செய்ய முடியும்?

அவள் அவசரமாகக் காலை உணவை முடித்துக்கொண்டு சக நர்ஸ்களுடன் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து ஓ.பி.டி.யின் கூட்டத்தைத் தாண்டிக்கொண்டு விரைந்தாள்.

''சாந்தி!''

அவள் சட்டென்று திரும்பினாள். ரமா சோப்ராவைப் பார்த்துச் சந்தோஷமான ஆச்சரியத்துடன் அருகில் சென்றாள்.

''என்ன ரமா? எப்படி இருக்கே? உடம்பு சரியில்லையா?''

''எனக்கில்லே. ரமேஷுக்கு. ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட். கை விரல்லே ஃப்ராக்சர்.''

''வேறே ஒண்ணும் காயமில்லையே?''

''இல்லே. நல்லவேளை!''

ரமா தயக்கத்துடன் சாந்தியைப் பார்த்தாள்.

''என்ன ஆச்சு சாந்தி உனக்கு? ஆளேயே காணும்?''

சாந்தி புன்னகைத்தாள். மற்ற நர்ஸ்கள் அவளுக்காகக் காத்திருந்தார்கள்.

''அது ஒரு கதை. இப்ப எனக்கு நேரமில்லை ரமா. டாக்டரைப் பார்த்தப்புறம் உனக்கு நேரமிருந்தால் ரிஹாபிலிடேஷன் வார்டுக்கு வரயா?''

''வரேன். இன்னிக்கு லீவுதான் ரெண்டு பேருக்கும். உங்கிட்ட எத்தனையோ விஷயங்கள் பேசணும் சாந்தி.''

''வா!''

சாந்தி நகர்ந்தாள். மார்பு வேகமாக அடித்துக் கொண்டது.

ரிஹாபிலிடேஷன் வார்டுக்குப் போய் ரெஜிஸ்டரில் கையெழுத்துப் போட்டுப் புன்னகை மாறாமல் ஒவ்வொரு பேஷண்டாகப் பார்வையிடுகையில் ரமாவின் தயக்கப் பார்வை எதிரில் நின்றது.

'உங்கிட்டே எத்தனையோ விஷயங்கள் சொல்லணும் சாந்தி.!'

'என்ன விஷயங்கள்? சொல்லப் போகிறாளா? கேட்கப் போகிறாளா? நடராஜனைப் பற்றியா?'

இரண்டு பேர்களுக்கு 'ஸ்பாஞ்ச் பாத்' கொடுத்து முடிப்பதற்குள் நடராஜன் எப்படி இருக்கிறான் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் திடீரென்று கட்டுப்படுத்த முடியாமல் போயிற்று. மனப் பிரமைகள் எல்லாம் மீண்டும் மனத்தை அடைத்துக் கொண்ட மாதிரி இருந்தது.

ரமா வார்டுக்குள் வந்ததும் மறுபடியும் இதயம் அடித்துக் கொண்டது. பத்து நிமிஷத்தில் வருகிறேன் என்று பேஷண்டிடம் சொல்லிவிட்டு அவள் ரமாவின் கையைப் பிடித்துக்கொண்டு பால்கனிக்குச் சென்றாள். இருவரும் சட்டென்று என்ன பேசுவது என்று தோன்றாமல், பிறகு ரமா கேட்டாள்.

''ஏன் வீட்டை விட்டுப் போயிட்டே, சாந்தி?''

''போகல்லே துரத்தப்பட்டேன்!''

ரமாவின் கண்கள் வியப்புடன் அகல விரிந்தன.

சாந்தி மெல்லிய குரலில் சுருக்கமாகச் சொன்னாள். மீண்டும் அவற்றை நினைவுகூர்கையில் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் துளிர்த்தது.

''என்னாலே நம்பவே முடியல்லே சாந்தி! நான் பக்கத்திலே இருக்கேன், உன் கஷ்டத்தை எப்படி வெளியே காண்பிக்காமே இருந்தே?''

''இதெல்லாம் காண்பிக்கக் கூடிய விஷயமில்லே ரமா. என்னை விரட்டக்கூடிய அளவுக்கு நான் என்ன தப்புப் பண்ணினேன்னு புரியல்லே.''

ரமா ஒரு விநாடி அவளை உற்றுப் பார்த்தாள்.

''நடராஜனுக்குத் தங்கை இருக்கிறாளா?''

''இல்லை.''

''தங்கைன்னு சொல்லிண்டு யாரோ ஒருத்தி உங்க வீட்டிலே இருக்கா.''

சட்டென்று ஓர் அதிர்வுடன் சாந்தி அவளைப் பார்த்தாள்.

ஓ, இதுதான் காரணம். ஒரு அபாண்டப் பழி சுமத்தி அவளைத் துரத்தினதற்கு இதுதான் காரணம்.

அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு புன்னகைத்தாள்.

''அது தங்கையில்லே ரமா!''

''எங்களுக்கும் சந்தேகம்தான். நீ எவனோடேயோ ஓடிப்போயிட்டேன்னு நடராஜன் கூசாமச் சொல்றார் சாந்தி!''

அவமானத்தில் முகம் சிவந்து போயிற்று. தன்னுள் எழுந்த சீற்றத்தை அவள் அவசரமாக விழுங்கினாள்.

''சொல்லட்டும் ரமா — இனிமேல் என்னை எந்தச் சொல்லும் பாதிக்காது.''

எப்படிச் சமாதானப்படுத்துவது என்று யோசிப்பவள் போல் ரமா நின்றாள்.

''எனக்காக வருத்தப்படாதே ரமா. நான் ரொம்ப நிம்மதியா இருக்கேன். வாஸ்தவத்திலே அவரைப் பத்தி நினைக்கக் கூட நேரமில்லே எனக்கு!''

இதை நம்ப முடியாதவளாய் ரமா பேசாமல் நின்றாள்.

''எங்களாலே ஏதாவது உதவ முடியுமானால் செய்யறோம் சாந்தி. சமாதானத்துக்கு வழியே இல்லையா?''

''எனக்குத் தோணலே ரமா. பைத்தியக்காரி மாதிரி பத்து நாளைக்குத் தினமும் வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினேன். கொஞ்சம் கூட மனுஷத்தனமே இல்லாமே துரத்திட்டார். இன்னொருத்தியோட ஏற்பட்ட சிநேகிதத்தினாலே வேணும்னே என்னை நடத்தை கெட்டவள்னு சொல்லித் துரத்தியிருக்கிற புருஷன்கிட்டே எனக்குச் சமாதானம் ஏற்படும்னு நினைக்கிறியா? அத்தனை மானம் கெட்டவள் நான்னு நினைக்கறயா? எதுக்காக நான் திருப்பி அவர் கிட்டே போகணும்?''

உணர்ச்சி வசப்பட்டு அவள் முகம் சிவந்து போயிற்று. கண்களில் நீர் தளும்பப் பார்த்தது. ரமா ஒரு அவசரத்துடன் அவள் தோளைத் தட்டினாள்.

''டேக் இட் ஈஸி சாந்தி. நீ சொல்றது வாஸ்தவம்தான். அவர் கிட்டத் திரும்பிப் போய்ச் சேர்ந்துக்கறதிலே ஒண்ணும் அர்த்தமில்லே. நீ சம்பாதிக்கிறே. சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லே. எதுக்குப் பயப்படணும்?''

ரமா போய் வெகு நேரத்துக்கு மார்பு படபடத்துக் கொண்டிருந்தது. இதற்காகவா இதற்காகவா என்று ஆத்திரம் பொங்கிப் பொங்கி எழுந்தது. எத்தனை கேவலமானவன் நீ! நீயெல்லாம் எதற்குக் கல்யாணம் என்கிற பந்தத்தில் நுழைந்தாய்? உனக்கு மனைவி ஒரு கேடா? கணவன் என்கிற லேபிள் வேறு? அந்த லேபிளில் உன்னை மறைத்துக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்வாயா?

''**சா**ந்தி!''

அவள் சட்டென்று சுயநினைவுக்கு வந்தாள். ஹரியின் பார்வையில் கனிவும் கருணையும் தெரிந்தன.

''குட் மார்னிங் ஹரி!''

அவன் அவளைக் கூர்ந்து பார்த்தான்.

''என்ன விஷயம் சாந்தி?''

''ஒண்ணுமில்லையே?''

''விஷயம் இருக்கு. இன்னிக்கு அரை மணி லேட். யாரோடயோ பால்கனியில் சூடாப் பேசிண்டிருந்ததைப் பார்த்தேன்.''

அவள் சிரித்தாள்.

''சூடான சமாசாரம்தான். என் புருஷன் வேறொருத்தியை வீட்டிலே கொண்டு வந்து வச்சிருக்காராம். அதனாலே தான் எனக்கு அங்கே இடமில்லாமப் போச்சுன்னு இப்பப் புரியுது.''

''நஷ்டம் அவருக்குத்தான்; உங்களுக்கில்லை.''

''அப்படியெல்லாம் நான் என்னை ஏமாத்திக்கத் தயாராயில்லே! ஹரி நான் எதிலேயோ தோத்துப் போனேன்னுதான் தோணறது.''

''ஸ்டுப்பிட்!''

அவள் பதிலே சொல்லாமல் கண்களில் எட்டிப்பார்க்க முயன்ற கண்ணீரை விரட்டித் தன் வேலைகளைக் கவனித்தாள். என்ன நேர்ந்து விட்டது நமக்கு என்று திகைப்பு ஏற்பட்டது.

அவனிடம் திரும்ப வேண்டும் என்கிற அடிமனத்தின் எண்ணம் அவனுடன் வாழ வேண்டும் என்கிற வேட்கையினால் ஏற்பட்டதல்ல. தான் மோசமானவள் இல்லை என்று சமூகத்துக்கு ஊர்ஜிதப்படுத்தவே...

அதற்கு இப்பொழுது வழியில்லாமல் போய்விட்டது.

ஊர்ஜிதப் படுத்தித் தான் என்ன சாதிக்கப் போகிறேம்?

இந்தமாதிரி ஆண்களை என்னசெய்யலாம்? இத்தனை கேவலமாக நம்மை நடத்தினவனை என்ன மாதிரி அவமானப்படுத்தலாம்?

அவளுக்கு மறுபடியும் ஆத்திரம் கட்டுக் கடங்காமல் போயிற்று.

''நீங்கள் உங்களைச் சாந்தப்படுத்திக் கொள்ள வேண்டும் சாந்தி!''

திடீரென்று அவள் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

''உங்களுக்குப் புரியாது என் கோபம், என் துக்கம்.''

அவன் அவள் கையை மென்மையாகத் தட்டினுன் சமாதானமாக.

''ஆணும் பெண்ணும் ஒத்த மனசாய் ஜோடி அமையறது ரொம்பக் கஷ்டமான சமாசாரம் சாந்தி. எத்தனையோ பொருத்தம் பார்த்து உங்களுக்குக் கல்யாணம் நடந்திருக்கும். கடைசியிலே இப்படி நிற்க வேண்டி வந்திருக்கு! நான் மாயாவை மன சார நேசிச்சேன். ஆனுல் அவளோடு சந்தோஷமாய் ஆயுசு முழுக்க இருந்திருப் பேனுன்னு இப்பச் சந்தேகமா இருக்கு. இந்த விபத்துக்கப்புறம் மனுஷ சுபாவம் பளிச்சுன்னு புரியறது.''

''என் சுபாவத்தைப் பத்தி என்ன புரிஞ் சிருக்கு?''

''ஒரு மட சாம்பிராணின்னு புரிஞ்சிருக்கு. ரொம்ப மூடத்தனமான மனசு. நான் பிரியம் வைக்கிற அளவுக்கு நீயும் வைன்னு எதிர்பார்க்கிற....''

''எதிர்பார்க்கிறது தப்பா?''

''ரொம்பத் தப்பு. அனுபவத்திலே சொல்றேன். சாந்தி, மாயாவுக்குக் கல் யாணம் ஆகியிருக்கும் நேத்து!''

''ஓ!''

சட்டென்று அவளுள் ஒரு பச்சாத்தாபம் எழுந்தது. நம்மைவிட இவனுடைய நிலைமை மோசம் என்று தோன்றிற்று.

அவள் மென்மையாகச் சிரித்தபடி சொன்னுள்.

''நம்ம ரெண்டு பேருக்கும் ஒரு விசித்திர மான பொருத்தம் இருக்கு ஹரி.''

''ரொம்ப ஆச்சரியமான பொருத்தம்.''

ஹரி சில விநாடிகள் அவளைப் புன்னகை யுடன் பார்த்தான்.

''சாந்தி நான் உங்களை ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்களே?''

''என்ன விஷயம்?''

''நீங்க பழசைப் பத்தி யெல்லாம் மறந் திடணும். நீங்க பட்ட கஷ்டங்கள், பட்ட அவமானங்கள், ஆண் வர்க்கத்துக்கு மேலே பொதுவா ஏற்பட்டிருக்கக் கூடிய அவ நம்பிக்கை எல்லாத்தையும் மறந்துடணும். நீங்க தனியா இருக்கிற வரைக்கும் உங்க ளாலே மறக்க முடியாது. அதனுலே...''

கருத்து : கீதா

''அதனுலே?''

அவன் தயங்கினுன்.

''தப்பா நினைக்க மாட்டீங்களே!'' என் றுன் மறுபடியும். பிறகு தொடர்ந்தான்:

''இன்னும் ஒரு மாசத்திலே நான் டிஸ் சார்ஜ் ஆகிப் போயிடுவேன். என்னைச் சேர்ந்தவர்கள் யாருமில்லை எனக்கு. என் னேடு நீங்க தங்குவீங்களா? தோழமை கொடுப்பீங்களா?''

அவள் திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள். 'நீயா இப்படிக் கேட்டாய்?' என்கிற மாதிரி திடீரென்று இனம் புரியாத ஒரு சீற்றம் ஏற்பட்டது. எத்தனை கேவலமாகப் போய்விட்டது நம் நிலைமை என்கிற ஆக் ரோஷம் எழுந்தது. (தொடரும்)

✖ அனிதா: சாவித்திரி
✖ எஸ். வி. சேகர்: மார்க்கண்டேயன்

காதலயம்

கதை வசனம்: ஜி.கே.

காட்சி 1

மார்க்கண்டேயன் வீடு

காமேஸ்வரன் (புத்தகம் படிக்கிறார்): 'கற்பில் சிறந்தவளே சாவித்திரி! இன்னும் ஒரு வரம் கேள் என எமன் கூற, சாவித்திரியும் நான் கற்புடையவளாகப் பல குழந்தைகளைப் பெற்று என் மாமன் என் குழந்தைகளுடன் விளையாட வேண்டும். எனக் கேட்க, எமதர்மன் சற்றும் யோசிக்காமல் ''தந்தேன்'' எனக் கூற சத்யவான் உயிர் பெற்று எழுந்தான். எமன் எமலோகம் திரும்பினான்.

(ஹாஹா... என்ற சிரிப்புச் சத்தம் கேட்க காமேஸ்வரன் திரும்பிப் பார்க்க வாசற்படியில் எமன் நிற்கிறான்.)

✖ போலீஸ் சீனு: தூமகேது
✖ சிவசங்கரன்: சித்ரகுப்தன்
✖ எஸ். வி. சேகர்: மார்க்கண்டேயன்

முழு நீள நாடகம்

எமன்: என்ன பெரியவரே, பதறுகிறீர்கள்!

காமே: யார் நீ?

எமன்: இதோ இப்போது படித்தீரே. அந்த ஏமாந்துபோன எமன் நான்தான். முட்டாளைப் பெற்ற மூடனே. எங்கே உனது மகன்?

காமே: ஏதோ ஆபீஸ்லே டிராமா காம்பெடிஷன்னு போயிருக்கரன். காப்பி சாப்பிட றீங்களா? என் உயிரைத்தான் எடுக்க வந்திட்டீங்களோன்னு நினைச்சு நான் ரொம்பப் பயந்துட்டேன்.

எமன்: நான் உமது உயிரை எடுக்கத்தான் வந்துள்ளேன். உமது பையனிடம் கூறிவிட்டு எடுத்துச் செல்லலாம் என்றுதான் உமது பையனைத் தேடுகிறேன்!

காமே: எனக்கு என்னடாப்பா எமா அப்படி வயசாயிடுத்து? 60 வயசெல்லாம் ஒரு வயசா? அமெரிக்காவிலே எல்லாம் இந்த வயசிலே மறுபடியும் மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கிறா. ஆனா நான் பையனை நெனைச்சு ரெண்டாந்தரம் கூட கல்யாணம் பண்ணிக்காம இருக்கேன்!

எமன்: கிழவரே, நீர் நிறையப் பாவம் செய்து இருக்கிறீர். உம்மை விட மாட்டேன்.

காமே: அப்படி என்னப்பா பாவம் நான் செய்துட்டேன்?

எமன்: ம்... உழைத்துச் சம்பாதித்துக் கொண்டு வரும் உன் மகனின் சம்பளத்தை யெல்லாம் பிடுங்கிக் கொண்டு அவனுக்குச் செலவுக்குக் கூடப் பணம் தருவதில்லையாமே, இது பாவமில்லையா?

காமே: ஹும், உனக்கு என் பையனைப்
ித் தெரியாது. அவன் கெட்ட கேட்டுக்கு
வேறே!

எமன்: அது உமக்குத் தெரிந்து விட்டதா?

காமே: தெரியாம என்ன? என் பையன்
ிர் வீட்டுத் தமிழ் வாத்தியார் பொண்ணு
வித்திரியை லவ் பண்றான்.

எமன்: பொல்லாத கிழம் நீர். ஆமாம்,
ப்படி அவர்கள் காதலிப்பதில் தவறு
ன்ன?

காமே: அந்தத் தமிழ் வாத்தியார்கிட்டே
ன்னு செய்ய என்ன இருக்கு? ஒரு சிலப்
திகாரப் புத்தகம், ஒரு திருக்குறள். ஏதா
து கேட்டால் அப்பனும் பொண்ணும்
டுக்கு மொழியிலே மாணவுக்கு மான காண
க்கு காணன்னு எதையாவது பேசறாங்க.

(சாவித்திரி வருகிறாள்)

சாவி: மாமா, யாரு இவன்? முரட்டு
சையெல்லாம் வெச்சிண்டு?

காமே: இவன்தான் எமதர்மன்.

சாவி: மாமா, உங்க பையன் மார்க்
ண்டேயன் இருக்காரே. அவருக்கு மீசையை
ச்சுக் கிரீடத்தைத் தலையிலே கவுத்தின
ப்படித்தான் இருக்கும்.

எமன்: சாவித்திரி நீ எதுக்கு இங்கே
க்கறே? மார்க்கண்டேயன் இல்லேன்னு
ீட்டுக்குப் போக வேண்டியதுதானே?

சாவி: என்னய்யா ஒரயடியா வெரட்டறே.
யோவ், அவரோட உயிரை எடுத்துக்கிட்டுப்
போறதுக்கு ஏதாவது அத்தாட்சி வெச்
ிருக்கியா?

எமன்: வாரண்டோடயா வரவேண்டும்?
பெண்ணே விலகிப் போ. உன் காதலை
வெறுக்கும் இவருக்காக நீயேன் வாதாடு
கிறாய்?

சாவி: இன்னிக்கு வெறுக்கலாம். நாளைக்கு
அவர் ஒத்துப் போயிட்டா? என்ன இருந்
தாலும் அவர் என் மாமனார்!

காமே: அடாடா! என்ன பக்தி, அம்மாடி,
சாவித்திரி! என்னை எமன் எடுத்துச் சென்
றாலும் நீயே எனக்கு மாட்டுப் பெண்.

சாவி: என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க
மாமா.

எமன்: என்னையும் (இருவரும் நமஸ்கரிக்கிறார்கள்.)

காமே: நல்லா இருங்க. ஆமா, எமன்
கையிலே ஏது ஸீக்கோ வாட்ச்? டேய்,
யாருடா நீ? (அடிக்கக் கையை ஓங்குகிறார்.)

மார்க்கண்டேயன்: அப்பா, அப்பா,
நான் தான்பா!

காமே: ஏண்டா பாவி, மார்க்கண்டேயா.
இது என்னடா வேஷம்?

மார்க்: ஆபீஸ்லே சத்தியவான் சாவித்திரி
டிராமா. நான்தான் எமன். உனக்குக்
காமிக்கலாமேன்னு மேக்கப் கலைக்காம அப்
படியே வந்தேன். சும்மா உன்னைப் பய
முறுத்தினேன். இவ வந்து கெடுத்துட்டா.

சாவி: சாரி. நான் உங்களை மரியாதை
இல்லாம அவன் இவன்னு பேசிட்டேன்.

மார்க்: பரவாயில்லே சாவித்திரி எங்க
அம்மாகூட அப்பாவை அப்படித்தான்
சொல்லுவா.

காமே: சரி சரி. நான் நாராயணசாமி வீடு
வரைக்கும் போயிட்டு வர்றேன். உப்புமா
பண்ணி வச்சிருக்கேன். எடுத்துப்போட்டுண்டு
சாப்பிடு. (போகிறார்)

(இரண்டு கிங்கிரர்கள் உள்ளே வந்து
சாவித்திரி, மார்க்கண்டேயன் பேசுவ
தைக் கவனிக்கிறார்கள்.)

சாவி: டிராமாவிலே உங்க ஆக்டிங்கைப்
பார்த்து நல்லா அப்ரிசியேட் பண்ணினாங்
களா?

மார்க்: ஓ! எவ்வளவு பாராட்டு தெரி
யுமா? நாலு பொண்ணுங்க வந்து என்னைச்
சுத்தி நின்னு...

சுந்தா: எமன்
பாலன்: பீமகேது
எஸ். வி. சேகர்: மார்க்கண்டேயன்

சாவி: துடப்பைக் கட்டையை எடுங்க...

மார்க்: ஆட்டோகிராப் கேட்டாங்க. வேற ஒண்ணுமில்லே.

சாவி: தொடப்பம் சுத்திப் போட. திருஷ்டிப் பட்டிருக்குமே!

மார்க்: நான் பயந்தே போயிட்டேன்.

சாவி: சீக்கிரம் மேக்கப்பைக் கலேச்சிடுங்க. பசியோட இருப்பீங்க. பால் பாயசம் வச்சிருக்கேன். போய் எடுத்துண்டு வரேன்.

மார்: சீக்கிரம் வந்துடு. அப்பா வரதுக்குள்ளே. அப்புறம் அவர் வேறே பங்கு கேப்பார்! (சாவித்திரி போகிறுள்)

தூமகேது: இவன்தானே மார்க்கண்டேயன்.

பீமகேது: நம் தலேவர் சொன்ன அட்ரஸ் இதுதான். அவர் கூறிய அடையாளமும் சரியாத்தான் இருக்கு.

எம: அவனுக்கு நாம் நம்மைக் காட்டுவோம்.

(இருவரும் மந்திரம் ஜபிக்க மார்க்கண்டேயனுக்குத் தெரிய வருகிறுர்கள்.)

மார்: ஏண்டா எங்கப்பா கிட்டே காமிக்கணும்னு நான்தான் வேஷத்தைக் கலேக்காம டாக்சி பிடிச்சிண்டு வந்தேன். நீங்க ஏண்டா என் வீட்டுக்கு வந்து நிக்கறேள்?

(இருவரும் சிரிக்கிறுர்கள்)

மார்: ஏண்டா சிரிக்கிறீங்க? இப்படித் தலேயிலே கொம்போடபஸ்ஸிலேயா ஏறி வந்தீங்க? வெட்கமா இல்லே?

✕ பாலன்: பீமகேது

தூம: நாங்கள் உன் உயிரை எடுக்க வந்திருக்கிறேும்.

மார்: என் உயிரை எடுக்கவா? இன்னுமா? ஏற்கனவே ரிகர்ஸல்லே தான் உயிரைஎடுத்திட்டீங்களே!

பீம: ரிகர்ஸலா? ஏதோ உளறுகிறுய்!

மார்: இங்கே தூய தமிழ்லே பேசு! டிராமாவிலே மட்டும் எவ்வளவு அடிச்சிண்டாலும் மெட்ராஸ் பாஷையிலே பேசித் தொலேக்கிறே!

தூம: டிராமாவா? என்ன பிதற்றுகிறுய்? நாங்கள் உண்மையான கிங்கிரர்கள். எம லோகத்திலிருந்து வருகிறேும்.

மார்: என்னது, எமலோகமா?

பீம: தூமகேது! என்ன இவனிடம் பேச்சு? பாசக் கயிற்றை வீசு!

மார்: இதுவா பாசக் கயிறு? ஆமா இன்னெரு முனே எங்கே?

தூம: எமதர்மர் பிடித்துக் கொண்டிருக்கிறுர். வா, போகலாம்.

மார்: யோவ், எனக்கு இன்னும் 24 வயசுகூட ஆகலேய்யா.... பிளீஸ்!

பீம: இந்தியனுடை சராசரி வயசே 21 தான். 3 வருஷம் ஜாஸ்தியாவே வாழ்ந்துட்டே. வா, போகலாம்!

காட்சி 2

(மேல் உலக நீதி மன்றம். சித்ரகுப்தன் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்கிறுன். அவன் எதிரில் ஒரு பெரிய பேரேடு வைக்கப்பட்டிருக்கிறது. இரு கிங்கரர்கள் வருகின்றனர்.)

தூம: பிரபோ! நீங்கள் குறிப்பிட்ட நபரின் உயிரை எடுத்து வந்து விட்டோம்.

சித்ர: அப்படியா, சந்தோஷம். கொண்டு வாருங்கள் அந்த உயிரை.

(கிங்கரர்கள் மார்க்கண்டேயனே இழுத்து வருகிறுர்கள்.)

சித்ர: வா, மானிடப் பதரே, வா.

மார்: யோவ், பதர் கிதர்னே நடக்கறதே வேறே. பதர்னு என்னய்யா அர்த்தம்?

சித்ர: அதெல்லாம் எனக்குத் தெரியாது. மேல் லோகத்தில் வம்ச பரம்பரையாக மானிடர்களே இப்படித்தான் அழைக்கிறேம்!

தூம: ஜடகேச, மடவாச கரு எருமை வாசன் எரிபுருவ பெரு மீசை உயர் விசுவ ரூபன், கதியென்று விதியென்று கயிறுக் கொண்டு அயராத தேவன், அவன் சிவனேர்க்கு நேசன். மண்ணிலே காலன், விண்ணிலே தேவன், காலத்திலேமூலன், ஞானத்தின் சீலன், கண்டவர் விண்டிட, விண்டவர் கண்டிட, எம தருமராசன் பராக், பராக்!

மார்: அடேடே, நல்ல மெக்ஸிகன் ரிதம் மோட ஜோரா இருக்குதய்யா. எங்கே இன்னெரு தடவை சொல்லு!

தூம: சும்மாயிருய்யா. தெனமும் ஒரு தடவை பராக் சொல்றதுக்குள்ளேயே உயிர் போற மாதிரி மூச்சு வாங்குது. எமதர்மர் வேற ஒரு வார்த்தை குறைஞ்சாலும் அங்கேயே நின்னுண்டு வரமாட்டேன்னு அடம் பிடிக்கிறுர். தப்பித் தவறி ஏதாவது மாத்திச் சொல்லிட்டா இன்னும் ரெண்டு கொம்பு மொளேக்கட்டும்னு சபிச்சிடுறுர். பாரு இன்னும் அங்கேயே நிக்கறுர். ஏன் தெரியுமா மறந்து போய் ஒரு பராக் விட்டுட்டேன். மூணு தடவை கரெக்டா சொல்லியாகணும் அவருக்கு... எம தர்ம ராசன் பராக் பராக் பராக்.

(எமதர்மன்வந்து ஆசனத்தில் அமர்கிறுர்.)

எமன்: தும் கோன் ஹை?

மார்க்: என்னய்யா எமன் இந்தியிலே பேசறுர்?

சித்ர: பிரபோ. இவன் தமிழன்.

எமன்: ஓஹோ இவனேப் பார்த்ததும் ஏதோ பம்பாயைச் சேர்ந்த சேட் என்று எண்ணி விட்டேன்!

மார்: அதானே பார்த்தேன். உனக்கு ஹிந்தி தெரியுமா?

எமன்: இந்தி மட்டுமா? உலகத்து பாஷை எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். சப்போஸ் துபாய்லேந்து ஒருத்தனே இங்கே கொண்டு வந்தா அவனிடம் தமிழிலா கேட்க முடியும்? சரி, விசாரணே ஆரம்பமாகட்டும்.

சித்ர: நீ உன்னேப் பெற்று எடுத்த தாய்க்கு அவளுடைய கடைசிக் காலம் வரைக்கும் சோறு போடாமல் கஷ்டப்படுத்தினுய்!

ார்: யோவ், உன் பேரு என்ன சொன்னே? திரகுப்தனு சமுத்ர குப்தனு என்னமோ சான்னியே?

சித்ர: சித்ர குப்தன்!

மார்: எனக்கு வர கோவத்துலே உன்னை ங்கி ஒரு அறை குடுக்கலாமான்னு இருக்கு. ன் பெத்த தாய்க்குச் சோறு போடலியா? ன்யா, உனக்கு மூளை இருக்கா? எனக்குத் ாயே கிடையாது!

சித்: ம்... நீ என்ன டெஸ்ட் ட்யூப் பியா?

மார்: அப்படிச் சொல்லலேய்யா. என்னைப் ரசவித்த உடனே என் தாய் என் முகத்தைக் டப் பார்க்கல்லே. இறந்து போயிட்டா.

சித்ர: கொடுத்து வைத்தவள் உன் தாய். ன் முகம் பார்க்கும்படியாவா இருக்கு? டுக்கிட்டு) ஹா, என்ன சொன்னாய்? உன் ாய் சிறு வயதிலேயே இறந்து விட்டாளா? அதிர்ச்சி) சித்ரகுப்தனின் லெட்ஜரில் ழையா? (எமன் தலையின் மேல் கத்தி ற்று இறங்குகிறது.)

மார்: ஏன் தப்பு வராது? தெருவுக்கு ரு சித்ரகுப்தன் இல்லேன்னாலும் அட்லீஸ்ட் ரு நாட்டுக்கு ஒரு சித்ரகுப்தனாவது இருக் ணும். அகில உலகத்துக்கும் நீயே சித்ர ப்தனாக இருக்கணும்னு ஆசைப் பட்டா ப்படித்தான் குழப்பம் வரும்!

சித்ர: நீதானே 41, எல்லையம்மன் கோவில் தியில் இருக்கும் மார்க்கண்டேயன்?

மார்: புதுசா, பழசா?

எமன்: அது என்ன, புதுசா, பழசா?

மார்: கார்ப்பரேஷன்லே இப்போ ல்லார் வீட்டு நம்பரையும் மாத்தியிருக் ாங்க. என் வீட்டு நம்பர் பழசு 16. துசு 41. நீ எந்த 41ஐச் சொன்னே?

சித்ர: அய்யய்யோ. புது நம்பர் காடுத்த விஷயம் இதுவரைக்கும் என் ாதுக்கு எட்ட வில்லையே?

மார்: ஏன்யா நீ என்ன ரிப்பன் பில்டிங் லயா இருக்கே? அங்கே போட்ட ஆர்டர் ன் காதிலே எப்படிய்யா விழும்?

சித்ர: நண்பனே, நான் கொண்டு வரச் சான்னது உன்னையல்ல. பழைய நாற்பத்து ன்றில் இருக்கும் மணி கண்டனை. குழப்பம் நர்ந்து விட்டது. மன்னித்துவிடு.

மார்: ம்... ஏதோ மாம்பலத்திலே ருந்து சைதாப்பேட்டைக்கு அழைச்சுக் ட்டு வந்த மாதிரி பேசறியே. எப்படிய்யா ரும்பப் போவேன்? லோகத்தையே மாத் ட்டியேய்யா!

எமன்: ம்... சித்ரகுப்தா என்ன் இது சிறு ழப்பம்?

மார்: சிறு குழப்பமா? பெருங் குழப்பம். ளை மாத்தித் தூக்கிக்கிட்டு வந்துட்டாங் ய்யா!

எமன்: ஆ! எமதர்மன் ஆட்சியில் தர்மம் வறிவிட்டதா!...

(தன் தலைக்கு மேல் இருக்கும் கத்தியை எமன் பார்க்க அது ஏகமாக ஆடுகிறது.) இது வேறு ஒரு பயமுறுத்தல்! (சிங்கா தனத்தை விட்டு எழுந்து வந்து சித்ரகுப் தன் நாற்காலியில் அமர்கிறான் எமன்.)

சித்ர: பிரபோ! என்ன இது! தாங்கள் இங்கு அமர்வதோ!

எமன்: என்ன இங்கு அமர்வதோ? நீ செய்த பிழைக்கு என் தலையிலேதானேய்யா கத்தி விழும்? வேண்டுமானால் நீ சென்று அந்த நாற்காலியில் உட்கார்.

மார்க்: யோவ். நீங்க யாரு வேணு மானாலும் அந்த நாற்காலியில் உட்காருங்க. என்னைத் தப்பாக் கொண்டு வந்திட்டீங்க. அதைக் கவனிங்கன்னா நாற்காலிச் சண்டை போட்டுக்கிட்டு இருக்கீங்களே!

எமன்: ம்... பொறு மானிடனே, பொறு. இவனை என்ன செய்யலாம் சித்ரகுப்தா?

(கிங்கரன் ஓடி வருகிறான்.)

தூம: பிரபோ! பரமசிவன் ரவுண்ட்ஸுக்கு வருகிறார்!

எமன்: அய்யய்யோ! இவர் வேறு நேரம் கெட்ட நேரத்தில் ரவுண்ட்ஸ் வருகிறாரே. இந்த விஷயம் தெரிந்தால் அவ்வளவுதான். நான் தொலைந்தேன்!

மார்: பரமசிவனா? அவர் தானே உங்க டிபார்ட்மெண்ட் சீப்?வரட்டும். அவர்கிட்டே நியாயம் கேட்கிறேன்!

பீம: பிரபோ! பரமசிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து லேசாகப் புகை வந்து கொண்டிருக்கிறது. அது எந்நேரமும் திறக்கலாம்.

எமன்: மார்க் கண்டேயா, நான் உன்னிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து அவ ரிடத்தில் எதையும் கூறி விடாதே. அவர் ரவுண்ட்ஸ் முடிந்து போனதும் உனக்கு ஏதாவது வழி செய்கிறேன்!

✖ போலீஸ் சீனு: தூமகேது

மார்: பிராமிசா?

எமன்: பிராமிஸ்! (கையிலடித்துத் தரு கிறார்.)

(சிவன் வருகிறார்.)

சிவன்: எமதர்மா? என்ன இது? உன் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்தி சற்று இறங்கி ஆடிக்கொண்டிருக்கிறது!

எமன்: ஆமாம், நீலகண்டரே. ஏனோ தெரியவில்லை. அந்தக் கத்தி சில நாளாகவே ஆடிக் கொண்டிருக்கிறது. கயிறு நைந்து விட்டது போலும்!

சிவன்: இங்கு ஏதோ அதர்ம வாடை வீசுகிறதே, அது ஏன்?

எமன்: அதர்ம வாடையா? இருக்காதே! ம்.... ஹாங்... அது வந்து, இதோ இந்த மானிடப் பதர் பூலோகத்தில் நன்றாகப் பட்டை அடித்து விட்டு வந்திருக்கிறான்....

சிவன்: என்ன எமதர்மா? உன் பேச்சின் போக்கே சரியில்லை. பட்டை அடிப்பது அதர்மமா? ம்... நீரில்லா நெற்றி பாழ் என்ற பழமொழிய மறந்தனையா? எனக்கு விருப்பமான விபூதிப் பட்டை நெற்றியில் அடித்துக் கொள்வது அதர்மமா?

எமன்: அபசாரம். மகா பிரபோ. நான் சொன்னது அந்தப் பட்டையல்ல. பட்டைச் சாராயம். அதாவது மதுபானம்.. சோம. பானம் அருந்தி யிருக்கிறுன்!

சிவன்: ம்... சரி சித்ரகுப்தா! அக்கௌண்ட்ஸ் எல்லாம் சரியாக உள்ளதா? ம்... கவனமாக இருக்க வேண்டும் எந்தச் சமயத்திலும் இன்டர்னல் ஆடிட்டிங் வரும். நாம் நம் டிபார்ட்மெண்டில் குறையில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சித்ர: இதோ இந்த உயிர் கூட எண்ட்ரி ரிகார்டில் பதிவாகி உள்ளது. என் லெட்ஜரிலும் போஸ்ட் செய்து கொண்டு விட்டேன்.

சிவன்: ம்... சரி... லெட்ஜரைக் காட்டு கையொப்பம் போட்டு விட்டுச் செல்கிறேன். ம்... எமதர்மா... நான் சென்று வருகிறேன். தர்மம் குலையாமல் பார்த்துக்கொள்!

எமன்: சரி பிரபோ! (சிவன் போகிறுர்) ம்... அப்பாடி ஒரு வழியாகப் பிழைத்தேன். நீ நெற்றிக் கண்ணைப் பார்த்தாயா, எப்படி இருந்தது?

மார்: பம்பரா ஓடுது! கே. பாலசந்தர் சொந்தப் படம்! எஸ். பி. முத்துராமன் டைரக்ஷன் அடுத்த படம் பாக்யராஜ் பண்ருரு.

✖ ரமணி: நாரதர்

எமன்: அடச்சே! அதைக் கூறவில்லே. சிவனின் நெற்றிக் கண்ணைப் பார்த்தாயா? புகை வந்ததோ?

மார்: புகையும் வரலே, ஜலமும் கொட்டலே ஏன்யா இப்படிப் பயந்து சாகறே?

எமன்: சரி, சரி! சித்ரகுப்தா! தவறுதலாய்க் கொண்டு வந்த —இவனைப் பூலோகம் அனுப்பிவிடு!

சித்ர: மன்னிக்க வேண்டும் மகாப் பிரபோ! இவன் பிராமணன். அதனுல் அனுப்ப இயலாது.

மார்: என்னய்யா இங்கேயும் பார்வர்ட் கம்யூனிட்டி ப்ராப்ளமா? நான் என்னய்யா காலேஜ் அட்மிஷனு கேக்கறேன்? பூலோகத்துக்குத் திரும்பத்தானேய்யா போகணும்னு சொல்றேன்.

எமன்: என்ன சித்ரகுப்தா, இவனைத் திருப்பி அனுப்புவதற்கும் இவன் பிராமணன் என்பதற்கும் என்ன சம்பந்தம்?

சித்ர: பிராமணர்கள் வீட்டில் நீண்ட நேரம் பிணத்தை வைத்திருப்பது இல்லே. தவிரவும் இவன் தந்தை ரேசுக்கு நேரமாகிவிட்டது என்று இவன் இறந்த உடனேயே அவசரம் அவசரமாய்க் கிரியைகளை முடித்து விட்டார்; இவன் உடலை எரித்து விட்டார்!

மார்: உடம்பை எரிச்சிட்டாங்களா!... யோவ், பாவிகளா! நான் என்னய்யா செய்வேன்? அய்யய்யோ, சாவித்திரி! உன்னை விட்டுப் பிரிந்து வந்து விட்டேனே! யோவ்! நீ நாசமாப் போக! சிவன் இருக்கிற இடம் எங்கேயா இருக்கு? கம்ப்ளெயிண்ட் கொடுக்கப் போறேன்! அது பேர் என்ன?... ஹ....கைலாசம்! எங்கேயா அது இருக்கு?

எமன்: பொறு மானிடனே, பொறு... கோபம் கொள்ளாதே. சித்ர குப்தா என்ன செய்வது?

சித்ர: சற்று அவகாசம்கொடுங்கள் சுவாமி! ஏதேனும் வழி தெரிகிறதா என்று பார்ப்போம்.

எமன்: ஆமாம் மார்க்கண்டேயா! என்னை நம்பு! உனக்குக் கட்டாயம் ஒரு வழி செய்கிறேன்.

மார்: இன்னிக்கு ரஜினி படம் ரிலீஸ்யா. டிக்கட் ரிசர்வ் பண்ணி யிருக்கேனே!

எமன்: கவலேப்படாதே என்னிடம் உள்ள வீடியோவில் பார்க்கலாம்!

காட்சி 3

(தேவலோக நீதிமன்றம்)

எமன்: குட்மார்னிங், மார்க்கண்டேயா!

மார்க்: குட்மார்னிங்!

எமன்: நன்னு தூங்கினுயா?

மார்க்: என்னய்யா இது நரக வேதனே. ஒரு கொசு கூடக் கடிக்கவில்லேயே! கொசு கடிக்காம தூக்கமே வரலே!

பீம: சைலன்ஸ்! சைலன்ஸ்! சைலன்ஸ்!

எமன்: விசாரணே ஆரம்பமாகட்டும்!

தூம: எம். எல். ஏ. வேதாசலம்! எம்.எல். ஏ. வேதாசலம்! எம். எல். ஏ. வேதாசலம்!

சித்ர: ம். சொல்லு. நான் சொல்வது எல்லாம் சத்தியம். சத்தியத்தைத் தவிர வேறு எதுவும் இல்லே.

எம். எல். ஏ.: நான் தமிழன். சத்தியம் என்பது வடமொழிச் சொல். நான் தமிழில் தான் பேசுவேன். தமிழ் என் மூச்சு.

மார்: மூச்சு. அது நின்றுதானே இங்கே வந்திருக்கீங்க.?

சித்ர: சரி. தமிழிலேயே சொல்லு!

எம். எல். ஏ.: பிராமிசா நான் சொல்வது உண்மை, உண்மை தவிர வேறில்லே!

எமன்: உமது தொழில் என்ன?

எம்.எல்.ஏ.: எம். எல். ஏ.

எமன்: எம். எல். ஏ. என்ருல்?

எம். எல். ஏ.: எம்.எல்.ஏ. என்ருல்... எம்.எல்.ஏ. தான். அதுக்கு முழுசா என்ன சொல்றதுன்னு எனக்குத் தெரியாது.

எமன்: உமது படிப்பு என்ன?

எம்.எல்.ஏ.: பி.ஏ. கெமிஸ்ட்ரி.

மார்: சத்தியம்! சத்தியம்! சத்தியம் பேச வேண்டும்!

எம்.எல்.ஏ.: சரி. ஐந்தாம் கிளாஸ் தமிழ் மீடியம்.

எமன்: எம்.எல். ஏ. ஆவதற்கு முன்னுல் என்ன தொழில் செய்து கொண்டிருந்தீர்?

எம்.எல்.ஏ.: பால் வியாபாரம்.

எமன்: ஓஹோ! ஏன் மார்க்கண்டேயா! உங்கள் ஊரில் எம். எல். ஏ. ஆகவேண்டுமானுல் முன்னுல் பால் வியாபாரம் செய்ய வேண்டுமா?

மார்: பால் வியாபாரம் மட்டும் இல்லே. பொட்டு, புண்ணக்கு விக்கலாம். எவர்

அன்பளிப்பு

சில்பி யின் தெய்வச் சித்திரங்கள் 6

புனிதத் திருத்தலங்களில் அருள்பாலிக்கும் தெய்வத் திரு உருவங்கள்.* காஞ்சிப் பெரியவர் ஆசிபெற்ற 'சில்பி' வரைந்துள்ள ஓவியங்கள். பல வண்ணங்களில் ஆர்ட் காகிதத்தில் அச்சிடப்பட்டவை. பூஜை அறையில் நாள்தோறும் போற்றி வணங்குவதற்கு உகந்தவை.



புதிய டெபாஸிட் செய்பவர்களுக்கும் அறிமுகம் செய்பவர்களுக்கும் ஸ்ரீராம் வழங்கும் அன்பளிப்பு.

நீங்கள் டெபாஸிட் செய்யும் ஒவ்வொரு ரூ. 5000க்கும், இந்த அன்பளிப்பு உண்டு. (அறிமுகம் செய்வோர், ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிட்., ஸ்ரீராம் சிட்ஸ், ஸ்ரீராம் ஃபைனான்ஸ், ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஏதேனும் ஒன்றில் அங்கத்தினராக இருக்கவேண்டும்.) நீங்கள் விரும்பினால், உங்களுக்கு உரிய அன்பளிப்பை இந்தியாவில் எந்த விலாசத்திற்கும், எங்கள் செலவில் பதிவு தபாலில் அனுப்பி வைக்கிறோம். (வெளிநாடுகளுக்கு விமான தபால் கட்டணம் தனி.)

1. கவர்ச்சி மிகு வட்டி:

வட்டி விகிதம் / டெபாஸிட் காலம்	மாதாமாதம் வட்டி பெற	6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற	மறு முதலீட்டுத் திட்டத்தில் மொத்தமாக வட்டி பெற
1 ஆண்டு	14.0%	15.0%	15.5%
2 ஆண்டுகள்	14.5%	16.0%	17.5%
3 ஆண்டுகள்	15.0%	17.0%	20.0%

2. மறு முதலீட்டுத் திட்டம்

இத்திட்டத்தில் (Re-investment plan) உங்களது ரூ. 3,125, மூன்றே ஆண்டுகளில் ரூ. 5,000 ஆக வளர்கிறது. இதில் டெபாஸிட் செய்வோர்க்கும் இவ்வன்பளிப்பு உண்டு. உங்களை அறிமுகம் செய்பவரும் இந்த அன்பளிப்புப் பெறலாம்.

3. நம்பிக்கை—நாணயம்—அநுபவம்—உங்கள் டெபாஸிட்டிற்கு உத்திரவாதம்

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் நிறுவனம் பதிவு செய்யப் பெற்ற பார்ட்னர்ஷிப் (Registered Partnership) நிறுவனம். இந்த நிறுவனம் மோட்டார் வாகனங்களைத் தவணை முறையில் வாங்குபவர்களுக்குக் கடன் உதவி செய்கிறது. இத்துறையில் பதினைந்து வருட அனுபவமும் திறமையும் மிக்கவர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

ADWAVE/SI/1724

* 1. ஸ்ரீ குருவாயூரப்பன். 2. ஸ்ரீ முருகன், திருப்பரங்குன்றம். 3. ஸ்ரீ பங்காரு காமாட்சி, தஞ்சாவூர். 4. ஸ்ரீராமர், பதராசலம். 5. ஸ்ரீ கோமதி அம்மன், சங்கரன்கோவில். 6. ஸ்ரீ அபிராமி அம்மன், திருக்கடையூர். (அளவு: 23 செ.மீ x 19 செ.மீ.)

SHRIRAM INVESTMENTS
YOUR FINANCIAL FRIEND-IN-NEED

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

தலைமை அலுவலகம்: 123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை 600 001. போன்: 28545/37890/21425.

கிளை அலுவலகம்: 54, வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை 600 017. போன்: 441074 (செவ்வாய் விடுமுறை)

பெங்களூர் கிளை: செல்லர் ஃபிளோர், பிரவுனம்மா டவர், 70/1, மிஷன் ரோடு, பெங்களூர் 560 027. போன்: 27006.

சில்வர் பாத்திரம் விக்கலாம். காய்கறி பழம் விக்கலாம். ஏன், சாராயம் கூட விக்கலாம். ஆனு படிச்சிருக்கக் கூடாது!

எமன்: நீர் எந்தக் கட்சியைச் சேர்ந்த எம். எல். ஏ.?

மார்: எதையாவது ஏடாகூடமாக் கேட்டு வெப்பியே. பாருங்க எப்படித் திருதிருன்னு முழிக்கிருர். யோவ் சொல்லேன்யா!

எம். எல்.ஏ.: தலைவர் அவர்களே...! நான் எந்தக் கட்சியைச் சேர்ந்தவன் என்று கேட்டீர். நான் 1980 ஜனவரி 1ம் தேதியிலிருந்து ஜனதா. 3ம் தேதியிலிருந்து இந்திரா காங்கிரஸ். 7ம் தேதியிலிருந்து பாரதீய ஜனதா. 11ந் தேதியிலிருந்து தி.மு.க.வுக்கு வந்தேன். 20ம் தேதி பெங்களூர் சென்றபோது 2 நாட்கள் அர்ஸ் காங்கிரசில் இருந்தேன். பிறகு 22ந் தேதி த. நா. கா. கா. காங்கிரசுக்கு வந்தேன். பிப்ரவரி 12ம் தேதி காலை மீண்டும் தி.மு.க. 12ம் தேதி மாலையே அ.தி.மு.க. மீட்டிங் போனேன்.

எமன்: போதும் நிறுத்து மானிடனே. எனக்குத் தலையைச் சுற்றுகிறது.

எம். எல். ஏ. நாங்கள் சரித்திரம் படைத்தவர்கள். பரந்த நோக்கம் கொண்டவர்கள். ஜாதி, மத, கட்சி வேறுபாடுஇல்லாதவர்கள்.

⌘ அனிதா: சாவித்திரி
⌘ எஸ். வி. சேகர்: மார்க்கண்டேயன்

எமன்: ம். சித்ரகுப்தா. இவர் கணக்கில் நீ எழுதிவைத்துள்ள பாவ புண்ணியக்கணக்குகளைக் கூறு.

சித்ர: மன்னிக்க வேண்டும் பிரபோ. இவர் கணக்கில் பாவம் எதுவும் இல்லை. எல்லாம் புண்ணியம்தான்.

மார்: யோவ், நல்லாப் பாருய்யா. வீட்டு நம்பர் சரியாப் பார்த்துத்தானே கூட்டிக் கிட்டு வந்தீங்க?

எமன்: ஏன் அப்படி ஒரு சந்தேகம், மார்க் கண்டேயா?

மார்: பின்னே? அரசியல்வாதிங்கருரு. பாவமே இல்லேன்னு சொல்றுரே!

எமன்: புண்ணியங்களைப் படி சித்ர குப்தா!

சித்ர: இதோ பிரபு. இவர் தேர்தல் காலத்தில் மக்களிடம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கிருர்.

எமன்: ஆஹா! அப்படி ஒரு அருமையான எம். எல். ஏ.வா இவர்!

மார்: யோவ், சித்ரகுப்தா! இந்தாளு என்ன வாக்குறுதி மக்களுக்குக் கொடுத்தார்? சொல்லு!

சித்ர: நான் எம்.எல்.ஏ. ஆனுல் என்னுல் இயன்ற அளவு பலபேருக்கு வேலை வாங்கித் தருவேன்னு வாக்குறுதி கொடுத்தார். அதை நிறைவேற்றி வைத்துள்ளார். பல குடும்பங்கள் பிழைக்கின்றன. அது புண்ணியமில்லையா?

மார்: யார் யாருக்கு வேலை வாங்கி வெச்சார்? அவரு சித்தப்பா, அவரு மச்சான், அவரு மாமன், அவரு தங்கச்சி, அவரு அண்ணன் இவங்களுக்குத்தான். தவறிப்போய் உறவே இல்லாத ஒரு பொண்ணுக்கு வேலை வாங்கிக் கொடுத்தாரு. ஆனு அது இப்போ இவரோட மூணுவது செட் அப்.

எமன்: சித்ரகுப்தா! மார்க்கண்டேயன் கூறுவது நியாயம்தான். இவன் தண்டிக்கப்பட வேண்டியவனே. நரகத்துக்கு அனுப்பு.

எம். எல். ஏ.: எமரே, எங்களுக்கு நரகமும் ஒண்ணுதான், நகரமும் ஒண்ணுதான். 'தம்பியுடையான் படைக்கு அஞ்சான்' என்று அண்ணு கூறியிருக்கிருர். நாங்கள் எதற்கும் அஞ்சோம். அண்ணு அன்று என்னிடம் சொன்னுர்....

அண்ணுவின் குரல்: தம்பி, மார்க்கண்டேயா! அவனைச் செவிட்டில் ஒரு அறை விடப்பா. எதையாவது செய்துவிட்டு என் பேரிலே பழியைப் போடுகிறுன். இவன் மட்டும் இல்லை. இவனை மாதிரி ரொம்பப் பேர் பூலோகத்திலே சுத்தறுங்க.

எமன்: ம்... இவனை நரகத்துக்கு இட்டுச் செல்லுங்கள்!

பீம: டைரக்டர் ஜாரதி ஜால்ரா ஜாரதி ஜால்ரா, ஜாரதி ஜால்ரா!

(டைரக்டர் வருகிறுர்.)

எமன்: ஜாரதி ஜால்ரா! உமது தொழில் என்ன?

டைரக்: சினிமா டைரக்டர், கதை வசனகர்த்தா, எடிட்டர், காமிரா, மியூசிக், பாடலாசிரியர், கதாநாயகன்....

எமன்: அது சரி. நீர் இந்த சினிமாத் துறைக்கு வர்றதுக்கு முன்னுல் என்ன செய்து கொண்டிருந்தீர்?

டைரக்: விவசாயம்.

எமன்: அதுக்கும் சினிமாத் துறைக்கும் என்ன சம்பந்தம்?

டைரக்: ஒரு தடவை நான் உழுதுண்டு இருக்கும்போது கலப்பையிலே ஏதோ சிக்கிக் கொண்டது. என்னனு பார்த்தேன். அது ஒரு பிலிம் ரோல். தமிழ்ப் பட உலகமே என்னை அழைக்கிறது மாதிரி தோணிச்சி. பீல்டிலே குதிச்சிட்டேன். ஒரு பேட்டியிலே இப்படித்தான் எழுதியிருக்காங்க.

எமன்: விவசாயத்துக்கும் படத் தொழிலுக்கும் என்ன சம்பந்தம்?

மார்: அங்கே கலப்பை பிடிச்சவன் இங்கே கிளாப்புக் கட்டையைப் பிடிக்கிறுன். அங்கே விதையைச் செலக்ட் பண்ணினு இங்கே கதையை செலக்ட் பண்றுன். அங்கே பம்பு செட்டு போட்டுத் தண்ணி அடிச்சாரு இங்கே ரூம் போட்டுக்கிட்டுத் தண்ணி அடிக்

கிருரு. அங்கே யூரியாவுக்கு அலேஞ்சாரு. இங்கே ஏரியாவுக்கு அலேஞ்சாரு....

எமன்: சந்தோஷம். உழைத்து முன்னுக்கு வந்திருக்கிருர். ம்... இவன் ஆற்றலே நாம் மதிப்போம். சித்ரகுப்தா! இவரது பாவ புண்ணியங்களேக் கூறு.

சித்ர: இவர் தமது பல பாடல்களால் உலக மக்களே நல்வழிப்படுத்தியிருக்கிருர்.

மார்: இவர் பாட்டாலே நல்வழிப்படுத்திஞரா? பாட்டா அது! சகிக்காது.

டைரக்: இந்த மாதிரி சின்னப் பசங்களுக்கெல்லாம் தத்துவப் பாட்டுன்னுப் பிடிக்காதுங்க!

எமன்: அப்படியா? என்ன அப்படித் தத்துவப் பாடல்?

டைரக்: ரத்தத்தின் நிறம் சிவப்பு, பாலின் நிறமோ வெளுப்பு! கடல் நீர் என்பது கரிக்கும், ஆனுல் சர்க்கரையோ எப்பவும் இனிக்கும் இதுதான் ஆண்டவன் படைப்பு!

எமன்: இந்த மாதிரிப் பாடல்கள் நானே எழுதுவேனே ம்... இவன் எவ்வளவு புண்ணியம் செய்தவனுய் இருந்தாலும் சரி. இந்தப் பாடலுக்காகவே இவன் தண்டிக்கப்பட வேண்டியவன். இவன் எழுதிய பாட்டுக்களே லட்சம் தடவை இவனே கேட்க வேண்டும். இதுதான் சரியான தண்டனே!

சுருளி குரல்: அதுமட்டும் இல்லீங்க. நான் செத்துப்போயிட்டேன்னு என் பேமண்டைக் கொடுக்காம ஏமாத்திட்டாருங்க!

எமன்: அப்படியா? சித்ரகுப்தா! இவனேத் தண்டித்தே தீர வேண்டும். கொண்டு போங்க எண்ணெய்க் கொப்பரைக்கு!

டைரக்: எண்ணெய்க் கொப்பரையா! ஹையா! எண்ணெய்க் கொப்பரை!

(மகிழ்ச்சியோடு போகிருர்)

எமன்: மார்க்கண்டேயா! இது என்ன? மானிடர்கள் எண்ணெய்க் கொப்பரை என்ருல் பயப்படாமல் மகிழ்ச்சி கொள்கிருர்களே!

மார்: எங்க ஊர்லே எண்ணெய்ங்கிறதே கிடைக்கிறதில்லே. கிடைச்சாலும் யானேவிலே குதிரை விலே. அதனுலே எண்ணெய் தேய்ச்சுக்கிற பழக்கத்தையே எல்லாரும் விட்டுட்டாங்க. இங்கே எண்ணெய்க் கொப்பரையிலே முழுகணும்னு சொன்னதும் சந்தோஷம் பிச்சுக்கிட்டுப் போவுது!

சித்ர: பிரபோ! என்ன இது! இவன் கூறுகிருன் என்பதற்காக எல்லோரையும் நரகத்துக்கே அனுப்புகிறீர்கள்! கேவலம் மானிடன் பேச்சுக்கு மதிப்புத்தருவதா?

மார்: யோவ். என்னய்யா குறைஞ்சு போச்சு மானிடனுக்கு? இன்னிக்குச் சாயங்காலம் சொர்க்கத்திலே தேவர் ஹால்லே சர்வ கட்சி மீட்டிங்! அனேத்துக் கட்சித் தலேவர்களும் எனக்கு ஆதரவு தந்து பேசுவாங்க. அப்புறம் தெரியும் உன் நிலேமை. அதுக்கப்புறம் சொல்லு இந்த மானிடனேப் பத்தி!

காட்சி 4

எமன்: சித்ரகுப்தா! நிலேமை மோசமாகி விட்டது. சர்வ கட்சி மீட்டிங் பற்றி சர்வேஸ்வரன் காதில் விழுந்தால் நம் கதி என்னுவது?

சித்ர: நம் கதி என்று கூறுதீர்கள். என் கதி என்று கூறுங்கள். மந்திரிகள் மாறினுலும் செக்ரட்டரிகள் மாறுவதில்லே. எமதர்மன் மாறினுலும் சித்ரகுப்தன் மாறுவதில்லே.

எமன்: எல்லாம் உன்னுல் வந்ததுதான். ஆள் மாருட்டம் செய்து விட்டாய். மாட்டிக்கொண்டு விழிக்கிறேன்.

(நாரதர் வருகிருர்.)

நார: நாராயண! நாராயண!

எமன்: யாரது? ஓ நாரதரா! இங்கு எதற்கு வந்தீர்? இங்கே ஏற்கனவே இருக்கிற கலகம், கலவரம் போதாதா?

நார: இல்லே எமதர்மா. உனக்கு உதவத்தான் வழி தேட வந்திருக்கிறேன். மார்க்கண்டேயன் உன் கண்ணில் விரலே விட்டு ஆட்டுகிருனுமே!

எமன்: அதற்குள் அது உமக்குத் தெரிந்து விட்டதா? அவ்வளவுதான். நான் செத்தேன்.

நார: எல்லார் சாவுக்கும் காரணமாயிருக்கும் நீ சாவதா?

சித்ர: பிரபோ! இப்படிச் செய்தால் என்ன? ஆக்கும் கடவுளான பிரம்மாவிடம்



✕ ராஜாமணி: எம். எல். ஏ.

நிலேமையைக் கூறி ஒரு உடலேப் படைக்கச் செய்வோம். அதனுள் மார்க்கண்டேயனேப் புகுத்திப் பூலோகம் அனுப்பி வைப்போம்!

எமன்: செய்யலாம் சித்ரகுப்தா. ஆனுல் பிரம்மா இப்போது இங்கு இல்லியே. அவர் டூர் போயிருக்கிருர். அவர் அஸிஸ்டெண்ட் வஜ்ரகும்பன்தானே சிருஷ்டியையே கவனித்துக் கொள்கிருன்!

நார: வஜ்ஜிரகும்பன்தானே ஆக்டிங் பிரம்மாவாக இருக்கிருன்? கவலேயை விடு எமதேவா! வஜ்ஜிரகும்பன் நம்ம சித்ரகுப்தனுக்கு நெருங்கிய நண்பன்தானே?

சித்ர: ஆமாம் பிரபோ! நானும் அவனும் ஒன்ருகத்தான் செக்ரடேரியல் கோர்ஸ் பரீட்சை எழுதினேம். செக்ரட்டரி போஸ்ட்டுக்கும் வந்தோம்.

நார: அதுவும் இல்லாமல் எமதேவா, வஜ்ஜிரகும்பன் ஒரு மாதிரி பேர்வழி! அன்பளிப்பு என்ருல் போதும். அசடு வழிவான்!

எமன்: அப்படியா? அப்படியானுல் வேலே சுலபமாக முடிந்து விடும். சித்ரகுப்தா! நீ வஜ்ஜிரகும்பனே இங்கு அழை!

சித்ர: அப்படியே பிரபு! (ஒரு பட்டனை அமுக்குகிறன்) வஜ்ஜிர கும்பா 'ப்ளீஸ் ரிப்போர்ட் டு எமதர்மா'ஸ் கோர்ட்!

(படீரென்று ஒரு வெடிச் சத்தம். வஜ்ர கும்பன் வருகிறன்.)

வஜ்ஜி: காலதேவனுக்குக் காலை வணக்கங்கள்.

எமன்: ம்... நல்லது. எனக்கு உன்னிடத்தில் ஒருசிறு உதவிதேவைப்படுகிறது. எனக்கு உடனடியாக டூப்ளிகேட்டாக ஒரு மானிட உடல் தேவை.

வஜ்ஜி: பிரபோ, அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன.

எமன்: என்ன அது?

வஜ்: பிரம்ம தேவன் எலும்புகளை எண்ணி வைத்து விட்டுப் போயிருக்கிறர். அவரை மீறி நான் ஏதாவது செய்தால் என் எலும்புகளை எண்ணி விடுவார். கோடவுனில் நான் உற்பத்தி செய்யப்போகும் உடல்களுக்குத் தேவையான எலும்புகளும் உயிர்களும் மூளைகளும் மட்டும்தான் கணக்காக உள்ளன. ஒன்றுதான் என்ஞல் அட்ஜஸ்ட் பண்ண முடியும்.

ஸ்ரீதர்: பரமசிவன்

எமன்: என்ன அது?

வஜ்: சதைகள்.

சித்ர: அது மட்டும் எப்படி சாத்தியமாகும்?

வஜ்: அதாவது ஒரு குழந்தையை 10 பவுண்ட் ஒரு குழந்தையை 7 பவுண்டு, ஒரு குழந்தையை 6 பவுண்டில் படைக்க வேண்டும் என்று குறிப்பில் இருக்கிறது. நான் அவை எல்லாவற்றையும் குத்து மதிப்பாக நாலரைப் பவுண்டில் படைத்துவிடுவேன். இப்படி எல்லாம் மிச்சம் பிடித்து வேண்டுமானல் சதையைத் திருடலாம். அப்படியும் ஏதாவது குறைந்தால் இங்குதானே சிபிச் சக்கரவர்த்தி இருக்கிறர். உதவுவார். உயிரோ தங்களிடம் இருக்கிறது. மூளை வேண்டுமானல் வைக்கலாம். இல்லாவிட்டால் வேண்டாம். ஆமாம் இவன் எங்கு பிறக்கப் போகிறன்?

எமன்: இந்தியாவில்!

வஜ்: அப்போது மூளை இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை!

சித்ர: பின் என்னதான் உனக்குத் தேவை?

வஜ்: எலும்பு மட்டும்தான் தேவை. அஸ்தி கிடைத்தாலும் போதும், எலும்புகளை சிருஷ்டித்து விடுவேன்.

எமன்: அதற்கு என்ன செய்யலாம்?

சித்ர: பூலோகத்தில் மார்க்கண்டேயனது அஸ்தியைக் கங்கையில் கரைக்க ஏற்பாடுகள் செய்து அவர்கள் வீட்டு சாஸ்திரிகள் வசம் ஒப்படைத்து இருக்கிறர்கள். அதை எடுத்து வரச் செய்து விடுவோம்.

எமன்: இதற்குள் அந்த ஐயர் அதைக் கங்கையில் கரைத்து இருந்தால்?

சித்ர: இல்லை பிரபோ. இன்னும் இரண்டு பேர் சாகக் கிடக்கிறர்கள். எல்லாருடைய அஸ்திகளையும் ஒரே செலவில் கரைத்து விடலாம் என்று இதை வைத்து இருக்கிறர்.

எமன்: அப்படி என்றல் உடனே மார்க்கண்டேயனது எலும்புகள் அடங்கிய கலசத்தை எடுத்து வர ஏற்பாடுகள் செய்.

காட்சி 5

எமன்: மார்க்கண்டேயா, இப்போது உனக்குச் சந்தோஷம்தானே?

மார்: ம். கலசத்தைக் கொண்டு வந்து மூன்று நாள் கழிச்சுத்தான் உடம்பைப் பண்ணி யிருக்கீங்க.

எமன்: மார்க்கண்டேயா, இனி நீ இஷ்டம் போல் உன் வீட்டுக்குச் செல்லலாம்.

மார்: தாங்க்யூ. சீஞ குஞ வரேன்யா. மிஸ்டர் நாரதரே வரேன். என்னைப் பார்க்காம எங்கப்பா துடிச்சுப் போயிருப்பார். என்னைத் தேடிக் கொண்டு இங்கேயே வந்தாலும் வந்துடுவார். அவ்வளவு பாசம்.

(புறப்படுகிறன். எதிரில் அவன் தகப்பனர், காமேஸ்வரன் வருகிறர்.)

காமே: மார்க்கண்டேயா!

மார்: பாத்தியா! நான் சொன்ன மாதிரி வந்துட்டார்! (திடுக்கிட்டு) ஹா! என்னப்பா நீ இங்கே வந்துட்டே?

காமே: என்னடா நான் என்னமோ வேணும்னு வந்த மாதிரி கேக்கறே. என் விதி முடிஞ்சு போச்சு. வந்துட்டேன்.

மார்: அடடா! வீட்டுச் சாவியை யார் கிட்டே கொடுத்திட்டு வந்திருக்கே?

காமே: வீட்டுச் சாவியா? என்னடா என்னமோ திரும்பிப் போறவன் மாதிரி கேக்கறே?

மார்: கரெக்ட். நான் திரும்பி நம்ம உலகத்துக்குப் போறேன். நம்ம தெருவில் பழைய 41ல் இருக்கிற மணிகண்டனைக் கொண்டு வர்றதுக்குப் பதிலா புது 41ல்ல இருக்கிற என்னை மாத்திக் கொண்டு வந்துட்டாங்க.

காமே: அப்படியா! இரு நானும் வந்துடறேன். யோவ் நானும் புது 41ஐச் சேர்ந்தவன்தான். வரேன். வாடா போகலாம்.

சித்ர: பெரியவரே. உம்மை நாங்கள் சரியாகத்தான் கொண்டு வந்துள்ளோம். உம்ம பையன் விஷயத்தில் ஏற்பட்ட குழப்பத்துக்குப் பிறகு எமலோகத்தில் போட்டோகிராபி டிபார்ட்மெண்ட் ஒண்ணு ஏற்படுத்திவிட்டோம். எல்லார் போட்டோவும் எங்களிடத்தில் உள்ளது. ஆகையால் நோ மிஸ்டேக்ஸ் ஹியர் ஆஃப்டர்.

மார்: சித்ரகுப்தா எங்கப்பா போட்டோவைப் பெரிசா என்லார்ஜ் பண்ணிக் குடுத்துடு. வீட்டிலே மாட்டிக்கிறேன். செலவு மிச்சம். சரிப்பா நான் வரேன்.

காமே: வருஷா வருஷம் ஒழுங்கா தெவசம் பண்ணுடா.

மார்: மிஸ்டர் எமதர்மரே. விசாரணையே தேவையில்லை. எங்கப்பாவைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். சொர்க்க லோகத்துக்கு அவர் லாயக்கில்லே! நான் வரேம்பா!

காமே: நீ அங்கே போய் என்னடா பண்ணப் போறே?

மார்: ஏன், நம்ம வீட்டை வாடகைக்கு விட்டுட்டு. ஒரு போர்ஷன்லே நானும் சாவித்திரியும் ஒற்றுமையாகுடும்பம் நடத்துவோம்.

காமே: ஹூக்கும்... பிளாட் பாரத்தில தான் நீ குடும்பம் நடத்தணும். நான் வீட்டை வித்தாச்சு!

மார்: என்னது! வீட்டை வித்தாச்சா? எதுக்கு வித்தே?

காமே: ரேசுக்குத்தான். ஒரு லெக்லே போச்சு. நல்ல வேளை. உன்னோட பி. எப். இன்சூரன்ஸ் எல்லாம் செட்டில் ஆச்சு. நாமினிங்கிற பேர்ல நான் வாங்கி அதையும் ரேஸ்லே விட்டாச்சு. ஏன் உன் எஸ். எஸ். எல். சி. புக்கைக்கூட வித்துட்டேன்.

மார்: என்ன விளையாடறியா? நான் செத்துப்போய் இன்னியோட நாலு நாள் ஆறது. அதுக்குள்ளே எப்படி இந்தியாவிலே பி. எப். இன்ஷூரன்ஸ் எல்லாம் செட்டில் ஆகும்?

காமே: நாலு நாளா? நீ செத்து இதோட நாலு வருஷம் ஆறது!

மார்: நாலு வருஷமா?

நார: மார்க்கண்டேயா! இங்கு ஒரு நாள் என்பது பூலோகத்திலே ஒரு வருஷம்.

மார்: நான் எங்கேயாவது ஒரு வேலையைத் தேடிண்டு வாடகை வீட்டிலேயாவது சாவித்திரியோட குடும்பம் நடத்தப் போறேன்.

காமே: அதுவும் முடியாதே.

மார்: ஏன்? அவளையும் வித்துட்டியா?

காமே: சாவித்திரி இப்போ எதித்தாத்திலே இல்லே. அவ மனசு சரியில்லாம மானு மானுவுக்கு மானுன்னு சொல்லி எங்கேயோ மதுரைப் பக்கம் போயிட்டா.

மார்: சாவித்திரியும் இல்லையா? அய்யயோ! இனிமே பூலோகம் போய் என்ன புண்ணியம்? யோவ், எமா! உன்னாலே தான்யா இவ்வளவு கஷ்டம். இப்பவே போய் பரமசிவன் கிட்டே சொல்லி உன்னை என்ன பண்றேன் பாரு!

நார: மார்க்கண்டேயா! கொஞ்சம் பொறு. இங்குள்ள பஞ்சகல்யாணி குதிரையை உங்கப்பாவுக்குக் காட்டு. அதற்குள் உனக்கு நான் ஒரு வழி செய்கிறேன்.

மார்: இன்னும் பத்து நிமிஷத்திலே வருவேன். அதுக்குள்ளே ஒரு ஏற்பாடு செய்யலே அவ்வளவுதான். நெற்றிக் கண் ஞாபகமிருக்கட்டும்!

(மார்க்கண்டேயன் அப்பாவை அழைத்துக்கொண்டு போகிறான்.)

நார: எமதர்மா, பிரம்மதேவன் ஒரே உருவம் போல் ஏழு உருவம் செய்கிறார் என்பது உனக்குத் தெரியும்—இல்லையா?

எமன்: உலகத்தில் ஒவ்வொருவரைப்போலயும் ஏழு பேர்கள் உள்ளார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். எஸ்.பி. முத்துராமன் ஒரு படம் கூட எடுத்தாரே.

சித்ர: காற்றினிலே வரும் கீதம்.

நார: கரெக்ட். மார்க்கண்டேயனைப் போல உருவம் கொண்ட மற்ற ஆறுபேர்கள் விதியைப் பற்றி சித்ரகுப்தா உனக்குத் தெரியுமே, சொல்லு பார்க்கலாம்!

சித்ர: இதோ ஒரு நொடியில் கூறிவிடுகிறேன். (பேரேட்டைப் புரட்டுகிறார்.)

சித்ர: பிரபோ! அந்த ஆறு பேரில் மூன்று பேர் ஏற்கனவே இறந்து விட்டனர். மீதி இருப்பவர்களில் ஒருவன் ஷியாங்காய் என்பவன். சீனாவில் இருக்கிறான். பாக்ஸ்டர் என்ற ஒருவன் இங்கிலாந்தில் இருக்கிறான். இன்னொருவன் பெயர்... ஆ... இதோ... கண்ணப்பன். அவன் மதுரை என்னும் ஊரில் மேற்கு ஆவணி மூல வீதியில் 81ம் நம்பர் வீட்டில் இருக்கிறான்.

நார: அப்படியா! அவன் விதியைக் கூறு.

சித்ர: சுவாமி, நாம் மிகவும் அதிர்ஷ்டலிகள்!

சாநார: என்ன சித்ரகுப்தா?

சித்ர: அந்தக் கண்ணப்பனின் விதி நாளையோடு முடியப் போகிறது!

நார: அப்படியா! எப்படி?

சித்ர: நாரதரே! நாளை அவன் ஏதோ வேலை நிமித்தம் சென்னை செல்ல இருக்கிறான். வழியில் திருச்சி அருகே அவன் பயணம் செய்யப்போகும் பஸ் கவிழப் போகிறது. அதில் அந்தக் கண்ணப்பன் நசுங்கிக் கூழாகி இறக்கப் போகிறான்!

சிவ சங்கரன்: சித்ரகுப்தன்

நார: வெரி குட்! அவனுக்குப்பதிலாக மார்க் கண்டேயனை அங்கு அனுப்பிவிடு.

எம்: ஆகா! அற்புதமான யோசனை. சித்ரகுப்தா! அந்தக் கண்ணப்பன் மதுரை அட்ரஸைக் கொடுத்து மார்க் கண்டேயனை அனுப்பிவை.

சித்ர: அப்படியே சுவாமி. நாளைதானே அனுப்ப வேண்டும்?

நார: சிவ சிவா! பூமியில் நாளை என்பது இன்னும் ஐந்து நிமிடங்களில் வந்துவிடும்!

எமன்: அய்யய்யோ! மார்க்கண்டேயா! கண்ணு மார்க்கண்டேயா!

(எமன் மார்க்கண்டேயனைத் தேடி ஓடுகிறான்.)

காட்சி 6

[கண்ணப்பன்வீடு. அனுசூயா உட்கார்ந்திருக்கிறாள். மாமனார் ராமபத்ரன் உள்ளே நுழைகிறார்.)

ராம: ஏம்மா, கண்ணப்பன் ஊருக்குக் கிளம்ப ரெடியாயிட்டானா? அவன் துணிமணி யெல்லாம் எடுத்துப் பெட்டியிலே வெச்சுட்டியா? நான் போய்க் குதிரை வண்டி கூட்டிண்டு வந்துடறேன்.

அனு: எல்லாத்தையும் வச்சுட்டேன். நீங்க போய்க் கூட்டிண்டு வாங்கோ.

(போகிறார்.)

கண்ணப்பன்: ஏய் அனுசூயா ரெண்டு ரெண்டு பேண்ட் சட்டையை பெட்டிலே வையுன்னு சொன்னா ரெண்டு பேண்ட் சட்

இம்மாத ரத்தினம்

அக்டோபர் மாதத்தில் பிறந்தவர்களுக்குரியது ஓபல் (OPAL) என்று சொல்வார்கள். இது வெள்ளை, சாம்பல், நீலம், பச்சை மற்றும் சிவப்பு நிறங்களில் இருக்கும். ரத்தினங்களின் கடினத்தன்மையை மோஸ் அளவில் மதிப்பிடுவார்கள். இதன் கடினத்தன்மை 5.5–6.5. ஓபல், அழகு, செல்வம் ஆகியவற்றைக் குறிக்கும்.



இவரது செல்வச் செழுமைக்கு உதவுகிறது இந்தியன் பாங்க்

என்றும், எங்கும், ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் ரத்தினம் இந்தியன் பாங்க்

வங்கிகளுக்கு அடிப்படை பணம். தனிநபரும் நிறுவனங்களும், நாடுகளும் செழிப்புற்றிருக்க பணம் உதவுகிறது. ஆக்கப் பணிகளுக்கு பண உதவி தருவதோடு, அனைத்து விதமான நிதி அலுவல்களுக்கும் உதவி செய்கிறோம்.

ஒரு வார்த்தை சொல்லுங்கள். உங்கள் சார்பில் வாடகை, கட்டணங்கள் போன்றவற்றை அவ்வப்போது செலுத்தி விடுவோம். உங்கள் பணத்தை வேறு கிளைகளுக்கோ, வேறு கணக்குகளுக்கோ மாற்றவேண்டுமானால் அதையும் செய்கிறோம். அதோடு உங்கள் செக்குகள், பென்ஷன் தொகை போன்றவற்றை நாங்கள் பெற்றுத்தருகிறோம்.

நலிவுற்றோருக்குக் கடனுதவி அளிப்பதற்காக இந்தியன் பாங்கில் தனிப்பிரிவு இருக்கிறது. சொந்தத் தொழில் நடத்த கடன் தரும் திட்டங்கள் உள்ளன— அதுவும் சலுகை வட்டியில். சிறுதொழில்கள், விவசாயம், ஏற்றுமதி ஆகியவற்றில் தனி கவனம் செலுத்துகிறோம்.

உங்கள் சேமிப்பு, கிடுகிடுவென்று வளர, உங்கள் தேவைக்கேற்ற பல திட்டங்கள் இந்தியன் பாங்கில் இருக்கின்றன.

இந்தியன் பாங்க்

உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி

இப்போது பவள விழா ஆண்டில் நடைபோடுகிறது.

ADWAVE/IB/1750/TAM

டையைப் பீரோவிலே வெச்சுட்டு மத்த துணி மணி எல்லாத்தையும் எடுத்துப் பெட்டிலே வெச்சிருக்கே. மூட்டைத் துணியோட போனா பாக்க வண்ணான் மாதிரி இருக்கும்.

அனு: அவ்வளவு வேண்டாமா உங்களுக்கு? அப்ப சின்ன பெட்டியிலே அளவா வெச்சு எடுத்துண்டு வரேன்.

(அனு உள்ளே போக சாவித்திரி வருகிறாள்)

சாவி: மார்க்கண்டேயன்!

கண்ண: வாம்மா சாவித்திரி நீ எங்கே வந்தே?

சாவி: மார்க்கண்டேயன்! நீங்க ஊருக்குப் போயிட்டு ரெண்டு நாள் கழிச்சுத்தான் வருவீங்களாமே. ரெண்டு நாள் உங்களைப் பார்க்காம நான் எப்படி இருப்பேன்?

கண்ண: என்னடா பெரிய எழவாப் போச்சு. மார்க்கண்டேயன், மார்க்கண்டேயன்! யாரது மார்க்கண்டேயன்? நான் கண்ணப்பன். நாலு வருஷமாச் சொல்லிண்டு இருக்கேன். திருப்பித் திருப்பி மார்க்கண்டேயன், மார்க்கண்டேயன், மார்க்கண்டேயன்னு கூப்பிட்டு உயிரை வாங்கிண்டு இருக்கே!

சாவி: மார்க்கண்டேயன்! நீங்க மார்க்கண்டேயன் இல்லேங்கிறது எனக்குத் தெரியும். ஆனா என்னைப் பொறுத்தவரை நீங்க மார்க்கண்டேயன்தான்!

கண்ண: எனக்கும் உன்னை மாதிரி பைத்தியம் பிடிக்க வெச்சுட்டுத்தான் மறு காரியம் பார்ப்பே போலிருக்கு!

சாவி: அங்கிள். தப்பா நினைக்காதீங்க. நான் மெட்ராஸ்லே இருந்தப்போ என் வீட்டுக்கு எதிர் வீட்டுலே மார்க்கண்டேயன்னு ஒருத்தர் இருந்தார். அவரும் நானும் ஒருத்தரை ஒருத்தர் உயிராக் காதலிச்சோம். அவர் ஒரு நாள் பொட்டுன்னு உயிரை விட்டுட்டார். நீங்க அவரை மாதிரியே இருக்கேள்.

ஃ பாலு: வச்சிரகும்பன்

கண்: அதனாலே நானும் பொட்டுன்னு போகணும்கிறியா?

சாவி: இல்லே. அதனாலே நான் உங்களை மார்க்கண்டேயன்னு கூப்பிட்டுண்டு மனசைத் தேத்திண்டு இருக்கேன்.

கண்ண: அம்மாடி சாவித்திரி. நான் கல்யாணம் ஆனவன். நீ பாட்டுக்கு என் ஒய்ஃப் இல்லாதபோது இந்த மாதிரி யெல்லாம் இருக்கிறது நல்லா இல்லே. ஏற்கனவே அவ ஒரு சந்தேகப் பிராணி.

(அனுசூயா வருகிறாள்.)

கண்ண: என்னடி, என்னாச்சு? எதுக்கு மாவு மிஷின் மாதிரி பல் அரைக்கிறே?

அனு: ஏங்க, உங்களுக்கு இதெல்லாம் நல்லா இருக்கா? அந்தப் பொண்ணுக்குப் பைத்தியம்னு சொல்லிக்கிட்டே உங்ககிட்ட இப்படி வர அனுமதிக்கிறீங்க... ஹி ஹின்னு பல்லே இளிக்கிறீங்களே....

கண்ண: இதோ பாரு அனுசூயா. நான் ஊருக்குக் கிளம்பும்போது கண்ணைக் கசக்கிண்டு நிக்காதே.

சாவி: என்ன அக்கா, அங்கிள் ஊருக்குக் கிளம்பறப்போது அழறேள். இப்ப நான் அழறேனா பாருங்க!

(அப்பா—ராமபத்ரன் வருகிறார்.)

ராம: டேய் கண்ணப்பா, குதிரை வண்டி ரெடி.

கண்ண: என் தலையெழுத்து. நான் போய்த் தொலையறேன்.

சாவி: அப சகுனமா ஏதாவது சொல்லாதீங்க. போயிட்டு வரேன்னு சொல்லணும். பார்த்து நிதானமாப் போங்க. அங்கிள்!

(கண்ணப்பன் போகிறான். ராமபத்திரன் உள்ளே செல்கிறார்.)

அனு: என்னடி அங்கிள்? என்ன அங்கிள்?

சாவி: மார்க்கண்டேயன் அங்கிள்!

அனு: இதோ பார். அங்கிள்னு மட்டும் கூப்பிடாதே. அப்புறம் ஏமாந்தா ஒரு நாள் கல்யாணம் பண்ணிண்டு வந்து நிப்பீங்க!

சாவி: நீங்க என்னன்னு நினைச்சுண்டு இருக்கேள்? நான் கண்ணப்பனைக் காதலிக்கிறேன்னா அய்யய்யோ! என் மார்க்கண்டேயன் எங்கே இந்தக் கண்ணப்பன் எங்கே? அவர் நல்ல அழகு. கம்பீரம். புத்திசாலி!

அனு: போதும்டி நிறுத்து. உன் மார்க்கண்டேயனை விட என் புருஷன் ஒண்ணும் குறைஞ்சு போயிடல்லே. அவர் கிட்டேயும் நீ சொல்ற எல்லாம் இருக்கு. இனிமே நீ இந்த வீட்டுப் பக்கம் வரக் கூடாது.

சாவி: நான் ஏன் வர்றேன்? அவர் திரும்பி வரத்தான் ரெண்டு நாளாகுமே?

அனு: வெளியே போடி கழுதை! கெட் அவுட்!

(அனுசூயா உள்ளே போகிறாள். சாவித்திரி வெளியேறுகிறாள். கிங்கரர்கள் வருகிறார்கள்.)

தூம: மார்க்கண்டேயா யாரும் இல்லே ம்... வா.

(மார்க்கண்டேயன் வருகிறான்.)

மார்: ம்...வெளியே... போற பொண்ணு எங்கேயோ பார்த்த முகமா இருக்கு...

தூம: இதுதான் நீ இருக்க வேண்டிய வீடு. நாங்கள் வருகிறோம். மறக்காதே. உன் பெயர் கண்ணப்பன்.

மார்: இந்த வீட்டிலே யார் யார் இருக்காங்க? நான் அவங்களுக்கு என்ன உறவு? இதெல்லாம் சொல்லிட்டுப் போங்க.

பீம: அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நீதான் பெரிய நடிகனாச்சே. சமாளி.

தூம: விஷ் யூ ஆல் த பெஸ்ட் (போகிறார்கள்.)

மார்: சார் சார்!

(கண்ணப்பனின் தகப்பனார் ராமபத்திரன் வருகிறார்.)

ராம: என்னடா இது? சொந்த வீட்டிலே சார்னு கூப்பிட்டுண்டு? ஊருக்குப்போறேன்னு சித்த முன்னாடிதானே கிளம்பினே. உடனே திரும்பி வந்து நிக்கறே?

மார்: ஆமாம். இப்போதான் கிளம்பினேன், ஆனா இப்பவே திரும்பி வந்துட்டேன்.

ண்ண ஒளி சிந்துவது
பாவளி
ழில் வண்ணம் சிந்துவது
கா-ஆப்டெக்ஸ்

ண்ணைக் கவரும் கவின்மிகு படைப்புகள்
ண்ணிட முடியாத எழிலார்ந்த சேலைகள்
சின்னஞ் சிறுவர்களுக்கு
மின்னும் வண்ணச் சட்டைத் துணிகள்
பாங்கான வேட்டிகள்
பலவகை லுங்கிகள்
படுக்கை விரிப்புகள்
அலங்காரத் துணிவகைகள்
ஆடை அணிகலன்கள்

பாவளி சிறப்புத் தள்ளுபடி

20%

10.81 முதல்

கோ-ஆப்டெக்ஸ்
க்கைத்தறி

ராம: என்னடா, என்னமோ கேட்டா என்னமோ சொல்றே? இதுக்குத்தான் அந்த எதிராளாத்து பைத்தியம் சாவித்திரிகிட்டே பேசாதேன்னு சொன்னேன். அம்மா அனுசூயா இங்கே வாயேன். யாரு வந்திருக்கான்னு பாரு.

அனு: யாரு? என்னது! போன உடனேயே திரும்பி வந்திட்டீங்க?

மார்: ஆமாம். வந்துட்டேன்.

அனு: ஆமா, ஊருக்கு எடுத்துக்கிட்டுப் போன பெட்டி படுக்கை எங்கே?

மார்: ஆங்!... பெட்டி தொலைஞ்சு போச்சு. அதுதான் சகுனம் சரியில்லேன்னு திரும்பி வந்துட்டேன்!

அப்பா: குதிரை வண்டிலே போகும் போதே பெட்டி தொலைஞ்சு போச்சா? ஆமா, பேண்ட் புதுசா இருக்கே ஏது?

மார்: ஆமா. குதிரை வண்டி குடை சாஞ்சு பேண்ட் அழுக்காப் போயிடுத்து. கடையிலே வேறே வாங்கிப் போட்டுண்டுட்டேன். அது சரி, யாரோ சாவித்திரின்னு சொன்னிங்களே,—யாரு அது?

அனு: ஒண்ணும் தெரியாத மாதிரி வேஷம் போடறீங்களா? உங்களேயே சுத்திச் சுத்தி வருமே எதிர் வீட்டுச் சனியன்! பைத்தியம்!

மார்: அவ இங்கேயா இருக்கா?

ராம: குதிரை வண்டி குடை சாஞ்சு போய் ஏற்கனவே மிரண்டு கிடக்கான்! அவன் கிட்டப் போய் அந்தப் பைத்தியம் சாவித்திரியைப் பத்திச் சொல்லி ஏன்பயமுறுத்தறே. போய்க் காப்பி கொண்டு வந்து கொடு.

❖ **சாரநாத் சீனிவாசன்: கண்ணப்பனின் அப்பா**

அனு: இதோ கொண்டு வரேன். (போகிறுள்.)

ராம: உனக்கு நேரம் சரியில்லேயோ என்னவோ. நான் பக்கத்துத் தெரு ஜோஸ்யர் சிவராமனைப் பார்த்துட்டு வந்துடறேன்.

(ராமபத்திரன் போகிறுர். அனுசூயா காப்பியுடன் வருகிறுள்.)

அனு: காப்பி சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடுத்துக்குங்கோ. நான் பக்கத்து கோவில்ல ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வந்துடறேன்.

(அனுசூயா போகிறுள். சாவித்திரி வருகிறுள்.)

சாவி: என்ன அங்கிள், அதுக்குள்ளேயா ரெண்டு நாள் ஆயிடுத்து? காலம் எவ்வளவு வேகமா போறது, பார்த்தேளா?

மார்: சாவித்திரி நீயா! நீ இந்த ஊர்லயா இருக்கே? அப்பா சவுக்கியமா?

சாவி: என்ன கண்ணப்பன் அங்கிள்! வெளையாடறீங்களா? நாலு வருஷமா பாக்கறீங்க. கிண்டல் பண்றீங்களா?

மார்: அய்யய்யோ. நான் கண்ணப்பன் இல்லே சாவித்திரி. நான் உன் மார்க்கண்டேயன்.

சாவி: இதெல்லாம் தப்பு கண்ணப்ப[ன்.] உங்க மனைவி இருக்கும்போது ஒரு பேச்[சு.] இல்லாதபோது ஒரு பேச்சு. இதெல்லா[ம்] எனக்குப் பிடிக்கலே.

மார்: கண்ணப்பன்... கண்ணப்பன். யாரது அந்த மடையன் கண்ணப்பன் டீ...சாவித்திரி. என்னைத் தெரியலையாடி?

சாவி: என்ன டி போட்டுப் பேசறீங்க மார்க்கண்டேயன்னு சொல்லி என்னை ஏமா[த்]தப் பாக்கறியாடா?

மார்: என்னது... டாவா? சாவித்தி[ரி] என்ன இது?

சாவி: பின்னே என்ன? இவ்வளவு நாள் என்னைக் கண்டதும் கன்னு பின்னுன்னு திட்டித் துரத்திட்டு இப்போ திடீர்னு டீ போட்டுப் பேசி அன்னியோன்யம் கொண்டாடுறியே!

மார்: சாவித்திரி நான் நிஜமாகவே மார்க்கண்டேயன்தான். உன்னை மனசாரக் காதலிச்ச மார்க்கண்டேயனேதான். உனக்[க]ாகவே மேலோகத்திலே இருக்கிற எங்க அப்பா பேச்சைக் கூடக் கேட்காம மறுபடி[யு]ம் வந்திருக்கேன். வா. நாம எங்கேயாவது ஓடிப் போயிடலாம்!

சாவி: சீ சீ சீ. துஷ்டனே! நான் சொன்னதையெல்லாம் நல்லா ஞாபகம் வெச்சிக்கிட்டு எங்கிட்டேயே பிளேட்டைத் திருப்பறியா! ரொம்ப நல்லாயிருக்கு. என்ன சொன்னீங்க? ஓடிப் போயிடலாம்னு?

மார்: ஓடின்னு நிஜமாவே ஓடி இல்லே. ரயில்லேயோ பஸ்ஸிலேயோதான்!

சாவி: நிச்சயமா நீங்க என் மார்க்கண்டேயன் இல்லே. என் மார்க்கண்டேயன் கன்னிப் பெண் கிட்டே கண்டபடி பேசறவர் இல்லே.கண்ணியமா நடந்துக்குவார்.கடமை உணர்ந்தவர். கல்யாணம்பண்ணிக்க ஆசைப்பட்டவர். என்னைக் கண்ணுக்குக் கண்ணு நெனேச்சார். கானுவுக்கு கனுப் போட்டுப் பேசிட்டேன். ஏன்னு நான் தமிழ் வாத்தியார் பொண்ணு!

மார்: சாவித்திரி, அப்போ நான் மறுபடியும் பூலோகத்துக்கு வந்ததே வேஸ்ட்தானு?

சாவி: நீங்க பூலோகத்திலே பிறந்ததே வேஸ்ட்!

மார்: அய்யய்யோ, சாவித்திரி! நான் சொல்றதைக் கேளு. சாயங்காலம் தெப்பக்குளம் பக்கம் வா. விவரமாச் சொல்றேன். உனக்கு அப்போ புரியும். (அனுசூயா—வருகிறுள்.)

சாவி: (அனுவைப் பார்த்து) ஐ பிட்டி யூ (போகிறுள்.)

அனு: என்னது... தெப்பக்குளம்?

மார்: ஒண்ணுமில்லே. மீனுட்சி அம்மனுக்கு வேண்டிண்டு தெப்பக்குளத்திலே குளி, உன் பைத்தியம் தெளியும்னு சொன்னேன்.

அனு: இல்லே. ஏதோ மறைக்கிறேள். இது எங்கேயோ போய் முடியப் போறது!

மார்: ஆமாம். எங்கேயோ போய்த்தான் முடியப் போறது! (பதறியவாறு) ஏய் அனுசூயா. இதோ பாரு. நான் கொஞ்சம் வெளியே போய்ட்டு வந்துடறேன். எனக்

காகக் காத்திருக்க வேண்டாம். சீக்கிரம் தூங்கிடு, என்ன? (ஓடுகிறான்)

காட்சி 7

[எமலோகம்]

சித்ர: பிரபோ! பிரபோ!
எமன்: என்ன சித்திரகுப்தா. என்ன இவ்வளவு பதற்றம்?
சித்ர: மோசம்போய் விட்டோம் பிரபோ!
எமன்: என்ன சித்திரகுப்தா? விஷயத்தைக் கூறு.

சித்ர: பஸ் ஓட்டுனர், நடத்துனர் வேலை நிறுத்தம்! கண்ணப்பன் பயணம் செய்ய இருந்த பஸ் மதுரையை விட்டுக் கிளம்பவே இல்லே! கண்ணப்பன் தனது வீட்டுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கிறான்!
எமன்: அய்யய்யோ! மறுபடியும் தர்மம் குலைந்து விட்டதே! ஒரே வீட்டில் ஒரே உருவத்தில் இரு நபர்களா? அனுசூயாவுக்கு ஏதாவது ஏடாகூடமாக நடந்தால் அது என் பொறுப்பு அல்லவா? கிங்கரர்களே! நீங்கள் உடனே சென்று மார்க்கண்டேயனை அழைத்து வாருங்கள். வர மறுத்தால் பாசக் கயிற்றை வீசுங்கள். ம்.. உம்... கம் ஆன். க்விக்.

காட்சி 8

[கண்ணப்பன் வீடு]

கண்ண (வந்துகொண்டே): ஏய் அனுசூயா! அனுசூயா! அப்பாடி! ஒரே டயர்டு. ஏய் அனுசூயா!
அனு: என்ன வேணும்? ஏன் இப்படிக் காட்டுக் கத்தல் கத்தறேள்?
கண்ண: அறிவு கெட்டவளே! ஏண்டி, ஒரு மனுஷன் ஊருக்குக் கிளம்பியவன் போக முடியாமத் திரும்பி வந்திருக்கேன். என்ன ஆச்சு, ஏன் போகலே, அப்படியெல்லாம் கேக்கலே.... ஏன் கத்தறேன்னு மட்டும் கேட்கத் தெரியறது!
அனு: ஏதோ ஒருவாட்டி ஊருக்குப் போக முடியாமத் திரும்பி வந்தா ஆச்சரியப் பட்டுக் கேக்கலாம். நிமிஷத்துக்கு ஒரு வாட்டி அதையே திரும்பத் திரும்பக் கேட்க நான் பைத்தியம் இல்லே!
கண்ண: அடிக்கடி திரும்பி வரேன். உளறுதே. காப்பி கொண்டு வா.
அனு: இந்த மாதிரி காப்பி குடிச்சா வாங்கற சம்பளம் பத்தாது. எங்காவது பாங்கைக் கொள்ளைதான் அடிக்கணும். இதோட மூணு டம்ளர் காப்பி குடிச்சாச்சு.
கண்ண: சரி சரி. வேணும். இந்தா பெட்டியைக் கொண்டு உள்ளே வெச்சுட்டு லுங்கியைக் கொண்டு வா போ.
அனு: அடேடே! பெட்டிகிடைச்சுட்டுதா?
கண்ண: என்னடி ஒரேயடியாப் பேத்தறே?
ராம: (வந்து) கண்ணப்பா. ஜெயராமன் ஜோஸ்யர் கிட்ட விசாரிச்சேன். தொலைஞ்சு போன பெட்டி கிடைச்சுடுமாம். ஏதோ உனக்குக் கொஞ்சம் போறுதவேளை வந்திருக்காம். சனீஸ்வரனைச் சுத்தி வந்தாச் சரியாப் போயிடுமாம்!
அனு: மாமா ஜோஸ்யர் வாயிலே சர்க்கரைதான் போடணும். பெட்டி கிடைச்சுடுத்து. இவரே கொண்டு வந்துட்டார்!
ராம: ஏண்டா குதிரை வண்டிக்காரனே கொண்டு வந்து குடுத்துட்டான்?
கண்ண: குதிரை வண்டியா? ஸ்டிரைக்டாடி. ஒரு பஸ் கூட ஓடலே. அதான் வந்துட்டேன்.
ராம: பஸ் ஸ்டிரைக்கா? நீதானேடா கொஞ்ச முன்னடி வந்து குதிரை வண்டி குடைசாஞ்சு போச்சு பெட்டியைக் காணோம். சகுனம் சரியில்லேன்னு வந்துட்டதாகச் சொன்னே!
கண்ண: குதிரை வண்டி குடைசாஞ்சுதுன்னு கொஞ்ச நேரம் முன்னடி சொன்னேன்? என்ன ரெண்டு பேரும் விளையாட நீங்களா?
ராம: ஜெயராமன் சொன்னது கரெக்ட்தான். உனக்குப் போறுத வேளைதான்.
கண்ண: அய்யோ. எனக்கு மண்டை குழம்பறது. என்னைக் கொஞ்ச நேரம் தனியா விட்டுட்டுப் போங்கோ. லீவ் மீ அலோன்.
(அவர்கள் போக சாவித்திரி வருகிறாள்.)
சாவி: கண்ணப்பன்!
கண்ண: வா. நீ ஒருத்திதான்பாக்கி வா! என்ன வேணும்?
சாவி: ஏன், அனுசூயா ஆத்திலே இருக்காளா? அது தான் என்னைப் பார்த்து வள்ளுன்னு விழறேள்! பத்து நிமிஷத்துக்குள்ளே மனுஷ மனம் எவ்வளவு மாறிடறது! மானுவுக்கு மானு.
கண்ண: என் கழுத்தை அறுக்க வந்துட்ட கடன்காரி, காணுவுக்குக் காணு. போதுமா?
சாவி: நான் வீட்டுக்குப் போய் யோசனை பண்ணிப் பார்த்தேன். ஒருவேளை நீங்க சொன்னதெல்லாம் உண்மையா இருக்குமோன்னு. அதனலேதான் திரும்பி வந்தேன்.
கண்ண: நான் என்ன சொன்னேன்?
சாவி: அதுதான் மார்க்கண்டேயன்! நீங்க சாகல்லே. மறுபடியும் உயிரோட வந்துட்டேன்னு சொன்னீங்களே! அதைத்தான் சொல்றேன்!
கண்ண: மார்க்கண்டேயன்? மறுபடியும் உயிரோட வந்துட்டேன்... என்ன எழவுடா இது!
சாவி: செத்தாத்தான் இழவு. இது விருத்தி. நீங்க சொன்னபடியே தெப்பக்குளம் பக்கத்திலே நிக்கறேன். தனியா உக்காந்து பேசுவோம்.
கண்ண: இந்தாம்மா சாவித்திரி நீ வேணு தனியாப் பேசிக்கோ. என் மனசைக் கெடுக்காதே. பிளீஸ் கெட் அவுட்.



எஸ். ராமசாமி: தமிழ் வாத்தியார் தாணு

(சாவித்திரி போகிருள். கிங்கிரர்கள் வருகிருர்கள்.)

பீம, தூம: ஸ்சு...ஸ்சு....

கண்ண: யார்டா நீங்க?

தூம: ம்... என்னைத் தெரியவில்லையா?

கண்ண: நான் என்ன சர்க்கஸ் கம்பெனியா நடத்தறேன், கொம்பு முளைச்ச மனுஷனை யெல்லாம் தெரிஞ்சுக்க. யாருடா நீங்க?

பீம: ம்... பார்த்தாயா தூமகேது. நம்மை யார் என்று கேட்கிருன்?

தூம: மிகவும் திமிர் பிடிச்சவன். உன்னை எங்கள் பிரபு கூட்டிக் கொண்டு வரச் சொன்னர்!

கண்ண: யார்டா அவன் உங்கள் பிரபு?

தூம: யாருடா அவனு? திமிர் கொண்டவனே! எங்கள் எமதர்மரை யாருடா என்று அழைக்கிருய்?

கண்ண: எமதர்மரா? என்னடா இது புது எழவாப் போச்சு! போங்கடா. ஏதாவது டிராமாவிலே போய் நடிங்கடா. நாலு காசாவது கிடைக்கும். வந்துட்டாங்க. மாட்டுக் கொம்போட ஒரு விக்கையும் வெச்சிண்டு!

பீம: எங்கள் உண்மையான முடியையும் கொம்பையும் கிண்டல் செய்கிருய்! (கயிறை அவன் கழுத்தில் போட்டு) தூமகேது இவனை அழைத்துச் செல்வோம்!

காட்சி 9

[தேவலோகம்]

கண்ண: யோவ், எதுக்காக என்னை இங்கே கூட்டி வந்திருக்கீங்க?

எமன்: மார்க்கண்டேயா! நமது திட்டத்தில் ஒரு சிறு பிழை. நடந்து விட்டது. கண்ணப்பன் செல்லும் பஸ் திருச்சி அருகே கவிழப் போகிறது, கண்ணப்பன் அதில் இறந்துபோவான், நீ மதுரையில் கண்ணப்பனுக்குப் பதில் தங்கிடலாம் என்று நாம் போட்ட திட்டம் தவிடு பொடியாகிவிட்டது! பஸ் ஸ்ட்ரைக். ஸோ, ஆக்சிடெண்ட் ஆகவில்லை! காட் புரபோசஸ் மேன் டிஸ்போஸஸ்!

கண்ண: யோவ். என்னய்யா உளர்றே!

எமன்: மார்க்கண்டேயா! கண்ணப்பன் சென்ற பஸ் மதுரையை விட்டே கிளம்பவில்லை. ஆகையால் அவனும் தன் வீட்டுக்குச் செல்கிருன். ஒரே வீட்டில் ஒரே மாதிரியான இருவர் இருந்தால் குழப்பம் ஏற்படும். ஆகையால் நீ மீண்டும் கொஞ்ச நாட்கள் இங்கேயே தங்கிவிடு. பிறகு ஒரு சந்தர்ப்பம் வரும்போது உன்னை அனுப்புகிறேன்.!

கண்ண: அடப் பாவி! யோவ்! நீ அனுப்பினியே அந்த மார்க்கண்டேயன் இல்லே நான். நான்தான் ஒரிஜினல் கண்ணப்பன்! இப்படி ஆள் மாருட்டம் பண்ணிட்டியே அய்யா. அய்யைய்யோ அனுசூயா! எனக்காக ஆசையாக் காத்திருப்பியே. அங்கே அந்தத் தடியன் மார்க்கண்டேயன் வேறே இருக்கானே! ஏதாவது நடக்கக் கூடாத தப்பு நடக்கிறதுக்கு முன்னடி என்னை அனுப்பிடுய்யா!

எமன்: உண்மையாக நீ மார்க்கண்டேயன் இல்லியா?

கண்ண: சத்தியமா நான் மார்க்கண்டேயன் இல்லே! கண்ணப்பன்!

எமன்: மடையர்களே! மறுபடியும் தப்பு செய்து விட்டீர்களே! ஹா! மறுபடியும் கத்தி அசைகிறது. ஏதாவது ஏடாகூடமாக நடந்துவிட்டால் என் தலையைப் பதம் பார்த்துவிடும்! நான் தர்மத்திலேயிருந்து மறுபடியும் தவறியிருக்கிறேன். நீ சொல்வது சரிதான். நீ கண்ணப்பன்தான். நான் என்ன செய்வேன்?

தூம: பிரபோ! பரமசிவன் ரவுண்ட்ஸுக்கு வருகிருர்.

சிவன் (வந்தவாறே): என் ஞான திருஷ்டி மூலம் எல்லாவற்றையும் அறிந்தேன். எமதேவா! ஏன் நடந்தது பற்றி என்னிடம் முன்னடியே அறிவிக்கவில்லை?

எமன்: ஸ்வாமி! உங்களது நெற்றிக் கண்ணைப் பார்த்துப் பயந்துதான்.

சிவன்: என்னிடம் உன் கையொப்பமிட்ட வெத்துப் பேப்பர் நிறைய உள்ளன. நினைவிருக்கட்டும். உடனே மார்க்கண்டேயனை அழைத்து வா. இல்லையேல் என் கொயரி கமிஷன்!

எமன்: என்மீது கமிஷன்! என்ன குற்றம் செய்தேன் கொற்றவனே?

சிவன்: உன் ஊரிலிருந்து சுமார் ஐயாயிரம் பீப்பாய்கள் சோமபானம் கடத்தப்பட்டுள்ளது!

எமன்: இது பற்றி விசாரிக்க நானே ஒரு கமிஷன் அமைத்துள்ளேன். ஜட்ஜ் டி.எல். வேங்கடராமய்யர் விசாரிக்கிருர்!

சிவன்: எங்கள் கமிஷன் இருக்கும்போது நீ போட்ட கமிஷன் செல்லாது.

எமன்: சுவாமி, மார்க்கண்டேயனை அழைத்து வந்து விட்டால் என்னை விட்டு விடுகிறீர்களா சுவாமி?

சிவன்: பேஷாக! கமிஷன் தீர்ப்பையொட்டி தொடுக்கப்படும் வழக்குகளை வாபஸ் வாங்கிக் கொண்டால் போச்சு! ஆனல் அதற்கு முன் நீ போய் மார்க்கண்டேயனை அழைத்து வந்துவிடு. மார்க்கண்டேயன் இல்லாமல் திரும்பி வராதே. முதலில் கண்ணப்பனை அவன் வீட்டில் விட்டுவிடு. இந்த மடையர்களை அனுப்பாதே. நீயே போ.

காட்சி 10

[கண்ணப்பன் வீடு]

(அனுசூயாவைச் சுற்றி எல்லோரும் அமர்ந்திருக்கின்றனர். எமனுடன் கண்ணப்பன் வருகிருன்.)

கண்ண: என்னடி என்ன ஆச்சு! ஏன் அழுதுண்டு உட்கார்ந்து இருக்கே?

அனு: தூ! நீங்க ஒரு மனுஷனு? இப்படி ஒரு காரியம் பண்ணிட்டு இன்னும் வெட்கம் இல்லாம என்கிட்டப் பேசறீங்களே?

கண்ண; என்னடி காரியம் பண்ணினேன்?

அனு: எதிராளாத்து சாவித்திரியைக் கூட்டிண்டு ஓடிப் போயிட்டேளே! இது நியாயமா?

கண்ண: நான் சாவித்திரியைக் கூட்டிண்டு ஓடிட்டேனு? என்ன இது?

ராம: நேத்து அந்தப் பெண்ணைக் கூட்டிண்டு தெப்பக்குளம் போய் அங்கேயிருந்து ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் வண்டி ஏறியதைப் பார்த்தவா சொன்னுடா!

கண்ண: அய்யய்யோ! நான் அங்கே போகவே யில்லையே. நான் எமலோகத்துக் குன்னு போயிருந்தேன்!

அனு: பார்த்தேளா மாமா! பொய்யைப் பார்த்தேளா! அளவே இல்லாமச் சொல்லிண்டு போருர். எமலோகம் போயிருந்தாராம்!

ராம: ஹூம்... உனக்கு யாரோ ஏதோ மருந்து வச்சிட்டாடா! பைத்தியம் பிடிச்சு அலையறே!

கண்ண (எமனை நோக்கி): எனக்கா பைத்தியம்? யோவ்! பார்த்துண்டு பேசாம நிக்கிறியே! உன்னுலதானேய்யா இத்தனை குழப்பம்!

அனு: யார் கிட்டே பேசறேள்?

கண்ண: எமதர்மன் நிக்கருனே தெரியலையா?

அனு: பார்த்தேளா மாமா! வெறும் சுவத்தைக் காமிச்சு எமன் நிக்கருனும்! இவருக்குப் பைத்தியம் இல்லை மாமா! பைத்தியம் மாதிரி நடிக்கிருர். செஞ்ச தப்பை மறைக்கறதுக்காக. பைத்தியம்னு நாம விட்டுடுவோம் பாருங்க!

கண்ண: யோவ்! உன்னை இவங்களுக்குக் காமிச்சிடுய்யா. இல்லேன்னு என்னைப் பைத்தியம்னே தீர்மானிச்சுடுவாங்க! உன்னுலே தான் எனக்கு இவ்வளவு தொல்லை. மார்க்கண்டேயன் சாவித்திரியைத் தள்ளிண்டு போயிட்டான் போலிருக்கு!

எமன்: இதோ கண்ணப்பா. என் உருவத்தைக் காட்டிக் கொள்கிறேன்!

ராம: ஹா! எமதர்மர்! எமதர்மர்!

அனு: நெஜமாகவே எமன்தான்!

காட்சி 11

[கோவில். எமன் ஓடிவருகிருன். விநயகர் சிலைக்குத் தோப்புக்கரணம் போடுகிருன்.)

எமன்: விநாயகா! நான் வந்த காரியம் வெற்றிகரமாக முடிஞ்சா 108 தேங்காய்கள் உடைக்கிறேன். எதுக்கும் உன் அப்பா கிட்டச் சொல்லி அதுவரைக்கும் ஆக்‌ஷன் எடுக்காம இருக்கச் சொல்லப்பா! மார்க்கண்டேயனும் சாவித்திரியும் இந்தக் கோயிலுக்கு வந்திருப்பதை ஞான திருஷ்டியிலே அறிந்து ஓடோடி வந்திருக்கிறேன்.

(கெட்டி மேளம் ஒலிக்கிறது.)

எமன்: ஹா! மாங்கல்யம் கட்டப் போகிருன். அதற்குள் பாசக் கயிற்றை வீசுவோம்! (கயிற்றை வீசுகிருன்.)

எமன்: வா, மார்க்கண்டேயா, வா!''

மார்: எங்கேய்யா கூப்பிடறே! நான்தான் உன் லோகத்திலிருந்து வந்தாச்சே. மறுபடியும் எதுக்குக் கூப்பிடறே?

எம: ஒருசின்ன அஜட்ஸ்ட்மெண்ட். மார்க்கண்டேயனை உயிரோடு அழைத்து வர வேண்டுமென்பது சிவபெருமானின் கட்டளை.

சாவி: நிறுத்து. அதற்கு உனக்கு உரிமை இல்லை!

எமன்: பெண்ணே! உன் துணிச்சலை நான் பாராட்டுகிறேன். எங்கள் விஷயத்தில் நீ ஏன் அனுவசியமாகத் தலையிடுகிருய்?

(நாரதர் வருகிருர்.)

நார: எமா! உனக்கு இருக்கும் சாபம் பற்றித் தெரியாமல் விளையாடுகிருய்.

எமன்: என்ன சாபம்?

நார: நீ சிறுவனு யிருக்கும்போது தும்புரு முனிவர் நின்றபடியே தவம் செய்துகொண்டிருந்தார். நீ அவர் காதில் விளையாட்டாகப் பூ சுற்றி விட்டாய். அதனுல் அவர் தவம் கலைந்து உனக்கு ஒரு சாபம் கொடுத்தார்.

எமன்: என்னவென்று?

நார: பூமாலையுடன் கூடியவர்கள் யார் மேல் நீ கை வைத்தாலும் உன் தலை சுக்கு நூருக வெடித்து விடும்.

எமன்: அய்யய்யோ கிளைமாக்ஸ் சீன்லே சாபத்தைப் பற்றிச் சொல்லி என்னைப் பயமுறுத்தறீங்க. இப்ப நான் என்னதான் செய்யறது?

நார: கெஞ்சிக் கேள். வந்தால் அழைத்துச் செல்!

எமன்: சாவித்திரி! தயவு செஞ்சி அவனை என்னேடு அனுப்பிவிடும்மா!

சாவி: அவரைப் பிரிந்து என்னுல் வாழ முடியாது!

மார்: பொய் சொல்ற பாத்தியா. நாலு வருஷம் பிரிஞ்சு தனியே இருந்தியே!

எமன்: பிரிய முடியாதுன்னு நீயும் அவனேடு வா.

சாவி: அதெல்லாம் வேணும். நீ இவரை மட்டும் அழைச்சிண்டு போ...

மார்: அடிப் பாவி!

எமன்: ரொம்ப சந்தோஷம்! தீர்க்க சுமங்கலி பவா!

சாவி: ஆனு ஒரு கண்டிஷன்! எனக்கு ஒரு வரம் கொடுக்கணும். என் கழுத்திலே இருக்கிற மாலை வாடற வரைக்கும் அவர் உயிரை நீ எடுக்கக்கூடாது!

எமன்: பூ! இவ்வளவுதானே! வாடும் வரை காத்திருக்கிறேன்.

மார்: ஏண்டி நாலு மணி நேரம் நான் உயிரோட இருந்தாப் போதுமா? நான் இன்னும் இன்ஷூரன்ஸ் கூடப் பண்ணிக்கலைடி!

சாவி: சும்மா உளருதீங்க! இது பூம்புகார் ஷோ ரூம்லே வாங்கின நெட்டி மாலை. வாடவே வாடாது! பாவம்! எமன் ஏமாந்துட்டார்!

மார்: எமா! வாடும்வரை காத்திரு!

சுபம்!

புகைப்படங்கள்: ஈ. வே. ரா. மோகன்

சுவர்ணமு

''கோட்டைக்குச் சிறிது இடைவெளி தள்ளிக் காடுகளை மண்ட விடுங்கள். எதிரிகளைச் சீக்கிரம் முறியடிக்கலாம்.''
- ஆ. முக்தமால்யத

30

போகும் வழியில் தேவராய சதுர்வேதி மங்கலத்தில் இறங்கி அக்கிரகாரத்துக்குள் நுழைந்து, பழைய நண்பன் கிருஷ்ண சந்திரனைப் பார்த்தான் அர்ச்சுனன்.

இருவரும் ஒரே உபாத்தியாயரிடம் மல் வித்தை கற்றவர்கள்.

''இதென்ன சந்துரு... இப்படித் திண்ணையில் உட்கார்ந்து...'' என்று இழுத்தான்

ஸ்ரீவேணுகோபாலன்



அர்ச்சுனன், நண்பன் விச்ராந்தியாகத் தக்களி நூற்பதைப் பார்த்து.

''சண்டைக்குப் போகலாம்னு பார்த்தா எந்த ராஜா—பக்கம் தர்மம் இருக்கிறது என்று தெரியவில்லே'' என்றான் கிருஷ்ண சந்திரன். வெறும் பூணூலும் உடம்புமாக இருந்தான்.

அர்ச்சுனன் தன் விருத்தாந்தங்களைக் கூறி மதுரை போய் வந்ததைத் தெரிவித்தான்.

''ஐயோ, அர்ச்சுனா! அவரை (கிருஷ்ணப்ப நாயகர்) நம்பினாயா? அவர் எந்தப் பக்கம் காற்று வீசுகிறதோ அங்கே சாய்வாரே!'' என்றான் கிருஷ்ண சந்திரன்.

''இப்போது சில வருஷங்களாக எங்கள் மன்னருக்கு ஆதரவாக இருக்கிறார். அதனால் தான் போனேன்'' என்றான் அர்ச்சுனன்.

''நாட்டில் இவர்கள் போக்குகளைப் பார்த்தால் 'தூ' என்று துப்ப வேண்டும். அங்கே லிங்கம நாயகர் (வேலூர் நாயகர்) எப்படி இருக்கிறார்? சரியான சமயம் பார்த்து உங்க ராஜா தலையை வெட்டிவிடப் போகிறார்'' என்றான் கிருஷ்ண சந்திரன் தக்களியைத் துடையில் திரித்துக் கொண்டே.

''லிங்கமர் இதுவரை மன்னர் பக்கமே இருக்கிறார். அதனால் நம்புகிறோம்'' என்றான்.

''திருமலை நாயகர் ஒரு மதில்மேல் பூனை! இந்தப் பக்கம் சாய்ந்ததாலும் சாய்வார், அந்தப் பக்கம் சாய்ந்தாலும் சாய்வார்! சொல்ல முடியாது. ஆகப்போக ஜனங்கள் பாடு திண்டாட்டம்! அரிசி என்ன விலை விற்கிறது தெரியுமோ?''

''ரூபாய்க்கு ஆறு படி.''

''அதுஎப்போதோமலையேறிப்போயிடுத்து. வேலூர் முற்றுகை ஆரம்பித்தாலும் ஆரம் பித்தது பணத்துக்கு (கால் ரூபாய்) ஒரு படி விற்கிறார்கள். எந்தக் காலத்திலேயாவது கேள்விப்பட்டிருக்கிறாயா? கலி முற்றிவிட்டது.''

''இப்போ ஒரு வேண்டுகோள். நீயும் என்னோடு வருகிறாய்! படை நடத்த ஆள் இல்லை!''

''நானா?''

''ஆமாம்! தக்களியை உள்ளே போடு! நாடு இருக்கிற நிலையில் நல்லவர்கள் நாலு பேராவது சேர்ந்து ஏதாவது செய்ய வேண்டும். கிளம்பு.''

தக்களி நின்றது.

கிருஷ்ணசந்திரன் பிரேமையோடு அர்ச்சுனன் கண்களுக்குள் பார்த்தான். ''உனக்கு நாட்டு மேலே அவ்வளவு வாஞ்சை வந்துடுத்தாடா?'' என்றான்.

அர்ச்சுனன் எதுவும் பேச வில்லை. சிறிதாக முறுவலித்தான்.



குழந்தைக்கு 3 மாதமாகும்போது, பால் மட்டும் போதாது

உங்கள் குழந்தைக்குத் தேவை ஃபாரெக்ஸ்

குழந்தையின் உன்னத திட உணவு

3-ஆம் மாதம்—திட உணவு துவங்கும் காலம்.

3 மாதம் ஆனபின், குழந்தையின் வளர்ச்சிக்குப் பால் மட்டும் போதாது. குழந்தை சுறுசுறுப்பாயும் விரைந்தும் வளரும் சமயம்—பாலில் கிடைப்பதைவிட அதிக கலோரிகள் தேவை. குழந்தைக்கு திரவ உணவைக் குறைக்கும் வகையிலும் அதிக கலோரிகளை வழங்கவும் மென்றுத் தின்னப் பழகவும் திட உணவு தேவை.

3-ஆம் மாதம் அதிக இரும்புச் சத்து தேவை

பிறந்த 2-4 மாதங்கள்தான் குழந்தைக்குத் திட உணவு துவங்க சிறந்த சமயம். பால் நல்ல உணவாயிருப்பினும் இரும்புச் சத்துப் பற்றாக் குறையினால் அது முழுமையாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு இரும்புச்சத்து அடங்கிய திட உணவுத்தேவைப் படுகிறது.

—Dr. Subhash C. Arya
"Infant & Childcare for the Indian mother"

ஏன் டாக்டர்கள் ஃபாரெக்ஸ் சிபாரிசு செய்கிறார்கள்?

குழந்தைக்கு திட உணவைத் துவங்குவதற்கு தனிப்படத் தயாரிக்கப்பட்டது—ஃபாரெக்ஸ். இதில் புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு, கால்ஷியம், பாஸ்பரஸ், மற்றும் வைட்டமின்கள் உள்ளன. இரும்புச் சத்தும் அதிகமுள்ளது—ஃபாரெக்ஸ். ஆகவே, குழந்தையின் விரைந்த முழு வளர்ச்சிக்கு உன்னதமான திட உணவாகிறது—ஃபாரெக்ஸ்.

இலவசம்! குழந்தையின் முதலாண்டு புத்தகத்திற்கு, 50 பைசா தபால் தலையுடன் எழுதுங்கள்.
த.பெ. எண் 19119,
பம்பாய்-400025. (FAR-202T)

டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்
குழந்தையின் விரைந்த முழுவளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு

CASGLF-10-203 TAM

18

சாந்தியின் முகத்தில் தோன்றிய கடுமையைக் கண்டு ஹரிக்குத் திகைப்பு ஏற்பட்டது. கலங்கிய மனநிலையில் இருப்பவளிடம் நாம் அவசரப்பட்டுச் சொல்லியிருக்கக் கூடாது...

அவள் நிதானமாகப் படுக்கையைத் தட்டிப்போட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''ஸாரி ஹரி! என்னாலே முடியாது. நான் யாரோட தோழமையையும் தேடிண்டு போகப்போறதில்லே. புதுசாப் பிரச்னைகளைத் தேடிக்கிறதுக்கு எனக்குத் தெம்பில்லே.''

அவள் சுபாவமான புன்னகையைப் பூக்காமல், திரும்பியே பார்க்காமல் ஒரு வேகத்துடன் மற்ற நோயாளிகளைக் கவனிக்கப் போகையில் அவனுள் ஒரு வேதனை ஏற்பட்டது.

இவள் நம்மைத் தப்பாக நினைத்துவிட்டாள் என்கிற வேதனை. நான்கு மாதங்களாக நெருங்கிப் பழகி நம் சுபாவத்தை அறிந்து கொண்டவள், எப்படி இப்படி நடந்து கொண்டாள் என்று ஆச்சரியம் ஏற்பட்டது.

நான் கேட்டது போக்கிரித்தனமானது இல்லை. என் உடல் நிலையில் வேறு எந்த உள்நோக்கத்துடனும் நான் எந்தப் பெண்ணையும் கூப்பிட்டுவிட முடியாது. அது அவளுக்கு நன்றாகத் தெரியும். பின் எதற்கு எரிச்சல் ஏற்பட்டது? வேலைக்காரியின் ஸ்தானத்துக்கு அழைக்கிறதாக நினைத்து விட்டாளா? தோழமைக்காக அழைக்கிறேன் என்று புரியவில்லையா?

தோழமை.

அவள் இதுவரை அவளது திருமண வாழ்வில் அனுபவித்தறியாத தோழமை.



அந்தி நேரத்து உதயங்கள்

வாஸந்தி

அது அவளுக்கு முக்கியம் என்று தோன்றவில்லையா? ஆயுசு முழுவதும் இப்படித் தனியாக நிற்கப் போகிறாளா?

சட்டென்று தன் எண்ணங்களின் ஓட்டத்தைக் கண்டு அவனுக்குத் திகைப்பேற்பட்டது. எனக்கு என்ன தகுதி இருக்கிறது, அவளை அப்படி அழைக்க? எந்த உரிமையில் அப்படி அழைத்தேன்? கணவனால் வஞ்சிக்கப்பட்ட பலஹீனமான நிலையில் அவள் இருப்பது என்னையும் பலவீனப்படுத்தியிருக்க வேண்டும். யோசிக்காமல் வார்த்தைகளைக் கொட்டியிருக்க வேண்டும்.

அவளுடைய கணவனின் ஆதிக்கத்திலிருந்து அவள் விடுபட்டாலும் அவள் எதற்காக அவனுடன் வந்து தங்கச் சம்மதிக்க வேண்டும்? எந்த மாதிரி வாழ்க்கையை நம்பி வருவாள்? சக்கர நாற்காலியில் மட்டுமே நகரக்கூடிய ஓர் ஆணுக்காக அவள் ஏன் தன் புதிய சுதந்திரத்தைப் பாழடித்துக் கொள்ள வேண்டும்? ஒரு ஆணின் தோழமையோ உறவோ வேண்டுமென்றால் அவள் ஒரு ஆரோக்கியமான ஆணுடன் இருக்க விரும்புவாளா? கம்ப்ளீட்லோ பாரப்ளீஜியாவுடன் மாரடிக்க விரும்புவாளா?

இதையெல்லாம் எப்படி நாம் யோசிக்காமல் போனேன்? எத்தனை அசட்டுத்தனம் நமக்குள் புகுந்து விட்டது! எத்தனை சுயநலம் புகுந்து விட்டது!

அவன் தன்னைச் சுற்றிப் பார்த்தான். இந்த அறையில் இருந்த பன்னிரண்டு படுக்கைகளிலும் பல தினுசான உடல் ஊனங்கள். எல்லாரிடமும் சாந்தி ஒரே தினுசாய்ப் புன்னகை மாறாமல் மிக நெருங்கிய பந்துவாய்க் கரிசனத்தோடு நடந்து கொள்கிறாள். எல்லாரும் அவளைத் தங்களுடன் அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்று விரும்ப ஆரம்பித்தால் எத்தனை பெரிய பைத்தியக்காரத்தனம்! மற்ற எந்த நோயாளியாவது அப்படிக் கேட்டிருந்தால் கன்னத்தில் அறைந்திருப்பாள்.

நமக்கு எப்படி அப்படி ஓர் அசட்டுத்தனமான துணிச்சல் ஏற்பட்டது?

'உங்க கிட்ட ஏற்பட்டிருக்கிற மாதிரி ஒரு நெருக்கம் எனக்கு யார் கிட்டேயும் ஏற்பட்டதில்லே ஹரி!' — அவளுடைய இந்த வார்த்தைகள்....

இந்த வார்த்தைகள்தான் அவனுள் விபரீத கற்பனைகளைக் கிளப்பியிருக்க வேண்டும். அந்தச் சிரிப்பும், இளமைக் கோலமும் மாயாவின் நட்பு நழுவிப்போன ஏக்கத்துக்கு மருந்தாகத் தோன்றியிருக்க வேண்டும். நார்மல் வாழ்க்கைக்கு லாயக்கற்றவன் நீ என்று சொல்லாமல் சொல்லி, நேசம் என்கிற வார்த்தையை எட்டி உதைத்த ஒருத்தியின் செயலால் அதிர்ந்துபோன எனக்கு நார்மல் அப்நார்மல் என்பதெல்லாம் ஒரு மனப் பிரமை என்று புரிய வைத்தவள் இவள். அந்த மாதிரி ஒரு உணர்வை நோயாளிகளின் மனத்தில் ஏற்படுத்தவே இவள் இங்கு நியமிக்கப்பட்டிருக்கிறாள். அதற்காக அவள் பிரயோகித்த நெருக்கமான வார்த்தைகளையெல்லாம் நான் தப்பாக எடுத்துக்கொண்டேனானால், எனக்காகவே அவள் பிரத்யேகமாக உபயோகித்தாள் என்கிற பிரமையில் மாட்டிக் கொண்டேனானால் ஆபத்து எனக்குத்தான்.

கையிலிருந்த புத்தகத்தைப் படிக்க முடியாமல் அவன் அதை மார்பில் சாத்திக் கண்களை மூடிக் கொண்டான். வெளியில் வராத கண்ணீர் கண்களுக்குள் ஊசி முனைகளாய்க் குத்தின. கொஞ்ச நாட்

களாக இல்லாதிருந்த சுய பச்சாதாபம் உத்வேகத்துடன் பொங்கிற்று. இந்த மாதிரி யாருக்கும் வேண்டாதவனாய் உபயோக மற்றவனாய் ஒரு அவல வாழ்க்கையை வாழ்ந்து என்ன ஆகப்போகிறது? நான் இருந்து என்ன லாபம்? சமூகத்தில் நான் எந்த வகையில் ஒரு உபயோகமான பிரஜையாய் இருப்பேன்? இன்னொருவருடைய உதவியை ஆயுசுக்கும் எதிர்பார்த்துக் கொண்டு, நினைத்த இடத்துக்குப் போக முடியாமல், நினைத்த காரியத்தைச் செய்ய முடியாமல், காத்திட்டருடன் சக்கர நாற்காலியில் சுழன்றுகொண்டு இத்தனை மதில்களைக் கடந்து எந்தக்கோட்டையைப் பிடிக்கப் போகிறேன்? எதற்கு இந்த உடற் பயிற்சிகள்? எதைச் சாதிக்க? நான் செத்து ஒழிந்தால் இந்தச் சமூகத்துக்கு என்ன நஷ்டம்?

"குட்மார்னிங் மிஸ்டர் ஹரி!''

அவன் கண்களைத் திறந்தான். டாக்டர் வர்மா நின்று கொண்டிருந்தார், பெரிய புன்னகையுடன் கைத்தடியை ஊன்றியபடி.

அவன் தலையைக் குனிந்தபடி புன்னகைக்காமல், ''குட் மார்னிங்'' என்றான்.

''ஹௌ இஸ் லைஃப்?''

அவரையும் அவருடைய பெரிய புன்னகையையும் பார்க்கும்போதெல்லாம் தனக்கு ஏன் அடி மனத்தில் ஓர் எரிச்சல் ஏற்படுகிறது என்று புரியாத ஆச்சரியத்துடன் அவன் சொன்னான்:

''இந்த லைஃப் எதற்கு என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் டாக்டர்!''

வர்மாவின் புருவங்கள் யோசனையுடன் உயர்ந்தன.

''என்ன நேர்ந்தது உங்களுக்கு இன்று? நீங்கள்தான் இங்கு பர்ஃபக்ட் பேஷண்ட் என்று நினைத்தேன். மெள்ள மெள்ள உங்கள் உடல்நிலைக்கு மனசை விவேகமாகப் பழக்கிக் கொண்டுவிட்டீர்கள் என்று நினைத்தேன்.''

''வேறே வழியில்லேன்னு பழகிண்டேன். விவேகம்னு சொல்ல முடியாது அதை. மந்தையோடு நடக்கறப்போ வேற வழி எங்கே?''

வர்மா அவனைக் கூர்ந்து பார்த்தார்.

''இப்ப புதுசா ஏதாவது வழி தெரியறதா?''

''வழியைத் தேடிண்டு போவானேன் என்று தோன்றுகிறது.''

திடீரென்று சொல்லத் தெரியாத ஆதங்கம் மனசை நிறைத்தது. வார்த்தைகள் தடுமாற்றத்துடன் வந்தன.

''டாக்டர்! நான் இப்படி அரை குறை மனுஷனாய் உயிர் வாழ வேண்டிய அவசியம் என்ன? கால் இருக்கிற பிரக்ஞையே இல்லாமல் நான் வேகமா ஓடிப் பழகினவன். இப்பொழுது இந்தக் கட்டிலிலிருந்து வீல் சேருக்கு நகர்ந்துஉட்காருவது பெரிய சாதனையாகப் படுகிறது. அந்தத் திருப்தி கொஞ்ச நேரத்துக்குக்கூட இல்லை. இந்த காத்திடர் பாட்டில் கூடவே இருக்கு என் ஊனத்தை நினைவு படுத்தற மாதிரி... டாக்டர் நான் எதற்கு இத்தனை கேவலமான ஒரு வாழ்க்கையை வாழணும்?''

டாக்டர் வர்மா இடையில் குறுக்கிடாமல் அவன் மனத்தில் இருப்பதைக் கொட்டி விடட்டும்' என்று நினைத்த மாதிரி அவனை யோசனையுடன் பார்த்துக்கொண்டு நின்றார்.

''இந்த நான்கு மாதங்களாக என்னை மாதிரி பல பேர்களைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்ததில் நான் தனியில்லை என்கிற ஒரு சமாதானம் இருந்தது. இன்னும் ஒரு மாசத்திலே என்னை டிஸ்சார்ஜ் செய்து விடுவீர்கள். அதுக்கு அப்புறம் இந்தச் சமாதானமெல்லாம் பெரிய கண் துடைப்பு என்று புரியும். என்னுடைய தனிமை பயங்கரமாகத் தாக்கும். யாராவது என்னிடம் பிரியமாக இருக்க மாட்டார்களா என்று மனசு அலையும்....!''

அவன் புறங்கையால் கண்களை மறைத்துக் கொண்டான்.

''அத்தனை கஷ்டங்களுடன் இந்த வாழ்க்கையை வாழ வேண்டியது அவசியமில்லே டாக்டர்!''

''இந்தத் திடீர் டிப்ரெஷனுக்கு ஏதாவது காரணம் இருக்கணும். நீங்கள் என் ரூமுக்கு வாருங்கள் பேசலாம்.''

அரை மணி நேரம் கழித்து அவர் எதிரில் உட்கார்ந்தபோது அவர் கண்களில் இதுவரை கவனித்திராத ஒரு காருண்யம் தெரிந்தது. அவனுக்காக அவர் வருந்துவது தெரிந்தது.

''இந்த மாதிரி உடல்நிலையிலே இப்படி மனச் சோர்வு ஏற்படறது இயற்கையானது.

தகவல்: மெர்லின்

கருத்து: ராமு

எனக்கே கூட இந்த அனுபவம் முன்பு ஏற்பட்டிருக்கிறது.''

''உங்களை விட என்நிலை மோசம்.''

''டிகிரியில் வித்தியாசம் அவ்வளவுதான். மன உளைச்சல் எல்லாருக்கும் ஒரே மாதிரி தான் இருக்கும்.''

அவன் திடீரென்று ஒரு ஆத்திரத்துடன் அவரைப் பார்த்தான்.

''எப்படி? இருபத்தி எட்டு வயசில் உங்கள் வாலிபத்தை இழந்தீர்களா? ஆயுசுக்கு ஒரு காத்திட்டர் பொருத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதா?'' அவனுக்கு மார்பு படபடத்தது.

''உங்கள் நிலைக்கு நான் பொறுப்பில்லை ஹரி. இந்த நிலையிலும் உங்கள் தேவைகளை நீங்களே கவனித்துக் கொள்ள எங்களால் முடிந்த அளவு உங்களைத் தயாராக்கியிருக்கிறோம்.''

''என்ன பிரயோஜனம்? என்னை முழு மனுஷனு இந்த உலகம் ஏற்குமா?''

''நீங்களே உங்களை முழு மனுஷனாய் ஏற்கணும் ஹரி. இந்த விபத்து உங்களுக்கு எப்படிப்பட்ட அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்று எனக்குப் புரிகிறது. இந்த மாதிரியெல்லாம் சோதனைகள் ஏன் ஏற்படணும் என்கிற ஆராய்ச்சியில் எனக்கு நம்பிக்கை இல்லை. அந்தச் சோதனைகளை ஏற்றுக்கொண்டு அதை நமக்கு லாபமாக எப்படி மாற்றிக்கொள்வது என்கிற முயற்சியிலேதான் நீங்க மனுஷன்னு காண்பிக்கணும்.''

ஹரி ஏதோ ஆத்திரத்துடன் குறுக்கிடப் பார்க்கையில் அவர் புன்னகையுடன் கை அமர்த்தினர்.

''இந்த மாதிரி நிலையில் ஆத்திரம் வரும். நான் மட்டும் ஏன் இப்படிக் கஷ்டப்பட வேண்டும்? எல்லாரும் நன்ருக இருக்கிருர்களே, வேகமாக ஓடுகிருர்களே என்கிற ஆங்காரத்தால் ஆத்திரம் வரும்.

''நாம எல்லோருமே ஏதோ ஒரு சாதனைக்காகப் பிறந்திருக்கோம் மிஸ்டர் ஹரி. இந்த உடம்பு அதற்குக் கருவி. கருவி கொஞ்சம் சேதமடைஞ்சு போச்சு என்கிறதுக்காக நம்ம வேலையைக் கவனிக்காம விட முடியுமா?''

''இது உபயோகமில்லாத கருவி.''

''அதைஉபயோகமாக்கறதிலேதான் உங்க சாமர்த்தியம் இருக்கு. உங்களை விட மோசமான நிலையிலே இருக்கிற எத்தனையோ பேர் சரீரத்தைப் பத்திய பிரக்ஞையே இல்லாம அதோட உபாதையை ஒரு தடங்கலாவே நினைக்காமெ வாழ்கிருர்கள்!

''மனசு உடைஞ்சு அழுவது ரொம்பச் சுலபமான வழி மிஸ்டர் ஹரி. இந்த உடம்புக்கு எதற்கு இத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? லுக் அட் இட் ஆஸ் எ சாலஞ்ச்!''

ஹரி தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்தான்.

வர்மா எழுந்து அவன் முதுகைத் தட்டினர்.

''இனிமே முகத்தைத் தொங்கப் போட்டுக்கொள்ளாதீர்கள். ஓட்டப் பந்தயத்தில் முதல்ல வர முடிஞ்சாத்தான் ஓடுவேன் இல்லேன்னு ஓடி என்ன லாபம்னு எல்லாரும் இருந்தா பந்தயம் எங்கே இருக்கும்?''

வர்மாவிடம் பேசிவிட்டு வந்த பிறகு மனசு மெள்ள மெள்ள விரிந்து கொண்ட மாதிரி இருந்தது. ஒரு கண நேரப் பலவீனத்தில் எத்தனை அசட்டுத்தனமான மனச் சோர்வுக்கு ஆளாகிப் போனேம் என்று வெட்கமே ஏற்பட்டது.

'இந்தச் சரீரத்துக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்?'

அவனுக்குச் சிரிப்பு வந்தது. 'அதாவது உனக்கு இருபத்தி எட்டு வயது என்கிற ஞாபகம் இருக்கக் கூடாது!' என்கிருர்.

ஞாபகங்கள்.

அவைதாம் என் மனத்துக்கு விலங்குகள். அவற்றை விலக்கிக் கொண்டு வெளியேறிஞல்தான் நமக்கு விமோசனம்.

சாந்தியைப் பார்த்துப் பழையபடி சுலபமாகச் சிரித்தான்.

''ஸாரி சாந்தி. நான் அந்த மாதிரி உங்களைக் கேட்டிருக்கக் கூடாது'' என்ருன்.

''சமயத்தில் டாக்டர் வர்மா எனக்கு நல்ல ப்ரெயின் வாஷ் கொடுத்தார். மனசிலே எந்த மாதிரி எண்ணங்கள் இருந்தாலும் என் நிலையிலே சட்டுனு உளறிடக் கூடாதுன்னு புரியறது இப்போ!'' என்ருன். (தொடரும்)

கைலாச தரிசனம்

இயற்கை எழிலிலே இறைவன் என்றும் கொலு வீற்றிருக்கும் புனிததலம் கைலாசம். அதன் அருகே அருட்கடலான மானசரோவர் என்னும் தடாகம். காரைக்கால் அம்மையார் காலத்திலிருந்து, கணக்கற்ற இடர்களைக் கடந்து, அடியார்கள் மேற்கொள்ளும் யாத்திரை, கடந்த சில ஆண்டுகளாகத் தடைப்பட்டிருந்தது. இன்று மறுபடி வழி திறந்துள்ளது!

ஒரு தலைமுறை இடைவெளிக்குப் பிறகு கைலாச — மானஸரோவர் யாத்திரைக்கு வழி திறந்துள்ளது.

தலாய் லாமாக்களின் அருளாட்சியில் திபேத் இருந்தவரை இந்தியர்கள் ஆண்டுதோறும் கைலாச — மானஸரோவர் யாத்திரை மேற்கொள்வது சாதாரணமாக இருந்தது— அதாவது அதற்கெனத் துணிந்தவர்களுக்கு! திபேத்தைச் சீன தனதாக்கிக்கொண்ட 1959ம் ஆண்டு முதல் இந்த வாய்ப்பு பக்தர்களுக்கு இல்லை. ஜூன் மாதம் இந்தியாவுக்கு வந்த சீன வெளிநாட்டமைச்சர் ஹுவாங் ஹுவா நமது வெளி விவகார மந்திரி திரு பி. வி. நரசிம்மராவ் இருவரும் சந்தித்தபோது நல்லிணக்க அடையாளங்களில் ஒன்ருக கைலாசம் — மானஸரோவர் போக விரும்பும் யாத்திரிகர்களுக்கு சீன அரசு அனுமதி அளிக்க ஒப்புக்கொண்டது.

அரசாங்க அறிவிப்பு வந்தவுடனேயே ஆயிரம் மனுக்கள் வெளி விவகார அமைச்சுக்கு வந்து குவிந்தன. ஒரு தடவைக்கு இருபது பேரே செல்லலாம், மூன்று கோஷ்டிகளே இந்த ஆண்டு செல்லலாம் என்ற நிலையில் சீட்டுக் குலுக்கிப் போட்டு யாத்திரிகர்களை அரசு தேர்ந்தெடுத்தது. முதல் ஆண்டில் முதல் கோஷ்டியில் (செப்டம்பர்) பயணம் சென்று வந்த திரு சுதர்ஸன் லாலையும் திரு தேவ் முகர்ஜியையும் சந்தித்தேன்.

திரு சுதர்ஸன்லால் ஒரு பஞ்சாபி. டில்லி வாசி. ரிசர்வ் பாங்க் ஊழியர். வயது 52.

''கடினமான சூழ்நிலையை உடம்பு தாங்குமா என்று மருத்துவ சோதனை செய்தே எங்களை எடுத்தார்கள். அப்படியும் மூன்று பேர் எங்கள் கோஷ்டியில் பாதியில் நின்று விட்டார்கள். நடைக்கு அஞ்சக் கூடாது. எந்த வசதியும் கேட்காமல் வாழத் தெரிய வேணும். அப்போதுதான் இந்த மாதிரி யாத்திரைகளை அனுபவிக்க முடியும்'' என்ருர் சுதர்ஸன்லால்.

செலவு அதிகமோ?

''அதிகம் என்று சொல்ல முடியாது. உத்தரப் பிரதேசத்தில் இந்திய அரசு ஆதரவு பெற்று வரும் குமாயூன் மண்டல் விகாஸ் நிகம் என்ற நிறுவனம் எங்கள் பயண ஏற்பாடுகளைப் பார்த்துக் கொண்டது. டில்லியிலிருந்து புறப்பட்டு டில்லி திரும்பும்வரை அவர்கள்பொறுப்பு. தலைக்கு ரூ2500 வாங்கிக் கொண்டார்கள். தவிர, சீன எல்லைக்குப் போனதும் அங்கே மலை ஏறும் குதிரை, சாமான் சுமக்கும் ஆள். செலவு ஆகாரச் செலவு முதலியன கொஞ்சம்தான். பிரயாண ஏற்பாடுகளுக்காகத் தடிமனை கம்பளி உடை அது இது என்று மொத்தத்தில் நாலாயிரம் ரூபாய் ஆகிவிட்டது எனக்கு.''

யாத்திரையின் நினைவாக மான்ஸரோவர் புனித நீரையும், பல வண்ணங்களில் அங்கே கிடைத்த மணலையும் கொண்டு வந்திருக்கிருர். புகைப்படங்கள் எடுத்திருக்கிருர்.

உத்தரப் பிரதேசத்தின் வடக்குப் பகுதியில் லிபு—லேக் என்னும் மலைகளுக்கு இடையில் உள்ள கணவாயைக் கடந்து இந்திய எல்லை தாண்டி நாலு மணி நேர ஜீப் பயணத்தில் இருபதாவது மைலில் உள்ளது தக்ளகோட் என்னும் சின்னஞ்சிறுதிபேத்திய நகரம். இங்கேதான் யாத்திரிகர்கள் மானஸரோவர் கைலாசம் போக 'விஸா' பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தியர்கள் தான் பல ஆண்டுகளாக வரவில்லையே தவிர நேபாளிகள் (அவர்கள் இந்துக்கள்தானே) ஆண்டுதோறும் மானஸ ரோவர் — கைலாச

✖ பனிமுடிய சிகரத்துடன் கைலாசம்



மருத்துவக் கல்லூரி

மிகப் பெரிய பரப்பளவில் (225 ஏக்கர்) பெரிதாகக் காட்சி தருகிறது தஞ்சை மருத்துவக் கல்லூரி. சென்னை ஸ்டான்லி அளவு இங்கும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். 1959ல் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டினார். 1963லிருந்து இயங்கத் துவங்கியது.

இங்கு எம்.பி.பி. எஸ்ஸுக்கு (4½ ப்ளஸ் 1) பின்னர் 18 விதமான போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தவிர டிப்ளமா கோர்ஸ்களும் உண்டு. ஃபார்மஸி, நர்ஸ் சேவை, குழந்தைப் பேறு, கண் சிகிச்சை இது போன்ற பல வகைகள் இதில் அடக்கம். (கடைசியாகக் குறிப்பிட்ட கோர்ஸ், சமீபத்தில் அரசாங்கம் பிறப்பித்த உத்தரவால் வந்தது) ஏழு ஹாஸ்டல்கள் உள்ளன — ஐந்து மாணவர்களுக்கு; மற்றவை ஹவுஸ் ஸர்ஜன்களுக்கு. ஹாஸ்டல்களின் பெயர்கள் சற்று வேடிக்கை —பாரகன், ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸ்... இப்படி... படிக்கையிலேயே ஆராய்ச்சியில் தீவிர கவனம் செலுத்தும் பொருட்டு ஊக்கம் அளிக்கப்படுகிறது. குறிப்பிட்ட சிலரைத் தேர்ந்தெடுத்து உதவித் தொகையும் வழங்குகிறார்கள். ஆராய்ச்சிக்கென 'அனிமல் ஹவுஸ்' உண்டு.

இங்குள்ள மாணவர்கள், தஞ்சையை ஒட்டிய மூன்று கிராமங்களுக்கு — வல்லம், பூதலூர், நடுக்காவேரி — 'வேனில்' சென்று சுகாதாரம், நோய்த் தடுப்பு ஆகியவற்றை சொல்லிக்கொடுத்து வருகிறார்கள். குறிப்பாக வல்லம் பகுதியில் யானைக் கால் வியாதி சற்று அதிகம். அந்த நோய் வராது தடுப்பதில் அக்கறை காட்டுகிறார்கள்.

இங்குள்ள டாக்டர் ஜமால் — பிளாஸ்டிக் சர்ஜரி நிபுணர் — இவ்வியாதிக்காக ஓர் ஆபரேஷனைக் கண்டு பிடித்திருக்கிறார். Nodo-Venous Shunt எனப்படும் அவ்வகையில் அதிகமாக இருக்கும் திசுக்களை அகற்றிவிட்டு, பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் சரிப்படுத்திவிடுகிறார். நாலு வருடம் ஆகிறதாம் இந்த முறை கண்டுபிடிக்கப்பட்டு.

கல்லூரியை யொட்டிய ஆஸ்பத்திரியில் எல்லா நவீன டிபார்ட்மெண்டுகளும் இயங்குகின்றன. தோல், எலும்பு முறிவு, 'பீடியாட்ரிக்', எஸ்.டி.டி. எனப்படும் ரகசிய நோய்— எல்லாவற்றுக்கும் தனி டிபார்ட்மெண்டுகள். லேடஸ்ட் அடிஷன் — நியூராலஜி. ஓபன் ஹார்ட் சர்ஜரி செய்கிற வசதிகூட உண்டாம்.

பின், என்னதான் வசதிக் குறைவு இங்கே?

நாம் அறிந்தவரைக்கும் முக்கியமானது, 'ஸ்டீம்லாண்டரி' இல்லாதது; இதன் மூலம் தான் பாக்டீரியாக்களை முற்றும் அழித்துவிட முடியும். கான்ஸருக்கான 'கோபால்ட்' தெரபி இல்லை; உடல் பூராவும் சோதித்து அறிந்து கொள்ள நவீன 'ஸ்கேனர்' கிடையாது. ஒரு டாக்டருக்கு லேசாகத் தலை வலித்துக் கொண்டிருந்தது. சாதாரணத் தலைவலி என்று மருந்து சாப்பிட்டாராம். அப்புறம் தற்செயலாகச் சென்னை சென்றபோது மறுபடியும் தலை வலித்ததாம். அங்குள்ள டாக்டரும் சோதித்து, சீரியஸாகஒன்றுமில்லை என்று ஏதோ மாத்திரை தந்திருக்கிறார். அவர் திருப்தி அடையாமல் ஸ்கேனரில் பரிசோதனை செய்து பார்த்துவிடலாம் என்றிருக்கிறார். பார்த்தபோது மூளைக் குழாய் வெடித்து லேசாக ரத்தம் சொட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது! உடனே தக்கபடி சிகிச்சை அளித்துக் குணப்படுத்தி விட்டார்கள். 'ஸ்கேனர்' என்னதான் விலை அதிகமானாலும் உயிர்காக்கும் கருவிக்கு எந்த விலையும் கொடுக்கலாமே!

○ அனாடமி டிபார்ட்மெண்ட் நுழைவாசலில்...

19

"ஹரி! தும் ஹரோ ஜனகீ பீர்....!',

சாந்தி திடுக்கிட்டுக் கண் விழித்தாள்.

பக்கத்து அறை ஸுஷ்மா டிரான்ஸிஸ்டரைப் பலக்க முடுக்கிவிட்டு அதோடு தானும் பாடிக் கொண்டிருந்தாள்.

சாந்தி சோம்பலுடன் எழுந்து உட்கார்ந்தாள். கட்டிலுக்குப் பக்கத்தில் ஜன்னல் இருந்தது. நாற்சந்தியும் பஸ் ஸ்டாப்பும் சில ஆட்டோ ரிக்ஷாக்களுக்கும் தெரிந்தன. இன்னும் டில்லி முழுசாக விழித்துக்கொள்ளவில்லை. ஒரு மணி நேரத்துக்குப் பிறகு வாகனங்கள் அரக்கப் பரக்க விரைந்து கொண்டிருக்கும், பஸ்ஸில் இடம் கிடைக்காமல் ஆட்டோ ரிக்ஷாக்களைத் தேடிக்கொண்டு பிரயாணிகள் நிற்பார்கள்.

''கூடத்தே கஜராஜ ராக்ஷோ....''

எம். எஸ்.ஸின் குரலுக்கு இணையாக மேலே போக முடியாமல் ஸுஷ்மாவின் குரல் மூன்று நான்காகப் பிரிந்தது.

சாந்தி தனக்குள் புன்னகைத்தபடி கட்டிலிலிருந்து எழுந்தாள்.

''எனக்குக் கல்யாணம் சாந்தி!'' என்று நேற்றுத்தான் முகமெல்லாம் சிரிப்பாக ஸுஷ்மா தெரிவித்தாள். கண்களில் ஏராளமான கனவுகளும் எதிர்பார்ப்புகளும் தெரிந்தன.

''கங்க்ராஜுலேஷன்ஸ்'' என்று வாழ்த்தும்போது, 'ஓ இத்தனை கனவு காணாதே. அதிகம் எதிர்பார்க்காதே' என்று சொல்லவேண்டும் போலிருந்தது. அது ஒரு லாட்டரி. அதிர்ஷ்

அந்தி நேரத்து நியாயங்கள்

வாஸந்தி

டச் சீட்டு, உன் பக்கம் விழும் என்று நிச்சயமாக இருக்காதே. ஆண்களின்எதிர் பார்ப்புகள் வித்தியாசமானவை. அவர்களது நியாயங்களும் தர்மங்களும் வித்தியாசமானவை....

'ஹரி... ஹரி.... ஹரி.... தும ஹரோ ஜனகீ.... பீர்....''

அவள் சட்டென்று தன்னை உசுப்பிக் கொண்டு எழுந்தாள். மனத்தின் சிந்தனைகள் எல்லாம் ஒரே கோணத்தில் சென்று ஒரே வட்டத்துக்குள் மாட்டிக் கொள்வது வழக்கமாகப் போய்விட்டது என்று அலுப்பேற்பட்டது. எத்தனையோ அலுவல்களுக்கு இடையில் அவசரமாக ஆபரேஷன் தியேட்டருக்கு விரைகையில், பேஷண்டுகளுக்கு உடற் பயிற்சி சொல்லிக் கொடுக்கையில் திடீரென்று முன்னறிவிப்பில்லாமல் நடராஜனின் நினைவு வந்து நின்று எண்ண ஓட்டத்தைத் தடைப்படுத்துகிறது. நான் என்ன தவறு செய்தேன், எதற்கு இத்தனை பெரிய தண்டனை என்கிற ஆத்திரமும் கேள்வியும் சமாதானமாகிற வழியாக இல்லாமல் நேரமில்லாத நேரமெல்லாம் மனத்தில் தோன்றிக் குழப்புகிறது....

''சாந்தி ரெடியா?''

''இதோ பத்து நிமிஷம்!'' அவள் அவசரமாக எழுந்து தன்னைத் தயார் செய்து கொள்ள ஆரம்பித்தாள். இங்கு தங்க ஆரம்பித்ததிலிருந்து வீட்டுப் பொறுப்பே இல்லாமல் நடராஜனின் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லாமல் இருந்தும் மனசில் இனம் புரியாத ஏக்கம் மனத்தை வாட்டுவது ஆச்சரியமாக இருந்தது. ஏதோ நழுவிப்போன மாதிரி... எதிலோ தோற்றுப் போன மாதிரி....

வேறு ஒரு பெண்ணை வீட்டில் அழைத்து வைத்துக் கொண்டிருக்கிறான் என்று ரமா சொன்ன அன்று இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. எத்தனை கேவலமாக நம்மை ஏமாற்றி விட்டான் என்கிற கோபமும் துக்கமும் அழுகையுமாக வந்தது. மற்றவர்களுக்கு விஷயம் தெரிந்த போது அவளை விட அதிகமாகஆத்திரப் பட்டார்கள்.

''இத்தனை மோசமான ஆசாமிக்காக நீ வருத்தப் படறியே, உன்னைவிட அசடு யாருமில்லை'' என்றார்கள்.

''கோர்ட்டுக்குப் போ! டைவோர்ஸ் பண்ணிடு அந்த ஆளை!''

''சாந்தி! நாங்க கிளம்பறோம்!''

சாந்தி அவசரமாகப் பௌடரைச் சரி செய்துகொண்டு கதவைப் பூட்டிக்கொண்டு கிளம்பினாள்.

''சரியான லேட் லத்தீஃப்பாப் போயிட்டே நீ சாந்தி. வீட்டிலேந்து கிளம்பி வரும்போது எங்களை விட முன்னாடி வந்து சேர்ந்துடுவே. இப்ப என்ன ஆயிடுத்து உனக்கு?''

''உன் பாட்டைக் கேட்டு ஸ்தம்பிச்சுப் போயிடறேன் ஸுஷ்மா! அதுக்கப்புறம் கையும் காலும் ஓடறதில்லே!''

சுற்றிலும் 'ஓ'வென்ற சிரிப்பு அலை அலையாய் எழும்புகையில் மனசு சற்று லேசாகப் போயிற்று.

''ஏய், சுஷ்மா! கல்யாணத்துக்கு அப்புறமும் இப்படி அலறிண்டிருக்காதே. ஒரே வாரத்திலே உன் புருஷன் வீட்டுக்கு அனுப்பிடப் போறார்! சாந்தி பட்ட பாட்டிலே நாம எல்லாம் எந்த மூலை?....''

சட்டென்று ஓர் அவமான உணர்வு மனத்தை வியாபித்தது. நம் விஷயம் ஒரு

கேலிக்குரிய பேச்சாகப் போய்விட்டது என்று கூச்சமேற்பட்டது.

அவள் தன் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு வேகமாக நடந்தாள்.

''அந்தப் புருஷனுக்காக நீ ஏன் இப்படி உருகறே சாந்தி?''

''நான் உருகறேன்னு யார் சொன்னது?''

''உன் உடம்பு நாலு கே.ஜி. குறைஞ்சிருக்கே நிச்சயமா!''

''அதெல்லாம் உன் கற்பனை ஸுஷ்மா! நான் அப்படியேதான் இருக்கேன்.''

அவள் அவசரமாக ரீஹாபிலிடேஷன் வார்டுக்குள் நுழைந்தாள். அதுதான் நம்புகலிடம். மனத்தின் துக்கங்களை, ஏக்கங்களைச் சுலபமாக மறக்கச் செய்யும் புகலிடம்.

ரெஜிஸ்டரில் கையெழுத்துப் போடும் போது கைவளை லொட லொடவென்று விழுந்து இடித்தது. அவள் அதைக் கழற்றிக் கவுன் பாக்கெட்டுக்குள் நுழைத்துக்கொண்டாள். உடம்பு இளைத்திருப்பது நன்ருகத் தெரிந்தது. அவளை அறியாமல் உடம்பு இளைக்கிறது. எந்த இழப்புக்காகவோ துக்கம் காக்கிற மாதிரி. இந்த மனத்தின் அசட்டுத்தனம் எப்போது போகும்?

''குட்மார்னிங் நர்ஸ்!''

''குட்மார்னிங் குப்தா ஸாப்!''

''நமஸ்தே சாந்தி பெஹன்!''

''நமஸ்தே ரமேஷ் பையா!''

அவள் அவசரமாக முழு மனசையும் தன்னுடைய பிரத்தியேகமான உலகத்துக்குள் நுழைந்தாள்.

சற்றுத் தொலைவில் ஹரி சக்கர நாற்காலியில் உட்கார்ந்தபடி உடற் பயிற்சி செய்து கொண்டிருந்தான்.

அவளைப் பார்த்துக் கையசைத்தான்.

அவள் புன்னகைத்தபடி தன் வேலையைத் தொடர்ந்தாள்.

அவன் ஓர் அபூர்வமான மனிதன் என்று தோன்றிற்று. எத்தனை எளிமையான பரந்த மனசு அவனுக்கு என்று ஆச்சரிய மேற்பட்டது. திடீரென்று ஏற்பட்டுப் போன உடல் ஊனத்தினுல் இடையிடையே மனம் சோர்ந்தாலும் எத்தனை சீக்கிரம் தெளிந்து விடுகிருன்! இவனுக்கு இப்படி ஆனதும் கல்யாணம் நின்றுபோனதும் மாயாவின் துரதிர்ஷ்டம். தப்பே நினைக்காத மனசு, அன்பைப் பொழிகிற மனசு — எத்தனை பேர்களுக்கு இருக்கும்!

அவன்மேல் அன்று தனக்கு ஏற்பட்ட கோபத்தை நினைத்து வெட்கம் ஏற்பட்டது. அன்றைக்கு இருந்த மனநிலையில் எல்லார் மேலும் ஆத்திரம் வந்தது. எல்லார் பேச்சும் தப்பாகப் பட்டது. ஆனுல் அப்படிக் கோபப்பட்டதும் நல்லதுக்குத்தான் என்று அவள் நினைத்துக் கொண்டாள். யார் என்ன சொன்னுலும் பேசாமல் இளித்துக் கொண்டு இருக்கும் வகை இல்லை அவள் என்று புரிந்திருக்கும்.

அன்று மாலையே அவன் அவளைப் பார்த்து வெள்ளையாய்ச் சிரித்து 'ஸாரி' என்றது இன்னும் மனத்தில் பசுமையாக நின்றது.

'மனசிலே எந்த மாதிரி எண்ணம் இருந்தாலும் கொட்டிடக் கூடாது'ன்னு புரியறது....'

நம்மைப் பற்றி என்னமாதிரி எண்ணங்கள் இருக்கும் இவனுக்கு?

அவன் அருகில் சென்று அவள் ''குட்மார்னிங்'' என்ருள் மென்முறுவலுடன்.

''வெரி குட்மார்னிங்'' என்று அவன் சிரித்தான்.

''ரொம்ப உற்சாகமா இருக்கீங்களே இன்னிக்கு!''

''என்னைவிட உற்சாகமா யார் இருக்க முடியும்?''

அவள் லேசான அதிர்வுடன் அவனைப் பார்த்தாள். தோளில் கையை வைத்தாள்.

''வாஸ்தவத்திலே உங்க காலைப் பத்தின நினைப்பே எனக்கு வரதில்லே ஹரி.''

''எனக்கே நினைப்பு இல்லே — அது இயங்கினுத்தானே ஞாபகத்திலே நிற்கும்?''

''மனசு ஒண்ணு நல்லபடியா இயங்கினுப் போதும் ஹரி!''

''அட்ரு சக்கை! பின்னே என்னுடை தங்கை உங்களுக்கு என்ன ஆட்சேபணை? நல்ல காம்பினேஷனு இருக்குமே? நீங்க என் உடம்பைப் பாதுகாக்க நான் உங்க மனசைப் பாதுகாக்க.... யாரும் எதுவும் சொல்ல சான்ஸே இல்லே. எனக்காக நியமிக்கப் பட்டிருக்கும் நர்ஸ் நீங்கன்னு சொல்லிக் கலாம்.....!''

அவள் சிரித்துக் கொண்டே அவனுடைய கால்களை நீட்டி காலிப்பரைப் பொருத்தினுள்.

''வேண்டாம், ஏன்னு அதுக்கு அவசியமே இல்லே.''

சட்டென்று அவள் ஒரு மௌனத்தில் ஆழ்ந்தாள்.

இரும்புச் சட்டங்களைப் பிடித்தபடி நடக்க அவள் அவனுக்கு உதவினுள்.

அவன் வெகு தீவிரத்துடன் ஒரு முனைப்புடன் நடை பழகுவதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

அவனுக்கு நெற்றியில் வியர்வை அரும்பிற்று.

கண் கொள்ளாக்காட்சி!

ஸ்ரீ குரு ஜோளிராம் கோஸ்வாமி மடம் எல்லையம்மன் கோவில் தெருவில் இருக்கிறது. சிவாஜியின் குரு ஸமர்த்த ராமதாஸரின் சிஷ்யர் ஒருவரால் சுமார் 300 வருஷங்களுக்கு முன் தஞ்சாவூரில் நிறுவப்பட்டு, ஒவ்வொரு வருஷமும் ஸ்ரீராம நவமி உத்ஸவம் நன்ருக நடந்து வருகிறது.

இந்த மடத்தில் வைஷ்ணவ ஸ்தலங்கள் 108னுமுள்ள மூர்த்தி ஒவ்வொருவருக்கும் ''தஞ்சாவூர் பாணி''யில் அழகான சிறுபடங்கள் தயார்செய்து அவற்றை ஒரே கண்ணுடி பிரேமில் வைத்திருக்கிருர்கள். ஒவ்வொரு ஸ்தலத்தின் பெயரும் குறிப்பிட்டிருக்கிறது. இது அரிய கண் கொள்ளாக்காட்சியாக இருக்கிறது.

-த. இரா. இராஜகோபாலன்



உங்கள் கேசம் அடர்த்தியின்றி சக்தியின்றி இருக்கிறதா? உங்கள் கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும் ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தியின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும் காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம் நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப் படியவைத்து அதற்குத் தேவையான எல்லா ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம் உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும் தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
EGG
Halo
SHAMPOO
MADE in INDIA
HES-G-6 TM

''இந்த மாதிரி அடி மேலே அடி வைத்து நான் என்ன சாதிக்கப் போறேன் சாந்தி?''

''எல்லோரும் ஓட்டப் பந்தயத்திலே ஓட வேண்டிய அவசியமில்லே ஹரி... உட்கார்ந்த படியே மத்தவங்க ஓடறதைப் பார்க்கறதும் நல்ல பொழுதுபோக்கு!''

''உங்க மண்டையை ஒரு மொத்து மொத்தினு அதுவும் நல்லா இருக்கும் தெரியுமா?''

அவள் சிரித்தாள். மெல்ல அவனை மறுபடி சக்கர நாற்காலிக்கு அழைத்து வந்தாள்.

அவன் நெற்றியை அழுத்தித் துடைத்துக் கொண்டான். ''டாக்டர் என்னை இன்னும் பத்து நாள்லே டிஸ்சார்ஜ் பண்ணப் போற தாச் சொன்னுர் தெரியுமோ?''

''தெரியும், அதுக்கப்புறம் நீங்க வாரா வாரம் செக்கப்புக்கு வரணும் கொஞ்ச காலத்துக்கு.''

''அதைத் தவிர என் வீட்டுக்கு நீங்க வர மாட்டீங்களா என்னைப் பார்க்க?''

அவள் ஒரு விநாடி அவனைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.

''கண்டிப்பா வருவேன்!''

''ஒரு காரோ,ஸ்கூட்டரோ வாங்கிடுங்க!''

''ஏன், பஸ்ஸிலே வரக்கூடாதா உங்களைப் பார்க்க?''

''பஸ்ஸிலே வந்தா எனக்கு லாபமில்லே!''

அவள் குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்.

அவன் சிரித்தான்.

''நான் பெட்ரோல் பங்க் வைக்கப் போறேன்!''

அவள் சட்டென்று சிரித்தாள்.

''வியாபார குணம் இப்பவே வந்தாச்சு!''

''அந்தக் குணம் எனக்கில்லே. உங்களுக்குத்தான். ரொம்பக் கணக்குப் பார்க்க றீங்க!''

பத்து நாட்கள் என்பது வெகுதூரத்தில் இருக்கவில்லை. திரும்பிப் பார்ப்பதற்குள் வந்து நின்றபோது உண்மையில் அவளுக்குத் திக்கென்றிருந்தது. அந்த ரீஹாபிலிடேஷன் வார்டின் ஓர் அங்கமாக அவன் ஆகிவிட்டிருந்தது புரிந்தது. அவன் ஏதோ தன் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளப் பார்க்கிறவன் மாதிரி ஒவ்வொரு படுக்கைக்குப் பக்கத்திலும் சக்கர நாற்காலியை நகர்த்தி உட்கார்ந்து மணிக் கணக்காகப் பேசினுன். டாக்டர் வர்மா கண்டிப்பாக ஸ்ட்ரெச்சரில் யாரையும் வீட்டுக்கு அனுப்ப மாட்டார் என்று தைரியம் சொன்னுன். தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றின கவலையே அவனுக்கு இல்லையென்று அவள் நினைத்துக்கொண்டாள். எப்படிப்பட்ட அபூர்வமான மனிதன் இவன்?

காலையிலிருந்து ஏதோ ஒரு வேதனை மனத்தை அரித்தது. மிக ஆப்தமான ஒரு ஜீவன் பிரியும் நேரத்தை நெருங்கிய மாதிரி. இந்த மாதிரி முட்டாள் தனமான ஸெண்டிமெண்ட் நமக்குள் எப்படி நுழைந்தது என்று அவளுள் திகைப்பேற்பட்டது. வெட்கமேற்பட்டது. அவள் டியூட்டி முடிந்து கிளம்பும்போது அவன் அவள் கைகளைத் தன் கைக்குள் வைத்துக் கொண்டான். நிர்மலமாகப் புன்னகைத்தான்.

''சாந்தி, உங்களுக்கு என் ஸ்பெஷல் தாங்க்ஸ். நான் இப்பப் பாதி ஆளாவாவது இருக்கறதுக்கு நீங்கதான் காரணம்.''

அவள் தன் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு சிரித்தாள்.

''பாதி ஆள்தானு இன்னும்? முழு ஆள் ஆகவேண்டாமா?''

''அதுக்கெல்லாம் நான் ஆசைப்படக் கூடாதுன்னு வெச்சிருக்கேன். மத்தவங்களுடைய ஒத்துழைப்பை வரம்புக்கு மீறி எதிர் பார்க்கக் கூடாதுன்னு புரிஞ்சுண்டிருக்கேன்! பாதி ஆளா இருந்தா என்ன? நீங்க சொன்ன மாதிரி இந்தச் சக்கர நாற்காலியிலே உட்கார்ந்தபடி உலகத்தைப் பார்க்கறதும் ஒரு நல்ல பொழுது போக்கு!''

அவளுக்குள் கண்களில் நீர் துளிர்க்கப் பார்த்தது. சட்டென்று உள்ளுக்குள் இழுத்துக்கொண்டாள்.

''சாந்தி ஆறரை மணிக்கு மோகன் என்னை அழைச்சிண்டு போக வருவான். அந்தச் சமயத்திலே வர்றீங்களா?''

''வறேன்.''

அவள் ஹாஸ்டலுக்குச் சென்று டீயும் டிபனும் சாப்பிட்டு விட்டுக் குளிக்கச் சென்ருள். ஷவருக்கு அடியில் நிற்கையில் கண்களிலிருந்து அர்த்தமில்லாமல் நீர் வழிந்தது. இந்தக் கண்ணீருக்கும் மனசுக்கும் விவஸ்தையில்லாமல் போய்விட்டது என்று தோன்றிற்று.

அவள் புடவை கட்டித் தன்னை அலங்கரித்துக்கொண்டு ஹாஸ்டல் படியிறங்கி ஆஸ்பத்திரியை நோக்கி நடக்க யத்தனிக்கையில் திடுக்கிட்டு நின்ருள்.

நடராஜன் நின்றிருந்தான் மிக லேசான புன்னகையுடன்.

''உன்னைத் தேடிக்கிட்டுத்தான் வந்தேன் சாந்தி'' என்ருன். பிறகு தலையைக் குனிந்தபடி, ''என்னை மன்னிச்சுக்க. தயவு செய்து வீட்டுக்கு வா'' என்ருன்.

அவள் அதிர்ந்து போனுள்.

(தொடரும்)

தஞ்சையிலுள்ள நவீன ஆலை, சூரிய சக்தியில் நெல் உலர்த்தும் ஆலை—தமிழகத்தில் முதலாவது ஆகும்.

-வசந்தா கோவிந்தன்



நாக்கு மேலண்ணத்தில் சுழற்றிக்கொண்டது. பேச்சு வாய்க்குள்ளேயே பந்தாடிற்று. பிரமிப்புக் கொஞ்சம் கூடுதலாய்ப் போனதில் இத்தனே நேரம் ஈஷிக் கொண்டிருந்த வலிகூடத் திசை மாறிற்று. சாணளவு திறந்த கதவைச் சுவரில் அறைபடுகிற மாதிரி பரக்கத் திறந்தன கைகள். சந்தோஷத் தடுமாற்றத்தில் கைகள் திடுமென்று விதிர்த்தன.

''ஹேய் ரோகிணி....''

ராஜிதான்! அவளால்தான் இப்படி உயிரோட்டம் பாய்கிறகுரல் எழுப்ப முடியும்.

''ராஜி.... வா ராஜி.... உள்ளவா ராஜி''

உருளைகள் இடையில் நுழைக்கப்பட்ட கரும்பாய் வார்த்தைகள் சக்கையாய் இடறி வெளி வந்தன. கண் மட்டும் சந்தோஷத்தைக் கொண்டாடும் வகையில் அகன்று போயிற்று. ராஜியின் தோளைத் தாண்டிப் பார்வை தெருவில் பரவியபோது அந்தக் கார் தெரிந்தது; ராஜ வாகனமாய் முக்கால் தெருவை அடைத்துக் கொண்டு. டிரைவர் இன்னும் கட்டளைக்காய்க் காத்திருப்பவனாய் மூடின கதவில் உடலை லேசாய் இருத்தியிருந்தான். ரோகிணிக்கு லேசாய்ப் புன்முறுவல் கூடிற்று. இந்தத் தெருவில் எப்படி காரில் வர முடிந்தது? ராஜியைக் கைப்பிடித்து உள்ளே அழைத்து வருகையில்மெதுவாய் உடல் அசத்திற்று. வயிற்றோரத்து வலி புதுசாய்க் கோபம் காட்டிற்று.

''ஜமாய்ச்சுக்கிட்டு இருக்கே போலிருக்கு! எத்தனை மாசம் ரோகிணி ''

ரோகிணிக்கு இயல்பாய்க் கன்ன மேடுகளின் கறுப்பூடே சிவப்போடிற்று.

''நாலு மாசம்... ஊருக்கு எப்ப வந்தே ராஜி.... வரப் போறேன்னு லெட்டர் கூடப் போடலியே ... என்ன சாப்பிடறே? எங்க வீட்டுலல்லாம் காப்பி சாப்பிடுவியா, இல்லே கூல்ட்ரிங்குக்குச் சொல்லவா?''

ராஜி சட்டென நின்றாள். அடிபட்ட வேதனே முகத்தில் தெரிந்தது.

''என்னைக்கூடவா ரோகிணி நீ அப்படி நெனைக்கணும்? உன்னைத் தேடி இந்த வட்டாரம் பூராச் சுத்திச் சுத்தி வந்து கடைசில கண்டு பிடிச்சுட்டோம்கிற சந்தோஷம் மனசிலே கிளம்பறதுக்கு முன்னாடி இப்படி பொட்டுனு அடிச்சிட்டியே...'' — வேதனை இழைகள் ஓடுகிற குரலைக் கேட்டதும் ரோகிணிக்கு மனம் பொசுங்கிற்று.

''ஸாரி ராஜி.... உக்காரு... காஃபி போடறேன்...''

ராஜி உட்காராமல் வீட்டைச் சுற்றிப் பார்வையை ஓட்டினாள். பத்தடிக்குப் பத்தடியில் இரண்டு பக்கங்களிலும் கசிந்த சுவர்கள். நாய் குதறின ரொட்டி மாதிரி குழி விழுந்த தரை. இரண்டு சுவர்கள் சேர்கிற மூலையில் பிரிமணைகளில் பானைகள். ஒன்று மூடியும் மூடாமலும் ஒன்று மூடாமலும்... நேர் மேலே சிலந்தி ஒன்று முனைந்து முனைந்து கூடு கட்டிக்கொண்டிருந்தது. எதிரெதிர் சுவர்களில் அறையப்பட்ட ஆணிகளுக்காய் இழுத்துக் கட்டப்பட்ட கயிற்றில் தடுப்பாய்த் தொங்குகிற கோணித் திரைக்குப் பின்னால் மூலையில் ஸ்டவ்வும் பலகைப் பிறையில் அலுமினியங்களுமாய்ச் சமையலறைப் பகுதி பிரிக்கப்பட்டிருக்க, ரோகிணி முகத்தில் வேதனைச் சுழிப்போடு, பாதி குனிந்த நிலை

யில், அடுப்பை மூனைந்து பற்ற வைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

பாவி... பாவி... என்று அரற்றிற்று மனம். தூசுகூடப் படாமல் இருந்த இருப் பென்ன? இப்போது இருக்கிற இருப் பென்ன என்று துடித்துப் போயிற்று. பேசா மல் இருந்தால் நினைப்பிலேயே துக்கம் சமுத் திரமாகிப் போகும் போலத் தோன்றிற்று.

''ராஜி ட்ராவல்ஸ் இப்ப பம்பாயிலேயும் கொடிகட்டிப் பறக்கிறது ரோகிணி... அப்பா டில்லியைப் பார்த்துக்கறுர். அண்ணு பாம்பே... நான் மறுபடியும் மெட்ருஸை எடுத்துக்கறேன்னு வந்துட்டேன்..அம்மாவும் கூடத்தான்... என்ன இருந்தாலும் லைஃப் முன்ன மாதிரி ஜாலியா இல்ல... உங்கூட கோன் ஐஸ்கிரீம் சாப்பிடறதுக்கு காரைப் போட்டுக்கிட்டு பாரிஸுக்குக் குதியும், கும் மாளமுமாய்ப் போனதெல்லாம் ஞாபகத் துல வந்துஅப்பப்பத் தொந்தரவு பண்ணும். நெறையப் பேசணும்... நீ சொல்லு உங் கதையை .... காலேஜ் படிப்பை முடிச்சியா இல்ல என்னைப் போல பாதில நின்னு- போச்சா ''

ரோகிணி பாலை அடுப்பில் ஏற்றிவிட்டு மெதுவாய்த் திரும்பிப் பார்த்துப் புன்ன கைத்தாள்.

''படிப்பு என்னத்துக்கு ஆகும்... நிறுத் திட்டேன்....''

''வீட்ல கலாட்டா?''

''நெறைய... கார் வச்சு அந்தஸ்தை வெளியில காட்டற அப்பாவுக்கு ஒரு டிரை வர் மாப்பிள்ளையா வரது வேப்பங் காயா இருந்தது. பின் முதுகில பெல்ட் பக்கிள் கிழிச்ச காயம் வடுவாத் தெரியுது.. பார்க் கிறியா? அம்மா இருந்தா என் பக்கம் இருந் திருப்பாங்களோ என்னமோ? நான் தியாகு வைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு வாய் திறந்ததால வந்த ஒரே வினை அவருக்கு மறுநாளே சீட்டுக் கிழிஞ்சதுதான்... அதே கையோட எனக்கு வேற எடத்துல ஒரு பைய னைப் பார்த்து நிச்சயம் பண்ணிட்டா நான் தியாகுவை மறந்திடுவேன்னு ஒரு சராசரி அப்பா மாதிரி எங்கப்பாவுக்கும் நம்பிக்கை. எனக்காக என்ன வேணு செய்வேங்கற ஒருத்தருக்காக நான் செய்ய வேண்டியது என்னவோ, அதான் நானும் செய்ஞ்சேன்... பேசாமப் புறப்பட்டு அவரோட வந்து வாழ ஆரம்பிச்சுட்டேன்... கோயில்ல மாலை மாத் திக்கிட்டோம்.''

பேசிக்கொண்டே ரோகிணி காஃபி கலந்து நீட்டினுள்.

''இப்ப தியாகு என்ன செய்யருரு?''

''ராணி மெட்டல் ஒர்க்ஸ்னு ஒரு ஒர்க் ஷாப்ல வேலை. போய்க்கிட்டிருக்காரு...''

''சௌகரியமா இருக்கியா?''

''சந்தோஷமா இருக்கேன்.''

''அதுக்கில்ல ரோகிணி... நீ ஏதொண் ணுக்கும் கஷ்டப்பட்டதில்லையே... சமை

குழந்தைகள்பாடு கும்மாளம்தான்!

மோதிரத்தின் உள்புறம் லத்தீன் மொழியில் ஒரு வாசகம் இருக்கிறது. அதை யாரேனும் படித்தால் போதும், வில்பை ஒரு நாயாக மாறிவிடுவான்! மந்திர மாயமோ ரிஷியின் சாபமோ எப்படியானுல் என்ன? இத்தகைய ஒரு கற்பனை வால்ட் டிஸ்னி திரைப் படத்துக்கு வைர மோதிரமாய்ப் பொருந்தி டால் அடிக்காதா!

போதாக் குறைக்கு அடிக்கடி சடைநாயாக மாறிவிடும் வில்பை தேர்தலுக்குவேறுநிற்கிருன்! நல்ல வனுக வேடம் போடும் ஓர் அரசு அதிகாரியை எதிர்த்துப் போராடு கிருன். சிரிப்பான சம்பவங்கள் அடுக்கடுக்காய் வர, குழந்தைகள் பாடு மட்டுமென்ன,பெரியவர்கள் பாடும் கும்மாளம்தான்!

தேர்தல் பிரசாரத்திடையே வில்பை திடீரென்று நாயாக மாறுவதும், மோதிரத்தை அவன் தேடிச் சென்று சந்திக்கும் இடர்ப் பாடுகளும் சிரிப்பலைகளைப் பொங் கச் செய்கின்றன, THE SHAGGY DA திரைப் படத்தில். கடைசியில் வஞ்சகனுன அதிகாரி அகப்பட்டுக் கொள்ள, வில்பைக்குத்தேர்தலில் அமோக வெற்றி; வால்ட் டிஸ்னி நிறுவனத்துக்கும் தான்!

டி.எம்.ஆர்.

யல்னு ஒரு பாத்திரத்தைத் தொட்டதில்லையே... தரையில் உட்கார்ந்து சாப்பிட்டதில்லையே... பத்தடிகூட நடந்து பழக்கமில்லையே... எப்படி உன்னால அட்ஜஸ்ட் பண்ணிக்க முடிஞ்சுது?''

ஆரம்பத்தில் கஷ்டமாய்த்தான் இருந்தது!

ஆனால் அவள் உப்பாய், சப்பாய் சமைத்ததெல்லாம் குறை பேசாமல் சிரித்துக்கொண்டே தியாகு சாப்பிட்டுப் போன பின், வாயில் குச்சி வைத்து அவள் சமைத்ததையே உள்ளே தள்ளுகையில் கண்களில் பொங்கிய கண்ணீரை அடக்கி, அடக்கி ரத்தத்தில் உப்பேறிப் போயிற்று. அறுநூறு வாங்கிய கைகள் இருநூறு ஏந்துகையில் கூட, அதில் அவளுக்குப் பிடிக்குமேயென்று மல்லிகையும், மல்கோவாவும் கொண்டு வந்த அவனது பரிவில் மனசு நெகிழ்ந்து போயிற்று. கூடவே உடம்பு நெகிழ்ந்து போனதில்தான் பிரச்னை கிளம்பிற்று. 'இந்தச் சமயத்தில் நல்ல ஊட்டமான சாப்பாடு சாப்பிடணும்... உடம்பு ஒரே அனீமிக்கா இருக்கு...மருந்து எழுதிக் கொடுத்தா சாப்பிடுவீங்களா....'

'எழுதிக் கொடுங்க டாக்டர்...'

"வீம்புக்காக வாங்கறார்னு பாத்தேன் ராஜி... ஆறுலேர்ந்து ரெண்டு வரைக்கும் ஒரு ஷிஃப்ட், அப்புறம் ஓவர்டைமுக்குன்னு இன்னொரு ஷிஃப்ட்... இப்படிக் கஷ்டப்பட்டார்டி... நான் என்ன பெரிசா அட்ஜஸ்ட் பண்றேன்.... அம்மா...'' வயிற்றில் சட்டென்று இழுப்பு ஓடிற்று. சுவரில் சாய்ந்தாள். காலை நீட்டிக் கொண்டதில் ஓலைப்பாய் முறமுறத்தது. பாயில் அங்கங்கே பின்னல், அவள் நெற்றிச் சாந்து மாதிரி கலைந்து விளிம்பு சிதைந்திருந்தது.

''என்ன ரோஹிணி....'' பதறி வந்தது ராஜியின் குரல்.

''ஒண்ணுமில்ல. வயித்தில அப்பப்ப வலி எடுக்குது. டாக்டர் கிட்டப் போகணும்... ஒண்ணாந் தேதிக்குக் காத்திட்டிருக்கேன்.''

''மருந்தெல்லாம் ஒழுங்கா சாப்பிடுறியா ரோஹிணி...?''

''சம்பளம் வரட்டும்..,''

''ஒரு நிமிஷம்..." டிரைவர் கிட்ட ஒரு விஷயம் சொல்லிட்டு வந்துடறேன்...''

ராஜி திரும்பி வந்து நாலு வார்த்தை பேசு முன் வாசலில் 'பீய்ங்' கென்று அழைப்பு வந்தது. ஓடிப்போய் ராஜி திரும்பி வருகையில் ரோஹிணி சுவரில் இன்னும் தளர்ந்திருந்தாள். ஒரு ஆறுதலாய் இடுப்பில் லேசாய் மேடு தட்டின வயிற்றில் என்று கை அலைந்து கொண்டிருந்தது.

ராஜி நீட்டிய பாட்டிலில் கண்ணோடிற்று. விட்டமின்களின் தேக்கம் மாத்திரைகளாய் உருண்டோடியது.

''என்ன ராஜி இது...'' கேட்கையில் லேசாய் மூச்சிரைத்தது.

''ஒரு ஃப்ரெண்ட் வாங்கிக் கொடுக்கக் கூடாதா .. இது மாத்திரமில்லை ராஜி... உனக்கு இனிமே ஆற அத்தனை மருந்துச் செலவு என்னோடதுதான்... ப்ளீஸ் வேண்டாம்னு சொல்லாதே...''

''இல்ல ராஜி... நானும் வேலைக்குப் போறேன்னப்போ அவர் என்ன சொன்னார் தெரியுமா ... உன்னை வச்சிக் காப்பாத்த எனக்கு யோக்யதை இருக்குன்னு எப்ப என்னை நம்பி நீ வந்துட்டியோ அப்புறம் நீ என்னோட பொறுப்புன்னு... இப்ப உங்கிட்ட எந்த உதவி வாங்கிட்டாலும் அவரை அவமானப்படுத்தற மாதிரி ஆயிடும் ராஜி... வேணாம் ராஜி... ப்ளீஸ்....''

தஞ்சை பெரிய கோவில் கோபுரத்தின் உச்சியில் இருக்கும் உருண்டைக்கல் ஒரே கல்லால் ஆனது என்று இவ்வளவு காலமும் சொல்லி வந்தார்கள். ஆனால் சில ஆண்டுகளுக்கு முன் இதன் கும்பாபிஷேகத்திற்காகக் கோபுரத்தைச் சுத்தம்செய்து பார்த்தபோது உருண்டைக்கல் இரண்டு அரைக் கோள வடிவக் கற்களால் அமைக்கப் பட்டிருந்தது தெரிய வந்தது. ஒன்றின்மேல் ஒன்றாக வைத்து ஒரே கல்லால் ஆனதுபோல் அவ்வளவு கச்சிதமாக அமைத்திருக்கிறார்கள், அக்கால கட்டிட வல்லுநர்கள். -ஆர்சி. சம்பத்

ராஜி பதில் பேசாமல் எழுந்தாள்.

''வரட்டுமா ரோஹிணி?''

''போகலாமே.... இரேன்... கோவமா?''

''சேச்சே... இன்னொரு நாள் சாவகாசமாய் வரேன்....''

இவ்வளவு கஷ்டத்திலும் ஏதோ புஷ்ப மெத்தையில் படுத்திருக்கிற உணர்வோடு பேசிய சிநேகிதியை நினைத்துப் பெருமை பொங்கிற்று ராஜிக்கு. வாசலுக்காய் நடந்தாள் அவள்,

20

மோகன் அகர்வால் சொன்ன நேரத்துக்கு வந்துவிட்டான். ஆஸ்பத்திரிக்குக் கட்டவேண்டிய பணத்தைக் கட்டப் போயிருந்தான். ஹரியைச் சுற்றி ஒரு சின்னக் கும்பல் இருந்தது. வார்ட் பையன்கள்... சக நோயாளிகள்... மிக நெருங்கிய பந்துக்களைப் பிரிந்து போகிற மாதிரி அவனுள் லேசான கலக்கம் ஏற்பட்டிருந்தது. காலையில் டாக்டர் வர்மாவிடமும் டாக்டர் சோப்ராவிடமும் விடைபெற்றுக் கொண்டு வந்திருந்தான்.

டாக்டர் வர்மா வழக்கமான கருணைப் புன்னகையைக் காண்பித்தார்.

''விபத்துக்குப் பிறகு முதல் முறை நீங்கள் வெளி உலகத்துக்குப் போகிறீர்கள். முதலில் கொஞ்ச நாட்கள் ஏதோ புது உலகத்துக்குப் போனமாதிரி கஷ்டமாக இருக்கும். நீங்களேதான் சுற்றுப்புறத்துக்குத் தகுந்த மாதிரி அட்ஜஸ்ட்செய்து கொள்ள வேண்டும். வேலை செய்யும் திறன் மற்றவர்களை விட உங்களுடையது குறைந்ததில்லை என்று நிரூபிக்க வேண்டும்.''

ஹரி சிரித்தான்.

''அந்த ஆசைதான் எனக்கும் டாக்டர்!''

''இது பரிகாசப் பேச்சல்ல மிஸ்டர் ஹரி. மனோ பலத்தாலே சாதிக்க முடியாததே இல்லை. உங்க ஆபீஸ் வேலை வெறும் மேஜை வேலையாக இருந்தால் அதிலேயே நீங்கள் தொடரலாம்.''

''ஓ... இல்லை. நான் வேலையிலிருந்து ரிஸைன் செய்து விட்டேன். பிழைப்புக்குச் சொந்தமா ஒரு பெட்ரோல் பங்க் வைக்கப் போறேன். எல்லா ஏற்பாடுகளையும் என் சிநேகிதன் செய்து கொடுத்திருக்கிறான்.''

''குட்'' — அவர் அவன் கையைக் குலுக்கினார். ''ஒரு கதவு மூடியிருந்தாலும் வேறு கதவுகள் திறந்திருக்கும் பார்த்தீர்களா? விஷ் யூ ஆல் தி பெஸ்ட்!''

''ரெடியா?'' என்று கேட்டுக்கொண்டே மோகன் அகர்வால் வந்தான்.

''ரெடிதான்'' என்று சொல்கையில் ஹரியின் கண்கள் சுற்றிலும் துழாவின. 'வருகிறேன்' என்று சொல்லியிருந்த சாந்தி இன்னும் வரவில்லை.

''கிளம்பலாமா ஹரி''

மோகனுக்குநேரமாகிவிடும் என்கிற உணர்வில் அவன் சக்கர நாற்காலியை உருட்டியபடி எல்லோரையும் பார்த்துப்புன்னகைத்துக் கையசைத்துக் கிளம்பினான்.

அவனுக்குப் பழக்கமான பல முகங்கள்— அவனுடைய புதிய பிரத்தியேக உலகத்தின் பிரஜைகள் — அதிர்ஷ்டம் கெட்ட பிரஜைகள் —நம்பிக்கை என்கிற மூலதனம் மட்டுமே வேண்டியவர்கள்... இவர்களில் எத்தனை பேர்கள் தேறி முன்னுக்கு நகர்வார்கள்? அவனுள் ஒரு காருண்யம் பிரவாகமாகக் கிளம்பி நெஞ்சை அடைத்துக் கண்களில் திரை கட்டிற்று. டாக்டர் வர்மா சொன்ன மாதிரி இவர்கள் எல்லாருக்கும் ஒரு கதவு அடைபட்டதால் வேறு கதவுகள் இல்லாமல் இல்லை. நம்பிக்கையுடன் நகர்ந்தால் அவை திறக்காமல் போகாது... கட்டிலில் படுத்த நிலையில் மித்தல் புன்னகையுடன் விடை கொடுத்தார்.

அவன் பொதுவாக எல்லோருக்கும் கை அசைத்துவிட்டு நகர்ந்தான். அவனுடைய கால்களுக்கான காலிப் பரும் ஊன்று கட்டைகளும் அகர்வாலுடன் சென்றன.

சாந்தி இன்னும் ஏன் வரவில்லை என்று அவனுள் குறுகுறுத்தது.

நைட் டியூட்டிக்காக ஊர்மிளா வந்து கொண்டிருந்தாள்.

''கிளம்பி விட்டீர்களா விஷ்யூ ஆல் த பெஸ்ட்!'' என்றாள்.

''தாங்க்யூ. சாந்தி எங்கே ஊர்மிளா?''

''உங்களுக்கு விஷயம் தெரியாது? அவளுடைய புருஷன் வந்து அவளை அழைச்சிண்டு போயிட்டாராம்!''

அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு சிரித்தான்.

''ஓ! தட்ஸ் குட் நியூஸ்!''

''நோ! நானாயிருந்தா போயிருக்க மாட்டேன்!''

செய்தி நம்ப முடியாததாக இருந்தது அவனுக்கு.

ஒரு மோசமான கதையின் ஆன்ட்டி கிளைமாக்ஸ் மாதிரி இருந்தது. துச்சமாக மதித்துக் கேவலமாக இதுவரை நடத்தியவன் திடீரென்று நல்லவனாகப் போய்விடுவானா? மாறி விட்டான் என்று நம்பிக் கொண்டு அவன் கூப்பிட்டவுடன் அவள் கிளம்பிப் போயிருந்தால் அதற்கு என்ன அர்த்தம்? மோகனின் உதவியுடன் காரில் உட்காரும்போது அவனுக்குப் பெரிதாகச் சிரிக்க வேண்டும்போல் இருந்தது. இந்த விசித்திரமான உலகத்தை அவன் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்று தோன்றிற்று. வேர்களைப் பரப்பிவிட்ட பிறகு அதைக் கிளப்பிக் கொண்டு வெளியில் வருவது அசாத்தியமான காரியமென்று ஏன் புரியவில்லை? தெரிந்த பாதை—அது கல்லாக, முள்ளாக, சகதியாக இருந்தாலும், தெரியாத, புதிய பாதையைத் தேடிக் கண்டுபிடிக்க எல்லோருக்கும் சோம்பல் அல்லது பயம். சாந்தியை நினைக்கையில் பரிதாபமாக இருந்தது. மன்னிப்பு, கருணை என்கிற வார்த்தைகளில் அகப்பட்டுக் கொண்டு நடராஜனின் சுயநலத்துக்கு இணங்கினாளானால் அவளுக்கு விமோசனமே யில்லை என்று தோன்றிற்று.

வீடு வந்து விட்டது. மோகன் அகர்வால் ஹரியின் உதவிக்காக ஒரு நேபாளச் சிறுவனைத் தேடிப் பிடித்து அமர்த்தி யிருந்தான். சக்கர நாற்காலி ஒன்று வாசலிலேயே காத்திருந்தது. ஹரியின் சௌகரியத்தை யோசித்துப் பார்த்துப் பார்த்து மோகன் வீட்டைச் சீராக்கியிருந்தான். அறைக்குள் நுழைந்ததும் சட்டென்று கண்களில் நீர் நிறைந்தது. பழசெல்லாம் குபீரென்று கிளம்பி மனத்தை அழுத்திற்று. மாயாவின் புகைப்படம் கட்டிலின் வலப் பக்கம் மேஜைமேல் முன்பு அவன் வைத்திருந்த மாதிரியே இருந்தது.

அவன் அவசரமாக நாற்காலியை நகர்த்திச்

அந்தி நேரத்து உதயங்கள்

வாஸந்தி

சென்று புகைப்படத்தைக் கவிழ்த்து மேஜை டிராயரில் நுழைத்தான்.

''பழைய ஞாபகங்கள் எல்லாம் எனக்குத் தேவையில்லை மோகன்!'' என்றான்.

''ஞாபகங்கள் இருந்தாத் தப்பில்லே ஹரி— அது உன்னைப் பாதிக்காதவரை...''

''நான் ஒரு ஞானி இல்லே!'' மோகன் மெல்லிய குரலில் சொன்னான்.

''மாயா மேலே உனக்கு இன்னும் கோபம் இருக்கு ஹரி! அவ நிலைமையிலே யார் இருந்தாலும் அப்படித்தான் நடந்திண்டிருப்பா. வாஸ்தவத்திலே உனக்கு இப்படி ஆனது அவளுக்குப் பெரிய அதிர்ச்சி. அப்ப இளைச்சவ பிறகு தேறவே யில்லை. அவ அப்பா தான் அவளைக் கட்டாயப்படுத்திக் கல்யாணம் செய்துக்க வெச்சு....''

''ஓ...ப்ளீஸ் மோகன்! இந்தத் தகவல் எனக்கு எந்த விதத்திலேயும் உபயோகமானதில்லே....!''

''ஸாரி... இனிமேல் அதைப் பத்திப் பேச மாட்டேன். ஒரு வாரம் ரிலாக்ஸ் பண்ணு. அடுத்த வாரத்திலேயிருந்து பெட்ரோல் பங்குக்கு வர முடியுமா?''

''ஆமாம். அடுத்த வாரம் — மோகன் நான் செஞ்சிருக்கிற ஒரே புண்ணியம், நீ எனக்குச் சினேகிதனாகக் கிடைச்சது.''

''அரே, சோடோ யார்!'' மோகன் சென்ற பிறகு நாற்காலியில் உட்கார்ந்தபடி ஜன்னல் வழியே ஆகாயத்தைப் பார்க்கையில் அவனது தனிமை பயங்கரமாகத் தாக்கிற்று. முன்னால் விரிந்திருப்பது தெளிவில்லாத புதிய பாதை — அதில் நான் தனியாக நடை பழக வேண்டும். வேறு வழியில்லை. மாயாவுக்காக மோகன் பரிந்து பேசினதை நினைத்துச் சிரிப்பு வந்தது. அவள் நமக்காக வருத்தப்பட்டாலும் படா விட்டாலும் நமக்கு என்ன ஆகப் போகிறது? நம்மைப் பிறகு பார்க்க வரக்கூடத் தெம்பில்லாதவள் வருத்தப்பட்டு என்ன லாபம்? எந்தவித ஊமை சமாதானங்களும் உபயோக மற்ற பழைய ஞாபகங்களும் எனக்குத் தேவையில்லை....வாஸ்தவத்தில் அவள்தான் முதுகெலும்பில்லாதவள். நான் இல்லை...

சோற்றுக்காக அவனுக்குத் துணை இருக்க வந்திருக்கும் அந்த நேபாளச் சிறுவனைப் பார்க்கையில் அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. கூலிக்காக ஏற்படும் பந்தம் தான் நமக்கு இனிமேல். அதற்குத்தான் சமாதானமாகிப் போக வேண்டும். இனிமேல்....

அரண்மனையில் காவல் நிலையம்!

தஞ்சாவூர் அரண்மனையின் உள்ளேயே தஞ்சை போலீஸ் ஸ்டேஷன் இயங்கி வருகிறது. தமிழ் நாட்டிலேயே ஒரு அரண்மனைக்குள் இயங்குகிற காவல் நிலையம் இது மட்டுமே! -ஆர்சி. சம்பத்

சாந்தி திடுக்கிட்டு நடராஜனைப் பார்த்தாள். சுரீரென்று ஒரு கோபம் எழுந்தது.

''நான் எட்டுத் தடவை வந்து கதவைத் தட்டியிருக்கேன். அடிச்சு விரட்டிட்டீங்க!''

''இப்ப ஒன்பதாவது தடவை நானே வந்து கூப்பிடறேன் வா!''

''இப்பத் திடீர்னு வந்து கூப்பிடறதுக்கு என்ன காரணம்?''

''நீ என் பெண்ஜாதி என்கிறதுதான் காரணம். நீ முதல்லே வீட்டுக்கு வா. அங்கே எல்லாம் பேசிக்கலாம். இங்கே நடு ரோட்டிலே என்ன? டாக்சி கொண்டாந்து நிறுத்தி வெச்சிருக்கேன்.''

உண்மையிலேயே வெளியில் அவன் டாக்சி நிறுத்தி வைத்திருப்பதை அவள் கவனித்தாள்.

எதற்கு இந்த அவசரம், யோசிப்பதற்குக் கூட அவகாசம் இல்லாமல்?

''இப்படியே வா, மத்ததை அப்புறம் பார்த்துக்கலாம். முதல்லே பேசணும்.''

அவன் பலவந்தமாக அவள் கையைப் பிடித்து டாக்சியில் உட்கார வைத்தான். வழி நெடுக எதுவுமே பேசாமல் புகை பிடித்தபடி ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். இத்தனை நாட்களாகத் தான்நடந்து கொண்ட விதத்துக்காக எந்த விளக்கமும் இல்லை. எதற்கு அழைத்துப் போகிறான்? அந்தப் பெண் போய்விட்டிருப்பாள். சமைத்துப் போட ஆள் வேண்டியிருக்கும். இவனுடைய சுபாவம் தெரிந்திருந்தும் எதை எதிர்பார்த்துக் கிளம்பி யிருக்கிறோம்?

ஏதோ ஒரு நைப்பாசை. 'முதல்லே பேசணும்' என்கிற வார்த்தைகள் தூண்டி விட்ட எதிர்பார்ப்பு — 'என்னை மன்னிச்சுக்க' என்ற வார்த்தைகள் ஏற்படுத்திய இளக்கம்—

இவன் மாறியிருந்தால் இவன்தான் நமக்கு நியாயமான துணைவன் என்கிற நினைப்பின் பலவீனம். வீடு வந்து லிஃப்டில்நுழைந்து ஃப்ளாட்டுக்குப் போய்ச் சேர்கிற வரையில் அவன் வாயைத் திறக்கவில்லை. அவன் கதவைத் திறந்து கொண்டு ''வா உள்ளே'' என்றான். உள்ளே காலை வைத்ததும் சட்டென்று அவள் பின்னால் நகர்ந்தாள். முன்னறையில் அவள் உட்கார்ந்திருந்தாள். யாரோ ஒருத்தி. இவளுடைய புடவையைக் கட்டிக் கொண்டு — இவளுடைய ரவிக்கை அவளுக்குச் சின்னதாய் மார்பு பிளந்து கொண்டு வருகிற மாதிரி...

''உட்கார் சாந்தி.''

நடராஜனின் அதரங்களில் ஒரு நமுட்டுச் சிரிப்புத் தெரிந்தது. அது அந்தப் பெண்ணின் முகத்தில் பிரதிபலித்தது.

நங்கையர் விரும்பும் நன்மலர்

அவள் தன் சீற்றத்தை அடக்கிக்கொண்டு கேட்டாள்:

''எதற்கு என்னை அழைச்சிக்கிட்டு வந்தீங்க? அவமானப்படுத்தவா?''

பெரிய ஹாஸ்யத்தைக் கேட்ட மாதிரி நடராஜன் சிரித்தான்.

''நம்மைப் பொறுத்தவரை அவமானம் என்கிற வார்த்தைக்கு அர்த்தமே இல்லே! நீ இத்தனை நாள் என்ன பண்ணேன்னு நான் கேக்கப் போறதில்லே. நான் என்ன பண்ணேன்னு நீயும் கேக்காதே.''

அவள் கெட்டுப் போனவள் என்கிற நிச்சயத்தில் அவன் பேசுவதைக் கேட்க அவளுக்கு ஆத்திரம் வந்தது. அவளைப் பேச விடாமல் அவன் ஆரம்பித்தான்.

''நேரே விஷயத்துக்கு வரேன். நான் பரிமளாவைக் கல்யாணம் செய்துக்கறதுன்னு முடிவு பண்ணியிருக்கேன். அவளும் நானும் ஒரு பிஸினஸ் ஆரம்பிக்கப் போறோம். கல்யாணம் செய்துண்டா சில செளகர்யம் உண்டு. அதுக்கு உன்னுடைய கையெழுத்து வேணும்.''

'ஓ, இதற்குத்தான். சோழியன் குடுமி எப்படிச் சும்மா ஆடும்?' அவளுள் மிதமிஞ்சிய சீற்றம் எழுந்தது. இவனுடைய நய வஞ்சகத்துக்கு வரையறையே கிடையாது என்று தோன்றிற்று.

''ராஜ், நேரமாச்சு, நான் போய் டிரெஸ் பண்ணிக்கிறேன்!''

பரிமளாவின் நடையும் பேச்சும் அருவெறுப்பைத் தந்தது. நம் நடத்தையைப் பற்றி நாக்கில் நரம்பில்லாமல் தூஷித்தவன் இந்தச் சாக்கடையுடன் எப்படி வாழ்கிறான்? இவனுடைய தரம் இது. தன் நடத்தைக்குச் சப்பைக் கட்டுக் கட்டுவதற்காகத்தான் நம்மைத் தூஷித்தான். இவர்கள் இருவரும் செய்யும் பிஸினஸ் எப்படிப் பட்டதாக இருக்கும்?

''இதப் பார், நம்ம கல்யாணமே ஒரு மிஸ்டேக். என்னுடைய லைன் வேறே—உன்னுடைய லைன் வேறே. தினம் தினம் என்னை நீ கேள்வி கேட்டுண்டு உன்னை நான் திருப்பிக் கேட்டுண்டு அந்த அசிங்கமெல்லாம் வேணாம் — நான் லெட்டர் தயாரா வெச்சிருக்கேன். நீ ஒரு சின்னக் கையெழுத்துப் போடணும். அவ்வளவுதான். அதுக்கப்புறம் நீயும் சுதந்திரமானவள். யாரோட வேணும்னாலும் இருக்கலாம்.''

அவள் ஆத்திரத்துடன் அவனைப் பார்த்தாள்.

''இப்படியே பேசிப் பேசி உலகத்தை ஏமாத்தாதீங்க. நான் அப்படிப்போகக் கூடியவள் இல்லேன்னு உங்களுக்குத் தெரியும். எந்த ஆணைப் பத்தியும் விகல்பமான எண்ணம் என் மனசிலே ஏற்பட்டதில்லே...''

அவன் கையைக் கொட்டிச் சிரித்தான்.

''ஓ, நீ மகா பதிவிரதைன்னு எனக்கு நல்லாத் தெரியும். அதுதான் இன்னிக்கு இப்படிக் காரணமில்லாம சிங்காரிச்சுக்கிட்டு வெளியிலே கிளம்பிண்டிருந்தியா?''

அவள் திடுக்கிட்டுத் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

''இன்னொருத்தர் பார்வைக்காகத்தான் சிங்காரிச்சுக்கணுமா?''

''இதைப் பார், இந்த மாதிரி பத்தினி வேஷம் போடாதே. மிஸ்டேக் இருக்குன்னு ஒப்புத்துக்கோ, இந்தப் பரிமளா மாதிரி. எனக்குப் புரியும்.''

ஓ, இவன் கோணத்தில்தான் இவனுக்குச் சிந்திக்கத் தெரியும் என்கிற ஆயாசம் அவள் மனசை அழுத்திற்று.

அவன் தன் சட்டைப் பாக்கெட்டிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்தான்.

''எனக்கு நேரமாச்சு — இதிலே கையெழுத்துப் போட்டுக் கொடு.''

பிரித்த நிலையில் காகிதத்தின் வாசகங்கள் தெரிந்தன.

'என் கணவர் நடராஜன், பரிமளாவை மறுமணம் செய்துகொள்ள நான் மனப்பூர்வமாய் அனுமதி அளிக்கிறேன், அவர்களது வாழ்வில் நான் இனி குறுக்கிட மாட்டேன்.'

இதற்குக் கையெழுத்திடா விட்டால் இவன் என்ன செய்வான் என்று அவள் யோசித்தாள். இவன் எதற்கும் அஞ்ச மாட்டான். அந்தப் பெண் எதிரிலேயே நம்மை நொறுக்கிப் பணிய வைப்பான். பரிமளா வந்து நின்றாள், என்னை என்ன செய்வாய் என்கிற மாதிரி. அவளுடைய புடவை — அவளுடைய ரவிக்கை, அவளுடைய காது வளையங்கள். சட்டென்று அவளுள் ஒரு வெறுப்பு படர்ந்தது. எத்தனை மானங் கெட்டவர்கள் இவர்கள்! வாஸ்தவத்தில் அவளுடைய அனுமதிக்காக அவர்கள் காத்திருக்கவில்லை என்கிற பிரக்ஞையில் அவளுக்குச் சடசடவென்று பிரமைகள் முறிந்து போயின. இந்த மாதிரி கல்யாணம், பந்தம் என்பதற்கெல்லாம் ஏதும் அர்த்தமே இல்லை என்று தோன்றிற்று. அது ஓர் அனுமதிச் சீட்டு— சீட்டு மாற்றப்பட்டால் விடுதலைப் பத்திரம்— உறவுகளின் ஆழத்தையும், அவை பரப்பும் வேர்களையும் தார்மீக உணர்வுகளையும் நினைத்து அவள் அல்லல்பட்டது எத்தனை முட்டாள் தனம்! தன்னலத்தின் சொரூபங்களாய், சின்ன உலகத்தின் பிரதிநிதிகளாய் நிற்கும் இவர்களைப் பார்க்கையில் இந்த நடராஜ

னுக்கும் தனக்கும் எந்த ஜன்மத்திலும் பிணைப்பு ஏற்பட்டு விட முடியாது என்று தோன்றிற்று. இவன் என் கணவன் என்கிற பிரமையில் நான் இத்தனை நாட்கள் எப்படி இருந்தேன். தூ!

'நம்ம கல்யாணம் ஒரு மிஸ்டேக்!'

அதுதான் உண்மை.

''உனக்கு ஜீவனாம்சம் எல்லாம் என்னாலே கொடுக்க முடியாது. தகராறு ஏதும் பண்ணாமே கையெழுத்துப் போடு!''

அவள் அவனைத் துச்சமாக வெறித்துப் பார்த்தாள். உன் பணத்தை நான் தொடுவேன் என்று நினைத்தாயா?

தூ!

அவள் வாயே திறக்காமல் அவன் ஓர் அந்நியன் என்கிற பாவனையோடு அவன் நீட்டிய இடத்தில் கையெழுத்திட்டாள்.

நடராஜன் லேசான ஆச்சரியத்துடன் நிற்கையில் அவள் மௌனமாக வெளியேறினாள்.

லிஃப்டுக்குள் நுழைந்து 'ஜி'யை அமுக்குகையில் வாழ்வின் முதல் கட்டம் முடிந்து போன மாதிரி இருந்தது. எத்தனை விரயமான கட்டம் அது! நடராஜனை ஏன் நம்மால் திருப்திப்படுத்த முடியவில்லை என்று முன்பெல்லாம் குழப்பமாக இருக்கும். வாயை மூடிக்கொண்டு எத்தனை பார்த்துப் பார்த்துச் செய்தாலும் இவனுக்கு ஏன் நம்மைக் கண்டால் எரிச்சல் ஏற்படுகிறது என்று துக்கம் ஏற்படும், இப்பொழுது புரிந்தது.

'உன்னுடைய லைன் வேறே, என்னுடைய லைன் வேறே'.

அவனுடைய ரசனைகள் வேறு, பார்வை வேறு. எண்ணங்கள் வேறு. வித்தியாசமான கோணங்களில் நின்று ஏன் இணையவில்லை என்று நினைத்துக் குழம்புவது எத்தனை முட்டாள்தனம்!

'நீ யாரோட வேணும்னாலும் இருக்கலாம்!' அவளுக்குச் சிரிப்பு வந்தது. அவனுடைய வார்த்தைகளை அவனே நம்புகிறானா? இவனை மாதிரி நான் நாயாய் அலைகிறேன் என்று நினைத்தானா? இத்தனை கேவலமாக நம்மை இவன் எடை போட வேண்டுமென்றால் அவன் எத்தனை கேவலமானவன்? அவளுக்கு ஆத்திரத்தில் நெஞ்சு படபடத்துக்கொண்டு வந்தது. ஓ, இவனைப் பற்றின ஞாபகங்கள், இவனால் நமக்கு ஏற்பட்ட சிறுமைகளின் நினைவுகள் எத்தனை காலத்துக்கு நம்மைத் தொடரும்?

''நீங்க தனியா இருக்கிற வரை உங்களாலே மறக்க முடியாது... அதனாலே....''

அவளுக்கு மனசு ஒரு முறை குலுங்கியது.

'நீ யாரோட வேணுமானாலும் இருக்கலாம்!'

சட்டென்று அவளுக்குப் பெரிதாகச் சிரிக்க வேண்டும் போலிருந்தது. எத்தனை தீர்மானமாகச் சொன்னாய்! உன்னை நான் ஏமாற்றப் போவதில்லை. நான் இருக்க மாட்டேன் என்று நினைத்தாயா? இருப்பேன். ஆனால் நீ நினைக்கிற எண்ணத்தினால் இல்லை...

உறவைத் தேடிக் கொண்டு நாயாய் அலைய வேண்டிய அவசியம் இல்லை. அதற்கெல்லாம் மேம்பட்ட நிலையில் மனங்கள் சங்கமிக்க முடியும். அதுதான் அர்த்தமுள்ள சங்கமம்.... அந்த மாதிரி சங்கமத்திற்கு ஏதும் சமாதானங்களோ வியாக்யானங்களோ தேவையில்லை. மனத்தில் பயங்களும் தேக்கங்களும் ஊனங்களும் இல்லாத நிலையில் எந்த வார்த்தைக்கும் பார்வைக்கும் பயப்பட வேண்டியதில்லை. இத்தனை நாட்களாக அவளே இனங் கண்டு கொள்ளத் தயங்கிய ஓர் அன்புச் சுனை — தளைகளை முறித்துக் கொண்டு கிளம்பிற்று.

சட்டென்று மனத்தில் தோன்றிய முடிவில், அது ஏற்படுத்திய நிறைவில் அவள் ஒரு ஆட்டோ ரிக்ஷாவை நிறுத்தி ஏறி உட்கார்ந்து ''ஸஃப்தர்ஜங் என்க்ளேவ்!'' என்றாள்....

ஹரி ஆகாசத்தைப் பார்த்தபடி தனக்குள் மூழ்கியவனாய் அமர்ந்திருந்தான். அவள் ஓசைப்படுத்தாமல் உள்ளே நுழைந்து கதவைச் சாத்தினாள். சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்த அவன் முகம் மலர்ந்து போனதைக் கண்டு புன்னகைத்தபடி அவள் அவனை நோக்கி நடந்தாள்.

(முற்றும்)

உலகப் புகழ் நூலகம்!

தஞ்சை சரசுவதி மகாலில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் உள்ள கையெழுத்துப் பிரதிகளும், ஓலைச்சுவடிகளும் பத்திரப்படுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன.

நம்மை ஆச்சர்யத்துக்கு உள்ளாக்கும் விஷயம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த குறளைப் பற்றிய சுவடிகளே!

'உலகப் புகழ் பெற்ற சரஸ்வதி மஹால்' என்ற தலைப்பின் கீழே தஞ்சாவூரில் உள்ள இந்த ஜீவ களஞ்சியத்தைப் பற்றி கி.பி. 1884-ல் ஜெர்மானியப் பேரறிஞர் டாக்டர் ஏ.சி. பர்னெல் எழுதினார். அந்தக் கட்டுரையில், 'தஞ்சாவூர் சரஸ்வதி மஹாலின்' நூல்கள் அனைத்தும் முறையாகத் தொகுக்கப்பட்டிருந்தது இந்தப் பட்டியலை முதன்முறையாக லண்டனில் வெளியிட்டுஅதைப் பற்றி பர்னெல் பேசிய பிறகுதான் உலக அறிஞர்களின் கவனத்தைத் தமிழ் நாட்டின் ஒரு சின்னத்துண்டுப் பகுதியான தஞ்சாவூர் ஈர்த்தது. அவர்களும் வந்து, பார்த்து, மகிழ்ந்து தங்கள் நாடுகளில் தஞ்சாவூரின் புகழ் பரப்பினர்.

1949ல் இருந்து 1964ம் ஆண்டு பிற்பகுதி வரை சுமார் 130 கையெழுத்துப் பிரதிகள் இந்தத் தஞ்சாவூர் சரஸ்வதி மஹாலின் உதவியினால் தான் நூல்களாக உருமாற்றம் அடைந்ததென ஒரு செய்திக் குறிப்பு கூறுகிறது.

- புஷ்பா அசோக்குமார்



விமலா ரமணி
எழுதும்
புதிய தொடர்கதை
குமரிப் பெண்ணே!
குயிலனே!
கல்கி
அக்டோபர் 25
தீபாவளி சிறப்பிதழ்
அதிக பக்கங்கள்
முழு நீள நகைச்சுவை
நாடகம்:
எஸ்.வி.சேகர் வழங்கும்
'நாடகப் பிரியா'வின்
காதுல பூ
கதை வசனம்:
ஜி.கே.

நுழைந்து விட்டான். வீட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர ப்ரியாவுக்கு வேறு எந்த வழியும் தெரியவில்லை. ப்ரியா பல இடங்களில் வேலை தேடி அலைந்தாள். ஒன்றும் சரியாக அமையவில்லை. பிறகு சென்னையை விட்டு ஐம்பது மைலுக்கு அப்பால் உள்ள சென்னூருக்கு வந்து சேர்ந்தாள். சென்னூர் கடற்கரை ஓரத்தில் உள்ள ஓர் அழகான ஊர். கிராமமுமல்ல, பெரிய ஊருமல்ல — அப்படிப்பட்டது சென்னூர். அங்கு ''ஓஷியானிக் இங்கிலீஷ்'' ஸ்கூல் என்ற ஒரு சிறிய பள்ளிக்கூடத்தில் டீச்சராகச் சேர்ந்தாள். ஒரு மாணவியின் வீட்டில் டாக்டர் ஆனந்தைச் சந்தித்தாள். அவர் அவளைப் பற்றி எல்லா விவரங்களையும் தெரிந்துகொண்டார். ஒரு மாதம் கழித்துத் தம் காரை அனுப்பி அவர் வீட்டுக்கு வரவழைத்தார். பார்வதி மல்லிக் என்ற தம் பணக்கார பேஷண்டைப் பார்த்துக் கொள்ள ஒரு படித்த பெண் தேவை — அதை நீ செய்கிறாயா என்று கேட்டார். பங்களாவில் அந்த அம்மாவுடன் வாசம்.... சாப்பாடு மற்ற செலவுகள் எல்லாம் போக மாதம் ஐநூறு ரூபாய் சம்பளம். ப்ரியாவுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் திரைப்படங்களிலும் கதைகளிலும் தான் நடக்கும் என்ற எண்ணம் அவளுக்கு.

ப்ரியாவைப் பார்த்த முதல் மூச்சிலேயே பார்வதிக்கு அவளைப் பிடித்து விட்டது. முதல் சந்திப்பிலிருந்தே ப்ரியா பங்களாவில் தங்க ஆரம்பித்து விட்டாள்.

பார்வதி தன் அறுபதாவது வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தாள். கணவனை இழந்து பத்து வருடங்கள் உருண்டு ஓடிவிட்டன. சென்னையில் ஒரு பிரபல தங்க, வைர, வெள்ளி வியாபாரம் செய்யும் குடும்பத்தைச் சேர்ந்தவள். செல்வத்திலேயே பிறந்து, புரண்டு வளர்ந்தவள். கணவனுக்குப் பிறகு அவளுக்கு அதிக ஆசை கடலின் மீது! நீல நிறக் கடலை ரசிப்பது.... கடல் காற்றில் திரிவது — இவைகளெல்லாம் அவளுக்குப் பிடித்தமான பொழுது போக்குகள். சென்னையில் வளர்ந்து கொண்டு வரும் மனிதக் கூட்டத்தின் நடுவில் வாழ்வது அவளுக்குப் பிடிக்கவில்லை. சென்னூரில் குடியேறிவிட்டாள். அங்கே ஒரு சிறிய பங்களாவை வாங்கித் தனக்குத் தேவையான விதத்தில் கட்டி விட்டாள். பணம் என்றுமே அவளுக்குப் பிரச்னையாக இருந்ததில்லை.

அவள் சென்னூருக்கு வந்ததிலிருந்தே ஆனந்த்தான் டாக்டர். அந்த ஊரில் இங்கிலீஷ் வைத்தியம் செய்யும் டாக்டர்கள் குறைவு. உள்ளவர்களில் பிரபலமானவர் டாக்டர் ஆனந்த். வைத்தியம் பார்க்க வந்தவர் வெகு சீக்கிரத்திலேயே நெருங்கிய நண்பராகி விட்டார். பார்வதியைப் பார்க்க நாள்தோறும் வருவார். அவளுடைய அந்தரங்கமான விஷயங்களைக் கூட பேசுவாள். முக்கியமாக கிரிஷ் மல்லிக் விஷயம்...

''டாக்டர் நாங்க ஒரு ஆர்மி ஃபேமிலி''— பார்வதி ஒரு நாள் சொன்னாள். ''என் கணவர் மல்லிக் ஒரு மேஜர்... நெறைய மெடல்கள், அவார்ட்ஸ்,—விருதுகள் எல்லாம் வாங்கியிருக்கார். எங்க ஒரே பையன் கிரிஷையும் ஆர்மிலே சேர்த்துட்டார்... தெட் ஈஸ் ஏர்ஃபோர்ஸ்லே.... கிரிஷ்... பாவம் கிரிஷ்....''

பார்வதி அழத் தொடங்கி விட்டாள். ஆனந்த் எவ்வளவு தேற்றியும் அவளால் அழுகையை நிறுத்த முடியவில்லை. அழுகைக்குக் காரணம் தெரிந்து கொள்ளச் சில வாரங்கள் தேவைப்பட்டது. கிரிஷ் விமானத்தில் இமய மலைக்கு மேலே பறந்து செல்லும்போது ஏதோ கோளாறு ஏற்பட்டு விமானத்திலிருந்து எல்லோரும் பாரசூட் உதவியோடு வெளியே குதித்துவிட நேர்ந்ததாம். வெளியே குதித்த கிரிஷ் அதற்குப் பிறகு காணப்படவில்லை. அவன் நிச்சயமாக இறந்து விட்டான் என்பதும் தெரியவில்லை.

''டாக்டர் எம்புள்ளே உயிரோடதான் இருப்பான். அவன் செத்துப் போயிருப்பான்னு எனக்குத் தோணலே. பிகாஸ் கிரிஷ் ஒரு எக்ஸ்பர்ட் பாரசூட்டிஸ்ட்.... ப்ளேன்லேருந்து பாரசூட்டோட குதிக்கிறது அவனுக்கு அல்வா திங்கற மாதிரி. எங்கேயோ அந்த மலைப் பிரதேசத்திலே கீழே விழுந்து தலையிலே அடிபட்டு ஞாபக மறதியாலே சுத்திக்கிட்டிருக்கணும்... நீங்க தான் பெரிய டாக்டராச்சே... அம்னீஷ்யா அப்படீன்னு சொல்லுவீங்க இல்லே... இந்த மாதிரி நடக்கிறது உண்டு. என் கிரிஷ் திரும்பி வருவான்... டாக்டர் எனக்கு இந்த உலகத்திலே அவனை விட்டா வேறே யாருமே கிடையாது.மேஜரும் போயிட்டாரு. டாக்டர், கிரிஷ் ரொம்ப நல்லா இருப்பான். மேஜர் மாதிரியே... டாக்டர் நீங்க என் ஹஸ்பெண்டை. பார்த்திருக்கணுமே.. ஹாலிவுட் ஸ்டார் கிளார்க் கேபிள் மாதிரியே இருப்பாரு. கிரிஷும் அப்படித்தான். டாக்டர் நீங்கதான் எப்படியாவது கிரிஷைக் கண்டுபிடிச்சுத் தரணும்... நீங்க பிக் ஷாட்... வேணும்னு டில்லிக்குப் போங்க. மீரட்டுக்குப் போங்க... பணத்தைப் பத்திக் கவலைப்பட வேண்டாம். எனக்கு என் புள்ளே திரும்பி வரதுதான் பெரிசு.... கிரிஷ்... கிரிஷ்....''

கிரிஷைப் பற்றிப் பேச்செல்லாம் அழுகையில்தான் முடியும். பார்வதிக்கு உடல் நலமும் சரியாக இல்லை. ரத்தக் கொதிப்பு... சர்க்கரை வியாதி. சில ஆண்டுகளுக்கு

சுருளிமலைக்குச் செல்லும் வழியில் உள்ள காட்டில் ஒரு போர்டு காணப்படுகிறது. அதிலுள்ள வாசகம்:

• ஒரு மரம் ஒரு கோடி தீக்
• குச்சிகளை உருவாக்கும்.
ஒரு தீக்குச்சி ஒரு கோடி
• மரங்களை அழித்துவிடும்.

—சிவல்புரி சிங்காரம்

முன் ஹார்ட் அட்டாக் வேறே... ஆனந்த் அவளுக்கு நாள்தோறும் இன்சுலின் இன் ஜக்ஷன் கொடுப்பார். இதற்கு மேலாக 'மலிகாலயா' என்ற பெயரைக் கொண்ட அத்தனை பெரிய பங்களாவில் தனியாக இருப்பாள். சமையல்காரி சரஸ்வதி தேவைப் படும்போதுதான் இரவில் தங்குவாள். மனநிலை சரியில்லாததனால் அவளுக்குத் தூக் கமே வராது. அதற்காக இரவில் தூக்க மாத்திரை. நரம்புத் தளர்ச்சியைத் தடுப் பதற்காகப் பகலில் மூன்று முறை மாத் திரைகள். சில நேரங்களில் நாள் முழுதும் அழுதுகொண்டே இருப்பாள். அப்போ தெல்லாம் எந்நேரமானாலும் சரஸ்வதியின் அழைப்பின்பேரில் ஆனந்த் தூக்க மருந்து இன்ஜக்ஷன் போட்டுவிட்டுப் போவார்.

ப்ரியா பார்வதியுடன் தங்க ஆரம்பித்த வுடன் நிலைமை ஓரளவுக்கு மாறியது. பார் வதியின் மனநிலையும் முன்னேற்றமடையத் தொடங்கியது...

''என்ன டாக்டர் இன்னொரு இன்ஜக் ஷனா? யூ நோ ஐ ஆம் ரியலி சிக் ஆஃப் யுவர் டிரக்ஸ்... ஹார்ட்டுக்கு டேப்லெட்ஸ்... சுக ருக்கு இன்சுலின் இன்ஜக்ஷன்... நர்வ்ஸுக்கு டேப்லெட்ஸ்.... அதுக்கப்புறம் தூக்கத்துக்கு மருந்து வேறே, நீங்களே சொல்லுங்க டாக்டர் இதெல்லாம் என்னைப் பைத்திய மாக்கிடாது?'' டாக்டர் இன்ஜக்ஷன் போடுவதற்குத் தயார் செய்ய, பார்வதி முணு முணுத்தாள். அவருக்குப் பிடித்த மான ஆரஞ்சு ஜூஸை ஃப்ரிஜ்ஜிலிருந்து எடுத்து வர ப்ரியா உள்ளே சென்றிருந்தாள்.

''டாக்டர், ஒங்க இன்ஜக்ஷன்ஸ், பில்ஸ் அது இது ஒண்ணும் ப்ரயோஜனமில்லே. உங்களுக்கு நல்லாத் தெரியும் எனக்கு என்ன தேவைன்னு. மீரட், டேராடூன்; கர்க்கி அங்கெல்லாம் இருந்த பழைய பார்வதி மல்லிக்கா நான் மாறணும்னு ரெண்டு விஷயம் நடக்கணும்.''

''ரெண்டா!''

''எஸ் டாக்டர். ரெண்டு. ஏர்ஃபோர்ஸ் லேர்ந்து என் புள்ளே கிரிஷ் திரும்பி வரணும்.''

''அது தெரியும். ரெண்டாவது என்னது?''

''கேளுங்க டாக்டர்... ப்ரியா என்னோட மருமகளா வரணும்!''

டாக்டரின் புருவங்கள் ஆச்சரியத்தில் உயரத் தாவின.

''அப்படியா... ரியலி!.... இது புது நியூஸா இருக்கே. எ கிரேட் ப்ளஸண்ட் சர்ப்ரைஸ்!''

''டாக்டர் என் கிரிஷ் திரும்பி வந்த வுடனே முதல் வேலையா இவங்க ரெண்டு பேருக்கும் முடிச்சுப் போட்டுடப் போறேன். டாக்டர், ப்ரியா ரொம்ப நல்ல பொண்ணு. கிராஜுவேட்... குணம்... எல்லாம் இருக்கு அண்டு ஹௌ ஸ்வீட்! டாக்டர், என் னுடைய மொத பேரக் குழந்தையைப் பார்க்கணும்னு எவ்வளவு ஆவலா இருக்கேன் தெரியுமா! டாக்டர்... மொதல் கொழந்தை பேரன்தான். நோ டௌட்... அவனும் ஓர் ஆர்மி ஆபீஸரா வந்து.... ம்.. அதுவரைக்கும் நா எங்க இருக்கப்போறேன்'' பார்வதி பலமாகச் சிரித்தாள். (தொடரும்)

தடங்கலுக்கு சந்தோஷப்படுகிறோம்

மார்ஷல் · சிந்துஜீவா

தூரதர்ஷனும் ஆல்இந்தியா ரேடியோவும் அடிக்கடி தடங்கலுக்கு வருந்திவிட்டுப் போகட்டும். ஆனால் நீங்கள் உங்கள் தினசரி நடவடிக்கைகளில் மூன்றுமணி நேரம் தடைப்பட்டதற்கு சந்தோஷப்படுவீர்கள்! எப்போது தெரியுமா? அகில இந்திய ரேடியோ கோவையில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடத்தும் அறிவியல் தொழில் நுட்பப் பேரரங்கைச் சுற்றிப் பார்த்து வரும்போது!

வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கம்பீரமான கட்டிடத்தின் கீழ் எங்கெல்லாம் இடம் இருக்கிறதோ அங்கெல்லாம் மனிதத் தலைகள். மனித வரிசைப் பாம்புகள். சுற்றிலுமுள்ள கல்லூரிகள், பள்ளிகளுக்கெல்லாம் சௌகரியமாய் விடுமுறை விட்டதால் யூனிஃபார்மில் குழந்தைகள், அதட்டும் ஆசிரியர்கள், கணவர் தத்தம் மனைவி சகிதமாகவும், குழந்தைகள் தத்தம் பெற்றோர் சகிதமாகவும் இளைஞர் தத்தம் இளைஞியுடனும் ஆர்வமாய்க் காத்திருந்தார்கள்.

முதலில் தெரிந்தது 'ஆப்பிள்' செயற்கைக் கோளின் மாதிரி வடிவம். அதன் இரண்டு இறக்கைகளும் பிரிந்திருக்க (அட!) சுமார் 20 அடி—உயரத்தில் மகா கம்பீரமாக நின்றுகொண்டு வரவேற்றது. இறக்கைகளின் ஒருபுறத்தில் ஸோலார் ஸெல்கள். மறுபுறத்தில் 'லக்ஷ்மி மில்ஸ்'!

அருகிலேயே எஸ்கலேட்டர் — நகரும் மாடிப் படி. அதில் நகர்ந்து மேலே சென்றவர்கள் ஆப்பிள் பார்த்து பின், குழந்தைகள் 'சொய்ங்ங்' என்று மறுபுறம் சறுக்க, பெரியவர்கள் நிதானமாய்ப் படி இறங்கினார்கள். சத்தமில்லாமல் ஒரு கார் பேட்டரியில் மௌன சந்நியாசி போல் ஓடியது.



✖ மின்சார கார்

இன்னொன்று கார் போலவும் அல்லாமல், படகு போலவும் அல்லாமல், விமானம் போலவும் அல்லாமல், மூன்றும் கெட்டான் உருவத்தில் தரையிலிருந்து 12 இஞ்ச் உயரத்தில் நகர்ந்தது. இந்தியாவின் முதல் 'ஹோவர் கிராஃப்ட்'. நீர் மேல், நிலம் மேல், எதன் மேலும் வாயு மெத்தை மேல் ஓடும் வாகனம்.

பி. எஸ். ஜி. தொழில் நுட்பக் கல்லூரியின் அரங்கில் 'போனி-எம்'-மின் ரஸ்புடீன் பாட்டைப் புரோகிராம் செய்து பாடிப் பாடி மனப்பாடம் செய்து கொண்டிருந்தது மைக்ரோப்ராஸஸருடன் இணைக்கப்பட்ட ஒரு ஸ்பீக்கர். இன்னொரு மை-ப்ராஸஸர் டி.வி. திரையில் கோலம் போட்டு, திரும்ப வேறு கோலம் போட்டுத் தாய்க் குலத்தைத் தன் பக்கம் இழுத்தது.

கோவை அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி அரங்கின் முக்கிய தயாரிப்பு ஓட்டு எண்ணும் கம்ப்யூட்டர். இவ்வருடக் கல்லூரித் தேர்தலுக்காக வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்ட இதன் வடிவமைப்பே மிக நளினம். கள்ள வோட்டுப் போட முயற்சி செய்தால் 'கய்யா முய்யா' என்று தனக்குத் தெரிந்த எலக்ட்ரானிக்ஸ் பாஷையில் கத்தி ஆர்ப்பாட்டம் செய்கிறது. மொத்த ஓட்டுக்களையும் வேட்பாளர்கள் பெற்ற தனித் தனியான ஓட்டுக்களையும் தேர்தல்



✖ தேர்தலுக்கு கம்ப்யூட்டர்

ஆமென்

வின்ஸ்டன் ஜி. கிருபாகரன்

'பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே' என்று ஆரம்பித்து 'ஆமென்' என்று வேக வேகமாக முடித்தார் ஐயரவர்கள்.

குழுமியிருந்தவர்களுக்கு மூச்சு வாங்கியது.

மாலையில் மத மாற்றச் சடங்கு இருந்தது. திருமுழுக்கு ஆராதனை. 'இதை' முடித்துக் கொண்டு அதற்கு செர்மன் ப்ரிபேர் பண்ண வேண்டும். நேரமில்லை. யாரோ பணம் படைத்த வெள்ளைக்கார மாது பத்து வயதுக் குட்பட்ட பத்துப் பேரைத் தத்து எடுத்திருந் தார். கிறிஸ்துவ வளர்ப்பில் வளர வேண்டு மாம். வருடம் ஒரு முறை இங்கிலாந்தில் வீக் எண்டாம்.

பாதிக்குப் பாதி வேறு மதத்தினரைப் பொறுக்கி யிருந்தார்கள்.

உண்டி சுருங்கிய சராசரி இந்தியனுக்கு ஒரு வரப்பிரசாதம். விடுவார்களா? சமு தாய, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் இல்லாத ஒரே ஒரு இடத்தை இந்திய வரை படத்தில் வட்டமிட்டுக் காட்ட முடியுமா எவராலும்? ''என் புள்ளே ஏரோப் ளேன்லே பறக்கப் போறான்'' — போதாதா காரணம்? அதுதான் மதமாற்றம்.!

பத்தாது என்று சிலர் அதை அரசிய லாக்குவார்கள். அலறியடித்துக் கொண்டு ஆட்சியில் உள்ளவர்கள் அதையும் இதையும் அப்பகுதி மக்களுக்கு வாரி வழங்குவார்கள். எவன் வீட்டு வரிப் பணமோ? ஏக ஜாலி தான்!

இங்கிருந்து அங்கே; அங்கிருந்து இங்கே எல்லாம், எல்லா சமயத்தினருக்கும் பொது அம்சம். முடிவில்லாத தொடர் கதை.

ஐயரவர்களுக்கும் இந்த ஸ்டாடிஸ்டிக்ஸ் ரொம்ப ரொம்பத் தேவைப்பட்டது. இதைக் காட்டி மைலார்டு பிஷப்பிடம் நல்ல பெயர் எடுக்கலாம். மஃபஸலிலிருந்து 'சிடி'க்குடிராான் ஸ்பர் வாங்கலாம். சம்பளம் கூட வரும்.

சவப் பெட்டியில் டி.சி.டி.ஓ. எட்வர்டு தூங்கிக் கொண்டிருந்தார். துக்கத்தின் அடை யாளமாகத் தெரிந்தவர்கள் வரும்போது மட்டும் மூக்கை உறிஞ்சி முழுங்கினாள் அவரது மனைவி விக்டோரியா.

அப்போதுதான் அந்தத் தந்தி வந்தது.— உள்ளூர். யாரோ கையெழுத்திட்டுப் பெற்று அந்த அம்மாளிடம் தந்தார்கள்.

May God bless you with ever lasting Life for your Historical efforts When is your funeral -John

விக்டோரியா அம்மையாருக்கு ஷாக்.

மகன் அடித்திருந்தான்.

''ரோக்'' — உரக்கவே கத்தினாள். கை கழுவி விட்டதற்கான முத்திரை. கசக்கி எறியப்பட்ட கலர்க் காகிதத்தைக் கையி லெடுத்துப் பிரித்தார் ஐயரவர்கள்.

அவருக்கும் ஷாக். ''ஜான்... ஏன்?''

'கிங் எட்வர்டு' என்று அவருக்குப்பெயர். வணிகத் துறையில் அதிகாரி. டி.சி.டி.ஓ. மன்னன், நிபுணன். அஸெஸ்மெண்ட்ஆர்டர் போட்டாரென்ருல் அப்பீலே கிடையாது. நோண்டி விடுவார் நோண்டி!

அந்த ஊருக்கு வந்து இரண்டு மாதங்கள் கூட நிறைவு பெற்றிருக்கவில்லை. மனைவி விக்டோரியாவுக்குச் சமூக சேவையில் அதிக ஈடுபாடு. கிராமம் கிராமமாகச் சுற்றிக் கொண்டிருப்பாள். அசோஸியேஷன்கள் ஆரம்பிப்பாள். பத்திரிகைகளுக்கு நியூஸ் கொடுப்பாள். தன் பெயர் அச்சில் ஏறிவிட்டால் மட்டுமே அதை வெட்டி எடுத்து ஆல்பத்தில் ஒட்டுவாள். பப்ளிசிடி மாங்கர். விளம்பரப் பிரியை. சமூக சேவை யெல்லாம் அதற்காகத் தான்!

ஆயிரத்துக்கு மேல் கணவருக்கு வருமானம். பூர்வீக சொத்து பாகம் என்று வாடகைப் பணமும், நெல்லும் வரும். குடும்பத்தில் இருந்தது மூவர் மட்டுமே. இருப்பினும் சேவிங்ஸ் என்று காலணு கிடையாது. சமூக சேவை!

'எப்படியோ நாலு பேருக்கு உதவி கிடைச்சால் சரி. கடனில்லாமல் இருந்தால் போதும்' என்று அதைப் பெரிது படுத்தாமல் விட்டிருந்தார் எட்வர்டு. மனைவியின் முன்கோப புத்தியை அறிந்தவர் அவர். பையன் வேறு தோளுக்கு மேல் நின்ருன். அவன் கண் முன் ரசாபாசம் நிகழ்வதைத் தவிர்த்தார்.

மகன் ஜானுக்கு வோட்டுரிமை வயது. பி.காம் பட்டதாரி. ரொம்ப சென்ஸிடிவ் ஆசாமி.

—''வாட்ச் என்னப்பா, ஃபாரீனு?''

—''இல்லை. ஹெச். எம். டி.''

—''உனக்கென்னப்பா டி.சி.டி.ஓ. பிள்ளை. கிம்பளத்துக்குக் குறை இருக்காது. ஃபாரீனுக்கே ஒரு ட்ரிப் அடிச்சாற மாட்டே....!''

அவர்: ''பத்திரிகை ஆசிரியரா இருந்துக்கிட்டு எனக்கு ஞாபக மறதி அதிகம்னு ஒரு பேட்டியில் சொன்னது தப்பாப்போச்சு!''

இவர்: ''ஏங்க...?''

அவர்: ''ஏற்கனவே வெளியான ஜோக்ஸ்கள் பலவற்றை நிறையப்பேர் எழுதி அனுப்ப ஆரம்பிச்சிட்டாங்க என் பத்திரிகைக்கு!''

- உ. ராஜாஜி

எடுத்ததற்கெல்லாம் அப்பாவை இடு... தார்கள் கல்லூரியில். அதிகாரத்தி... இருப்பவர்கள் எல்லாம் துஷ்பிரயோக... செய்கிருர்களா என்ன? அப்பா நெருப்... அவருக்கா இந்தப் பெயர்? சின்னப் புத்தி... பயல்கள். இந்த சர்க்கிளே அழுகல். நோ... மோர் ஸ்டூடன்ட் லைஃப் என்று மு... வெடுத்தான். மேல் படிப்பு கட்.

வேலை தேடிக் கொண்டிருந்தான்.

அன்று பாருங்களேன்.

அந்த ஊரில் எட்வர்டு சார் சார்... எடுத்து இரண்டாம் நாள். டீசலைக் குடித்... மயக்கம் தீர வீட்டு வாசலில் கார் நின்றது.

வந்தவர் வாயெல்லாம் பல்லாக, விரலெல்... லாம் தங்கமாக, ''ஐ ஆம் ராஜேந்திரன்... எண்டர்பிரைஸஸ் ஓனர். பார்த்திட்டு... போகலாம்னு வந்தேன்'' என்ருர்.

''உங்களை எனக்குத் தெரியாதே!''

''அதில்லே சார். புது ஆபீசரைக் கண்டு... கிட்டுப் போறது வழக்கம்தானே'' என்... வாறு எலுமிச்சை ஒன்றைப் பவ்யமா... நீட்டினுர் அவர்.

எழுந்து பெற்றுக் கொண்டவர், ''தப்... பில்லே, தாங்க்ஸ். உட்காருங்க'' என்ருர்.

'தப்பில்லே என்கிருரே. எட்வர்டு சார்... தானு இவர், நெருப்பு என்ருர்களே... ம்... தேவை வந்துவிட்டிருக்குமோ...' என்று... நினைத்தவருக்குத் தைரியம் வந்து விட்டது... உள் பாக்கெட்டிலிருந்து அதை எடுத்து... நீட்டினுர். — கவர்!

''பட், தேர் இஸ் எ லிமிட். மனுஷனை... மனுஷன் மரியாதைக்காகப் பார்க்கிறதிலோ... ஒரு எலுமிச்சம் பழத்தை டோக்கனுக்... கொடுக்கிறதிலோ வாங்கிக்கிறதிலோ தப்... பில்லே தான். ஆனு, உங்க அடுத்த டோக்... கனை வாங்கறதும் அஃபென்ஸ், கொடுக்கிறதும்... அஃபென்ஸ்.''

''தவரு நினைச்சுக்காதீங்க சார். ஊருக்குப்... புதுசா வந்திருக்கிறதாலே கைக்காவலா... இருக்கட்டுமேன்னுதான்....'' கையை இழுத்... துக் கொண்டார்.

''டோன்ட் பாதர். அரசாங்கத்திலே... பே அட்வான்ஸ் தர்ருங்க.''

வந்தவருக்கு அசடு வழிந்தது. பேச்சை... மாற்றினுர். ''உங்களுக்கு ஒரு பையன்... இருக்காராமே...''

''என் ஃபேமலியைப் பத்தி நல்லாவே... தெரிஞ்சு வச்சிருக்கீங்களே!''

''அதாவது சார்... அவுட் ஆஃப் இன்ட... ரஸ்ட். பி.காம் படிச்சிட்டு வேலை இல்லாம... இருக்கிறதாக் கேள்விப்பட்டேன். நம்ம... குருப்ஸ்லே ஒரு அக்கௌண்டன்ட் வேலை... காலியா யிருக்கு... 750 ப்ள்ஸ் அலவன்ஸ்... அனுப்புங்களேன். ஒரு பிரச்னை தீரும்.''

எட்வர்டு சார் எழுந்தார். அப்போது... தான் அப்பாவின் மேல் ஜானுக்கு இருந்த... பெரு மதிப்புப் பன்மடங்காகப் பெருகியது. அவர் சொன்னுர்:

''இன்னொரு பிரச்னை உடனே கிளம்பும். நீங்க என் அஸஸ்மென்ட் சர்க்கிள்ளே இருக்... கீங்க! நீங்க ஃபேவரை எதிர்பார்க்கா விட்டா... லும் நாலுபேர் நாலு விதமாப் பேசுவாங்க...

ான் மகன் பையன் இல்லே... ஹி இஸ் எ தரோன் அப் ஜெண்டில்மேன். ஐக்யூ ஜாஸ்தி. அவனுடைய இன்டெலிஜென்ஸுக்கு இன் னெருத்தர் ரெகமெண்டேஷன் இல்லாம நிச்சயமா ஒரு வேலை கிடைக்கும். பாங்கிலே முயற்சி பண்றுன்... கிடைச்சுடும்... ஆபீஸிலே சந்திக்கலாமா?''

வந்தவர் என்னவோ மாதிரி சிரித்துவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

அப்பாவைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்க வேண்டும் போலிருந்தது ஜானுக்கு.

தந்தைக்கும் மகனுக்கு மிடையே உறவு இவ்வாறிருக்க, தாய்க்கும் மகனுக்கும் ஒத் துப் போவதேயில்லை.

அன்று...

எட்வர்டு சாருக்கு உடல்நிலை சரியில்லை. இரைப்பு வாங்கியது. பி.பி. இருந்தது. கூடவே நெஞ்சு வலி. டாக்டர் ஈ.ஸி.ஜி. என்ருர், எக்ஸ்ரே என்ருர். ''பி கேர்ஃபுல் டேக் கம்ப்ளீட் ரெஸ்ட்'' என்ருர். இதய நோய்க்கான அறிகுறி.

விக்டோரியா அம்மாள் டொனேஷன் ரசீதுகளும் கையுமாக நாயாய் அலைந்து கொண்டிருந்தாள். கோவிலை ஒட்டி பாரிஷ் ஹால் கட்ட வேண்டுமாம். திருமுழுக்கு ஆராதனைக்குள் இன்னும் பத்தாயிரத்துக்கு மேல் வசூல் பண்ண வேண்டியிருந்தது.

அன்று மாலைதான் அந்த மதமாற்றச் சடங்கு.

மைலார்டு பிஷப் வரவிருந்தார். இடத்தை அநுக்கிரகம் செய்துவிட்டுப் போவார். பண முடிப்பைக் கொடுத்துப் பெருமையடித்துக் கொள்ளவேண்டும் விக்டோரியா அம்மா ளுக்கு.

பை பெருக்கக் காணும்.

அப்போதுதான் ஐயரம்மாள் அந்த ஐடியா கொடுத்தாள். அதன் தொடர்பாகப் பேசி முடிக்க விருவிருவென்று அறைக்குள் அம்மை யார் நுழைய...

எட்வர்டு சார் கண் மூடிப் படுத்திருந்தார். அருகில், ஜான், அவரது வலது கை விரல் களைத் தனதில் கோத்துக் கொண்டு அமைதி யாக அமர்ந்திருந்தான். வாய் முணு முணுத் தது.

''நத்திங் டு வொர்ரி டாட். யூ வில் பி ஆல் ரைட்.''

உள் நுழைந்த விக்டோரியா அம்மை யார் படபடத்தார்கள். ''ஏம்பா... எழுந் திருங்க... உங்களாலே ஒரு வேலை ஆகணும்.''

''ஷ்'' என்ருன் ஜான். ''அப்பா தூங் கருங்க... ஸ்ட்ரோக் மாதிரி இருக்கு. அதி கமா வேர்க்குது... மாத்திரை எங்கே வச் சீங்க?''

''தேடிப் பார்க்கிறதுதானேடா...''

''பார்த்தேன். கிடைக்கலை....''

''வேறே வாங்கிக்கலாம். இப்போ எழுப்பு... பாரிஷ் ஹாலுக்கு டொனேஷன் கலெக்ட் பண்ணணும்டா சாயந்திரத்துக் குள்ளே கொறைஞ்சது பத்தாயிரம் பிரிக் கணும்.''

''அதுக்கு அப்பா என்ன செய்ய முடியும்?''

''தகப்பனும் பிள்ளையும் ஏன் இப்படி இருக்கீங்க... கோவிலுக்கு உற்சாகமா ஊழி

''மானேஜர் ஏன் நொண்டி நொண்டி நடக்கிருரு?''

''தொடையிலே வலியாம்!''

''அடப்பாவமே! விழுந்துட்டாரா? எங்கே? எப்போ?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே, புதுசா வந்திருக்கிற லேடி ஸ்டெனே ரொம்பக் குண்டு!'' - எஸ் பாலகிருஷ்ணன்

யம் செய்யணும்டா... இப்படி எதிலேயும் கலந்துக்காம... ம்?... உங்கப்பாவைப் பார். பெரிய டி.சி.டி.ஓ. ஐயரம்மா சொல்லித் தான் எனக்கும் தெரிஞ்சுது. ஊரிலே இருக் கிற அத்தனை கடைகளிலேயும் ஏறி இறங் கின, நிமிஷத்துலே பத்தாயிரம் மேலே டொனேஷன் குவிஞ்சுடுமாமே... டாக்ட ரம்மா கார் கொடுத்து அனுப்பியிருக்காங்க.. எழுப்பு... போகணும்... எப்பா... எப்பா''

எரிச்சல் பீறிக் கொண்டுவந்தது ஜானுக்கு.

''அவரை எழுப்ப மாட்டேன். நீங்க செய்ய றது தப்பு. மனப்பூர்வமாக் கொடுக்கிற நன்கொடைகள் தான் கடவுளுக்குப் பிரிய மானது. ஆஃபீசர் வந்துட்டார்ங்கற கட்டா யத்திலே கொடுக்கிறதெல்லாம் செல்லாக் காசுதான். அப்பாவுக்கு இந்த வேலை யெல் லாம் பிடிக்காது. இட் இஸ் அகெய்ன்ஸ்ட் ஹிஸ் பாலிஸி; பிரின்ஸிபிள்ஸ்...''

''ஷட் அப்.... நீ நரகத்துக்குத்தாண்டா போவே!''—அம்மா குறுக்கிட்டுச் சபித்தாள்.

''பெட்டர் ப்ளேஸ், தேன் ஹியர்!''

''பெட்டர் பிளேஸா... டாமிட்... நான் திரும்பி வர்றபோது நீ இந்த வீட்டில இருக்கக் கூடாது. இன்னையோட கைகழுவிட்டேன்'' — சீறினுள். படபடவென்று படுத்திருந்த வரின் கன்னங்களைத் தட்டி ''எப்பா.. எப்பா... எழுந்திருங்க... வேலை இருக்கு'' என்று துரிதப்படுத்தினுள்.

ஜானுக்குப் பொறுக்கவில்லை. தன் இடது கையால் அம்மாவின் வலது முழங் கையைப் பிடித்து இழுத்தான். ''அம்மா... டோண்ட் யூ ஹேவ் சென்ஸ்... ஹி இஸ் சிக்'' என்று முறைத்தான்.

பளாரென ஒரு அறை விழுந்தது. ''நிறுத் துடா. எல்லாம் எனக்குத் தெரியும்'' என்ற வள், கணவனை நோக்கினுள்.

சோர்வுற்ற கண்கள் திறந்திருந்தன. எட் வர்டு சார் தம் மகனையே பார்த்துக்கொண் டிருந்தார். பிடியை விடவில்லை.

ஜலதோஷமும் ஃப்ளூவும்— சில முக்கிய தகவல்களும் முறியடிக்கும் முறைகளும்

"ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவின் துன்பங்களிலிருந்து விரைவில் நிவாரணம் பெற அனாஸின் பெரிதும் உதவுகிறது" என்கிறார் நர்ஸ் நாட்டாலியா டிசௌஸா.

ஜலதோஷமும் ஃப்ளூவும் வரக் காரணம் என்ன?

பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து காற்றில் வரும் விஷ அணுக்கள் ஜலதோஷத்தையும் ஃப்ளூவையும் பரப்புகின்றன. இந்த விஷ அணுக்களை சாதாரணமாக உடல் எதிர்க்கிறது. ஆ அளவுக்கு மீறிய உழைப்போ, சத்துக்குறைவோ உடலைப் பலவீனப் படுத்தி, நோய் எதி பாற்றலைக் குறைக்கிறது.

அறிகுறிகள் யாவை?

உடல் வலி, தலைகனம். தும்மல், மூக்கி ஒழுக்கு இவற்றுடன் ஜலதோஷம் தொடங்கு குளிர், அமைதியின்மை, வியர்வை தோன்று இருமல், தொண்டைப் புண், பசியின்மை, உட சோர்வு தொடரலாம்.

சிக்கல்கள் தோன்றுமா?

புறக்கணித்தால் நிமோனியாவிலும், சுவா கோசம் மற்றும் மேல் மூச்சுக் குழாயின் நோய் தொற்றிலும் முடியலாம்.

அனாஸின் எப்படி உதவுகிறது?

இது ஜலதோஷம், ஃப்ளூவினால் ஏற்படு வேதனையைப் போக்குகிறது. உலகெங்கும் டா டர்கள் சிபாரிசு செய்யும் வலி-நிவாரணியை அதிக அளவில் கொண்ட அனாஸின் சக் வாய்ந்தது. டாக்டரின் நம்பகமான மருந்து கலவை போன்றது. ஜலதோஷம் ஃப்ளூவின் முதல் அறிகுறி தோன்றியதுமே, அனாஸின் சாப்பிடுங்கள். ஒரு நாளைக்கு 4 தடவை.

நீங்கள் வேறென்ன செய்யவேண்டும்?

- நிறைய திரவ பதார்த்தங்கள், கொதிக்க வைத்த நீர், ஆரஞ்சு அல்லது எலுமிச்சை சாறு பருகுங்கள்.
- சத்துணவு புசியுங்கள்.
- போதிய ஓய்வெடுங்கள்.
- ஆன்டிசெப்டிக் மருந்து அல்லது உப்புச் கரைத்த நீரால் கொப்புளியுங்கள்.
- அறைகள் காற்றோட்டமாக இருக்கட்டும்.

சக்தி வாய்ந்த, நம்பகமான

மேனர்ஸ்

அனாஸின்*

இந்தியாவின் புகழ்பெற்ற வலி-நிவாரணி

அளிப்பவர்கள்: ஜெ.ஃப்ரி மேனர்ஸின் அனாஸின் பிரிவினர்.

* Regd. TM

A24-6/79.

''எழுந்திருங்கப்பா .... போகணும்.... பாகச்சே விஷயத்தைச் சொல்றேன்'' என்ற ஊனவியைப் பார்த்து இடதும் வலதுமாகத் லையை ஆட்டினார்.

''வரமாட்டேங்கறீங்களா?'' — கோபக் ரல்.

அதே அசைவு.

விக்டோரியா அம்மாவுக்கு எரிச்சலும் ஆத்திரமும் கொப்பளித்து எழுந்தன. ''ஓகோ ரெண்டு பேரும் சேர்ந்து என்னை அவமானப் படுத்தறீங்களா..நான் நினைச்ச காரியத்தைச் செய்தே முடிப்பேன். உங்க ஆபீஸ் சிப் பந்தியை அழைச்சுக்கிட்டுக் கடை கடை பாகப் போகப் போறேன, இல்லையா பாருங்க!'' வீறிட்டாள். ''டவாலி சேவ ்னைப் பார்த்தாலே நான் யார்னு புரிஞ்சுக்கு வாங்க. சுலபமா கலெக்ஷன் ஆயிடும்!''

''அம்மா... ப்ளீஸ் டோண்ட் டு இட்'' என்றான் ஜான்.

''நீ பேசாதேடா ராஸ்கல். இது ப்ரெஸ் டிஜ் சமாசாரம். உன்னைக் கைகழுவிட்டேன். ரோஷமானவனா யிருந்தா இந்த வீட்டை விட்டு வெளியே போ'' என்று கத்திவிட்டு, கோபமாக வெளியேறினாள் அந்தச் சமூக சேவகி. அப்பப்பா! ஒரு நல்ல காரியம் பண்ண எத்தனை தடங்கல் என்று வாய் முணு முணுத்தது!

அம்மா போன சுவட்டைச் சற்று நேரம் வெறுப்புடன் பார்த்துக் கொண்டிருந்த ஜான், அப்பாவின் பக்கம் பார்வையைத் திருப்பினான்.

எட்வர்டு சாரின் இமைகள் மூடியிருந் தன. கண்களின் ஓரத்திலிருந்து காதுக் குழி வரை நீரோட்டத்தின் சுவடுகள்...

அழுதாரா என்ன?

ஜானின் வாய் ஆதுர்யமாய் முணு முணுத் தது.

''நத்திங்டு வொர்ரி டாட்... யூ வில் பி ஆல்ரைட்...''

ஆயிரம் தடவை சொல்லியிருப்பான். அசை வைத்தான் காணோம்...

பல மணி நேரத்துக்குப் பின் மதிய உண வுக்கு விக்டோரியா அம்மாள் திரும்பிய போதுதான் நடந்து முடிந்த கதை தெளி வாகியது.

துக்கத்தின் அடையாளமாகத் தெரிந் தவர்கள் வரும்போது மட்டும் மூக்கை உறிஞ்சி முழுங்கிக் கொண்டிருந்த போது தான் அந்தத் தந்தி வந்தது.

May God bless you with ever lasting life for your Historical efforts - When is your funeral? -John

''ரோக்'' உரக்கவே கத்தினாள். கை கழுவிவிட்டதற்கான அறிகுறி.

ஹோட்டல் பேஸினில் எச்சில் கையைக் கழுவிக் கொண்டிருந்தான் ஜான்.

அப்பா சொன்னது போல் அவனுக்கு ஐ க்யூ ஜாஸ்தி. பாங்கில் வேலை கிடைத்து விட்டது.

செய்தியைச் சொன்ன நண்பனின் கைங் கரியம்: 'ஸ்வீட்-காரம்-காப்பி!' — தந்திக் குப் பணம்.

தெரிந்துதான் எட்வர்டு ஸார் கவலை யின்றிக் கண்ணை மூடிவிட்டிருந்தார்போலும்,

சவ அடக்கச் சடங்குகளில் அவன் கலந்து கொள்ளவில்லை. அவனைப் பொறுத்தவரை யில் அவர் சாகவில்லை.

''மை டாட்... மை டாட்... யூ ஆர் லிவிங் இன் மை ஹார்ட்.''

தாய்க் கோழி கொத்தித் துரத்திவிட்டது. வளர்ந்தவன்தானே! தப்பில்லை!

இனி நோ ப்ராப்ளம்ஸ்...

அவன் வாழ்ந்திருப்பான்...

விக்டோரியா அம்மையாருக்கும் குறை-வில்லை.

எட்வர்டு ஸாரின் பி. எஃப், கிராச்சுடி, பென்ஷன், இன்ஷ்யூரன்ஸ், இன்ன பிற... 'ல'கரம் தேறும்.

நோ ப்ராப்ளம்ஸ்...

சிறந்த சமூக சேவகி பட்டம் கிடைத் தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அம்மை யாரும் வாழ்ந்திருப்பார்கள்.

ஆமென்....

நீச்சல் குளம்!

சர்ச்சில் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண் டிருந்த பொழுது ஒருநாள் குளிக்கப்போனார். நீச்சல் குளத்தின் விளிம்பில் ஒரு மாணவர் நின்று கொண்டு சிந்தனையில் இருந்தார். சர்ச் சில் அவரைத் தண்ணீரில் தள்ளி விட்டுவிட்டார். தள்ளும்பொழுதே அம்மாணவர் அரையில் இருந்த டவலைப் பிடுங்கி நிர்வாணமாக்கினார்! இதனைக் கண்டு சிரிக்கவேண்டிய மற்ற மாண வர்கள் பயந்தார்கள். சர்ச்சிலைப் பார்த்து, ''டேய்! இன்றோடு தொலைந்தாய்! அவன் யார் தெரியுமா? அமரி! சிறந்த கால்பந்தாட்ட வீரன்! இப் பள்ளியிலேயே பெரிய பயில்வான்... கரை யேறி வந்து உன்னை அப்பளம் ஆக்குவான் பார்!'' என்று கூவினார்கள். அவ்வளவுதான்! சர்ச்சில் தொடை நடுங்க ஆரம்பித்து விட்டது. அமரி கரைஏறியதும் ஏதேதோ உளறிக் கொட்டி கிளறி மூடி, அவனைச் சிரிக்க வைத்துவிட்டான் சர்ச்சில். அமரியின் கோபம் பறந்து விட்டது. சர்ச்சிலின் முதுகில் தட்டிக்கொடுத்து அனுப்பி வைத்தான். பிற்காலத்தில் சர்ச்சில் இங்கிலாந்து பிரதமராக ஆனபொழுது அந்த அமெரிக்கு மந்திரி சபையில் இடங்கொடுத்தார்.

-க. ந. சுப்பிரமணியம்



வருவான் ராஜகுமாரன்

ராண்டார் கை

2

ப்ரியாவும் டாக்டர் ஆனந்தும் வரவேற்பு அறையில் உட்கார்ந்திருந்தார்கள்.

''டாக்டர், நீங்க கொடுத்த இன்ஜக்ஷன் ....மம்மி நல்லாத் தூங்கறுங்க....''

''ப்ரியா அது இன்ஜக்ஷன் எபெக்ட் மட்டும் இல்லே. வேறே காரணமும் இருக்கு. எ வெரி குட் ரீஸன்... ஒன்னைப் பத்தி...''

டாக்டர் சிரித்தார்.

''ஓ அதைச் சொல்றீங்களா!'' – அவளும் சிரித்தாள்.

''ப்ரியா நீ இவ்வளவு சீக்கிரத்திலே பார்வதி அம்மாவை உன் கையிலே போட்டுப்பேன்னு எதிர்பார்க்கல்லே... உனக்குத் தெரியுமா அந்த அம்மாவுக்கு உன் குழந்தை அழற சப்தம் இப்பவே கேக்குதாம்! அதாவது ஆண் குழந்தை!''

டாக்டர் பலமாகச் சிரித்தார்.

ப்ரியாவின் முகம் லேசாகச் சிவந்தது. அவளால் சிரிப்பை அடக்க முயன்றும் முடியவில்லே. அவள் முன்னல் வாழ்ந்த சூழ்நிலேயில் இப்படிக் கேலியும் சிரிப்பும் இருந்ததில்லே. இந்த வீட்டுக்கு வந்த பிறகுதான் அவள் மனத்தில் நிம்மதி, சந்தோஷம் வேரூன்ற ஆரம்பித்தது, ''டாக்டர்! இந்த மாதிரிப் பேச்செல்லாம் பார்வதி அம்மாவுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறதா இருந்தா எனக்கு ஆட்சேபணே இல்லேயே... ஆனு டாக்டர் ஒங்க கிட்ட ஒரு விஷயம் பேசணும். நீங்க தப்பா எடுத்துக்க மாட்டீங்கன்னு நினேக்கிறேன்.''

''எதைப் பத்தியம்மா?''

''டாக்டர் எனக்குக் கேட்கவே தயக்கமா இருக்கு... பட்....''

''ப்ரியா தைரியமாக் கேளேன். தெரிஞ்யாச் சொல்றேன். இல்லேன்னு தெரிசாதுங்கறேன். இட் ஸ் ஸோ ஸிம்பிள்.''

''டாக்டர்.... நீங்க.... கிரிஷ் நெஜமாவே திரும்பி வருவாருன்னு நினேக்கிறீங்களா? அவர் உயிரோடு இருக்கிறுர்னு நம்பறீங்களா?''

''ப்ரியா... மொதல்ல எனக்கும் உன் மாதிரிதான் சந்தேகம் இருந்தது. ஆனு இப்ப இல்லே... என்ன நான் சொல்றது புரியலேயா... லெட் மீ எக்ஸ்ப்ளேன். உனக்கும் விஷயம் தெரிஞ்சிருக்கிறது நல்லது.''

''ப்ளீஸ் டாக்டர்.''

''ப்ரியா! பார்வதி அம்மா அவங்க ஸன் கிரிஷைப் பத்தி எல்லா விஷயத்தையும் என் கிட்டச் சொன்னுங்க. கிரிஷ் இண்டியன் ஏர் போர்ஸ்லே கேப்டன். ஹிமாலயாஸ் கிட்டப் ப்ஃளே பண்ணும்போது இன்ஜின் ட்ரபிள் வந்து கிரிஷ் மத்தவங்க எல்லாருமே வெளிலே குதிச்சிட்டாங்க. பாரச்சூட் ஜம்ப் பண்ண கிரிஷ், என்ன ஆனுன்னு இதுவரைக்கும் தெரியலே. இறந்து போனதாகவும் தகவல் இல்லே. கிரிஷைத் தேடிக் கண்டுபிடிக்கிற பொறுப்பை அந்தம்மா என் கிட்ட ஒப்படைச்சாங்க. நான் டெல்லி, மீரட், எல்லா இடமும் சுத்தினேன். பல ஆர்மி ஆஃபீஸர்ஸைச் சந்தித்தேன். அதுல ஒரு உண்மை எனக்குக் கிடைச்சுது... அதாவது கிரிஷ் எங்கேயோ உயிருடன்தான் இருக்கான்.''

''ரியலி டாக்டர்!''

''ஆமா. கிரிஷ் ஈஸ் அலேவ். எங்கே அப்படீங்கறதைக் கண்டு பிடிக்கிறது அடுத்த ஸ்டெப்.... எனக்கு ஆர்மி சர்க்கிள்ஸ்ல நிறைய ப்ரண்ட்ஸ் இருக்காங்க. அரசாங்கத்திலயும் நிறைய த் தொடர்பு இருக்கு. அதையெல்லாம் வெச்சி... நம்ம முயற்சிகள் வீண் போகாதென்று நெனக்கிறேம்மா. அதான் நான் இப்பச் சொல்ல முடியும்.''

''உங்க நம்பிக்கை முயற்சி வீண் போகாது டாக்டர். நல்லதை நினேக்கிறீங்க. நல்லதே நடக்கும்.''

''ப்ரியா, நம்ப எல்லாருமே நம்பிக்கைலே தான் வாழறோம்... நீ படிச்சிருப்பேன்னு நினைக்கிறேன். 'ஹோப் ஸ்பிரிங்ஸ் எடர்னல் இன் ஹ்யூமன் ப்ரஸ்ட்'... நீ நெனைக்கிறபடி எல்லாமே நல்லாவே நடக்கட்டும். அப்படி நடந்தா என்னை விடச சந்தோஷப்படறவன் வேற யாருமே இருக்க முடியாது.'' சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள்.

''டாக்டர்...''

''எஸ் ப்ரியா?''

''இன்னும் ஒரு சந்தேகம். இந்த வீட்டுலே எங்கேயுமே ஃபோட்டோஸே இல்லையே... கிரிஷ்தானுகட்டும்... மேஜர் மல்லிக்... நாட் ஈவன் மம்மிஸ்... யாருதுமே இல்லியே அது ஏன்?''

''ப்ரியா எனக்கும் முன்னே சந்தேகம் இருந்தது. இப்ப இல்லே... ஏதோ ஒரு மூடுலே மேடம் சொன்னுங்க... நான் அவங்களை மீட் பண்றதுக்கு முந்தி அதாவது, இவங்க மெட்ராஸ்ல இருந்தபோது இவங்களுக்கு ஏதோ நெர்வ்ஸ் பிரேக் டௌன் மாதிரி வந்துதாம்... ஒரு வகையான நரம்புத் தளர்ச்சின்னு வெச்சுக்கயேன்... அப்ப ஒரு பிரபலமான ஸ்பெஷலிஸ்ட், அதாவது ஒரு டாப் நியூரோ பிஸிஷியன் வைத்தியம் பார்த்திருக்காரு. அவர் சொன்னாராம்.... கிரிஷ், மேஜர் மல்லிக் இவங்களோட படங்களெல்லாம் எடுத்துடுங்கன்னு... அதையெல்லாம் அடிக்கடி பார்த்துக்கிட்டே இருந்தா இந்த அம்மாவுக்கு டென்ஷன் ஜாஸ்தி ஆகலாம்.... மைண்டே அப்பெக்ட் ஆகலாம் அப்படீன்னு ஒபீனியன் கொடுத்தாராம்... அஃப்கோர்ஸ் அந்த டாக்டர் சொன்னது ரொம்பக் கரெக்ட். அதனுலதான் இந்த வீட்லெ... இவ்வளவு பெரிய பங்களாவுலே ஒருத்தரோட ஃபோட்டோவும் இல்லே... பாவம் நெனைச்சுப் பார்த்தா ரொம்பவும் வருத்தமா இருக்கு இல்லியா?''

''டாக்டர் இதுக்கெல்லாம் மருந்து கிரிஷ் திரும்பி வரது ஒண்ணுதான். அவர் சீக்கிரம் வருவார்னு எதிர்பார்ப்போம்...''

''ஆமாம்மா. நானும் அந்த நல்ல நாளைத் தான் எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன்...''

ப்ரியா குளித்துவிட்டு, காலை சிற்றுண்டியை முடித்துவிட்டுப் பார்வதியைக் கவனிக்கத் தயாரானுள். காலை எட்டரை மணிக்குப் பார்வதி இரண்டு ஸ்லைஸ் ரொட்டி சாப்பிடுவாள் வெண்ணெய் தடவாமல். அத்துடன் ஒரு டம்ளர் இளநீர். அதற்குப் பிறகு வழக்கமான மாத்திரைகள். மாத்திரைகளைக் கண்டவுடன் அவளுக்கு எரிச்சலாக வரும். இது வழக்கமாக நடக்கும்.

பார்வதி பலமாக ஏப்பம் விட்டாள். ப்ரியா கட்டிலிலிருந்த தலையணைகளை ஒன்றின் மேல் ஒன்ருக அடுக்கி வைத்துப் பார்வதியை அதன் மேல் சாய வைத்தாள். சாப்பிட்ட உடன் அரை மணி நேரம் அவளை அப்படி உட்கார வைக்க வேண்டும் என்று டாக்டரின் உத்தரவு.

''ப்ரியா!''

''எஸ் ஆன்டி!''

''உனக்கு எத்தனை தடவை....''

''ஸாரி... மம்மி...!''

''ப்ரியா இந்தக் காலத்துப் பெண்களாம் இவ்வளவு டல்லா இருப்பாங்கன்னு நான் நெனைக்கவே யில்லை.''

''ஸாரி மம்மி. மன்னிச்சுக்கங்க.''

''ஓகே ஓகே... ப்ரியா நீ ஒரு வேலை பண்ணு. நீ உடனே ஒரு நல்ல புடவை, ரவிக்கை போட்டுக்க...''

''என்ன மம்மி... இப்ப நான் டிரெஸ் பண்ணியிருக்கிறது நல்லாத்தானே இருக்கிறது.''

ப்ரியா தன்னைத் தானே பார்த்துக்கொண்டாள். கழுத்து–வரை ரவிக்கை... மஞ்சள் நிறப் புடவை... கழுத்தைச் சுற்றி மெல்லிய தங்கச் சங்கிலி, காதில் பவழம் வைத்த தோடுகள்.



''ப்ரியா நான் உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன் கேள்வி கேட்கக் கூடா துன்னு... நான் ஏதாவது சொன்னேன்னு இன்ஸ்டன்ட் ஒபீடியன்ஸ்...அதுதான் எனக் குத் தேவை...ப்ரியா ஒரு விஷயம் நீ மறக்கக் கூடாது. நம்மது ஆர்மி ஃபேமிலி, அதுலயும் மேஜரோட ஃபேமிலி.''

பார்வதியின் கண்கள் ப்ரியாவைத் துளைத்தன.

''ப்ரியா உடனே புடவையை மாத்து. அந்த பீக்காக் ப்ளூ புடவை இருக்கே அது ஒனக்கு நல்லா இருக்கு. அத உடுத்திக்கோ. நம்ம லாயர் சார் இருக்காரே, அவர் அந்தக் காலத்து ஆசாமி... அவர் புடவை, நகை, செருப்பு இதெல்லாம் கவனிச்சுப் பாப்பாரு! நீ அவரைப் போய் மீட் பண்ணணும். வெறும் ப்ரியாவா இல்லே. என்னுடைய வருங்கால மருமகளா!''

''மம்மி நான் போயி என்ன பண்ண ணும்?''

''ஓ உன்கிட்ட நான் சொல்லலே இல் லியா... மிஸ்டர் சாரியோட ஒரு முக்கிய மான விஷயத்தைப் பத்திப் பேசியிருக்கேன். அது விஷயமா அவர் உன்னைப் பார்க்கணும்னு சொல்றார்.''

''என்ன விஷயம் மம்மி?''

''என்னோட உயிலைப் பத்தி.''

ப்ரியா சற்று அதிர்ச்சி அடைந்தாள். உயி லைப் பற்றிய பேச்சு இப்பொழுது ஏன்? அதுக்கு என்ன அவசரம்?

''மம்மி இப்போ எதுக்கு இதெல்லாம்?''

பார்வதி தன் கையை உயர்த்தினாள்.

''இத பாரு ப்ரியா எதுக்கு எங்கே என்ன இதெல்லாம் எங்கிட்டக் கேட்கக் கூடாது. ப்ரியா என் உடம்பைப் பத்தி எனக்குத் தெரியும். நான் உயிரோட இருக்கிறதே என் கிரிஷுக்காகத்தான். அவன் நிச்சயம் திரும்பி வருவான் அப்படீங்கற நம்பிக்கை தான் எனக்கு மருந்தா உபயோகப்படுது... டாக்டர் ஆனந்தும் நீயும் என் வாயிலே அடைக்கிறீங்களே டாப்லெட்ஸ் அதனலை தான் நான் உயிரோட இருக்கேன்னு நினைச்சா நீங்க ரெண்டு பேருமே ஸ்டுபிட்!... கிரிஷ்

''சாருக்கு மசால்தோசை சொல்லி யிருக்கேன். இந்தாங்க கடல்புரு மூனு பாகமும் இருக்கு. படிச்சிட் டிருங்க... இதே க்விக்கா சப்ளை பண்ணிடறேன்.''

-சி. மோகன்தாஸ்



வந்த மறு நிமிஷம் ஓங்க ரெண்டு பேருக்கும் கலியாணத்தைப் பண்ணி வெச்சிருவேன். அதுக்கப்புறம் நிம்மதியா ஹாய்யா கண்ணை மூடுவேன். அதுக்காகத்தான் என் உயிலை இப்பவே எழுதறேன். வக்கீல் சாரி கிட்டே எல்லா விஷயத்தையும் சொல்லி யிருக்கேன். ப்ரியா உனக்குத் தெரியுமோ தெரியாதோ... எனக்கு ஆஸ்தி நிறைய இருக்கு.''

ப்ரியா தலையை ஆட்டினாள்.

''ப்ரியா அந்த ஆஸ்தி பூரா கிரிஷுக்கும் உனக்கும்தான்!''

ப்ரியாவின் உடலில் மின்சாரம் பாய்ந் ததைப் போன்ற உணர்ச்சி.

''எனக்கா மம்மி?''

ப்ரியா சற்றே உரக்கவே கத்தினாள்.

''எஸ். இதில ஆச்சரியப்படறதுக்கு என்ன இருக்கு? என் ஆஸ்தி என் புள் ளைக்கும் மருமகளுக்கும் போகாமே அடுத்த தெரு அப்துல் காதருக்கா போகும்?''

''மம்மி நான் நேத்து வந்தவ...''

''ஷட் அப் ப்ரியா ஷட் அப்!''

''மம்மி இதுக்கெல்லாம் இப்ப என்ன அவசரம்... முதல்லே உங்க பிள்ளை வரட் டும். அதுக்கப்புறம்...''

''ப்ரியா ஸ்டாப் தட். நான் என்ன சொல் றேனோ அதைச் செய். எங்க ஃபேமிலே எந்த மருமகளும் கேள்வி கேக்கறது கிடை யாது. கூடாது... நானே அந்த நாள்ளே கேக்கலேன்னு பார்த்துக்கோயேன். எனக்கு இல்லாத உரிமை உனக்கு நிச்சயமா கிடை யாது. ப்ரியா நான் அப்பவே லிப்ஸ்டிக் யூஸ் பண்ணேன்... ஹை ஹீல்ஸ், ஸ்லீவ்லெஸ் பிளவுசு எல்லாம் போட்டேன்.... என்னை ரொம்ப டேரிங்குன்னு சொன்னாங்க. ஆனா எங்க மாமியாரைக் கேள்வி கேட்டது கிடையாது. அது எங்க ஃபேமிலி டிரெடிஷன். ஒரு வாரம் நாங்க அம்பாலாலே இருக்க றச்சே என் மாமியார் வந்தாங்க. கலியா ணம் ஆன புதுசு. ஒரு டின்னருக்கு மூணு பேரும் காருல கிளம்பினோம். என் மாமி யார் என்ன பண்ணுங்க தெரியுமோ.... ஃப்ரண்ட் சீட்ல என் வீட்டுக்காரருக்குப் பக்கத்துல ஒக்காந்துட்டாங்க. என்னைப் பின் னாடித் தள்ளிட்டாங்க. சின்ன வயசு. அழு கையே வந்துடுச்சு. அதெப் பார்த்தாங்க மம்மி.... ஃபேமிலி டிரெடிஷன்னு சொன் னேனே அதை என்னன்னு புரியவெச்சாங்க.''

ப்ரியா சிரித்தாள்.

''ப்ரியா இது சிரிக்கிற விஷயமில்லே. ஃபேமிலி டிரெடிஷன். நீ போயி டிரெஸ் சேஞ்ச் பண்ணிண்டு சாரியை மீட் பண்ணு. மீதியெல்லாம் அவர் சொல்லுவார். போற துக்கு முன்னாடி இந்த பில்லோஸெல்லாம் இப்படிப் பின்னாடி வையேன். கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கறேன். முதுகெல்லாம் வலிக்குது....''

மீஞ்ஜனூர் கோவிந்தராஜாச்சாரி! குட்டை யான, தொந்தி பருத்த ஆசாமி. சென்னூ ரின் பிரபல வக்கீல். அறுபத்தியாறு வயதைத் தாண்டியிருந்தாலும் கண்களில் குறும்பு கலந்த ஒளி... நுக்க மர சுழலும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அவர்

10% சிறப்புத் தள்ளுபடி, 10-10-81 முதல் 26-10-81 வரை
ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு

தம் நரைத்த தலையைத் தடவிக்கொண்டு ப்ரியாவை வரவேற்றார். அறையில் எங்கு பார்த்தாலும் சட்டப் புத்தகங்கள். அடுத்த அறையில் கட்சிக் காரர்களுடன் சாரியின் ஜூனியர்கள் சள்சளவென்று பேசிக்கொண்டிருந்தார்கள். அதற்கு அடுத்த வராந்தாவில் இரண்டு வயதானவர்கள் வேகமாக டைப் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

''ப்ரியா இந்த மாதிரி நான் ஒரு உயில் டிராஃப்ட் பண்ணதேயில்லே. ஒன்னோட மாமியாருக்காகத்தான்.... மாமியார்னு சொல்றதுலே ஒனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லையே! ப்ரியா எனக்கு என்னவோ அவ்வளவு சரியாப் படலே.''

''எதைப் பத்தி ஸார்?''

சாரி நாற்காலியில் சற்று முன்னால் நகர்ந்தார். ''ப்ரியா நான் நாற்பத்தாறு வருஷமா பிராக்டீஸ் பண்றேன். சாதாரணமா ஒரு க்ளையண்டைப்பத்தி மத்தவாளோட டிஸ்கஸ் பண்ணக் கூடாது. அது ப்ராப்பர் இல்லேன்னு சொல்லுவா. பட் ஒன்னோட விஷயத்திலே ஐ வில் மேக் என் எக்ஸெப்ஷன். ஏன்னா நீயும் கிரிஷ்ஷுந்தான் உயில் பிரகாரம் வாரிசுகள். அவளுக்கு எக்கச்சக்கமான சொத்து இருக்கு. ப்ரியா, சொல்லப்போனா ஒன்னுது ரொம்ப அதிர்ஷ்டமான ஜாதகமாக இருக்கணும்.''

சாரி சிரித்தார். ஆனால் ப்ரியாவின் முகத்தில் எந்த விதமான மாறுதலும் இல்லை.

''இப்போ கிரிஷ் எங்கேன்னு தெரிலே. அவன் வருவானா இல்லையான்னும் தெரிலே. ஒங்க அம்மா தன் புள்ளையாண்டான் நிச்சயம் வருவான் அப்படீன்னு சொல்றா. டாக்டர் ஆனந்துக்கும் அதுல நம்பிக்கை ஜாஸ்தி. ஏதோ டில்லி கில்லின்னு போயிட்டு வந்தார். ஆனா நான் கிரிஷைப் பாத்தது இல்லே. அவன் எவ்வளவு நாளா காணமப் பூட்டான்னு தெரியலே....லா பிரகாரம் ஒருத்தன் ஏழு வருஷம் கன்டினியுவா காணமப் பூட்டான்னா அவன் உயிரோட இல்லேன்னு எடுத்துக்கலாம். இதெல்லாம் லீகல் ப்ருஸம்ஷன்னு சொல்லுவா. சட்டப் பிரகாரம் அது செல்லும்.''

ப்ரியா முகத்தில் வியப்பு.

''அப்படி ஒரு சட்டமா ஸார், எனக்கு இத்தனை நாளாத் தெரியாது.''

''ப்ரியா இந்த விஷயத்தைப் பத்தி அந்த அம்மாகிட்டக் கேட்க மனசே வரல்லே. நான் நெனக்கிறேன், கிரிஷ் ஏழு வருஷத்துக்கு மேலே மிஸ்ஸிங்கா இருக்கான்னு. என் தியரி கரெக்டா இருந்தா லா பிரகாரம் இறந்துபோன ஒரு மனுஷன் பேர்லே உயிலை எழுதியிருக்கேன். அது சரின்னு எனக்குப் படல்லே. அதனாலேதான் இந்த இஷ்யூவை இழுத்தேன். அதுலே ஒங்க அம்மாவுக்கு என் மேலே கோபம் கூட.... கொஞ்ச நாள் முன்னாடி ஃபோன்லேகூப்பிட்டுத் தொண்டை கிழியக் கத்தினா. டாக்டர் ஆனந்தை வேறே அனுப்பிச்சுப் பேசச் சொன்னா. எனிவே என் வேலையை நான் பண்ணிட்டேன். ஹியர் இட் ஈஸ்....''

ஒரு நீளமான நீலக் கவரை எடுத்துப் ப்ரியாவிடம் கொடுத்தார்.

''ப்ரியா இத ஒன் வருங்கால மாமியார் கையில குடு. படிச்சுப் பார்த்து சைன் பண்ணச் சொல்லு. இரண்டு பேரு சாட்சிக் கையெழுத்துப் போடணும். அவங்க எதிரில தான் பார்வதி அம்மாளும் கையெழுத்துப் போடணும். சொத்துக்கு நீ ஒரு வாரிசா இருக்கிறதாலே நீயே விட்னஸ் கையெழுத்துப் போட்டா நன்னா இருக்காது. டாக்டர் ஆனந்த் பேஷாக் கையெழுத்துப் போடலாம். அவ்வளவுதான்.''

''சார்... நீங்க சொன்னபடியே செய்யறேம்.''

''குட்... நீ இந்த உயிலை வாங்கிண்டு போற வேளை அந்த கிரிஷும் வந்து சேரட்டும்.... அந்த அம்மாவும் தீர்க்காயுசா இருக்கணும். உன் கலியாணத்துக்கும் கெட்டி மேளம் கொட்டணும்.''

கலகலப்பாகச் சிரித்தார். (தொடரும்)

நீங்கள் தஞ்சை வாசியா?

தஞ்சையில் வசிக்கிறீர்களா? அல்லது தஞ்சை நகர் பற்றி நன்றாக அறிந்தவரா? அவ்வாறானால் அந்நகரைப் பற்றி ஒரே ஒரு அபூர்வமான விஷயம் குறித்து எழுதுங்கள். அனைவரும் அறிந்த பிரபலமான விவரங்களைத் தவிர்த்து விநோதமான ஒரு அம்சத்தைக் குறிப்பிட்டு ரத்தினச் சுருக்கமாக எழுதுங்கள். அதன் மூலம் நகரின் குறை நிறை இரண்டையுமே சுட்டலாம்.

உண்மைத் தகவல் என்ற உறுதி மொழி தேவை. பிரசுரமாகும் தகவல்களுக்குப் பரிசு உண்டு. முடிவு தேதி அக்டோபர் 20.

உறையின்மேல் 'தஞ்சை பற்றிய தகவல்' என்று குறிப்பிடவும். திருப்பி அனுப்புதல், கடிதப் போக்குவரத்து இல்லை.

லப்பக்கத்தில் தனி மயில் வாகனத்தில் ள்ளியம்மையும், இடப் பக்கத்தில் னி மயில் வாகனத்தில் தெய்வ ானையும் எழுந்தருளி இருப்பதைக் கண்டு வணங்குகிறோம். மயில் வாகனமும், திரு ாசியும், மூல மூர்த்தியாகிய பெரு ானின் திருவுருவமும் ஒரே சிலையாக அமைந்துள்ளன.

வழிபாடு முடிந்து திரும்புகிறபோது, தல வரலாற்று நூலைப் பெற்றுக் கொண்டு துரை ாஜு மண்டபத்தில் அமர்கிறோம்.

குன்றக்குடித் திருத்தலம் — மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூவகையாலும் சிறந்து விளங்குகிறது. புராண வரலாறும், சரித்திரம் காட்டும், கல்வெட்டுக்களும், தமிழ் மக்க ளின் கலை உணர்வை எடுத்துக் கூறும் எழில் சிற்பங்களும், நோய் நீக்கம், துன்ப நீக்கம் மகப் பேறு முதலிய பேறுகளை வழங்கிய அருட் செயல்களும் நிறைந்து விளங்குவதை அறிந்து மகிழ்கிறோம். கண்ணபிரான், நான் முகன், இந்திரன், வசிட்டர், விசுவாமித் திரர், நாரதர், சூரியன், மன்மதன் முதலி யோர் வழிபட்டுப் பேறடைந்த செய்திகளை அறியும் போது நாமும் சற்றே நெஞ்சை உயர்த்திக் கொள்கிறோம். அவர்களது வரி சையிலே இப்போது நாமும் இடம் பெற்று விட்டோமே?

அருணகிரிநாதரால் சிறப்பித்துப் பாடப் பெற்ற இத்திருத்தலம், பெரும் புலவர் களும், மெய்யன்பர்களும் இயற்றிய அள விடற்கரிய பதிகங்களையும் பிரபந்தங்களை யும் தமிழ் மொழியிலும் வட மொழியிலும் புகழ் நூல்களாகப் பெற்றுத் திகழ்கிறது.

மலையின் தென்மேற்கு அடிவாரச் சரிவுப் பாறையில் மூன்று குடைவரைக் கோயில்கள் ஒரே வரிசையில் அமைந்துள்ளன. இவை களுக்கு எதிரே கற்றளியாகத் தேனுற்று நாதர் கோயிலெனும் சிவன் கோவிலொன்று பேரெழிலுடன் திகழ்கிறது. இக்கற்றளி 'மாலீச்சுரம்' என அழைக்கப்பெற்று வந் துள்ளது. சிற்பி, குடைவரைகளை உரு வாக்குகிறபோது, கருவறையுள் அமைந்த இயற்கைப் பாறையிலேயே சிவலிங்கங்களை அமைத்திருப்பது வியப்புக்குரியது. மலையின் மேற்குப் பகுதி 'ஞானியர் மலை' எனக் குறிப்பிடப்படுகிறது. அம்மலைப் பகுதியில் கற் படுக்கைகளும், பிராமிக் கல்வெட்டுகளும் உள்ள அமணபாழி தென்படுகிறது.

குன்றக்குடி முருகப் பெருமானைக் குல தெய்வமாகக் கொண்டவர்கள் நகரத்தார் பெருமக்கள். 'செட்டி முருகன்' என்ற பெயரைக் கொண்டவனல்லவா முருகப் பெருமான்! நகரத்தார் பெருமக்கள் இத் திருத்தலத்தைக் கொண்டே, தாங்கள் வாழ் கிற ஊர்களின் திசையைக் குறிப்பர்! தேரோடும் நான்கு வீதிகளிலும் திரு மடங்கள், அறச் சத்திரங்கள் அமைத்துத் தர்ம பரிபாலனம் நடத்தி வருகிற நகரத் தார்கள் திருப்பணிகள் செய்வித்தும், பெருமானுக்குத் திருவாபரணங்கள் வழங் கியும் பேறு பெற்று உள்ளனர்.

திருக்கோயிலைக் காத்துப் புரந்து வரு கிறது குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம். 45வது குரு மூர்த்தியாக இப்போது வீற் றிருப்பவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் எனத் தமிழகம் போற்றும் திருவருள்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமா சாரிய சுவாமிகள்.

மாதந்தோறும் பெருமானுக்கு விழாக் கொண்டாடி வரினும், பங்குனி உத்தரப் பெருவிழா — பல லட்சக்கணக்கான மக்கள் குழுமி, பல்லாயிரக் கணக்கான காவடிகள் செலுத்தும் புகழ் பெற்ற விழாவாக அமைந் திருக்கிறது. அக்கினிக் காவடி, சர்ப்பக் காவடி, சர்க்கரைக் காவடி, வேல் காவடி தேர்க் காவடி எனப் பக்தர்களால் கொண்டு செலுத்தப்படும் காவடிகள் வகை வகையாக அமைகின்றன. காவடிகளின் எல்லையில்லாத அளவு கருதி ''கழுதை தப்பினால் குட்டிச் சுவர்! காவடி தப்பினால் குன்றக்குடி'' என வொரு பழமொழியே ஏற்பட்டு விட்டது!

'குன்னக்குடி' என்பதும் இத் திருத் தலத்தையே குறிக்குமென்ற செய்தியைக் கேட்கையில் செவிகளில் வயலின் நாதம் ரீங்காரமிடுகிறது! மலையில் ஏறுகிறபோது இருந்த சிரமம், இறங்குகிறபோது இல்லையே? மலையில் மட்டுமா, மானுட வாழ்விலும் அப் படித்தானே! வாழ்வில் ஏறுமுகம் காண, ஆறுமுகப்பெருமான் அருள் பாலிப்பானென்ற பெரு நம்பிக்கையோடு அடிவாரத்தை அடை கிறோம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. பார்வதி தன் வக்கீல் கோவிந்தராஜாச்சாரியையும், டாக்டர் ஆனந்தையும் பகல் நேர விருந்துக்கு அழைத்திருந்தாள். அவளால் நடக்க முடியாது. பத்தடி நகர்ந்தாலே மூச்சு வாங்க ஆரம்பித்து விடும். அதனுல் அவளுக்கு உதவியாக இருப்பது வீல் சேர்தான். மாலே நேரங்களில் ப்ரியா அவளேத் தோட்டத்துக்கு அழைத்துச் செல்வாள். இரண்டு மணி நேரம் வானத்தில் பறக்கும் பறவைகள் சாலேயில் செல்லும் ஆடு மாடுகள்... பலவித மான மனிதர்கள் இதை யெல்லாம் ரசிப்பாள். அம்பாலா, மீரட், டேராடூன்போன்ற இடங்களேப் பற்றிய கதைகள், கிசுகிசுக்கள்— இப்படிச் சற்று நேரம்....

டின்னர் டேபிளேச் சுற்றி டாக்டர் ஆனந்த், கோவிந்தராஜாச்சாரி, ப்ரியா, பார்வதிஎல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். மேசையின் மேல் அலங்கார ப்ளவர்வாஸ்கள் வெண்கல டின்னர் காங்... இப்படிச் சில அழகுப் பொருள்கள். பார்வதி கையிலிருந்த ஃபோர்க் தட்டிலிருந்த வேகவைத்த காய்கறிகளேக் குத்திக் கிளறிக் கொண்டிருந்தது. அவள் எப்போதுமே ஃபோர்க் ஸ்பூனுடனே தான் சாப்பிடுவாள். அப்படிச் சாப்பிடாதவர்களேக் கேலியும் செய்வாள். வழக்கமாக விஜிடபுள் சூப், வேகவைத்த காய்கறிகள் ஒரு வாய் சாதம், ஒரு பழம்... வாரம் நான்கு முறை வேகவைத்த கோழிக் கறி. அன்று வக்கீல் சாப்பிட வந்ததினுல் எல்லாமே சைவந்தான். உருளேக் கிழங்கு பொரியலில் வெங்காயம் கூடச் சேர்க்கப்படவில்லே.

வருவான் ராஜகுமாரன்!

ராண்டார் கை

''மிஸ்டர் சாரி'', பார்வதி ஒரு காளிஃபிளவர் துண்டை வாயில் போட்டுக்கொண்டாள்: ''ரொம்ப நாள் கழிச்சு நான் இன்னிக்குத்தான் ஹாப்பியா இருக்கேன். என் உயிலெ சைன் பண்ண உடனே, ஒரு

பெரிய பாரத்தை இறக்கி வெச்சமாதிரி ஒரு ஃபீலிங். எனக்கு என்னமோ இந்த நேரத்துலே ஒண்ணு தோணுது. கிரிஷ் உடனே திரும்பி வருவான்னு. நீங்க வேணு பாருங்க, அது நிச்சயமா நடக்கப் போகுது.''

கோவிந்தராஜாச்சாரி வாயை மென்று கொண்டே சிரித்தார்.

''மிஸ்டர் சாரி, ஒங்கசிரிப்பைப் பாத்தா நான் சொல்றதை நீங்க நம்பலேன்னு தெரியுது. பைத்தியக்காரி ஏதோ கன்னா பின்னான்னு உளர்றான்னு நெனைக்கிறீங்க இல்லையா.... நாளைக்கு கிரிஷ் திரும்பி வந்துடுவான். அதுக்கப்பறம் ஒங்களுக்குப் புரியும். நான் பைத்தியமா இல்லையான்னு.''

டாக்டர் ஆனந்த் உருளைக் கிழங்குப் பொரியலைத் தம் தட்டில் எடுத்துப் போட்டுக் கொண்டே பேசத் தொடங்கினார்: ''மேடம் ஒங்களைப் பத்தி அப்படி யாரும் நெனைக்கலே... நெனைக்க மாட்டாங்க..... மிஸ்டர் சாரி உள்பட நாங்க எல்லோருமே கிரிஷ் சீக்கிரம் திரும்பி வருவார்னுதான் எதிர்பார்த்துக்கிட்டிருக்கோம்.''

டாக்டர் ஆனந்தின் வார்த்தைகள் பார்வதியைச் சந்தோஷத்தால் தத்தளிக்கச் செய்தன.

ப்ரியா கண்களைத் திறந்தாள். இன்னும் தேங்கியிருந்த தூக்கத்தைத் தன் விரல்களால் துடைத்தாள். வாசலில் காலிங் பெல் அடித்தது போல் ஓர் உணர்ச்சி. சிறு வயதிலிருந்தே அவளுக்குத் தூக்க மயக்கமே லேசில் கலையாது. தூக்கம் கலைந்தவுடன் அரை மணி நேரமாவது படுக்கையில் புரள வேண்டுமென்ற ஆசை அவளுக்கு. ஆனால் அவள் வளர்ந்த சூழ்நிலையில் அந்த ஆசை அவள் விரும்பிய அளவுக்கு நிறைவேறவில்லை. கொட்டாவி விட்டுக் கொண்டே தலையைத் தூக்கிப் பார்த்தாள். ஜன்னலின் கண்ணாடி வழியாக வானம் இன்னும் இருட்டின் அணைப்பிலேயே சங்கமமாகிக் கிடந்தது தெரிந்தது. பறவைகளின் பூபாளம் இன்னும் ஒலிக்க ஆரம்பிக்கவில்லை. அந்த நேரத்தில் காலிங் பெல் அடிப்பதாவது. வெறும் பிரமைதான். தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

டிங்....!.....டாங்! ப்ரியா கண்களை அகலத் திறந்தாள்.

டிங்! டாங்....! ஆம் அது மணி ஓசைதான். பிரமையல்ல. வேகமாக எழுந்து உட்கார்ந்தாள். தன் ஆடையைச் சரி செய்து கொண்டாள். கண்களின் ஓரங்களைத் துடைத்துக் கொண்டாள். முடியைச் சீராக்கினாள்.

டிங் டாங்! டிங்டாங்!

அவசர அவசரமாக வாசலுக்கு ஓடினாள். வெளி வராந்தாவின் விளக்கைப் போட்டு விட்டுக் கதவைத் திறந்தாள். வாசற்படியில் வாட்ட சாட்டமான, உயரமான ஒருத்தன் நின்று கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு சிகப்புப் பெட்டி. அருகில் தரையில் இரண்டு சிறிய தகடுப் பெட்டிகள்.

''ஹலோ'' அவன் குரலில் ஆண்மை நிறைந்திருந்தது.

''எஸ் ப்ளீஸ்''

''இது மிஸஸ் மல்லிக் வீடுதானே? பார்வதி மல்லிக்?''

''எஸ்....நீங்க....நீங்க....''

ப்ரியாவின் இருதயம் வேகமாக அடிக்கத் தொடங்கியது.

''நான்தான் கிரிஷ்... கிரிஷ் மல்லிக்!... பார்வதியோட ஸன்!''

''கிரிஷ்!.... ஓ காட்... மம்மி....மம்மி... மமமமமமமம்மி! அவர் வந்துட்டாரும்மா. கிரிஷ்.... ஆமா ஒங்க மகன்தான்... வந்தாச்சு....''

ப்ரியா தன்னே மறந்து உரக்கக் கத்திக் கொண்டே உள்ளே துள்ளி ஓடினுள், கதவை நன்ருகத் திறக்காமலேயே.

கிரிஷ் கட்டிலில் பார்வதியின் அருகில் உட்கார்ந்திருந்தான். அவள் அவன் கை களைப் பிடித்துக்கொண்டு வெகு நேரம் அழுது கொண்டிருந்தாள். அவள்உள்ளத்தில்அடங்கி யிருந்த ஆசா பாசங்கள், உணர்ச்சிக் கோளங்கள் கண்ணீர் வடிவாகக் குமுறிக் கொண்டு வெளியே வந்தன.

பார்வதியும் கிரிஷும் உணர்ச்சிகளைப் பரி மாறிக் கொண்டிருக்கும் நேரத்தில் ப்ரியா அவனுக்காகச் சமையல் அறையில் காப்பி தயார் செய்து கொண்டிருந்தாள். அவள் கைகளில் நடுக்கம். கிரிஷ் உயிருடன் திரும்பி வருவான் என்று அவள் நம்பவில்லை. ஆனல் இப்போது? அவள் மார்பு வேகமாக அடித் துக்கொண்டது...

''மம்மி.... அந்தப் பொண்ணு யாரு?'' காப்பியைச் சாப்பிட்டுக் கொண்டே கிரிஷ் கேட்டான். பார்வதியின் அழுகை சற்று ஓய்ந்து இருந்தது. அவள் கைகள் கிரிஷின் முதுகை வருடிக் கொண்டிருந்தன.

''என்ன ஸ்டுபிட் கொஸ்ச்சன் இது. அவதாண்டா ப்ரியா. தங்கமான பொண்ணு. இந்த நாள்லே இந்த மாதிரிப் பொண்ணெப் பார்க்க முடியாது. ஜெம் ஆஃப் எ கேர்ள். எனக்குத் துணையா வந்தா. எனக்கு மரு மகளா மாறப் போரு!''

கிரிஷ் நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் புருவங்கள் ஆச்சரியக் குறிகளாக எழுந்து நின்றன.

''என்னம்மா அது என்ன சொல்றே நீ?''

''மெதுவாப்பா. எனக்கு ஒண்ணும் காது செவிடு இல்லே! ப்ரியா உன்னோட ஒய்ஃப் ஆகப் போரு!''

''என் ஒய்ஃபா?''

''ஆமாண்டா. ஆமாம். ஒய்ஃப்தான். மீரட்டுலே 'பிபி'ன்னு சொல்லுவாங்க. அதா வது மிஸர்ஸ் ப்ரியா மல்லிக். அதான் இவ ளோட புதுப் பேரு, இன்னும் கொஞ்ச நாள்ள.''

''என்ன மம்மி, எனக்கு அந்தப் பொண்ணு யாரு என்னன்னே தெரியாது. இன்னிக்குக் காலமேதான் மொதல் தடவை பார்த் தேன்.....''

''ஸ்டாப் இட்...கிரிஷ்.... ஸ்டாப் இட்

''பட் மம்மி....''

''நிறுத்துடா. பட்டுமில்லே கிட்டுமில்லே ஓங்க டாடியே என்னேப் பார்த்த அரை மணி யிலியே கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்ருரு. அப்பவே அவரு பெரிய ஆர்மி ஆஃபீஸர். நீ என்னடா சின்னப் பையன்.''

''மம்மி, அந்தக் காலம் வேறே....''

பார்வதி அவன் காதைத் திருகினுள்.

''டேய்,காலம் எப்பவும் ஒண்ணுதாண்டா. என்னேப் பொறுத்தவரையிலும், மல்லிக் ஃபேமிலி பொறுத்த வரையிலும் அது மாறவே மாருதுடா... கிரிஷ் பையா இந்த வீட்லே நான் சொன்னதுதான் நடக்கும்... நடக்கணும்... ஓங்க டாடியே நான் குதின்னு குதிப்பாரு. நான் தும்மினு அவரு தம் மூக் கைத் தொடச்சிப்பாரு. அவரு ஆர்மி மேஜர். அவரே அப்படீன்ன நீ என்னடா''

கிரிஷ் பதில் எதுவும் சொல்லாமல் சிரித் தான். அப்போது ப்ரியா ஒரு பெரிய வெள்ளித் தட்டில் காலேச் சிற்றுண்டியோடு உள்ளே நுழைந்தாள். பிரெட் டோஸ்ட், வெண்ணெய், மார்மலேட், சூடான காஃபி. ஆரஞ்சு ஜூஸ்... ஆறு வாழைப் பழங்கள்.

கிரிஷின் பார்வை அவளே எடை போட் டது. இருவரின் கண்கள் சில நொடிகள் ஒன்ருேடொன்று ஒட்டிக் கொண்டு உற வாடின. ப்ரியாவின் கழுத்தில் லேசாகச் சூடு படர்ந்திருந்தது. வெள்ளித் தட்டைத் கட்டிலுக்கருகே இருந்த ஒரு சிறிய மேஜை யின் மேல் வைத்தாள்.

''வெரி குட் ப்ரியா... பார்ரா கிரிஷ் எவ்வளவு ஃபைன் ப்ரக்ஃபாஸ்ட் என் டாடர் இன்லா தயார் பண்ணியிருக்கா பாரு.''

ப்ரியாவின் முகம் சிவந்தது.

''மிஸ்டர் கிரிஷ் ப்ரக்ஃபாஸ்ட் சாப்பி டுங்க.''

''தேங்க்யூ மிஸ் ப்ரியா!''

''டேய் டேய்என்ன நீங்கரெண்டு பேரும்... மிஸ்டர் கிரிஷ்.... மிஸ் ப்ரியா... தேங்க் யூல்லாம்... இதெல்லாம் எனக்குப் பிடிக் கலே. இன்னும் கொஞ்ச நாள்ள கலியாணம் பண்ணிக்கப் போறவங்க இப்படி யெல்லாமா பேசுவாங்க. ஷியர் நான்சன்ஸ்.''

''மம்மி, நம்ம டாக்டருக்கு இன்னும் விஷயத்தைச் சொல்லலியே... அவர் மார்

னிங் ரௌண்ட்ஸ்ஸெல்லாம் முடிச்சுட்டுத் திரும்பி வந்திருப்பாரே.''

''ஆமாம். மறந்தே போச்சும்மா. உடனே ஃபோன் பண்ணு.''

''மம்மி டாக்டர் ஆனந்த் யாரு?''

கிரிஷ் வெண்ணெயைச் சற்றுத் தாராள மாகவே ரொட்டியில் தடவிக் கொண்டு கேட்டான்.

''ஃபூல்... கிரிஷ். டாக்டர் ஆனந்த் நம்ம ஃபேமிலி டாக்டர் மட்டுமில்லே. சம் திங் மோர்... என்னமோ சொல்லுவாங்களே ஃபிரண்ட் பிலாஸஃபர், கெய்டுன்னு அதான் அவரு. கிரிஷ் நீ இங்கே வர்றதுக்கு அவர் தாண்டா காரணம். இந்த உலகம் இருக்கே, அந்த ப்ளேன் ஆக்ஸிடெண்டுலே நீ செத்துப் போயிட்டேன்னுதான் நம்பிடுத்து. நான் நம்பல்லே. அந்த டாக்டர்தான் என் நம்பிக்கை வீண் போகாமெ இருக்கப் பாடு பட்டார். அவரு ஒண்ணத் தேடிப் போகாத இடமே இல்லேப்பா. டெல்லி.... மீரட்... டாக்டர் ஆனந்த் மட்டும் இல்லேன்னு இன்னிக்கு ஒன்னப் பார்த்திருக்கவே முடியாது.''

''மம்மி, அப்பேர்ப்பட்ட டாக்டர் ஆனந்தை நான்உடனே மீட்பண்ணணுமே.''

ப்ரியா ஹாலில் ஃபோனைக் காதில் வைத்துக்கொண்டு நின்றிருந்தாள். அவள் மனத் திரையில் கிரிஷ் தோன்றினன். அவன் பார்வை.... ஆண்மை கலந்த குரல்... அவளை என்னமோ செய்தது.

''ஹலோ.''

''ஹலோ டாக்டர் ஆனந்த் ஹியர்... யாரு?''

''டாக்டர், ப்ரியா பேசறேன் ஸார்... அவர் வந்துட்டார் டாக்டர்!''

''யாரு ப்ரியா யாரு?''

''அவர்தான் டாக்டர்...அவர்... கிரிஷ்!''

''கிரிஷா? வந்தாச்சா?''

''டாக்டர்.... டாக்டர்.... ஹலோ... ஹலோ....!''

டாக்டர் ஃபோனை வைத்து விட்டார். பாவம் டாக்டர் ஆனந்த் அவருக்குத் தான் எத்தனை சந்தோஷம். அவர் எடுத்துக் கொண்ட முயற்சிக்குப் பலன் கிடைத்து விட்டது. அதில் அவருக்கு எத்தனை மகிழ்ச்சி. போனை வைத்துவிட்டு ஹாலுக்குள் சென்ருள்.

டிங் டாங்! டிங்டாங்!

டாக்டர் ஆன்ந்த். ஆம் அவரேதான் அவர் காலிங் பெல்லை அழுத்தும் விதமே தனி. அது அவளுக்கு நன்ருகவே தெரியும். அட அதற்குள் வந்து விட்டாரே!

''ஹலோ! ப்ரியா கங்கிராசுலேஷன்ஸ்.''

கதவைத் திறந்த உடனே டாக்டர் ஆனந்த் ப்ரியாவின் தோளைத் தட்டிக் கொண்டே உள்ளே நுழைந்தார். அவர் நடக்கவில்லை. ஓடினர்!

''டாக்டர்! திஸ் ஈஸ் மை ஸன் கிரிஷ்... கிரிஷ் மல்லிக்... கிரிஷ் இவர்தாம்ப்பா டாக்டர் ஆனந்த். நான் சொன்னேனே'' பார்வதி இருவரையும் அறிமுகம் செய்து வைத்தாள்.இருவரும் கை குலுக்கி மகிழ்ந்தார்கள்.

சுயேச்சையாளர்:



தொகுப்பு: சலன்

''டாக்டர் ஸோ க்லாட் டு மீட் யூ. எங்கம்மா நான் வந்ததிலேருந்தே ஓங்களைப் பத்தித்தான் பேசிக்கிட்டிருக்காங்க. நீங்க செஞ்சதுக்கு ரொம்ப தேங்க்ஸ் டாக்டர்.'' கிரிஷ் டாக்டரின் கைகளைத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டான்.

''வெல் கம் கிரிஷ் வெல் கம். ஓங்க அம்மாவோட நம்பிக்கை, எங்க எஃபர்ட்ஸ், வீண் போகலே....''

பார்வதி தன் கண்களைப் புடவையால் துடைத்துக் கொண்டாள்.

''ப்ரியா... அந்த ஆளெ ஃபோன்லே கூப்பிடு... அதான் அந்த மீஞ்சூர் கோவிந்த ராஜாச்சாரியை! கிரிஷ் வந்தாச்சுன்னு சொல்லு. அவரு நான் ஒரு பைத்தியம்னு நினைச்சுக்கிட்டிருந்தாரு. உடனே வந்து பார்க்கச் சொல்லு. அப்பத் தெரியும் நானு அவரா பைத்தியம்னு... இந்த வக்கீல்களே இப்படித்தான் எல்லாமே சந்தேகம். அதிலேயும் வயசான வக்கீலுன்னு தே பிகம் ரியல் இடியட்ஸ்.''

பார்வதி தன்னை மறந்து சிரித்தாள்.

(தொடரும்)

சரவணா

மாவரைக்கும் இயந்திரம்

சரவணா கிரைண்டர்கள்

- 4 பேரிங்குகளால் தயார் செய்யப்படுகிறது
- ஒரு வருட உத்திரவாதமுள்ளது
- பெரிய நகரங்களில் எங்களுடைய மாவரைக்கும் இயந்திரங்களுக்கு ஆயுட்கால இலவச சர்வீஸ் செய்து தரப்படுகிறது



தயாரிப்பாளர்கள் :

சரவணா இன்ஜினீயரிங் டிரேடர்ஸ்

கோயமுத்தூர் – 641002

ஸ்டாக்கிஸ்ட்ஸ் :

NEETHA TRADING AGENCIES, BOMBAY - 14 Phone: 440490
V. G. PANEERDAS & CO., SION, BOMBAY - 22 Phone: 474789
TAMILNADU STORES, KAROLBAUGH, NEWDELHI - 5 Phone: 562320
KARTHIK ENTERPRISES, MADRAS - 28 Phone: 71624

OSR

கேசத்தின் பராமரிப்புக்கு இரு தைலங்கள்

மதுயஷ்டி தைலம்

தலைமயிர் உதிர்வதை நிறுத்தி கேசத்தை அபரிமிதமாய் வளரச் செய்யும்

நீலிபிருங்கா மலகம்

அகால நரையைப் போக்கி தலைமயிரை கருமையாக வளரச் செய்யும்

லலிதா பார்மஸி

கும்பகோணம் (போன்: 123)

DRUG LICENCE No. 40 / 78

(மத்திய அரசால் ஈட்டுத் தொகைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது)

எமது கீழ்க்கண்ட கிளைகளிலும் மருந்துகள் கிடைக்கும் :

60-B, கச்சேரி ரோடு, மைலாப்பூர், சென்னை-4 (போன்: 73007)
6, ரெங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை-17 (போன்: 441454)
81, வடக்கு ரத வீதி, சிதம்பரம்
52, மஹாதானத் தெரு, மாயவரம் (போன்: 379)

மற்றும் சிறந்த ஆயுர்வேத மருந்துகள் யாவும் கிடைக்கும்

கணையாழி

ஆசிரியர் : தி. ஜானகிராமன்

தீபாவளிச் சிறப்பிதழ்

சிறுகதை மலராக வெளிவருகிறது

கி. ராஜநாராயணன், ஸ்வாமிநாத ஆத்ரேயன், ஆதவன்,
கரிச்சான்குஞ்சு, லக்ஷ்மி கண்ணன், சுஜாதா
சிறுகதைகள்

மற்றும்

தி. ஜ. ர., அசோகமித்திரன் எழுதும்
தொடர் நாவல்கள்

தனிப்பிரதி ரூ. 3/- ஆண்டுச் சந்தா ரூ. 20/- ஆறு மாதங்களுக்கு ரூ. 10/-

கணையாழி, 149, பெல்ஸ்ரோடு, சென்னை - 600 005



SRI JAGADESWARI

Elcetronic Service Centre
17, Ramanathan Street, T. Nagar,
MADRAS - 600 017

Watch Specialists in **Quartz, Electronic, Omega, Rado, Rolex, Seiko, Citizen, HMT Etc.,**
Service only

Sri Mookambika Screen Printers

17, Ramanathan Street, T. Nagar,
MADRAS - 600017

Silk Screen Printing in Stickers,
Wedding Cards, Tin Boards,
Visiting Cards, Letter Heads, Banners Etc.

4

மாலை மணி ஐந்து. சூரியன் இன்னும் சூடாகவே இருந்தான். பார்வதி டாக்டர் ஆனந்தையும் கோவிந்தராஜாச்சாரியையும் தேநீர் விருந்துக்கு அழைத்திருந்தாள். எல்லோரும் மகிழ்ச்சி பொங்க ஹாலில் உட்கார்ந்திருந்தார்கள். ப்ரியா சோபா, நாற்காலிகளை அழகாக மாற்றியமைத்து வைத்திருந்தாள். வீட்டை அழகுபடுத்த வேண்டும் என்ற ஒரு புத்துணர்ச்சி அவள்மேல் வழிந்து ஓடியது.

டாக்டரும் வக்கீலும் ஒரு பெரிய சோபாவில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கெதிராக வீல் சேரில் பார்வதி. அவளுக்கு மிக மிக அருகில் கிரிஷ். பார்வதி கிரிஷை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் சாப்பிடுவதை ரசிப்பதில் அவளுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. ப்ரியா எல்லோரையும் உபசரித்துக் கொண்டே தானும் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். தேநீர் விருந்துக்கு என்ன கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி அவள் சிந்தித்து ஆராய்ந்து தின்பண்டங்களைத் தயார் செய்திருந்தாள்.... மிந்திரிப் பருப்பு அல்வா... கீரைப் பக்கோடா... விஜிடபிள் சோமாஸ், உருளைக்கிழங்கு கேரட் வடை, நேந்திரங்காய் வறுவல்... க்ரேப் ஜூஸ்... மிக்ஸ்ட் ஃப்ரூட் ஸாலட். பார்வதியைத் தவிர மீதி எல்லோருமே வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார்கள். முக்கியமாக கிரிஷ்! கிரிஷின் வெள்ளித் தட்டு சில நொடிகளிலேயே காலியாகிக் கொண்டிருந்தது. ப்ரியா அதை மீண்டும் நிரப்புவாள். போதுமென்றோ, வேண்டாமென்றோ சொல்லும் அறிகுறிகள் எதுவும் கிரிஷிடம் காணப்படவில்லை. அதை ப்ரியாவும் ரசித்தாள்.

சாப்பிட்ட பிறகு எல்லோரும் பார்வதியின் படுக்கை அறைக்குள் புகுந்தார்கள். பார்வதி தன்படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்தாள். ப்ரியா மீண்டும் எல்லோருக்கும் க்ரேப் ஜூஸ் பரிமாறினாள்.

''டாக்டர்... மிஸ்டர் சாரி,'' பார்வதி தொண்டையைச் சரிசெய்து கொண்டாள். ''நீங்க எல்லாரும் என் கிரிஷை மீட் பண்ணியாச்சு. அதாவது என் மகனை! அவன் திரும்பி வந்ததை ஸெலிப்ரேட் பண்றதுக்குத்தான் இந்த டீபார்ட்டி... நாள் ஒரு பைத்தியம். இந்த ஸிம்பிள் விஷயத்தைப் போய் ஒங்களுக்கெல்லாம் பெரிசா எக்ஸ்ப்ளைன் பண்றேனே! ம்... சரி. எல்லாத்தையும் விட உங்களுக்கு ஒரு விஷயத்தைப் பத்தி சொல்லப் போறேன். நத்திங் நியூ பட்.... அதாவது என்னுடைய மகன்-ப்ரியா, அவங்க விஷயம்!''

ஆனந்த் லேசாகக் கையைத் தட்டினார். கோவிந்தராஜாச்சாரி பார்வதிக்குப் பின்னால் மோடாவில் உட்கார்ந்திருந்த ப்ரியாவைப் பார்த்துச் சிரித்தார். அவளுக்கு கிரிஷின் கண்கள் தன்னை அளந்து எடை போடுவது சற்று சுகமாகவே இருந்தது. கிரிஷின் கண்களில் ஒரு தனி வகையான

கவர்ச்சி இருப்பதாக அவளுக்குப் பட்டது. ஒரு ஆணின் கண்களுக்கே இப்படி யென்றால் அவன் கைகள்... உதடுகள்... ப்ரியாவின் உடல் லேசாகக் குளிர்ந்தது.

''எஸ். அவங்களைப் பத்தித்தான். ப்ரியாவும் கிரிஷும் இன்னும் கொஞ்ச நாள்லே தம்பதியாகப் போறுங்க!'' பார்வதி தலையைச் சாய்த்துச் சிரித்தாள்.

''ஹியர்! ஹியர்!'' ஆனந்த் கையைப் பலமாகத் தட்டினார். எல்லோருடைய முகங்களிலும் சந்தோஷத்தின் எதிரொலி. அறையில் சிரிப்பின் ஒலி. ப்ரியா மட்டும்தான் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பார்வதி மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

''மிஸ்டர் சாரி நான்' ஒரு மேஜரோட ஒய்ஃபா—இருக்கலாம். ஆனு சில விஷயங்கள்லே நான் கொஞ்சம் ஓல்டு ஃபாஷன்... அட்வகேட் சார் நீங்க ஒண்ணு பண்ணணும். ஒங்க வீட்டுக்கெல்லாம் வருவாங்களே ப்ராமின் ப்ரீஸ்ட் அவரைக் கொஞ்சம் அனுப்புங்களேன். நல்ல நேரம், நாள் அதெல்லாம் பார்க்கணும். எனக்கு என்னவோ அதுலெல்லாம் இன்னும் நம்பிக்கை இருக்கு.''

''அது நல்லதுதானேம்மா. ஆர்மிலேயிருந்தாலும் நீங்கள்ளாம் அந்தக் காலத்து மனுஷா...காலம் மாறிப்போச்சுன்னு சொன்னுலும், உள்ளே எட்டிப் பார்த்தா ஒண்ணும் மாறலே. கோவிலே மூடுன்னு கொடி பிடிக்கிறவா ஆத்ல கூடப் பெருமாளுக்கு நைவேத்தியம் நடக்கிறது. எனக்கே அந்த மாதிரி க்ளையண்ட்ஸெல்லாம் இருக்கா. எங்க ஃபேமிலி ஜோஸ்யர் பத்மநாப அய்யங்காரை அனுப்பறேன். அந்த நாள்லே வெள்ளைக்காரனுக்கே ஜாதகம் பார்த்தவர் அவர் இப்ப ஒங்களுக்கும் மாட்டுப் பொண்ணுான்னு வரப்போ அவரோட டச் வெச்சுக்கிறது நல்லது.''

''தேங்க்யூ மிஸ்டர் சாரி! அவரை அனுப்புங்கோ.''

சற்று நேரம் கழித்து சாரி சென்றுவிட்டார். ப்ரியா அவரைக் காரில் ஏற்றிவிட்டுத் திரும்பி வந்தாள்.

''ப்ரியா இங்கே வாம்மா. என் பக்கத்திலே உட்கார்.''

பார்வதி படுக்கையைத் தட்டினுள்.

ப்ரியா உட்கார்ந்தவுடனே அருகிலிருந்த கிரிஷின் வெப்பம் அவளைச் சூழ்ந்தது.

''எஸ் மம்மி.''

''ப்ரியா.... டாக்டர் எல்லாருமே கேளுங்க. இந்த நல்ல நாள்லே இன்னும் ஒரு முக்கியமான வேலை பாக்கி யிருக்கு.''

''அது என்னமம்மி?'' கிரிஷ் ப்ரியாவை முறைத்துப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

பார்வதி தன் படுக்கை அடியிலிருந்துஒரு நீளமான கவரை எடுத்தாள். அவளுடைய உயில்!

''அது என்னதும்மா அது?'' கிரிஷின் முகம் லேசாகச் சுழித்தது.

"பொறுமையா இருடா... எதுக்கெடுத்தாலும் கேள்வி கேக்கறது ஒரு ஃபாஷனாப் போயிடுச்சு. இது என்னுடைய உயில்."

"என்னது? உங்க உயிலா? என்னம்மா இது? இதெல்லாம் எனக்கு ஒண்ணுமே புரியலே."

ஆனந்த் தம் கையை உயர்த்தினார்.

"கிரிஷ் லெட் ஹர் எக்ஸ்பிளெயின்... ஒங்கம்மா அவங்க உயிலெ ஏற்கனவே நம்ம வக்கீலே வச்சு எழுதியாச்சு. அதுக்குச் சரியான காரணங்கள் இல்லாமெ செஞ்சிருக்க மாட்டாங்க. ஒங்க மதர் ரொம்ப இண்டலிஜெண்ட் லேடி...."

"கிரிஷ், டாக்டர் சொல்றது கரெக்ட். நான் சொல்றதைக் கவனமா கேளுடா... எனக்கோ வயசாச்சு. ஹெல்த்தும் சரியா இல்லே. அதனாலெதான் இந்த உயிலே எழுதி முடிச்சேன்... இந்தா ப்ரியா இதப் பத்திரமா வெச்சுக்கோம்மா. ஒங்கிட்ட ஒப்படைக்கிறேன். இனிமே எல்லாப் பொறுப்பும் ஒன்னுது."

"மம்மி எங்கிட்ட எதுக்குக் கொடுக்கிறீங்க?"

ப்ரியா ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"ஏன் என்னுன்னு கேட்கக் கூடாதுன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன் ப்ரியா உனக்கு. வாயை மூடிண்டு நான் சொல்றதைப் பண்ணு. இந்தா"

ப்ரியா அந்தக் கவரைக் கையில் வாங்கிக் கொண்டாள். ஒரு நீண்ட நொடி அதை முறைத்துப் பார்த்தாள். பிறகு கட்டிலை விட்டு இறங்கி மூலையிலிருந்த மேசையைப் பார்த்து நடந்தாள். அதன் மேல் கிரிஷின் சிவப்பு நிறப் பெட்டி. ப்ரியா என்ன செய்யப் போகிறாள் என்று எல்லோரும் ஆவலோடு பார்த்தார்கள்.

"ப்ரியா என்ன பண்றே நீ?" இது பார்வதியின் கேள்வி.

ப்ரியா பதிலேதும் சொல்லாமல் அந்தப் பெட்டியைத் திறந்து அதன் இடது பக்கத்தில் உள்ள பையில் உயிலை வைத்து மூடினாள்.

"ப்ரியா அதை ஏன் நீ கிரிஷ் பாக்ஸ்லே வெச்சே! நான் ஒங்கிட்டக் கொடுத்தேன். நீ என்னடான்னா... எனக்கு ஒண்ணு புரியலே போ." பார்வதி புருவங்களை உயர்த்தி முறைத்துப் பார்த்தாள்.

"மம்மி அது உங்க பிள்ளைக்குச் சொந்தம் அவர் பெட்டிலே இருக்கிறதுதான் கரெக்ட்"

ஆனந்த் குறுக்கிட்டுப் பேசினார். "மேட ப்ரியா சொல்றதிலே பாய்ண்ட் இருக்கு பிகாஸ் அவளே கிரிஷுக்குச் சொந்தமாகப் போறவதானே ஒரு ஸிம்பாலிக் டச் மாதிரி அவ செஞ்சது!"

"அட அப்படியா அது! நான் ஒரு பைத்தியம் இதெல்லாம் எனக்கு எப்படிப் புரியும். என்ன இருந்தாலும் நம்ப ப்ரியா ரொம்பக் கெட்டிக்காரிதான்."

பார்வதியுடன் மற்றவர்களும் சிரித்தனர், ப்ரியா உட்பட.

மணி எட்டு அடித்தது. ஓய்வு எடுத்துக் கொள்ள கிரிஷ் ஹாலுக்கு அந்தப்புறத்திலுள்ள தன் அறைக்குச் சென்று விட்டான். ப்ரியா அவனுக்கு அந்த இடத்தைக் காட்டினாள். அதற்குள் டாக்டர் ஆனந்த் தம் காருக்குச் சென்று கையில் தம் 'மெடிகல் பேக்' உடன் திரும்பி வந்தார்.

"டாக்டர் இதென்னது இந்த நேரத்துலே" பார்வதியின் குரலில் சற்றுக் கோபமும் கலந்திருந்தது.

"ஒன்றுமில்லை மேடம். ஒங்களுக்கு ஒரு குட் நியூஸ்."

"அது என்ன டாக்டர்?"

"இன்னிலேருந்து உங்களுக்கு மருந்து கிடையாது!"

அதைக் கேட்டுக் கொண்டே வந்த ப்ரியாவின் முகத்தில் ஆச்சரியம். பார்வதி சந்தோஷத்தால் சிரித்தாள்.

"ஆமாம்மா ஒங்க புள்ளை வந்துட்டான் இல்லியா? இனிமே எதுக்கு மருந்தெல்லாம்... ப்ரியா இன்னிலேந்து ஸ்டாப் எவ்ரிதிங்... இந்த டாப்லெட்ஸ், இன்ஜெக்ஷன் ஒண்ணும் வேண்டாம்."

"தேங்க்யூ டாக்டர், தேங்க்யூ" பார்வதி நீண்ட பெருமூச்சை விட்டாள்.

"ப்ரியா நீ ஒண்ணு பண்ணு. இன்னிக்கி மட்டும்..." ஆனந்த் தம் பையிலிருந்த ஒரு பிரிஸ்கிரிப்ஷன் பேடை எடுத்து வேகமாக எழுதினார். அதை ப்ரியாவிடம் கொடுத்தார்.

"ப்ரியா டேக் திஸ். இந்த மாத்திரை நாளைலேருந்து டெய்லி ரெண்டு கொடு. மத்தியானம், ராத்திரி, சாப்பாட்டுக்குப் பின்னாடி... இது வெறும் ஜெனரல் டானிக் மாதிரி."

ப்ரியா டாக்டர் கொடுத்த காகிதத்தை வழக்கமாக மருந்துகளை வைக்கும் சிறிய டிராயரில் வைத்தாள். அவள் திரும்பிப் பார்த்தபோது டாக்டர் தம் பையிலிருந்து ஒரு பச்சைநிற பாட்டிலை வெளியே எடுத்துக் கொண்டிருந்தார்.

"டாக்டர் இதென்னது புதுசா?" பார்வதியின் குரலில் இப்போது வெறுப்புக் கலந்திருந்தது.

"மேடம் நான் ப்ரியா கிட்டச்சொல்றேன். நீங்க ஒண்ணும் அப்ஸெட் ஆகாதீங்க... ஓக் ப்ரியா இன்னிக்கி கிரிஷ் திரும்பி

ரோஜா - மீரா - ஜோரா

அட்டைப் படத்தில் உள்ள மீரா பர்மியப் பாவை போல் தோற்றமளிக்கிறாள். இல்லையா? ரோஜாப் பூக்களை அள்ளி இறைத்தாற் போன்ற 'ஸ்கர்ட்'டும் எம்ராய்டரியுடன் கூடிய 'டாப்'பும் அணிந்து முன்னாள் ஃபாஷனை நந்தினி கொண்டையை உச்சந்தலைக்கு இடம் மாற்றிய பெருமிதத்துடன் உட்கார்ந்திருக்கும் மீராவை வண்ணப் படம் பிடித்தவர்: ஜக்மோகன்.



ராண்டார்கை செய்த வேண்டாத காரியம்!

"வருவான் ராஜகுமாரன்" என்ற இந்த நாவல் ராண்டார்கை அவர்களே எழுதி சென்னை டீ.வி. நிலையம் ஏற்கனவே ஒளி பரப்பிய ஒரு நாடகத்தைப் போலவே இருக்கிறதே?" என்று கேட்டு எங்களுக்குச் சிலகடிதங்கள் வந்துள்ளன.

ஏற்கனவே டீ.வியில் ஒளிபரப்பான ஒரு நாடகத்தின் அடிப்படையில்தான் இந்த நாவலைத் தாம் எழுதப் போவதாக ராண்டார்கை எங்களுக்குத் தெரிவிக்காதது அதிர்ச்சி தருகிறது.

இது பற்றி வினவியபோது, அதில் தவறேதும் இல்லை என்பது போன்ற தொனியில் ராண்டார்கை எங்களுக்குக் கடிதம் எழுதியிருப்பது இரட்டிப்பு அதிர்ச்சி! அவரது மர்ம நாவல்கள் கூட இத்தனை அதிர்ச்சி அளிக்காது.

எனினும் இச்சிறு நாவல் ஏற்கனவே நான்கு வாரங்கள் பிரசுரமாகி விட்டதாலும் கல்கியின் வெளியூர் வாசகர்கள் டீவி நாடகத்தைப் பார்க்க வாய்ப்பிருந்திருக்காது என்பதாலும் அவர்களுக்கு ஏமாற்றம் உண்டாகாதிருக்க நாவல் தொடர்கிறது. —ஆசிரியர்

...ந்ததாலே ஒங்க மம்மிக்கு ஏகப்பட்ட எக்ஸைட்மெண்ட்... ஏற்கனவே அவங்களுக்கு ஹார்ட் வீக். ஸ்ட்ரெயினைக் குறைக்கறதுக்குத்தான் இதைச் சாப்பிடணும்... இதில் ரெண்டு டேப்லெட் இருக்கு. தூங்கறதுக்கு முன்னாடி ரெண்டையுமே கொடு, ஒரு கிளாஸ் சூடான பாலோடு. எவ்ரிதிங் வில் பி ஃபைன்!"

"அப்பாடா. இந்த ரெண்டு மாத்திரையோட விட்டீங்களே. தேங்க்யூ? டாக்டர்." பார்வதி சிரித்தாள்.

பச்சை நிறப் பாட்டில் கைமாறியது.

"ப்ரியா கடைசியா கிரிஷ் எங்கே, என் ...க்கி பால் சாப்பிட்டானோ தெரியாது... அவனுக்குக் கொடுக்கற பால்லெ நெறைய சர்க்கரை போடு. திக்காக் காச்சு...நம்ம வீட்டிலெ குங்குமப்பூ இருக்கணும் இல்லேன்னு வாங்கிடு. பாதாம் பருப்பு, மிந்திரிப் பருப்பு, பிஸ்தா பருப்பு இதையெல்லாமும் வாங்கிடு. அதையெல்லாம் அரைச்சுப் பால்லே மிக்ஸ் பண்ணிக் கொடு. ரொம்ப ஹெல்த்தி. ப்ரியா நீயும் ஒரு டம்ளர் அடி. அந்த நாள்லே நான் மேஜருக்குத் தெனம் கொடுப்பேன்... அப்படியெல்லாம் சாப்பிட்டதினலேதான் இத்தனை வயாதி வந்தும் பொழச்சி இருக்கேன். ரெண்டு பேரும் ஒரு கிளாஸிலே சாப்பிடணும்னு அவர் அடம் பிடிப்பாரு. அந்த நாள்லே அதுவே பெரிய விஷயம்..."

ப்ரியாவுக்குச் சிரிப்பு வந்தது.

படுப்பதற்கு முன் வெள்ளி டம்ளரில் பாலுடன் கிரிஷின் அறைக்குப் போனாள்.

தட்டியவுடனே கதவைத் திறந்தான் அவன். முழங்காலுக்கு மேல் பிடித்தமான ஒரு அரை நிஜார். அதற்கு மேல் ஒன்றுமில்லை. கட்டுமஸ்தான அவன் உடலில் எங்கு பார்த்தாலும் அடர்த்தியான முடி. லேசாக மயக்கத்தை ஏற்றும் ஆண் வாடை. அவளுக்குத் தலை சுற்றியது.

"ஹலோ...ஹலோ ப்ரியா நீயா! உள்ளே வாயேன்." கதவை நன்றாகத் திறந்துவிட்டான் கிரிஷ்.

ப்ரியா சங்கோஜத்துடன் உள்ளே சென்றாள். தனியாக இருக்கும் ஒரு ஆணின் அறையில் காலடி எடுத்து வைப்பது அவளுக்குப் புதிய அனுபவம். பால் டம்பளரைக் கொடுக்கும்போது தன் விரல்களை கிரிஷ் சற்று அதிகமாகவே அழுத்தியதாகப் பட்டது அவளுக்கு. அவன் கைகள்... குட்டையான தடியான விரல்கள்...

"ப்ரியா உட்காரேன். இதோ டம்ப்ளரைக் கொடுக்கிறேன்."

"பரவாயில்லே. கார்த்தாலே எடுத்துக்கறேன். இங்கேயே இருக்கட்டும்."

அந்த நொடிகளை நினைத்துப் பார்க்கும் போதே அவள் உடல் புல்லரித்தது.

ப்ரியா படுக்கையில் புரண்டாள். கிரிஷின் கண்கள், முடியால் மூடப்பட்ட உடல், பாலை உறிஞ்சிடும் அவன் உதடுகள். அவளை என்னவோ செய்தன. மூச்சு சூடேறி. லேசாக வியர்க்கத் தொடங்கியது. தூங்க வேண்டும் என்ற ஆசையே ஓடிப்போய் விட்டது.

...காலை ஏழு மணி. ப்ரியா எழுந்து குளித்துப் பார்வதியின் அறைக்குச் சூடான டீயுடன் சென்றாள். காலையில் எழுந்தவுடன் 'பெட் டீ' சாப்பிடுவது வழக்கம். ப்ரியா படுக்கை அறையில் நின்றுகொண்டு பார்வதியைப் பார்த்தாள். சாதாரணமாகப் பார்வதி ஆறரை மணியளவில் எழுந்திருப்பாள். ஆனால் அன்று இன்னும் எழுந்திருக்கவில்லை. "மம்மி....மம்மி...."

ப்ரியா பார்வதியின் முதுகை லேசாகத் தட்டினாள். சில நொடிகள் பொறுத்துப் பார்த்தாள்.

"மம்மி ஒங்க டீ... பையன் வந்தாச்சுன்னு இன்னிக்கு ஜாஸ்தி தூக்கமோ!"

புன்சிரிப்புடன் பார்வதியின் நெற்றியைத் தொட்டாள். அது சில்லென்றிருந்தது.. சிரிப்பு சுருங்கியது. கைகளை, முகம்... கழுத்து மார்பு எல்லா இடங்களிலுமே ஓட விட்டாள். உடலெங்கும் சில்லிட்டிருந்தது. அவளையும் அறியாமல் கை பார்வதியின் மூக்கை நோக்கித் தாவியது. மூச்சைக் காணோம்!

உடல் நடுங்க, கண்கள் விரிய அவள் பயங்கரமாகக் கத்தினாள்.

"கிரிஷ்! கிரிஷ்!... சீக்கிரமா வாங்களேன்.... மம்மி... மம்மிக்கி.... எனக்கு ரொம்பப் பயமா இருக்கு... கிரிஷ்! மம்மி போயிட்டாங்க போலேருக்கு கிரிஷ்!" ப்ரியா பயங்கரமாக வெகு நேரம் அலறிக் கொண்டிருந்தாள், (தொடரும்)

"ஜனதாசேம் பளிச்சென்று இருக்க
பல கலர்களில் சேர்த்து அடிக்கலாம்
அதற்காக இப்படியா?"
ஜனதாசேம்
செமண்ட் பெயிண்ட்
குறைந்த அளவு நிறைந்த பரப்பிற்கு
பிரத்யேக விற்பனைப் பிரதிநிதிகள் :
சென்னை நகரம் : M/s ஜோதி பெயிண்ட்ஸ்,
புரசைவாக்கம் போன் : 664131
EP-J-102-81

...ரேர்கள்!

...த் துணி எத்தனை வேகமாக வண் ...யாக உருமாறுகிறது!
...மாதிரி டிசைனில் இரு புடவை ...மல் காண்பது அபூர்வம்!
...வெற்றிகரமாக உருவாக்கியிருப்ப ...தி சபிதா ராதாகிருஷ்ண. கணவர் ... துறையில் உதவுகிறார்.
...பாய் முதல் 300 ரூபாய் விலையுள்ள ...தயாரிப்புக்கள், இந்தியாவில் பல ...ிலும் விற்பனையாகின்றனவாம். ... மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா ... ஏற்றுமதியாகின்றன.
...வனச் சோலை'யிலும் 'அலைகள் ...லை'யிலும் சபிதா டிசைன் செய்த ...ளும், பாவாடை — தாவணிகளும் ...பற்றிருக்கின்றன!
...நகருக்கு வெளியே சுற்று வட்டாரத் ...திய சிறு நகரங்கள் அமைவதால் ... நெருக்கடி குறைவதோடு, சுத்த ...காற்று, சுகாதார வசதி, குடிநீர் ...ஆகியவற்றை வளர்ந்து வரும் மக்கள் ...க்கு அளிக்க முடியும் என்ற அடிப் ...ல்தான் புதிய நகரங்களை உருவாக்கும் ...ள் நடைபெற்று வருகின்றன.
...மலை நகர்.
...ிழக அரசு இந்தத் திட்டத்தைத் ...பது 1973ல்'' என்கிறார் சென்னை ...அமைப்புத் திட்ட நிர்வாக அதிகாரி, ... நாகராஜன்.
...00 ஏக்கர் பரப்பளவுள்ள மறைமலை ...முதற் கட்டமாகத் தொழிற்கூடங்கள் ...து வருகின்றன. இண்டஸ்ட்ரியல் ...ட், தனியார் தொழிற்சாலைகள் முத...
...றைந்த வருமானக்காரர், மத்திய ...குடும்பத்தினர்களுக்கான வீடுகளும் ...பட்டு வருகின்றன. 500 குடும்பங் ... மேல் ஏற்கனவே குடியேறிவிட்டன. ...ர் வீடு கட்டிக் கொள்வதற்கும் வீட்டு ...ள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பூங்கா ...ாட்டுத் திடல், பள்ளி, தபாலாபீஸ், ...ஸ் ஸ்டேஷன் ஆகியவையும் அமைந்து ...றன!''
...ரை லட்ச ரூபாய் செலவில் பாலாற்றி... ஒரு நாளைக்கு 3.5 மிலியன் காலன் ...ீர் வருமளவுக்கு ஏற்பாடுகள் நடை... நீர்வழங்கு திட்டம் நிறைவேறும் ...ாயில் இருக்கிறது. மின்சார வசதி ...்போதைக்கு மட்டுமல்ல, எதிர்காலத் ...வக்கும் செய்யப்படுகின்றன. **-சாருகேசி**

தமாஷ்!

''அவர் புனைபெயரில் எழுதுவதை விட்டுவிட்டு எப்போது சொந்தப்பெயரில் கதை எழுதுவார்?''
''சொந்தமாகக் கதை எழுதும்போது!''

-வ. தேனப்பன்

□ □ □

வீட்டுக்காரி : எங்க வீட்லே 'டி.வி.' இல்லையே, வேலை செய்யச் சம்மதமா?
வேலைக்காரி : அதனால் என்ன? எனக்கு ஒரு 'டி. வி.' செட் வாங்கிக் கொடுத்திடு. நான் எங்க வீட்லே இருந்தபடியே பார்த்துக்கறேன்.

-எஸ். வனஜா

□ □ □

மின்வண்டி. நெரிசலற்ற மதிய வேளை, என் எதிரே ஒரு காதல் ஜோடி. காதலன் காதலியின் கையைச் சீண்ட, அவள் தன் தலைக்கு மேலே ஏதோ ஒன்றைச் சுட்டிக் காட்ட - காதலனும் பார்க்க, இருவரும் விழுந்து விழுந்து சிரிக்க- ஓரக்கண்ணால் நானும் அவள் சுட்டிய பகுதியைப் பார்த்தபோது, அங்கே 'கை பிடிக்கக் கூடாது' என்ற அறிவிப்பு காணப்பட்டது.! 'புகை பிடிக்கக் கூடாது' என்ற அறிவிப்பில் 'பு' என்ற எழுத்தை மட்டும் யாரோ சுரண்டி எடுத்திருந்தனர்.

-யெம்ஜி

□ □ □

டைரக்டர்: ''என் புராணப் படத்தில் அர்ச்சுனன் வேஷம் கேட்கிறியே... என்ன தகுதி இருக்கு உனக்கு?''
அவன்: ''காலேஜ் நாட்களில் பிரமாதமா அம்பு விட்டிருக்கேன் ஸார்... முன் சீட் மாணவிகளின் மீது!''

□ □ □

டாக்ஸி டிரைவர்: ''நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி ஸார்!''
அவன்: ''ஏம்பா...?''
டாக்ஸி டிரைவர்: ''வழக்கமா ராயப்பேட்டையிலிருந்து மவுண்ட்ரோடு வந்தா என் டாக்ஸி மீட்டர் 48.40 காட்டும்... இன்று 47.10 தான் காட்டுது!''

-உ. ராஜாஜி

□ □ □

''அதோ போகிறாரே அவர் துச்சாதனன் பரம்பரையிலே வந்தவரு...''
''அப்படியா? எப்படித் தெரியும்?''
''அவர் காபரே டான்ஸ் கிளப் நடத்தறாரு!''

5

எல்லாம் முடிந்து விட்டது. பார்வதி மறைந்து விட்டாள்.
லால் அதை நம்ப முடியவில்லை. பார்வதி அவ்வளவு சீக்கிரமாக
லோரையும் விட்டு விட்டுச் சென்றுவிடுவாள் என்று அவள் எதிர்
கவேயில்லை. மகனின் வருகைக்காக அத்தனை வருடங்கள் காத்தி
அவன் திரும்பி வந்த உடனேயே இந்த உலகத்தை விட்டுச் சென்
விடுவதா? விதி இப்படி ஒரு விபரீதமான விளையாட்டை அவிழ்த்து
விடும் என்று அவளால் யூகிக்க முடியவில்லை. பாவம் பார்வதி!
மகன் திரும்பிய சந்தோஷத்தைச் சுவைக்க முடியாமல் போய்
விட்டாளே! அது ஏன்? காரணத்தை டாக்டர் சொன்னார்.
அவர், அவள், கிரிஷ் பார்வதியின் படுக்கை அறையில் உட்
கார்ந்திருந்தார்கள். பார்வதியின் படுக்கை கட்டிலில் ஓர்
ஓரமாகச் சுற்றி வைக்கப்பட்டிருந்தது. கட்டிலின் நடுவில் ஒரு
வெள்ளித் தட்டு. அதன் மேல் சாந்தமாக எரிந்து கொண்
டிருக்கும் ஒரு மெழுகுவர்த்தி. அதைச் சுற்றிப் பலவிதமான
பூக்கள். நடுவில் ஒரு வெள்ளிக் கோப்பையில் பால்.

"யூ ஸி இந்த மாதிரி அசம்பாவிதமா நடக்கக் கூடாதுன்னு
நான் ரொம்பப் பெய்ன்ஸ் எடுத்துண்டேன். ஆனா பிரயோ
ஜனமில்லாமலே போச்சு.... ஒங்க அம்மாவோட ஹார்ட்
ரொம்ப வீக். ஜெனரல் கண்டிஷனும் சரியா யில்லை. கிரிஷ்
உனக்குத் தெரியுமோ இல்லியோ... ஒங்க அம்மா
ரொம்ப சிக்கா இருந்தாங்க... அவங்க
உயிரோட இருந்ததே உனக்காகத்தான்."

கிரிஷ் வாயிலிருந்த டீக்கோப்
பையை வெளியே எடுத்தான்.

"ஆனா டாக்டர் நீங்கதான்
அவ்வளவு நல்லாக் கவ
னிச்சுக் கிட்டிருந்தீங்களே
அம்மாவெ... நானும்

ம்பி வந்துட்டேன்... அப்படி இருக்கச்சே மி.. புரியவே இல்லே டாக்டர். நான் டுத்துவெச்சது அவ்வளவுதான். நீங்க ன பண்ண முடியும்?''

ரியாவின் கண்கள் கிரிஷின் பார்வையி ந்து தப்ப முடியாமல் தவித்தன.

'கிரிஷ்! உன் ஃபீலிங்ஸ் எனக்குப் புரியுது. நான் ஒரு டாக்டர். அதுலேயும் ஒங்க தரை ட்ரீட் பண்ணின டாக்டர்... ஒங்க அம்மாவுக்கு இந் ஊருக்கு வரதுக்கு முன் னடியே நெர்வ்ஸ் ஸிஸ்டம்லாம் டேமேஜ் ஆகியிருந்தது. நான் ஒரு நியூரோ ஸ்பெஷ லிஸ்ட் இல்லே.... இருந்தாலும் ஒங்க அம்மாவுக்கு நெர்வ்ஸ் வீக்னெஸ் அதிகமா இருந்ததுன்னு தெரியும்...''

''டாக்டர் எங்க அம்மாவுக்குப் பைத்தி யம்னு சொல்றீங்களா?''

''ஓ நோ... கிரிஷ் ப்ளீஸ் டோண்ட் மிஸ் அண்டர்ஸ்டாண்ட் மி.ஒங்க மதர் எனக்கு வெறும் பேஷண்ட் மட்டுமில்லே. ஷி வாஸ் ம்திங் மோர். எம்மேலே அவுங்களுக்கு வ்வளவு நம்பிக்கை...டாக்டரா...மனிதனு ன்னைத் தேடிப் பிடிக்கிற பொறுப்பையே ங்கிட்டத்தானே ஒப்படைச்சாங்க. அப் பேர்ப்பட்டவங்களைப்போய் நான் பைத்தி யம்னு சொல்லுவேனு? நீ காணுமப் போயிட்டே. ப்ளேன் ஆக்ஸி டெண்ட்லே அப்படீங்கற ஷாக் அவர் நெர்வ்ஸ் ஸிஸ்டத்தை வீக் ஆக்கிடுச்சி... எனிவே நீ திரும்பி வந்த சந்தோஷத்துலே அவங்க ஹார்ட் கண்டிஷன் அப்ஸெட் ஆகக் கூடாதுன்னு நான் ட்ரை பண்ணேன்... ஒங்களுக்குத் தெரி யுமோ தெரியாதோ சந்தோஷ நியூஸ் கூட ஒருத்தருக்கு ஷாக் கொடுக்கலாம். பேட் நியூஸ் மாதிரியே....''

''அப்படியா... எனக்குத் தெரியாதே!'' கிரிஷ் டீயை உறிஞ்சிக் கொண்டே பேசினுன். அவன் செய்யும் சத்தங்கள் ப்ரியாவை என்னவோ செய்தன.

''ஆமா! கிரிஷ் சிரிப்புக்கூட ஒருத்தனைச் சாக அடிக்கலாம்.... கேக்கறதுக்கு ஜோக் மாதிரி இருக்குஇல்லே...ஆனு மெடிகலி ட்ரூ! உங்க மதர் விஷயத்துலே நான் ரொம்ப கேர் எடுத்துண்டேன். அதுக்குத்தான் அந்த ரெண்டு டாப்லெட்ஸைக் கொடுத்தேன்... அதெல்லாம் நம்ம ஊர்ல கெடைக்காதது.ம்., கிரிஷ் ஐ டிட் மை பெஸ்ட்... ஒனக்காக. ஒங்க அம்மாவுக்காக, இந்த ப்ரியாவுக்காக.''

''டாக்டர் ஒங்களை யாரும் தப்புச் சொல் லலேயே. நீங்க இவ்வளவு சிரமப்பட்டு எக்ஸ் ப்ளேன் பண்ணத் தேவையில்லேயே டாக்டர்'' கிரிஷ் லேசாகச் சிரித்தான்.

''க்ரிஷ் எக்ஸ்பிளேன் பண்ண வேண்டிய கடமை என்னது. அதுக்காகத்தான்... ஒரு நல்ல லேடி சரியான சமயத்துலே போயிட் டாங்களேன்னு... தெட்ஸ் ஃலைப் ஐ சப் போஸ்!'' ஆனந்த் நாற்காலியில் சாய்ந்து கொண்டு டீயைக் குடிக்க ஆரம்பித்தார்.

அரை மணி நேரம் கழித்துக் கிரிஷும், ஆனந்தும் வெளியே சென்று விட்டார்கள். அந்தப் பெரிய பங்களாவில் முதல் முறை யாகத் தனியாக இருப்பது அவளுக்குப் புதிய அனுபவம். சற்றுக் கசப்பாகவே இருந் தது. இப்போது இனி கிரிஷ் ஒருவன்தான் அவளுடன் அவ்வளவு பெரிய பங்களாவில்... அதிகப் பழக்கமில்லாத ஓர் ஆணேடு, அது வும், கிரிஷைப் போல இளமை, ஆண்மை ததும்பும் ஒருவனேடு...அவன் பார்வையே அவளை...அப்படி இருக்கும்போது அவனேடு

தனியாக... அதைப் பற்றி டாக்டர் ஆனந்துடன் பேசி முடிவெடுப்பது எனத் தீர்மானித்துக் கொண்டாள்.

''ப்ரியா... நீயா இப்படிப் பேசறே? ஐ ஆம் ஸர்ப்ரைஸ்டு'' டாக்டர் அவளை வெறுப்போடு பார்த்தார். அவரும் கிரிஷும் சில நிமிடங்களுக்கு முன்புதான் வீடு திரும்பினார்கள். கிரிஷ் குளிப்பதற்காக உள்ளே சென்றிருந்தான். அந்த நேரம் பார்த்து ப்ரியா டாக்டரிடம் பேச்சை எடுத்தாள். சூடாகக் காப்பி கொடுத்தாள்.

''டாக்டர் என் பொஸிஷனைப் பாருங்க.. கல்யாணமாகாதவ இவ்வளவு பெரிய வீட்டுல தனியா கிரிஷோட எப்படி இருக்கிறது?''

''ப்ரியா...ப்ரியா... யூ ஆர் டாக்கிங் ரப்பிஷ். இப்படிப் பேசறேனேன்னு தப்பா எடுத்துக்காதே. நீ ஒரு சாதாரணமான கலியாணமாகாத பொண்ணுல்லே. இந்த வீட்டு மருமகள்.''

''இன்னும் ஆகலையே டாக்டர்!''

''மே பி. பட் சடங்கு நடக்கலையே தவிர, மற்ற எல்லா விதத்திலேயும் நீ டாடரின்லா தான். ப்ரியா நீ படிச்ச பொண்ணு. ஒனக்கு போய் நான் இவ்வளவு சொல்லணுமா?''

''டாக்டர்! கிரிஷுக்கும் எனக்கும் கலியாணம் ஆறவரைக்கும் நான் இங்கிருக்கிறது அவ்வளவு சரியா எனக்குப் படலே. ஊர்க்காரங்க பேசுவாங்க....''

''ஊர்க்காரங்க... யார் அவங்க? அவங்களுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? அவங்க என்ன பேசினா நமக்கென்ன? ஊர்க்காரங்களா ஒன்னையும் என்னையும் சாப்பாடுபோட்டு வளர்த்தாங்க? என்ன ப்ரியா நீ... தமிழ் சினிமா ஹீரோயின் மாதிரி பேசறயே? ஒரு மாடர்ன் கேர்ள் மாதிரி ஃபார்வேர்டா இருப்பேன்னு பார்த்தேன்....''

''அதெல்லாம் சரி டாக்டர். பட்...''

''ப்ரியா, 'பட்'டுமில்லே 'கிட்'டுமில்லே.''

டாக்டர் காப்பிக் கோப்பையைக் கோபமாகக் கீழே வைத்தார். ''லுக் ப்ரியா நீ இந்த ஊர்லே ஒரு தேர்ட் ரேட் ஸ்கூல்லே நூறு ரூபாய் சம்பளத்துக்கு ராட் பண்ணிண்டிருந்தே. ஒன்னை அங்கிருந்து நான் இங்கே கொண்டு வந்தேன். ஒய்? எனக்கு ஏதாவது லாபம் வரும்னு? நோ. நல்ல பொண் கெட்டிக்காரப் பொண்ணு — அப்படிப்ப வளுக்கு லைஃப்லே ஒரு நல்ல ப்ரேக் கிடை கட்டுமே — அப்படீங்கற நல்ல எண்ண தோடதான் அதைச் செஞ்சேன். மாதிரிப் பெண்கள் எனக்குப் பல பேல தெரியும். அப்படி இருந்தும் ஒன்னைச் பண்ணேன். எனக்கு அதனாலே லாபம் கிடையாது. இன்னிக்கு நீ பார்' அம்மாவோட சொத்துக்கு வாரிசு. புள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கிறது முன்னாடியே தன் ஆஸ்தியை ஒன் பேரு எழுதி வெச்சாங்க அந்த அம்மா. கி வந்தவுடனே அவுங்க போயிட்டாங்க..

''அது சரி டாக்டர்....''

''ப்ரியா ப்ளீஸ் டோன்ட் இன்டரப்ட் கிரிஷ் பல வருஷம் கழிச்சுத் திரும்பி வ திருக்கான். வந்தவுடனே அவுங்க அம்ப போயிட்டாங்க. அவன் எங்கெல்லாம் எப்ப எல்லாம் கஷ்டப்பட்டிருக்கானோ நம் ளுக்குத் தெரியாது. அப்படிப்பட்டவனுக் அம்மாவோட சாவு எவ்வளவு பெரிய ஷாக்கா இருக்கும்னு நீயே திங்க் பண்ணிப் பாரு அந்த நிலைல நீ அவனை இங்க தனியா உ டுட்டுப் போறேன்னு சொல்றே. இ இட் ஃபேர் டு தெட் புவர் பாய்?''

''டாக்டர், நான் உட்டுட்டுப்போறேன்னு சொல்லலியே... நான் ராத்திரி தங்கறது சரியாப் படலேன்னு சொன்னேன்.''

''ப்ரியா ராத்திரிலே அவன் இங்கே தனியா இருந்தான்னா தற்கொலை பண்ணிக் கிட்டாலும் பண்ணிப்பான். இப்ப கிரி ஷோட மனநிலை அப்படி. இப்ப நான் ஒரு டாக்டர் என்ற மொறைலே பேசறேன்... பத்துப் பேரு என்ன சொல்லுவாங்க... ஊர்க் காரங்க என்ன சொல்லுவாங்க... அதுதான் பெரிசு... ஒனக்குக் கொஞ்ச நாள்லே கணவனா வரப்போறவன் தற்கொலை பண் ணிக்கிட்டுப் போனாப் போறான் — அப்ப டீன்னு நெனைச்சா நீ இப்பவே வீட்டை விட்டுப் போலாம்....''

ப்ரியாவுக்குத் தான் தோற்றுவிட்டோம் என்று புரிந்து விட்டது. டாக்டர் தன்னைக் கட்டிப் போட்டுவிட்டார் என்பது விளங்கி விட்டது. கண்களை மூடிக் கொண்டு நாற் காலியில் சாய்ந்து விட்டாள்.

ப்ரியா தூக்கம் வராமல் தவித்தாள். சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தின் டிக்டிக் சப்தம் இடிபோல் அவள் காதில் விழுந்தது. அது போதாதென்று அரை மணிக்கு ஒரு முறை மணி ஓசை வேறு. புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தாள். தூக் கம் அவளை ஏற்க மறுத்தது. கொட்டாவி விட்டபடியே எழுந்து உட்கார்ந்தாள். கலைந் திருந்த கூந்தலைச் சரி செய்து கொண்டாள். அப்போது படுக்கை அறைக்கு வெளியே காலடி ஓசை கேட்டது. இருட்டில் கதவுப் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அந்த ராத்திரி வேளையில் தன் படுக்கை அறைக்கு வெளியே நடப்பது யார்? கிரிஷ்!... அந்த வீட்டில்தான் வேறு யாருமே இல்லையே. அப்படியென்றால் கிரிஷ்தான் தன் படுக்கை அறைக்கு வெளியே....

''தினம் இரவு 8 மணிக்குச் சாப்பிடுவேன்... அப்புறம் தூங்கப்போறவரைக்கும்படிப்புதான்!''
''பேஷ்! எத்தனை மணிக்குத் தூங்கப் போவே...?''
''எட்டே காலுக்கு!'' -கிணத்துக்கடவு ரவி



ாரக் கதவைத் தட்டும் ஓசை கேட். அந்த வேளையில் கிரிஷ் கதவைத் ு காரணம்?

ரியா...ப்ரியா... நான்தான் கிரிஷ். த் தெற கொஞ்சம்.''

த நிசப்தத்தில் அவன் குரல் காதில் ந்தாற்போல் கேட்டது. அவளுக்கு செய்வது என்று புரியவில்லை. கதவைத் தா கூடாதா? திறந்துவிட்டால் கிரிஷ் ள வந்து, தனியாக இருக்கும் அவளை... தன்னைவிடப் பலசாலி. சீக்கிரத்தில் ுகப் போகிறவன். ஒரு வேளை தன் மயை இப்போதே கொண்டாட பித்து விட்டால்...? தன்னால் கிரிஷைத் முடியுமா?

யா... ப்ரியா...யா...யா...யா...!'' தரியத்தை வரவழைத்துக் கொண்டு மாகச் சென்று கதவைத் திறந்தாள்.

ஹாய் ப்ரியா இன்னுமா தூங்கலே நீ?'' வன் குரலில் ஒரு குழைவு, அவளை இத வருடியது.

வள் தலையை ஆட்டினாள்.

ப்ரியா எனக்கும் தூக்கம் வரலே. பத்தியே நினைச்சுண்டிருந்தேன்... ராடாவது பேசணும் போல தோணிச்சு. வீட்ல ஒன்னையும் என்னையும் தவிர இருக்காங்க!'' கிரிஷ் சிரித்தான்.

ரியா மீண்டும் தலையை ஆட்டினாள்.

ப்ரியா நான் ஒன்னோடே கொஞ்சம் பேச . உள்ளே வரலாமா?''

ரியாவுக்கு என்ன சொல்வதென்றே புரிய ல. இதற்கு முன்பாக அப்படிப்பட்ட யில் அவள் இருந்ததில்லை.

ப்ரியா ஒனக்கு ஏதாவது அப்ஜெக்ஷன் ந்தா நாம்ப ஹால்ல உட்கார்ந்துக்கிட்டு லாம்... ஓகே?''

பரவாயில்லே உள்ளே வாங்க.''

ரிஷ் சிரித்துக் கொண்டே உள்ளே வந் . ப்ரியாவின் வாழ்க்கையில் இது ஒரு ம் புதிய அனுபவம். எந்த ஆணும் ளைத் தனியாக — அதுவும் படுக்கை றயில் சந்தித்ததில்லை. ஆனால் இப் து கிரிஷ்! கூடிய சீக்கிரத்தில் தனக்குக் வனாகப் போகிறவன். தன் வாழ்க்கை நுழையும் முதல் ஆண் அவளைத் ட்டுத் தடவி உணர்ச்சிகளை எழுப்பி லைக் கொதிக்க வைத்துச் சுவைக்கப் கிறவன்...

'ப்ரியா, இன்னிக்கு நானும் டாக்டரும் னைப் பத்தி ரொம்ப நேரம் டிஸ்கஸ் ணோம். அவர் ஒரு விஷயம் சொன்னாரு. தக் கேக்கும்போது நான் ரொம்ப த்தப்பட்டேன்.''

'எதைப் பத்தி?''

'ப்ரியா நீ இங்கே தங்க மாட்டேன்னு ன்னியாமே! நீ அப்படிச் சொல்வேன்னு ன் எதிர்பார்க்கவேயில்லே.''

'ஸாரி நான் அப்படி சொல்லவேயில்லே. க ரெண்டு பேரும் என்னைச் சரியாப் புரிஞ் கலேன்னு நினைக்கிறேன். நான் இனிமே கே தங்க மாட்டேன்னு சொல்லல்லே. ால்லவும் மாட்டேன்... ராத்திரி வேளை லநான் இங்கே தனியா இருக்கிறது நல்லது

''என்ன சார், உங்க படத்துலே வில்லனுக்கு ரெட்டை வேஷமாமே?...''
''ஆமாம்.. ஒரு வில்லன் நல்லவன், இன்னொருத்தன் பொல்லாதவன்..'' -ஜி நடராஜன்

இல்லேன்னு சொன்னேன்... அதாவது ... எனக்கு....''

கிரிஷ் தன் கைகளை உயர்த்தி அவளைத் தடுத்தான். நாற்காலியை முன்னால் இழுத்துக்கொண்டான்.

''ப்ரியா இந்த நானி பாட்டிக் கதையெல்லாம் என்கிட்டச் சொல்லாதே. அது இந்தக் காலத்துக்கு ஒத்து வராது; முக்கியமா எனக்கு... இதையெல்லாம் டாக்டர் என்கிட்ட ஒரு வார்த்தை விடாமச் சொல்லியாச்சு. இதப் பாரு ப்ரியா, மம்மி நம்ம ரெண்டு பேரும் கலியாணம் பண்ணிக்கணும்னு நெனச்சாங்க, சொன்னாங்க... உன்னைப் பார்த்துப் பத்து நிமிஷம்தான் ஆச்சுன்னாலும் ஒன்னைக் கலியாணம் பண்ணிக்கிறதுக்கு ஓகேன்னு சொன்னேன்... எதுக்காக? மம்மியைத் திருப்திப் படுத்தரத்துக்காக... அதனாலெ ஒன்னைப் பிடிக்கலேன்னு அர்த்தமில்லேம்மா. சொல்லப்போனா ஒன்ன எனக்கு ரொம்பவே புடிச்சிருக்கு. ப்ரியா இப்ப மம்மியும் போயிட்டாங்க. இப்ப இந்த வீட்டில மிஞ்சி இருக்கிறது நாம ரெண்டு பேரும்தான்... நம்ம ரெண்டு பேரும் உடனே கலியாணம் பண்ணிக்கணும்னு நம்ம டாக்டர் சொல்றாரு.''

''ஆனா ஒண்ணு....''

''ப்ரியா ஒண்ணுமில்லே ஒம்பதுமில்லே. நீ என்ன சொல்லப் போறேன்னு எனக்குத் தெரியும்.... மம்மி போயி கொஞ்ச நாள் கூட ஆகலே, அதுக்குள்ளே கலியாணமான்னு அதானே... நம்ம டாக்டர் அவரோட ப்ரண்டு — அவர் ஒரு ப்ராமின்... அவரோட நம்ம விஷயத்தைப் பத்திப் பேசியிருக்காரு. அந்த ஆளு சொல்றாரு நாம இப்பவே கல்யாணம் பண்ணிண்டா தப்பு இல்லேன்னு... நம்ம சாஸ்திரத்திலேயே இருக்காம். அதனாலே நாம வெயிட் பண்ணணும்னு கிடையாது. ப்ரியா குறுக்கேபேசாதே. நான் சொல்றதைக் கேளு. நாம ரெண்டு பேரும் உடனே கலியாணத்தைப் பண்ணிக்கிறோம்... அதுக்கு முன்னாடி நீ ரெண்டு விஷயத்தை அட்டெண்ட் பண்ணணும். அது ஒன்னோடே வேலை. அது என்னதுன்னு ஒனக்குத் தெரியாதில்லியா சொல்றேன்... இப்பவே சொல்றேன்.''

கிரிஷ் சிரித்துக்கொண்டே எழுந்து நின்றான். பிறகு அவள் அருகே நகர்ந்தான்.

(தொடரும்)

உ

ஆன்றோர் வளர்த்த கலை அமுது கலை ஜோதிடத்தை
அறிந்து சுவைப்பதற்கோர் அரிய வாய்ப்பு இது

ஜோதிடப்பயிற்சி

(தபால் வழிப் போதனை முறைப் பயிற்சி)

இன்று போல் நாளைய வாழ்வு இனிக்கின்ற கனியாக இருக்குமா அன்றி எரிக்கின்ற நெருப்பாக கசக்குமா என்று அறிதற்கோர் அரிய கலை ஜோதிடம் தவிர வேறெதும் இல்லை என்ற தனிப் புகழ் பெற்ற ஜோதிடத்தை அரிச்சுவடி முதலாக ஆழ்ந்த நிலைவரை அள்ளி அள்ளிப் படைக்கின்றோம். அமுது கொள்ள வந்திடுவீர் — அறிந்தே நலம் பெறுவீர்.

எவரும் விளங்கிக் கொள்ளும் எளிய விளக்கங்கள் — இனிய தொகுப்புக்கள். எதையும் அறிந்து கொள்ள ஏற்றதான பாடங்கள் இறைவனார் தத்துவங்கள். கற்று முடித்தார்க்கு சான்றிதழும், பட்டமும் சாலச் சிறப்பாகத் தந்திடுவோம். பாடங்களுடன் வரும் தினக்குறிப்பு — இக்கலை கற்கத் துணை நிற்கும். சேரும் முறையும், செலுத்தும் கட்டணமும் அறிந்து கொள்ள சுய விலாசமிட்ட 50 ந.பை தபால்தலை ஒட்டிய கவர் இணைத்து **10-12-81**ந் தேதிக்குள் மனுச் செய்து கொள்க.

பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெய வீரதேவா, யோகி,

ராஜயோகப் பயிற்சியாளர்,

பிளாட் நெ. 204, கதவு எண் 5, அண்ணா நகர், மதுரை-**625 020**

ஆண்டாண்டு கால உத்திரவாதம் உடையது! அணிவதற்கு தங்கத்தின் தரம் உடையது!

22 காரட் **ரூபா மேக்னட் கோல்டு கவரிங்** நகைகள் ஒன்றே!



கதம்ப மாளிகை

36 பாண்டிபஜார், தி.நகர் - சென்னை - 600017

கேட்லாக் வேண்டுவோர் 75 பைசா தபால்தலையுடன் விலாசத்தை தெளிவாக எழுதவும் தபாலில் வரும் ஆர்டர்களுக்கு V.P. மூலம் அனுப்பப்படும்

பரதநாட்டியம் செட் கிடைக்கும்

ஆங்கிலம் கற்பித்த பள்ளி!

தஞ்சையில் வடக்கு ராஜ வீதியில் உள்ள தூயபேதுரு பள்ளிதான் இந்தியாவிலேயே முதன் முதலாக இந்தியர்களுக்கு ''ஆங்கிலம்'' கற்பித்த பள்ளியாக கருதப்படுகின்றது. இது ஸ்வார்ச் பாதிரியாரால் 1784 ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பள்ளிக்கு மன்னர் சரபோசி, ஸ்வார்ச் பாதிரியார் இருந்த பொழுது மானியங்கள் அளித்துள்ளார். இப்பொழுதும் தமிழக அரசின் ஸ்வார்ச் கட்டளையை இப்பள்ளி பெறுகின்றது. மேலும் இப்பள்ளி தமிழறிஞர் புனித ஜி.யு போப் அவர்களின் ஆதரவையும் அவரின் முயற்சிகளையும் பெற்றுள்ளது. -எஸ். பாலசுப்பிரமணியன்

(ஆதாரம்: பள்ளி கையேடு)



படித்தேன். தோல் வேலை செய்யும் இனத்தைச் சேர்ந்த சுமார் இரண்டரை லட்சம் ஜப்பானியர் மிகவும் முன்னேறி விட்ட நிலையிலும் பொது நீரோட்டத்தில் கலந்து கொள்ள விரும்பாமல் தம்மை ஒதுக்கப்பட்டவர்களாகவே கட்டுப்பாடு செய்து கொண்டு அரசு சலுகைகளை அனுபவித்து வருகிறார்களாம். நமது நாட்டில் தீண்டாமை ஒழிப்பு முக்கியமான பணிதான். அதற்காக ஒரு சாராரையே — இந்து மதத்தினரையே — குற்றம் சாட்டுவது பொருத்தமானதாக இல்லை. பொருளாதார நிலையிலும் வேலைவாய்ப்பிலும் பின்தங்கிய நிலையே தீண்டாமைக்கு அடிப்படை. இதற்கும் மதத்துக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை.

''மொழி மட்டுமல்லாமல், மொழி சார்ந்த கலைகளையும் வளர்க்கும் விரிந்த செயல் திறன் உடைய இடமாகப் பல்கலைக் கழகம் விளங்க வேண்டும் என்று விரும்புகிறேன்....''

பல்கலைக் கழகத்துக்குச் சட்ட ரீதியான உருவ அமைப்பு ஏற்படும் வரையில் — பல் துறை அறிஞர்களின் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் சேகரித்து வருகிறார். ('நானகச் செய்து விட்டேன் என்ற கருத்து தோன்றக் கூடாதல்லவா?')

துணைவேந்தரின் தலையெழுத்துக்களான வி.ஐ. என்பன வடசேரி ஐயன் பெருமாள் என்பனவற்றின் முதல் எழுத்துக்களாம். கன்னியாகுமரி மாவட்டத்து வடசேரி.

''சார் வி.ஐ. என்றால் 'வெரி இம்பார்ட்டண்ட்'' என்றார் துணையாளர். ஆனால் நமக்கோ, வெரி இன்டலக்சுவல் என்று சொல்லத் தோன்றுகிறது — டி.எஸ்.கே.

புகைப்படங்கள் : ரயிலடி,
எஸ்.பி.எஸ். தஞ்சை

✕ தமிழ் ஆராய்ச்சிக்கு நுழை வாயில்

✕ துணைவேந்தர் பேராசிரியர் வி.ஐ. சுப்பிரமணியம்



6

கிரிஷ் தன் கால்களைப் பரப்பி வைத்துக் கொண்டு ப்ரியாவுக்கு வெகு அருகில் வந்து நின்ருன். அவன் நின்ற முறை அவன் உடல் அமைப்பு, அவன் ஆண்மையின் ஆதிக்கம் — இவையெல்லாம் சேர்ந்து ப்ரியாவின் உடலில் ஒரு சுகமான வெப்பத்தை உண்டாக்கியது.

''ப்ரியா.... ஒன்னு ரெண்டு முக்கியமான விஷயம் — அது என்னன்னு நானே சொல்றேன்....'' கிரிஷ் இப்போது இன்னும் நெருக்கமாகத் தெரிந்தான். அவன் கண்கள் விரல்களாக மாறி அவளை எங்கெங்கோ தொட்டது போல் ஓர் உணர்ச்சி....

''ப்ரியா பேங்க் அக்கௌண்ட் மம்மி பேர்லே இருக்கு. இன்னிக்கு நானும் டாக்டரும் போயி பேங்க் மானேஜரைப் பார்த்துப் பேசினேம். அந்த ஆளு என்னடான்ன என்னமோ ரூலு ரூலுன்னு ரீலு விடருன். என்னமோ கோர்ட்டுக்குப் போணுமாம்... என்னமோ வாங்கணுமாம்.. ரொம்ப பேஜார் புடிச்ச வேலையா இருக்கும் போல இருக்கு. ஆனு நம்ம டாக்டருக்கு எல்லாமே தெரியும்.''

''நம்ம வக்கீல் செய்யற வேலைன்னு அது!''

''அப்படிச் சொல்லு ப்ரியா. அதைத் தான் நான் சொல்ல வந்தேன். நீ முந்திண்டே. நம்ம வக்கீல் இருக்காரே, சாரி, அவர் பேரு எனக்கு ஞாபகமே வர மாட்டேங்குது. அப்பா! அவருக்கு எவ்வளவு நீளமான பேரு!.... ப்ரியா, அந்த ப்ளேன் ஆக்ஸிடெண்டுக்கப்புறம் என் ஞாபகசக்தியே போய்விட்டுது. ம்... மம்மிதான் ஒன்கிட்ட எல்லாத்தையும் சொல்லி யிருப்பாங்களே!''

ப்ரியா தலையைச் சற்றுப் பலமாகவே ஆட்டினுள்.

''ப்ரியா உடனே நீ ஒண்ணு பண்ணு. அந்த சாரி.. அவர் பேரென்ன....''

''மீஞ்சூர் கோவிந்தராஜா சாரி.''

''அப்பாடா! இதைவிட நீளமான பேரு கிடைக்கல்லயா அந்த ஆளுக்கு? ப்ரியா நீ அவரோட ஒரு அப்பாய்ண்ட்மென்ட் ஃபிக்ஸ் பண்ணிக்கோ... சீக்கிரமா அந்த பேங்க் அக்கவுண்ட், அந்தச் சமாசாரம் எல்லாத்தையும் நம்ம பேர்லே மாத்தறத்துக்கு ஏற்பாடு பண்ணச் சொல்லு. ப்ரியா நம்ம கல்யாணத்துக்குப் பணம் வேணும்... அப்பறம் நம்ம டாக்டரு நம்ம ரெண்டு பேரையும் ஒரு மாசம் எங்கேயாவது ட்ரிப் அடிச்சுட்டு வரச் சொன்ருரு. ஹனிமூன்னு வெச்சுப்பமே!'' சிரித்துக் கொண்டே அவன் தன் ஒட்டிய அடிவயிற்றைத் தட்டிக்கொண்டான். அவன் விரல்கள் அடர்த்தியாக வளர்ந்திருந்த முடியுடன் விளையாடத் தொடங்கின. அதைப் பார்த்த அவள் கண்கள் அந்த ஆட்டத்தை விட்டு அகல மறுத்தன.

''அதான் விஷயம் ப்ரியா. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். எல்லாத்தையும் விட முக்கியமானது நம்ம கல்யாணம். எவ்வளவு சீக்கிரமா வெச்சுக்க முடியுமோ செஞ்சிடுவோம். அதனுலை நான் வெளியிலே தங்குவேன் அப்படீங்கற பேச்செல்லாம் வேண்டாம். ப்ரியா இது ஒன் ஆஃபீஸில்ல... வீடு. நான் திரும்பி வரத்துக்கு முன்னுடியே நீ இங்கு வந்தாச்சு. தனியா இருந்த மம்மியை அவ்வளவு நல்லாக் கவனிச்சுக்கிட்டயாம். டாக்டர் சொன்னுரு... மம்மியும் நீதான் எல்லாங்கற மாதிரி என்னிடம் பேசினுங்க. எல்லாமே ஒனக்குத்தான் சொந்தம்னு எழுதியும் வெச்சாங்க. சொல்லப் போனு இன்னும் கொஞ்ச நாள்லே நானே உனக்குச்சொந்தமாகப் போறேனே!'' — கிரிஷ் பலமாகச் சிரித்தான். அந்த இரவின் அமைதியில் அவன் சிரிப்பின் ஒலி இடி போல் இருந்தது.

''ப்ரியா நீ பதிலே பேச வேண்டாம். இனிமே நீ இந்த வீட்டை விட்டுப் போறதுங்கறது நடக்காது. என்னடாது இவ்வளவு பெரிய பங்களாவிலே நாம ஒரு ஆம்பிள்ளேயோட தனியா இருக்கோம்னு நெனக்கிறியா... ப்ரியா நான் ஒரு ஆர்மி மேன். ஆர்மி டிஸிப்பிளின்னு நீ கேள்விப்பட்டிருப்பேன்னு நெனேக்கிறேன். அது எங்கிட்ட நெறையவே இருக்கு. அதனுலே ஒனக்கு எந்த விதமான பயமும் வேண்டாம். இங்கே நீ ரொம்ப ஸேப்... டோண்ட் வொர்ரி...'' கிரிஷ் குனிந்து அவள் முதுகில் தட்டினுன். அவளுக்கு உடலெங்கும்

வருவான் ராஜகுமாரன்

ராண்டார் கை



சிலிர்ப்பு. தட்டிய கைகள் தடவ ஆரம்பித்தன. அவள் தடை போடும் நிலையில் இல்லை. ஆணின் விரல்கள் சிலந்திகளாக மாறி அவள் உடம்பில் பல இடங்களில் கூடு கட்ட ஆரம்பித்தன. வடக்கை நோக்கிச் சில சிலந்திகள், தெற்கே நோக்கிச் சில. இப்படி அவளை எங்கும் ஆக்கிரமித்துக் கொண்டன. அவளால் தப்ப முடியாத நிலை. தப்பிவிட வேண்டும் என்ற எண்ணமும் இல்லை.

''ப்ரியா.... யூ ஆர் லவ்லி... எவ்ரி வேர்.''

அவள் வலது காதை ஈரமாக்கிக் கொண்டே இன்னும் இறுக்க அணைத்தான்.

இப்போது அவள் கைவிரல்கள் அவளிடமிருந்து விடைபெற்று அவனிடம் எதையோ தேடத் தொடங்கி விட்டன.

''ப்ரியா.... ப்ரியா....என்னாலெ.... என்னாலெ.... அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை. பேசவேண்டிய நிலையிலும் அவன் இல்லை. அந்த எல்லையைக் கடந்து அவன் மேலே தாவ ஆரம்பித்தான்.

''நோ... கிரிஷ் வேண்டாம்...'' அவன் அணைப்பிலிருந்து ப்ரியா விலகிக் கொண்டாள். ''நீங்க இங்கிருந்து போயிடுங்க.ஓங்க அறைக்கு. இங்கேயே இருந்தீங்கன்னா... ப்ளீஸ்....''

''ப்ரியா எனக்குப் புரியுது. கலியாணத்துக்கப்பறம் நம்ம வாழ்க்கையே இதுவாகத் தானே இருக்கப் போகுது. அவசரப்பட வேண்டாம்னு சொல்றே இல்லியா...'' ஐ அக்ரி.''

ப்ரியா முணுமுணுத்தாள்.

''ப்ரியா இப்ப நடந்ததைப் பத்தி எனக்கு வருத்தமே இல்லே. சொல்லப்போனுல் நம்ம ரெண்டு பேரும் இந்தச் சில நிமிஷங்களிலே ரொம்பக் க்ளோஸா வந்துட்டோம் இல்லியா...அப்ப நான் என் அறைக்குப் போறேன். நீ காலேலே நம்ம வக்கீலுக்கு போன் பண்ணி அவர் வேலையை ஆரம் பிக்கச் சொல்லு.''

''சரி. அப்படியே செய்யறேன்.''

''குட் கேர்ள். ப்ரியா முக்கியமா அந்த பேங்க் சமாசாரம். அவித வெச்சுத்தான் நாம மீதியெல்லாம் செய்யணும். ஸோ அதை முதல்லே செய்யச் சொல்லு.''

''சரி. அப்படியே ஆகட்டும். நீங்க கிளம்புங்க.''

''என்ன ப்ரியா இன்னும் டு ஸெகண்ட்ஸ் நின்னு கழுத்தைப் பிடிச்சுத் தள்ளிடுவே போலிருக்கே. அதுவும் கணவனு வரப் போறவனை!'' — அவள் மூக்கை நன்ருகத் திருகிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வெளி யில் சென்று விட்டான்.

ப்ரியா எழுந்திருக்கும்போதே மணி 8-10 ஆகிவிட்டது. அவள் அவ்வளவு நேரம் தூங்கியதே இல்லை. இதை நினைத்துப் பார்க் கும்போது சந்தோஷம் அவள் மனத்தில் வேரூன்றி அவள் முகத்தில் சிரிப்பாக மலர்ந் தது. வாஷ் பேஸினுக்கருகில் பல் தேய்க்கும் பொழுது கண்ணுடியில் பார்த்துக்கொணடு அடிக்கடி சிரித்தாள். பற்பசையின் செவ் வண்ண நுரை அவள் வாய்க்குள் மூலைகளில் புகுந்து விளையாடியபோது அவளுக்கு இர வின் இனிமையான சம்பவங்கள் திரைப்படம் போல் மனத்தில் ஓட ஆரம்பித்தன. கிரிஷ்! ஆண்மையின் இருப்பிடமான ஒருவன் தனக் குச் சொந்தமாகப் போகிருன் என்ற எண் ணமே அவளைக் கிளுகிளுக்கச் செய்தது. தன் பற்களின் அழகை ரசிக்கக் கண்ணுடிக் கருகே இன்னும் சற்றுக் குனிந்தாள். அப் போது அவள் பார்வை நீல நிற டூத் ப்ர ஷைப் பிடித்துக் கொண்டிருந்த தன் விரல்

பாரத நாட்டிலுள்ள கோயில் களிலே 'வீறுர்ந்த கோவில்' (The Grandest Temple) என்று 'என்சைக்ளோபீடியா பிரிட்டா னிகா' என்ற உலகப் பெரு நூல் வர்ணிக்கும் கோவில் 'தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில்'.
- சுந்தர்



களின் மேல் பட்டது. அவள் விரல்கள் அவைகளுக்குத்தான் எத்தனை தைரியம்!... ஆர்வம்...! தன் விரல்களுக்கே இப்படி யென்ருல்.....''

கிரிஷ் காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு வெளி யில் சென்றுவிட்டான். அவனை வழியனுப்பி விட்டு வெகு நேரம் ஷவரில் குளித்தாள். தன் உடல் அழகை அவள் எப்போதும் ரசித்ததில்லை. அன்று அதைச் செய்தாள். கிரிஷ் அவள் காதில்கிசுகிசுத்த வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலித்து அவள் ஈரம் பட்ட அங்கங்களில் ஒளியை ஏற்றி விட்டன. கிரிஷின் வார்த்தைகளை விட அவன் சிலந்தி விரல் களில்தான் எத்தனை இனிமை!.... இளமை. விரல்களே இப்படி யென்ருல்....

அவள் கிரிஷ் கொடுத்த வேலைகளைக் கவ னிக்கத் தயாராகும்போது மணி ஒன்பது ஆகி விட்டது. காலையில் எழுந்த உடனே கோவிந்தராஜாச்சாரிக்கு ஃபோன் செய்து அவரைப் பார்க்கும் நேரத்தை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்தாள். ஆனுல் மறந்து விட்டாள். இப்படி அவள் மறப்பது இதுதான் முதல் தடவை. சாரிக்கு ஃபோன் செய்யும்போது தன் மறதியை நினைத்துச் சிரித்துக் கொண்டாள்.

''ஹலோ மிஸ்டர் கோவிந்தாராஜாச்-சாரி?.... ஸார் நான்தான் ப்ரியா பேசறேன் ஸார்... மிஸஸ் பார்வதி வீட்டிலிருந்து...''

''ஹலோ ப்ரியா நான்தான் பேசறேன். எப்டியம்மா இருக்கே? சௌக்கியம்தானே? ஒன்னுடை.... ம்.... கிரிஷ் எப்படி?''

''சௌக்கியமா இருக்கார்ஸார். தேங்க்யூ. மார்னிங்கே வெளியே போயிட்டார். ஸார், நான் ஒங்களை ஒடனே பார்க்கணும். எப்ப வரலாம்.... அதான் ஸார் மம்மி வில்லு விஷயமாத்தான். அவர் ரொம்ப அவசரப் படரூர். எப்ப மீட் பண்ணலாம்?''

''ப்ரியா.... ம்..... இன்னிக்கி நான் கோர்ட்டுக்குப் போகலே. வீட்டிலேதான் இருப்பேன். கால்லே ஒரு கட்டி. ரொம்ப நோகிறது. நடக்கவே முடிலே... நீ வந்து... ப்ரியா... செத்த இரு. என் டைரியிலே செக் பண்றேன்... வந்து.... வந்து.... நாலு மணிக்கு யாரோ க்ளையண்ட்ஸ் வரா. நீ வந்து ப்ரியா ஒரு ரெண்டரை மணிக்கு வந்துடு.... சாப்புட்டுட்டு!''

''ஸார் ஒங்க தூக்கம்?''

''என்னது தூக்கமா? என்ன ப்ரியா நான் கிழவனுயிட்டேன்னு சொல்லிக் காட்டறியா! தூக்கமாவது வீக்கமாவது நான் டே டைம்லே தூங்கறதே இல்லே. கோர்ட், கச்சேரி, க்ளையண்ட்ஸ்ன்னு — அவாள்ளாம் தூங்க விடறதுமில்லே. ஏற்கனவே ராத் திரிலே தூக்கம் வரதில்லே.... இந்த அழ குலே மத்யானம் வேறே தூங்கின... அவ் வளவுதான்.... ஆட்டம் க்ளோஸ்,''

''அப்படியா ஸார்.... ஓ. கே, நான் டூ தேர்ட்டிக்கே வரேன். என்ன பேப்பர்ஸ் லாம் கொண்டு வரணும் ஸார்?''

''ப்ரியா... நீ வந்து பார்வதி அம்மா வோட வில்லு, அது ஒங்கிட்ட ஸேஃபா இருக்கும்னு நெனைக்கிறேன்... மீதி பேப்பர் ஸெல்லாம் என்கிட்ட ஃபைல்ல இருக்கு,

அந்த அம்மா கொடுத்தா. செங்கல்பட்டு டிஸ்ட்ரிக்ட் கோர்ட்லே ஒ. பி. ஃபைல் பண்ண ணும். அதுக்கு வில்லுதான் ரொம்ப முக்யம். நீ வந்து....ப்ரியா அந்த வில்லே எங்கிட்டே பத்ரமாச் சேர்த்துடு. மீதியை நான் பார்த்துக்கறேன்....''

பிற்பகல் வக்கீலைக் காணச் செல்ல சில மணி நேரம்தான் இருந்தது. ஒரு வழியாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு விட்டாள். இரவு சரியாகத் தூங்காததால் அவளால் சற்றுநேரம் தூங்காமல் இருக்க முடியவில்லை. ஒரு மணி நேரம் தலையணையை அணைத்துக் கொண்டு நன்றாகத் தூங்கினாள். அவள் இதுவரை தலையணையை அணைத்துக் கொண்டு தூங்கியதே இல்லை. கிரிஷ்! அந்தக் குறுகிய காலத்தில் அவள் வாழ்க்கையை அவன் எப்படியெல்லாம் மாற்றிக் கொண்டிருக்கிறான்! புதிய வழக்கங்கள், புல்லரிக்கும் பழக்கங்கள்.... ஒரு ஆணுக்கு இவ்வளவு சக்தியா!

பார்வதியின் உயில். அதை அன்று கிரிஷின் சிவப்புப் பெட்டியில் வைத்திருந்தாள். கிரிஷின் சிவப்புப் பெட்டி! இப்போது அது எங்கே இருக்கிறதோ! அவன் அறையில் தான் இருக்க வேண்டும். கிரிஷ் இல்லாத போது அதை எப்படி எடுப்பது? காலையிலேயே அதைப் பற்றிக் கிரிஷிடம் கேட்கவில்லையே. அனுமதி இல்லாமல் அவன் அறையில் எப்படி நுழைவது? நுழைந்தால் தான் என்ன? கிரிஷ் இன்னும் சில நாட்களில் சொந்தமாகப் போகிறவன்தானே. ஒரு வேளை அந்தப் பெட்டி பூட்டியிருந்தால் என்ன செய்வது?

அவசரம் அவசரமாகக் கிரிஷின் அறையில் நுழைந்தாள்.

அப்பா! அறையா இது? குப்பைத் தொட்டி போல் அல்லவா இருக்கிறது! ஆண்கள்! அவர்களுக்கு எதையுமே ஒழுங்காக வைத்துக் கொள்ளத் தெரியாதோ அல்லது முடியாதோ. எங்கு பார்த்தாலும்... தரையில்... நாற்காலிகளில்... படுக்கையில்... காகிதங்கள்.... துணி மணிகள்... சிகரெட் துண்டுகள்... எரிந்துபோன தீக்குச்சிகள்... கிரிஷ் புகை பிடிப்பவரா? வந்ததிலிருந்து ஒரு முறையாவது அவன் சிகரெட் பிடித்துப் பார்த்ததில்லையே.

வெகுநேரம் அவன் படுக்கையில் உட்கார்ந்தாள். தன் கண்களால் அறையை அளந்தாள். அந்தச் சிவப்புப் பெட்டி எங்கே? அறையெல்லாம் தேடினாள். கடைசியில் கட்டிலுக்கடியில் அது இருந்தது. பெட்டிக்குப் பக்கத்தில் இரண்டு காலிப் புட்டிகள். அதன் மேல் 'ரம்' என்று எழுதப்பட்டிருந்தது. கிரிஷுக்குக் குடிப் பழக்கமும் உண்டோ? ராணுவத்தில் வேலை பார்ப்பவர்களுக்குக் குடிப்பழக்கம் இருக்கும் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறாள். பார்வதியும் அதைப் பற்றிப் பேசியிருக்கிறாள். ராணுவத்தில் குடிப்பது ஒரு கெட்ட பழக்கமாக யாரும் கருத மாட்டார்களாம். குடிப்பது நாகரீகத்தின் சின்னமாம்.

சிவப்புப் பெட்டி பூட்டாமலேயே இருந்தது. இந்த ஆண்களே இப்படித்தான்! மெதுவாகப் பெட்டியைத் திறந்தாள். சே! விலையுயர்ந்த பெட்டியா இது? குப்பைத் தொட்டி! அன்று அவள் பார்வதியின் உயிலைப் பக்கவாட்டில் உள்ள ஒரு பையில் வைத்திருந்தாள். அவளுக்கு அது நன்றாகவே நினைவில் இருந்தது. இப்போது அந்தப் பையில் உயிலைக் காணோம்!

எங்கே அந்த உயில்? அன்று தான் வைத்திருந்த இடத்தில் இல்லையே! பெட்டியைக் கையில் எடுத்து அதை அப்படியே கவிழ்த்தாள். உள்ளே இருந்த எல்லாப் பொருள்களும் தடதடவென்று தரையில் விழுந்தன. அப்போது அவள் கண்ணில்பட்டது ஒன்று...

அது ஒரு புகைப்படம்!

அவசரம் அவசரமாக அதைக் கையில் எடுத்தாள். அந்தப்படத்திலிருந்ததுஒரு பெண் —பார்வதி! அவள் அணிந்திருந்த புடவையைப் ப்ரியாவால் அடையாளம் தெரிந்து கொள்ள முடிந்தது. அது சில மாதங்களுக்கு முன்புதான் வாங்கப்பட்ட புடவை. அப்படியென்றால் தன் கையில் இருக்கும் பார்வதியின் புகைப்படம் சிலநாட்களுக்கு முன்புதான் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். பார்வதியின் புகைப்படம் கிரிஷின் சிவப்புப் பெட்டிக்குள் எப்படி வந்தது? பார்வதியே கிரிஷிடம் கொடுத்தாளா? அப்படி யென்றால் எப்போது? எதற்காக?

ஆழ்ந்த யோசனையில் மூழ்கிக் கொண்டே புகைப்படத்தைத் திருப்பிப் பார்த்தாள். அவள் கண்கள் அகல விரிந்தன. அவள் கைகள் நடுங்க ஆரம்பித்தன. மீண்டும் முறைத்துப் பார்த்தாள். அவள் கண்களைக் கூர்மையான ஈட்டிகளைப் போல் தாக்க முன் வந்தன படத்தின் பின்புறத்தில் லேசாகப் பென்சிலினால் எழுதப்பட்டிருந்த மூன்று ஆங்கில வார்த்தைகள். திஸ் ஈஸ் மம்மி! இதுதான் அம்மா!.... இப்படி பார்வதியை யார், யாரிடம் காட்டுகிறார்கள்? எதற்காக? கிரிஷின் படுக்கை அறை வேகமாகச் சுழல ஆரம்பித்தது. ப்ரியா கட்டிலைப் பிடித்துக் கொண்டு அப்படியே திகைத்து நின்றாள்.

(தொடரும்)

இடம்: காசி விசுவநாதசுவாமி கோவில்
நேரம்: அந்தி மாலை

தங்கு தடையின்றி, தமிழில் உபந்நியாசம் நிகழ்த்தும் எட்டு வயதுச் சிறுமி ரஞ்சனி, ஐந்து வயதிலேயே ருக்மிணி கல்யாணம் கதா காலட்சேபம் செய்து அரங்கேறியவள்! கலைமாமணி சுப்பிரமணிய பாகவதரின் சிஷ்யை. கொங்கணீசுவர் கோயில் பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறாள் ரஞ்சனி. தாயை இழந்த ரஞ்சனியைத் தாத்தா திரு ரமணி வளர்த்துவருகிறார்.

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான்®
ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

வளரும் குழந்தைகளுக்கென்றே சிறப்பான சில தேவைகள் உள்ளன—வளரும் வயதிலே உடம்புக்குத் தேவைப்படும் மிகச் சிறந்த புரதம், 22 மூலாதார ஊட்டச் சத்துக்கள்—அளிக்கிறது காம்ப்ளான். மறவாதீர்கள், டாக்டர்களின் சிபாரிசு பெற்ற, திட்டமிட்ட உணவு காம்ப்ளான்.

லின்டாஸ்—GLC-6-2012 TM

இலவசம்! 32 பக்கங்கள் கொண்ட கைப் புத்தகம்.

"குடும்பத்திற்கான பரிபூரண ஊட்டச் சத்துணவு வழிகாட்டி" 50 பைசா தபால்தலை இணைத்து இம் முகவரிக்கு எழுதிப் பெறுக: தபால் பை நம்பர் 19118, (Comp) G-78, பம்பாய் 400 025.

திட்டமிட்ட பரிபூரண உணவு — காம்ப்ளான்®

அவரல்லவோ எழுத்தாளர்!

—— துமிலன் ——

ஸ்ரீ பி. ஸ்ரீ சுமார் நான்கு ஆண்டு காலம் ாலீ ஸ்சப்இன்ஸ்பெக்டராக வேலைபார்த்து ட்டுப் பிறகு செட்டி நாட்டில்நடைபெற்று ந்த 'குமரன்'பத்திரிகையின் பொறுப்பாசிரி ரானூர். அதில் அவர் நிறையத் தொடர் ட்டுரைகள் எழுதி வந்தார். கட்டுரைகள் பரும்பாலும் இலக்கியங்கள் சம்பந்தப்பட் வை.

அவரது படைப்பு அமரர் கல்கி அவர் ளின் கவனத்தைக் கவர்ந்தது.

அப்போது விகடனில் பிரசுரிக்கப்பட்டவை ல்லாம் (விளம்பரங்களைத் தவிர) நகைச் வையை அடிப்படையாகக் கொண்டவை. ாசகர்களுக்குத் திகட்டிப் போகக் கூடுமோ ன்ற ஒரு சந்தேகம் ஏற்பட்டிருந்தது. நகைச் வையை 'பாலன்ஸ்' செய்ய வேண்டியிருந் து. மத சம்பந்தமான, பக்தி சம்பந்த ான இலக்கியக் கட்டுரைகளைப் பிரசுரிப்ப தன்று திட்டமிட்டோம்.

ஆனல் யாரை விட்டு எழுதச் சொல்வது? ாரால் எளிய தமிழ் நடையில் எழுத முடி ம்? பீ. ஸ்ரீ. அவர்களால் எழுத முடியும்; ழுதி வருகிருர் என்பது அவர் குமரன் த்திரிகையில் எழுதியவற்றிலிருந்து தெரிய ந்தது.

எனவே, விகடனுக்குத் தொடர் கட் ரைகள் எழுதி வருமாறு பி. ஸ்ரீ. அவர்களைக் கட்டுக்கொண்டோம். அவரும் உற்சாக ாக எழுதி வரலானூர். முதலில் திவ்யப் ரபந்தத்தைப் பற்றி எழுதி வந்ததாக ஞாப ம். பிறகு 'சிவநேசச் செல்வர்கள்' என்ற லைப்பில் தொடர் கட்டுரைகள். 'உல்லாச ாத்திரை' என்ற தலைப்பில் (பயணக் கட் ரைகள் அல்ல) தாம் படித்து அனுபவித்த ல கதைகளைப் பற்றி. 'கிளைவ் முதல் ராஜாஜி ரை' என்ற தலைப்பில் இந்திய கவர்னர் ஜனரல்களைப் பற்றி.

இவ்வளவிருந்தும் பி. ஸ்ரீ. அவர்களின் கழை நிலைநாட்டியது அவரது சித்திர ராமா ணமும், கம்ப சித்திரமும்தான்.

பி. ஸ்ரீ. அவர்கள் விகடனில் கம்ப ராமா ணத்தைப் பற்றி எழுதி வரத் தொடங்கி துதும், முதலில் அவரிடமிருந்து வரும் கை யெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்ப்பேன். றகு, இரண்டு கட்டங்களில் அந்தக் கட் ரையின் 'புரூப்'களைப் பார்ப்பேன், பார்த் ாக வேண்டும்.

இந்த இன்பத் 'தொல்லை' என்னைக் கம்ப ின் கவிதைகளைப் பற்றிப் புரிந்துகொள்ளச் செய்து, அவற்றை அனுபவிக்கவும் வைத்தது.

கம்ப காவிய அமுதை என் போன்ற ாதாரண இளைஞர்களுக்கும் (நான் அப் போது இளைஞன்தானே!) மற்றவர்களுக்கும் ுகட்ட அவர் கையாண்ட உத்தி இதுதான்:



பி. ஸ்ரீ

முதலில் கவிதைக்கான சூழ்நிலையைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்வார்.

அதைப் படித்ததுமே வாசகர்களின் மனத்தில் ஒரு நாடகக் காட்சிஉருவாகிவிடும். பிறகு கவிதை தரப்படும். இரண்டு மூன்று வார்த்தைகளுக்கு மட்டும் பதவுரை, பிறகு விளக்கம் ஆரம்பமாகும்.

பி. ஸ்ரீ. அவர்கள் கம்பனது கவிதைகளைத் தாம் ஐயந் திரிபறப் புரிந்து கொண்டு, அவற்றை அனுபவித்து, அதன் பயனுய்க் கவிதா சன்னதம் பெற்றுப் பிறகு நமக்கு எடுத்துக் கூறினுர். அவரது படாடோபமற்ற ஜனநாயகத் தமிழ்நடை எல்லோரையும் கம்பனை அனுபவிக்க வைத்தது. அநாவசியமான குட்டிக் கதைகளையோ உபமானக் கதைகளையோ அவர் புகுத்துவதில்லை.

நான் இந்த மேதையை 1932ம் ஆண்டு வாக்கில் முதன் முதலில் சந்தித்தேன்.

நல்ல வாட்ட சாட்டமான உடலமைப்பு. நாற்காலியில் விரைப்புடன் உட்காருவார். முகத்தில் போலீஸ்காரரின் புன்னகை கலந்த கடுமை எப்போதும் தவழ்ந்து கொண்டிருக்கும். வார்த்தைகளை முழுசாக உச்சரித்து அழுத்தம் திருத்தமாகப் பேசுவார். அவர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரா யிருந்தபோது தமது ஆங்கில மேலதிகாரிகள் சிலருக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்து வந்தார். பேச்சிலே அவர் கையாண்ட அழுத்தந் திருத்தம், ட்யூஷன் சொல்லிக் கொடுத்ததன் விளைவு என்று நினைக்கிறேன்.

பேச்சின்போது மில்டன், ஷேக்ஸ்பியர், ஷெல்லி, பைரன், டென்னிஸன், பர்னுர்டு ஷா முதலியவர்களின் நூல்களிலிருந்து மேற்கோள்களை அள்ளி வீசுவார்.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் அவர், ஸ்ரீ பக்தவத்சலத்தின் விருப்பப்படி, 'காங்கிரஸ் சரித்திரம்' எழுதுவதில் ஈடுபட்டிருந்தார்.

பிற்காலத்தில் அவரால் தாமாகவே எழுத முடிவதில்லை. ஸ்ரீமதி லட்சுமி அம்மாள் என்ற பெண்மணி அவருக்கு உதவியாளராக இருந்து அவர் சொல்வதை எழுதி வருவார்.

அவரது ஒரு நூலுக்கு சாகித்திய அகாதமி பரிசு அளித்துக் கௌரவித்தது.

96 வயதுவரை எழுதி வந்தவர், ''உடல் நிலை அனுமதித்தால் மேலும் எழுதத் திட்டங்கள் வைத்திருக்கிறேன்'' என்றுர். அவரல்லவோ எழுத்தாளர்!

7

ப்ரியாவுக்குத் தன்னைச் சமாளித்துக் கொள்ள வெகு நேரம் தேவைப்பட்டது. எப்படியோ ஒரு வழியாகக் கட்டிலுக்கு அருகில் உள்ள ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். பார்வதியின் புகைப் படத்தைக் கவ்விப் பிடித்துக் கொண்டிருந்த விரல்களின் நடுக்கம் இன்னும் குறைந்த பாடில்லை. பலத்த பெருமூச்சுடன் புகைப் படத்தை இப்படியும் அப்படியுமாகத் திருப்பிப் பல முறை பார்த்தாள். ஆமாம்... அதே புடவை தான். பட்டை சரிகை போட்ட நீல நிற காஞ்சிபுரம் பட்டுப் புடவை... அதில் ஆங்காங்கே அழகுக்கு அழகு சேர்க்கும் வகையில் வேலைப்பாடுகள். அந்தப் புடவையைப் பற்றிப் பார்வதி பேசியது அவள் நினைவுக்கு வந்தது. அதை வாங்கியதற்குப் பிறகுதான் இந்தப் புகைப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. படத்தில் பார்வதிக்குப் பின்னால் பெருமையுடன் நிற்கும் மாமரம் அழகுடன் காட்சி அளித்தது. அந்த மரம் பங்களாவுக்கு வெளியே சுவரின் ஓரமாக உள்ளது. அப்படி யென்றால் படம், பார்வதி வீட்டுக்கு வெளியே உட்கார்ந்திருந்தபோது எடுக்கப் பட்டிருக்க வேண்டும். பார்வதியின் முக **பா**வத்தைப் பார்க்கும்போது அதில் சோகம், சோர்வு சற்று அதிகமாகவே கலந்திருப்பது தெளிவாகவே தெரிந்தது. அதனால் அந்தப் படத்தைப் பார்வதிக்குத் தெரியாமல்தான் எடுத்திருக்க வேண்டும். எடுத்தது யார்? எதற்காக?

ப்ரியாவுக்கு வியர்க்கத் தொடங்கியது. அதனால் அவள் அணிந்திருக்கும் பிளவுஸ் முதுகோடு ஒட்டிக் கொண்டது. நாற்காலியில் நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள். அவள் முதுகில் இனம் ெ யாத ஒன்று உடலுக்குள் செல்வது போல பிரமை.

படத்துக்குப் பின்னால் பென்சிலால் எ தப்பட்டிருந்த வார்த்தைகளை மீண்டு மீண்டும் படித்தாள். 'இதுதான் அம்மா' இந்த வார்த்தைகளை எழுதியது யார்? யெழுத்தைப் பார்க்கும்போது அதை எ கேயோ முன்பே பார்த்தது போல் ஓர் எ ணம்.... பார்வதியுடையதா? சே என் மடத்தனம்! பார்வதியே தன் புகைப்பட

வெகுளான் ராஜகுமாரன்

ராண்டார் கை

பின்புறம் 'இதுதான் அம்மா' என்று திக் கொள்வாளா? வீட்டில் புகைப் ங்களை இல்லாதபோது பார்வதி இதை டுர் ஏன் எடுத்து வைத்திருக்க வேண்டும்? பொருக்கு யாருடையது என்று தெளிவாகத் தெரிந்து விட்டால், எல்லா விஷயங்களும் நன்ருகவே ஓரளவுக்குப் புரிந்துவிடும். அதுதான் தான் முதலில் செய்ய வேண்டிய வேலை. அவசர அவசரமாகக் கீழே சிதறிக் கிடந்த பொருள்களை யெல்லாம் எடுத்துச் சிகப்புப் பெட்டியில் வைத்துச் சரி செய்தாள். அதை மூடிவிட்டுக் கட்டிலுக்கு அடியில் முன்பிருந்த இடத்திலேயே வைத்துவிட்டாள். கையிலிருந்த புகைப்படத்தை இன்னும் சற்று அழுத்திப் பிடித்துக் கொண்டு வேகமாக ஓடினுள்.

பார்வதியின் படுக்கை அறை வெறிச்சோடியிருந்தது. அதற்குள் நுழையும்போது ப்ரியாவின் மனத்தில் ஒரு புதுவிதமான பயம் புகுந்து துளைக்கத் தொடங்கியது. தனக்குப் பழக்கமான பார்வதியின் படுக்கை.... சோபாக்கள்... நாற்காலிகள்... மூலையில் இருக்கும் ஸ்டீல் பீரோ, மேசை... இவை எல்லாமே தன்னை மிரட்டுவது போல் ஒரு பிரமை... வேகமாகச்சுவரின் ஓரமாக இருந்த மேசையின் அருகே சென்ருள். அதற்கு மேலே வைக்கப்பட்டிருந்த சிறிய பெட்டி அவளை முறைத்துப் பார்த்தது. ஒரு கையால் அதை அழுத்திப் பிடித்துக் கொண்டு அதி உள்ள கீழ் டிராயரை வெளியே இழுத்தாள்.

அதற்குள் ஒரு சிறிய காகிதத் துண்டு. கிரில் வந்த நாளன்று அதை அவள் பத்திரமாக உள்ளே வைத்திருந்தாள். அந்தச் சில நாட்களிலேயே அந்தக் காகிதத்தின் மதிப்பு மிகவும் உயர்ந்துவிட்டது என்ற எண்ணம் அவள் மனத்தில் பளிச்சிட்டது. காகிதத்தை அவசர அவசரமாகப் பிரித்தாள். அவள் கண்கள் மேல் வரியை மட்டும் ஊடுருவிப்பார்த்தன. 'மிஸஸ் பார்வதி' என்ற பெயர்

ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. சந்தேகமே இல்லே! அந்தக் கையெழுத்துத் தனக்குப் பழக்கமானதுதான். டாக்டர் ஆனந்துடையது! தன் கையிலிருக்கும் மருந்துச் சீட்டை எழுதியவரும், புகைப் படத்தின் பின்புறம் அந்த மூன்று வார்த்தைகளை எழுதியவரும் ஒருவரே... டாக்டர் ஆனந்த்.

அப்படி யென்றுல் அந்தப் புகைப்படத்துக்குக் காரணமாக இருந்தவரும் டாக்டர் ஆனந்தேதான். சந்தேகமில்லே! அதாவது டாக்டர், பார்வதியை அவளுக்குத் தெரியாமல் படம் எடுத்து, அதற்குப் பின்புறம் 'இதுதான் அம்மா' என்று ஆங்கிலத்தில் எழுதி கிரிஷ்-க்கு அனுப்பி வைத்திருக்கிறுர். எதற்காக? காரணத்தைப் பற்றி நினைக்கும் பொழுதே ப்ரியாவின் உடல் நடுங்க ஆரம்பித்தது.... ஆமாம். சந்தேகமில்லே. டாக்டருக்கு ஏற்கனவே கிரிஷைத் தெரியும். அன்று பார்வதிக்கு முன்னுல் இருவரும் முதன் முறையாகச் சந்தித்துக் கொள்வது போல் நாடகமாடி இருக்கிறுர்கள். கிரிஷ் பார்வதியை முன்னுல் பார்த்ததே யில்லே. அவளை அறிமுகப் படுத்துவதற்குத் தான் இந்தப் புகைப்படம்!

ஆமாம். சந்தேகமில்லே. கிரிஷ் என்று சொல்லிக் கொண்டு வீட்டில் நுழைந்தவன் பார்வதியின் மகன் அல்ல. அவன் ஒரு போலி. டாக்டர்தான் அவனே உருவாக்கியிருக்கிறுர். பார்வதியின் சொத்துக்களேப் பறித்துக்கொள்ள டாக்டர் ஆனந்தின் சூழ்ச்சியின் அடிப்படைதான் கிரிஷ்...

யார் இந்தக் கிரிஷ்? எங்கிருந்து வந்தான்? தன்னே அணேத்து உடலில் புதுப் புதுஉணர்ச்சிகளே உண்டாக்கினவன் போலியா?

அந்த இருளடைந்த சூழ்நிலேயில் ஒரு வெளிச்சக் கோப்பை — மீஞ்சூர் கோவிந்தராஜாச்சாரி! வக்கீல் தொழிலில் முன் வரிசையில் நிற்கும் மனிதர். அந்தக் காலத்துப் பண்பாடு, நேர்மை, ஒழுக்கம், மனிதாபிமானம் இவைகளே யெல்லாம் கவசமாக அணிந்தவர். பார்வதிக்கு நெருங்கினவர். தன்மேல் பாசம் உள்ளவர். அப்படிப்பட்ட ஒருவரின் உதவியை நாடினுல் என்ன? நிலேமையை எடுத்துச் சொன்னுல் நிச்சயமாகக் கரம் நீட்டிக் காப்பாற்றுவார்....

அவன்: '''அந்த 7 நாட்கள்' படத்தின் கதை என்னடா?''

இவன்: ''நான் இன்னும் படம் பார்க்கலே! மாதத்தின் கடைசி வாரத்தில் சிங்கள் டீக்குக் கூட சில்லறையில்லாமல் கஷ்டப்படுகிற என்.ஜி.ஓ.வைப் பற்றிய கதையாக இருக்கலாம்!''

உ. ராஜாஜி

வேகமாக ஃபோன் இருக்கும் இடத்து ஓடினுள்.

''ஹ லோ! கோவிந்தராஜாச் ஹியர்.''

''ஹலோ ஸார் ப்ரியா பேசறேன் ஸார் புதுசா ஒரு விஷயம் மு சிருக்கு. எனக்கு.... எனக்கு.... ரொம் பயமா இருக்கு ஸார். நீங்கதான் ஹெல் ஹெல்ப் பண்ணணும்.''

''என்ன ப்ரியா என்ன ஒன் குரலே மாதிரியா இருக்கே. எனிதிங் ராங்?''

''ஸார்.... நா'.... நா'.... ஸார். ஃபோன்லே அதைச் சொல்ல முடியா ஸார். நேரிலே பார்த்துத்தான் அ சொல்லணும். ஒங்களே உடனே பா கணும் சார்.''

சில நொடிகள் இருவருமே மௌனமா இருந்தார்கள்.

''ப்ரியா... என்னம்மா ஆச்சு ஏதாவ ப்ராப்ளமா உயிலேப் பத்தி....''

''இல்லே ஸார்... இது அதைவிட பெரிசு!''

''அப்படியா! நான் அங்கே வரட்டும அம்மா''

''இல்லே ஸார். நானே அங்கே வரேன் அதுதான் எல்லாருக்குமே நல்லது...''

டிங் டாங்! டிங் டாங்!

வாசற் கதவு மணி ஒலமிட்டது. ந நடுங்கிப் போன ப்ரியா ஃபோனே அ படியே கீழே வைத்து விட்டாள். கிரிஷ் பாவி அதற்குள் வந்து விட்டானே...

வேகமாக ஓடிப்போய் வாசல் கதவை திறந்தாள். அவளேக் கண்களாலேயே கரைத்துக் குடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தான் கிரிஷ். லேசாக அவள் கன் னத்தைக் கிள்ளினுன்.

ஃபோன் திடீரென்று அலறத் தொடங் கியது!

''ப்ரியா அந்தக் கால் எனக்காகத்தான் இருக்கும். நம்ம டாக்டர் அந்தப் பெரிய ஆளோடு பேசிட்டு என்னேக் கூப்பிடறேன்னு சொன்னுர். கால நானே அட்டன்ட் பண் றேன். நீ குடிக்கறதுக்கு ஏதாவது கொண்டு வா.''

ப்ரியாவுக்கு உடல் நடுங்கியது.

''ஹலோ... யாரு மிஸ்டர் சாரியா! கிரிஷ் பேசறேன் ஸார்... என்ன ப்ரியா வோட பேசணுமா? ஓஹோ மம்மி உயில் விஷயமாவா? பேசுங்க பேசுங்க...

''ப்ரியா... ப்...ரி...யா.... ஒனக்கு.... ஃபோன்....'' கிரிஷ் கத்துவது அவளே மீண்டும் இந்த உலகத்துக்கு அழைத்து வந்தது. சமையல் அறையிலிருந்து ஒரு வெள்ளிடம்ளரில் மோரை எடுத்துக்கொண்டு வந்து அவனிடம் கொடுத்தாள். அவன் அதை உறிஞ்சிக் குடித்துக் கொண்டே ஃபோனுக்கு அருகிலேயே நின்றுன்!

''ஹலோ ப்ரியா ஹியர்'' — அவள் குரல் கடலுக்கு அடியிலிருந்து பேசுவது போல் இருந்தது.

''ப்ரியா நான்தான்...அங்கே என்னம்மா நடக்கறது? நீ வந்து....''

''நான் வரேன் ஸார்... அந்த ப்ரோபேட் மேட்டர், அந்த பாங்க் அக்கவுண்ட்டு... கொஞ்சம் ஹர்ரி பண்ணுங்கோ ஸார்...''

''ப்ரியா நீ என்ன... ஓஹோ அவன் பக்கத்துலேயே நிக்கறுனு புரிஞ்சுடுத்து. ப்ரியா நீ உடனே வா.. சமாச்சாரம் எதுவா இருந்தாலும் நீ தைரியமா இரு. நான் இருக்கேன்... மேலே பகவான் இருக்கார்....'' ஃபோனை வைத்து விட்டார் அவர்.

''ப்ரியா, அந்த வக்கீல் என்ன சொல்றுர்? நீ உடனே கிளம்பிப் போ. இந்த வக்கீலுங்கள்ளாம் ஸ்குரூ கொடுத்துண்டே இருந்தாத் தான் வேலை செய்வாங்க.'' கிரிஷ் ஃபோனை அவள் கையிலிருந்து எடுத்து வைத்தான். அவளை இறுக அணைக்க முயன்றுன்.

''கிரிஷ் நோ...ப்ளீஸ் இப்ப நான் அந்த மூட்லே இல்லே... ப்ளீஸ்... சாரி வேறே ஒடனே வரச் சொல்லி யிருக்காரு. இதெல்லாம் அப்புறம் வெச்சுக்கலாம். நான் எங்கே ஓடியா போப்போறேன்.''

''என்ன ப்ரியா இது... ரொம்ப ஓல்டு மாடலா இருக்கியே... ''என்று கூறி, கிரிஷ் பேசாமல் தன் அறையை நோக்கிச் சென்றுவிட்டான்.

நேராகத் தன் அறைக்குச் சென்று படுக்கையில் சாய்ந்து விட்டாள். சற்றுநேரமாவது ஓய்வு எடுக்க நினைத்தாள். முடியவில்லை.

''ப்ரியா!''

கண்களைத் திறந்து கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். படுக்கை அறைக் கதவருகே கிரிஷ் நின்று கொண்டிருந்தான். அழுத்தமான நீல நிற பாண்டும், உடலைக் கவ்விய வெள்ளை 'டி' ஷர்ட்டும் அணிந்திருந்தான்.

''ப்ரியா நான் கெளம்பறேன்.., திரும்பி வர்ரதுக்கு ரொம்ப லேட்டாகும்னு நெனக்கிறேன். தலைக்கு மேலே வேலை இருக்கு... அதான் மம்மி பணம் விஷயம். அதை கவனி, அதுதான் ரொம்ப முக்கியம்.''

''வந்து... மம்மியோட வில் எனக்கு வேணுமே. வக்கீல் கிட்டக் கொடுக்கறதுக்கு. நான் அன்னிக்கு ஒங்க ரெட் பாக்ஸ்லே வெச்சேன். ஞாபக மிருக்கில்லே. காலேலேயே கேக்கணும்னு நெனச்சேன். மறந்துபோச்சு.''

''ஓ மறந்தே போச்சு ப்ரியா. மம்மி ஸ்டீல் ஸேஃப் இருக்கே அவுங்க ரூம்லே, அதுலெ வெச்சிருக்கேன், அந்த உயிலே. அங்கதான் இருக்கும். தேடிப்பார்த்து நீயே எடுத்துக்க'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான்.

பார்வதியின் உயிலை சேஃப்புக்குள்ளே தேட ஆரம்பித்தாள். அந்த ஆபரணப்பெட்டிகளை ஒவ்வொன்றுக வெளியே எடுத்து வைத்தாள். ஒரு பெட்டியைத் தவிர மீதி யெல்லாமே பூட்டப்பட்டிருந்தன.

பூட்டப்படாமல் இருந்த பெட்டியைத் திறந்தாள். உள்ளே கத்தை கத்தையாகப் பத்து ரூபாய் நோட்டுகள்!

உயிலை மீண்டும் தேடினுள். காகிதங்கள், டவல்கள், ஸ்கார்ஃபுகள் இவைகளுக்குப் பின்னுல் அடைத்து வைக்கப் பட்டிருந்தது, அந்த நீல நிறக் கவர். அவசர அவசரமாக அதை வெளியே எடுத்தாள். அத்துடன் பா கிழிந்திருந்த ஒரு பெரிய கவரும் வெளியே வந்து தரையில் விழுந்தது! அதன் உள்ளேயிருந்ததெல்லாம் வெளியே வந்து விழுந்தன.

எல்லாமே லேசான மஞ்சள் படிந்த காகிதங்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கடிதங்கள்! தரையில் முட்டி போட்டு உட்கார்ந்து கொண்டு அந்தக் கடிதங்களை முறைத்துப் பார்த்தாள். எல்லாக் கடிதங்களிலும் ஒரே மாதிரி கையெழுத்துத் தான் இருந்தது. அத்தனை கடிதங்களையும் எழுதியவர் ஒருவரே. ஒரு கடிதத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தாள். கடிதத்தின் முடிவில் அழகான கையொப்பம்... மல்லிக்! பார்வதியின் ராணுவ வீரக் கணவன்!

(தொடரும்)

தீர்ப்பு

நீதிபதி: தீர்ப்பு வழங்கு முன்னர் நானே நாடகத்தை ஒரு தடவை பார்த்துவிட்டேன். என்னைப்போல ஒரு ஜட்ஜைக் கொஞ்சம் அச்சுப் பிச்சு காரெக்டரா உருவாக்கியிருந்த போதிலும் அது என் ஜட்ஜ்மெண்டைப் பாதிக்க நான் விடப்போவதில்லை. சுஜாதா டாக்டர்களுக்குச் சாதாரணமாக ஏற்படும் பிரச்னைகள் மூன்றை எடுத்து அலசியிருக்கார். கருணைக் கொலை, கருச் சிதைவு; புதிய மருந்தை நோயாளி மீது பரீட்சித்தல் ஆகிய இவை சில சந்தர்ப்பங்களில் நியாயமாகும் என்று எடுத்துச் சொல்லி யிருக்கார். ஆனல் அவருடைய பிரதான தாக்குதல் வேறே. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து தாங்க முடியாமல் போய்க் கோபம் பொத்துக்கொண்டு வர, லஞ்ச ஊழல் அசுரன் மேலே பாய்ந்து பிராண்டி யிருக்கார்! இப்படி நாடகம் எழுதியதால் சமுதாயத்தைத் திருத்துவதில் உடனடியாக வெற்றி கிட்டாவிட்டாலும் கலைப் படைப்பு என்ற அளவில் அடையும் வெற்றி, மனச் சோர்வு ஏற்படா திருக்க டானிக்காய் அமையும். முயற்சியைக் கைவிடாதிருக்க உதவும்.

எனவே, இதுபோல மேலும் பல நாடகங்களை சுஜாதா எழுதிக் குவிக்க வேண்டும் என்று கடுமையான தண்டனை விதிக்கிறேன்!

-குட்டிகிருஷ்ணன்

யூ.எல்.ஐ.பி. +

பாதுகாப்புக்கு மறு பெயர்



அனைத்தும் அடங்கிய ஒரே சேமிப்புத் திட்டம்

மற்ற திட்டங்களைவிட பல்வேறு நன்மைகளைக் கொண்ட சிறந்ததொரு திட்டம்தான் யூ.எல்.ஐ.பி. +. உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் பாதுகாப்பு அளிக்கும் சேமிப்புத் திட்டம்.

யூ.எல்.ஐ.பி. + ன் நன்மைகள்

- உயர்ந்த வருமானம். உங்கள் சேமிப்புத் தொகை ரூ. 12000 திட்ட முடிவில் (10 ஆண்டில்) ரூ. 18000 மாகவும் (15 ஆண்டில்) ரூ. 22000 மாகவும் உயர்ந்து விடுகிறது.
- வரிச்சலுகை. இத்திட்டத்தில் முதலீடு செய்யும் உங்கள் தொகைக்கு பூரண வருமான வரி விலக்கு உண்டு.
- விபத்து பாதுகாப்பு. நீங்கள் எடுக்கும் திட்டத்தின் மதிப்பு எதுவானாலும், ரூ. 15000 வரை உங்களுக்கு விபத்து பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.
- ஆயுள் பாதுகாப்பு. நீங்கள் சேரும் திட்டத்தின் தொகைக்கு சமமாக உங்களுக்கு ஆயுள் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மருத்துவ பரிசோதனை தேவையில்லை.
- ரூ. 24000 வரை சேமிக்கலாம். ரூ. 12000க்கு ஒரு திட்டமும் அதிலிருந்து 3 வருடங்கள் கழித்து அதே தொகைக்கு மற்றுமொரு திட்டமும் எடுத்துக் கொள்ளலாம்.

பாதுகாப்பான வாழ்க்கைக்கு இன்றே யூ.எல்.ஐ.பி. திட்டத்தில் சேர்ந்திடுங்கள்.

இதர விபரங்களுக்கு எங்களையோ அல்லது எங்கள் ஏஜெண்டுகள் மற்றும் தலைமை பிரதிநிதிகள் அல்லது உங்களுக்கு அருகிலுள்ள பாங்க் ஆப் பரோடாவின் கிளைகளையோ அணுகுங்கள்.

எங்கள் தலைமை பிரதிநிதிகள் :

ஏ. தனபால், 10 ஜே. ஹ"ஸ"ர் ரோடு, கோயம்புத்தூர் 641 018. போன் : 34776 (கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களுக்காக)

எம். ராமமூர்த்தி, 30, எல்.ஐ.சி. காலனி, மதுரை-625 002 (மதுரை மாவட்டத்துக்காக)

கே. முத்துசாமி, 52-ஏ, வ.உ.சி. நகர், தஞ்சாவூர்-613 007. போன் : 1224 (தஞ்சாவூர் மாவட்டத்துக்காக)

UNIT TRUST OF INDIA

யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா

(ஒரு பொதுத்துறை நிதி நிறுவனம்) தலைமை செயலகம் : பம்பாய்-20

தெற்கு பிராந்திய செயலகம் :
ரெஜினா மேன்ஷன், 46, செகண்ட்லைன் பீச், சென்னை-600 001. தொலைபேசி : 27433

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாகவே இருக்கட்டும்

UTI-62-81-Tam

இதோ! வீட்டிலேயே செய்தது போன்ற ருசியான ஊறுகாய்!
இனிமேல் சிரமம் உங்களுக்கு இல்லை...
ருசி
புதியது!
ஊறுகாய்கள்
வீடுகளில் வழக்கமாகச் செய்யப்படும் ஏழு வித சுவைகளில்...
உண்மையை ஒத்துக்கொள்வோம்—நம் வீட்டுப் பெண்கள் ஊறுகாய்களை மிகவும் நன்றாகச் செய்கிறார்கள். ஆனால், இப்போது அதைப் போலவே ருசியான ஊறுகாய்களை உங்களுக்கு வழங்குகிறது ருசி. சுவையான, காரமான, வாசனை மிக்க ஊறுகாய்களை இப்போது மிகவும் எளிதில், உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு மகிழலாமே! வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்பட்ட பொருள்களில், தூய்மையானவற்றை மட்டுமே, மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுத்து, ருசி ஊறுகாய்கள் தயாரிக்கப்படுகின்றன. எல்லோரையும் திருப்திப்படுத்த, ஏழு விதமான சுவைகளில் தயாரிக்கப்படுகிறது—ருசி!
• மாங்காய்
• இஞ்சி
• எலுமிச்சை
• இனிப்பு மாங்காய்
• தக்காளி
• பூண்டு
• கோங்குரா
Ruchi PICKLES
ருசி ஊறுகாய்கள்
Ruchi
வீட்டிலே தயாரித்தது போன்ற சுவை— செய்யும் சிரமம் சிறிதும் இல்லை.
ருசி ஃபுட் பிராடக்ட்ஸ்
57-A மௌபரீஸ் ரோடு, சென்னை 600 018
HTM-RFP-2626

ப்ரியா தரையில் சிதறிக் கிடந்த கடிதங்களை வெகு நேரம் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஏதோ ஒரு பயங்கரப் பள்ளத்துக்குள்ளே எட்டிப் பார்ப்பதுபோல ஓர் உணர்ச்சி அவளை ஆட்கொண்டது. கிரிஷைப் பற்றிய உண்மை அந்தக் கடிதங்களில் பதுங்கி யிருப்பதாக அவளுக்குப் பட்டது. அக்கடிதங்களைப் படித்தால்தான் உண்மை விளங்கும். ஆனால்... பிறருடைய கடிதங்களைப் படிப்பது நாகரிகமாகாது அல்லவா? அதிலும் ஒரு மனைவிக்குக் கணவன் எழுதிய கடிதம். காதல், பாசம், அன்பு, இவைகளையெல்லாம் கடைந்து அதில் வெண்ணெயை எடுத்து அதை நெய்யாக்கி... அந்த நெய்க்கு நிரந்தர வடிவத்தைக் கொடுத்துக் கடிதங்களாக்கி.... அப்படிப்பட்ட கடிதங்களைப் படிப்பதா? அதிலும் பார்வதியும், மல்லிக்கும் மறைந்த பிறகு அவர்கள் வாழ்ந்த உலகில் திரையை நீக்கி, ஜன்னல் வழியாக எட்டிப் பார்ப்பதா?... சற்று நேரம் ப்ரியா குழம்பினாள். படிப்பதா கூடாதா என்ற பிரச்சினை அவள் முன் மகுடி ஊதாமலே படமெடுத்து நின்றது. அப்போது அவள் உள்ளிருந்து சத்தமின்றி ஒரு குரல்... கடிதங்களைப் படிப்பதில் தவறில்லை! தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கிரிஷைப் பற்றிய உண்மையை அறிய இந்தக் கடிதங்கள் திறவுகோலாகப் பயன் தரும். பார்வதியே அதைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாள்..

ப்ரியா எல்லாக் கடிதங்களையும் அடுக்கினாள். அவைகளை எடுத்துக் கொண்டு வேகமாகத் தன் படுக்கை அறைக்கு ஓடினாள். அறையின் கதவைச் சாத்திவிட்டுத் தன் படுக்கையில் வந்து உட்கார்ந்தாள். கொண்டு வந்த கடிதங்களைத் தலையணைக்குக் கீழே வைத்துவிட்டு ஒவ்வொன்றாக எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள். கடிதங்கள் பல ஊர்களிலிருந்து எழுதப்பட்டிருந்தன. மீரட்... பூனா... பெங்களூர்... அம்பாலா... ஒரு மனைவிக்கு ஆசையுடன் கணவன் எழுதிய கடிதங்கள். பல இடங்களிலிருந்து வெவ்வேறு சமயங்களில் எழுதிய கடிதங்கள்... ராணுவத்திலிருக்கும் நண்பர்களைப் பற்றிய வம்புப் பேச்சுக்கள்... விருந்துகள்... கேளிக்கைகள் — இவை களைப் பற்றிய பரபரப்பான தகவல்கள்... மல்லிக் என்ன எழுத்தாளரா? அப்படி இருந்திருந்தால் பார்வதி பலமுறை சொல்லியிருப்பாளே?

அதில் ஒரு கடிதம். அதிலிருந்த எழுத்துக்கள் அவள் மீது தாவித் தாக்குவது போல ஒரு பிரமை. படிக்கப் படிக்க அவள் விரல்கள் நடுங்க ஆரம்பித்தன. கண்களும் விரிந்தன... ''டியர் பாரு... நான் மெட்ருஸ்லே இருந்து ஒன்னைத் தாங்கிப் பிடிச்சுக்கிட்டே இருக்கணும் போலத் தோணுது. பாரு ஒனக்கு டாக்டர் மல்ஹோத்ராவை ஞாபகம் இருக்கா... ஒன்னை அவருக்கு நல்லா ஞாபகம் இருக்கு. ஒன்னோட எல்லா ரிப்போர்ட்ஸையும் அவர் கிட்டக் காட்டினேன். எல்லாத்தையும் கேர்புல்லா ஸ்டடி பண்ணுரு... பாவம் டாக்டர் மல்ஹோத்ரா. விஷயத்தை எப்படிச் சொல்றதுன்னு என்னமாத் துடிச்சார் தெரியுமா? பாரு விதி இவ்வளவு விபரீதமா விளையாடும்னு நான் நினைக்கவே யில்லை. நம்ம பூந்தமல்லி ஹைரோடு டாக்டர் சொன்னது ரொம்பக் கரெக்டுன்னு சொல்ருரு டாக்டர் மல்ஹோத்ரா. பாரு நீ எதைப் பத்தியும் கவலைப் படாதே. நான் ஒனக்குக் குழந்தையா இருக்கேன். நீ எனக்குக் குழந்தையா இரு. இருப்பே. நாம கொடுத்து வெச்சது அவ்வளவுதான். பாரு ஒனக்கு ஒடம்பு நல்லாக் குணமாகிற வரைக்கும் மெட்ருஸ்லேயே இரு. நான் அடிக்கடிஒன்னை வந்து பாக்கறேன். நடந்ததை நெனச்சி சும்மா அழுதுக்கிட்டு இருக்காதே. அதனாலே ஒன் ஒடம்பு இன்னும் கொஞ்சம் கெடும். அவ்வளவுதான். லைஃப்லே நமக்கு என்னென்னவோ கெடைச்சுது. எல்லாம் கெடைக்காது. பாரு என்னை நீ புள்ளையா நெனச்சிக்கோ, மனசைத் தேத்திக்கோ. மாமாவைக் கட்டாயமா அடிக்கடி லெட்டர் போடச் சொல்லு. நல்லா தூங்கு பாரு. அதுதான்



ஒன் ஒடம்பைக் கொணப்படுத்தும். நான் சீக்கிரம் அங்கே வரேன். எதைப் பத்தியும் கவலைப்படாதே. யுவர்ஸ், மல்லி.''

ப்ரியா அப்படியே மலைத்துப் போய் விட்டாள். உண்மை அவளை உலுக்கிவிட்டது. பார்வதிக்குக் குழந்தையே கிடையாதா? அவளுக்குக் குழந்தையே இருந்திருக்க முடியாதா? அப்படி என்ருல் பார்வதி தனக்கு ஒரு மகன் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு வாழ்ந்து வந்தாளா? ஆம்! சந்தேகமில்லை. அதுதான் உண்மை. பார்வதிக்குக் குழந்தை கிடையாது. கிரிஷ்! அப்படி யாருமே இருந்ததில்லை. பார்வதியின் கற்பனையில் தவிர. கிரிஷ் சதை, எலும்பு, ரத்தம், இதயத் துடிப்பு – இவைகளின் கலவை அல்ல. பார்வதியின் கற்பனையில், கனவில் பிறந்து வளர்ந்து மடிந்தவன். தனக்குக் குழந்தை பிறக்காது என்று டாக்டர்கள் சொன்னபோது பார்வதியின் மன நிலை முறிந்து தெறித்திருக்க வேண்டும். அந்தப் பயங்கர உண்மையின் விளைவுதான் இந்தக் கற்பனை மகன். பாவம், பார்வதி. அவள்

வாழ்க்கையில் இப்படி ஒரு கொடூரமான ரகசியமா?

டாக்டர் ஆனந்த் எவ்வளவு பயங்கர மான வில்லன்! பணத்தாசையினுல் பார் வதியை ஏமாற்ற என்ன துணிச்சல், துணிவு அவருக்கு.? சே! இவ்வளவு மட்டமானவரா டாக்டர்! மனநிலை சரியில்லாத ஒருத்தியை, தன்னைப் பரிபூரணமாக நம்பி, வைத்தியம் பார்க்க அழைத்த ஒரு நோயாளியை... இந்த அளவுக்கா ஏமாற்றுவது? என்ன நடந் தாலும் எதிர்ப்பு எதுவாகஇருந்தாலும் அவர் களின் போர்வைகளைக் கிழித்தெறிய வேண் டும்...

"ப்ரியா, அந்த வக்கீல் சாரி என்ன சொன் ஞரு? எல்லா விஷயத்தையும் கிடுகிடுன்னு முடிக்கச் சொன்னியா?'' கிரிஷ் பூரியை மென்றுகொண்டே பேசினுன். அவனும் ப்ரி யாவும் மேசையில் அமர்ந்து கொண்டு சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள். பூரி யைக் குருமாவில் தோய்த்துத் தோய்த்து அதை நான்காக மடித்து அப்படியே வாயில் போட்டு கிரிஷ் மெல்லுவதைப் பார்க்கும் போது ப்ரியாவுக்குச் சற்று அருவருப்பாகவே இருந்தது. மீஞ்சூர் கோவிந்த ராஜாச் சாரி யுடன் நடந்த நீண்ட சந்திப்பு... மல்லிக்கின் கடிதங்களைப் பார்த்தபொழுது, அவர் முகத் தில் ஏற்பட்ட அதிர்ச்சி மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும்... தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் சொன்ன அறிவுரைகள்...

''கிரிஷ்! எல்லாப் பேப்பர்ஸையும் அவர் கிட்டக் கொடுத்தாச்சு. செங்கற்பட்டு டிஸ் டிரிக்ட் கோர்ட்லே ஃபைல் பண்ணணுமாம்! அதுக்கு வேண்டியதெல்லாம் உடனே செய்ய றேன்னு சொன்ஞரு.''

''அது சரி. அதெல்லாம் எவ்வளவு நாளா கும்? ஒனக்குத் தெரியும் ப்ரியா. எல்லாமே மம்மி பேர்லே இருக்கு. நம்ம பேருக்கு மாத் திக்காம ஒரு ரூபா கூடத் தொட முடியாது. இப்ப உடனே நம்ம கல்யாணம் நடக்கணும். நம்ம ஹனிமூன் போகணும். வீட்டுச் செல வையும் கவனிக்கணும்... ஆமா ப்ரியா நீ வீட்டுச் செலவை எப்படிச் சமாளிக்கிறே?''

''வீட்டுல எல்லாமே இருக்கு. அரிசி, கோதுமை, அனைத்துப் பொருள்களும். மம்மி எப்பவுமே ஒரு மாசத்துக்கு வேண்டிய தெல் லாம் வாங்கிப்போட்டுடுவாங்க. இப்பதானே மாசம் பொறந்தது. நோ ப்ராப்ளம். மாசா மாசம் செலவுக்குன்னு கொஞ்சம் பணம் கொடுப்பாங்க. அதுவும் இப்ப கையிலே இருக்கு.''

''ப்ரியா, டாக்டர் சொன்ஞரு, நான் சில காகிதங்கள்ல கையெழுத்துப் போட ணும்னு....''

''தேவையில்லே. வக்கீல் சாரி சொல்ருரு ஒருத்தர் போட்டாப் போதும்னு. ஆஞ அஃபிடவிட்டுலேகையெழுத்து போடணும்!''

''அஃபி.... அஃபி.... என்னது அது?''

''அஃபிடவிட்.ஏதோ லீகல் டாகுமெண்ட் போலத் தெரியுது. அது என்ன ஏதுன்னு வக்கீல்களுக்குத்தான் புரியும். அவர் ரெடி பண்ணி வெப்பாரு. நீங்க போய் ஸைன் பண்ணிட்டு வாங்க.''

''ஓகே... ஓகே. அவர் என்னிக்குச் சொல் ருரோ அன்னிக்கு ரெண்டு பேருமாப் போவோம். ப்ரியா! இன்ஞெனறு! நான் நாளைக்கு காலேலே டாக்டரோட வெளிலே போறேன். சாப்பாட்டுக்கு வரமாட்டேன்.''

மறுநாள் காலே தன் வேலேகளை யெல்லாம் முடித்துக்கொண்டு ப்ரியா கோவிந்த ராஜாச் சாரியைப் பார்க்கச் சென்ருள். அவர் குளித்துவிட்டு பூஜையை முடித்துக்கொண்டு தம் ஆபீஸில் உட்கார்ந்து கொண்டார். ப்ரியாவைப் பார்த்த உடனே வெள்ளி டம்ளரில் காப்பி வரவழைத்தார்.

''நீங்க அந்தக் கடிதாசுகளைப் பார்த் தேளா?''

''அந்த லெட்டர்ஸ்தானே? ஒரு லேன் விடாம எல்லாத்தையும் படிச்சாச்சு. பாவம் படிக்கறதுக்கே ரொம்பக் கஷ்டமா இருந்த தும்மா. பாவம் புண்யவதி பூட்டா.

வற்ருத ஊற்று!

என் தந்தையின் மிக நெருங்கிய நண்பர் தாம் பரத்தில் ஒரு மனை வாங்கி வீடு கட்ட உத்தேசம் செய்து ஆபீஸில் கடனுதவியும் வாங்கி விட்டார்.

வீடு முடிவதற்கும் கோடை வருவதற்கும் சரியாக இருந்தது. கிணறு எங்கு வெட்டுவது என்று முடிவு செய்து இருந்தாரோ அங்கு கிணறு வெட்ட ஆரம்பித்தார். கிணறு ஆழம் போய்க் கொண்டே இருந்தது. ஆனுல் தண்ணீர் ஒரு சொட்டுக்கூடக் கண்ணில் படவே யில்லே.

இந்தக் கவலேயுடன் அலுவலகம் சென்று வரும் போது மின்சார வண்டியில் எதிர் சீட்டில் அமர்ந் திருந்த இருவர் சத்ய சாயி பாபாவின் மகிமையைச் சொல்லிக் கொண்டிருந்தார்களாம். உடனே இவ ருக்குத் தாமும் போய் பகவானைத் தரிசனம் செய்து தம் குறையைச் சொல்ல வேண்டும் என்று தோன்றி உடனே புட்டபர்த்தி சென்று இரண்டு நாள் பூஜையில் அமர்ந்தார். சுவாமி இவரைக் கூப்பிட்டுத் தனியாகப் பேசினுர்.

விஷயத்தைச் சொன்னதும் ஸ்ரீ பாபா அவர்கள் சிரித்துவிட்டு விபூதியைப் பொட்டலமாக மடித்து அதைக் கிணற்றுக்குள் போட்டுவிட்டுப் பிறகு தோண்டச் சொல்லி ஆசீர்வாதம் செய்து அனுப் பினுர். இவரும் மிக்க மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு வந்து அவ்வாறே செய்தார். என்ன அதிசயம்! எங்கு இருந்துதான் அப்படி ஊற்றுக் கிளம்பித் தண்ணீர் வந்ததோ தெரியவில்லே. அந்தக் கிணற் றில் எந்தக் கோடை வந்தாலும் ஜலம் வற்று வதே இல்லே.

- எல். சாந்தி

ஹரித்துவாரில் கங்கையில் மிதந்து செல்லும் தீபங்களைப் போல் மனிதன் ஒளி மயமானவனுகவும் பாரமற்றவனுகவும் இருக்க வேண்டும். உலக ஆசைகள் என்ற பாரத்தைத் தூக்கி வைத்துக்கொள்ளக் கூடாது. சுமை கூடினுல் தீபம் மூழ்கும், ஒளி மறையும்.

அம்மா ஆகணும்னு ஆசை. அதுக்கு பகவான் கிருபை பண்ணலே. இவளுக்குக் கொழந்தெ பொறக்கலே. குழந்தையே பொறக்காதுன்னு தெரிஞ்ச உடனே இவளுக்குச் சித்தப்பிரமை புடிச்சிடுத்து. தனக்கு ஒரு புள்ளை இருக்கான் — அப்படீன்னு இமாஜின் பண்ணிண்டிருந்திருக்கா. அப்படியெல்லாம் சில பொம்மனாட்டிகளுக்கு ஏற்படறதுண்டு. ஆச்சரியம் இல்லே. அதனாலே அவ பைத்தியம்னு பட்டம் கட்டிட முடியாது. பார்வதி என்ன கல்லை எறிஞ்சாளா, இல்லேரவிக்கையெக்கிழிச்சுண்டு ரோட்டிலே ஓடினாளா? ரெண்டும் இல்லே... என்ன மோம்மா ப்ரியா நீ இதுலே நொழைஞ்சிருக்கே. ஜாக்கிரதையா இரு.''

''ஸார், ரொம்ப தேங்க்ஸ் ஸார். நீங்க இந்த அளவுக்கு உதவி பண்றதை நான் ஒரு நாளும் மறக்க மாட்டேன் ஸார்.''

ப்ரியா வழக்கம் போல் கோவிலுக்குச் சென்றுவிட்டு வழியில் தேவையான சில-வற்றைக் கடையில் வாங்கிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். தன் தெருவில் நுழைந்த உடனே அவள் கண்ணில் பட்டது ஒரு கார். டாக்டர் ஆனந்துடையது. அந்த வண்டி தன் வீட்டிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தது. டாக்டர் ஆனந்தும் கிரிஷும் முன் சீட்டில் உட்கார்ந்திருப்பதை அவளால் தெளிவாகவே பார்க்க முடிந்தது.

பங்களாவின் வாசற் கதவு பூட்டித்தான் இருந்தது. அதைத் திறந்து கொண்டுஉள்ளே சென்றவுடன் ப்ரியாவுக்கு ஒரு அதிர்ச்சி! ஹாலில் ஒரு தாழ்வான மேசையின் மேல் ஒரு காலி புட்டி. அதற்கருகில் இரண்டு கண்ணாடி டம்ளர்கள். பக்கத்தில் ஒரு தட்டு. அதில் சின்னச் சின்ன எலும்புகள். கிரிஷும் ஆனந்தும் தான் வெளியில் சென்றிருந்த போது உள்ளே வந்து குடித்துக் கும்மாளம் அடித்திருக்கிறார்கள். கிரிஷிடம் சாவி ஏது? ஒருவேளை அவளுக்குத் தெரியாமல் மாறு சாவி தயார் செய்து வைத்திருக்கிறானோ? அவளுக்குக் கழுத்தில் வியர்க்கத் தொடங்கியது.

''ப்ரியா.... ப்ரியா.... என்ன இருட்டுலேயே படுத்துக்கிட்டு இருக்கே. அதுவும் இங்கே. வாசல் கதவு வேறே தொறந்திருக்கு. என்ன ஆச்சு ஒனக்கு?'' கிரீஷ் ஹாலில் இருட்டில் நின்றுகொண்டு படபடப்புடன் பேசினான்.

''ஓ நீங்க வந்தாச்சா கிரிஷ். ஒடம்பெல்லாம் வலிக்குது. ஃபீவரிஷ்ஷா இருக்கு.''

அருகில் வந்து அவள் நெற்றியையும் தொட்டுத் தடவிப் பார்த்தான். ''சூடாத்தான் இருக்கு ப்ரியா. ஜொரம் வந்திருக்குன்னு நெனைக்கிறேன். நான் காலேலே நம்ம டாக்டருக்குப் போன் பண்றேன். அவர் வந்து பாக்கட்டும். ஏதாவது மருந்து கொடுப்பாரு சரியாப் போயிடும். நான் போய்ப் படுக்கறேன். நீ கதவெல்லாம் சாத்திட்டுத் தூங்கு.''

கருணை முகில் பாபா

இளங்கம்பன்

ஞானசொரூபமாய் நாளும்விளங்கிடும்
நல்லருளின் வடிவம்
மோனச் சிறப்பினில் மூழ்கி எழுந்துமே
முழுமைதரும் சோதி

வேதமொழிகளில் கீதம் இசைத்திடும்
வேகப்பெரும் ஆழி
ஓத உணரஉயிரில் அளாவிட
உரைகள்தரும் ஊற்று

தூக்கிய கைகளில் துயரை அழிக்கின்ற
தூய அருள் நிலவு
காக்கும் நலத்தினில் கனிந்தே
அழைத்துமே
கருணைபொழி மேகம்

நீதப்பே ரின்பத்தில் நீந்திக் களிக்கின்ற
நிறைவின் தனிக் காட்சி
பாதம் பணிவோர்பவங்களைப்
போக்கிடும்
பாபாஅருள் ஆட்சி

மறுநாள் காலை. எட்டு மணி. ஜன்னல் வழியாகக் காற்று வீசிக் கொண்டிருந்தது. ப்ரியா ஒருகம்பளியால் கழுத்து வரை தன்னை மூடிக் கொண்டு படுத்திருந்தாள். சில நிமிடங்களுக்கு முன்பு அங்கு வந்த டாக்டர் ஆனந்த் தம் தோல் பையைத் திறந்து தர்மா மீட்டரையும் ஸ்டெதாஸ் கோப்பையும் வெளியே எடுத்து அவளைச் சோதித்தார்.

''ப்ரியா டெம்பரேச்சர் ஒண்ணுமில்லே. பல்ஸ் ரேட்டுதான் கொஞ்சம் ஜாஸ்தியா இருக்கு. இதுக்கெல்லாம் டென்ஷன்தான் காரணம். இதுல ரெண்டு டேப்லட்ஸ் இருக்கு. இன்னிக்கு ராத்திரி தூங்கறதுக்கு முன்னாடி ஒரு கிளாஸ் சூடான பாலோடு சாப்பிட்டுடு... நாளைக் காலைலெ எல்லாம் சரியாயிடும். இதே நேரத்திலே நான் நாளை வந்து பார்க்கிறேன். நத்திங் டு ஒர்ரி ப்ரியா.''

ப்ரியாவின் முதுகில் தட்டிவிட்டுப் பையை எடுத்துக் கொண்டு வெளியே சென்றார். கிரிஷ் டாக்டரைப் பின்தொடர்ந்தான்.

ப்ரியா மாத்திரைகளை வெளியே எடுத்தாள். அவள் முகத்தில் சிரிப்புப் படர்ந்தது. அவள் கையிலிருந்த இரண்டு மாத்திரைகள் அதே நிறம், அதே அளவு. அதே வாசனை. சந்தேகமில்லை. டாக்டர் ஆனந்த் பார்வதிக்குக் கொடுத்த அதே இரண்டு மாத்திரைகள். பார்வதி தன் கடைசி இரவில் சாப்பிட்ட இரண்டு மாத்திரைகள்!

(தொடரும்)

என்னை நீ நம்பவில்லையா வேண்டாம். கடவுளை நம்பவில்லையா? பரவாயில்லை. உன்மீது உனக்கு நம்பிக்கை உண்டெனில் அதுவே போதும். ஏனெனில், உண்மையில் நீ யார்? உனக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் நீயும் தெய்வமே.



சிறந்த ரகங்கள். சரியான விலை.

என்டஸ்

அதிகாரப்பூர்வமான ஏஜெண்டுகள்: (தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) ஜே அண்டு ஜே எண்டர்பிரைசஸ், 14/F1 அன்சாரி தெரு, ராம்நகர், கோயமுத்தூர் 9. செமி ஹோல் சேல் டிப்போக்கள்: சென்ட்ரல் டிஸ்டிரிபியூஷன்' டிப்போ, C.S.&W. மில்ஸ் காம்பவுண்டு, கோயமுத்தூர் 1.

ஒப்பிட்டுப்பார்க்க, உடனுேத்த பானங்களின் விலைகள் (ரூ.). வளையாக் கலத்துப் பேக்கிங்.

நியூட்ரமுல். அமுல் படைப்பு. உச்சத் தரத்திற்கு இதுவே உத்தரவாத நற்சாட்சி. கோக்கோ ஆட்சி. ஆரோக்கியமிகு அமுல் பால். அருமையான மால்ட். அத்தியாவசிய வைட்டமின்கள், உலோக தாதுக்கள். ஒருங்கே பலம்பெருக்கும் பண்புகளின் சிகரம்.
இவ்வளவுக்கும் விலை, வேறெதனையும் விட சுமார் 4 ரூபா குறைவு.
மிடுக்குடன் நடப்பீர் நியூட்ரமுல் வீரராய்... மிஞ்சும் பணத்தோடு.



வேறெதனையும்
விட சுமார்
4 ரூபா விலை
குறைவு.

நியூட்ரமுல் விலையோடு ஒப்பிட,
உடனுேத்த பானங்களின் விலைகள் (ரூ.)*
நாந :.ப்ளெக்ஸிபிள் பேக்கிங்

	500 கிராம்	800 கிராம்	1000 கிராம்
நியூட்ரமுல் டின்	13.83	–	26.67
மால்டோவா புட்டி	17.58	–	–
போர்ன்விடா டின்	17.68	26.97	–
பூஸ்ட் புட்டி	18.87	–	–

*'81 மார்ச் நிலவரப்படி, அனுபோகியருக்கான உச்சவிலைகள். தல வரிகள் தனி.

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேட்டிவ மில்க் மார்க்கெட்டிங் :.பெடரேஷன் லிமிடேட், ஆனாத் 388 001

daCunha/81/GCM/53/TM

மறுநாள் காலை சரியாக ஏழு மணிக்கு கிரிஷ் ப்ரியாவின் படுக்கை அறைக்குள் கதவைத் தள்ளிக்கொண்டு நுழைந்தான். அவன் கண்கள் நேராகப் படுக்கையை நோக்கிப் பாய்ந்தன. ப்ரியா வாயைத்திறந்து கொண்டு மல்லாந்து படுத்துக் கிடந்தாள். கம்பளி அவள் உடலைக் கழுத்துவரை மூடி மறைத்திருந்தது. கட்டிலுக்குப் பக்கத்தில் ஒரு முக்காலி. அதன் மேல் ஒரு கண்ணுடி டம்ளர். அதற்கு அடியில் சிறிதளவு பால். இதை எல்லாம் சற்று நேரம் இமை கொட்டாமல் கிரிஷ் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு மெதுவாக நகர்ந்து ப்ரியாவின் நெற்றி, மூக்கு, கன்னம் இவைகளைத் தொட்டுப் பார்த்தான். அவசர அவசரமாகப் போர்வைக்குள்ளே கைகளை விட்டுக் கால் பாதங்களைத் தடவிப் பார்த்தான்.

அவன் கண்கள் அகல விரிந்தன. ஒரு நொடி அப்படியே கல்லாகி நின்று விட்டான். மின்சாரத்தைத் தொட்டது போல் ப்ரியாவை விட்டு விலகி நிமிர்ந்து நின்றான். அவனுக்கு மூச்சு வாங்கத் தொடங்கியது.

ப்ரியா.... அவள் இன்னும் சாகவில்லை! உயிரோடுதான் இருக்கிறாள். நடக்கக் கூடாதது, நடக்க முடியாதது என்று எண்ணியது நடந்து விட்டது....

கைகால்கள் உதற வெளியே ஓடினன், ஹாலை நோக்கி.

''டாக்டர்... ப்ரியா இன்னும் சாகலே! அவ இன்னும் உயிரோடுதான் இருக்கா. நான் தொட்டுப் பார்த்துத்தான் சொல்றேன், உடம்பெல்லாம் சூடாவே இருக்கு...'' அவன் குரலில் பயம், பயங்கரம் இரண்டும் சேர்ந்து ஒலித்தன.

டாக்டர் ஆனந்த் சோஃபாவில் தம் இரண்டு கைகளையும் கோத்தவாறு அமைதியாக உட்கார்ந்திருந்தார். கிரிஷின் வார்த்தைகளைக் கேட் அவருக்கு எந்த விதமாக சலனமும் ஏற்பட வில்லை.

''டேய் ஜம்பு! நீ சொல்ற மாதிரி நடக் முடியாதுடா. ராத்திரி ரொம்ப எக்ஸ் ராவாப் போட்டியா? அதான் இப்ப உளர்றே. டேய் ஜம்பு! என்னுடை மருந் இதுவரைக்கும் ஃபெயில் ஆனதே கிடை யாதுடா. இரு நான் வந்து பார்க்கறேன். கொஞ்ச நேர முன்னுடிச் செத்துருந்தா பாடி இன்னும் கூட சூடாவே இருக்கும். சில நேரங்கள்ல.....

டாக்டர் எழுந்து ப்ரியாவின் படுக்கை அறைக்குள் நுழைந்தார். சற்று நேரம் ப்ரி யாவை உற்றுப் பார்த்துவிட்டு அவள் கண் களைத் திறந்து பார்த்தார்.

''டேய் ஜம்பு!''

''டாக்டர்! என்னெ ஜம்புன்னு கூப்பிடா தீங்க. இப்ப நான் கிரிஷ். நீங்களே இந்தப் புதுப் பேரைக் குடுத்துட்டுப் பழைய பேரைக் கூப்பிடறீங்களே, என்னங்க நீங்க!''

''டேய் லோஃபர் கீப் கொய்ட். டேய் ஜம்பு இவ அந்த மாத்திரையைச் சாப்பிட் டுட்டு உயிரோட இருக்க முடியாதுடா. அந்த ரெண்டு மாத்திரையைச் சாப்பிட்ட வங்க யாரும் இதுவரைக்கும் பொழச்சதே இல்லே.''

''டாக்டர் ஒருவேளை ஒங்க மருந்து இந்தப் பொம்பளை விஷயத்திலே வேலை செய்யலியோ? இவளுக்கு ஒடம்புலே பவுரு ஜாஸ்தியா இருந்தா...''

''டேய் ஜம்பு... டோண்ட் டாக் நான் ஸென்ஸ்... இந்த மாத்திரையைச் சாப்பிட்டாலே குளோஸ் ஆகணும். வேறெ வழியே கெடையாது..... அந்த அம்மாவுக்குக் குடுத்தோமே அதாண்டா ஒங்க மம்மி பார்வதி... அவ பொட்டுன்னு போயிடல்லே?''

''டாக்டர் அந்த அம்மா பூட்டாங்க கரெக்ட். அவ கிழவி... பைத்தியம் வேறே... இந்தப் பொம்பளை சின்னவ கும்முனு கீரா அதான் வேலை செய்யலே. எப்படி.''

''டேய் ஜம்பு ஒளராதேடா. யாரா இருந்தாலும் இதைச் சாப்பிட்டா க்ளோஸ்! நான் கொடுத்துச் சாப்பிட்டவங்க அவ்வளவு பேரும் க்ளோஸ்.''

''டாக்டர் ஒருவேளை இந்தப் பொம்பளை அந்த மாத்திரையைச் சாப்பிடலயோ என்னவோ!''

டாக்டர் ஆனந்த் தலையை நிமிர்த்தி கிரிஷை உற்றுப் பார்த்தார். சற்று நேரம் அங்கு பயங்கர அமைதி ஊசலாடியது.

''ஜம்பு! என்னடா சொல்றே நீ... ப்ரியா மாத்திரையை ஏன் சாப்பிடாம இருக்கணும்? அவளுக்கு நம்மப் பத்தியே, நம்ம ப்ளானைப் பத்தியே ஒண்ணுமே தெரியாதே... நீதான் கிரிஷ், பார்வதியோட காணாமப் போன புள்ளே...அவளோட வருங்காலப் புருஷன் அப்படீன்னு அவ நம்பினாளே... அப்படி இருக்கும்

போது அவள் மாத்திரையைச் சாப்பிடாம இருக்கிறதுக்கு என்ன காரணம்? ஒண்ணும் புரியலெயே....''

''டாக்டர் ஒங்களுக்கே புரியலேன்னு எனக்கு என்ன புரியப் போவுது... ஆனு இப்ப மட்டும் ஒண்ணும் முழுகிப் போகலே. அவளெ ஒரே நிமிஷத்திலே தீத்துடறேன். நம்ம கைக்குட்டை இருக்குது, அவ கழுத்து இருக்குது. ரெண்டு செகண்ட்லே அவ அம்பேல்! என்ன சொல்றீங்க? இந்தப் பொண்ணக் க்ளோஸ் பண்ணேம்னு அந்தப் பைத்தியக்காரச்சி சொத்து, பணம்லாம் நம்புளுது...''

''ஜம்பு இந்த ஐடியா கூடப் பரவா யில்லே. வேலையை ஆரம்பி...''

ஜம்பு ப்ரியாவுக்கு அருகே நகர்ந்தான். தன் கழுத்தைச் சுற்றியிருந்த ஒரு நீளமான அழுக்கான வண்ணக் கைக்குட்டையை வெளியே இழுத்தான். அதை இரண்டு கைகளாலும் முறுக்கேற்றினன். கம்பளிப் போர்வையை இழுத்து அகற்றிவிட்டு அவள் உடலை வருடினன்.

''டாக்டர் கும்முன்னு கிரா. அன்னிக்கி ராத்திரி சும்மா தொட்டுத்தான் பார்த்தேன். வேறே ஒண்ணும் நடக்கலே. இப்ப என்ன டான்னு ஆளேயே க்ளோஸ்பண்ண வேண்டி யிருக்கு, நல்ல சரக்கு..வேஸ்டாப் போவுது!''

''டேய் ஜம்பு. டோண்ட் வேஸ்ட் டைம். வேலெயெ முடிடா. அந்தப் பொம்பளே பணம் நம்ம கையிலே வந்துடுச்சுன்னு இதவிட நல்ல சரக்கெல்லாம் பிடிக்கலாம். இப்ப வேலையைக் கவனி.''

இரும்பு போன்ற கைகள் மெல்லிய பெண்ணின் கழுத்தை ஒரு முறை தடவிப் பார்த்து முறுக்கேறிய கைக்குட்டையைக் கழுத்தைச் சுற்றி வளைக்க ஆரம்பித்தன...

''ஹலோ டாக்டர் ஆனந்த்! ஹலோ கிரிஷ்!...இல்லே ஜம்புன்னு கூப்பிடணுமா?''

''ப்ரியா கண்களைத் திறந்து கொண்டே லேசாகச் சிரித்தாள்.

''டீ ஒன்னே ஒரே நிமிஷத்துலே தீத்துட றேன் பாரு. நம்ம கிட்டயா வெளே யாடறே? தப்பிச்சுக்கினேன்னு நெனச்சியா? அதான் இல்லே.''

''என்னது! நம்ம ராமசாமி ஆபீஸ்லேயே உடற்பயிற்சி செய்ய ஆரம்பிச்சிட்டார்!''

''டாக்டர் அவரைத் தூங்கி எழுந்ததும் கண்டிப்பாக உடற்பயிற்சி செய்யச் சொல்லியிருக்காராம்'' எஸ். அன்பு



ஜம்பு அவள் கழுத்தை அழுத்தி கொண்டே கத்தினன்.

''டேய் ஜம்பு! க்விக்.... ப்ரியா நம் பேசின எல்லாத்தையும் கேட்டுண்டிரு திருக்காடா. விடாதே அவளே. அவளே விட்டோம்னு நாம்ப மாட்டிப்போம்... பிச் நோஸ் டூ மச். சீக்கிரம்.''

''டாக்டர்! நான் மட்டும் இல்லே. மத் வங்களும் நீங்க பேசினதைக் கேட்டுக்கிட்டிரு தாங்க. அவங்களுக்கும் நெறையவே தெ யும்!'' — ப்ரியா ஜம்புவின் பிடியிலிருந் திமிறிக் கொண்டே பேசினள்.

ஜம்பு பொங்கி வரும் வெறியில் ப்ரியா வின் கன்னத்தில் பலமாக அறைந்தான். ப்ரியா வலி தாங்காமல் அலறினள்.

''வேறே ஆள் யாருடி சொல்லு. இல் லேன்னு தொலேச்சிடுவேன்!''

''ஸ்டாப் இட். ஹாண்ட்ஸ் அப்! கையை அப்படியே உயர்த்தி நில்லுங்கடா. நகர்ந் தீங்கன்னு சுட்டுடுவோம்.''

பாத் ரூமிலிருந்து ஒரு பயங்கரக் குரல் அலறியது. உடனே கதவைத் திறந்து கொண்டு துப்பாக்கிகளே உயர்த்தியபடியே போலீஸ் இன்ஸ்பெக்டர் பவித்ரன் மற்றும் நான்கு போலீஸ்காரர்கள் பாத்ரூமிலிருந்து தடதடவென்று ஓடி வந்தார்கள்!

ஜம்புவும் டாக்டர் ஆனந்தும் அப்படியே மலேத்துப் போய்த் திரைப் படங்களில் வரும் ''ஃப்ரீஸை''ப் போன்று நின்றுவிட்டார்கள்.

''இன்ஸ்பெக்டர்... நீங்க... நீங்க....''

டாக்டர் ஆனந்தினல் அதற்கு மேல் பேச முடியவில்லே.

''எஸ் டாக்டர் ஆனந்த். நாங்க இந்த பாத்ரூம்லதான் மணிக் கணக்கா உட்கார்ந் துக்கிட்டிருந்தோம். உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருந்தோம். நீங்களும் ஜம்புவும் பேசினதை யெல்லாம் கேட்டுக்கிட்டிருந் தோம். அதை டேப் ரெக்கார்டலயும் ஏத் தியிருக்கோம். டாக்டர் ஆனந்த் நீங்க கெஸ் பண்ணது கரெக்ட். மிஸ் ப்ரியா அந்த டேப்லெட்ஸைச் சாப்பிடலே. அதான் மிஸஸ் பார்வதி அம்மாளுக்குக் கொடுத்தீங் களே அந்த டேப்லெட்ஸ்! அதை இவங்க நம்ம வக்கீல் மீஞ்சூர் கோவிந்தராஜாச் சாரி மூலமா எங்களுக்கு அனுப்பிச் சுட்டாங்க நேத்து ராத்திரியே... நாங்க அதை கெமிகல் அனலிஸஸுக்கு அனுப்பி யிருக்கோம். அதுக்கு முன்னடியே டேப் லெட் பயங்கர விஷம்னு ஒங்க வாயாலேயே விஷயம் வெளியே வந்துடுச்சு... டேய் ஜம்பு நகராதே. சுட்டுடுவேன்... இந்தாப்பா ஒன் செவண்டி ஃபோர், ரெண்டு பேரையும் அரெஸ்ட் பண்ணு. டாக்டர் ஆனந்த், ஜம்பு யூ ஆர் போத் அண்டர் அரெஸ்ட் ஃபார் மர்டர், சீட்டிங் அண்ட் இம்பர்ஸ னேஷன்... டாக்டர் ஆனந்த் இந்த ஊர்லே நீங்க பெரிய டாக்டர். பிக் மேன். நீங்க இப்படி...ம்...ம்... வெளியே நடங்க. மீதி யெல்லாம் கோர்ட்லே பாத்துக்குவோம்.''

டாக்டர் ஆனந்த் தம் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டார்.

''ஆல்ரைட் இந்தாப்பா ஒன் செவண்டி ஃபோர் இவங்க ரெண்டு பேரையும் வேன்ல ஏத்து, அந்தத் தெருக் கோடிலே நின்னுக்கிட்

டிருக்கும் கூப்பிடு. நான் அதுக்குள்ளே இந்த அம்மாவுக்கு தேங்க்ஸ் சொல்லிட்டு வர்றேன்.''

போலீஸ்காரர்கள் டாக்டர் ஆனந்தையும் ஜம்புவையும் அழைத்துச் சென்று விட்டார்கள். ப்ரியா படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு நடந்து செல்லும் ஆனந்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். நீண்ட பெருமூச்சை விட்டாள். அவள் மனத்தில் வருத்தத்தின் நிழல் படர்ந்தது. முதல் முறையாக அவள் தன் மாணவி வீட்டில் டாக்டர் ஆனந்தைச்சந்தித்தது ஞாபகத்துக்கு வந்தது. அப்போது அவர் முகத்தில் கனிவு, கருணை நிறைந்திருந்தன. அவை இப்போது எங்கே? அன்று பார்த்த டாக்டர் ஆனந்த் எங்கே? மீண்டும் பெருமூச்சு விட்டாள்.

“கங்க்ராஜுலேஷன்ஸ் ப்ரியா... பவித்ரன் எங்கிட்ட எல்லாத்தையும் சொன்னார். வெளுத்து வாங்கிட்டியாமே... பேஷ் பேஷ். நீ இந்த அளவுக்குச் சமாளிப்பேன்னு நானே நெனைக்கிலே போயேன். அந்த நாள்லே 'பாவம் அவ பொம்மனாட்டி என்ன பண்ணுவோ' அப்படீன்னு சொல்லுவா... நீ வந்து ஜமாய்ச்சுட்டியே பேஷ் பேஷ்....''

கோவிந்தராஜாச்சாரி மலை வாழைப் பழத்தை மென்று கொண்டே பேசினார். அவரும் ப்ரியாவும் மல்லிக்காலயா பங்களாவின் ஹாலில் சோபாவில் சந்தோஷமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

''ஸார்! எல்லாத்துக்குமே நீங்கதான் ரெஸ்பான்ஸிபிள். நீங்க சொன்னதை நான் அப்படியே செஞ்சேன். அவ்வளவுதான்.''

திருப்பத்தூர் பற்றி...

ஆண் வாக்காளர்களைவிட பெண் வாக்காளர்கள் அதிகம்.

முதல் முதலாக அரிஜனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் தனியாக வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. (அரசே பிரித்துவிடும் போலிருக்கிறதல்லவா!)

விரலில் நகத்தின் ஓரத்தில் மேல்புறம் மை இடுவதற்குப் பதிலாக விரலின் உட்புறத்தில் மையிடும்பழக்கம் முதல்முதலாகத் திருப்பத்தூரில் அமலாகவிருக்கிறது.

ஒரு மாநிலத்தின் ஆளுங்கட்சியும், பிரதான எதிர்க்கட்சியும் ஒரு வேட்பாளரை ஆதரிக்கும் விந்தையும் திருப்பத்தூரில் தான். தகவல்: - அ. தங்கமுத்து



''இல்லே ப்ரியா. உனக்குத்தான் கிரெடிட். தனியா இந்த பங்களாவிலே அந்த ரெண்டு கொலைகாரங்களையும் சமாளிக்கிறதுன்னா என்ன லேசா? இதே குமுதாவா இருந்தா சப்த நாடியும் ஒடுங்கிப்போய்ச் செத்திருப்பா. நீ இந்தக் காலத்துப் பொண்ணு. ஜமாய்ச்சுட்டே.'' தட்டிலிருந்த மற்றொரு வாழைப் பழத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்.

''ஸார் அதெல்லாம் சரி. முக்கியமான விஷயம் என்ன ஸார் ஆகும்?''

''என்னது பார்வதியோட எஸ்டேட்டா? ப்ரியா அதெல்லாம் உனக்குத்தான்... உயில்லே அந்த அம்மாவோட சொத்துப் பூரா ஒனக்கும் கிரிஷுக்கும்னு எழுதியிருக்கு. இப்ப கிரிஷ்னு ஒண்ணு இல்லேன்னு தெரிஞ்சு போச்சு. இப்ப எல்லா ஆஸ்தியும் ஒன்னுது. அந்த நாள்லே ஏகபோக மிராசுதார்னு சொல்லுவா. அதான் நீ! பூர்வ ஜென்மத்திலே பண்ண புண்ணியம் பணக்காரியாயிட்டே. கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்ச்சிண்டு கொடுக்கும்னு சொல்லுவா, அது உண்மையாயிடுத்து....''

''ஸார்... மாரேஜ் விஷயம்.....''

''நோ நோ ப்ரியா வில்லுல கலியாணத்துக்கும் ஆஸ்திக்கும் லிங்க் இல்லே. பார்வதி அம்மா உயில் எழுதறபோது நீ அவ புள்ளையக் கலியாணம் பண்ணிண்டாத்தான் ஆஸ்தி அப்படீன்னு கண்டிஷன் போட்டிருந்தா ப்ராப்ளம் வரும். அந்த மாதிரி ஒண்ணுமில்லியே. அதனாலெ நீ அந்த அம்மாவோட ஆஸ்திக்கு வாரிசா இருக்கிறதுலே எந்தவிதமான காம்ளிக்கேஷனும் கிடையாது. நோ ப்ராப்ளம்ஸ்...டோண்ட் ஒர்ரி. அஃப்கோர்ஸ்,பெட்டிஷனை ரீ டிராஃப்ட் பண்ணணும்.''

''ரொம்ப தேங்க்ஸ் ஸார். நீங்க செஞ்ச உதவிக்கு என்னாலெ முடிஞ்சதைத் திருப்பிச் செய்யறேன். நீங்க சொல்ல வேண்டியது தான் பாக்கி.''

''நோ....நோ...ப்ரியா'' அவர் பலமாகச் சிரித்தார். ''நீ எனக்குக் கொடுக்க வேண்டியது என்னோட வக்கீல் ஃபீஸ்தான். வேறே ஒண்ணுமில்லே. நீ கடமைப் பட்டிருக்கிறது அந்த அம்மா பார்வதிக்கு...அப்புறம் நீ வந்து டாக்டர் ஆனந்துக்கு முக்கியமா தாங்க்ஸ் சொல்லணும் பெரிசா!.... அவன் இவ்வளவு சொத்தையும் அடிச்சிண்டு போகணும்னு ப்ளான் போட்டான். அதுக்கு ஒன்ன யூஸ் பண்ணான். நீ நல்ல பொண்ணு. ஒன்னோட அதிர்ஷ்டம் ஒங்க அம்மா அப்பா செஞ்ச புண்ணியம் ஒனக்குச் சாதகமா முடிஞ்சுது. அதான் தலையெழுத்துன்னு நம்மவங்க சொல்லுவா... இப்பத்தான் அதெல்லாம் ஒண்ணும் கெடையாதுன்னு மேடை ஏறி உளர்றதுகள். பகவான் அன்னிக்கும் உண்டு, இன்னிக்கும் உண்டு. அதை நீயாவது புரிஞ்சுண்டு இருப்பேன்னு நெனக்கிறேன், என்ன.....''

ப்ரியா பலமாகத் தலையை ஆட்டிக் கொண்டே இருந்தாள். அதே நேரத்தில் தட்டில் வாழைப் பழம் காலியாகிவிட்டது!

(முற்றும்)

பெருகிவரும் என் கடமைகள் எதிர்காலத்தில் என் சேமிப்புச் சக்தியை குறைக்கக் கூடும். எந்த வங்கியாவது இதைப்பற்றி நினைக்கிறதா?

ஐ.ஓ.பி. இருக்கிறதே

நீங்கள் சேமிக்கக்கூடிய தொகை சிறியதோ அல்லது பெரியதோ பரவாயில்லை. உங்களது பொறுப்புக் களையும், தேவைகளையும் மனதில் கொண்டு உங்களுக்காக ஐ.ஓ.பி.யில் பலவிதமான சேமிப்புத் திட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

வங்கிக்குச் செல்லாமல் வீட்டிலிருந்து கொண்டே உங்களால் இயன்ற சிறு தொகையினைக் கொண்டு சேமிக்க ஒரு திட்டம்.

இயன்றபொழுது கிடைக்கும் சிறு தொகைகளைக் கொண்டு சேமிக்க ஒரு சிறு சேமிப்புத் திட்டம்.

நிரந்தர வருவாய் உள்ளவர்கள் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை சேமிக்க ஒரு திட்டம்.

முதலில் ஒரு சிறு தொகையினைக் கொண்டு ஆரம்பித்து வருடத்திற்கு வருடம் வருமானம் அதிகரிக்க அதிகரிக்க சேமிப்புத் தொகையும் அதிகரிக்க ஒரு திட்டம்.

முதலில் அதிக தொகையுடன் சேமிக்க ஆரம்பித்து வருடம் செல்லச் செல்ல குடும்ப பாரத்திற்கேற்ப குறைந்த தொகையினைக் கொண்டு சேமிக்க ஒரு திட்டம்.

இப்படி உங்களுடைய தேவைகளுக் கேற்ப பல்வேறு திட்டங்களைக் கொண்டுள்ளது ஐ.ஓ.பி.

எங்களிடம் உள்ள சில சேமிப்புத் திட்டங்கள் :

சிறு சேமிப்புத் திட்டம்
நிரந்தர வருவாய்த் திட்டம்
தொடர் சேமிப்புத் திட்டம்
கல்வி சேமிப்புத் திட்டம்
திருமண சேமிப்புத் திட்டம்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்

IOB-55A-81-Tam

'**வ**ருக... வருக... காதல் கனலைக் கானல் நீர் என்று அருளிய நள மன்னரே, தங்கள் அமுத வாக்கினை அக்கு வேறு ஆணி வேருக்க வந்திருக்கும் தமயந்தியைக் காண வருக, வருக!'

வகுப்பறையில் நுழையும்போது அவ்வப்போது கேட்டுப் பழகிப்போன கிண்டல் வரவேற்புதான். இன்று ஏதோ ஒரு வித்தியாசம் தெரிகிறதே, யார் அது தமயந்தி என்று தனக்குள் கேட்டுக் கொண்டே 'குட் மார்னிங் டு எவ்ரிபடி' என்று விட்டு நேராகத் தன் இருப்பிடத்துக்குச் சென்றான் நளன்.

''ம்ஹூஹூம்.. இவன் உருப்பட மாட்டான்'' என்று உதட்டைப் பிதுக்கிய வேலுமணி அவனருகில் சென்று குனிந்து ''ஹலோ மை டியர் டெஸர்ட் ராக். அட்லீஸ்ட் யார் அந்தத் தமயந்தி'னுகூட உங்க திருவாயைத் திறந்து கேட்கப்படாதோ?'' என்றான் எரிச்சலோடு.

''நியூ அட்மிஷனு இருக்கும்'' என்று சாவகாசமாகச் சொல்லிவிட்டுச் சாய்ந்து கொண்டான் நளன்.

''சை! நான் ஒரு மாக்கனும்பட்டி. உன்கிட்டே போய்க் காதலின் மகிமையைப் பத்திப் பேச வந்தேனே'' என்று தலையில் ஒரு தட்டு தட்டிக் கொண்டான் வேலுமணி.

''வேலுமணி, இவன் கிட்டப் பேசி எதுக்கு நேரத்தை வேஸ்ட் பண்ணறே? இவன் மாதிரி ஆளுங்கெல்லாம் காதல்னுவே வேப்பங்காய் மாதிரி போக்குக் காட்டுவானுக. ஒன்ஸ் பிடிச்சிடுச்சா... அப்புறம் பாரு, ஸ்பிரிட்டிலே தீக்குச்சியை உரசிப் போட்ட மாதிரி... ஆவியா அலைவானுக'' என்றான் பிரேம்.

இவர்களுடைய கிண்டல் பேச்சுக்களிலிருந்து தப்பிப் பிழைக்கவாவது யாரையாவது காதலிக்க வேண்டும் போல இருந்தது நளனுக்கு. அவன்தான் என்ன செய்வான்? அவனுடைய காதல் உணர்வுகளைத் தூண்டும் வகையில் இதுவரை எந்தப் பெண்ணும் அவன் முன்னே பிரசன்னமாகவில்லையே! ரவிக், யூ, வீ என மேஜர் எக்ஸ்போஷரான மைனரிகளை அவனும் ஓரக் கண்ணால் பார்க்கவே செய்கிறான். பார்த்த வேகத்திலேயே ஒதுங்கிக் கொள்ளத் தான் தோன்றுகிறதே தவிர எவளையும் காதலிக்கத் தோன்றவில்லையே!

''சந்திரோதயம், சந்திரோதயம்'' என்று கத்திக் கொண்டே ஓடி வந்தான் பிரபு. ''சந்திரோதயம் ஈஸ் ஆன் த வே'' என்றான் உள்ளே வந்து மூச்சிரைக்க.

''தமயந்தி... என்ட்டரிங்... டொண்டொடைன்'' என்று யாரோ சுருதி கூட்ட—

''டேய் நளா, எழுந்து வாடா... ஒரே செகண்ட்'' — இழுத்தான் வேலுமணி.

''விடுடா கையை உனக்கு வேற வேலை யில்லே.'' என்று கையை உதறினான் நளன். யார் விட்டார்கள்? நாலைந்து பேர் சேர்ந்து ஒரே குண்டுக் கட்டாய்த் தூக்கி நளனை வராந்தாவில் கொண்டு வந்து நிற்கவைத்து விட்டார்கள்.

எரிச்சலுடன்—

அவர்கள் காட்டிய திசையில்—

அவன் பார்த்தது—

ஒரு வினாடிதான்.

அந்த ஒரு விநாடி... ஆல்மைட்டி!

அவனுடைய சபதக் கோட்டையை முற்றுகையிட்டு — கொத்தளங்களெல்லாம் மத்தளங்களாக அடித்து, உடைத்து, நொறுக்கி, எல்லாம் தூசி மேகங்களாக — இதுநாள்வரை அவனுடைய இதய அரியாசனத்தில் வீற்றிருந்த ஒரு தத்துவக் கிழவன் வான் வெளி

யில் தூக்கியெறியப்பட்டு — நட்சத்திர வானிலிருந்து வெண் துகில் அணிந்த ஒரு பேரழகுத் தேவதை மெதுவே... மெதுவே இறங்கி... அந்த அரியாசனத்தில் வந்து அமர்ந்து...

மறுபடியும் தனது இருப்பிடத்துக்கு வந்த போது தனக்குள் என்னென்னவோ மாற்றங்கள் நிகழ்ந்து விட்டதை உணர்ந்தான் நளன்.

கடைசியில் — அவனுடைய உள்ளத்தின் உறுதியைக் குலைக்க ஒருத்தி வந்தே விட்டாளா?

கையிழந்த ரவிக்கைகளிலும் — கவ்விப் பிடித்த உடைகளிலும் காணாத சௌந்தரியத்தை அவனுடைய கண்கள் தமயந்தியிடம் கண்டு விட்டன.

பிரேம் சொன்னது நிதர்சனமாகிவிட்டதா?

தனக்குள் — காதல் கனல் சடசடவென்று பற்றிக்கொண்டு விட்டதா? — என்று திகைத்தான் நளன்.

''சித்ரகுப்தா!''

''ப்ரபோ''

''குற்றவாளிக் கூண்டிலே வெட்கத்தோடு நெளிந்து கொண்டிருக்கும் இந்த இளைஞன் யார்?''

''ஒரு கல்லூரி மாணவன் ப்ரபு.''

''இவன் செய்த குற்றம்?''

''கல்லூரி லைப்ரரிக்குப் போனது.''

''லைப்ரரிக்குப் போனது குற்றமா?''

''அது குற்றமில்லை பிரபு. இவன் காலேஜில் அட்மிஷன் ஆகி மூன்று வருடங்கள் முடிய இன்னும் முப்பது நாட்கள்தான் இருக்கின்றன. இந்த மூன்று வருடங்களாக ஒரு நாள் கூட போய் எட்டிப் பார்க்காத அந்த லைப்ரரிக்குக் கடந்த எட்டு நாட்களாக விடாமல் போவது ஏன்?''

''என்னிடமே கேட்கிறாயா?''

''இல்லை ப்ரபோ... என்னையே கேட்கிறேன். கேட்டுக்கேட்டு என் மூளைதான் கலங்க ஆரம்பித்து விட்டதே தவிர, காரணம் விளங்கவேயில்லை. இப்படி என் மூளையை இவன் கலங்க அடித்தது குற்றமில்லையா ப்ரபு?''

''சித்ரகுப்தா, காரணத்தை நான் விளக்குகிறேன். முதலில் உன் மிதியடிகளைக் கழற்று.''

எல்லோரிடமும் 'என்னிடம் முறைச்சின்னா 206 அடி அடிப்பேன்'ங்கறீங்களே, 206 என்ன கணக்கு?''

''மனுஷன் உடம்பில் மொத்தம் 206 எலும்பு இருக்குன்னு உனக்குத் தெரியாதா?''

-கே. ஆர். எம்.



''ப்ரபோ?''

''அதற்குப் பதிலாகக் காலச் சக்கரத்தை மாட்டிக் கொண்டு ஒரே நொடியில் எட்டு நாளைக்கு முன்னால் காலை சரியாக ஒன்பது ஐம்பத்து மூன்றில் போய் நில்.''

''விட்டேன், ப்ரபு.''

''பிரின்ஸ்பால் அறைக்கு முன்னால்...''

''ஒரு மார்க் ஃபோர் வந்து நிற்கிறது.''

''இப்போது?''

''சரிகை அங்கவஸ்திரம் போட்ட ஒரு பெரியவர் இறங்குகிறார்.''

''லேடஸ்ட்?''

''காரின் பின் கதவு திறக்கிறது. இப்போது இறங்குவது... ப்ரபோ, ப்ரபோ!''

''என்ன சித்ரகுப்தா, ஏனிந்தப்பதற்றம்?''

''பூலோகப் பெண்ணா அவள்?...அல்ல... சந்திரோதயம் பிரபோ... பட்டப் பகலில் ஒரு சந்திரோதயம்!''

''அதுவும் எட்டு நாட்களாக அந்த லைப்ரரிக்கு வருவதை நீ கவனித்திருந்தால் உனக்குக் காரணம் விளங்கி யிருக்கும்.''

வேலுமணியும், பிரேமும் தன்னைப் பார்த்துக் 'கொல்'லென்று சிரிக்கவும், இந்த 'ஸ்மைல் ப்ளீஸ்' நிகழ்ச்சிக்குத் தன்னைத் தூக்காத குறையாக ஏன் இழுத்து வந்தார்கள் என்று புரிந்தது நளனுக்கு. அசடு வழிய அந்தப் பக்கம் திரும்பியவனைப் புன்னகை தவழ ஓரக் கண்ணால் பார்த்தாள் தமயந்தி.

தங்கத் தூள்களாகத் தெரிந்தன பீச் மணல். அதைத் தன் கை விரல்களால் அளைந்து கொண்டே எதிரில் கால்களை மடித்துக் குனிந்தும் — குனியாமலும் அமர்ந்திருந்த தமயந்தியைக் கண்களால் விழுங்கிக் கொண்டிருந்தான் நளன்.

''தமயந்தி!''

''ம்''

''என்ன ஒண்ணுமே பேசாமல் உட்கார்ந்திருக்கீங்க?''

''என்ன பேசறது?''

''இப்ப நீங்க எவ்வளவு சார்மிங்கா இருக்கீங்க தெரியுமா?''

''நீங்களும்தான்.''

''தமயந்தி, உங்க பர்த் டேட்...ஐ மீன்... தேதியையும் மாசத்தையும் சொன்னால் போதும்.''

பெரிய ஜோக்கைக் கேட்டு விட்டதைப் போல் சிரித்தாள்.

''ஆச்சரியப்படாதீங்க. நாளைக்குத்தான் என் பர்த் டே''

''ரியலி?'' என்றான் ஆச்சரியத்துடன்.

''செண்ட் பெர்சண்ட்.''

''அப்போ, நாளைக்கு ஏதாச்சும் ப்ரோக்ராம்...''

''மகாபலிபுரம் போவோமா?''

''ஓ'' — வாயைப் பிளந்தான் நளன்.

''நாம ரெண்டுபேரும் ஜோடியா ஸ்கூட்டரில் போகணும்னு எனக்கு ஆசை'' என்று இழுத்தாள் தமயந்தி.

தமயந்தியின் அடக்கமான கவர்ச்சி எங்கோ பிசிறு தட்டுவது போலிருந்தது நளனுக்கு.

'ஏன், தன்னுடன் ஸ்கூட்டரில் ஜோடியாகச் செல்ல அவள் ஆசைப்படுவதில் என்ன தவறு?' தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டு, 'தவறெதுவுமில்லே' என்று தனக்குள்ளேயே ஒரு 'டிக்'கும் அடித்துக் கொண்டான்.

''ஷ்யூர் தமயந்தி'' என்றான் — உற்சாகத்தின் உச்ச கட்டத்தில்.

''தமயந்தி, ஸ்கூட்டரில் போகலாமே. உங்க ஹாஸ்டல் வழியாகத்தான் நானும் போகிறேன்'' என்றான் நளன்.

ஒரு நிமிடம் வெறித்த பார்வையுடன் நின்றிருந்துவிட்டு, ''காப்பி சாப்பிடுவோமா?'' என்றாள் தமயந்தி.

''வித் ப்ளஷர்''

இருவரும் எதிரில் இருந்த காண்டீனில் நுழைந்தனர். காப்பி சாப்பிட்டு முடியும்வரை இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை.

''ஸ்கூட்டர் புதுசா வாங்கினீங்களா?'' என்றாள் தமயந்தி கைக் குட்டையால் தன் உதடுகளை ஒற்றிக் கொண்டு.

''அது....அது... என் ஃப்ரண்டோடது. அடுத்த வாரம் அதை விலைக்கு வாங்கிடப் போறேன்.''

''அவ்வளவு அவசரமா எதுக்கு வாங்க நீங்க?''

''உங்களுக்காகத்தான் தமயந்தி.''

''எனக்காகவா?''-அவள் குரலில் தெறித்த ஏமாற்றம் நளனைத் திகைக்க வைத்தது.

''நளன், என்னை நீங்க இவ்வளவு மட்டமா எடை போடுவீங்கன்னு நான் எதிர்பார்க்கவில்லே.''

''தமயந்தி'' — நளன் திடுக்கிட்டான்.

''நீங்கதானே அன்னிக்கு என்னோட மகாபலிபுரத்துக்கு ஸ்கூட்டர்லே போகணும்னு ஆசையா இருக்குன்னு சொன்னீங்க!''

''சொன்னேன், உண்மைதான். நீங்க என்ன பதில் சொல்லியிருக்கணும்? 'எங்கிட்ட ஏது ஸ்கூட்டர்? பஸ்ஸிலே வேணா போகலாம்'னு சொல்லியிருந்தா நான் சந்தோஷப் பட்டிருப்பேன். அதுக்குப்பதிலா ஸ்கூட்டர் கடன்வாங்கி வந்தீங்க. இப்ப உங்க பொருளாதார நிலே இடம் தருமான்னுகூடப் பார்க்காம அதை விலைக்கு வாங்கப் போறதாவே சொல்றீங்க. ஒருத்திக்கு ஒருவனிடம் இல்லாத காதல் ஒரு ஸ்கூட்டரைப் பார்த்ததும் உதிச்சிடுமா? அப்படி உதிச்சா அதுக்குப் பேர் காதல் இல்லே. அதுக்கு வேறுஒரு பெயர் இருக்கு. ஸ்கூட்டர் ரிப்பேர் ஆனா அதுவும் ரிப்பேர் ஆகும்.''

நளனுடைய கண்கள் கலங்கின.

''நளன் உங்களை நான் மனதார நேசிக்கிறேன். ஐ லவ் யூ... ஒன்லி ஃபார் யூ. நாட் ஃபார் எ ஸில்லி ஸ்கூட்டர்.''

தமயந்தி சென்று விட்டாள். நளன் செயலற்றுப் போனான்— தாற்காலிகமாக.



ஆன்றோர் வாக்கு!

உலகம் தரும் வாய்ப்புக்களைப் பற்றிக் கொண்டு உலகத்துக்கு மேலாக எழும்பி ஞான நிலையை எய்துவதற்காகத்தான் நாம் உலகில் பிறக்கிறோம்.

-டாக்டர் ராதாகிருஷ்ணன்

'ஏறு அழிஞ்சில்' என்று ஒரு மரம் உண்டாம் அதன் காய் முற்றியவுடன் பூமியில் விழுந்து உடையும். உடனே உள்ளே இருக்கிற விதைகள் ஏதோ ஓர் ஆகர்ஷண சக்தியால் நகர்ந்து நகர்ந்து வந்து மறுபடியும் தாய் மரத்தோடேயே ஒட்டிக்கொள்ளும். ஒட்டிக் கொண்ட பின் மூலமான மரத்துக்குள்ளேயே மறைந்துவிடும் என்கிறார்கள். பகவானிடமிருந்து பிரிந்து வந்திருக்கிற நாம் இப்படியே எப்போதும் பின் பக்கமாக நகர்ந்து நகர்ந்துபோய் முடிவில் அவனிடம் ஒட்டிக்கொண்டு ஒன்றாகிவிட வேண்டும்.

-ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சி காமகோடி பீடம்



நம்முடைய சுதந்திரத்தின் தனிச் சிறப்பு என்னவென்றால் அதன் வெற்றிச் சரித்திரத்தில் கலந்து வந்த பக்தியும் அதையொட்டிய சாத்விகமும். அந்தத் தனிச் சிறப்பை மங்காமல் மறவாமல் நாம் காப்பாற்றி வர வேண்டும். அப்போதுதான் பாரத நாட்டுக்கு உலகத்தில் ஒரு தனிச் சிறப்பு இருக்கும். இல்லாவிடில் மற்றவர்களோடு பின் வரிசையில் பத்தோடு பதினொன்றாக இருக்க வேண்டியதுதான்!

-ராஜாஜி

அதிசயம் தத்துவ ஞானியின் உணர்வு; தத்துவ ஞானம் அதிசயத்திலிருந்தே பிறக்கிறது.

—சாக்ரட்டீஸ்

"குறைந்த அளவு ஜனதாசெம்
அதிகப் பரப்பளவிற்கு வருகிறது.
அதற்காக இப்படியா?"
EP-J-105-81-Tam
ஜனதாசெம்
செமண்ட் பெயிண்ட்
குறைந்த அளவு நிறைந்த பரப்பிற்கு
பிரத்யேக விற்பனைப் பிரதிநிதிகள் :
சென்னை நகரம்: M/s ஜோதி பெயிண்ட்ஸ்,
புரசைவாக்கம் போன்: 664131



ரூ. 2,750/-*

போது! சின்னஞ்சிறு ஐஸி-க்கள் காரணமாக அபாரமான செவியின்பம்!

புதிய பிலிப்ஸ் ஹை-க்யூ இன்டர்நேஷனல் ஸ்டீரியோ ஸிஸ்டம் ஏஎ:ப் 592

மைக்ரோ எலெக்ட்ரானிக்-
லின் அற்புதமான அம்சங்கள்:
இரண்டு சின்னஞ் சிறு
ஐஸி-க்கள் (இன்டெக்-
ரேட்டெட் சர்க்கியூட்டுகள்)
சர்க்கியூட்ரி முழுவதையும்
மாளிக்கின்றன—தெள்ளந்
தெளிவான ஒலியைக் கேட்க
உபரியான சாதனங்கள்
அடங்கியுள்ளன.

இது மட்டுமா? முழுமையாக
முன்கூட்டிய யூனிட்டுகள்
40 வாட் முழுமையான உச்ச

சின்னஞ் சிறு ஐஸி சர்க்யூட்டில மிகச் சிறந்த ஒலியும் நீண்ட உழைப்பும் அளிக்க, உபரியான சாதனங்கள்.

மியூசிக் பவர் • இணையற்ற
:ப்ரீக்வன்ஸி ரெஸ்பான்ஸ்
• மிகவும் குறைந்த அளவில்,
வேண்டாத ஒலி • அதிநவீன
ஆர்ம், மேலும் கீழும்/பக்க-
வாட்டிலும் முழுமையாக
நகர்த்த.

உங்கள் பிலிப்ஸ் டீலரிடம்
இலவச செயல் விளக்கம்

பிலிப்ஸ்

வைகோ லெக்ட்ரானிக்ஸ்
அண்ட் லெக்ட்ரிகல்ஸ் லி.

PHILIPS

* எக்சைஸ் தீர்வை உள்பட அதிகபட்ச சில்லறை விலை. மாநில விற்பனை வரி மற்றும் இதர உள்ளூர் வரிகள் தனி,

● டியர் மாயா,

உன் விருப்பப்படி, உன் ஆஃபீஸ் விலா சத்துக்கே இக்கடிதம் எழுதுகிறேன்.

உன்னைப் பெண் பார்க்க வந்த இருவர் உன்னைப் புறக்கணித்ததாக அறியும்போது, எனக்கு வியப்பாகவும், வெறுப்பாகவும்தான் தோன்றியது. போகட்டும், அதிர்ஷ்டம் இல் லாத பயல்கள் என எண்ணிக் கொண்டேன்.

விரைவில் சென்னை வருகிறேன். அப் போது உன்னைச் சந்திக்கிறேன். இலக்கியங் களை உன்னுடன் விவாதிப்பது, இசையை உன்னுடன் அனுபவிப்பது — எல்லாவற் றுக்கும் மேலாக உன் அறிவுக் கூர்மையை ரசிப்பதே ஓர் இனிய அனுபவம். —குமார்

● ''என்ன எழுதியிருக்காங்க?'' — அம்மா வின் குரலில் ஆர்வமும், படபடப்பும் இருந் தன. அப்பா கடிதத்தை மூடினர்.

''இப்ப மூணுவது சாக்கு... நம்ப பொண் கொஞ்சம் கலர் குறைச்சலாம்....''

மாயா சட்டென்று குறுகிப் போனுள். 'கடவுளே, எனக்கு விமோசனமே கிடை யாதோ!'

● டியர் குமார்,

இக்கடிதம் எழுதி உன்னைச் சங்கடப்படுத்த எனக்கு விருப்பம் இல்லைதான். ஆனலும் எழுதாமல் இருக்கவும் முடியவில்லை. அது தான் நட்பின் விசேஷம். இல்லையா?

உனக்கு அதிர்ச்சியாகக்கூட இருக்கலாம். (ராகவனுக்கும் கூட!) அப்பாவே என்னைப் புரிந்துகொள்ள மறுக்கத் தொடங்கிவிட் டார்.

குமார், ஞாபகம் இருக்கிறதா? அப்பா தான் நம்மை அறிமுகப்படுத்தி வைத்தார். முதல் நாள் நாம் சாதாரணமாகத்தான் பேசினேம். அதன் பிறகு, அப்பா உங்களை யும் ராகவனையும் அடிக்கடி வீட்டுக்கு வரச் சொன்னர். நீங்கள் வந்தபோதெல்லாம் என் னெல்லாமோ அலசினேம்.

நான் அழுதேன் குமார்! படுக்கையில், சினிமாக் கொட்டகையில், ஆஃபீஸ் டாய் லட்டில் — தனிமை என்னைப் பயமுறுத்திக் கைகொட்டிச் சிரிக்க — நான் அழுதேன்!

எல்லாவற்றுக்கும் காரணம் என்ன தெரி யுமா?

நேற்றும் நான் பெண் பார்க்கப்பட்டேன். (நாலாவதோ, ஐந்தாவதோ!) அவன் என் னைப் புறக்கணிக்க ஒரு புதுக் காரணம் சொன்னுன்:

''உங்க பொண்ணை இரண்டு இளைஞர் களோட ஏதோ ஆர்ட் ம்யூசியத்துல பாத்த ஞாபகம்....''

அம்மாவுக்குச் சட்டென்று கலக்கம் பரவ, அப்பா ஒரு விநாடி திகைக்க—

''ஓ... அவங்க எங்களுக்குத் தெரிஞ்சவங்க. என் பொண்ணுக்குக் கலை, இலக்கியத்தில ஆர்வம் ஜாஸ்தி....''

''ஓஹோ, ரெண்டு பையன்களோட சுத் தற அளவுக்கு மாடர்னு?''

இது என்ன மடத்தனமான, அசிங்கமான, வக்ரமான கேள்வி? அஃப்கோர்ஸ், எனக்குக் கல்யாணமாக வில்லையே என்ற ஏக்க கிடையாதுதான். ஆனல், என் பெற்றோர்க படும் பாடு...

ஓ... என் அழுகைக் கதையைக் கூற உன்னைப் போரடித்து விட்டேனு? ம்...உன குக் கல்யாணம் பண்ண ஏற்பாடுகள் நடப்



வாழ்க்கை - ஆசை - மனிதன். வாழ்க்கை - ஆசையின்மை - இறைவன்.

நாக ராகவன் எழுதினுன். பெண் பார்த்
தாயா? எப்படி இருக்கிருள்? மாயா,

"ஹலோ...."

அப்பா திரும்பினுர்.

"ஓ....கமான்! மாயா, யார் வந்திருக்கா
பாரு!"

மாயா உள்ளே இருந்து வந்தாள். முகத்
தில் சட்டென்று மலர்ச்சி வந்து அமர்ந்தது.

"ஓ....கல்யாணப் பத்திரிகையா? கங்க்
ராட்ஸ்...."

அம்மா எட்டிப் பார்த்தாள்.

"மாலதி, நம்ப குமாருக்குக் கல்யாணம்."

குமார் ஆவலுடன் தலையை நிமிர்த்தினுன்.
அம்மாவின் முகத்தில் ஒரு அலட்சியமும்,
கடுமையும் பரவின.

"ஆம்பிளேகளுக்கு என்ன? படறது
பொம்மனுட்டிகள்தானே?"

மாயாவின் முகம் அடிப்பட்டுப் போயிற்று.

"அம்மா, சும்மா இரேன் ப்ளீஸ்."

"முடியாது...." — மாலதியின் கண்களில் கண்ணீர் ோடிட்டது. "பெத்த வயிறு எரியறதை எப்படிக் குளிர வைக்கிறதுன்னே எனக்குத் தெரியலேயே... இவங்க கிட்டயே நியாயம் கேட்கப் போறேன்!"

"நீங்க எதுக்காக என் பொண்ணு வாழ்வைச் சூறையாடறீங்க?" அம்மாவின் கேவல் திடீரென்று வெளிப்பட்டது.

"சூறையாடறதா?"

"ஆமாம்! வேலியில் புடவை பட்டதோ, புடவையில் வேலி பட்டதோ கிழியறது புடவை... ஏதோ இலக்கியம் அப்படி இப்படின்னு பேசி, என் பொண்ணேட பழக நீங்களே! என்ன ஆச்சு... இதோ என் பொண்ணு வாழாவெட்டியா நிக்கரு? உங்க ரெண்டு பேருக்கும் என்ன? ஆம்பிளே! கேள்வி கேட்க ஆள் கிடையாது!"

"சார்... மன்னிக்கணும்...." — ராகவன் தயக்கத்துடன் பேசினுன்: "உங்க மனேவி பேசறது...."

ராஜகோபாலன் முகத்தைத் திருப்பிக் கொண்டு பேசினுர்,

''சாரி, மிஸ்டர் ராகவன்! அவளோட வார்த்தையை என்னால ஒத்துக்க முடியலேன்னாலும், அதில உள்ள லாஜிக் எனக்குப் புரியாம இல்லே. நான் உங்க நட்பைச் சந்தேகப் படாட்டாலும், என் பெண்ணோட எதிர் காலம் கேள்விக் குறியா வளைஞ்சு, என்னைத் தூண்டில் போடும்போது....''

''சாரி சார்... எங்க நட்பை இதோட வேண்ணா முறிச்சுக்கறோம்...''

மாலதி ஆவேசத்துடன் கூக்குரல் இட்டாள்:

''சத்தியமாச் சொல்றேன்! பொறுப்பை தட்டிக் கழிக்க முடியாது! உங்கள்ல யாரு காவது என் பொண்ணு மேலே உண்மை யான அக்கறை இருந்தா, நீங்களே எ பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கணும்

''அம்மா!'' — மாயா வீறிட்டாள்.

''வாட்?'' — ராகவன் அதிர்ந்தான்.

● டியர் மாயா....

....

நான்கூடச் சிலசமயம் யோசித்துப் பார் திருக்கிறேன். நட்பின் துணைக்காக ஏங்கு நீ, ஆண்களுடன் — அதாவது என்னுடனு குமாருடனும் பழகுவது உன் அம்மாவி பழைமைக்குப் புரிபடாத ஒன்று என்பன உணர்ந்துதான் இருக்கிறேன். உண்மையி 'நம் நட்பைத் துண்டித்துக்கொள்' என அ வைஸ் தரலாம் என்றுகூட எண்ணினேன் ஆனால் வாழ்வில் ஆறுதல் தேடி அலையு உன்னை அச்செயல் அடியோடு சாய்த்துவிடு என்று உணர்ந்துதான், என்னையும் மீறி கடிதம் எழுதுகிறேன்...

மாயா, உனக்கு எங்கள் நட்புத்தான் களைத்துப்போகும் உன் வாழ்க்கைப் பாலை வனத்தில் சோலையாக உள்ளது என எழு கிறாய். சோலையைச் சீர்குலைக்க நான் விரும்ப வில்லை. —ராகவன்

● தோள்களைப் பற்றி, மாயாவைத் தூக்கி னான் ராகவன்:

''உட்கார் மாயா!''

மாயா கட்டிலில் அமர்ந்தாள்.

''எனக்கே கஷ்டமாகத்தான் இருக்கு. கடைசியில் உலகத்தோட குற்றச்சாட்டு பொய், பொய்னு சொன்ன நாமே, அதை உண்மைங்கிற மாதிரிக் கல்யாணம் பண் ணிண்டது....''

மாயாவை மெல்ல நிமிர்த்தினான் ராகவன்.

''நெவர் மைண்ட் மாயா! இன்னும் உலகம் வளரவில்லே. உன் அம்மாவின் மனசை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. தவிர, நம் திருமணம் அப்படிப் பாவமான செயலோ, நடக்கக்கூடாதஒன்றோஇல்லையே!''

''ஆனா, எனக்கு ஒரு சந்தோஷம்! யாரோ ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிண்டு, என் மனசை அவன் புரிஞ்சுக்க முடியாமல், என்னா லேயும் மாற முடியாம, ஆயுசு முழுவதும் அவஸ்தைப்படறதை விட, என்னைப் புரிஞ் சுண்ட ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக் கறதுக்கு நான் கொடுத்து வச்சு இருக்கணும் இல்லையா?''

ராகவன் கொஞ்ச நேரம் பேசாமல் இருந்துவிட்டுச் சொன்னான்: ''மாயா, ஒரு விஷயம் சொல்ல விரும்பறேன்.''

''என்னவாம்?'' — அவள் உரிமையுடன் அவன் தோள் மேல் சாய்ந்து கொண்டாள்.

''இனிமே குமாரோட நட்பை நீ நிறுத் திடணும். என் மனைவி இன்னொரு ஆணோட நட்பு வச்சுக்கறதை என்னால் பொறுத்துக்க முடியாது, ஓகே?''

மாயா சட்டென்று அவன் முகத்தை ஏறிட் டுப் பார்த்தாள். அவளுக்கு இப்போது உலகம் புரிந்துபோயிற்று.

பையனாக பாபா வந்தார்!

என் பெரிய மகனுக்கு இரண்டரை வயது. பொட்டல் காட்டில் எங்கள் வீடு. எதிரே பெரிய கட்டிடம் கட்டிக் கொண்டிருந்தார்கள். மூன்று மாடிக் கட்டிடம். தவறுதலாகப் பெரிய ஏணியை வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். வாசலில் விளையாடிக் கொண்டிருந்தான் பாபு. நான் உள்ளேக் குழந்தை ஷீலாவுக்குப் பால் புகட்டிக் கொண்டிருந்தேன். என்ன சந்தடியே இல்லையே என்று பார்த்தால் பாதி ஏணிக்கு மேல் ஏறிவிட்டிருக்கிறான் பயல்! நான் என்ன செய்வேன்? அந்தி மயங்கும் நேரம். நான் ஏறிச் சென்று குழந்தையைப் பிடிக்க முடியுமா? பிறகு எப்படி இறக்குவது? இருவருமே அவ்வளவு உயரத்தில் உருட்டியடித்து விழுந்தால்?

சில விநாடிகள்தான். உச்சாணிக்குப் போய்விட்டான் குழந்தை. என் அடிவயிற்றிலிருந்து ஒரு பிறல். ''பாபா! சத்ய பாபா! என் குழந்தையைக் காப்பாற்று!'' என்று கத்தினதாகத்தான் நினைத்தேன். ஆனால் வாய் குழறிக் குளறி, பாபூ... பா.....பூ..... என்றுதான் கூறியிருக்கிறேன் போல் இருக்கிறது. அடுத்த நிமிஷம்..... என்ன சொல்வேன்! ஒரு பன்னிரண்டு வயதுப் பையன் அங்கே வந்தான். ''என் பெயர் பாபுதான். என்னையா கூப்பிட்டீர்கள்?'' என்றபடி நின்றான்.

வாய் பேச முடியாமல் நான் ஜாடை காண்பித்தேன். ஒரே தாவல். ஏணியில் கிடுகிடுவென்று ஏறினான். அடுத்த ஐந்தாவது நிமிடம் என் கையில் குழந்தை. அவனைக் கட்டித் தழுவித் திரும்பிப்பார்க்கிறேன். அந்தப் பையனைக் காணோம்.

கே. வனஜா



பூமி நனைந்திருப்பதே மழை பெய்ததன் அடையாளம். சலனமற்ற அமைதியான மனநிலையை அடைதலே பக்தி இருப்பதன் அடையாளம்.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி '81
போட்டி முடிவு

நடுவர்கள் :

1. திரு ப. நீலகண்டன், திரைப்பட இயக்குனர், கதாசிரியர்
2. திரு சிதம்பரம், வழக்கறிஞர், இலக்கிய சிந்தனை அமைப்பாளர்,
3. திரு சுஜாதா
4. திருமதி சிவசங்கரி
5. ஆசிரியர், கல்கி

நடுவர்கள் கூட்டம் ஜுலை 19ம் தேதி நடந்தது.

பின்வரும் கதைகள் பரிசுக்குரியன என்று தேர்ந்தெடுக்கப்பட்டன.

முதல் பரிசு ரூ. 1000/-

வறுமைக் கோடு

எழுதியவர் : கிருஷ்ணகுரு

விலாசம் : 78ஏ, தேவாங்கம் பிள்ளையார் கோவில் தெரு. செவ்வாய் பேட்டை, சேலம்-2

இரண்டாம் பரிசு ரூ. 500/-

மாறுத பரிணமங்கள்

எழுதியவர் : உஷாதேவி

விலாசம் : 19 பராங்குசபுரம், சென்னை-24

மூன்றும் பரிசு தலா ரூ. 250/- வீதம் இரு சிறுகதைகளுக்கு

1. வலி

எழுதியவர் : விமலாதித்தன்

விலாசம் : 8/5 ஸி. பி. டபிள்யூ. டி. குவார்டர்ஸ், பெசன்ட் நகர், சென்னை-90

2. இன்ஸ்பெக்ஷன்

எழுதியவர் : அலிபூர் ரகீம்

விலாசம் : 6, பள்ளிவாசல் தெரு, காட்டுப்பாடி (வ.ஆ)

வெற்றி பெற்ற அனைவருக்கும் நடுவர்கள் சார்பிலும் கல்கி நிறுவனம் சார்பிலும் நல்வாழ்த்துக்கள்.

பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளின் பட்டியல் அடுத்த இதழில். புகைப்படம் : உத்ரா

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு
கதை:
சாருகேசி, தமயந்தி
சித்திரம்:
செல்லப்பன்
போட்டோ: உத்ரா

1



..டா, இதையாவது ..துக்கடா! நீ ..ட்டுக்குப் பாக்கற ..ண்ணுங்களை ..ல்லாம் தட்டிக் ..டே இருக்கே!
எந்தப் பொண்ணைத் தட்டியிருக்கேன்? தொட்டது கூட இல்லியேம்மா!
இந்தப் பொண்ணைப் பாரு. கிளி மாதிரி இருக்காளாம், கிளி மாதிரி!
வெட்டுக்கிளி மாதிரியா?
..வன் சரிங்கறதே ..ப்பாடு எம்பாடா ..நக்குது. இதுலே ..ங்க திருவாய் வேறே!
நேரில்தான் போகணுமா போட்டோ கீட்டோ குடுக்கல்லியா அவங்க.
ஏன் குடுக்காம? எடுத்துக்கிட்டு வா அமிர்தம் எம் மேசையிலிருந்து!
அப்பா, எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்! உங்க ஊதுகும்பிடறேன், என்னை இக்கட்டிலே மாட்டிடாதீங்க.
..இக்கட்டாவது ..க்கட்டாவது! ..டிச்சாப் ..ண்ணிக்க. ..டிக்காட்டி ..வாணும்.
பாருடா போட்டோவை! இவளைப் புடிக்காமா போயிடுமா ஒனக்கு!
ஆகா, நல்லாத்தான் இருக்கா! ஆனா அப்பா, இந்தக் கல்யாணத்தை நிறுத்துங்க. நான் ஒப்புக்குத்தான் ஒங்க கூட வரேன்.
டேய்.... டேய்.... டேய்..... என்னடா ரு குண்டைத் தூக்கிப் போடறே!
தொடரும்

தலைமுறைகளும் சகாப்தமும்

தமிழ்க் கலையுலகில் ''சினிமா'' என்ற பேசும் படத்தின் பொன்விழா ஆண்டுதான் இந்த 1981ம் வருடம். ''கல்கி'' இந்தப் பொன்விழா ஆண்டை மலரிட்டுச் சிறப்பிக்கின்றது. மகிழ்ச்சிக்குரிய விஷயம்,

என்னை!

கல்கி!

இந்தப் பொன் விழா ஆண்டையொட்டி கட்டுரை கேட்டது!

என்னிடமா! கட்டுரையா! கல்கியா!!

''சகாப்தம் முடிந்து விட்டதாக''க் கங்கணம் கட்டிக் கொண்டு அறிக்கைகளையும் அபிப்பிராயம் என்ற பெயரில் கண்டனங்களையும் போட்டீர்கள். இன்று என்னிடம்... ஓ.கே. ஓ. கே. (சிம்மக் குரலில் சிரித்தபடி சம்மதித்தார் பெருந்தன்மையுடன் நடிகர் திலகம்.)

ஐம்பது ஆண்டுகள் கண்ட தமிழ்ப் பேசும் படத்தின் சகாப்தத்தைச் சிறப்பிக்க இந்தச் சாதாரணக் கலைஞனைக் கேட்டதற்கு நன்றி. (அடக்கமான அவர் பதிலுக்கு, ''பொன் விழாக் காணப்போகும் வெள்ளி விழா கலைஞர் கலையுலகில் நீங்கள் ஒருவர்தான். அதனால்தான் தங்களை அணுகினோம்'' என்றது கல்கி.)

பலதலைமுறைகள் ஒன்றுசேரும்போதுதான் ஒரு சகாப்தம் பிறக்கிறது. ''சகாப்தம்'' தோன்றுமே தவிர முடிவதில்லை.

1931ம் ஆண்டுதான் தமிழ்ப் பேசும் படம் பிறந்தது. அப்போது வெளிவந்த படம் ''காளிதாஸ்''. அதில் திருமதி டி.பி. ராஜலட்சுமி அவர்கள் கதாநாயகியாக நடித்தார். கதாநாயகி தமிழிலும், கதாநாயகன் தெலுங்



முத்தான முதல் சில மாதங்களுக்கு...

இலவசம்!

ஃபாரெக்ஸ்—குழந்தையின் முதலாண்டுப் புத்தகம்

16 பக்கங்கள் அடங்கிய அரிய சிறுபுத்தகம், குழந்தைப் பராமரிப்பு பற்றியது இது—பால் புகட்டுதல், பல் முளைத்தல், வளர்ச்சி, அம்மைக்குத்துதல், இன்னும் பலவற்றைப் பற்றியும் விளக்குகிறது.

உங்கள் பிரதிக்கு 50 பைசா தபால் தலையுடன் எழுதுங்கள்:
த.பெ. எண் 19119 (FAR 202 x)
பம்பாய் 400 025.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ், குழந்தையின் விரைந்த முழு வளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு.

CASGLF-24-203

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு
கதை:
சாருகேசி, தமயந்தி
சித்திரம்:
செல்லம்
போட்டோ: உத்ரா

2



ன சொல்றார்; ாப்பிள்ளை?
அதுக்குள்ள மாப்பிள்ளையா! ஐயோ!
பொண்ணு ஜெர்மன், பிரெஞ்ச் பாஷை யெல்லாம் படிச்சி ருக்கா? காலேஜ் படிப்போட சரியா?
ஏண்டா, நீ வீட்டுலே பிரெஞ்சு தான் பேசறியோ?
து இல்லேம்மா, ளுக்கே என்னை ாரீஸ்லாக்கு த்திட்டாங்கன்னு வையி.
பாரீஸ் கார்னர் லேயே இப்ப தமிழ், பிரெஞ்ச் மாதிரிதான் பேசுறாங்களாம்! ஒண்ணுமே புரிய றதில்லியாம்!
நான் பி.ஏ. முடிச்சு உடனே பிரெஞ்ச்சும் கத்துக்கிட்டேன், ஜெர்மனும் கத்துக் கிட்டேன் அத்தை!
ஐயோ, அத்தைன்னுப் புட்டாளே! அப்பா, நான் சொன்னது ஞாபகம் இருக்கா? என்னை நீங்கதான் காப்பாத் தணும்.
ஏண்டா கெணத்துல விழுந்த வன் மாதிரி காப்பாத்து காப்பாத்துங்கறே? விஷயத்தை ஒடச்சுச சொல்லு ரகசியமா!
பா, என் காதலி ளு காத்துக்கிட் நக்கா எனக் காக!
எங்க காத்துக் கிட்டிருக்கா? பார்க்லேயா? பஸ் ஸ்டாப்பிலயா? புறப்படு சொல்றேன்!
தொடரும்

துணுக்..!

மரியாதை

திரு. உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் தம்முடைய ஆசான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் ஊருக்குள் செல்லும்போது, செருப்பு அணிந்து செல்வதில்லையாம்!

-எஸ். பொன்னுசாமி

''ஒரே மலர்!''

புது வருட வாழ்த்து வாங்கக் கடைக்கு வந்தான் ஓர் இளைஞன். ''என் இதயத்தில் குடி கொண்ட ஒரே மலர்'' என்று எழுதியிருந்த வாழ்த்துக்களில் பத்து வாங்கிச் சென்றான்.

எம். தேவராஜ் பட்டேல்

28ம் நேருவும்

ஜவாஹர்லால் நேருவின் வாழ்க்கையில் 28 மிகவும் முக்கியத்துவம் பெற்றிருப்பதைக் கவனியுங்கள்...

1. ஜவாஹர்லால் நேரு பிறந்த போது அவருடைய தந்தையின் வயது 28.

2. இந்திரா காந்தி பிறந்த போது நேருஜிக்கு வயது 28.

3. நேருஜியின் மனைவி கமலா மறைந்ததினம் 1936-ம் ஆண்டு பிப்ரவரி 28-ம் தேதி.

4. நேருஜி காலமான நாள் மே 27-ம் தேதி. எனினும் அவரது தகனக்கிரியை மே 28-ம் தேதிதான் நடை பெற்றது.

5. தம் மனைவியுடன் நேருஜி வாழ்ந்த வருடங்கள் 20 தான் என்றாலும் மனைவி இறந்தபின் அவர் வாழ்ந்த வருடங்கள் 28.

—பால. வீரப்பா





நகர்வலம்

காண்ட இந்த விழாவை டத்த, திருவனந்த ரத்திலிருந்து இதற் கென்றே இங்குவந்து, தங்கி, செலவும் செய்து இசைக்குத் தொண்டாற்றிய பேரா ரியர் முத்துஸ்வாமிக்கு, இங்கே திருவனந்தபுரம் ஆர்.எஸ்.மணியும், விவேகா ல்சுரல் சென்டர் குளத்து அவர்களும் தக்க துணை பாக உதவியிருக்கிறார்கள்.

இந்த சீரீயஸிலே ஓர் உன்னதமான கச்சேரி செய் தார் பெரும்பாவூர் ரவீந் திரநாத் என்ற இளைஞர். ஜேசுதாஸ் பாணி...குரல் டட்டோ. இந்தக் கண்ணாடி அணிந்த, சந்தனக் கீற்று இளைஞரின் கச்சேரி முதல் நரம் என்பதற்குக் கூடிய கூட்டமே சான்று.

— சாருகேசி

கண் சிகிச்சை முகாம்

ஸ்ரீ செம்மங்குடி சீனி வாசய்யர் அவர்களுடைய ஐம்பதாண்டு கால கர் நாடக இசைச் சேவையைச் சிறப்பிக்கும் விதத்தில் அவருடைய இரு பத்து மூன்று சிஷ்யர்கள் சேர்ந்து 1976ல் தம் குருவின் பெயரில், 'ஸ்ரீ செம்மங் குடி சீனிவாசய்யர் பொன் விழா டிரஸ்ட்' என்று ஒரு அமைப்பைத் துவக்கினர். இவ் வமைப்பு ஒவ்வொரு ஆண்டும், ஜூலைமாதம் மூன்ருவது வாரத்தில் கர்நாடகஇசை விழா ஒன்று நடத்துவதோடில்லாமல், முதிய கர் நாடக இசைக் கலைஞர் ஒருவரையும் பொன் னாடை போர்த்திக் கௌரவித்து வருகிறது. இவ்வாண்டு அப்படிக்கௌரவிக்கப்பட்ட வித் வான் துறையூர் ஸ்ரீ எம். ராஜகோபால சர்மா. எழுபத்தைந்து வயதானவர். முன்பு சுதேசமித்திரனில் தியாகராஜ கிருதிகள் சுவ ரக் குறிப்புக்களுடன் வெளிவர உதவியவர். ஸ்ரீவள்ளி, நாம் இருவர் முதலான பல திரைப் படங்களுக்குத் தனித்தும், பாபநாசம் சிவன் போன்றவர்களுடன் இணைந்தும் இசை யமைப்பாளராய்ப் பணியாற்றி இருக்கிறார். கலாக்ஷேத்ராவில் இசையாசிரியராய் இருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ள திரு சர்மா, காலையிலும், மாலையிலும் இப்போதும் பாட்டு சொல்லித் தருகிறார்.

நாதக் கனல் — இது இந்த வருடம் ஜனவரி முதல் தேதியன்று மயிலாப்பூரில் ஆரம்பிக்கப் பட்ட ஒரு சபா. ஆரம்பித்தவர் மகா கவி சுப்பிரமணிய பாரதியாரின் வம்சத்தில் வந்தவரான திரு பத்தமடை கிருஷ்ணன். கர் நாடக இசைக்கு மக்களிடையே ஆதரவைப் பெருக்குவதும், மகா கவி பாரதியாருடைய பாடல்களை மக்களிடையே பரப்புவதும் 'நாதக் கனல்' சபாவின் நோக்கங்கள். பாரதி பாடல்களுக்கு, கர்நாட்க இசை அமைத்து, முழு நேரக் கச்சேரியாகவே அளித்து, பாரதி அன்பர்களை மகிழ்ச்சியில் திளைக்க வைக்கப் போகிறார்கள், வரும் ஆகஸ்ட் 14 முதல் 19 வரை. இடம்: ஆழ்வார்பேட்டையில் உள்ள ஆஸ்திக சமாஜம். பல இசை விற் பன்னர்கள் பாரதி பாடல்களைப் பாட இருக் கிறார்கள். திரு கிருஷ்ணன் நல்ல ஓவியர். ஜோதிடக் கலையும் அறிவார். இவர் வீட்டில் இவரே வரைந்துள்ள பாரதியின் வண்ண உருவப் படம் கண்ணைக் கவருகிறது.

- எஸ். சந்திரமௌலி

ஐம்பது வயது எட்டிய நாடக, சினிமா நடிகர் வி. கோபாலகிருஷ்ணன் இதுவரை எட்டாயிரத்துக்கு மேல் சினிமா பார்த்திருக் கிறார். அதுமட்டுமல்ல. தாம் பார்த்த தமிழ், ஆங்கில, ஹிந்தி சினிமாக்களை வரிசை யாக எழுதி நோட்டுப் புத்தகத்தில் குறித்து பைண்ட் செய்து வைத்திருக்கிறார். இது வரை எட்டு 'வால்யூம்'கள் சேர்ந்துள்ளன. 5–12–1946: ஸிக்ஃபீல்ட் ஃபாலீஸ்'' என்ற ஆங்கிலப் படத்திலிருந்து அண்மையில் வெளி யான 'தில்லு முல்லு' வரை இருக்கிறது. ஒவ்வொரு சினிமாவைப் பற்றியும் சிறு குறிப்பு, அப்பட்டமான விமரிசனம்.

யார் எந்தச் சினிமா பற்றிக் கேட்டாலும் அகர வரிசை அட்டவணையைப் பார்த்து டக் கென்று விவரம் கூறிவிடலாம்.

ஒரு சுவாரஸ்யமான விஷயத்தையும் தெரி வித்தார். ''பிரிட்டிஷ் கலைஞர்கள் நம்மை விட மூட நம்பிக்கை உள்ளவர்கள். 'மாக் பெத்' என்ற பெயரையே அவர்கள் உச்சரிக்க மாட்டார்களாம்! 'தட்ஸ் காட்டிஷ் ப்ளே!' என்றுதான் குறிப்பிடுவார்களாம்!

- வாதூலன்

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

3

நூறுவது யா தடங்கலுக்கு துகிறேம்னு ச்சிருப்பான் ிக்கு. அதான் க்கருங்க!
சீரியஸ்ஸாச் சொன்னாலும் சிரிப்புத்தான் ஒங்களுக்கு. இது மாதிரி டீவி நாம்பளும் வாங்கணுமா வாண்டாமா?
ஏன், டீவி வாங்கினாத்தான் சிரிப்பு வருமா நமக்கு? அது இல்லாமயே சிரிப்பாச் சிரிக்கறமே?
வீடுன்னு டீவி வேணும். பிரிஜ்ஜு வேணும். எலக்ட்ரிக் அடுப்பு வேணும். துணி துவைக்கிற மெஷின் வேணும். மிக்ஸி வேணும்.
வளவும் சுக்கிட்டா மட்டும் துமா? இத்தனைக் ஒவ்வொரு க்கானிக் வேணும். ன்களையெல்லாம். து ரிப்பேர் ஆச்சுன்னு ப்பிட போன் வேணும்.
நல்லதா வாங்கிட்டா ரிப்பேர் ஏன் ஆகுது?
இத்தனையும் வச்சுக்கிட்டா நீ என்ன பண்ணுவே? ஏதானும் ஷோ ரூம் வக்யப் போறியா வீட்டுல?
வேலைக்கிப் போயி சம்பாதிக்கிற பொண்ணு மருமக வந்தா, இதெல்லாம் ஒண்ணொண்ணு வருது!
படிச் சொல்லுடி ஆத்தேன்னும்! க்கறதுதான் கேக்கறே, ஙுங்கா வரதட்சிணையே ிசமாக் கேட்டுப்புடு. சரி த்தனையும் வாங்கிப் போட்டா வீட்டுலே அப்புறம் கையைக் ாலை நீட்ட எடம் இருக்காது பா!
அதது, அதது எடத்துல இருக்கப் போவுது. இல்ல, நீங்கதான் கையைக் காலை ஏன் நீட்டணும்?
நீ சொல்லிட்டா ஆச்சா? உன் புள்ளையாண்டான் என்ன நெனச்சுக்கிட்டிருக்கானோ? அவன் வரட்டும், கேட்டுப்புடுவம்.
அவனை என்ன கேக்கறது? நான்தான் தீர்மானம் பண்ணிட்டேனே!
தொடரும்

வட்டமேஜை

◘ கல்கியை வாங்கியதும் கனமாக இருந்ததை உணர்ந்தேன். பிறகுதான் தெரிந்தது, பக்கம் 112 என்பதுடன், இதில் சினிமா சம்பந்தமாகப் புகைப்படங்களும் 112 வெளியாகியுள்ளன என்பது. அடேயப்பா! எவ்வளவு விஷயங்கள்! இத்தனையையும் எப்படித்தான் சேகரித்தீர்களோ என்று பிரமிக்கிறேன்.

கொடுமுடி ந. சேதுராமன்

◘ 'என்னடா இது, நூற்றிப் பன்னிரண்டு பக்கங்களுக்கு இவ்வளவு வெயிட்டா!' என்று எண்ணிக் கொண்டே உள்ளே புரட்டினேன்! புரிந்தது "வெயிட்"டின் காரணம். குண்டு கல்யாணமும். மிஸ்டர் மெட்ராஸும் சேர்ந்தால், 'வெயிட்'டுக்கென்ன குறைச்சல்!

பெருங்களத்தூர் எல். ரவி ஷர்மா

◘ வெறும் நடிகர் நடிகைகளின் படங்களையும், பேட்டிகளையும் போட்டு சினிமா சிறப்பிதழ் என்று கூறாமல், திரையுலகின் அனைத்துத் துறையினரையும், அவர்களது திறமைகளையும் வெளிக்காட்டி, ஒரு புதுமையான 'சினிமா சிறப்பிதழ்' வெளியிட்ட கல்கி நிறுவனத்தாரை உளமாறப் பாராட்டுகிறேன்.

கண்ணம் பாளையம் பொன்ஜெயசிங்

◘ சினிமாச் சிறப்பிதழில் லைட் பாய், ஸ்டண்ட் நடிகன், எக்ஸ்ட்ராக்கள் போன்றவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தைப் படித்ததும் மனம் மிகவும் வேதனைப்பட்டது. இத்தொழிலின் மேல் மட்டத்தில் இருப்பவர்கள் லட்சம் லட்சமாகச் சம்பாதிக்கும் போது, ஒவ்வொரு காட்சியிலும் உயிர் கொடுத்துப் பணியாற்றும் கீழ் மட்டத்தில் இருப்பவர்களின் வாழ்க்கைத் தரம் பேசும் திரைப் படம் தோன்றி ஐம்பது ஆண்டுகள் ஆகியும் உயராமலிருப்பது வருத்தத்துக்குரியது.

வேலூர் வேணுகோபால்

◘ அகத்தியர் காவிரியைக் கமண்டலத்தி[ல்] அடக்கி விட்டது போல் பழைமையும், பு[து]மையும் கலந்து ஒரு வார இதழில் சினிம[ா] உலகத்து விஷயங்களை அடக்கிவிட்டீர்களே[!]

சென்னை-39 திருமதி நாராயண ரா[...]

◘ பொன்னும் பித்தளையும் தலையங்க[ம்] வைரம் பாய்ந்தது.

சென்னை-14 வி. ஷோப[...]

◘ எங்கே கோவை பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டதைக் கண்டு கொள்ளாமல் இருந்து விடுவீர்களோ என்று எண்ணி யிருந்தேன். ஆனால் கட்சியினரின் 'செருக்கை' கார்ட்டூன் மூலம் சுட்டிக் காட்டித் தங்கள் நடுநிலையை நிலைநாட்டி விட்டீர்கள்.

கோயம்புத்தூர் ஏ. ஜெபக்குமா[ர்]

◘ சகாப்தம் முடிந்து விட்டதா இல்லையா என கட்டுரைகள் வெளியிட்ட கல்கி பெருந்தன்மையோடு சிவாஜியை அணுகி கட்டுரை கேட்டதும் அவரும் பெருந்தன்மையுடன் கட்டுரை தந்ததும் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.

பரசலூர் ஆர். நாகராஜன்

◘ 'நினைவில் நின்ற காட்சி' பகுதியில் நடிகர் திலகம் நடித்த படங்கள் மெஜாரிட்டியாக இருப்பதைக் காணும்பொழுது மெய் சிலிர்க்கிறது. அதே சமயம் 'சகாப்தம்' சம்பந்தமாக அவர் என்னதான் 'கல்கி'யையும் வாசகர்களையும் குறை கூறினாலும் 'லாரி டிரைவர் ராஜாக்கண்ணு' போன்ற படங்களைப் பார்க்கும்பொழுதுவேதனையாகத்தான் இருக்கிறது. உண்மையான ரசிகர்கள் நடிகர் திலகத்தின் திறமை இவ்வாறு விழலுக்கிறைத்த நீராவதைக் கண்டிப்பாக விரும்ப மாட்டார்கள்.

விழுப்புரம் கே. எஸ். குமார்

◘ சிறப்பிதழோடு சிரிப்பிதழையும் வழங்கி விட்டீர்கள். உமாபதியின் ஜோக்ஸ் ஆன் பகுதி தவிர டணால் தங்கவேலுவின் நகைச்சுவை வேறு! படம் வரைந்த செல்லம் அவர்களுக்கும் வெற்றியில் பங்குண்டு.

தஞ்சாவூர் பி. ஜே. ரத்தன்

◘ சபாஷ் மீனாவில் கண்ணாடியை உடைப்பது சந்திரபாபு என்று அன்பர் எஸ். கண்ணன் குறிப்பிட்டுள்ளார். அது தவறு. கண்ணாடியை உடைப்பது குலதெய்வம் ராஜகோபால். போடுவது நடிகர் திலகம்.

வேலூர் சுதா மணிமேகலை

◘ 1980ம் வருட அமரர் கல்கி நினைவு சிறுகதைப் போட்டியில் பங்கேற்று சரித்திரக் கதை எழுதி ரூ. 500 பரிசு பெற்ற கிருஷ்ணகுரு, 1981 ஆம் வருட போட்டியிலும் பங்கேற்று, சிறந்த சமூகக் கதை ஒன்றை எழுதி ரூ. 1000 பரிசு பெற்றிருப்பது அவர் இலக்கியத்தின்பால் காண்பிக்கும் தீவிரத்தையும் அவரது எழுத்துலக முன்னேற்றத்தையும் உணர்த்துகிறது. வாழ்த்துக்கள்!

நாகர்கோயில் க. ந. சுப்பிரமணியன்

"ரசிகமணி" டி.கே.சி யின்
நூறாவது பிறந்ததின விழாவிற்கு
எமது வாழ்த்துக்கள்

உண்மையான கவிதைகள் எவை
எனத் தமிழ் மக்களுக்கு எடுத்துச்
சொல்லி அவர்கள் அவற்றை
ரசிக்கச் செய்த மேதை
டி.கே.சிக்கு
எமது அஞ்சலி!



ஜனதாசெம்
சேமண்ட் பெயிண்ட்
தயாரிப்பாளர்கள்

EP-J-101-81

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணல் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

4





ன்ன பேசறுங்க ரெண்டு பேரும்? ரு மண்ணும் காதுல விழல்லே! பயன் பிடிச்சிருக்கற பொண்ணு லாத்தான் இருக்கா. வேலைக்குப் ரற பொண்ணைத்தான் பிடிச்சிருப் ன. அம்மாக்காரிகிட்டத்தான் ன்னவிட பயமாச்சே பன்னீருக்கு!
வேலைக்குப் போகலேன்னு நீ என்னை மறந்துட வேண்டியது தான்!
நான் வேலைக்குப் போயிட்டா வீட்டை யாரு பாத்துப் பாங்க? ஓங்க அம்மாவுக்கு ஓய்வு வேணும்?
ஒரு விதத்து வேலைக்குப் போற பொண்ணு தேவலே. வீட் டுல மாமியா ரும் மருமக ளும் நேர்ல சண்டை போடா நேரம் கொற யும்!
ன்னீர் திரும்பி அப்பா காசிலிங்கத்தைப் ர்த்துவிடுகிறன்.
ப்பா நீங்கதான் உதவி ண்ணும்! இதான் ன்னுடை... என்னுடை.
காதலி! அவ்வ ளவுதானே? ஏம்மா, பைய னைப் புடிச் சிருக்கா...
பன்னீரு இது ஒன்னுடை பிரச்னை மட்டுமில்லே, இன்னிலேருந்து என்னுடை பிரச்னை! அம்மா கொழந்தே, எந்த ஆபீசுலே வேலைக்குப் போற நீ?
அப்பா, அங்கதான் இருக்கு சங்கடம், தர்ம சங்க டம் எல்லாம்
என்னடா சொல்றே நீ?
அவ வேலைக் போறதில்லே பா! அம்மா ாட கண்டிஷன் . அவ வேலை ர்த்தாக மே?
கண்டு பிடிப்போம் ஒரு வழி. கவலைப் படாதே!

(தொடரும்)

குட்டிக் கதைக் களஞ்சியம்

இப்போதெல்லாம் வாரப் பத்திரிகைகளில் குட்டிக் கதைகளுக்கு ஏக மவுசு! பிரபல எழுத்தாளர் ஏகாம்பரம் மட்டும் சும்மா இருப்பாரா? மிக இலகுவாக ஆயிரக்கணக்கில் குட்டிக் கதைகளை எழுதிக்குவித்தார். அவற்றில் சில:



கொலை விழுந்தது!

● கருகும்மென்று இருட்டு. கையை நீவி விட்டுக்கொண்டு கருக்கரிவாளை கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டான் காளி. 'ஒரே வெட்டு. விழவேண்டும் கொலை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே போனான்.

மெதுவாகச் சுவரேறிக் குதித்துப் பூனை போல் அடியெடுத்து வைத்து முழு பலத்துடன் அரிவாளால் ஒரு போடு போட்டான். விழுந்தது 'கொலை' — காளி ஒரு வாழைக் குலைத் திருடன்!

காபரே பார்க்கணும்!

● ''ராஜம் எனக்கு ரொம்ப நாளாஆசை, காபரே போய்ப் பார்க்கணும்னு.''

''என்ன சொன்னே, பட்டு... காபரேயா? அசிங்கம். அதுவும் நாம்ப போனால் நல்லா இருக்குமா? எல்லாரும் நம்மையே பார்ப்பாங்க.''

''பார்க்கட்டுமே... நாம் மட்டும் என்ன அதிசயப் பிறவியா?''

''இல்லைதான். இருந்தாலும் பேப்பரில் போட்டாலும் போட்டுவிடுவான் பட்டு.''

''என் அப்பா அறநிலைய மினிஸ்டர். உங்க அப்பா சன்மார்க்க சபாத் தலைவர். அதனால் நாம் எதையும் அனுபவிக்கக்கூடாதா போடா ராஜம்'' என்றான் பட்டு தன் அரும்பு மீசையைத் தடவியபடியே,

சங்கிலியைக் காணோம்!

● நூறு படங்களில் கதாநாயகியாக நடித்திருந்த ஸ்ரீமாதவிப்ரியா கோபமும் அழுகையுமாக இருந்தாள். ''என் சங்கிலி எப்படிக் காணுமல் போகும்? சங்கிலி எப்படித் திருடு போகும்? இங்கேதான் சோபா செட்டு மேலே வெச்சுட்டுக் குளிக்கப் போனேன். போலீசுக்குப் போன் பண்ணட்டுமா?'' என்று இரைந்து கொண்டிருந்தாள்.

அரை டஜன் வேலைக்காரர்களும் வேலைக்காரிகளும் நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது வேலைக்காரிகளில் ஒருத்தி, ''அதோ... அதோ...சங்கிலி... அதோ!'' என்று கத்தினாள். அவள் காட்டிய திசையில் ஒரு சோபா செட்டின் கீழே இருந்து மெள்ள எட்டிப் பார்த்தது சங்கிலி என்னும் அந்த ஐயாயிரம் விலையுள்ள நாய்க்குட்டி!



சிலீர்! சிலீர்!

● ஊரடங்குச்சட்டம், கத்திக்குத்து, கொலை என்று ஹைதராபாத் இருக்கும் சமயத்தில், ரயில் தாமதமாக வந்து, அகால நேரத்திலா வந்து இறங்க வேண்டும்? ரயிலடியில் இருந்த லாட்ஜ் மாடி அறையில் பாலகோபாலுக்கு இடம் கிடைத்தது.

'இதுவரை கத்திக் குத்துக்குப் பலியானவர் 70 பேர்' என்று நாளிதழ் வயிற்றில் பயத்தை விதைத்தது.

நள்ளிரவு. கீழ் அறையிலிருந்து சில குரல்கள்: ''கழுத்தை வெட்டுடா... பிசிர் இல்லாதே வெட்டு காதர், கையை வெட்டியாச்சா? அப்படியே சுருட்டி வை... காலைச் சின்னதாக வெட்டிடு...''... திடீரென்று யாரோ அடிக்க, யாரோ அழுகிறார்கள்.

பாலகோபால் பயத்தால் மயக்கமான தூக்கத்தில் ஆழ்ந்து விட்டார்.

காலையில் லாட்ஜை விட்டு வெளியே வந்து கீழ் அறையைப் பார்த்தார். 'விக்டரி டெய்லரிங் ஷாப்' என்ற போர்டு அங்கு மாட்டப்பட்டு இருந்தது.

—பி.எஸ்ஆர்.



கேசத்துக்கு
மென்மையும்
பட்டுத்தன்மையும்
தரும்
இயற்கையான
பராமரிப்பு

ஸ்வஸ்திக் சீகக்காய் சோப்பில் சுத்தமான சீகக்காயின் இயற்கையின் எல்லா நற்குணங்களும் நிரம்பியுள்ளன. உபயோகிப்பது மிகவும் சௌகரியமானது. திரவ ஷாம்பூவைவிட மிகவும் சிக்கனமானது.

வளமான நறுமணமிக்க நுரை உங்கள் கேசத்திற்கு மணமூட்டுகிறது, மென்மையுடன் கேசம் முழுவதையும் சுத்தமாக்குகிறது. உங்கள் கேசம் ஆரோக்கியமுடன் பளபளக்கிறது, புதுமையான மணம் வீசுகிறது.

ஸ்வஸ்திக் சீகக்காய் சோப்

சீகக்காய் அடங்கியது—இந்தியப் பெண்மணிகளின் எழிலோங்கும் கேசத்தின் பரம்பரை ரகசியம்!

ilpi dm 25/79 tam.

மாயாவின் பய

சுப்ரஜா

"நேத்து ஈவ்னிங் அப்படித்தான் டாக்டர் நாங்க ரெண்டு பேரும் கோவிலுக்குப் போய்விட்டு ராத்திரி எட்டு மணிக்கு வீட்டுக்குத் திரும்பினேம். சமையல்கட்டு ஜன்னல் வழியா ஒரு பூனை எப்படியோ உள்ளே நுழைஞ்சு, பாலைக் காலி பண்ணிட்டு, அடுப்புகிட்டப் படுத்துட்டு இருந்தது. அப்பப் பார்த்து இவ உள்ளே நுழைய, அது அவசரத்துலே ஜன்னல் வழியை மறந்து கதவுப் பக்கமே பாய, இவ மயக்கம் போட்டு விழுந்துட்டா!'' -- மாயாவைக் காட்டி லேடி ஸைக்கியாட்ரிஸ்ட் வேணியிடம் சொன்னன் மாதவன் – அவன் கணவன்.

''சின்ன வயசுலே பூனையோட சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி ஏதாவது நடந்திருக்கா?''

''நடந்திருக்கு டாக்டர். எனக்கு வயசு அப்போ எட்டு இருக்கும். எங்க காலனியில 'ரீட்டா'ன்னு ஒரு பூனை இருந்தது. அது அப்பத்தான் நாலு குட்டி போட்டிருந்தது. அது குட்டிகளுக்குச் சாய்ந்து படுத்துப் பால் கொடுத்துட்டு இருந்தது. நான் அப்பக் கையில ஸ்கிப்பிங் கயிறேட மாடிக்குப் போனேன். என்ன செஞ்சுக்கிட்டு இருக்குன்னு சரியா விளங்காமக் குட்டிங்க மேல படற மாதிரி கயிறுல அடிச்சிட்டேன். அவ்வளவுதான். ரீட்டா எம்மேல பாய்ஞ்சு குதற நான் அலறின அலறல்லே காலனியே திரண்டு வந்துடுச்சு. ஒரு வாரம் ஜுரத்துல படுத்திருந்தேன். அதுலேயிருந்து பூனையைக் கண்டாலே பயம்.''

மாயாவுக்கு 'ஃபோபியா – அர்த்தமற்ற பயம். சின்ன வயசில் நடந்த நிகழ்ச்சி மனசில பதிஞ்சு பாதிச்சிருக்கு!

''மாயா... பூனை தன் குட்டிகளுக்குப் பாசத்தோட பாலைச் சுரந்து கொடுத்துட்டிருக்கிறப்போ நீ நடந்துகிட்ட விதம் அதனேட தாய்மை உணர்ச்சியை அவமானப்படுத்தியிருக்கு. அதனலதான் உன் மேலே பாய்ஞ்சிருக்கு!''

''நான்வேணும்... பண்ணலையே டா... டர்!''

''பட்... அந்த... பூனைக்கு அது பு... யாதே. சரி... இ... எத்தனையாவது மாசம்?'' மாயாவைக்கேட்க... மாயா சின்ன வெட்கத்துடன் ''தேர்... மன்த்'' என்றுள்.

மாயாவும் மாதவனும் கிளம்பினர்கள்.

மறுநாளும் வந்தார்கள்.

வேணி மேஜை டிராயரைத் திறந்து புசுபுசு... வென்ற ரோமத்துடன் இருந்த பூனைப் பொம்... மையை எடுத்து மாயாவிடம் கொடுத்தாள்.

மாயா பயத்துடன் வாங்கினள்.

''மாயா...பொம்மைதான்... கைதேர்ந்த சிற்பியின் கைவண்ணத்திலே அழகாச் செய்யப்பட்டிருக்கு... எவ்வளவு தத்ரூபமா இருக்கு பாரு!''

மாயாவுக்குச் சற்றுப் பயம் தெளிந்தாற் போல் இருந்தது.

ஆயிற்று. இன்றேடு எட்டாவது நாள். ஒன்பதாவது நாளன்று—

''டாக்டர்.... உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்... நேத்து கோயில் போகும்போது லேடி டாக்டர் சீதாலட்சுமி வீட்டு வாசல் வழியாப் போக வேண்டியிருந்தது. அப்ப அந்த வீட்டு வாசல்லே சின்னக் குழந்தை படியில. பக்கத்துல வேகமா போச்சு ஒரு பூனை. என்னேட உணர்வுகள் உந்தப்பட வேகமாகப் போய் பூனையைத் தூக்கி வேற பக்கம் விட்டுட்டேன். அப்பவே பயம் போயிடுச்சு!'' என்றுள் மாயா.

''பாத்தியா மாயா... ஒரு தாய்மை உணர்ச்சியோடதான் நீ அந்தக் காரியத்தைச் செஞ்சிருக்கே!'' என்றுள் லேடி ஸைக்கியாட்ரிஸ்ட், முதல் நாள் தன் தோழி சீதாலட்சுமியிடம் சொல்லி மாயா வரும் நேரத்தில் குழந்தையையும் பூனையையும் இணைத்து ஒரு சின்ன நிகழ்ச்சி நடத்தியதை மனத்திற்குள் நினைத்துக் கொண்டே.

மனேதத்துவக் கதை

கடற்கரை. மணல் இல்லை. பட்டாணி சுண்டல் இல்லை.

வாசந்தி காத்திருந்தாள். அவள் பார்வை அந்த போர்டில் நிலைத்தது. 'கடற்கரை—சந்திப்பு' என்ற பீச் ஸ்டேஷன் பலகை. ரயில்வே ஸ்டேஷனில் மணலாவது, சுண்டலாவது!

அவள் மனத்தில் குழப்பம். அப்பாவுக்கு இப்படி ஒரு சோதனையா! சே, இன்கம் டாக்ஸ் ரெய்டு நடத்தி... பாவம் அப்பா.

'ஹாய் வாசந்தி' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தாள். மகேஷ். மாடர்ன் இளைஞன். அழுக்கு ஜீன்ஸ்: அடங்காத தலைமயிர்; விருது வாங்கத் தகுதியான கிருதா. ரஜனி மீசை (தில்லு முல்லு ரஜனியல்ல!) ஒ.ஸி. ஸ்கூட்டர் சவாரியில் வந்துவிட்டான்!

''என்ன முனகிண்டு நிற்கிறே?''

''இல்லே காதலர்கள் பீச்சிலே, பார்க்லே சந்திப்பாங்க...நாம இப்படி ஸ்டேஷனில்..''

''பெண்ணே... ஸ்டேஷன்லே சந்திப்பது ரொம்ப நல்லது. வெயிட் பண்றது ரயிலுக்கா காதலுக்கா என்றே தெரியாது. பைதபை... போர்டிலே பாரேன் 'கடற்கரை சந்திப்பு'ன்னு தானே போட்டிருக்கு!''

''போதும்... 'பிளேடு மழை பொழிகிறது, ஒவ்வொரு துண்டிலும் உன் குரல் கேட்கிறது'ன்னு பாடலாம் போல இருக்கு!'' என்று உதட்டைச் சுழித்தாள் வாசந்தி.

ஹோட்டலில் குடும்ப அறைக்குள் காதலர்கள் நுழைந்தார்கள். சற்றே இருட்டான இடம். குளுகுளு வசதி.

''மகேஷ்... நேற்று பெரிய கலாட்டா வீட்லே. வருமான அதிகாரிகள் வந்து... ரெய்டு....'' மெலிதாகப் பேசினாள்.

''அட கஷ்டமே! வருமானம் இருக்கோ இல்லையோ, இப்படி நடந்தால் மானமே போகுமே! மூணு வாரம் முன்னாடியே உன் அப்பா 'பேரர்' பாண்ட்ஸோ, பேத்தி பாவாடையோ வாங்கல்லியா?''

''ச்சீய்.. எப்பவும் தமாஷ்தானா மகேஷ்? நான் உங்க கூடப் பேசப்போவதில்லே.'' பொய்க் கோபம் காட்டினாள்.

சர்வரிடம் ''ரெண்டு பாசந்தி, மெது பக்கோடா — மெதுவாக் கொண்டா... ரெண்டு கிரேப் ஜூஸ்....'' என்றான்.

''ஏய்... பாசந்தி... சே... வாசந்தி.. என்னாச்சு? எவன் டிப்ஸ் கொடுத்தான்?''

''எதுக்கு? யாருக்கு? சர்வருக்கா?''

''இல்லே... வருமான வரி அதிகாரிக்கு?'' என்று சொன்ன மகேஷ் வாசந்தியைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

ஒரு கரப்பான் பூச்சி சட்னி ஆற்றில் குளித்து, எழுந்து, சாம்பார் குளத்தில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தது. எதிர்பாராமல் பறந்து வந்து, வாசந்தியின் முதுகில் ரவிக்கையில் சமர்த்தாக அமர்ந்தது. பட்டென்று அதைத் தட்டிவிட்டான் மகேஷ்.

வாசந்தி சகஜ நிலைக்கு வந்தாள். அப்போது எதிரேயிருந்த மூதாட்டி, ''அட! கரப்பு உன்கிட்ட வருதே.. பணம் நிறைய இருக்கு போல..'' என்றபடி மீதியிருந்த மோரை உறிஞ்சிக் குடித்தாள்.

வாசந்தியின் மூளையில் மின்னலடித்தது. அந்த மூதாட்டியை அதிக வாத்சல்யத்துடன் பார்த்தாள். புத்தனுக்குப் போதி மரம். வாசந்திக்கு மூதாட்டியின் பொன் மொழி!

''மகேஷ்! இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு! வீட்லே தண்டச் சோறு சாப்பிடற அத்தை பிள்ளை செல்லப்பன்தான் இன்கம் டாக்ஸ் ஆபீஸுக்குத் தகவல் சொல்லி யிருப்பான்!'' என்றாள் விழிகள் மின்ன.

''அது எப்படி?''

''எங்க வீட்லேயும் நிறைய கரப்பான் பூச்சி பறக்கும். அம்மா அடிக்கடி சொல்வாங்க... கரப்பு இருந்தால் பணம்—லட்சுமி பூச்சின்னு இந்த செல்லப்பன் — இனிமேல் அவன் எட்டப்பன் — கரப்பு, பணம்னு கேட்டுட்டு முடிச்சுப் போட்டு என் மேலே உள்ள கோபத்தை இப்படி தீர்த்துண்டான் போல இருக்கு! நல்லவேளை .. ரெய்டு செய்ய வந்த ஆபீஸர் கடைசிலே 'ஐ'ம் சாரி வரதாச்சாரின்னு' சொல்லிட்டுப் போயிட்டார். போறச்சே என்னையும் அன்பா பார்த்துட்டுப் போனார்!''

மகேஷுக்கு இப்பொழுதுதான் புரிந்தது. தன் மாமா — வருமான வரி ஆபீஸர் — நேற்று இரவு கல்யாணப் பேச்சை ஏன் ஆரம்பித்தார் என்று! 'ரெய்டு'க்குப் போன இடத்தில் மருமானுக்கு ஜோடி பார்த்துட்டாரா?

''வாசந்தி! காதலின் நிறம் கறுப்பு'' என்று ஆரம்பித்து விளக்க ஆரம்பித்தான்.

''ஆரம்பமா... அறுப்பு....'' என்று சுணங்கினாள் அவள்!

—பாமா கோபாலன்—

நகைச்சுவைக் கதை

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

5




ா இவன்! நிதிமந்திரிய
க்கற மாதிரி உதவி
யின்னு உயிரெ வாங்கு
ன்! வேற, வேலக்கிப்
ற பொண்ணே
டைக்கலியா ஒனக்கு?
அய்யோ, அப்பா! இந்த ஆளுக்குப் பாருங்க, மூக்குக்குக் கீழே ரெண்டு கொடு வாள்!
போது கொடுவாள் மீசை
ட் ஒரு முரடன்
ரென்று உள்ளே பாய்ந்து
தான்
நீதானேய்யா காசி? நீதானேப்பா பன்னீரு?
அவன்தான் காசி, நான்தான் பன்னீருன் னுத்தான் ஒனக்கு என்ன வித்யாசமா தெரியப் போவுது?
யோவ், எங்கிட்டயா விளையாடறே? தொலச்சுப்புடுவேன் தொலச்சு!
நீதானே எங்க ஜம்னுப் பொண்ண லவ் பண்றே?
ஆமாம்பா, தெரியாத்தனமா லவ் பண்ணிப் புட்டேன்!
வ் கஞ்சிலிங்கம்!
ன் எங்க ஜம்னுவைக்
டிக்கிட்டு ஓட்டல்னும்
க்குன்னும் அலையுறன்.
ள உட்டுட்டு வேற
நக்கானும் ஒம் பைய
கட்டி வச்சே, ஒன்னக்
டி வச்சு உரிச்சு
ருவேன்.
உரிச்சுப்புட்டு அப்டியே உட்ருவியா? வைத்யம் கித்யம் பாக்க மாட்டியா?
டே பன்னீரு, ஒங்க அப்பாவுக்குப் புரியும் படியாச் சொல்லிடு. நான்தான் ஜம்னுவோட மாமன்! அவள ஏமாத்தினே, நீயும் தொலஞ்சே!
ஐயா பேரு என்னுன்னு சொல்லலியே?
பேரா? காடுவெட்டி,
வெட்டி, அசைஞ்சா
வட்டி, முறைச்சாவெட்டி
ாத்துக்குடி முத்து!
பகம் இருக்கட்டும்,
ரேன்!
இதென்னப்பா, கெணறு வெட்டாமயே பூதமா வந்திட்டானே இவன்......
மீசாவக் காட்டி பயமுறுத்துவாங்க, கேள்விப்பட்டிருக்கேன். மீசையக் காட்டி இல்லே பயமுறுத்துறன் இவன்!
தொடரும்

யார் செலவில்

சௌந்தர்யன்

[நடுத்தர வீடு; எழுபதைத் தாண்டியவர் இன்றோ நாளையோ என்று கூடத்துக் கட்டிலில் இழுத்துக்கொண்டு கிடக்கிறார். செல்லப்பா, தியாகு, மூர்த்தி அந்தப் பெரியவரின் அருமைப் பிள்ளைகள்.]

செல்ல: நான் அப்பாவுக்கு மூத்தவனாய்ப் பிறந்தேனே தவிர, எனக்குன்னு இது வரைக்கும் எதுவுமே செஞ்சதில்லேஅப்பா. ஏதோ படிக்க வச்சார்... அப்புறம் நானா முயற்சி பண்ணி முன்னுக்கு வந்தேன். அப்பாவுக்கு எந்தத் தொந்தரவும் கொடுக்காம ஒதுங்கி வாழ்ந்தேன்...

தியாகு (குறுக்கிட்டு): இதை யெல்லாம் இப்ப யாரு கேட்டா... அப்பா இப்பவோ இன்னும் கொஞ்ச நேரத்துலயோ போய்ச் சேரப் போறது நிச்சயம்னு டாக்டர் சொல்லியாச்சு. அவருடைய கடைசிச் செலவுகளுக்குப் பணம் வேணும்.... நீ எவ்வளவு தரப்போறே?

செல்ல: மூத்தவன் கரத்தினலே கொள்ளி வச்சுடறேன்...

தியாகு: ம்... அம்மா அப்பாவை நான் வச்சிண்டதுக்கு இப்படியெல்லாம் பழியா? சாப்பாட்டுக்குன்னு நூறு ரூபாய் தந்திட்டு மத்ததெல்லாம் அவரே செலவு பண்ணிடுவார்...

மூர்த்தி: அடப் பாவி.... பணம் வாங்கிட்டுத்தான் அம்மா அப்பாவுக்கு நீ சோறு போட்டியா?

தியாகு: அதுகூட உங்க ரெண்டு பேருக்கும் வக்கில்லேயே...பெண்டாட்டிக்குப் பயந்தவர்களாச்சே?

செல்ல: சரி...சரி... நீங்க ரெண்டு பேரும் என்னைவிட நிறையச் சம்பாதிக்கிறீங்க... ஆளுக்குக் கொஞ்சமாப் போட்டு எல்லாக் காரியத்தையும் பண்ணுங்க. அம்மாவுக்கு இப்படி ஆகும்போது நானே எல்லாச் செலவையும் பார்த்துக்கறேன்...

மூர்த்தி: சே...சே... என்ன பேச்சு இது... ம்... இந்தக் கிழமாவது ஒவ்வொருத்தராட்டம் சொத்துக் கித்து வச்சிருந்தா இப்படிச் சாவுச் செலவை நாம ஏலம் போட வேண்டாம்... அண்ணா... என்னால முடிஞ்சது முந்நூறு ரூபா தந்திடறேன். தியாகு நீ எவ்வளவுடா...

தியாகு: நானும் முந்நூறு ரூபா தந்திடறேன்...

செல்ல: சரி... நான் கொள்ளி வைக்கிறேன். நூறு ரூபா தந்திடறேன். ஆனா, அப்புறம் வருஷ திவசத்துக்கெல்லாம் நீங்கதான் பணம் கொடுக்கணும்...

[இப்பொழுது கிழவர் பயங்கரமாய் இருமுகிறார். மூவரும் அவர் அறைக்குள் செல்ல... கிழவர் தலை சாய்கிறது. கிழவி அழாமல் நிதானத்தோடு ஒரு கடிதத்தை அவர்களிடம் தருகிறாள். அதில்....]

செல்ல (படிக்கிறான்): நான் இறந்துவிட்டால் என் காரியங்களுக்குப் பணம் இல்லாமல் என் பையன்கள் அவதிப்படக்கூடாது என்று பென்ஷன் பணத்தில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து ரூ. 2000 என் பெட்டியில் வைத்திருக்கிறேன், எடுத்துக்கொள்ளவும். —**திரை**

லக்மே அறிமுகப்படைப்பு: பரதநாட்டின் முதன்முதல்:
புரதச்சத்துக் கண்டிஷனர் அடங்கிய ஷாம்பூ.
அழகுத் தூய்மையளிக்கும், உமது கூந்தலின் குறைதிருத்தும், பளபள புதுவளக் கட்டமையப் பண்படுத்தும்.
ப்யூட்டி & எக்
60 மிலி & 120 மிலி
Lakmé
SHAMPOO & CONDITIONER
Beauty
Lakmé
SHAMPOO & CONDITIONER
Egg
Lakmè
மயிரிழைகளைத் தாக்கித் துவண்டு போக வைக்கும் சாதா ஷாம்பூக்கள் இனி எதற்கு ? உமது கூந்தலைப் பண்படுத்த இதோ விஞ்ஞான முறைப்படி வளமூட்டிய லக்மே விசேஷ ஷாம்பூ.
வாடி நொடித்த மயிரிழைக்கு உயிரூட்டும் புரதச் சத்து, லக்மே ஷாம்பூவிலுள்ள கண்டிஷனர். இது மயிரிழைகளின் குறை திருத்துகிறது.
சரிவிகிதப் பொருத்த முடைய அதன் உள்ள மைப்பு கேச நலம்
ஓங்கவைத்திடும் :
ஷாம்பூவின் காரப்பங்கும் அமிலப் பங்கும் சரிக்குச்சரி பொருந்தியிருப்பது (pH சரிவிகிதநிலை) ஒரு சிறப்பாகும்.
இயல்பான சரிவிகித குணநிறைவு பெற்ற ஷாம்பூ:
சாதா ஷாம்பூக்கள் பெரும்பாலும் காரகுணம் மிகுந்தவை. ஆதலால் மயிரிழை பிளந்து வாடிவிடும். மாருக அதிக காரம், அதிக அமிலம் இல்லாத நல்லுசித நிலையில் உள்ளது லக்மே ஷாம்பூ. எனவே கூந்தலுக்கு அதிக வலிமை. நெகிழ்வுத்தன்மை...சிக்கல் விழாக சீர்நிலை. நீடித்த நறுமணம். இனியும் உமக்கேன் சிகைக் சேதம்? உபயோகிப்பீர் வேளைதவருமல் லக்மே ஷாம்பூ.
daCunha/L-Sham./127/T.

வலைக்குப்
போகும்
பெண்
பு:
ணல் தங்கவேலு
ள்:
ாருகேசி, தமயந்தி
திரம்:
சல்லம்
ட்டோ: உத்ரா
6
என்ன, அப்பாவும் புள்ளையும் கொரங்கப் பறி குடுத்த ஆண்டி மாதிரி உக்காந்திருக்கீங்க?
ஒண்ணையும் பறிகொடுக்காமயே ஆண்டி மாதிரி தான் இருக்கோம் நாங்க! நீ போய்ட்டு வந்த சமாசாரம் என்ன ஆச்சு?
ரம்பூர் போய்ட்டு
த பொண்ணைப்
த்துட்டுத்தான்
ாரேன்.
பின்னே பெரம்பூர் போய் ரயில் பெட்டித் தொழிற்சாலையா பாத்திட்டு வருவே நீ?
பொண்ணுக்கு அழகு, படிப்பு எல்லாம் இருக்கு. ஆனா வேலைக்குப் போகலியாம்.
ஒண்ணு பண்ணேன் அமிர்தம். ஒவ்வொரு நாளைக்கி ஒவ்வொரு ஆபீசு வாசல்லியும் போய் நில்லு. இல்லே உக்காரு. கல்யாணம் ஆகாத பொண்ணப் பாத்துப் புடிச்சிக்கிட்டு வந்து பண்ணிருக்குக் கட்டி வையி!
ப்பர்லே
க்கறீங்க
லே?
னமா
ம்பரம்
ரான்....
ஜ்ஜா,
வி,
வாட்டற
ஷிலு....
தெல்லாம்
ன எப்
த்தான்
ங்கற
ம்?
அட ராவணா! ஒவ்வொருத்தன் புள்ளைக்கிக் கல்யாணமாயி பேரன் பேத்தி எடுக்கணும்னு ஆசைப்படுவான். இவ என்னடான்னா...
அப்பா, மீசைக்கார மாமன் மறுபடி வரதுக்குள்ள நீங்க எனக்கு ஜம்முனு வைக் கல்யாணம் பண்ணி வைக்க ஏற்பாடு பண்ணுங்க. இல்லே, அவன் மீசைலே ஒரு கொம்புல நீங்களும், இன்னொரு கொம்புல நானுமா தொங்க வச்சிருவான்!

தொங்க வக்கிருனே இல்லே கல்யாண ஊஞ்சலா ஆட வக்கிருனே?
அப்பா, முதல்லே ஜமுனுவோட அழகுக்காகத்தான் அவளக் காதலிச்சேன். ஆனா இப்ப அவ மாமனோட மீசையப் பாத்துப் பயந்துதான் அவளக் கல்யாணம் பண்ணிக்கனும் போலிருக்கு!
கல்யாணத்துக்கு அப்புறம் அவ அழகப் பாத்துப் பயந்துப்பே, அவன் மீசையப் பாத்து ஆசைப்படுவே! டேய்... மறுபடி வர்றாண்டா அந்த மீசைக்காரன்!
யாரய்யா நீ? கொஞ்சம் மெதுவாச் சிரிக்கமாட்டே? ஊடு மொத்தமும் இடிஞ்சு விழுந்துடும் போலிருக்கே!
விழட்டுமே! அதுக்கும் மருமககிட்ட விடா கொண்டு வரச்சொல் லிடுங்க!
யாருப்பா நீ? ஏதானும் பொண்ணுக்கு அப்பாவா? பொண்ணு கல்யாணத்துக்கு நிக்குதா?
பொண்ணப் பாத்துட்டாப் போச்சு. ஏம்பா, ஒம் மருமவ காலேஜ் படிப்புப் படிச்சிருக்கா?
நல்லாப் படிச்சிருக்கு. அத விட ஒங்க புள்ளக்கி அவள நல்லாப் புடிச்சிருக்கு! நான் வாரேன்!
டேய் பன்னீரு! அதுக்குள்ள எனக்குத் தெரியாமயே போயி பொண்ணப் பாத்துட்டியாடா?

JOHNSON
மிக்ஸர் கிரைண்டர்

புதிதாக மாற்றியமைக்கப்பட்டதால் மேன்மையாக இயங்குகிறது: விரைவாகவே குளிர்ச்சியடைகிறது.

தீவிர ஆராய்ச்சி மற்றும் கடும் உழைப்பின் விளைவாக ஜான்ஸன் அளிக்கும் புதிய, மேன் படுத்தப்பட்ட மிக்சர்-கிரைண்டர் எல்லா வேலைகளையும் சிறப்பின் சிகரமாகச் செய்கிறது.

கிளர்ச்சியூட்டும் புது அம்சங்கள் பாரீர்!

முழுமையான செயலாற்றலுக்காக தனிச்சிறப்பு வாய்ந்த பிளேடுகள்

இரு கிண்ணங்களிலும் அமைக்கப்பட்ட புதிய பிளேடுகள் மேலும், கீழும் மற்றும் சுழன்றும் இயங்குவதால் முழுமையான செயலாற்றல் கிடைக்கிறது. கட்டிகளோ, தானியங்களோ இருக்க வாய்ப்பில்லை.

மேல்பாகத்தில் இடைவெளி இருப்பதால் துரித குளிர்ச்சி

சூடான காற்று துரிதமாக மேல்பாக இடைவெளியிலிருந்து வெளியேறுவதால் மோட்டார் சூடாகாமல் 45 நிமிடங்கள் தடையின்றி இயங்க முடிகிறது. சாதாரணமாக மோட்டார் எரிந்துவிடும் அபாயமில்லை.

புதிய கலவை கிண்ணம் தாராளமான காற்றேட்டத்திற்கென.



கலவைகிண்ணத்தின் வளைந்த உட்பாகம் பிளேட் இயங்குவதற்கு வாகாக அமைக்கப்பட்டிருக்கிறது. சீரான கலவை கிடைப்பதோடு சரியான அளவுதான் இதில் அடங்கும்.

எவர்சில்வர் கிண்ணத்தில் சீரியமுறையில் அமைக்கப்பட்ட கைப்பிடி

சீரிய முறையில் அமைக்கப்பட்ட கைப்பிடி எவர்சில்வர் கிண்ணத்தைக் கையாள எளிதாகவும், சௌகரியமாகவும் இருக்கிறது.

சுகாதாரத்திற்கென இரு கிண்ணங்கள்; பாதுகாப்புக்கென இரு பிளேடுகள்

இரு தனி கிண்ணங்கள் இருப்பதால் கலவை செய்தவுடன் கழுவும் தொல்லையில்லை. வேறு கிண்ணத்தில் அரைக்கலாம். சிரமம் குறைவு. மில்க் ஷேக்குகளில் மசாலா மணம் கலப்பதில்லை. உறுதியாக இணைக்கப்பட்ட பிளேடுகள் முழுமையாக பாதுகாப்பு அளிக்கின்றன. இயங்கும்போது பிளேடுகள் பறந்து செல்லும் அபாயமில்லை.

ஜான்ஸன் மிக்ஸர் கிரைண்டரின் முதன்மையான சிறப்பு அம்சங்களும் இதிலே உள்ளன.

- துப்புரவாகச் சுத்தம் செய்ய எளிதாகக் கழற்றக்கூடிய பாகங்கள்
- செம்மையாக வேகத்தை மாற்ற மேன்மையான இஞ்சர் விசை.
- ஒரு வருட உத்திரவாதம் மற்றும் சிறப்பான பின் விற்பனை பணி.

JOHNSON

ஆற்றலிலும், இயக்கத்திலும் இணையிலாச் சிறப்பு கொண்டது.

Parade/BE/8122

பிரிட்டானியா
பால் பிஸ்கட்

வளரும் குழந்தைகளுக்கு
சுவையான துணை

சத்துமிகுந்த,
சுவையான
பிரிட்டானியா
மில்க் பிக்கிஸ்

லின்டாஸ் BBC.MB-3-172-TM

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

7

பொண்ணு எல்லாம் பாக்க வுாணும் அமிர்தம்! அவ வேலைக்கிப் போருளா இல்லியான்னு மட்டும் கேட்டுக் கிட்டாப் போதும்! ஏண்டா பன்னீரு, ஒனக்குத் தரியுமாடா?
யாருப்பா, ஜமுனாவா? ஆகா...ம்...வாந்து...ம் ...போறப்பா! வேலைக் குத்தானே போறளே!
பின்னே என்ன? புடிச்சிருந்தா முடிச்சிடறது!
அம்மா, அம்மான்னு நீதான், அம்மா! மத்தவங்க எல்லாம் சும்மா.
டேய் டேய், உடுடா, இல்லே, கையிலே இருக்க றதைக் கன்னத் திலே பூசிப் பிடுவேன்!
அவ வேலைக்கிப் போறதில்லேன்னு தெரிஞ்சா, அம்மா கல்யாணத்தையே நிறுத்திடுவாங் களே அப்பா! என்ன பண்றது.
அட பயந்தாங் கொள்ளி மகனே, பயப்படாதே! முன்னாலே கல்யாணம். அப்புறமா வேலை.
தொடரும்

அகில உலக இந்து மாநாடு 1982

இந்து சமய ஏற்றத்தைப் போற்றவும், எழுச்சியை ஊட்டவும்,
ஆன்மீக வளர்ச்சியை அகில உலகெங்கும் பரப்பவும்

இலங்கையில் கூடுகின்றது

அகில உலக இந்து மாநாடு.

நாள்:- **1982 ஜனவரி 22ஆம் திகதி முதல் 1982 ஜனவரி 26ஆம் திகதி வரை**
ஐந்து நாட்களுக்கு நடைபெறும்.

இடம்:- கொழும்பு

- ★ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்.
- ★ இராமகிருஷ்ணமிஷன் சர்வதேச மாநாட்டு மண்டபம்.
- ★ கதிரேசன் மண்டபம்.
- ★ டவர் மண்டபம்.
- ★ சரஸ்வதி மண்டபம்.

நிகழ்ச்சிகள்:-

- ★ இந்து சமய ஆராய்ச்சிக் கருத்தரங்கு.
- ★ சமய நூல்கள், சிற்ப ஓவியக் கண்காட்சி.
- ★ கலை நிகழ்ச்சிகள்.
- ★ கலாசாரச் சுற்றுலா

முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

கலந்துகொள்வோர்கள்:- அகில உலக இந்துசமய சாதுக்கள், துறவிகள், சமயப் பெரியார்கள், யோகிகள், குருமகா சன்னிதானம், அறிஞர்கள், கவிஞர்கள் யாவரும் ஒன்று கூடுகின்றார்கள். ஆன்மீக அறிவூட்டும் கருத்துக்களை இந்து சமய மக்களுக்கு இம்மாநாட்டின் வாயிலாக வழங்க இருக்கின்றார்கள்.

தபால் பெட்டி இலக்கம்: 1700,
244, காலி வீதி, கொழும்பு-4.

பிரதேச அபிவிருத்தி, தமிழ்மொழி அமுலாக்கல்,
இந்துசமய இந்து கலாசார அமைச்சு.

Gold Star®
Suitings
Suitings
A SHREE RAM SILK PRODUCT
tomorrow is here

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

8

டேய், அதுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கு.
என்ன மாமா அது?
என்னய்யா அது?
என்னப்பா அது?
சொல்றேன், சொல்றேன். அதாவது – ஜமுரு வேலைக்குப் போற மாதிரி நடிக்க வேண்டியது! தினம் கௌம்பி ஆபீசுக்குப் போற மாதிரி பத்து மணிக்குக் கிளம்பிடணும்!
கிளம்பி எங்கே போறது?
கிளம்பி இங்கேயே வந்துடு. சாயந்தரம் அஞ்சுமணி ஆனதும் இங்கிருந்து கிளம்பி வீட்டுக்கு வந்துடு. அப்டித்தானேப்பா?
ஆமாடா! அது ஒண்ணுதான் வழி! ஆமா, சம்பளப் பணம் கேப்பாளே ஒங்க அம்மா?
என் கல்யாணத்துக்குத் தர பத்தாயிரம் ரூபாயை பாங்கியிலே போட்டுறலாம். மாசா மாசம் அதிலிருந்து எடுத்து அம்மாட்ட சம்பளமா கொடுத்திடலாம்.
ஐடியா!
பத்தாயிரம் ரூபாயா! யார் தரப்போறு?
அடப்பாவி! பிரச்னைக்கு வழி கண்டுபிடிச்சாக் கூட சமாளிக்க உட மாட்டான் போலிருக்கே இவன்!
தொடரும்

தமிழ்ப் பழங்கலை இயக்ககம், தமிழ்நாடு அரசு

இலக்கியச் சிறப்பும் கலை மாண்பும் அமைந்த பழம் பெரும் நூல்கள் பல அச்சேறாமல் ஓலைச் சுவடிகளாகவே பலரிடம் உள்ளன. சில நூல்கள் முதற்பதிப்பு மட்டும் வெளிவந்து மறுபதிப்பில்லாமல் பல்லாண்டுகள் நின்றுள்ளன. காவியங்கள் தவிர, வைத்தியம், சிற்பம், ஓவியம், இசை, வானியல், விலங்கியல், தாவர இயல் போன்ற பல துறை களையும் சேர்ந்த பழங்கலைச் சுவடிகளையும் திரட்டி அச்சிடவேண்டும் என்று தமிழ்நாடு அரசு விரும்புகிறது. முன்னோர்கள் வழங்கியுள்ள இத்தகைய சுவடிகளைத் தம்வசம் வைத்திருக்கும் அன்பர்கள், நூல்களை அனுப்பாமல், முழுத் தகவலும் அடங்கிய பட்டியலை மட்டும் முதலில் அனுப்பிக் கடிதம் எழுதினால் மேற்கொண்டு தொடர்புகொள்ள வசதியாக இருக்கும்.

எழுதவேண்டிய முகவரி.

மீ.ப. சோமசுந்தரம்,
இயக்குநர்,
தமிழ்ப்பழங்கலை இயக்ககம்,
603, 6வது மாடி,
தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.
தொலைபேசி எண் : 32887

ஆராதனை

நம்ப முடியாத கதை. அழகான மலைப் பிரதேசம். பணக்கார அனாதை வசந்த் மேல் இந்துவுக்குக் காதல். குளுமையான பின்னணிகளில் டூயட் பாடிவிட்டு வீட்டைக் காட்ட இந்துவை ஒரு தேர்ந்தெடுத்த நாளில் அழைத்து வருகிறான். வசந்த் மாளிகையைச் சுற்றிக் காட்டும்போது,வேலைக்காரன் மூலமாய் வசந்த் ஒரு ஸ்திரீலோலன் என்று கேள்விப்பட்டுஅதிர்கிறாள். ஓடிப்போய்அப்பா பார்க்கும் ப்ரதீப்பை மணக்கிறாள். அம்போ என விடப்பட்ட வசந்தோ இந்துவை அடைய பில்லி சூனியம் செய்கிறான். வெள்ளி அமாவாசையில் ஆடு பலி தந்து, பேய் சவகாசம் பெற்று — இந்து ப்ரதீப்பை நெருங்க விடாமல் தடுத்து — நடுவில் செத்து — பின் பேயாக இந்துவை வா வா என அழைத்துக் கடைசியில் சாமியார் தந்த சாமி சிலையால் புகையாகி மறைகிறான். இத்தனைக்கும் காரணம், ப்ரதீப் என்று சஸ்பென்ஸ் சொல்கிறார்கள். அவன்தான் இந்துவை அடைய வசந்த் பேரில் அவதூறு — வேலைக்காரன் மூலம் சொன்னவன். வசந்தின் நண்பன். ஆனால் நமக்கு இது ஆரம்பத்திலேயே புரிந்து போய்விடுகிறது.

வசந்தாய் வரும் சுமன் நிச்சயம் முன்னேறியிருக்கிறார். இந்து — சுமலதா முகத்தில் காதல் வழிகிறது. கோபம்கூடத் தெறிக்கிறது. தீர ஆராயாமல் வசந்தைக் கழற்றி விட்டிருக்க வேண்டாம். காதலின் மகிமையே சாகிறது. மித்ர த்ரோகி ப்ரதீப்பாய் வரும் ரவி நிழல்களில் பெற்ற பெயரைக் காப்பாற்றிக் கொள்கிறார். சுமலதாவுக்கு அம்மாவாய் சுமலதாவின் அம்மாவே நடிக்கிறார். பூபதி தலைகாட்டி மறைந்து போகிறார்.

சவீதாவின் வசனங்கள் சுமாருக்கு மேல். கேமராவும் மியூஸிக்கும் சேர்ந்து நிறையப் பயமுறுத்துகின்றன. காரை வழிமறிக்கும் நாய்களும், கழுத்தை நெரிக்க வரும் குழந்தையும், பூதமாய்க் காட்சி தரும் இந்துவும் படத்துக்கு 'ஏ' முத்திரை குத்த வைக்கிறார்கள். வைரமுத்து கங்கை அமரன் பேனாக்கள் விளையாடுகின்றன. கண்களைக் கஷ்டப்படுத்தாத காமிரா. காதுகளைக் கஷ்டப்படுத்தாத இசை.

சுமலதா	0—25
ரவி	0—25
சுமன்	0—30
சுமனுக்கு ஸ்பெஷலாக (ஆவி அழியும் காட்சிக்கு)	0—20
திகில்	1—40
கேமரா	0—50
இசை	0—50
	3—40
கொடுப்பது ரூ	2—90
திகில் பிரியர்களுக்கு லாபம்	0—50

இடை வேளை வரை சிக்கலில்லாத காதல் கதையாகக் கொண்டு செல்லும் டைரக்டர் பிரசாத் அதற்குப் பிறகு மசாலா மந்திர-வாதி கணக்காக பேய் என்றும் பில்லி சூன்யம் என்றும் பயமுறுத்தி .... ஓமன், எக்ஸார்ஸிஸ்ட் ஆகியவற்றுக்குப் பிறகு இது தானே ஃபாஷன்! இடை வேளை வரை ஆராதனை இடைவேளைக்குப் பின் ஆ! ரோதனை!

—நளினி சாஸ்திரி

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

9



ஆமாடா, உனக்கு ஒங் கவலெ. சொல்லுங்க மாமா, வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டுண்ணு- கட்சிங்க பொள்க்கற மாதிரி!
ஊருக்குப் போயிருக்கற ஜம்னுவோட அம்மாவும் அப்பாவும் நாளக்கி வராங்க. வந்த உடனே முகூர்த்தம் தான், மோளம் தான். மூணு முடிச்சுத் தான்!
போங்க மாமா, எனக்கு வெக்கமா இருக்கு!
இருக்கற வெக்கத்தையெல்லாம் பத்திரமாச் சேத்து வச்சுக்க. கல்யாணத்தன்னிக்குக் கொஞ்சமாவது வெக்கப்பட வேண்டாம்?
அப்போ, அம்மா எந்தக் கம்பனிலே ஜமுனைவுக்கு வேலென்னு கேட்டா என்ன சொல்றது? எத்தனை சம்பளம்னு சொல்றது?
அட, இதுல என்ன கஷ்டம்? ஏதாவது வாய்க்கு வந்த பேரு ஒண்ணைச் சொல்றது! சம்பளம் ஐந்நூறு ரூபாய்ங்கறது.
அம்மா ஜம்னு, நீ இன்னிலெருந்து கபாலி ஏஜன்ஸீஸ்லே டைப்பிஸ்ட்! சரித்தானே?
அது ஏதப்பா கபாலி?
அது எங்கேங்க இருக்குது?
கபாலியா? அந்தக் கடவுள் பேரைத் தான் சொல்றேன். அவன் தான் நம்பளக் காப்பாத்தணும்!
தொடரும்

வியர்க்குரு, சரும எரிச்சல், கோடை நமைச்சல்
மற்றும் இதர சாதாரண சரும
நோய்களிலிருந்து நிவாரணம் பெற

உபயோகிப்பீர்

பெங்கால் கெமிகல்ஸ்

SULPHUR

ஸல்பர் ஸோப்

நாள் முழுவதும் உங்களைப் புத்துணர்ச்சியுடன் விளங்கச் செய்கிறது.

விசேஷமான நிவாரண குணமுள்ள ஒரு டாய்லட் ஸோப்–பெங்கால் கெமிகல்ஸ் ஸல்பர் ஸோப்! புத்துணர்சியூட்டும் குளுமையான ஸ்நான சுகம் மட்டுமல்ல! அதோடு கூட சரும எரிச்சல் நமைச்சல் இதர சாதாரண நோய்களிலிருந்து முழுபாதுகாப்பும் அடைவீர்-இன்றே ஸல்பர் ஸோப் வாங்குவீர் நாள் முழுதும் சுகத்துடன் பாதுகாப்பையும் பெறுவீர்

ASP/BC-1/81 TAM

இருமலா? இளைப்பா? தும்மலா?

பித்தத்தினல் ஏற்படும் மயக்கம், இருதயம் படபடப்பு நெஞ்சு வலி — பிடரி வலி — உடல் வலி — மலச்சிக்கல் — பசி மந்தம் ருசியின்மை — அடிக்கடி ஜலதோஷம் — ஓயா தும்மல் — நீர் வடிதல் தலைபாரம் — இருமல் — கோழைக்கட்டு — மேல் மூச்சு — இளைப்பு கர்முர்ரென்று இழுப்பு — உடல் பலஹீனம் — உடம்பு தேருமை அசதி — சோர்வு — களைப்பு — ஆஸ்துமாவின் ஆரம்ப நிலை

இவைகளிலிருந்து நிவாரணம் பெற, ஆரோக்கியம் பெற,

உங்களுக்கு பெரிதும் பயனளிக்கிறது

"சிவராஜ்" நெல்லிக்காய் லேகியம்

இரத்தவிருத்திற்கும், இளைத்த உடம்பு தேறவும் சக்தியளிக்கும் டானிக்

பவளசத்து, சிலாசத்து, சிருங்கி சத்து சேர்ந்தது	வெள்ளி ரேக் – பவளசத்து – பஸ்பம் கலந்தது
250 கிராம் புட்டி ரூ. 30-00	**250 கிராம் புட்டி ரூ. 40-00**

போஸ்டேஜ் இலவசம். V.P.P.யில் பெற எழுதுங்கள்

தயாரிப்பு: **சிவராஜ் சித்த வைத்தியசாலை**
(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுரமுள்ள ஏரியில்)
சேலம்-636007

குமரனை அணிந்திடும் நேரம்
குதூகலம்
பொங்கிடும்
நேரம்.
குமரன் சில்க்ஸ்
சுபதினங்கள்,
மங்கள நிகழ்ச்சிகள்,
பண்டிகைகள், பார்ட்டிகள்,
குதூகலமான, கோலாகல
இன்ப மயமான எந்த
நாளும், நிகழ்ச்சியும்
முழுமை பெறுவது —
குமரன்.
அசல் பட்டாடைகளை
அணிந்து பவனிவரும்
போதுதான் இது அத்தனை
ஆரணங்குகளும் அறுதி
யிட்டுச் சொல்லும் அழகு
இரகசியம். காஞ்சிபுரம்,
ஆரணி. தர்மாவரம்,
பனாரஸ் போன்ற அசல்
பட்டின் அத்தனை
வகைகளும் கண்டு மகிழ —
குமரன் கலைக்கூடம்.
குமரன் சில்க்ஸ்
(ஏர்கண்டிஷன்ட்)
12, நாகேஸ்வரராவ் ரோடு,
பனகல் பார்க் எதிரில், தியாகராயநகர்,
சென்னை-600 017. தொலைபேசி: 443544.

UIPC: KS: 176

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

10



வராமல்? கையில இருக்கிற பணம் தீர்ந்தா கண்ணை மூடிக்கிட்டு வீட்டுக்கு வர வேண்டியது தானே?
வாசலில் டாக்ஸி வந்து நிற்க, பன்னீரும் ஜமுனாவும் இறங்கி வந்தனர்.
வாங்க வாங்க. இப்பத்தான் உங்களைப் பத்திப் பேசிக் கிட்டிருந்தோம். வந்து சேர்ந்துட்டீங்க. நூறு ஆயுசு. நூற்றாண்டு விழா கூட அட்வான்ஸா கொண்டாடிடலாம்!
என்னடா, ஊட்டி கொடைக்கானல் எல்லாம் நல்லா பாத்தியா?
அவன் ஊரையெல்லாம் எங்க பாத்திருக்கப் போறான்? ஜமுனா முகத்தையே இல்ல பார்த்துக் கிட்டிருந்திருப்பான்!
ஐயு, போங்க மாமா!
அம்மா ஜமுனா, நீ வேலை செய்யிற ஆபீசு எங்க இருக்கு, என்ன பேரு எல்லாம் இவருக்குத் தெரியுமாம்மா?
எனக்குத்தானே? ஹாங்... தெரியுமே! ஆதிமூலம் அண்ட் கம்பெனி. அட்ரஸ் எல்லாம் தனியே எழுதி வச்சிருக்கேன்!
என்னது! ஆதிமூலம் கம்பெனியா! ஏதோ கபாலி ஏஜன்ஸின்னு இல்லே அன்னிக்குச் சொன்னீங்க?
ஆமாம்மா! கபாலி ஏஜன்ஸியே தான்! அப்பா, வக்கு எல்லாம் மறந்துடும்!
இதுல என்ன தப்பு? ஆதிமூலம் கம்பெனி வச்சிருக்கறவர்தான் கபாலி ஏஜன்ஸியும் வச்சிருக்காரு! ஆதிமூலம்னு என்ன, கபாலின்னு என்ன, எல்லாம் ஒண்ணுதானே!
ஆமா அத்தே, கபாலி ஏஜன்ஸிலே டைப்பிஸ்ட்டா சேர்றதுக்கு முன்னாடி ஆதிமூலம் கம்பெனிலே தான் இருந்தேன்!
சரி, இன்னிக்கு ரெஸ்ட் எடுத்துக் தூங்க ரெண்டு பேரும். நாளை யிலேர்ந்துதான் இருக்கவே இருக்கு, ஆபீசு-கலாட்டா எல்லாம்!
தொடரும்

ஸ்தாபிதம் : 1942 போன் : 123

லலிதா பார்மஸி

கும்பகோணம்

DRUG LICENCE No. 40 / 78

மத்திய அரசால் ஈட்டுத் தொகைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது

எமது விசேஷத் தயாரிப்புகள் :

ச்வாஸாசயத்திற்கு பலமூட்டவும், சரீர எடையை அதிகரிக்கவும்

1. ச்யவனப்ராசம்
2. காந்த பஸ்பம்
3. அயஸ்ஸிந்தூரம்
4. அச்வகந்தி தைலம்

கீழ்க்கண்ட எமது பிராஞ்சுளிலும் கிடைக்கும்

1. லலிதா பார்மஸி, 52, மஹாதானத் தெரு, மாயூரம், போன் : 379
2. லலிதா பார்மஸி, 81, வடக்கு ரத வீதி, சிதம்பரம்
3. லலிதா பார்மஸி, 6, ரெங்கநாதன் தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017, போன் : 441454
4. லலிதா பார்மஸி, 60-B, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை - 600 004, போன் : 73007

மற்றும் சிறந்த ஆயுர்வேத மருந்துகள் யாவும் கிடைக்கும்

20 கட்டுரைகள்
25 சிறுகதைகள்
30 கவிதைகள்
40 வண்ணச் சித்திரங்கள்.
'கோபுலு' வழங்கும்
வண்ண மேலட்டை
'சில்பி' அளிக்கும்
வண்ண முகப்புச் சித்திரம்
400 பக்கங்களுக்கு மேல்...

உங்கள் அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும் பரிசாக அளிக்க ஏற்றது.

ரூ. 15 மணியார்டர் செய்யுங்கள். நீங்கள் பரிசு அளிக்க விரும்புபவர்களுக்கு எங்கள் செலவில் பதிவுத் தபாலில் பரிசை அனுப்புகிறோம்.

இந்தச் சலுகை 9.10.1981 வரைதான்.

அமுதசுரபி

தீபாவளி மலர் '81

தீபாவளித் திருநாளுக்கு ஏற்ற பரிசு...

விலை ரூ. 15

அயல்நாடுகளுக்கு அன்பளிப்பு அனுப்ப விரும்புவோர் தொடர்பு கொள்க:

அமுதசுரபி

(ஸ்ரீராம் டிரஸ்ட்)
123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை 600 001.
போன்: 28545/37890.

ADWAVE/AS/1748

கல்கி
அக்டோபர் 25
தீபாவளி சிறப்பிதழ்
அதிக பக்கங்கள்
முழு நீள நகைச்சுவை
நாடகம்:
எஸ்.வி. சேகர் வழங்கும்
'நாடகப்பிரியா' வின்
காதிலே பூ
கதை வசனம்:
ஜி.கே.
விமலா ரமணி எழுதும்
புதிய தொடர்கதை
குமரிப் பெண்ணே
குயிலாளே!
உமாபதி

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

11



அப்பிடித்தான், அப்பிடியேதான்! பன்னீரு, அம்மா சொல்றபடியே செய்டா, புரிஞ்சுதா?
புரிஞ்சுக்கிட்டேன் அப்பா! நாங்க ரெண்டு பேரும் ஆபீசுக்கு ஒண்ணாக் கிளம்பணும். கிளம்பி அவங்க அவங்க ஆபீசுக்குப் போகணும். அவ்வளவுதானே? போயிட்டுறோம், போயிட்டுறோம்!
போயிட்டு ஜாக்கிரதையா திரும்பி வந்து சேருங்க.
ஜமுனாவும், பன்னீரும் ஆபீசுக்குக் கிளம்புகிறார்கள்.
ஜமுனா, ஒங்க வீட்டுக்குப் போய் ஹாய்யா உட்கார்ந்துக்க! வேணும்னு சுஜாதா, சிவசங்கரி, இந்துமதி, லக்ஷ்மி நாவல் எல்லாம் நிறைய லைப்ரரியிலேருந்து எடுத்துக்கிட்டு வந்து படி!
எப்புடிங்க எனக்குப் படிக்கத் தோணும்? எப்படாப்பா அஞ்சு மணி ஆகும், வீட்டுக்கு வந்து ஒங்களப் பார்க்கலாம்னுதான் இருக்கும்.
இன்னும் கொஞ்ச நாளைக்கி அப்புடித்தான் இருக்கும். அப்புறம் நான் ஒண்ணு சொன்னு, நீ ஒம்பது சொல்லி, மூஞ்சியைத் தூக்கி வச்சுப்பே!
அதோ பாருங்க, மாமா ஓடி வர்றார், குடை எடுத்துக்கிட்டு!
ஐயோ, உங்க காடுவெட்டி மாமாவா? ஐயோடா, எதுக்கு ஜமுனு?
ஐயே, உங்க அப்பா-எங்க மாமா வருரீங்க!
நில்லு. எதுக்கு ஓடி வருறோ தெரியலியே! அம்மா புதுசா ஏதாவும் புரளி பண்ணி, மருமக வேலைக்கிப் போகாமியே சம்பளம் மட்டும் கொண்டு வரட்டும்னு சொல்லிட்டாளா?
காசிலிங்கம் ஓடி வந்து களைப்புடன் நின்று—
ஐயோ, நம்ப ஐடியா தெரிஞ்சு போச்சோ அத்தைக்கு?
அம்மா ஜமுனு, அமிர்தம் உங்க ஆபீசுக்கு போன் இருக்கான்னு கேட்டா. உங்க பக்கத்து வீட்டு போன் நெம்பரைக் குடுத்துட்டேன்! அவ போன் பண்ணினா நீ ஆபீசிலேருந்து பேசற மாதிரியே பேசி சமாளிச்சிடு!

புதிய

அர்ஜென்ட்டா-K

புத்தம்புதிது. கண்ணுக்கிதம்.
நிழலேயற்ற ஒளி. படைத்திடுவோர்
பிலிப்ஸ். ஆர்ஜென்ட்டா-K.
பால்வண்ணமான பல்பு.
இதற்கேது இணை!

HTB-PEI-6701

அளவான மின்னலகில் அதிக ஒளிவெள்ளம்

பிலிப்ஸ்

பைகோ எலக்ட்ரானிக்ஸ அண்ட் எலக்ட்ரிகல்ஸ் லி.

PHILIPS

கல்கி

அக்டோபர் 25
தீபாவளி சிறப்பிதழ்
அதிக பக்கங்கள்

முழு நீள நகைச்சுவை
நாடகம்:
எஸ்.வி. சேகர் வழங்கும்
'நாடகப்பிரியா'வின்

காதுல பூ

கதை வசனம்: ஜீ.கே.



குமரிப் பெண்ணே! குயிலாளே!

விமலா ரமணி
எழுதும்
புதிய தொடர்கதை



வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணல் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

12

அது வந்து.... அத்தே.... வந்து.... கபாலி....
வந்தாவது போயாவது! அமிர்தம், நீ எந்த நம்பருக்கு போன் பண்ணினியோ? சரியா நம்பர் சுத்தினாலே ராங் நம்பர் கிடைக்குது இப்பல்லாம்.
ஆமா அத்தே, இன்னிக்குப் பூரா நான் ஆபீசிலே என் ஸீட்டுல-தான் இருந்தேன். போன் எதுவும் வரல்லியே!
என்னமோம்மா! வர வழியிலே அந்த டிவி கடையிலேருந்து விலை விசாரிச்சுக்கிட்டு வான்னு சொல்லத்தான் கூப்பிட்டேன்.
எனக்கே தெரியுமா. நானே விசாரிச்சுப் புட்டேன்! இன்ஸ்டால்மெண்ட்டுல வாங்கிடலாம். உன்னோட மூக்குக் கண்ணாடியை தூசி தட்டி எடுத்து வச்சுக்க!
டிவி பொட்டிக்குள்ளேருந்து குச்சியோ கம்பியோ தெறிச்சு வெளியே விழாதே?
ஏம்பா அப்படிக் கேக்கறீங்க? அப்படி வந்தா என்ன பண்றதுன்னு 'எதிரொலி' நிகழ்ச்சிக்கு எழுதிக் கேக்கலாம். ஒங்க பேரைப் படிப்பாங்க!
அதுக்கில்லேடா, மிக்ஸியிலேர்ந்து உப்பு வெடிச்சதுக்கே சுட்டி சுட்டதடான்னு ஒங்க அம்மா அதை தூர ஒதுக்கி வச்சுட்டாங்க! இதுல அப்படி வராதேன்னு கேட்டேன்!
ஐயையோ, உங்களுக்கு ஒண்ணும் ஆகலியே அத்தை?
அது இருக்கட்டும் ஜமுனு, ஒன்னை எங்கியோ மயிலாப்பூர்ல பார்த்தாளாமே பக்கத்து வீட்டு பார்வதம்? மவுண்ட் ரோடுல இல்ல உங்க ஆபீசு?
அது வந்து அத்தே....
இதெல்லாம் என்ன கேள்வி அமிர்தம்? ஜமுனு போன பஸ்ஸு மயிலாப்பூர்ல ப்ரேக் டவுனாயிட்டா அங்கியே நிக்க முடியுமா? நடந்து அடுத்த பஸ்ஸைப் பிடிச்சிருப்பா. பார்வதம் பார்த்திருப்பா, உங்கிட்ட சொல்லியிருப்பா!
தொடரும்

ஓம் ஸ்ரீ மாத்ரே நம :

ஆஸ்திகப் பெருமக்களுக்கோர் நற்செய்தி !

ஸ்ரீ காஞ்சி ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஆசியும், மற்றும் ஸ்ரீ சிருங்கேரி ஆச்சார்யாள் திருமுருக கிருபானந்த வாரியார் இன்னும் பல மகான்களின் ஆசிகளும் அருளப்பெற்ற

நவசக்தி நிலையத்தாரால்

உருவாக்கப்படும்

பூஜைக்குரிய தெய்வீகச் சாதனங்கள் :

1. ஸ்ரீ மகாமேரு (பஞ்சலோகம்) $2\frac{1}{4}'' \times 2\frac{1}{4}''$
2. ஸ்ரீ மகாமேரு (,,) $1\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$ ரூ. 450–00
3. ஸ்ரீ சக்கரம் (தாமிரம்) $3'' \times 3''$ ரூ. 250–00
4. ஸ்ரீ சுதர்சன சக்கரம் ரூ. 115–00
5. ஸ்ரீ மகாலக்ஷ்மி சக்கரம் ரூ. 115–00
6. தனாகர்ஷண சக்கரம் ரூ. 115–00
7. மற்றும் இது போல் நவாக்ஷரி, கணபதி சுப்ரமண்ய, நவக்கிரகம் ஆஞ்சநேயர், மகாலக்ஷ்மி சக்கரங்கள் ஒவ்வொன்றும் ரூ. 115–00
8. திருஷ்டி நிவர்த்தி யந்திரம் / டாலர் ரூ. 115–00

(மும்மூர்த்திகள் அம்சம்) மிக சக்தி வாய்ந்தது. வியாபார ஸ்தலங்களில் போட்டியைத் தடுக்கவும், புது வீடுகளுக்கு திருஷ்டி பரிகாரமாகவும், பஸ், லாரி, கார், ஸ்கூட்டர் வண்டிகளின் விபத்துக்கள் வராமல் பாதுகாக்கவும், கறவை பசுக்கள் திருஷ்டி படாமல் பலன் தரவும், இந்த யந்திரம் மிகப் பயன்படக் கூடியது — மேலும் பல விபரங்களுக்கு விலைப் பட்டியலைப் பார்க்கவும். ரூ. 45–37

35 பைசா தபால் தலை அனுப்புபவர்களுக்கே இலவச விலைப்பட்டியல் அனுப்பி வைக்கப்படும்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

விஸ்வகர்மகுரு ஸ்வாமி, ஸ்ரீ எஸ். டி. முருகபூஷணம் தலைவர்

நவசக்தி நிலையம், (போன் : 812013) 153, லாயிட்ஸ் ரோடு,

(ஸ்டேட் பாங்க் எதிரில்) கோபாலபுரம், சென்னை-600 086 (தெ - இந்தியா)

ஸ்ரீ சக்கரம் வாங்குவோர்கட்கு காஞ்சி ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளுடன் கூடிய **மகாமேரு படம்** ஒன்று இலவசமாகக் கொடுக்கப்படும்

குறிப்பு : எங்களது நவசக்தி நிலைய ஸ்தாபனத்துடன் இணைந்துள்ள **லக்ஷ்மி ஜூவல்லரியில் 22** காரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

உ

ஆரோக்கியம், சுபீட்சம், ஐசுவரியம் அனைத்தும் தருகின்ற

ஆழ்நிலைதியானம்

(தபால் வழிப் போதனை முறைப் பயிற்சி)

அன்றைய ஆன்றோர் வளர்த்த அரியதோர் கலை இது, ஆயிரம் ஆண்டுகள் அல்லலற வாழுகின்ற வழி கூறும் கலை இது, ராஜயோகம், பக்தி யோகம், ஞானயோகம், கர்மயோகம் என்பனவற்றை எங்ஙனம் எளிய வழி களிலே கைக்கொண்டு எட்டாத வெற்றிகளைப் பெற்றிடலாம் — இக வாழ்வில் இன்னலற வாழ்ந்திடலாம் என்ற உண்மை தெரிந்து கொள்ள இன்றே வந்திடுவீர் — இக்கலை கற்றிடுவீர்.

நீரில் நடக்கின்ற வித்தை, நீலவானில் நீந்துகின்ற சக்தி, நீடு வாழு கின்ற வழிகள், 'சூட்சும தேக யாத்திரை' 'வேற்றுடல் புகுந்து விளையாடும் முறைகள் — இவை யாவும் எப்படி என்ற விளக்கங்கள்', வாழ்வின் குறைகளை நொடியில் களைந்து கொள்ளும் தத்துவங்கள் — அத்தனையும் அழகிய பூந் தமிழிலில் — அடுக்கி வைத்த சொற் தொடரில் — பாடமாக்கித் தருகின்றோம் — பயின்றிட வந்துடுவீர் விரும்புவோர் — சேரும் முறையும், செலுத்தும் கட்டண மும் அறிய சுய விலாசமிட்ட 50 ந.பை தபால்தலை ஒட்டிய கவரிணைத்து **30-10-81ந்** தேதிக்குள் மனுச் செய்து கொள்க.

பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெய வீரதேவா, யோகி,

ராஜயோக பயிற்சியாளர்,

பிளாட் நெ. 204, கதவு எண் 5, அண்ணா நகர், மதுரை-625 020

நாடகக் கலையின் உன்னத நிலைகளை ஓர் அமெரிக்கக் குழு அண்மையில் நமக்கு உணர்த்தியது. டிரினிடி ஸ்குவேர் ரெப்பர்டொரி என்ற இக்குழு சென்னை ராணி சீதை அரங்கில் இரு நாடகங்களை நடத்தியது.

'நாடகம் என்றால் இலேசான கதை அமைப்பு இருந்தால் போதும், கதையே இல்லாதிருந்தால் ரொம்ப நல்லது' என்ற சூழ்நிலைக்கு நாம் பழக்கப்பட்டிருக்கும் நிலையில் நொபெல் பரிசுநாவலாசிரியரின் கதையை நாடகமாக்கும் இவர்களுடைய துணிவே பிரமிப்பூட்டுகிறது. ஜான் ஸ்டீன்பெக்கின் 'எலிகளும் மனிதர்களும்' என்ற நாவல், மூளை முழு வளர்ச்சி யடையாத அப்பாவி ஒருவனுக்கும், அவனைப் பாதுகாக்கும் பொறுப்பைச் சந்தர்ப்ப வசத்தால் ஏற்க நேர்ந்த இன்னொருவனுக்கும் இடையில் வளர்கின்ற பந்த பாசத்தைச் சித்திரிக்கிறது. அந்தப் பாசம் காரணமாகவே அவன் கடைசியில் அந்த அப்பாவியைச் சுட்டுத் தள்ளுகிறான்! இல்லாதபோனால் அந்த அப்பாவி, இன்னது செய்கிறோம் என்று அறியாமலேயே செய்துவிட்ட கொலைக்குப் பழி வாங்கப்பட்டிருப்பான். ஒரு பெண்ணைக் கொன்ற குற்றத்துக்காகச் சித்திரவதை செய்யப்பட்டிருப்பான். அந்தக் கொடுமையிலிருந்து அவனைத் தப்புவிக்க, காப்பவனே காலனாகிறான்!

எவ்வளவு சிக்கலான குணச் சித்திரங்கள்! எவ்வளவு லாவகமாக அரங்கேற்றினார்கள்! அடிக்கடி சிரிக்கவைத்து, கூடவே இதயத்தை நெகிழ்த்திக் கொண்டும் வருவதென்பது எவ்வளவு சிரமம்!

இரண்டாவது நாடகம் அமெரிக்காவின் சிறந்த இலக்கியப் பரிசாகிய புலிட்ஸர் பரிசைப் பெற்ற ஸாம் ஷெப்பர்ட் எழுதியது. முதல் நாடகத்தை விடவும் அதிக சிக்கலான குணச்சித்திரங்களைக் கொண்டது. ''புதைக்கப்பட்ட குழந்தை'' என்ற அச்சமூட்டும் தலைப்பைக் கொண்ட நாடகம், நம்மில் பலர் எழுதவே அஞ்சக்கூடிய கதைக் கருவைக் கொண்டதுதான். ஆயினும் உண்மைகளைச் சந்திக்க அஞ்சாமலும் அதே நேரத்தில் விரசம் தட்டிவிடாமல் மிக சாமர்த்தியமாகவும் எழுதப்பட்டு அரங்கேறியுள்ளது.

தன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் கழித்துத் தன் காதலியுடன் திரும்பி வரும் ஓர் இளைஞன், தனது தகப்பனார், தாத்தா, பாட்டி ஆகியோரைப் பற்றிய திடுக்கிட வைக்கும் சில உண்மைகளைப் படிப்படியாகத் தெரிந்து கொள்கிறான். இதிலேயும் இயல்பான நகைச்சுவையை இழையோட விட்டிருக்கிறார்கள்.

'அடேயப்பா! இப்படி யெல்லாம் கூட கனமான கருத்துக்களை நயம்பட நாடகமாக்க முடியுமா?' என்று கைதட்டவும் செயலிழந்து பிரமித்துப் போகும்படி நடத்திக் காட்டியவர்களும் அவர்கள் இங்கு வரக் காரணமாயிருந்த மெட்ராஸ் பிளேயர்ஸ் குழுவும் அமெரிக்கக் கேந்திரமும் நமது நன்றிக்கு உரியவர்கள்.

சிறந்த நாடகமும் நடிப்பும் இருந்தால் பிறகு ஸீன், ஸெட்டிங் என்பதெல்லாம் ஒப்புக்குத்தான் என்பதை நிரூபிப்பதே போல இந்த நாடகங்களின்போது திரை விடாமலே ஸெட்டுகளை மாற்றினார்கள். நடிகர்களே இப்பணியிலும் பங்கேற்றார்கள்! மிக எளிய காட்சி ஜோடனை. முதல் காட்சியில் மேஜையும் சுவருமாக இருந்த பலகைகளை அடுத்த காட்சியில் வேறு மாதிரி புரட்டிப் போட்டு ஜோடித்து, அதனை ஒரு புதர் என நாம் பாவிக்கும்படி செய்கிற ஆற்றல் அந்த நடிப்புக்கு இருந்தது!

இந்த நாடகங்களின் இயக்குனர் ஆட்ரியன் ஹால் போன்றவர்களை விசிட்டிங் புரொபசராக வாவது பெற நாம் முயல்வது நல்லது. ஆனால் அதற்கு முன்பு இங்கு ஒரு நாடகக் கல்லூரி அல்லவா உருவாக வேண்டும்!

— குட்டி கிருஷ்ணன்



வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

13



இதே கண்ணோடை நீ டிவி பார்த்தே, கண்ணே போயிடும்! எங்கண்ணு, போ— போயி ரெஸ்ட் எடுத்துக்க!
என்னம்மா இது, மதுரையை எரிச்சியா இல்லே மொளகாயை அரைச்சியா? கண் ஒரேயடியாச் செவந்திருக்கு!
எங்கடா ஜம்னு? அவ வந்த ஒடனே பக்கத்துத் தெரு கண் டாக்டர்கிட்ட கூட்டிட்டுப் போயி இவ கண்ணக் காமிக்கச் சொல்லு.
அத்தைய நான் டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போயிட்டா, அத்தையால டிவி எப்படி பாக்க முடியும் மாமா?
ஆமா, டாக்டர் டிஸ்பென்சரியிலயும் ஒரு டிவி வச்சிடச் சொல்லுவம். வெயிட் பண்ற நேரத்துல டிவி பார்க்கலாம். டாக்டருக்குக் கூட்டமும் வரும்!
இது ஒண்ணுமில்லேம்மா. 'மெட்ராஸ்-ஐ' யாத்தான் இருக்கும்.
ஆமாடா, ஒரு கண் மெட்ராஸ்-ஐ, இன்னொரு கண் செங்கல்பட்டு-ஐ! நல்லவேளை, காது மூக்குக்கெல்லாம் ஒரு ஊரோட பேரும் வைக்கலே!
நீங்க வாங்க அத்தை. நாம்ப டாக்டர்கிட்ட போய் வந்துரலாம்.
ஐய்ய, எத்தனை பாடுபட்டு ஆசையா மருமக சம்பளத்துல டிவி வாங்கியிருக்குது! ஒங்க கண்ணு மேல யாரோ கண்ணு போட்டுட்டாங்க போலருக்கு அமிர்தம். ஒனக்குப் பாத்து அநுபவிக்கக் குடுத்து வைக்கலியே!
தொடரும்



சிறந்த ரகங்கள். சரியான வி

அதிகாரப்பூர்வமான ஏஜெண்டுகள்: (தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) ஜே அண்டு ஜே
எண்டர்பிரைசஸ், 14/F1 அன்சாரி தெரு, ராம்நகர், கோயமுத்தூர் 9. செமி ஹோல் சே
டிப்போக்கள்: சென்ட்ரல் டிஸ்டிரிபியூஷன் டிப்போ, C.S.&W. மில்ஸ் காம்பவுண்டு,
கோயமுத்தூர் 1.

புதிய
ஃபேப்
டிட்டர்ஜெண்ட் கட்டி
வெளுக்கிறது உங்கள் துணிகளை அதிகத் தூய்மையாக
அதிக வெண்மையாக
அதிக பிரகாசத்துடன்
விசேட பளிச்சிட வைக்கும் சக்தியை உள்ளடக்கிய உன்னத ஃபார்முலா.
புதிய ஃபேப் டிட்டர்ஜெண்ட் கட்டியின் சக்திவாய்ந்த நுரைவளம் ஆழ ஊடுருவிச் சுத்தம் செய்து விடாப்பிடியான அழுக்குகளையும் அறவே அகற்றுகிறது.
அதன் விசேட பளிச்சிட வைக்கும் சக்தி வெள்ளைத்துணிகளை அதிக வெண்மையாக்குகிறது— வண்ணத்துணிகளை அதிகமாக பிரகாசிக்க வைக்கிறது—
உங்கள் துணிகளுக்குத் தூய்மை கலந்த புதுமணம் தருகிறது.
அது ஈரக்கசிவற்றது—எனவே அதிக துணிகளை வெளுக்கிறது— உங்களுக்கு சிறந்த சிக்கனம்.
இணையில்லா வெண்மையும், ஈடில்லா பிரகாசமும் தரும் சலவைக்கு-புதிய ஃபேப் டிட்டர்ஜெண்ட் கட்டி!
WASHES CLOTHES WHITER BRIGHTER
NEW FAB DETERGENT CAKE
SPECIAL OFFER 25 p. OFF
Rs. 2.20 now Rs.1.95
LOCAL TAXES EXTRA
விசேஷ சலுகை
25 பை. தள்ளுபடி
முந்துங்கள்!
தமிழ்நாடு மற்றும்
டிச்சேரியில் கிடைக்கிறது.
கோல்கேட்-பாமோலிவ் தரமாக அளிப்பது
GK&E.FD.4.TM

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

14



அட்டை: வண்ணப்படம்: உத்ரா

குடிசையிலே ஒரு கோபுரம்

அன்னம்

போட்டிக்கதை—9

பக்கத்து ஊர் மாரியம்மன் திருவிழாவின் போதுதான் ரங்கன் எனக்கு அந்தக் கிழவியைக் காட்டினன்.

ரங்கன் என் தோஸ்து. இரண்டு பேரும் வேலூர் சிறையில் ஒன்ருக இருந்தோம். அவனுக்குத் தெரிந்ததை நான் கற்றுக் கொண்டேன். நான் அறிந்ததை அவனுக்குச் சொல்லித் தந்தேன். ''திருநாள் சமயம், வந்தாயானல் தேட்டை போடலாம்!'' என்று அவன் எனக்குக் கடிதம் போட்டிருந்தான். அங்கிருந்து புறப்பட்டு மதுரைக்கு அருகிலுள்ள கிராமத்துக்கு வந்தேன்.

''இந்தக் கிழவி நம்ம ஊர்தான்.... காதுலேயும் கழுத்திலேயம் கிட்டத்தட்ட முப்பது சவரன் தேறும். ஒரே மகன். ராணுவத்தில் இருக்கிருன். நிறையப் பணம் அனுப்பருன். கிழவி வீட்டுக்குள் எதையோ புதைச்சு வச்சிருக்கும்.''

எனக்கு ஆசை பிறந்தது. இந்தப் பிக்பாக்கெட்டில் கிடைக்கும் ஐந்தும் பத்தும் எந்த மூலைக்கு? ஒரேயடியாக ஒரு பத்தாயிரம் இல்லை பதினைந்தாயிரம் கிடைத்தால் அப்புறம் யோக்கியமாக இருக்க வேண்டுமானல் முயற்சி செய்யலாம்.

அவள் பிள்ளையின் பெயர் சரவணன். முக்கியமாக அது போதும் எனக்கு.

ஒரு வாரம் கழித்து—எனக்கு மூர் மார்க்கெட்டில் கிடைத்த இளம் பச்சை யூனிபாரம் அணிந்து கொண்டு கிழவியின் வீட்டுக் கதவைத் தட்டினேன். என் கையிலிருந்த கூடையில் கிழவிக்கு ஆப்பிளும் ஆரஞ்சும் வாங்கி வந்திருந்தேன்.

''ஆயா! இது சரவணன் வீடுதானே?'' என்று விசாரித்தேன்.

''ஆமாம்! நீ யார் தம்பி?''

''சரவணனின் அம்மா இருக்காங்களா?'' என்று கேட்டேன்.

''நான்தான் தம்பி அது! உள்ளே வா! உட்கார்!'' என்று உபசரித்தாள் அந்த மூதாட்டி.

உட்கார்ந்தேன். ஹாலில் ஒரு போட்டோ மாட்டப்பட்டிருந்தது. போட்டோவைக் கையில் எடுத்துக்கொண்டேன்.

''பய ஜம்முன்னு இருக்கான் இல்லே... ஆயா! இது என்ன இரண்டு வருஷங்களுக்கு முந்தி எடுத்த படமா?''

''ஆமாம்!'' என்ருள் அவள். போட்டோவின் அடியில் தேதி போட்டிருந்தது. அவளுக்கு எங்கே தெரியப் போகிறது?

''இப்போ கொஞ்சம் பருமன். ஆள் நல்லா இருக்கான்.''

''நல்லா இருக்கான?''

''ஆமாம்... அடுத்த மாதம் லீவிலே வரேன். நீ போய் ஆயாகிட்டச் சொல்லு. பழம் வாங்கிக் கொடுன்னு என்கிட்டப் பணம் கூடக் கொடுத்தான். அப்புறம் நான் வரட்டுமா ஆயா?'' என்று திரும்புவது போலப் போக்குக் காட்டினேன்.

''நன்னு இருக்கு தம்பி! வாசல் குறட்டிலேயே திரும்பறதா? இரண்டு நாள் தங்கிட்டுப் போ, தம்பி!''

''இல்லே ஆயா! உங்களுக்கு ஏன் வீண் சிரமம்?'' என்றேன் மரியாதையோடு.

''இதிலே எனக்கு என்ன சிரமம்? வாப்பா உள்ளே வா! கொஞ்சம் இரு. போய் ஐயர் கடையிலேருந்து பலகாரமும் காப்பியும் வாங்கி வரச் சொல்றேன்'' என்று நகர்ந்தாள் கிழவி.

அவள் இடுப்பில் ஒரு சாவிக் கொத்து. அதுகூடத் தேவையில்லே. எந்தப் பெட்டியையும் என்னால் திறக்க முடியும். இரவு தூங்கும்போது நைஸாகக் கழுத்துச் செயினைக் கத்தரித்து விடலாம். கைவளையல்களையும் உருவிவிடலாம்.

கிழவி விழித்துக் கொண்டால்? ஒரே போடு! கிழவிதானே? இத்தனை நாள் வாழ்ந்தது போதாதா?

ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் நான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அனுவசியமாக வெளியே தலை காட்டக்கூடாது. எந்தப் பயலுக்கும் நம்ம முகம் கவனத்துக்கு வரக் கூடாது.

எனக்கு ஒரே உபசாரம்.

என்னை உட்கார வைத்துக் கிழவி பரிமாறினாள். கட்டாயப்படுத்திக் காப்பி சாப்பிடச் சொன்னாள்.

என் தாயார் மட்டும் உயிருடன் இருந்திருந்தால், அவளுக்கும் இந்த வயதுதான் இருக்கும். நிச்சயமாக இப்படியேதான் என்னைப் பார்த்துக் கவனிப்பாள்.

உண்ட வீட்டில் இரண்டகமா? என் அடிமனம் சொல்லியது. தர்மம் அதர்மம் எல்லாம் பார்த்தால் எப்படி? பிழைப்பு நடக்க வேண்டாமா?

அன்று இரவு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டேன். கிழவி — நகைகள் எல்லாவற்றையும் இரவு கழற்றிவிடுகிறாள். அவை அவள் தலையணைக்குள் பத்திரப்படுத்தப்படுகின்றன.

வேலை இன்னும் சுலபம். — தலையணையை மட்டும் மாற்றினால் போதும்.

அன்று இரவு கிழவி தூங்கவே யில்லை.

என்னைப் பற்றிய எல்லா விவரங்களையும் கேட்டாள். நானும் பொய்களைக் கோவைகளாக அடுக்கினேன்.

மறு நாள் காலை.

வெந்நீர் வைத்துக் கொடுத்து என்னைத் தலைமுழுகச் சொன்னாள். தொடர்ந்து மதியச் சாப்பாடு.

அவளுடைய எல்லாச் செய்கைகளும் என்னுடைய தீர்மானத்தை வெட்டி வீழ்த்தும் கோடாலியாக இருந்தன. அவள் பார்வையில் தெரிந்த அன்பு, பாசத்துக்கு முன் நான் கோழையாகி விட்டேன். பாசமும் அன்பும் என் உறுதியைக் கரைத்து விட்டன.

இனி அவள் வீட்டில் என்னால் திருட முடியாது. அவள் சுண்டு விரலுக்குக் கூட நான் கேடு நினைக்க முடியாது. என் அடிமனத்தில் மனிதாபிமானம் இன்னும் அந்த அளவுக்கு வற்றி விடவில்லை.

அன்றுஇரவு புழுக்கமாக இருக்கிறது என்று தெருத்திண்ணையில் படுத்துக்கொண்டேன். சமயம் பார்த்து என்சாமான்களை எடுத்துக்கொண்டு நழுவிவிட வேண்டியதுதான்.

இரவு பன்னிரண்டு மணி இருக்கும். உள்ளே நுழைந்தேன். கிழவி நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தாள்.

மெதுவாகப் போய் என்சாமான்களை எடுத்துக் கொண்டு திரும்பினேன். வாயிற்கதவை இழுத்துச் சத்தமில்லாமல் மூட நான் முயன்றபோது, அது பலவந்தமாக உள்ளிருந்து திறக்கப்பட்டது.

கிழவி அங்கேநின்று கொண்டிருந்தாள்.

''நல்லாயிருக்குடா தம்பி... இதுதான்

'அழகா? சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டுப் போவது?''

என்னால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. 'தடால்' என்று அவள் கால்களில் விழுந்தேன்.

''என்னை மன்னிச்சுடு ஆயா!... எனக்கு உன் பிள்ளையைத் தெரியாது.... நான் அவனைப் பார்த்ததுகூட இல்லை. உன் நகைக்காகத்தான் வந்தேன்... ஒரு திருட்டு நாயி நான். நீ என்கிட்ட காட்டின பிரியத்துலே.....''

''எனக்கு எல்லாம் தெரியும் தம்பி!'' என்றாள் கிழவி.

''தெரியுமா?'' என்றேன் திகைத்துப் போய்.

''ஆமாம். என் பிள்ளைதான் நாலு மாசம் முன்னே ஒரு விபத்துலே போயிட்டானே. நீ என்ன காரணத்துக்காக வந்திருக்கிறாய் என்றும் தெரிந்து போயிற்று.''

எனக்குப் புரிந்தது. ரங்கனுக்கு இந்தச் செய்தி தெரிய நியாயம் இல்லை. ஆறு மாசங்களாக நாங்கள் உள்ளேயல்லவா இருந்தோம்!

''ஆமாம் ஆயா!... உனக்குத்தான் எத்தனை நல்ல மனசு... நான் வந்த உடனே 'போடா, வெளியே நாயே'ன்னு ஏன் துரத்தலை?'' நான் உண்மையாகவே கேட்டேன்.

அவள் சிரித்தாள்.

''நீ திருடத்தானே வந்தே... இந்த அர்த்த ராத்திரியிலே நான் தனியாத்தானே இருக்கேன். என் கழுத்தை நெரித்து ஏன் நீ இன்னும் கொல்லலை?''

''உன்னைப் பார்த்தா எனக்கு என் அம்மா மாதிரி...!''

''அதேதான் தம்பி.... நீ நடக்கிறது, பார்க்கிறது, இருக்கிறது எல்லாமே அந்தப் பாவி சரவணனைப் போலவே....''

அவள் கண்கள் கலங்கின. அவள் கால்களை ஆதரவுடன் பற்றிக் கொண்டேன்.

வெகு சீக்கிரத்தில் இங்கிருந்து என்னைக் கழற்றிக் கொள்ள முடியாது. இதுவும் ஒரு வகையில் ஜெயில்தான். பாசச் சிறை. அன்புச் சிறை.

நான் ஆயுட் கைதியாக இங்கே முடங்கிக் கிடக்கத் தயார்!

மங்கையர் மலர்

நவம்பர் இதழில்

- கே. ஆர். விஜயா —நட்சத்திர வாழ்க்கை
- சண்டி ஹோமம்
- 'அவள் ஒரு முற்றுப்புள்ளி!' —விமலா ரமணியின் குறுநாவல்
- 'மிஸ் இந்தியா' சசிகலா சேஷாத்ரி —பேட்டி, கட்டுரை

விசேஷ சலுகை!
1.5 கிலோ பிளாஸ்டிக் டப்பா
Point
1.5kg. RE-USABLE JAR
1.5 கிலோ உயர்தரமான டிட்டர்ஜண்ட் சலவை பவுடர், கவர்ச்சிகரமான, மீண்டும் உபயோகிக்கக் கூடிய பிளாஸ்டிக் டப்பாவில் கிடைக்கிறது.
விலை ரூ 27-50 மட்டுமே
(உள்ளூர் வரிகள் தனி)
பாய்ண்ட்
டிட்டர்ஜண்ட் சலவைப் பவுடர்
விலையை ஒப்பிடுக. தரத்தை சோதித்திடுக.
உண்மையை
நீங்களே கண்டுணருங்கள்.
MCA-PDP-63-Tam

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

15

ன்ன புதிர் போடறீங்க ல்லாரும் சேர்ந்துக் ட்டு? இன்னும் வேற ாலும் கொண்டுவரச் ால்லி அட்வான்ஸ் டுத்துட்டீங்களா?
அமிர்தம், இத்தன நாள் ஒரு சின்ன நாடகமாடி உன்னை ஏமாத்தினேன்னு கோவிச்சுக்க மாட்டியே?
அப்புடீன்னு, இவுங்களோட நீங்களும் சேர்ந்துக்கிட்டுத் தான் நாடகம் ஆடினீங்களா? அதென்ன நாடகம்?
ஜமுனு வேலைக்குப் போற பொண்ணே இல்லேம்மா!
ஆமா அத்தை. ஆபீசுக்குப் போறேன்னு, எங்க பிறந்த வீட்டுல தான் போய் உக்காந்திருந்தேன்.
தான் மயிலாப்பூர்லயும் ந்தவெளியிலயும் பக்கத்து ட்டு பங்கஜம் பாத்தா ாமா ஒன்னை? சரி ாகட்டும். மாசா மாசம் சம்பளப் பணம்னு கொண்டு வந்தது?
ஆங்... அதுதான் இல்லே! பாத்தியா, நீ கூட ஏமாந்திட்டே ஜமுனும் பணத்தைத் தொட வேயில்லே!
ங்க வீட்டுல காடுத்த தாயிர ரூபாய் ணந்தான் த்தை!
ஆமா அமிர்தம், நானே மாசா மாசம் பன்னிரண்டே ரூபாயக் குடுத்து ஜம்னுட்ட குடுக்கச் சொன்னேன்!
அப்போ கல்யாணத்துக்கு முன்னடி பத்தாயிர ரூபா அவுங்க வீட்டுல குடுக்கச் சொன்னீங்க! என் கொள்கை என்னவாகுது?
ன் கொள்ளுல கயே வைக்கலே மிர்தம்! பணம் த்ரமா அப்டியே இருக்கு. ஜம்னு ாளைக்கே அதைத் ருப்பிக் குடுத்தி லாம். அவ மாமன் ம்மாத்தான் ம்பள மெரட்டி னு, இல்லே ஜம்னு வைப் பன்னிருக் துக் கட்டி வைக் றேதிலே உண்மை ாலுமே சீரியஸ்ஸா இருக் ானுன்னு பாத் த்தான் குடய்யா பத்தாயிர ரூபான்னேன்!
நல்லா விளையாடினீங்க போங்க!
விளையாடற வயசா இது! ஒரு நாடகம் ஆடினேன். ஆடினதுதான் என்ன! என் ஆசையும் பன்னிரு ஆசையும் ஒண்ணா நிறைவேறிடிச்சே!
(முற்றும்)

முழுசாக இன்னும் பஸ்ஸைவிட்டு இறங்கவில்லை.... அதற்குள் வெட்டிவேர் மணம் வந்து ஆளைத் தூக்கிற்று. படியில் ஒரு காலும் தரையில் ஒரு காலுமாக ஓர் அரை விநாடி நேரம் நின்று அந்த வாசனையைப் பிடித்தாள்.

.....ம்.....அம்மா.....

அது என்ன வாசனை... தாழம்பூவா... மகிழம்பூவா... இன்னதென்று தனியாகப் பிரிக்க முடியாமல் எல்லாம் கலந்திருந்தது. எல்லா ஊர்களிலும்தான் கதம்பம் கிடைக்கிறது... இங்கே மட்டும் இதற்கென்று தனியாக ஒரு மணம் எப்படி வந்தது? மூச்சைத் துளியும் விடாமல் அப்படியே உள்ளுக் கிழுத்துக் கொண்டே இருக்கலாம் போல்...

''...இறங்கு சீக்கிரம்... 'மசமச'ன்னு... எரும்மாட்டு ஜென்மம்.... ம்....''

...கருவேல மரம்... உடல்தான் அந்த மரம் மாதிரி ஒரு கருமையைப் பூசிக்கொண்டிருக்கிறது. பேச்சில் கூடவா 'நான் இருக்கிறேன் — நான் இருக்கிறேன்' என்று அதைக் காட்ட வேண்டும்? வாயைத் திறந்தால் முள் தான் வரவேண்டுமா... அந்த முள் குத்தும் போதெல்லாம் மனம் அவனையும் அந்த மரத்தையும் ஒப்பிட....

ஸ்டாண்டை விட்டு வெளியே வந்தது இவள்வருகிறாளா என்று கொஞ்சம் திரும்பி பார்த்தான்.

''...இந்தத் தடவை கோவில் — அரல மனை இரண்டுக்கும் அழைச்சிண்டு போகலே பாரு....''

''....அப்பா கிட்டே சொல்லு...''

''போம்மா... அப்பா அழைச்சிண் போக மாட்டா...செலவாறதேன்னு கோவி சுப்பா...''

...ம்... ஆறு வயசு இன்னும் முடியவில்லை அதற்குக்கூடத் தெரிந்திருக்கிறது... இ படியா இருக்க வேண்டும்... வருஷத்துக்கு

ஜி. நாராயணன்

திறந்த வெளிகள்

''....அம்மா.... கதம்பம் வாங்கல்லியா?''

பூக்காரி வழியை மறைத்தாள்.

''...கல்யாணத்துக்குப் போறோம். கொஞ்சம் பூ வாங்கட்டுமா.....''

அவன் திரும்பிப் பார்த்தான்.

''...இதை விட ஸ்டேஷன் கிட்ட இன்னும் வாசனையா இருக்கும்.... அங்கே வாங்கலாம்....''

இப்பொழுது நேரே கல்யாணச் சத்திரம் போகிறோம்... நடுவில் ஸ்டேஷன் எங்கேயிருந்து வந்தது.. ஓ..இஷ்டமில்லை... ஒரு முழப் பூ அறுபது காசு ஆகுமே... அது தான்... அதுதான்.... அவள் ஏதாவது சொல்லுவதற்குள் அவன் 'விடுவிடு'வென்று முன்னால் போக ஆரம்பித்தான்.

மதில் சுவராக பஸ்கள் நின்றிருந்தன.

ஒரு கையில் சாக்குப் பையின் கனம் அழுத்திற்று. மற்றொன்றை ராஜு பிடித்திருந்தான். இரண்டும் கெட்டான்...தூக்குவதை எப்போதே தாண்டிவிட்ட வயது... அதற்காக 'விறுவிறு'வென்று நடக்கவும் வராது. அவன் வேடிக்கை பார்க்கிறபோது பார்த்து — நிற்கிற போது நின்று — நடக்கிற போது அவன் நடைக்கு நடக்க வேண்டும்.

''....அப்பா எங்கேம்மா....?''

வேட்டியை மடித்துக் கட்டியபடி அவன் முன்னால் நடந்து கொண்டிருந்தான்....

எப்படியும் இரண்டு மூன்று முறை இங்கே வந்தாகிறது... கல்யாணம்... சீமந்தம்... காது குத்தல்.... சஷ்டியப்த பூர்த்தி என்று எத்தனை... நேரே பஸ் ஸ்டாண்டில் வந்து இறங்க வேண்டியது. கண்ணைப் பொத்திக் குதிரையைக் கொண்டு போகிற மாதிரி சத்திரத்தைப் பார்க்க நடக்க வேண்டியது. ஒரு நாள் இல்லை ஒண்ணரை நாள் அந்தச் சத்திரத்தில் ஜெயில் வாசம். திரும்பவும் அவசரம் அவசரமாக பஸ் ஸ்டாண்டு... திருவையாறு — வீடு... நாலு இடத்தைப் பார்த்தோம், சந்தோஷப்பட்டோம்... ஒரு கடைகண்ணி... கோவில்... பார்க்....

''...பொழுது விடிஞ்சா தஞ்சாவூர் போறே... பொய்க்கால் குதிரை பார்த்தது இல்லேங்கறே... ஆடிண்டே தலையிலே வாழைக்காயை வெச்சு வெட்டறது...தேங்

காயை உடைக்கிறது.... அப்புறம் முத்துப் பல்லாக்கு... ராத்திரி முழுக்க நாதஸ்வரக் கச்சேரி...எங்கே யிருந்தெல்லாமோபார்க்கிற துக்கு ஜனங்கள் வரா... பத்து மைல்லே இருக்கே... உனக்கு முடிய மாட்டேங்கிறது. இதுக்குன்னு ஒரு நடை தனியாப் போகணும், பார்க்கணும்.... கல்யாணமும் சீமந்தமும் தான் இருக்கவே இருக்கு....''

எதிர் வீட்டு மாமியிடம் 'சரி' யென்று தலையை ஆட்டியபோது கண்களில் குளம் கட்டியது.

இதற்கெல்லாம் ஒரு மனம் வேண்டும்... ரசனை இருக்கிற மனம்... இவர் மனம் காசில்தான் இருக்கிறது...எப்பப் பாரு, 'செலவாறதே.. செலவாறதே' என்று மூக்கால் அழுகை. ஒரு முழம் கதம்பத்துக்குக் கூட வழியில்லே. அப்படியாவது ஓர் இனிமையான பேச்சு உண்டா... சிரிப்பு உண்டா... ஆபீசிலிருந்து வரும்போதே முழ நீளம் முகத்தை வைத்துக் கொண்டு வர வேண்டியது.. ஏதாவது கேட்டால் குத்துகிற மாதிரி பார்வை... பேச்சு...

பரதேசக் கோலம் புறப்பட்டுக் கொண்டிருந்தது.

''வா....வா....தர்மா... வாங்கோ மாப்பிள்ளை....''

கல்யாண ஓட்டத்தில் கொஞ்சம் நின்று இவர்களுடன் பேசினார் ரங்கநாதன்.

அப்பா இருந்தவரை இந்த ரங்கநாதன் அடிக்கடி வந்து கொண்டிருந்தார். ஒருமுறை அப்பாவின் கச்சேரி தெற்கு ராஜ வீதியில் நடந்தபோது பரிச்சயமாயிற்றாம்... அப்புறம் நினைத்துக் கொண்டால் வந்து விடுவார்.... '...உங்க காம்போதியைக் கேட்டு நாளாச்சு... கொஞ்சம் வாசியுங்கோ....' என்று உட்கார்ந்து விடுவார். 'ஆஹா...ஆஹா....' என்று அதிலேயே உருகி.. அப்புறம் ஒரு நாள் பைரவி, இன்னொரு நாள் தோடி... இந்த முறை ஆராதனைக்கு வந்தவர் வீட்டுக்கு வந்து விட்டார். ''நம்ப உமாவுக்குக் கல்யாணப் பத்திரிகை அனுப்பறேன்... அவசியம் வந்து சேரு....''

''...ஒரு நிமிஷம்....''

இவர்களை விட்டு விட்டு அவசரம் அவசரமாகப் பந்தலுக்கு வெளியே ஓடினார். ஒரு பச்சை நிறக் கார் வந்து நிற்க, கதவு திறந்தது. ஜிப்பாவும், பைஜாமாவும் தெரிந்தது. யார்....? எங்கேயோ பார்த்த முகமாக... யாரு... சந்துருவா... அவன்தான்....!

கதவு திறந்தே இருக்க, காரிலிருந்து கொஞ்சம் இரட்டைநாடியாக ஒரு பெண் இறங்கினாள்.

''வாங்கோ...வாங்கோ....'' ரங்கநாதன் குழைந்தார்....

....ம்... எட்டு அழகிலே ஒரு சொட்டு அழகு இல்லே... இவளைப் போய்ப் பண்ணிண்டு இருக்கானே... உயரம் இல்லே. குள்ளம்... முகம் உருண்டை இல்லே சதுரம்... மூக்கு எடுப்பா இல்லே... நிறமும் இல்லே... அதிர்ஷ்டம்... எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது நிறைய இருக்கு...

சந்துரு சிலரிடம் நின்று பேசினுன். சிரித்தான். அதில்தான் எத்தனை விதம்...!

''...இதுதான் வீணை சந்துரு...''

மௌனமாக இருந்தாள்... அவளுக்குத் தெரிந்த சந்துருவிடம் இவ்வளவு கம்பீரம் இருக்கவில்லே. புகழ் இருக்கவில்லே. ஜவ்வாதுப் பொட்டு இல்லே. பயந்து பயந்து ஓர் ஓரமாக உட்கார்ந்து பழையதை அள்ளிப் போட்டுக் கொள்ளுகிற சந்துரு... வீட்டில் எடுபிடி வேலே செய்கிற—அப்பாவுக்கு வேஷ்டி துவைத்துப் போடுகிற சந்துரு... வீணையைத் துடைத்து வைத்து, அப்பா வாசித்தால், எதிரே கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து... இந்தச் சந்துரு அவரிடம் எத்தனை வசவு, அடி, உதை, குட்டுவாங்கியிருக்கிறுன்.

இந்த மண்டுகத்தைத் தன் தலேயில் கட்டப் பார்க்கிறுரே என்று அப்பொழுது அப்பா மேல் வந்த கோபம்... அரைக் காசுக்குப் பதில் முந்நூறு ரூபாய் வாங்குகிறவனுகப் பார்த்துக் கொடுத்தார். ஆனுல், பால் கணக்கு, மோர் கணக்கு, வாடகை, மளிகைக் கடை என்று எல்லாம் இழுக்கிற இழுப்பில் சம்பளம் மூக்கு ஒட்டைக்குக்கூட காணவில்லே. ஒவ்வொரு மாதத்தையும் தள்ளுகிற பாடு?சிவன் அறிந்து போகும்...

பெண்ணும் பிள்ளேயும் மாலே மாற்றி, ஊஞ்சலுக்கு வந்தார்கள்.

''...யாராவது பாடுங்கோ...''

சட்டென்று யாரும் முன்வரவில்லே. கசமுசா... நீ பாடு... நீதான் பாடுடி... சிரிப்புகள்....

''...கண்ணூஞ்சலாடி நின்ருர்....''

அவ்வளவு நாணல் கோணல்களேயும் அடக்கிக்கொண்டு அவள் குரல் கணீரென்று எழும்பிற்று. நாதஸ்வரக்காரர் அதை வாத்தியத்தில் அழகாகத் திருப்ப...

அடுத்த அடி பாடும்போது சந்துருவைக் கவனித்தாள். அவனும் இவளேப் பார்ப்பது தெரிந்தது.

''...சௌக்கியமா?''

''...ம்....''

இந்தப் பேச்சு கூடத்தில் நடந்தது.

''...உன் குரல் அப்படியே இருக்கு...''

அவள் பேசாமல் இருந்தாள்.

''...அம்பி. . உன் பேரு என்ன?''

''....ராஜு...''

''பேஷ்... நல்ல பேர்...''

ஆச்சரியமாகத்தான் இருந்தது... இவன் பேச்சில் ஒரு விதரணே... சாந்தம்... நீட்டல் குழைவு... எல்லாம் எப்படிச்சேர்ந்து கொண்டன... அசுர சாதகம் பண்ணிப் பண்ணி, பேச்சும் ராகம் மாதிரி இனிமையாக அமைந்து விட்டதோ...!

'படபட'வென்று கெட்டி மேளம் கொட்டக் கணவனே அவள் அவசரமாகத் தேடிப் பிடித்தாள்.

ஸ்தாபிதம் : 1942 போன் : 123

லலிதா பார்மஸி

கும்பகோணம்

DRUG LICENCE No. 40 / 78

மத்திய அரசால் ஈட்டுத் தொகைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது

எமது விசேஷத் தயாரிப்புகள் :

மூட்டுவலி, கணுக்களில் வலி

1. யோகராஜ குக்ளு
2. மஹா ராஸ்ஞதிக்வாதம்
3. பிண்டத் தைலம்
4. பாலகுடுசித் தைலம்

கீழ்க்கண்ட எமது பிராஞ்சுளிலும் கிடைக்கும்

1. லலிதா பார்மஸி, 52, மஹாதானத் தெரு, மாயூரம், போன்: 379
2. லலிதா பார்மஸி, 81, வடக்கு ரத வீதி, சிதம்பரம்
3. லலிதா பார்மஸி, 6, ரெங்கநாதன் தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017, போன்: 441454
4. லலிதா பார்மஸி, 60-B, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை - 600 004, போன்: 73007

மற்றும் சிறந்த ஆயுர்வேத மருந்துகள் யாவும் கிடைக்கும்

வரும் 82ஆம் ஆண்டு ஜனவரி மூன்றும் வாரத்தில் திருவையாறு தியாகராஜர்சமாதிக்குச் செல்பவர்கள், சில மாற்றங்களைக் காணக்கூடும்.

சமாதியைச் சுற்றி மதில் சுவர் எழுப்புகிறார் கள், உள்ளே யாரும் அசுத்தம் செய்து பாழாக் காமல் இருப்பதற்கு.

இசைக்கல்லூரி ஒன்று இங்கே துவங்கப்பட இருக்கிறது. அதற்கான அஸ்திவாரம் போடப் பட்டு, வேலைகள் துரிதமாக நடைபெற்று வரு கின்றன. எத்தனை பொருத்தமான இடம்!

இந்தப் பணியைத் தாம் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால், தஞ்சை கலெக்டர் அடிக் கடி வந்து பார்வையிட்டு விட்டுச் செல்கிறார்.

''...இருபது ரூபாயாவது கொடுக்கணும். அந்த நாளிலே ரொம்ப உதவி பண்ணி யிருக்கார்...''

''உங்க அப்பா போற போது ரெண்டு வீணையை வெச்சுட்டுப் போன மாதிரி, ரெண்டு வேலி நிலத்தையும் வெச்சுட்டுப் போயிருந்தார்னு, நீ கேட்கிறபோதெல்லாம் எடுத்துத் தட்டலாம்...''

....கருவேலமரம்...

அவன் குரல் சற்று ஓங்க, நாலைந்து பேர்கள் கவனிப்பது தெரிந்தது. அவள் சட்டென்று குரலைத் தழைந்தாள்.

''...சரி குடுங்கோ...''

அவன் பர்ஸைத் திறந்து சிகப்பு நோட்டு ஒன்றை வெளியே எடுத்தான்.

''...ரெண்டு ரூபாயை எப்படிக் கொடுக் கிறது... பத்து ரூபாயாவது...''

''அப்ப ஊருக்கு நடந்துதான்போகணும்!''

'படபட'வென்று வந்தது... வாங்காமல் வேகமாக உள்ளே போனாள்.

''**கை**யிலே கொடுங்கோ....''

கலத்தில் லட்டு விழ இருந்தபோது குழந்தை இடது கையில் வாங்கிக்கொண் டான். உருண்டு விடாமல் வைத்தான்.

''..இப்பவே தின்னுடு...''

''இல்லேம்மா... அப்புறமா... நம்பள் ளாம் கோயிலுக்குப் போறபோது...''

பிறகு அப்பளம் வந்தது. அதையும் கை நீட்டி வாங்கினான்.

இவளுக்கு ஒன்றும் வேண்டி யிருக்கவில்லை. என்னமோ சாப்பிட்டாள்.. எழுந்தாள்... கை அலம்பினாள்.

கொஞ்சம் முன் யோசனையுடன் இருந் திருந்தால் இவ்வளவு அவலம் நடந்திருக் காது... பின் புத்தி... ஒரு முழம் கதம் பத்துக்குத் திண்டாட வேண்டாம்...

பழம் புடவையை மாற்றி மாற்றிக் கட்டிக் கொள்ள வேண்டாம்... பத்து ரூபாயாவது கொடு என்று பிச்சைக்காரி மாதிரி கெஞ்ச வேண்டாம்... எப்பொழுது வெடிக்குமோ— எப்பொழுது குத்துமோ என்ற பயம் இல்லா மல் வாழ்க்கையில் கொஞ்சம் சிரிப்பையும் சந்தோஷத்தையும் அனுபவித்திருக்கலாம்... மனைவியைப் பெயர் சொல்லி அழைக்கிற இதம் — கூட்டத்தில் கையைப் பிடித்துக் கொண்டு அழைத்துச் செல்கிற குணம்...ச்சு..

கருவேல மரத்தை விட்டு வேப்ப மர நிழலில் காற்று வாங்குகிற மாதிரி ஒரு விநாடி நேரம் கண்களைச் சுற்றிற்று... வெட்டிவேர் மணம் மாதிரி... ம்... அப்பா....

அந்தச்சுகானுபவம் சட்டென்றுஅறுபட...

''...எதற்குடா அழறே?...''

''...லட்டு...லட்டு...''

அவன் பேச்சுவராமல் உள்பக்கம் கையைக் காட்டினான்.

அவனை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். இலையை எல்லாம் எடுத்து விட்டு சாக்கைப் போட்டு 'சர் சர்' என்று ஈரத்தைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள்.

''அப்பவே தின்னுடான்னு சொன்னேனே கேட்கல்லே... கையிலே கிடைச்சதை விட் டுட்டு இப்ப என்ன அழுகை... இந்த மாதிரி அசட்டுத்தனத்துக்கு நீ அம்மாவைத்தான் கொள்ளணுமா...''

அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வர...

''...எதற்கு அழறான்?''

''...லட்டுப்பா... காணும்....''

''...சமையற்காரர் தெரிந்தவர்தான்.... நான் வேணா உள்ளே போய் வாங்கி வரேன்.''

''ஒண்ணும் ஒதிவிடாம மூணு பேர் சாப் பிட்டிருக்கோம்...,இது வேறேயா... அல்பம் மாதிரி...''

''யார் அல்பம்...? என்அப்பாவுக்கு நால ரைக் காணி நிலம் இருந்தது.... அல்பமா தேங்காய் மூடிக் கச்சேரி பண்ணல்லே.''

''...அந்தப் பவிஷுதான் தெரியறதே.''

குழந்தை அழுகையை நிறுத்தி விட்டான். இவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

பல்லைக் கடித்து, கண்களை நெரித்து அம்மா ஆத்திரப்பட... அப்பாவுக்குக் கோபத்தில் உடலே நடுங்கிக் கொண்டிருந்தது.

இன்று சண்டை ஏனோ அதிகமாக இருக் கிறது. கோவிலுக்குப் போகலாமா — ஊர் சுற்றிப் பார்க்கலாமா என்று கேட்க [illegible] இல்லை. கேட்டால் இன்னும் அதிகமா[illegible]

அவனுக்குப் புரிந்து விட்டது.

இந்த முறையும் வழக்கம் போல [illegible] சத்திரம் விட்டால் பஸ் ஸ்டாண்[illegible] வையாறு... வீடு...!



சிறந்த ரகங்கள். சரியான வி

என்ணடஸ்

அதிகாரப்பூர்வமான ஏஜெண்டுகள்: (தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) ஜே அண் எண்டர்பிரைசஸ், 14/F1 அன்சாரி தெரு, ராம்நகர், கோயமுத்தூர் 9. செமி ஹோ டிப்போக்கள்: செண்ட்ரல் டிஸ்டிரிபியூஷன் டிப்போ, C.S.&W. மில்ஸ் காம்பவு கோயமுத்தூர் 1.